தமிழரசு
1.4.1995
2 மே 1995

1997/20

“சோதனைகளைச் சாதனைகளாக்கிக் காட்டுகின்ற அரசு எங்கள் அரசு!”

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

மேதகு ஆளுநர் அவர்கள், பாரம்பரியப் பெருமை மிக்க இந்தப் பேரவையில், ஆற்றிய உரையின்மீது, கடந்த 4 நாட்களாக விவாதம் நடைபெற்றது. மேதகு ஆளுநரின் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்த, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், முதற்கண், என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் முழு நம்பிக்கையையும், ஏழை, எளிய, மற்றும் நலிவடைந்த பிரிவு களைச் சார்ந்த, மக்களின் பேராதரவையும் பெற்று, நாங்கள் தமிழகத்தில், 1991-ஆம் ஆண்டு, ஆட்சிப் பொறுப்பினை ஏற்றோம். அன்று முதல், தமிழக மக்களின் நல்வாழ்க்கை, மற்றும் முன்னேற்றத்தை மட்டுமே, எங்கள் குறிக்கோளாகக் கொண்டு செயல்படத் துவங்கினோம்.

நாங்கள் அளித்த வாக்குறுதிகளை, அடுக்கடுக்காக நிறைவேற்றியதோடு, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாகப் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி உள்ளோம். சோதனைகளை எதிர்கொண்டு, சாதனைகளாக்கி வருகின்ற இந்த வேளையில், நிகழ்த்தப்பட்டுள்ள, மேதகு ஆளுநர் அவர்களின் உரை, ஒரு சம்பிரதாய உரை மட்டும் அல்லாமல், தமிழகத்துப் பெருமக்களின் நலன் காக்க, எங்கள் அரசு மேற்கொண்ட உறுதியை, மேலும் ஒருமுறை, உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதை எண்ணி நான் அகமகிழ் கின்றேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகிய புனிதத் தலைவர்கள் காட்டிய இலட்சியப் பாதையில், நாள்தோறும் நடைபோட்டுவரும் நாங்கள், கடந்த மூன்றே முக்கால் ஆண்டுகளாகப் பல்வேறு ‘சாதனைகள் படைக்க முடிந் துள்ளது என்றால், அதற்கு அடிப்படைக் காரணம், மக்கள் சக்திதான் என்பதை, மீண்டும் இந்த மாமன்றத்தின் முன் உறுதி செய்வதில், பெருமைப்படுகிறேன். தமிழ்நாடு, அனைத்து இந்திய அளவில், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகப் பல்வேறு துறைகளில் Trend Setterஆக, விளங்கி வருகின்ற ஒரு உன்னதமான சூழ்நிலை, எங்கள் ஆட்சிக் காலத்தில், மேலும் வலுப்பெற்று உள்ளது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, தமிழகம், நல்லவைகளாக எப்போதும் போற்றி மகிழும், அல்லவைகளை விரைந்து அகற்றும் என்பதை, சரித்திரம் மீண்டும் மெய்ப்பித்துள்ளது, என்றுதானே பொருள்?

அரசின் கொள்கைகளும், செயல்பாடு களும், எவ்வளவுதான் மேதகு ஆளுநர் அவர்களின் உரையில், விவரிக்கப்பட்டிருந்த போதிலும், குறை சொல்ல வேண்டும் என்பதில், குறியாக இருப்பவர்கள், இதில் புதிதாக ஒன்றும் இல்லையே, என்று அங்கலாய்த்துள்ளார்கள். குறைகள் இருந்தால் தட்டிக் கேளுங்கள், குற்றங்கள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள் ஆனால் அதே நேரத்தில், நல்லவைகளைப் பாராட்ட மறந்துவிடா தீர்கள். இந்த உரையில் எடுத்துரைக்கப்பட்ட எங்கள் கொள்கைகளும், செயல்பாடுகளும், தமிழக மக்களின் வாழ்க்கை முன்னேற் றத்திற்குப் படிகற்களாக அமையும் என்பதை மட்டும், உறுதியாக எடுத்துரைக்க கடமைப் பட்டுள்ளேன்.

எதிர்க்கட்சிகளின் தரப்பில், நிறையப் பேர் பேசினார்கள்; நிறையவே பேசினார்கள். அவர்களின் பேச்சுக்களைக் கேட்கும்போது, ஒரு உண்மை தெளிவாகின்றது. இந்த அரசாங்கத்தின் மீது, குற்றம் குறை கூறுவதற்கு எதுவும் இல்லை என்பதும், எல்லாத் துறைகளிலும் இந்த அரசு, பாராட்டும்படி செயல்பட்டுள்ளது என்பதும் அவர்களுக்கே தெளிவாகப் புரிந்துள்ளதால் தான் மிகச் சிறிய விஷயங்களையெல்லாம் பெரிதாக்கி, இட்டுக்கட்டிப் பேச வேண்டிய நிர்ப்பந்தம், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், மாண்புமிகு உறுப்பினர் திரு திருநாவுக்கரசு போன்ற வர்கள், நாங்கள் எதைச் செய்தாலும் அதைப் பாராட்ட மாட்டார்கள். மாறாகக் குற்றம் சொல்வதற்கு, ஏதாவது கிடைக்காதா? என்று துருவித்துருவிப் பார்ப்பார்கள். உண்மையில் குற்றம் சொல்வதற்கு, எதுவும் இல்லை என்பதால், ஒருவர் மொழி பெயர்ப்பிலே, ஒரு மாபெரும் தவறு நடந்துவிட்டதாகவும், “நமது மாண்புமிகு முதலமைச்சர்” என்று குறிப் பிட்டது. குற்றம் என்பதைப் போலவும் மற்றவர் ‘மாண்புமிகு’ என்ற அடைமொழியை, முதலமைச்சருக்கு மட்டும் போட்டிருப்பது ஏன்? என்ற மகத்தான கேள்வியை எழுப்பி, தங்களுடைய ‘மாண்பினைத்’ தெரிவித்துக் கொண்டார்கள். நாடு தழுவிய முறையில், கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபுதான், இந்த ‘மாண்புமிகு’ என்பது தெரிந்திருந்தும் அவர் இதைப் பற்றியே வெகு நேரம் பேசினார்.

“பயனிலசொல் பாராட்டு வானை மகன் எனல்
மக்கட் பதடி எனல்”

என்பது வள்ளுவரின் வாக்கு.

ஒட்டுமொத்தமாக, எதிர்க்கட்சிகள் பேசிய தைப் பார்க்கும்பொழுது, சில குற்றங்களை யும், குறைகளையும் பொதுப்படையாக அவர்களால் பேசமுடிந்ததே தவிர, குறிப் பிடும்படியாக எதுவும் பேச முடியவில்லை என்பது தெரிகிறது. சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று, ஒட்டுமொத்தமாகக் குறை கூறினார்களே தவிர, ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியைத் தவிர, அவர்கள் கூறிய மற்ற எல்லா நிகழ்ச்சிகளும், 1992-1993 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றவை என்பதையும் அவற்றிற்கெல்லாம் நான் ஏற்கெனவே, இந்த அவையிலேயே பதில் அளித்துள்ளேன் என்பதையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

புகழ் மிக்கதொரு பாரம்பரியத்தைப் படைத்த, இந்தச் சட்டமன்றப் பேரவை, அறிவார்ந்த கருத்துக்களையும், அனல் தெறிக்கும் வசனங்களையும் நகைச்சுவை உணர்வு மிக்க, விவாதங்களையும் கண்டு உள்ளது. இத்தகைய பேரவையில், எங்களது கொள்கைகளும், செயல்பாடுகளும், ஒருபுறம் வரவேற்பினையும், மற்றொரு புறம் வசை மொழிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந் தது. கண்கவர் மலர்க் கொத்தையும், கடுகி வருகின்ற கற்களையும், ஒன்று எனக் கருதுகின்ற மனப் பக்குவத்தை, இந்த நான்கு ஆண்டு அனுபவங்கள், எங்களுக்கு நிரம்பவே அளித்துள்ளன. பாராட்டுக்களும், புகழுரை களும் எங்களை எப்படி நிலைகுலைய வைக்காதோ, அதேபோல, நிந்தனைகளும், ஏச்சுக்களும், எங்களது மன உறுதியைக் குலைத்துவிடாது. மக்கள் நலன் ஒன்றையே முன்னிறுத்தி, மேலும் உறுதியாகச் செயல் படுகின்ற உள்ளத் திண்மையை, நாங்கள்

V211 ... 70TA
N 95.25.18

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு:
இசை நிகழ்ச்சிகளில் சில...

திரு. டி.கே.எஸ். கலைவாணன்

திரு. ஆத்மநாதன்

இந்த இதழில்...

2 மே 1995
எழும்பூர், சென்னை-600 008

✦ மேதகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதல்வர் சட்டப் பேரவையில் ஆற்றிய பதிலுரை: 2

✦ நிதி நிலை அறிக்கை (1995-96) —மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை 32

✦ புதுக்கோட்டை மாவட்டத்தில், குடிநீர்த் திட்டங்கள் - அரசுத் திட்டப் பணிகள் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை 58

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026

பங்குனித் திங்கள்: 18

மலர்: 25 இதழ்: 19

1.4.1995

விலை: ரூ. 3

இதழ்தோறும் ஓர் இனியகுறள்

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. (18)

* மழை பெய்யாமல் போகுமானால், இவ்வுலகத்தில் வானோர்க்காக நடக்கும் திருவிழாவும் நடைபெறாது; நாள் வழிபாடும் நடைபெறாது.

பெற்றுள்ளோம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று வள்ளுவர் அன்றே கூறிச் சென்றிருக்கிறார்.

எனவே, எங்கள் அரசின் சேவையைப் பாராட்டி மகிழ்ந்தவர்களுக்கு, எங்களின் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் குறைகளைச் சுட்டிக் காட்டியவர்களுக்கு, அவற்றை நாங்கள் குறைகளாகக் கருதாமல், எங்கள் பணி, மேலும் சிறக்கவேண்டும் என்பதற்காகக் கூறப்பட்ட கருத்துக்களாக எடுத்துக்கொண்டு, அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதியும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவார்ந்த கொள்கைகளும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின், மனிதாபிமானக் கோட்பாடுகளும், எங்களை என்றென்றும் வழிநடத்திச் செல்கின்ற, கலங்கரை விளக்கங்களாக விளங்கும். அவர்கள் காட்டிச் சென்ற வழியைக் கடைப்பிடித்து, தமிழகத்தின் புகழைத் தரணி எங்கும் பரப்பி, தமிழக மக்களுக்கு, ஒளிமயமானதொரு வாழ்க்கையைப் பெற்றுத் தருவோம் என்கின்ற உறுதியை, மீண்டும் எனது அன்பிற்குரிய, தமிழக மக்களுக்கு வழங்கி மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, எனது பதிலுரையை, இந்த மாபெரும் பேரவை முன் வைக்க விரும்புகிறேன்.

திட்ட ஒதுக்கீடும் வளர்ச்சிப் பணிகளும்

1991-ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு, தமிழகத்தில் முடங்கிக் கிடந்த, வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விட்டோம். வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப் படுகின்ற நிதி ஒதுக்கீடு, மிகக் குறைவாக இருந்த ஒரு காலகட்டத்தில், தமிழகத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, எப்படியேனும் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு ஊக்கமும் உத்வேகமும் கொடுப்பதற்கு, எங்கள் அரசு, நல்ல பல திட்டங்களை வகுத்தது.

[illegible]

ரூபாயாக மட்டுமே, இருந்த திட்ட ஒதுக்கீடு வருகின்ற நிதி ஆண்டில், அதாவது *1995-96*-ஆம் ஆண்டில், *3200* கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆக, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, திட்டப் பணிகள், *2* மடங்காகி உள்ளன என்பதையும், நான்கே ஆண்டுகளில் திட்ட ஒதுக்கீடு *100* சதவிகித உயர்வைக் கண்டு உள்ளது என்பதையும், காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் கூட, ஒரு அற்புதமான சாதனை என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

தவறுகள் நடக்கும்போது மட்டும், சுட்டிக் காட்டுகின்ற எதிர்க்கட்சிகள், சாதனைகள் படைக்கும்போது, அவற்றைத் திறந்த மனதுடன் பாராட்டவேண்டும், பேசுவதற்கும், ஏசுவதற்கும் மட்டுமே எதிர்க்கட்சிகள் படைக்கப்பட்டிருப்பது, தமிழகத்தின் துரதிருஷ்டம். நாங்கள் என்ன செய்யமுடியும்?

திட்ட ஒதுக்கீட்டினை உயர்த்தியது மட்டுமின்றி, ஒவ்வொரு ஆண்டும் இந்த அரசு, ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும் அதிகமாக, இத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதையும், பெருமிதத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1991-92-இல் திட்ட ஒதுக்கீடான *1600* கோடி ரூபாய்க்கும் மேலாகத் திட்டப் பணிகளுக்குச் செலவிடப்பட்ட தொகை, *1726* கோடி ரூபாயாகும். *1992-93*-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட, *1751* கோடி ரூபாய்க்கும் அதிகமாக, *1935* கோடி ரூபாய் செலவிடப்பட்டது. *1993-94*-ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீடு, *2101* கோடி ரூபாய், ஆனால், செலவிடப்பட்ட தொகையோ, *2232* கோடி ரூபாய். இது அனைத்திந்திய அளவில் வெகுவாகப் பாராட்டப்பட்ட, ஒரு மாபெரும் சாதனை ஆகும். எட்டவாது ஐந்தாண்டுத் திட்டத்தின், மூன்று ஆண்டுக் காலகட்டத்தை, எவ்விதக் குறைபாடும் இன்றிச் செயல்படுத்திவரும், வெகு சில மாநிலங்களில், தமிழகமும் ஒன்று என்பது தமிழக மக்களுக்குப் பெருமைதரும் செய்தி ஆகும்.

பல மாநிலங்கள், திட்ட ஒதுக்கீட்டை நிறைவேற்ற இயலாமல், அடுத்த ஆண்டில் குறைத்தும், அவ்வாறு குறைக்கப்பட்ட அளவிலான, திட்ட ஒதுக்கீட்டினையே, எய்தி உள்ளன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1993-94-ஆம் நிதி ஆண்டில், பீகார், அரியானா, குஜராத், மத்தியப் பிரதேசம், ஒரிசா, பஞ்சாப் உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், ஆகிய மாநிலங்கள், கொடுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை எய்தவில்லை. ஏதோ புள்ளி விவரங்கள் இல்லாமல், நான் பொதுவாகக் கூறுவதாக, இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் கருதிவிடக் கூடாதே, என்ற எச்சரிக்கை உணர்வில், சில குறிப்பிட்ட மாநிலங்களின் செயல்பாடுகளை, எடுத்துரைக்க விரும்புகிறேன்.

1993-94-ஆம் ஆண்டிற்கான பீகார் மாநிலத்தின் திட்ட ஒதுக்கீடு, *2300* கோடி ரூபாயாகும். ஆனால், எய்தப்பட்ட தொகை, *750* கோடி ரூபாய் மட்டுமே.

மத்தியப் பிரதேச மாநிலத்திற்குத் திட்ட ஒதுக்கீடு, *2400* கோடி ரூபாய், ஆனால் எய்திய தொகை, *2018* கோடி ரூபாய் மட்டுமே.

உத்திரப்பிரதேச மாநிலம் *4050* கோடி ரூபாயைத் திட்ட ஒதுக்கீடாகப் பெற்றிருந்தும், *2800* கோடி ரூபாய் வரைதான், எய்தி இருக்கின்றது.

மேற்கு வங்காள மாநிலத்திற்கு, *1550* கோடி ரூபாய், திட்ட ஒதுக்கீடு கிடைத்திருந்த போதிலும், எய்தப்பட்டத் தொகை, *1021* கோடி ரூபாய்தான்.

எனவே, தேசிய அளவில் பொருளாதார நெருக்கடியையும், மாநில அளவில் கடுமையான நிதி நெருக்கடியையும் சமாளித்து ஆண்டுக்காண்டு திட்ட ஒதுக்கீட்டை அதிகரித்து அந்த ஒதுக்கீட்டிற்கும் அதிகமாகச் செலவழித்து வளர்ச்சிப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியது. தமிழ்நாடு தான் என்பதைத் தமிழகத்தின் முன்னேற்றத்தின் மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்கள். மாறிவருகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளிலும், மாநிலப் பொருளாதாரத்தை நசுக்குகின்ற பல சூழ்நிலைகளிலும், நாம் படைத்துள்ள சாதனை மகத்தானதாகும்.

1991-ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது சட்டம் ஒழுங்கு கெட்டு' வன்முறை தலைவிரித்து ஆடியது. காலியான கஜானாவும் தாங்க முடியாத கடன் சுமையும் கடுமையான நிதிப் பிரச்சினையும்தான் நாங்கள் முந்தைய ஆட்சியிலிருந்து, பெற்ற சொத்துக்கள், *1991-92*-ஆம் ஆண்டில், திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு *1220* கோடி ரூபாய் பற்றாக்குறையை, நாங்கள் சமாளிக்க வேண்டி இருந்தது. ஒருபுறம், சிக்கன நடவடிக்கைகளையும் மற்றொரு புறம், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சிகளும் எனது நேரடி மேற்பார்வையில், நான் மேற்கொண்டதால் தான், நிதி நெருக்கடியை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தோம். திட்டப் பணிகளைக் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடித்துக் காட்டினோம்.

ஆனால், அண்மையில் சில மாநிலங்கள் நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட இயலாமல் தனியார் நிதி நிறுவனங்களிடம் *17.5* சதவிகித வட்டியில் கடன்கள் பெற்றுள்ளன. இவ்வாறு அதிக வட்டியில் பெறப்படும் கடன்கள் வருங்காலங்களில் மாநிலங்களின் கடன் பளுவையும் நிதி நெருக்கடியையும் அதிகரிக்கக் கூடும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், எங்கள் ஆட்சியில் நாங்கள் எந்த ஒரு காலகட்டத்திலும் தனியார் நிதி நிறுவனங்களை அணுகி, கடன் கேட்கவில்லை. மாறாக நிதி நெருக்கடியைக் கட்டுப்படுத்தி திட்டச் செலவுகளைக் கொடுத்ததற்கும் அதிகமாகச் செலவழித்துள்ளோம் என்பது எங்கள் அரசின் நிதி மேலாண்மையையும் நிர்வாகத் திறனையும் எடுத்துக்காட்டுகிறது என்பதை இங்கு இருக்கின்ற எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நாடு முழுவதும் இருக்கின்ற நல்ல மனம் படைத்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பரந்த மனம் படைத்தவர்கள் பாராட்டுவார்கள்.

தமிழன்னைக்கு ஆராதனை

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழியின் பெருமைகளையும், தொன்மை மிக்க தமிழ்க் கலாச்சாரத்தின் சிறப்பியல்புகளையும் மீண்டும் ஒரு முறை அகிலம் முழுவதும் உணர்த்தி உலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்கள் உவகை கொள்ளும் வண்ணம் தஞ்சைத் தரணியில் "எட்டாவது உலகத் தமிழ் மாநாடு" சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது.

நம் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நின்று வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு எழுச்சி தரும் நிகழ்ச்சியாக அமைந்தது என்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியுடன் எண்ணற்ற தூய தமிழ் உள்ளங்களின் உணர்வுகளோடு, .. என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக் கொள்கிறேன்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரப்புவதற்கும் அன்னைத் தமிழின் அமுதக் குரல் உலக அரங்கினில் தனிச் சிறப்போடு ஒலித்திடவும் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிகள் சரித்திரச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக மாறிவிட்டன. தஞ்சைத் தரணியில் குவிந்திட்ட இலட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்களுக்கும், தொலைக்காட்சியில் கண்டுகளித்த கோடிக்கணக்கான தமிழ் உள்ளங்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழிக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ் ஆராய்ச்சிப் பணிகளுக்கும் தமிழ்நாட்டின் கலை மற்றும் பண்பாட்டுச் செறிவின் எழுச்சிக்கும் இந்த மாநாடு வழிவகுத்தது என்பதைத் 'தமிழ்கூறும் நல்லுலகம்' வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, மாறிவரும் சமுதாயத்தின் புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தமிழ் மொழி நவீனப் போக்குகளையும் சமுதாய மாற்றங்களையும் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு, முத்தமிழோடு அறிவியல் தமிழையும் மலரச் செய்ய வேண்டும் என்ற உரத்த சிந்தனையை இந்த உலகத் தமிழ் மாநாடு நம் மனங்களில் ஏற்படுத்தி உள்ளது. தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், மொழி ஆராய்ச்சியாளர்கள் ஏன் பொதுமக்கள் மத்தியிலும் இது ஒரு மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தியதை எவரும் மறுக்கமுடியாது.

தமிழன்னைக்கு நாம் நடத்திய ஆராதனையைத் திறந்த மனத்துடன் பார்க்க மனமில்லாத பரந்த மனம் படைத்தவர்கள் இந்த உலகத் தமிழ் மாநாடு ஒரு தேவையற்ற கொண்டாட்டம் என்றும் ஊதாரித்தனமான வீண் செலவு என்றும் வசை பாடினார்கள். நாங்கள் அரசியல் ஆதாயத்திற்காக இந்த மாநாட்டை நடத்தினோமோ இல்லையோ, நிச்சயமாக அவர்கள் அரசியல் ஆதாயத்திற்காகத் தான் வரட்டுப் புகார்களையும் வீண் வாதங்களையும் முன் வைத்தனர் என்பதைத் தமிழகம் நன்கறியும் தமிழ்த் தாய்க்கு ஆராதனை செய்ய மேற்கொண்ட இந்த மாநாட்டை நிறுத்துவதற்குப் பலர் மேற்கொண்ட முயற்சிகள் கானல் நீராகவும் கனவுக் கதைகளாகவும் முடிந்தன. தமிழ் அன்னைக்குத்துரோகம்செய்ய நினைப்பவர்கள் என்றும் வெற்றி பெற முடியாது என்பதை இந்த மாநாடு தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

இந்த மாநாடு என்ன சாதித்துவிட்டது? எதற்காக இத்தனைச் செலவு என்று வரட்டுக் கூச்சல் போட்டவர்கள் தஞ்சை மாநகரின் எழிலைக் கூட்டுவதற்கு நாம் மேற்கொண் முயற்சிகளை இருட்டடிப்புச் செய்ய முயல்வது ஏன்? பல கோடி ரூபாய் செலவில் புதிய சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், தங்குமிடங்கள் நினைவுச் சின்னங்கள், புராதனக் கோயில்கள், புனரமைக்கும் பணிகள் ஆகியவற்றை இவர்கள் மறந்தது ஏன்? தஞ்சை மாநகர் முற்றிலும் புதிய வசதிகளைப் பெற்று புதிய எழிலுடன் விளங்குவதைத் தஞ்சை வாழ் மக்கள் இன்று எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டிருப்பதை மறைக்கப் பார்ப்பது ஏன்?

உண்மையில் மாநாட்டுச் செலவில் பெரும் பகுதி, தஞ்சை நகர மேம்பாட்டுப் பணிகளுக்காகச் செலவிட வேண்டும் என்ற முடிவினை நாங்கள் தெளிந்த சிந்தனையோடு மேற்கொண்டோம் என்பதை எங்களைக் குறை கூறுபவர்கள் மறந்துவிட்டார்கள்.

"இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற புதிய எழுச்சி முழக்கத்தை அந்த மாநாட்டில் வழங்கிய நான், இன்று புதிதாக "அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்" என்ற புதிய முழக்கத்தையும் சேர்த்து, இந்த மாமன்றத்தின் வாயிலாக எழுப்புவதில், நான் உண்மையில் பெருமிதம் அடைகிறேன்.

எதிர்காலச் சந்ததியினரின் நன்மையைக் கருத்தில் கொண்டு எழில்மிகு தமிழை ஏற்றம் பெறச் செய்வதற்கு மூன்று தமிழுடன் நான்காம் தமிழாம் "அறிவியல் தமிழை", அறிவியல் உணர்வுடன் வளர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் சார்பில் தமிழக மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழாவது தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்

இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியில், சென்னை மாநகரில் SAF Games என்று அழைக்கப்படுகின்ற, 7வது தெற்காசியப் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், சீரோடும் சிறப்போடும் நடைபெற உள்ளன. இதற்காகத் தமிழக அரசு 120 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. இந்தியா உட்பட 9 தெற்காசிய நாடுகள் பங்கேற்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளை முதல்முறையாக ஒரு மாநிலத் தலைநகரில் நடத்த முடிவெடுத்துள்ளதும் அந்த அரிய பெருமை முதன் முறையாகத் தமிழ் நாட்டிற்குக் கிடைந்துள்ளதையும் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து எனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு 40 கோடி ரூபாய் மதிப்பில் ஏழரை மாதங்களில், சர்வதேசத் தரத்தில் கட்டி முடிக்கப்பட்ட சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் ஒரு வெளிப்பாடு ஆகும். எங்கள் ஆட்சியில் நடைபெற்ற சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள், இனி சென்னை மாநகரம் அத்தகைய விளையாட்டுப் போட்டிகளைத் திறம்பட நடத்தும் முழுத் தகுதியைப் பெற்றுள்ளது என்பதையும் நிரூபித்துள்ளன.

பல்வேறு விளையாட்டுத் துறையைச் சேர்ந்த சுமார் 2000 விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் மற்றும் 1500 விளையாட்டு அலுவலர்களும் பங்கேற்கவிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தேவையான விளையாட்டு அரங்கங்கள், கட்டடங்கள், தங்கும் விடுதிகள், மின் விளக்கு வசதிகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. தடகளப் போட்டிகள் உட்பட சுமார் 14 முக்கிய விளையாட்டுகள், இடம்பெற உள்ள இந்தப் போட்டிகளை நடத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை Infrastructural facilities உருவாக்கித்தர எல்லா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி உருவாக்கப்பட்டு வரும் புதிய வசதிகளும், விளையாட்டுப் பூங்காக்களும் சென்னை மாநகரின் எழிலுக்கு, மேலும் பொலிவு சேர்க்கும். விளையாட்டு வீரர்கள் , மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்காகச் சென்னை அருகே உள்ள கோயம்பேடு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 'விளையாட்டு நகரம்' Sports village சென்னை நகரின் வீட்டு வசதியை, வெகுவாக மேம்படுத்தும் என்பதிலும் ஐயமில்லை.

சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்கள், புதிய விளையாட்டுச் சாதனங்கள், சர்வதேச விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுடன் தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் போட்டியிடவும், பழகிப் பார்க்கவும் கிடைக்கின்ற வாய்ப்புகள், பொதுமக்கள் மத்தியில் விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும் என்று தோன்றியுள்ள ஒரு புதிய எழுச்சி, இவை அனைத்தும், தமிழக விளையாட்டு வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாக அமைய உள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னரும், அவை முடிவுறும் போதும் கண்கவர் கலை நிகழ்ச்சிகள், பிரம்மாண்டமான முறையில் நடைபெற உள்ளன. ஏழாவது தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், சென்னை நகரின் வரலாற்றுச் சிறப்புக்கும், விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கும், ஒரு புதிய மைல் கல்லாக அமையும் என்பதை, மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக அந்நியச் செலாவணியும் ஆபத்தே!

இந்திய நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு 20 பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளது என்று அண்மையில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மத்திய வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளார்கள். மிகக் குறுகிய காலகட்டத்தில் அந்நியச் செலாவணி இருப்பு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்க பெரும் சாதனை தான். நல்லதைப் பாராட்டும் மனம் படைத்த நாங்கள் இதை மனதாரப் பாராட்டும் அதே நேரத்தில், அதிகமான அந்நியச் செலாவணியினால் ஏற்படுகின்ற பின் விளைவுகளில் மத்திய அரசு கவனமாக இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இறக்குமதி செய்யாமல் எந்தவொரு நாடும் தனித்து இயங்க முடியாது என்கின்ற சூழ்நிலையில், பிற நாடுகளில் இருந்து பொருட்களையும், பணிகளையும், (Services) இறக்குமதி செய்ய, இந்த அந்நியச் செலாவணி நமக்குத் தேவைப்படுகிறது.

ஏற்றுமதியை அதிகப்படுத்துவதன் மூலமும், வெளிநாட்டவர்களின் முதலீடுகளை நம் நாட்டிற்குக் கொண்டு வருவதன் மூலமும், அந்நியச் செலாவணியை அதிகரிக்க இயலும், தற்போது இந்திய அரசிடம் உள்ள 20

பில்லியன் டாலர் அந்நியச் செலாவணி இருப்பு பெருமளவிற்கு அயல் நாட்டவர் நம் நாட்டில் செய்த முதலீடுகளால் கிடைத்ததாகும். இந்த வெளிநாட்டு முதலீடுகள் இரண்டு வகையாக நமக்குக் கிடைக்கின்றன. அயல் நாட்டவர் நேரிடையாகத் தொழில்களில் முதலீடு செய்வது அதாவது Foreign Direct Investment என்பது ஒரு வகை முதலீடு ஆகும். இந்த வகை முதலீடுகள், உற்பத்தி நோக்கங்களுக்காகக் குறிப்பிட்ட தொழில் திட்டங்களில் முதலீடு செய்யப்படுவதால், முழு மனதோடு வரவேற்கக்கூடிய முதலீடு ஆகும். இன்னொரு வகையான முதலீடு, இந்தியத் தொழில் நிறுவனங்களின் பங்குப் பத்திரங்கள், கடன் ஈட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்வதாகும்.

நமது நாட்டிற்குள் வந்துள்ள முதலீடுகளில், பெரும் பகுதிப் பங்குகள் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடுகளாக உள்ளன. எந்தவகையில் அந்நியச் செலாவணி கிடைத்தால் என்ன என்கின்ற கேள்வி மாண்புமிகு உறுப்பினர்கள் மனதில் எழலாம். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இத்தகைய முதலீடுகள், செய்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எந்தவொரு காலகட்டத்திலும் தங்களது முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படும் போது, பெரிய அளவிலான அந்நியச் செலாவணிப் பிரச்சினை ஏற்பட்டுவிடும்.

Mexico நாட்டின் அனுபவமே அதற்கு ஒரு சான்றாகும். இதுபோன்று, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளில் செய்த முதலீடுகளை திடீரெனத் திருப்பப் பெற்றதால் ஒரு பொருளாதார நெருக்கடியே, ஒரு Financial, economical crisis Mexico நாட்டில் நேர்ந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இத்தகைய ஒரு சூழ்நிலை இங்கு ஏற்பட்டுவிடாமல் பாதுகாக்க, முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதில் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும். இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் இந்த விதிமுறைகளை அதிகப்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது.

இந்தப் பிரச்சினை ஒருபுறம் இருக்க, கிடைத்திருக்கின்ற அந்நியச் செலாவணியை எப்படிப் பயனப்படுத்துகிறோம் என்பதும் ஒரு முக்கியமான அம்சம் ஆகும். அந்நியச் செலாவணியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் புழக்கத்தில் உள்ள அதிகப் பணம், பண வீக்கத்தை Inflationஐ மேலும் அதிகரித்துவிடும்.

அந்நியச் செலாவணியை மிக அதிக அளவில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான, உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். பங்குகளில் மறைமுக முதலீடுகளாக உள்ள அந்நியச் செலாவணி, உற்பத்தி நோக்கத்திற்கு நேரடி முதலீடுகளாக மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே Mexico நாட்டு அனுபவத்தின் அடிப்படையில் எழுகின்ற ஒரு கருத்தாகும்.

சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களின் அவசியத்தை தற்போது மத்திய அரசு முழுமையாக உணர்ந்து, இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னிலையில் இருக்கின்ற தமிழ்நாட்டைப் பின்பற்றி இத்தகைய திட்டங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி உள்ள சமுதாய முன்னேற்றங்களை மனதில் வைத்து இந்த ஆண்டு பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிவித்துள்ளது, உண்மையில் வரவேற்கக் கூடியதாகும். குறைந்தபட்சம் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகச் சமூக நலத் திட்டங்களில் மத்திய அரசு அதிகமான கவனம் செலுத்தவேண்டும். ஏழை எளிய மக்கள் சமூகப் பாதுகாப்பிற்காகத் திட்டங்களில் முதலீடு அதிகரிக்க வேண்டும் என்று நாங்கள் கூறிவந்த கருத்து, இன்றைக்கு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை எண்ணி மகிழ்கின்றேன். "We have proved again and again thatTamil Nadu is the trend-setter and the fore-funner in Social Welfare Schemes".

மாநில அரசுகள் வெளிநாட்டுக் கடன்கள் பெறுகின்ற வாய்ப்புகளை, மத்திய அரசு முற்றிலுமாகத் தடுத்து நிறுத்தியுள்ளது. கட்டுப்பாடற்ற வெளிநாட்டுக் கடன்கள் ஒரு மாநிலத்தின் பொருளாதாரத்தைச் சீரழித்துவிடும் என்பது உண்மை என்றாலும், ஒரு குறிப்பிட்ட உச்ச வரம்பிற்குள் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்படுவதைப் போல, மாநில அரசுகளுக்கும் மாநில அரசு நிறுவனங்களுக்கும் கடன்பெற அனுமதிக்கப்பட்டால், முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்க உதவிகரமாக இருக்கும் என்பதே எனது கருத்து, எனவே மாநில அரசுகளுக்கும், மாநில அரசு நிறுவனங்களுக்கும் இந்த அனுமதி வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூகத் துறைச் செலவு

1995-96 வரவு செலவுத் திட்டத்தில், மத்திய அரசு, தேசிய சமூக உதவித் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. தமிழ்நாடு போன்ற சமூக நலத் துறையில் முன்னோடியாக இருக்கின்ற மாநிலங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஏனென்றால், 3 ஆண்டுகளுக்கு முன்னால், இதே மத்திய அரசு, உணவுக்கான மானியத் தொகை, உரங்களுக்கான மானியத்தொகை, கிராம வளர்ச்சி மற்றும் சமூகத் துறை ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளையும் கணிசமாகக் குறைத்துவிட்டது. இன்று அந்தப் போக்கு முற்றிலுமாக மாறி உள்ளது வரவேற்கத்தக்க ஒரு மாறுதலாகும்.

அனைத்து இந்திய அளவில், சமூகத் துறையில் Social Sectorகளில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் வெகுவாகக் குறைக்கப்பட்ட போதும், சமூகத் துறைகளின் மீதான செலவினத்தை எத்தனை நிதி நெருக்கடியிலும் தொடர்ந்து உயர்த்திக் கொண்டே சென்ற வெகு சில மாநிலங்களில், தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் இருந்த மாநிலம் ஆகும். புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் உட்பட, நாம் செயல்படுத்திவருகின்ற பல்வேறு சமூகநலத் திட்டங்களை, மத்திய அரசு உட்பட பல்வேறு நிறுவனங்கள் குறை கூறி விமர்சனம் செய்த காலமும் உண்டு. இருந்தாலும் நாம் அவற்றையெல்லாம் துணிச்சலாக எதிர்கொண்டு வெற்றி கண்டோம்.

"காய்தல் உவத்தல் அகற்றி" நமது செயல்பாடுகளை, நடுநிலையொட்டி, சீர்தூக்கிப் பார்த்த பலரும், சமுதாய முன்னேற்றத்தில் நமது சாதனைகளை மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்கள். Economic and Political Weekly என்ற வார இதழ், மக்கள் தொகைப் பிறப்பு இறப்பு நோய்கள் முதலான புள்ளி விவரங்களை ஆராய்ந்து 1994-ஆம் ஆண்டு மே இதழில் வெளியிட்ட ஒரு கட்டுரையில், தமிழ்நாட்டின் சாதனைகளைப் பெரிதும் பாராட்டி உள்ளது. நாம் மேற்கொண்ட சமூக நலப் பணிகளின் விளைவாகத் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதங்கள், இறப்பு விகிதங்கள், உயிருடன் பிறந்த குழந்தைகளின் பிறப்பு விகிதங்கள் போன்றவை, அகில இந்தியச் சராசரியைக் காட்டிலும், தமிழ்நாட்டில் கணிசமான அளவு குறைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி உள்ளது.

சமூகத் துறைகளில் இத்தனை ஈடுபாட்டை நாம் காட்டி வருவதற்குக் காரணமே இதன் முக்கியத்துவத்தை அறிந்துதான்." தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கின் மீதான செலவினத்தில், அதாவது Revenueexpenditure-இல் 41 சதவிகிதம் Social Sector எனப்படும் சமூகத் துறைக்குச் செலவிடப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதிலும், இந்தச் செலவின அளவு, இந்திய நாட்டிலுள்ள மாநிலங்களில் சமூகத் துறைக்கு அதிக அளவு செய்யப்படும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது என்பதைத் தெரிவிப்பதிலும் பெருமிதம் அடைகின்றேன். இந்தக் கொள்கையால், சமூகத் துறையை மேம்படுத்த நாம் மேற்கொண்ட கொள்கைகளும் செயல்பாடுகளும் உறுதியான ஆதாயங்களை நமக்குப் பெற்றுக் கொடுத்துள்ளன.

இத்தனை விளக்கமாக இங்கே இவற்றை நான் விவரிப்பதற்குக் காரணம், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர். ஆகியோரின் அடியொற்றி நாம் மேற்கொண்டு வருகின்ற இலட்சியங்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இப்போதாவது மத்திய அரசு உணர்ந்து, ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனுக்காகச் சமூக நலத் திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கின்றதே என்பதை எண்ணித் தான்.

மத்திய அரசின் திட்டங்களையும் செயல்பாடுகளையும் விரிவாக எடுத்துரைத்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசு அறிவித்துள்ள பெரும்பாலான சமூக நலத் திட்டங்கள் அனைத்துமே பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருபவை என்பதை எடுத்துக்கூற மறந்துவிட்டார் அல்லது, சொல்ல அவருக்கு மனம் வரவில்லை.

அவர் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், "மதிய உணவுத் திட்டம்" "முதியோர் உதவித் தொகைத் திட்டம்" "துயருற்ற குடும்பங்களுக்கு நிவாரண உதவித் திட்டம்", "கருவுற்ற தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்கள் நலத் திட்டம்" அகிய திட்டங்கள் ஏற்கெனவே தமிழக அரசால் பல ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களாகும். Imitation is the highest form of praise என்பார்கள். "ஒருவரை அப்படியே

பின்பற்றுவது, அவருக்குச் சூட்டப்படும் மிக உயர்ந்த புகழாரம்" என்ற அடிப்படையில், மத்திய அரசு தமிழ்நாடு அரசின் சமூக நலத் திட்டங்களை அப்படியே பின்பற்றி இருப்பது, எங்களுக்குக் கிடைத்துள்ள மிக உயர்ந்த பாராட்டாகவே நாங்கள் கருதுகிறோம்.

பொது விநியோகத் திட்டம்

பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரிசி, கோதுமை, சர்க்கரை, மற்றும் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கச் செய்வதில் நாங்கள் தனி ஆர்வம் காட்டி வருகின்றோம். கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகப் பொது விநியோகத் திட்டமானது, பட்டிதொட்டி எங்கும் நன்முறையில் நடத்தப் பெறுவதை, மற்ற மாநிலங்கள் அனைத்தும் வியந்து பாராட்டி, நமது முறையை அவர்களும் பின்பற்றி வருகின்றனர். தவறாமல் பெய்கின்ற பருவ மழையும், தட்டுப்பாடற்ற நதி நீர்ப் பாசனமும், கடந்த மூன்றே முக்கால் அண்டுகளாகத் தமிழ்நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் நலைமையை, குறிப்பாக, தாராளமாக அரிசி அனைவருக்கும் கிடைக்கக் கூடிய நிலைமையைத் தொடர்ந்து நன்முறையில் தக்க வைத்துக்கொள்ளும்படி செய்துள்ளன.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி விலை உயர்த்தப் பட்டதற்கு, மத்திய அரசு வழங்கும் அரிசி விலையேற்றமும், கூடி வருகின்ற மானியச் சுமையும்தான், அடிப்படைக் காரணங்கள். எங்களைப் பொறுத்தவரையில் அரிசியின் விலையை ஏற்றக்கூடாது என்றே விரும்புகிறோம். அதனால்தான், ஏழை எளியவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, பல சமயங்களில் அறிவிக்கப்பட்ட அரிசி விலையேற்றத்தை, விலக்கிக்கொண்டதும் உண்டு. சில நேரங்களில் குறைத்துக் கொண்டதும் உண்டு.

பொதுவாகவே, தமிழ்நாட்டில் நெற் பயிர் அதிகம் விளையக்கூடிய பகுதிகளாக தஞ்சை, நாகை, திருச்சி போன்றப் பகுதிகளில் அரசு ஏகபோக நெல்கொள்முதல் முறையை மேற்கொண்டு வந்தது. இந்த முறையில் விவசாயிகளுக்கு விற்பனைச் சுதந்திரம் கிடைப்பதில்லை. எனவே விவசாயிகளின் தரப்பில் இருந்து பல ஆண்டுகளாகவே ஏகபோகக் கொள்முதல் முறையைக் கைவிட வேண்டும் என அரசுக்குக் கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. நான்கு ஆண்டுகளாகத் தமிழகத்தில் நிகழ்ந்த அமோகமான உணவுத் தானியங்களின் விளைச்சலைக் கருத்தில் கொண்டும், டெல்டா பகுதி விவசாயிகளுக்கு, விற்பனைச் சுதந்தரம் பெற்றுத் தருவதற்கும், ஏகபோகக் கொள்முதல் முறையை நீக்கி, இணைக் கொள்முதல் முறையை எங்கள் அரசு நடைமுறைப் படுத்தியது.

Support Price Scheme அதாவது ஆதார விலைத் திட்டமும் இதனுடன் அமல்படுத்தப் படுவதால், ஒரு குறிப்பிட்ட விலைக்குக் குறைவாக விற்றால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கே, அவர்கள் விற்று விடலாம். கடந்த 1993-ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டுவரும் இந்த இணைக் கொள்முதல் முறை, விவசாயிகள், மொத்த வணிகர்கள், மற்றும் அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்று, நன்முறையில் இயங்கி வருகின்றது.

ஏழை எளிய மக்களின் நலன் கருதி, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையை, மத்திய அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் உயர்த்தக்கூடாது என்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். மேலும், தேசிய வளர்ச்சிக் குழு, National Development Council கூட்டத்தை, விரைவில் கூட்டி, இதுகுறித்து ஒரு ஆக்கபூர்வமான முடிவு எடுக்க வேண்டும் என்பதே எனது கருத்து. அரிசி விலை உயராமல் பாதுகாக்க அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியின் புதிய பரிமாணங்கள்

சமீப காலமாகச் சட்டம் ஒழுங்கைக் குறைகூற முடியாத நிலையிலும், திட்டச் செலவுகளைக் குற்றம் சாட்ட முடியாத ஒரு நிலையிலும் எதிர்க்கட்சிகள் ஒரு புதிய உத்தியைக் கையாள ஆரம்பித்துவிட்டார்கள். யாரோ, ஒரு பகுதியில் நடத்திய Market Survey, Research போன்றவற்றைப் பயன்படுத்தி, தமிழகத் தொழில் துறையில் பின்னடைவு ஏற்பட்டுவிட்டது என்றும், தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டிற்கு உகந்த சூழ்நிலைகள் இல்லை என்றும், மற்ற மாநிலங்களில் இருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் முதலீடு செய்ய வருகின்றவர்கள் இதனால் மனம் தளர்ந்து வேறு மாநிலங்களுக்குச் சென்று விடுகிறார்கள் என்றும் ஒரு தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், TIDCO துவங்கப்பட்ட நாளிலிருந்து, 1991-ஆம் ஆண்டு, அதாவது நாங்கள் பதவி ஏற்ற நாள்வரை, 26 ஆண்டுகளில் மொத்தம் 49 தொழில்கள் 1431 கோடி ரூபாய் செலவில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, 1991 முதல் இன்று வரை மூன்றே முக்கால் ஆண்டுகளில் 45 புதிய தொழில்கள் 10,936 கோடி ரூபாய் செலவில் துவக்கி இருக்கிறோம். இதை ஒப்பிட்டுப் பார்த்தால் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் எத்தனை ஆதாரமற்றவை என்பதும், தமிழகம், தொழில் துறையில் விரைந்த முன்னேற்றம் அடைந்துவருகிறது என்பதும் தெளிவாகும் என்று கருதுகிறேன்.

Madras Aluminium Company Limited எனப்படும் MALCO 1965-இல் ஆரம்பிக்கப் பட்டு 1987-இல் உற்பத்தி நின்றுவிட்டது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனைக் கருதியும், ஒரு நல்ல தொழில் வீணாகப் போய்விடக் கூடாது என்பதற்காகவும், தமிழக அரசு அதன் பிரச்சினைகளை ஆராய்ந்து, 26 கோடி ரூய் அளவிற்குப் பல்வேறு உதவிகளை வழங்கியதோடு, விற்பனை வரியை 5 ஆண்டுக் காலத்திற்குத் தள்ளிப் போடவும், சலுகை விலையில் மின்சாரத்தை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இத்தனைக்குப் பிறகும், இந்தக் கம்பெனியின் நிர்வாகத்தால், தொழிற்சாலையை மீண்டும் அதன் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. இருப்பினும் இங்குப் பணி புரியும் 1172 தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பம்பாயைச் சேர்ந்த Sterlite Industries Ltd நிறுவனத்திடம் MALCO நிறுவனம் ஒப்படைக்கப்பட்டது. மீண்டும் இத்தொழிற்சாலை செயல்பட நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். எல்லாப் பணியாளர்களும் மீண்டும் வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவார்கள். 1990-91 மற்று 1991-92 ஆகிய ஆண்டுகளில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருநத ஊதியத் தொகை, இந்தக் கம்பெனியால் வழங்கப்பட்டுவிட்டது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்கின்ற அதே நேரத்தில், சில பெருந் தொழில்களையும், தமிழ்நாட்டில் அமைக்கவேண்டும் என்பதே எங்கள் எண்ணம். வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய ஊக்கத்தை வழங்கவும், இந்தப் பெருந் தொழில்கள் உதவிகரமாக விளங்கும் என்பதை, நாங்கள் நன்கு அறிவோம். எனவேதான், தமிழ்நாட்டில் உள்ள கட்டமைப்புகள் Infrastructure, தொழில் நுட்ப அறிவு Technical Know how, திறமை வாய்ந்த தொழிலாளர்கள் Skilled Manpower ஆகியவற்றைச் சீர்தூக்கி, கார் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் கொண்டு வர முடியும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தானியங்கி வாகனங்கள் Automobiles தயாரிக்கின்ற பல தொழில் முனைவோர்கள். கார் போன்ற தானியங்கிகளைத் தயாரிக்கும், அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து, கார் தொழிற்சாலையை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள். இத்திட்டங்கள் தமிழகத்திற்கு வரவேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு Mahindra & Mahindra, Telco, Eicher, Maruti Udyog ஆகிய தொழில் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. தொழிற்சாலை வைப்பதற்கான, தகுதியான இடமும் கவர்ச்சிகரமான ஊக்கங்களும், அடிப்படை வசதிகளும் இவர்களுக்கு வழங்குவாது குறித்தும், முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கார் தொழிற்சாலையை, சென்னையில் நிறுவுவதற்க முன் வரவேண்டுமென, நானே சில தொழில் நிறுவனங்களின் தலைவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

வல்லுநர்கள் குழுக்கள் சில, இத்திட்டம் தொடர்பாகத் தமிழகத்திற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர். எனவே, விரைவில் கார் தயாரிக்கும் திட்டம் ஒன்றைத் தமிழகத்தில் செயல்படுத்துவதற்கான ஆக்கப் பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்தங்கிய மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு, வேளாண்மையை வளர்ப்பதோடு, புதிய தொழில்களையும், உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் அரசின் நோக்க

மாகும்.

2.3.1994 அன்று நடைபெற்ற, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட அரசு விழாவில், அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு, இரும்பு எஃகுத் தொழிற்சாலை நிறுவுவதற்கான, சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அதன் விளைவுகள் சாதகமாக இருந்தால், ஒரு மாபெரும் தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று அறிவித்தேன். திருவண்ணாமலைப் பகுதியிலும், சேலம் மாவட்டம் கஞ்சமலைப் பகுதியிலும், 450 மில்லியன் டன்கள் இரும்புத் தாது இருப்பதாக ஒரு ஆராய்ச்சியில் 1960-ஆம் ஆண்டிலேயே கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், இத்தனை ஆண்டுகளாக இந்த இரும்புத் தாது எடுப்பதற்கும், இரும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

1992-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பூமியிலிருந்து இரும்புத் தாது எடுத்து ஸ்டீல் தயாரிக்கின்ற பணியை நாமே தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தேன். Dastur & Co மற்றும் Mecon நிறுவனங்கள் இரும்புத் தாது எடுப்பது குறித்தும், ஸ்டீல் தொழிற்சாலை அமைப்பது குறித்தும் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ள இயலுமா என்று ஆராய்ச்சியை மேற்கொண்டனர். திருவண்ணாமலை மற்றும் கஞ்சமலைப் பகுதிகளில் 35 சதவிகிதம் இரும்புத் தாது கிடைத்தாலும் அவற்றை 67 சதவிகித இரும்பாக மாற்றுவதற்கும், அதை ஸ்டீலாகத் தயாரிப்பதற்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை இந்நிறுவனத்தின் ஆய்வுகள் தெளிவுபடுத்தி உள்ளன.

Austriaவில் உள்ள Voest Alpine என்ற நிறுவனம் கண்டுபிடித்துள்ள Corex process என்ற தயாரிப்பு முறையைக் கடைப்பிடித்து, ஸ்டீல் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இரும்புத் தாதுவை எடுத்து, சிறிய குண்டுகளாக உருக்கி, அவற்றை ஸ்டீல் பட்டைகளாகத் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த 3300 கோடி ரூபாய் செலவாகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் TIDCO Austria நாட்டு நிறுவனத்துடன் தொழில்நுட்ப உதவிகளுக்காக ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது. 3800 பேருக்கும் மேல் நேரடி வேலைவாய்ப்பும், கிட்டத்தட்ட 50,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் இந்தத்

திட்டத்தினால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது மட்டுமின்றி, இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழகத்தின் ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சிக்கும் இந்தத் தொழிற்சாலை ஒரு திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எப்படியேனும் இந்தத் தொழில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்கின்ற எனது ஆணையின் பேரில் TIDCO நிறுவனம் Associate Sector இல் Grasim Industries என்ற Birla நிறுவனத்தை Co-promoter ஆகத் தேர்ந்தெடுத்து ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளது. அமைதியாக, ஆர்ப்பாட்டம் இன்றி இந்த அரசு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இத்திட்டம் விளங்கும் என்பதில் ஒரு எடுத்துக்காட்டாக இத்திட்டம் விளங்கும் என்பதில் ஐயமில்லை. இன்னும் 4,5 ஆண்டுகளில் இத்திட்டம் முழுமை பெறும் போது, பின்தங்கிய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஒரு உறுதியான முன்னேற்றத்தினைப் பெறும் என்று நம்புகிறேன்.

மின் உற்பத்தியே நமது இலக்கு!

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, விரைந்த அதன் தொழில் வளர்ச்சியும், அதற்கு அடிப்படையான மின் உற்பத்திப் பெருக்கமும், அவசியம் ஆகும். எங்கள் அரசு, இதை நன்கு உணர்ந்திருப்பதால்தான், பதவி ஏற்ற நாள் முதல், மின் உற்பத்திப் பெருக்கத்தில் தீவிர ஈடுபாட்டினைக் காட்டி வருகின்றது.

எரிசக்தித் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, புதியதாக "எரிசக்தித் துறை" Energy Department ஒன்றை உருவாக்கினோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், முறைசார்ந்த மற்றும் முறை சாரா மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு எங்கள் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்திவருகிறது. முறை சாரா மின் உற்பத்திப் பெருக்கத்தில், அகில இந்திய அளவிலே, இன்று தமிழகம், மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக இருக்கின்றது என்றால், அது மிகையாகாது. சூரியஒளி வாயிலாக மின் உற்பத்தி, காற்றாலைகள் வாயிலாக மின் உற்பத்தி எரிவாயு வாயிலாக மின் உற்பத்தி கடல் அலைகளுக்கு இடையேயான வெப்பத்தின் வாயிலாக மின் உற்பத்தி என்று முறைசாரா மின் உற்பத்திப் பெருக்கத்தில், ஒரு முன்னோடி மாநிலமாகத் தமிழகம் இன்று திகழ்ந்து கொண்டிருக்கிறது.

காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது. 100 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைப் பண்ணையில் தனியார் பங்கு மிகுதியாகப் பெறப்பட்டுள்ளது.

அதே சமயத்தில், அனல் மற்றும் புனல் மின் உற்பத்தியிலும், தமிழகம் கடந்த மூன்றே முக்கால் ஆண்டுக் காலத்தில், முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவிற்குச் சுமார் 9.220 மெகாவாட் அளவிலான மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு வலுவான ஒரு அடித்தளத்தை அமைத்துள்ளது.

இவற்றில் 5.020 மெகாவாட் மின்சாரம், தயாரிக்கும் திட்டங்களைப் பல்வேறு தனியார் நிறுவனங்கள் செயல்படுத்த உள்ளன. மின்சார நிலையங்கள் அமைக்கப்படும் பணி தொடங்கப்பட்டு, இன்று பல்வேறு நிலைகளில் உள்ளன. மேலும், 5.200 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின்சார நிலையங்களைத் தொடங்குவதற்குத் தனியார் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும், சில ஆண்டுகள் கழித்து, நான் குறிப்பிட்டுள்ள இந்த 9.220 மெகாவாட் திறனுள்ள மின் நிலையங்கள் உற்பத்தியைத் துவக்கும்போது, தமிழகம் மின் உற்பத்தியில், அகில இந்திய அளவிலே, முன்னணி மாநிலமாக மாறும். மேலும், மின்சாரத்தில் ஒரு உபரி மாநிலமாக மாறும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உள்ளது.

1991-ஆம் ஆண்டு *21.287* மில்லியன் யூனிட்டுகளாக இருந்த, தமிழகத்தின் வருடாந்திர மின் உற்பத்தி, *1995*-ஆம் ஆண்டு *29,956* மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. நமது மாநிலத்தில் மின்வெட்டு என்பது கிடையாது என்ற உன்னதமான நிலையை உருவாக்குவதில் கடந்த மூன்றே முக்கால் ஆண்டுக் காலமாக எங்களது அரசு எந்த அளவுக்கு, தொலைநோக்குப் பார்வையோடு, ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செயலாற்றி வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

எங்களது அரசு பதவியேற்ற பிறகு, தமிழகத்தின் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. *1991*-இல், ஒரு நாளைக்குத் தமிழ்நாட்டில், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் சராசரி அளவு 5.8 கோடி யூனிட்டாகும். ஆனால், இன்று ஒரு நாளைக்கு 8.2 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

தனியார் துறையின் முதலீட்டோடு, துவங்கப்பட்ட மிகப்பெரிய மின் உற்பத்தித் திட்டங்கள், வெகு விரைவில் புதியதோர் சாதனையைப் படைத்திடும் என்பதில், எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. குறிப்பாக, 7,500 கோடி ரூபாய் மதிப்பில், 1,500 மெகாவாட் மின்சாம் உற்பத்தி செய்யும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், 376 கோடி ரூபாய் மதிப்பில், 120 மெகாவாட் திறனுள்ள பேசின்பிரிட்ஜ் எரிவாயு மின் சுழலி மின் உற்பத்தித் திட்டம், உலக அளவிலே முதன் முதலாக, சிதம்பரனார் மாவட்டத்தில் குலசேகரப் பட்டினம் கடற்கரைப் பகுதியில், Sea Solar Incorporated என்ற அமெரிக்க நிறுவனத்தின் மூலமாக, 800 கோடி ரூபாய் செலவில், கடல் நீர் வெப்பத்திலிருந்து, 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தேவர் குளத்தில், 55 கோடி ரூபாய் மதிப்பில் காற்றாலைகளிலிருந்து 15 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம், ஆகியவை தமிழக மின்துறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கித் தரும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஆக, எங்களது அரசு தற்போது மேற்கொண்டு வரும், அனைத்துப் புதிய மின் உற்பத்தித் திட்டங்களும், முழுத் திறனில் செயலாற்றத் துவங்கும்போது நிச்சயமாகத் தமிழகம் மின் உற்பத்தியில் ஒரு உபரி மாநிலமாக மாறும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்களின் முன்பு வைப்பதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேளாண்மையில் புதிய சாதனைகள்

1994-ஆம் ஆண்டிலேயே உணவுப் பொருட்கள் உற்பத்தியில் புதிய இலக்கான ஒரு கோடி டன் உற்பத்தி அளவை அடைந்து விட்டோம். இது ஒரு சாதனைச் சரித்திரம் ஆகும்.

இந்த ஆண்டு அரிசி உற்பத்தியில் 85 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்ததோடு, பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, அகில இந்திய அளவில் அரிசி உற்பத்தித் திறனில்

இரண்டாம் இடத்தை வகிக்கின்ற பெருமையைப் பெற்றுள்ளோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1991-ஆம் ஆண்டு 57.82 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி, 1994-95ஆம் ஆண்டில் 85 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து, அரிசி உற்பத்தியில் புதிய சிகரத்தைத் தொட்டிருக்கிறோம். அதே போல, 1991-ஆம் ஆண்டில், 12.41 இலட்சம் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 1993-94ஆம் ஆண்டில் 20.32 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து, சாதனைச் சரித்திரம் படைத்து, எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனில், நாம் அகில இந்திய அளவில் முதலிடத்தைப் பெற வழிவகுத்துள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் 242.30 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்த கரும்பு உற்பத்தி, 1993-94-ஆம் ஆண்டு 320.42 இலட்சம் மெட்ரிக் டன் உயர்ந்துள்ளது. கரும்பு உற்பத்தித் திறனில், இன்று நாம் அகில இந்திய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளோம்.

1991-92-ஆம் ஆண்டு 1.79 இலட்சம் எக்டேர் அளவில் மட்டும் இருந்த தென்னை, 1993-94-ஆம் ஆண்டு, 2.40 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பாக உயர்ந்துள்ளது. தென்னைப் பயிர் உற்பத்தித் திறனில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளோம்.

தமிழக வேளாண்மைத்துறை எங்களது ஆட்சிக் காலத்தில், புதிய எல்லைகளைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. புதிய பரிமாணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு எக்டேருக்கு 3 டன் அளவில் உள்ள அரிசி உற்பத்தித் திறனை, 4 டன்னாக உயர்த்தவேண்டும் என்பதுதான், எங்கள் அரசின் அடுத்த கட்ட இலட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத்துறையில் ஒரு உன்னதமான சூழ்நிலையை அடைவதற்கு, எங்கள் அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றது.

முன்னோடிச் சமூக நலத் திட்டங்கள்

ஒரு சமுதாயமானது, வளர்ச்சியுற்ற சமுதாயம் என்ற பாராட்டினைப் பெற வேண்டும் என்றால், அதிலுள்ள மகளிரும், மழலையரும், நன்கு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உயரிய கொள்கையை முற்றிலும் கடைப்பிடித்துவரும் ஒரு முன்னோடி மாநிலம், தமிழ்நாடு என்பதைப் பல வெளிநாட்டு நிறுவனங்களே பாராட்டி மகிழ்ந்துள்ளன. மகளிர் மற்றும் குழந்தைகள், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோரது நலன்களைக் காத்து, சமுதாயத்தில் அவர்கள் தன்னம்பிக்கையோடு வாழ, தொலைநோக்குப் பார்வையோடு, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதுதான் சமூக நலப் பணி என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்தத் தெளிந்த கருத்தின் அடிப்படையில்தான் சென்ற ஆண்டு 1994 மார்ச் மாதம் அன்னை தெரசா அவர்களின் தலைமையில் பன்னாட்டுச் சமூகவியல் அறிஞர்கள் முன்னிலையில் மகளிருக்கான கருத்தரங்கம் ஒன்றினை நான் நடத்தி, அதில் தமிழக அரசின் Vision 2000 என்ற தமிழக சமூக நலப் பணிக் கொள்கை விளக்கத்தினை வெளியிட்டேன். அகில இந்தியாவிலேயே, மற்ற மாநிலங்கள் அனைத்திற்கும் முன்னோடியாக அமைந்துள்ள இந்தத் திட்டமானது, UNESCO நிறுவனம் முதற்கொண்டு பல மாநிலங்கள் உட்பட, மத்திய சமூக நலத்துறை வரை, பல்வேறு அமைப்புகளின் மனமார்ந்த பாராட்டுக்களைப் பெற்றது.

இதேபோன்று, குழந்தைகள் நலத்தைப் பொறுத்தவரையில், எங்களது அரசு, 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்தி வருகின்றது. ஒரு குழந்தை பிறக்கும்போது குறைந்தபட்சம், 3 கிலோ எடையாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் இருந்து ஆரம்பித்து, தடுப்பு ஊசி, ஊட்டச் சத்துக் குறைவை அகற்றுதல், மருத்துவ வசதிகள், சத்துணவு வழங்குதல், கட்டாயத் தொடக்கக் கல்வி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுத் தருதல், குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குதல், பெண் குழந்தை சிசு வதையை ஒழித்தல் மற்றும் பிறப்பில் ஏற்படும் இருதயக் கோளாறுகளை நிவர்த்தி செய்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் சமூக நலத்துறைப் பணிகளில், ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

உடல் ஊனமுற்றவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், எங்களது அரசு முதன் முறையாக 1993-ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றோர் நலத்துறை ஒன்றினை ஏற்படுத்தியது. உடல் ஊனமுற்றவர்களை அதிக அளவில், பணிக்கு அமர்த்திய நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகளை வழங்கும் திட்டத்தையும், கண்பார்வையற்ற, காது கேளாத மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்க பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் எங்களது அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. உடல் ஊனமுற்ற மாணவ மாணவியருக்குப் பணியிடங்களை வழங்குவதிலும், எங்களது அரசு முன்னணியில் இருக்கின்றது.

அகில இந்திய அளவிலே, முதன் முறையாகத் தமிழ்நாட்டில்தான் கடந்த **3.12.1994** அன்று உடல் ஊனமுற்றோருக்கான நலன் பற்றிய மாநிலக் கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்றினை நான் வெளியிட்டிருந்தேன். உடல் ஊனமுற்றவர்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் நமது மாநிலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் இனி இதற்கான கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையில்தான் எடுக்கப்படும் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது அரசு சமூக நலப் பணிகளில் மனித நேயத்தை வெகுவாகப் புகுத்தி இருக்கின்றது என்பதற்கு இமாலயச் சான்று, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் 'அரசு தொட்டில் குழந்தைகள் திட்டம்'. பெண் சிசு வதை என்ற சமூகக் கொடுமைக்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைப்போம். இந்தப் புரட்சிகரமான திட்டமும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும் நமது நாட்டில் மட்டுமன்றி, பல்வேறு மேலை நாடுகளிலும், வெகுவாகப் பாராட்டப்படுகின்ற ஒரு உன்னதமான திட்டமாகத் திகழ்கின்றது. Undoubtedly our Government is a Government with a Human face.

ஊனமுற்றோருக்கான புதிய கொள்கை

மகளிரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் புதிய கொள்கை ஒன்றையும், 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டத்தையும் அறிவித்தது போல, உடல் ஊன்முன்றோரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக முதன் முதலில் ஒரு புதிய கொள்கையினை, நாங்கள் இந்த ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வந்தோம். ஊனமுன்றோருக்குத் தேவை, உதட்டு அளவிலான பரிதாபமும் பச்சாதாபமும் அல்ல. உள்ளத்தில் இருந்து எழுகின்ற உண்மையான சகோதரப் பாசமும், மனிதாபிமானமும் தான் தேவை என்பதை உலகிற்கு வெளிப்படுத்தவே, இந்தக் கொள்கையை நாங்கள் கொண்டுவந்தோம்.

Disabled என்று குறிப்பிடுவதையே இன்று மாற்றி, Otherwise abled என்று, ஊனமுற்றவர்கள் தங்களால் முடிந்த வேறொரு துறையில் சிறப்புப் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். வறுமை மற்றும் அறியாமையின் காரணமாகப் பிறப்பிலேயே ஊனங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், குறைபாடுகளைக் குறைப்பதற்கும், ஊனமுற்றவர்களையும் சமுதாயத்தில் மதிப்பு மிக்க அங்கமாக ஏற்றுக் கொள்வதற்கும், நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் இந்தக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

ஊனமுன்றோர் நலன் காக்கும் நிறுவனங்களின் செயல்பாடுகளை மாநில அளவில் ஒருங்கிணைப்பதற்காக, மாநிலப்புனர் வாழ்வுக் குழு State Rehabilitation Council என்ற அமைப்பு முதன் முதலாக ஏற்படுத்தப்படுகிறது. ஊனமுற்றோர்களின் உரிமைகளைப் பாதுகாக்க 'சட்டபூர்வமான வடிவம் வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். எங்கள் கொள்கையும் அதன் செயலாக்கமும், ஊனமுற்றோரின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக, புதிய மைல் கல்லாக விளங்கும் என்ற உறுதியாக நம்பிகிறேன்.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

மக்கள் போற்றும் ஒரு அரசாங்கம், அதன் குடிமக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், பெற்றுத் தருவதைத் தன் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும் என்பது, அறிஞர்களின் கூற்று. இந்த மனித நேயக் கொள்கையின் அடிப்படையில் தான், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்காக இலவசச் சத்துணவுத் திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். மேலும், பொங்கல் திருநாள் போன்ற முக்கியப் பண்டிகை தினங்களிலேனும், மற்றவர்களைப் போல, தாமும் உடுத்திக்கொள்ள புதிய ஆடைகள் இல்லையே என்று, எண்ணற்ற ஏழை எளியோர், நலிந்த பிரிவு மக்கள் மனம் வாடக்கூடாது. என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் கொண்டு

வந்தார்கள். அந்த இரண்டு திட்டங்களுமே தமிழகத்தில் உள்ள கோடிக் கணக்கான ஏழை எளியவர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டது என்றால், அது மிகையாகாது.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் இலட்சியங்களையே, எங்கள் பாதைகளாக்கி, வெற்றி நடை போட்டுவரும், எங்களது அரசு, இந்த இரண்டு திட்டங்களையுமே கண்ணெனக்காத்து, புதுப் பொலிவோடு செயல்படுத்தி வருகின்றது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக, 1992-ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று தமிழகத்திலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், ஏழை எளியவர்களுக்கும் 45 கோடி ரூபாய் செலவில் சுமார் 61 இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டிகளும், 61 இலட்சம் பெண்களுக்கு இலவசச் சேலைகளும் வழங்கப்பட்டு மக்கள் நலப்பணியில் ஒரு மகத்தான அத்தியாயம் துவங்கப்பட்டது. பின்னர், 1993-ஆம் ஆண்டும் 56,25 கோடி ரூபாய் செலவில் 63 லட்சம் ஆண்கள், மற்றும் 63 இலட்சம் பெண்கள் ஆகியோருக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன. 1994-ஆம் ஆண்டு 65 கோடி ரூபாய் செலவில், அதைப் போலவே, இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்பட்டன. ஏழை, எளியோர் நலன் காக்கும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள ஒரே மாநிலமாக அகில இந்திய அளவில் தமிழகம் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மாபெரும் திட்டத்திற்கான வேட்டிகள் மற்றும் சேலைகள் ஆகியவை கோ-ஆப்டெக்ஸ் போன்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து மட்டுமே பெறப்பட்டு, தனியார் நிறுவனங்களில் இருந்து, கொள்முதல் செய்யப்படுவது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதையும், ஆயிரக்கணக்கான கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை இந்தத் திட்டம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமுதாய இடர்ப்பாடுகளைக் களையவும், எங்கள் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் ஏராளம்.

கல்லாமையும், இல்லாமையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின் மக்களின், வாழ்க்கையிலிருந்து விலகப் பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கல்விக் கண்ணைத் திறந்து வைப்பதே மிகப்பெரிய பணி என்று கருதி எங்கள் அரசு, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்குப் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தியதால், பொதுத் தேர்வுகளில் வெற்றி பெறுவோரின் எண்ணிக்கை, அதிகரித்துள்ளது. 1991- 92-இல், பத்தாம் வகுப்பில் வெற்றி பெற்றவர்கள், 34 சதவிகிதம் மட்டுமே. ஆனால், 1992 -93-இல், 70 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதே போலப் பன்னிரண்டாம் வகுப்பு- Plus two தேர்வில், வெற்றி பெற்றவர்களின் சதவிகிதம், 38 லிருந்து 56 ஆக, உயர்ந்துள்ளது. 110 புதிய விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. 3,500க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 8.30 கோடி ரூபாய் செலவில் 34 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை 8 இலட்சம் ரூபாயிலிருந்து 18 இலட்சம் ரூபாய்க்கு இன்று உயர்ந்துள்ளது. இவை போதாது என்பதால் தான், 6.12.1994 அன்று மாநகரத் தந்தையாக, இருந்த பெரியவர் சிவராஜ் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைக்கும்போது, மேலும் பல புதிய திட்டங்களை அறிவித்தேன். அவை அனைத்திற்கும் ஆணைகளை வழங்கியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில், அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 2000 மாணவ மாணவியர்களுக்குத், தொடர்ந்து மேற்படிப்புப் படிக்க, மாதம் 150 ரூபாய் வழங்கப்படும். படிப்பை இடையிலேயே நிறுத்திவிடும் பழக்கத்தை, மாற்றும் முயற்சியாக 3,4,5,வகுப்புகள் பயிலும் 30,000 மாணவியருக்கு ஆண்டுதோறும் 500 ரூபாய் உதவித் தொகையும், 6-ஆம் வகுப்பில் படிக்கும் மாணவியருக்கு, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம், 30,000 பேருக்கு, உதவித் தொகையும் வழங்கப்படும். இவை இந்தச் சமுதாய மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த உதவும் என்று நம்புகிறேன.

குடிநீர் வசதியைப் பொறுத்தவரை ஒரு குடிநீர் வசதி கூட இல்லாத, ஆதி திராவிட குடியிருப்புகளே, தமிழ்நாட்டில் ஏதும் இல்லை என்ற நிலை, இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்தான் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் வாழ்வு வளம்பெற, ஒளி பெறப்பாடுபட்ட அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவாக, ஒரு நினைவு மண்டபம் சென்னையில் கட்ட, எங்கள் அரசு 5 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள் அனைத்திற்கும், எல்லா அடிப்படை வசதிகளையும் செய்து தருவதற்கு, 125 கோடி ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2,754 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி, 2,085 குடியிருப்புகளுக்குத் தெருவிளக்கு, 3 இலட்சம் குடிசைகளுக்கு மின்விளக்கு வசதி, 2123 குடியிருப்புகளுக்கு இடுகாட்டு வசதி, 3076 குடியிருப்புகளுக்கு இடுகாட்டுக்குப் பாதை வசதி, 2,309 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை ஆகியவை. 1995-96ஆம் ஆண்டு இறுதிக்குள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் செயலாக்கம், அமைச்சர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்தில், எங்களது அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை, 1990-91ஆம் ஆண்டில் 37.05 கோடி ரூபாயாக இருந்த, நிதி ஒதுக்கீடு, 1994- 95-ஆம் ஆண்டில், 161.40 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது நன்கு விளக்கும். இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக, மேதகு ஆளுநரின் உரையில் எங்கள் அரசு அறிவித்த புதிய திட்டங்களும், உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடும், அவர்களது வாழ்வில் புதியதோர் மலர்ச்சியை நிச்சயம் உருவாக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

நெசவாளர்களின் துயர் துடைக்கும் அரசு!

மிகப் பழமையான தொழில்களில் ஒன்றாகவும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வு அளிக்கும் தொழிலாகவும், கைத்தறித் தொழில் இன்று விளங்கி வருகிறது. தமிழ் நாட்டில் உள்ள சுமார் 4.2 இலட்சம் கைத்தறிகள், 1475 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு, கிராமப்புற மக்களின் பொருளாதர உயர்வுக்கு வழிவகுத்து வருகின்றது.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற சித்தாந்தத்தில் ஆழமான நம்பிக்கை வைத்து, கைத்தறிகளை அதிக அளவில் கூட்டுறவு அமைப்புகளின் கீழ் கொண்டுவரும் பணியில், தமிழ்நாடு அகில இந்திய அளவில், முன்னணியில் உள்ளது. குறிப்பாக, மகளிர் முன்னேற்றத்தில் புதிய இலக்குகளைத் தோற்றுவித்த தமிழ்நாட்டில், மகளிருக்காகப் புதியதாக 43 கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் பருத்தி விலை உயர்வினால், நெசவாளர் சமுதாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட போது, தமிழ் நாட்டு நெசவாளர் குடும்பங்களின் துயர் துடைக்க உறுதி பூண்டேன். டெல்லியில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, பருத்தி விலையைக் குறைக்கவும், துணிநூல் Yarn கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தினேன். மாண்புமிகு பாரதப் பிரதமரின் ஆணைப்படி, மாண்புமிகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர், திரு.வெங்கடசாமி அவர்கள் என்னைச் சந்தித்து, நெசவாளர்களின் பிரச்சினைகள் குறித்து, என்னிடம் விவாதித்தார்கள்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு மாண்புமிகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், சிட்டா நூலுக்கான மானியத் தொகையை, ஒரு கிலோவிற்கு 15 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தி உடனடியாக ஆணைகள் பிறப்பித்தார்கள். எனது வற்புறுத்தலின் பேரில், இந்தத் திட்டத்தை, மேலும் ஓராண்டுக் காலத்திற்கு அதாவது, 31.3.1996 வரை நீட்டித்துத் தர ஒப்புக் கொண்டார்கள்.

என்னுடைய ஆலோசனையின் பேரில், குறைந்த எண்ணிக்கை கொண்ட பருத்தித் துணி நூல்களின், அதாவது low count yarn -களின் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்படும்

என்ற உறுதியையும் வழங்கினார். மேலும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு NABARD நிறுவனத்தின் மூலம் சலுகைகளுடன் கூடிய நிதி உதவி வழங்குவதற்கும் வழிவகை செய்யப்படும் என மத்திய அரசின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைளின் பலன்கள், ஏழை நெசவாளிகளுக்கும் சென்றடையும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

நெசவாளர்களின் சார்பில் நான் முன்வைத்த பல கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய வேண்டுகோளினை ஏற்று, தேசிய ஆடை அலங்காரத் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி - National Institute of Fashion Technology ஒன்றினைச் சென்னையில் நிறுவ, மத்திய அரசு ஒப்புக்கொண்டது. இந்த நிதி ஆண்டில், இந்த நிறுவனம் Cooptex நிறுவத்தின் கட்டடத்தில் செயல்படத் துவங்கும் என்பதையும், தரமணிப் பகுதியில் இந்த நிறுவனத்திற்கு நில ஒதுக்கீடு செய்து தரப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை நெசவாளர்களின் சமூகப்பாதுகாப்பைக் கருதி, கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை எங்களது அரசு *1993*-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், 58 வயதிற்கு முன்பு இறக்க நேரிடும், நெசவாளர்களின் குடும்பத்திற்கு, 10 ஆண்டுக் காலத்திற்கு, மாதந்தோறும் 250 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த மனித நேய திட்டத்தில் 50,000 க்கும் மேலான நேசவாளர் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, எங்களது அரசு நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 'ஒருங்கிணைந்த கைத்தறிக் கிராம மேம்பாட்டுத் திட்டம்' - Integrated Handloom Village Development Scheme. தொழில் கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், வறுமையில் வாடும் நெசவாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம். குழும ஆயுள் காப்பீட்டுத் திட்டம், அதாவது, Group Insurance Scheme ஆகியவற்றைச் செயல்படுத்தி வருகிறது.

நெசவாளிகள் வாழ்கின்ற பகுதிகளில் ஆழ் குழாய்க் கிணறுகள், நல்வாழ்வு மையங்கள் ஆகியவை அமைத்துத் தரப்படுகின்றன. நெசவாளப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்தை உண்டாக்குவதற்கு எங்கள் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடக்கக் கல்வியில் சில புதிய தொடக்கங்கள்

மக்களின் கல்வி அறிவு உயர, உயரத்தான், நாட்டின் வளர்ச்சி முழுமை அடையும் என்பதை நன்கு உணர்ந்த எங்களது அரசு, கடந்த நான்கு ஆண்டுகளாகவே, கல்வித் துறையின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கி வந்துள்ளதை இந்த மாமன்றம் நன்கு அறியும். தமிழ்நாட்டின் மொத்த ஆண்டுச் செலவீட்டில் 22 சதவீதம், கல்வித் துறைக்காகவே செலவிடப்பட்டது என்பதும், அகில இந்திய அளவிலே எழுத்தறிவுத் தேர்ச்சியில் தமிழ்நாடு, கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை வகிக்கின்றது என்பதும், தமிழக மக்கள் ஒவ்வொருவரும் பெருமைப் படக்கூடிய செய்திகள் ஆகும்.

தொடக்கப்பள்ளி அளவில், முழுமையாகப் பெண் ஆசிரியைகளே பணிபுரிய வேண்டும் என்ற கொள்கையை முழுமையாகச் செயல்படுத்தி வருவதில் நமது மாநிலம் முன்னணியில் நிற்கின்றது. 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், கட்டாயத் தொடக்கக் கல்வியினை வழங்கிட, வழி வகை செய்யும் புதிய சட்டத்தை, இயற்றி, மற்ற மாநிலங்களுக்கு இன்று முன்னோடியாக இருந்துவருகிறோம் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலவசச் சத்துறவுத் திட்டம், இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசப் பேருந்துப் பயணச் சீட்டு ஆகிய திட்டங்கள் எங்களது அரசால், மென்மேலும் மெருகூட்டப்பட்டு, செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நாளைய தமிழகம் கல்வியில் சிறந்து, பொருளாதாரத்தில் வளர்ந்து, வீர நடை போட அதற்கு இன்றைய இளைய தலைமுறைக்குச் சிறந்த அடிப்படையை உருவாக்கிட நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில், 431 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. *710* ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்; 355 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிதளாகவும்; 225 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும்; உயர்த்துப்பட்டுள்ளன.

85 இலட்சம் ரூபாய் செலவில், சென்னையில் புதிதாக அமைக்கப்படவுள்ள கல்வி, தொலைக்காட்சி நிறுவனம், பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வித் தொடர்பான, வீடியோ கேசட்டுகளைத் தயாரித்து, அவற்றைத் தொலைக்காட்சி மூலம், ஒளிபரப்பத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் அறிவியல் கல்வி மேலை நாடுகளுக்கு இணையாகப் புதிய எல்லைகளைத் தொடும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

உலக வங்கியின் உதவியோடு 120 கோடி, ரூபாய் செலவில் திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி, தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடக்கக் கல்வி வளர்ச்சித் திட்டம், செயல்படுத்தப்படும் போது, தமிழகத்தில் தொடக்கக் கல்வி, புதியதோர் பரிமாணத்தைப் பெறும் என்பதிலும், சந்தேகம் இல்லை.

மேலை நாடுகளுக்கு இணையாகத் தமிழகம் உயர்கல்வித் துறையிலும் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு உயர்கல்விக் குழுமம் - Tamil Nadu State Council for Higher Educaiton என்ற அமைப்பினை ஏற்படுத்தினோம். இந்த Council தமிழகத்தில் உயர்கல்வி முறையை மேலும் சிறப்புடையதாக்க, செயல் திட்டங்களைத் தீட்டி வருகின்றது.

தமிழ்நாட்டினை முற்றிலும் எழுத்தறிவு பெற்ற ஒரு மாநிலமாக உருவாக்கும் பணியில், எங்களது அரசு, கடந்த 4 ஆண்டுகளாகவே மாவட்டங்களில் அறிவொளி இயக்கங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது. இதுவரை புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார், காமராஜர், வட ஆர்க்காடு அம்பேத்கர், மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்கள் முழுமையான எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை, மிக்க பெருமையோடு தெரிவிக்க விரும்புகின்றேன். எஞ்சிய மாவட்டங்களிலும், அறிவொளி இயக்கம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு, அவை அனைத்தும் முற்றிலும் எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக மாறும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலப் பூஜை திட்டம்

புராதன மற்றும் கலை அம்சங்கள் நிறைந்த தமிழகத்தின் திருக்கோயில்களைச் சீரழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும், தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரப் பலகணிகளாக விளங்கும் திருக்கோயில்களை மீண்டும் புனரமைத்துப் பராமரிக்கவும், நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீங்களும் அறிவீர்கள், இந்த நாடும் அறியும்.

பாழடைந்த நிலையிலும், ஒரு காலப் பூஜை கூட நடைபெற இயலாத சூழ்நிலையிலும் இருந்த எண்ணற்ற திருக்கோயில்கள் பல்வேறு மன்னர்கள் காலத்தில் சிறப்புடன் விளங்கியவை என்பது பலருக்குத் தெரியாது. சக்தி வாய்ந்த இத்திருக்கோயில்கள், இருண்ட கோயில்களாக, ஒரு விளக்கு கூட ஏற்றுவாரும் இன்றி, பாழடைந்து போனது கண்டு, பலரின் மனம் பரிதவித்ததை நான் நன்கு அறிவேன். எனவேதான் தமிழகத்தின் திருக்கோயில்களைப் புனரமைத்துப் பாதுகாத்து, குறைந்தபட்சம் ஒரு காலப் பூஜையாவது, இந்த நாடும் நாமும் நலம் பெறுவதற்கு, நடத்தவேண்டும் என்கின்ற உயர்ந்த எண்ணத்தில் ஒரு காலப் பூஜைத் திட்டத்தை நான் கொண்டு வந்தேன். பலர் மனம் மகிழ்ந்தனர். சிலர் இதிலும் அரசியல் ஆதாயம் தேடப் பார்த்தனர். ஏற்றதொரு கருத்து என்று எங்கள் மனம் ஏற்றுக்கொண்ட பின்னர், அச்சமின்றிச் செயல்படுகின்ற திறமையும், தெளிவும் படைத்தவர்கள் நாங்கள். ஏனென்றால், நாங்கள் பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் போர்ப்படைத் தளபதிகள்.

கொண்ட கொள்கையில் உறுதியுடன். தமிழகத்தில் ஒரு காலப் பூஜை கூட நடைபெறாமல் இருந்த திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் 25000 ரூபாயில் ஒரு கட்டளையை ஏற்படுத்தி, அதன் மூலம் கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு பூஜை நடத்தும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி இருக்கிறோம். தமிழ்நாட்டில் ஒரு

காலப் பூஜை நடைபெறாத கோயில்களே இல்லை என்கின்ற உன்னதமான சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் உள்ள விலைமதிக்க முடியாத, கலை அம்சமும், வேலைப்பாடுகளும் நிறைந்த ஆபரணங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், காலத்தின் கோலத்தால் அழிந்துவிடாமல் இருப்பதற்காகத் - திருவாரூரில் உலோகத் திருமேனிகள் மையத்திற்குக் குளிர்ச்சாதன வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

திருக்கோயில்களைப் பாதுகாப்பதற்கும், 4000 பேர் கொண்ட திருக்கோயில் பாதுகாப்புப் படை - Temple Protection Force ஒன்றை, வாக்களித்தபடி ஏற்படுத்திக் காட்டினோம். கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கும், திருப்பணிகளுக்கும் நிதி உதவி வழங்கினோம். கோயில் சிலைகளையும் விக்கிரகங்களையும் திருடுபவர்களை இந்த ஆட்சிக் காலத்தில்தான் கண்டுபிடித்துக் கடுமையான தண்டனையையும் வழங்கி இருக்கிறோம். பத்தூர் நடராஜர் சிலை முதற்கொண்டு பாரம்பரியமிக்க கலையம்சம் மிகுந்த விலைமதிக்க முடியாத சிலைகளை மீளப் பெற்று இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை, ஏழை எளிய மக்கள் மற்றும் நலிந்த பிரிவு மக்களுக்குச் சமூக பாதுகாப்பினைத் தர, எந்த அளவிற்கு இரக்கச் சிந்தனையுடனும் கருணை மனதுடனும் செயல்பட வேண்டும் என்று கருதுகிறோமோ அதே போலச் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் சமூக விரோதச் சக்திகள் மீது, தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விரும்புகிறோம்.

நல்லவர்களுக்கு நண்பர்களாகவும், கொடியவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும், காவல் துறையினர் விளங்கவேண்டும் என்பது தான் எங்கள் இலட்சியம். சட்டத்திற்கு உட்பட்டு இயங்கும நல்ல மனம் படைத்தவர்களுக்கும், சட்டத்தின் துணையை நாடி வாழ்க்கையை அமைதியாக நடத்துபவர்களுக்கும், நாங்கள் நேசக்கரம் நீட்டுவோம். பாசக்கரம் காட்டுவோம். ஆனால், அதே நேரத்தில், சமூக விரோத சக்திகளையும், சட்டத்தை வளைப்பவர்களையும், இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம். இதில் நாங்கள் நிச்சயமாக எந்தவிதத்திலும் சமாதானம் செய்து கொள்ளவோ, பின்வாங்கவோ மாட்டோம்.

இயற்கை அன்னை வழங்குகின்ற விலை உயர்ந்த சந்தன மரங்களை வெட்டி, கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த வீரப்பன், சட்ட ஒழுங்கிற்கு ஒரு சவாலாக முளைத்த போது, நாங்கள் கைகளைப் - பிசைந்து கொண்டு நிற்கவில்லை. மாறாக எத்தனை இன்னல்கள், எத்தனை இடையூறுகள் வந்தாலும், சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்தில், காவல் துறையின் சிறப்பு அதிரடிப்படை - Special Task Force இடம், இந்தப் பணியை ஒப்படைத்ததும், தங்கள் உயிரைப் பணயம் வைத்து, இந்தப் பணியில் ஈடுபட்டதும், 1994-ஆம் ஆண்டு இந்த அதிரடிப்படை வீரப்பனின் நடமாட்டத்தை ஒடுக்கி, அவனது கூட்டாளிகளைக் குறைத்தும், அதே நேரத்தில் காவல் துறையில் சிலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்ததும், தமிழக மக்களுக்கு நன்கு தெரியும்.

3.12.1994 அன்று சிறுமுகைக் காட்டுப் பகுதியில் காவல்துறைத் துணை கண்காணிப்பாளர் திரு என். சிதம்பரநாதன் மற்றும் 2 பேரை, வீரப்பனும் அவனது சகாக்களும் வழிமறித்துக் கடத்திச் சென்றதும், அதற்குப் பின்னால் வீரப்பனுடன் நாங்கள் நடத்திய நாடகமும், பின்னர் கைதிகளாக வைத்திருந்தவர்களை உயிருடன் மீட்டதையும், தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தமிழக அரசும், காவல் துறையும், இந்தச் சம்பவத்தில், எந்த அளவுக்கு விவேகத்துடனும், கட்டுப்பாட்டுடனும், நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாராட்ட மனமில்லை என்றாலும், தமிழகக் காவல் துறையை, இழிவுபடுத்தும் வண்ணம், திரு சிதம்பரநாதனே தப்பித்து வந்ததாகவும், காவல் துறையினர் ஏதும் செய்யவில்லை என்பதைப் போலவும், இந்த அவையில் குறிப்பிட்டது உண்மையில் வேதனைக்குரியதாகும்.

எனவே, காவல் துறையினரின் தியாகத்தையும் வீரத்தையும், சிறுமைப்படுத்தியதால் சில விளக்கங்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். காவல் துறையினரின் அறிவுரைகளையும் மீறி, காட்டுப் பகுதிக்குத் திரு சிதம்பரநாதன் சென்றதால், அப்பகுதியில் ஒளிந்துகொண்டு, கோழைத்தனமான கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு, தனித்து வந்த அதிகாரிகளை, வீரப்பன் கடத்திச் சென்று, தன்னிடம் பிணைக் கைதிகளாக வைத்துக்கொண்டு, அதிமேதாவித்தனமான சில செயல்களில் ஈடுபட ஆரம்பித்தான். முதன் முதலில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சி.வி. சங்கர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளான்.

வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக்கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த உயிர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்கின்ற எண்ணத்தினால், நான் காவல் துறையினரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன். நிதானமாகச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். காட்டுமிராண்டித்தனமாக வீரப்பன் நடந்து கொள்வதைப் போல நாம் நடக்கவேண்டியதில்லை நம் அறிவுக் கூர்மையை வைத்து சிந்தித்துச் செயல்பட்டால், நிச்சயமாக அவனைப் பிடித்துவிடலாம். பிணைக் கைதிகளை உயிரோடு தப்பவைத்துவிடலாம் என்று அறிவுறுத்தினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் எனது ஆணையின் பேரில், பேச்சு வார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன், மாவட்ட ஆட்சித் தலைவரை வந்து சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன் பின்னர் வீரப்பனின் மனைவியையும் வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன், *12.12.1994* அன்று, மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், வீரப்பனின் அடாவடித்தனமான நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும், கோயம்புத்தூருக்கு வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும், தனது காயத்திற்கு மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஒருபுறம் மாவட்ட ஆட்சித் தலைவர் அமைதியான வழியில், வீரப்பன் நடத்திய அத்தனைக் கேலிக் கூத்துக்களையும் பொறுமையாகச் சமாளித்துக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த அதே நேரத்தில், அதிரடிபபடையினர், கடத்திச் செல்லப்பட்டவர்களை, உயிருடன் மீட்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கினார்கள். அன்றைய சூழ்நிலையில், இந்தச் செய்திகளையெல்லாம் பொதுமக்களுக்குப் பத்திரிகைகள் வாயிலாக வெளிப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்ததை, இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும், மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப்போவது மட்டுமின்றி, 3 பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும் தான், பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம். இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகளை, வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள் வீரப்பனைப் பிடிக்கமுடியவில்லையா? தனி ஆள், இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகிறார்களே தவிர, இத்தனைப் பெரிய காவல்படை சென்று வீரப்பனையும், அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா? என்று நிதானமின்றி, இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்குச் சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கருதுகிறேன்.

பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட 3 பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக, National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையில், 180 பேர் கொண்ட ஒரு குழு, மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியில் இருந்து வந்தது. NSG என்பது மத்திய அரசின் அதிரடிப்படையாகும். கிட்டத்தட்ட 6000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள, அடர்த்தியான வனப்பகுதிகளை, நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப் பணியை மேற்கொள்வது, மிகவும் கடினமான காரியம் என்று, கருத்துத் தெரிவித்து NSG குழுவினர் திரும்பிச் சென்றுவிட்டார்கள். இதைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், சாதாரண மனிதர்களின் முயற்சிகளுக்கும் திறமைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு ஆபத்தான செயலில் நமது அதிரடிப்படையினர் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை உணர்த்துவதற்குத் தான்.

வீரப்பன் எங்கே ஒளிந்து இருக்கிறான்? கட்டாந்தரையிலோ அல்லது களத்து மேட்டிலோ அல்ல. அடர்த்தியான மரங்கள் வளர்ந்து, 6 அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால் கூட, அது கண்ணுக்குத் தெரியாத,

ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்து கொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில், ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று, கொரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டால், அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும்?

மனைவி மக்களைப் பிரிந்து, மாதக்கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி, தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று, தெரியாத நிலையில், பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல், சிலர் வக்கணை பேசுகிறார்கள் வசைச்சொல் கூறுகிறார்கள். காவலர்கள் வீரப்பனின் கொட்டத்தை அடக்கி வைக்காமல் விட்டிருந்தால், நேற்று ஒரு காவல் துறை அதிகாரி, இன்று ஒரு அரசியல்வாதி,,நாளை ஒரு பொதுவாழ்வில் முக்கியமானவர் என்று பல பேரை வீரப்பன் கடத்திச்சென்று 'அடிமுட்டாள் தனமான கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்க மாட்டானா? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது.

பேச்சுவார்த்தை என்ற போர்வையில், சந்தனக் கடத்தல் வீரப்பன் அனுப்பிவைத்த கேசட்டுகளும், கடிதங்களும் எத்தனை? எங்கள் முன்வைத்த கோரிக்கைகள் எத்தனை? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1000 கோடி ரூபாய் அரசாங்கம் பணம் தர வேண்டும் என்றும், மாதேஸ்வரன் மலைப்பகுதியில் கருங்கல் குவாரி கல் உடைத்து ஏற்றுமதி செய்ய 100 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கவேண்டும் என்றும், துப்பாக்கிகளும், தோட்டாக்களும் வேண்டும் என்றும், காவல் துறை அதிகாரிகளைத் தடா சட்டத்தில் கைது செய்யவேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுத்ததை மக்கள் அறிவார்கள். அப்போது இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு பேசியவர்கள்தான் ஏராளமே தவிர, இதன் வேதனைகளை உணர்ந்தவர்கள் ஒருசிலர் மட்டும்தான். தனக்கு வந்தால்தான தலைவலி என்று குறிப்பிடுவார்கள். இந்த விவகாரத்தின் மூலம் எழுகின்ற பிரச்சினைகளின் தீவிரத்தை எண்ணிப் பார்க்காதவர்களுக்கு, எதுவுமே வேடிக்கையாகத்தான் இருக்கும்.

பிணைக் கைதிகளாகக் கொண்டுசெல்லப்பட்ட 27-ஆவது நாளில் அடர்ந்த மலைப் பகுதிகளையும் காட்டுப் பகுதிகளையும் கடந்து, 4000 அடிக்கு மேலே உள்ள பகுதிக்குச் சென்று, ஆபத்தான ஒரு சாகசத்தை எந்தவிதமான உயிரிழப்பும் இன்றி நமது அதிரடிப்படையினர் செய்துகாட்டினர். அதன் விளைவாகப் பிணைக் கைதிகள் வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பாதுகாத்தவர்கள் பதறி ஓடினார்கள். பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டன வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த மிக முக்கியமானவர்களான ஐயந்துரை, ரங்கசாமி மற்றும் கடம்பூரான் ஆகியோர் காவல் துறையினரிடம் சரணடைந்தார்கள்.

வீரப்பன் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டாலும் வீரப்பன் தங்கியிருந்த இடத்தில் இருந்து, 8 மூட்டை அரிசி, சில எண்ணெய் டின்கள், சர்க்கரை, காப்பி மற்றும் டீத்தூள், டிரான்சிஸ்டர் பேட்டரிகள் மற்றும் காட்ரிட்ஜ் போடுவதற்கான இயந்திரம், இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 4 யானைத் தந்தங்கள் ஆகியவை அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டன. வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை என்பது உண்மைதான் ஆனால், அதற்காகக் காவல் துறையினர் அந்தக் காட்டுப் பகுதிக்குள்ளேயே செல்ல வில்லை என்று கூறுவதும், காவல் துறையினர் செய்த தியாகங்களையும், சாதித்த சாதனைகளையும் மறைக்க முயல்வதும், காவல் துறையினருக்கு நாம் செய்கின்ற துரோகம் என்றுதான் பொருள்.

அதிரடிப்படையினர் அங்கு செல்லவில்லை என்றும், சிதம்பரநாதன் தானே தப்பிவந்தார் என்றும் அவருக்கு ஒரு பாராட்டுக் கூட தெரிவிக்கவில்லையே என்றும், சில உள் அர்த்தங்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் கூறிய கருத்து எத்தனை நியாயமற்றது எத்தனைக் குதர்க்கமானது என்பது விளங்கும். அதிரடிப்படையினர் அங்கு செல்லவில்லை என்றால், வீரப்பனின் ஆட்கள் ஏன் சிதறி ஓடினார்கள்? சிதம்பரநாதனும், மற்றவர்களும் எப்படி விடுவிக்கப்பட்டிருக்க முடியும்? ஐயந்துரை, ரங்கசாமி மற்றும் கடம்பூரான் சரணடைய ஏன் முடிவெடுத்தார்கள்? அரிசி மூட்டைகள், எண்ணெய் டின்கள், டீத் தூள், யானைத் தந்தங்கள் எப்படிப் பிடிபட்டான்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களால் பதில் கூற முடியாது. இல்லாத ஒன்றை இருப்பதாக ஜோடிப்பதும், உயிரைப் பணயம் வைத்துச் செயலாற்றி வரும், காவல் துறையினரின் தியாகத்தைக் கொச்சைப் படுத்துகின்ற் ஒரு பாணியில் பேசுவதும் உள்ளபடியே வேதனைக்கு உரியதாகும் என்பதை, இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மீதான பதிலுரை

சட்டமன்ற உறுப்பினர் திரு பி.வி.ராஜேந்திரன் அவர்கள், வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏன் இன்னமும் செயல்படுத்தவில்லை என்ற ஒரு வினாவை இங்கே எழுப்பினார்.

குடிநீர்த் திட்டங்களுக்கு எங்கள் அரசு கொடுத்துவருகின்ற முக்கியத்துவத்தையும், திட்டங்களைச் செயல்படுத்துவதில் காட்டு வருகின்ற அக்கறையையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். பட்டுக்கோட்டைப் பகுதி வாழ் மக்கள் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால்தான் இந்தக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்பது நன்கு தெரிந்திருந்தும், அந்த உண்மையை மறைத்துட்டு, ஏதோ இந்த அரசாங்கம் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அக்கரை காட்டவில்லை என்பதைப்போல ஒரு மாயத் தோற்றத்தை அவர் ஏற்படுத்த முனைந்திருக்க வேண்டாம். குடிநீர்த் திட்டங்களைக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் அனைத்து நிபந்தனைகளின் படியும் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம் என்பதை இங்கு இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், உலக வங்கி ஒப்புக் கொண்டிருக்கிறது.

மாவட்டங்களுக்கு நான் சென்றபோது, மக்கள் எனக்கு அளித்த வரவேற்பும், இதனை வெளிப்படுத்தி உள்ளது. கிராமப்புறங்களில் பெண்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க வந்த சகோதரியாக என்னை ஏற்றுக் கொண்டிருப்பதையும் இது வெளிப்படுத்தியுள்ளது. குடிநீர்த் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்பதால்தான் அதற்குத் தடைக் கற்களாக இருந்த பத்தாம்பசலித்தனமான வரைமுறைகளைக் கைவிட வேண்டும் என்று 23.9.1994 அன்று திண்டுக்கல் அண்ணா மாவட்ட அரசு விழாவில் நான் குறிப்பிட்டேன். செலவு பயன் விகிதாச்சாரம் அதாவது Cost Benefit Analysis அடிப்படையில், செலவு அளவிற்குப் பயன் இருக்கிறது என்பதைக் கண்டறிந்த பின்புதான் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கின்ற இறுக்கமான விதிமுறைகளை, வறட்சிப் பகுதிகளுக்கும், நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துவிட்ட பகுதிகளுக்கும் தளர்த்தப்படும் என்று அறிவித்தேன்.

கோவை, மதுரை மற்றும் சேலம் ஆகிய 3 மாநகராட்சிகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவும், கூடுதல் குடிநீர் வசதிகளைச் செய்து தருவதற்கும், 85 நடுத்தர மற்றும் சிறிய பகுதிகளுக்கும், 966 வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதியைப் பெற்றுத் தருவதற்கும், 325 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியது. ஒரு காலகட்டத்தில், எங்களுக்கு முன்பு ஆட்சி புரிந்தவர்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல், கிடப்பிலே போட்டுவிட்ட காரணத்தினால், உலக வங்கி தனது நிதி உதவியை நிறுத்திக் கொள்கின்ற அள்விற்குப் போய்விட்டது. ஆனால், எங்கள் அரசு முனைப்புடன் செயல்படுவதைக் கண்ட பின்புதான், உலக வங்கி இத்திட்டத்தை நிறைவேற்ற 31.12.1994 வரை கால அவகாசம் தந்தது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே, முதன் முறையாக உலக வங்கி, தான் நிதி உதவி அளித்துவரும் குடிநீர்த் திட்டங்களுக்குக் கால நீட்டிப்பினைச் செய்து கொடுத்தது என்றால், அது நமது மாநிலத்திற்கு மட்டும்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலக வங்கி விதித்த காலக் கெடுவிற்குள், அந்த 3 திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுவிட்டன தமிழ்நாட்டின் மானம் காப்பாற்றப்பட்டது.

இவ்வாறு எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் நிறைவேற்றிய குடிநீர்த் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. எனவே, திரு ராஜேந்தின் போன்றவர்கள் தனது தொகுதி வாழ் மக்களுக்காக இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று கேட்டிருந்தால் ஏற்புடையதாக இருக்கும். அதை விடுத்து, இந்தத் குடிநீர்த் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தாமல் விட்டுவிட்டது என்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்க வேண்டாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு இலட்சுமணன் அவர்கள் உரையாற்றும் போது, கோயம்புத்தூர் மாநகராட்சியில் புலியகுளம் பகுதியில் காவல்துறையின் Boys Club-இன் அனுபவத்தில் இருக்கின்ற

இடத்தில், அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஆதி திராவிட பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, திருமண மண்டபம் ஒன்றைக் கட்டுவதற்காகக் கோவை மாநகராட்சி திட்டமிட்டிருந்தது என்றும், ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கும் காவல்துறை BoysClub-க்கும் இடையே இந்த நிலம் குறித்து எழுந்த கருத்து வேறுபாட்டினால் இந்தத் திருமண மண்டபம் கட்டும் பணி தடைபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

1963-ஆம் ஆண்டு இந்த இடம், காவல் துறைக்கு Police Boys Club அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், முறைப்படி வகைபாடு மாற்றம் செய்யப்பட்டு இந்த நிலம் காவல் துறைக்கு இதுவரை பெயர் மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. காவல் துறையைப் பொறுத்தவரையில் இப்பகுதியைச் சுற்றி வாழுகின்ற சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, Police Boys Club ஒன்றை நடத்திவருகின்றது. மொத்தம் உள்ள ஒரு ஏக்கர் 23 சென்ட் நிலப்பரப்பில், ஆக்கிரமிப்புகள் நீங்கலாக உபயோகப் படுத்தும் நிலையில் 80 சென்ட் நிலம் மட்டுமே உள்ளது. இந்த நிலப்பரப்பில் சாலை ஒட்டி அமைந்துள்ள, 23 சென்ட் நிலம் கோயம் புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கோவை மாநகராட்சிக்குத் திருமண மண்டபம் கட்டுவதற்காக அனுமதி அளிக்கப்பட்டு, நுழைவு முன் அனுமதியும் அதாவது Entry Permissionனும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், கோயம்புத்தூர் மாநகரக் காவல் துறை, இந்த இடத்தில் தாங்களே ஒரு திருமண மண்டபத்தைக் கட்டி, அதிலிருந்து கிடைக் கின்ற வருமானத்தைக் போலீஸ் Boys Clubன் செயல்பாடுகளை மேம்படுத்து வதற்குத் திட்டமிட்டு இருந்தனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நான் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அதன் அடிப்படையில் சில முடிவுகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புலியகுளம் பகுதியில் ஆக்கிரமிப்புகள் நீங்கலாக அமைந்துள்ள 80 சென்ட் நிலப்பரப்பில், சாலையை ஒட்டி உள்ள 23 சென்ட் நிலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக் குத் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

2. அந்த நிலத்தில் கோவை மாநகராட்சி, 25 இலட்சம் ரூபாய் செலவில் அப்பகுதி வாழ் மக்களின் குறிப்பாக, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஒரு திருமண மண்டபம் கட்டப்படும். இந்த கட்டுமானப் பணியை மாநகராட்சி இந்த ஆண்டே மேற்கொள்ளும்.

3. மீதம் உள்ள 57 சென்ட் நிலம், காவல் துறை Boys Club ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்படும். மேலும், இந்த நிலத்தில் பள்ளமாக உள்ள 27 சென்ட் நிலப்பரப்பைக் கோயம்புத்தூர் மாநகராட்சி தனது சொந்தப் பொறுப்பில் மணலைப் பரப்பிச் சமப்படுத்தித் தரும்.

4. இந்தத் திருமண மண்டபத்திலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கின்ற வருவாயில் 10 சதவிகிதம் இந்தப் போலீஸ் Boys Clubக்கு அதன் செயல்பாடுகளை மேம்படுத்த வழங்கப்படும். கிட்டத்தட்ட இதனால் இந்தச் சங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு, குறைந்தபட்சம் 5000 ரூபாய் அளவிற்கு வருமானம் கிடைக்கும்.

பொதுமக்கள் நலனுக்காகத் திருமண மண்டபம் கட்டப்படும் Police Boys Clubக்கு ஒரு நிரந்தர வருவாயும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு லட்சுமணன் அவர்கள் திருப்தியடைவார் என்று நம்புகிறேன்.

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சுந்தரராஜ் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலில் சென்று வீணாகக் கலக்கும் மழை நீரைத் தேக்கிவைத்து, குடிநீருக்கும் பாசனத்திற்கும் பயன்படுத்தும் வகையில் திட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் புதிய நீர்த்தேக்கங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்கின்ற ஒரு சூழ்நிலையில், தற்போதுள்ள நீர்த் தேக்கங்களைச் செம்மையாகப் பராமரித்து நன்முறையில் பாசனநீரை விநியோகம் செய்தால், கூடுதல் உற்பத்தியை ஏற்படுத்த முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, எனது ஆணையின் பேரில், 1120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நீர் ஆதாரங்கள் மேம்பாட்டுத் திட்டம் - Water Resources Consolidation Project ஒன்று தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் நிதி உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள நீர் ஆதாரங்கள் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, நீர்ப் பாசன முறைகளும் சீர்திருத்தப்படும். சென்ற ஆண்டு, இதே மாதத்தில், உலக வங்கி இத்திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. உலக வங்கி கேட்டிருந்த அத்தனை விவரங்களும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அடுத்த கட்டமாக உலக வங்கி அதிகாரிகளுடன், இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்த நமது அதிகாரிகள் Washington-க்குச் சென்றுவர வேண்டி உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நீர் ஆதாரங்களைச் சீரமைக்கவும், மேம்படுத்தவும் ஒரு பெரிய தொகை ஒதுக் கப்படும் என்பதைப் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு தம்புசாமி அவர்கள், நாகப்பட்டினம் நகரில் மஞ்சக்கொல்லை பகுதியில் குடியிருந்தவர் களைக் காவல் துறையினர் அநியாயமாகத் தாக்கினார்கள் என்றும், அவர்களது குடிசைகளைப் பிரித்துப் போட்டுவிட்டார்கள் என்றும், ஒரு குற்றச்சாட்டை வைத்தார். அவர் இந்த அவையில் பேசியபோது, மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற வகையில் காவலர்கள் அத்துமீறி நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டினார். உண்மையில் நடைபெற்றது என்னவென்றால், உச்சநீதிமன்ற ஆணையின்பேரில் காவல் துறையினர் தனியார் நிலத்தில் இருந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றியிருக்கிறார்கள். நீதிமன்ற ஆணையை அமல்படுத்துவது, ஒருவேளை திரு தம்புசாமி சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குக் காவல் துறையினரின் "அத்துமீறலாகவும்" "அநியாய மாகவும்" படலாம். ஆனால், நியாய உணர்வு கொண்ட எவரும் காவல் துறை தனது கடமை யைத்தான் செய்தது என்று ஒப்புக் கொள்வார்கள்.

நாகப்பட்டினம் நகரில் பெருமாயி அம்மாள் என்பவருக்குச் சொந்தமான 92 சென்ட் நிலத்தில், அப்துல் ரஹீம் மற்றும் 7 பேர் ஆக்கிரமிப்புச் செய்து, குடிசை போட்டு வசித்துவந்துள்ளார்கள். ஆக்கிரமிப்பை எதிர்த்து மாவட்ட Munsiff Court-இல் வழக்குத் தொடுத்து நில உரிமையாளர் வெற்றியும் பெற்றுள்ளார். ஆக்கிரமிப் பாளர்களை நிலத்தில் இருந்து அகற்றவும் Court உத்தரவிட்டுள்ளது. பின்னர் உயர்நீதி மன்றத்தில் Execution மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்தின் ஆணையும் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 10.3.1995 அன்று அவர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்திருந்த அப்துல் ரஹீம் மற்றும் 7 பேர் சுமுகமான முறையில் காவல் துறையினரால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினம் கோட்டாட்சி வருவாய் அலுவலர் மற்றும் காவல்துறைக் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் முன்னி லையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. திரு தம்புசாமி குறிப்பிட்டது போல, இதில் சட்ட ஒழுங்குப் பிரச்சினையோ, பொதுமக்கள் பிரச்சினையோ கிடையாது. உயர்நீதிமன்றத்தின் ஆணையை அமல்படுத் தியதைக் காவல் துறையினரின் அத்துமீறல் என்று குற்றம் சாட்டுவதைக் கண்டு மனம் நொந்துகொள்வதைத் தவிர, எனக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு தம்புசாமி, அடித்தளத்து மக்களின் முன்னேற்றத்திற்கு, அடிப்படைத் திட்டங்கள் எதுவும் மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்படவில்லை என்று, தனது கருத்தை இந்த அவையின் முன் வைத்தார்.

ஏழைகளின் நலன் காக்க எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டங்கள் எத்தனை என்று நன்கு அறிந்திருந்தும், திரு தம்புசாமி போன்றவர்கள், மக்களின் முன்னேற்றத் திற்குத் திட்டங்களே இல்லை என்று கூறியிருப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதற்கு ஒப்பாகும். ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ப தற்காக 450 கோடி ரூபாய் ஆண்டுதோறும் உணவு மானியமாக ஏற்றுக்கொண்டு வருகிறோம். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்குவதற்கு ஆண்டுதோறும் 900 கோடி ரூபாய் மானியத்தையும் ஏற்று, வேறு எந்த மாநில அரசும் செயல்படுத்தாத அளவிற்குச் செயல்படுத்தவில்லையா? 65 கோடி ரூபாய் செலவில் இலவச வேட்டி, சேலைகள் ஏழை மக்களுக்கு வழங்கப்பட வில்லையா?

சட்டமன்ற உறுப்பினர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள், தான் சார்ந்திருக்கின்ற இயக்கம்தான், தமிழக மீனவர்களின் நலன் காப்பதற்காகவே, அவதாரம் எடுத்து வந்த தைப் போலவும், அவர்தம் துயர் துடைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதைப் போலவும் கூறியிருப்பது, 'பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற

செயலுக்கு' ஒப்பானதாகும். இன்றைக்கு மீனவர்கள் வாழ்க்கைக்கு இத்தனைப் பிரச்சினைகள் ஏற்பட அவர் சார்ந்திருக்கின்ற இயக்கம்தான் காரணம் என்பதை மறந்துவிடக்கூடாது. பின்விளைவுகளைப் பற்றிச் சற்றும் சிந்திக்காமல், கச்சத் தீவினை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு, இன்று போராட்டம் நடத்தலாம். போர்ப்படை அனுப்பலாம் என்றெல்லாம் இலவச ஆலோசனைகளை வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, தமிழக மீனவர்களின் நலன் காக்கப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவப் பெருங்குடி மக்கள் நிம்மதியாகத் தங்கள் தொழிலை மேற்கொள்ளவும், இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்களுக்கு ஆளாகி உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்படாமல் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, பல முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். நேரில் சென்ற போதும் இதை வற்புறுத்தி உள்ளேன். இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், மாநில அளவில் நம்மால் எந்த அளவு செய்யமுடியுமோ, அவை அனைத்தையும் செய்துவிட்டோம். இன்னும் தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்கள் தொடர்கதையாக இருக்கின்றன. அன்று கச்சத்தீவைத் தாரை வார்த்துக் கொடுக்காமல் இருந்திருந்தால், நமது மீனவர்களுக்குப் பாதிப்பு இன்றைக்கு இந்த அளவிற்கு இருக்காது என்பதை விவரம் புரிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

என்றைக்கு இலங்கையில் இனப் பிரச்சினை பெரிதாக வெடித்ததோ அன்றிலிருந்தே மீன் பிடிக்கச் செல்லும் நமது மீனவர்களுக்குப் புதிய பிரச்சினைகள் தோன்றிவிட்டன. எத்தனைப் பேர் சுடப்பட்டார்கள். எத்தனைப் பேர் இறந்து போனார்கள் என்பதை நான் இங்கே விளக்க வேண்டியதில்லை. பலமுறை பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியும் முழுமையான பலன் கிடைக்கவில்லை. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இதற்கு ஒரு ...யான தீர்வு ...ண்டாகவேண்டும் என்று ... கேட்டு... ...ண்டபடி, மத்திய அரசு ...கை ... பேச்சுவார்த்தை நடத்தினாலும், உருப்படியான விஷயம் ஒன்றும் இதுவரை நடைபெறவில்லை. ஆனால், மீனவர்கள் மீது தாக்குதல் மட்டும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

மீன்பிடி தொழில் என்பதே ஒரு ஆபத்தான தொழிலாகும். இலட்சக் கணக்கான தமிழக மீனவர்கள் கச்சத்தீவிற்கு அருகில் சென்று மீன் பிடித்தால்தான், ஓரளவிற்கேனும் பொருள் ஈட்டி நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். இயற்கையிலேயே மீன் பிடித்தொழிலில் இருக்கின்ற ஆபத்து ஒருபுறம் இருக்க, இலங்கைக் கப்பற்படையினரால் செயற்கையான ஆபத்தும் மறுபுறம் உருவாகி உள்ளது. கடலுக்குச் செல்கின்ற மீனவர் திரும்பி வருவாரா என்ற உத்தரவாதம் இல்லாத நிலையிலும், பேச்சு வார்த்தைகளால் இனி பயனில்லை என்கின்ற நிலையிலும், இதற்கு ஒரு மாற்று முடிவை நாம் கண்டே ஆகவேண்டும்.

1974-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத் தீவை இலங்கைக்குத் திரும்பக் கொடுக்கும்போது, தமிழக மீனவர்கள் இந்தத் தீவில் தங்களது மீன்பிடி வலைகளைக் காயவைப்பதற்கும், படகுகளை நிறுத்திக் கொள்வதற்கும், பயன்படுத்தலாம் என்பதையும், கச்சத் தீவைச் சுற்றி மீன் பிடித்துக்கொள்ளலாம் என்கின்ற பாரம்பரிய உரிமைகள் இன்று மறுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை இலங்கை அரசு மீறிவிட்ட காரணத்தினால், இந்த ஒப்பந்தம் இலங்கை அரசால் மதிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. என்றைக்கு இலங்கை அரசு ஒப்பந்த நிபந்தனைகளை மீறிவிட்டதோ, அன்றைக்குக் கச்சத் தீவினைத் தன்னிடம் வைத்துக்கொள்ளும் உரிமையையும் இலங்கை அரசு இழந்துவிட்டது என்றே கருதவேண்டும். Hence, India should take back Katcha Theevu from Sri lanka. எனவே, மத்திய அரசு கச்சத் தீவினைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இம்மாமன்றத்தின் சார்பில் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திருஎஸ்.ஆர்.பால சுப்ரமணியம் அவர்கள், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் வாரிசுகளாகிய நாங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தொடங்கிவைத்த தெலுங்கு கங்கைத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தவில்லை என்று குறை கூறினார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வாரிசுகள் நாங்கள் தான், என்பதில் நிச்சயமாகச் சந்தேகம் இல்லை. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியப் பாதையில் மக்கள் பணி ஆற்றி வருபவர்கள் நாங்கள். அவர் தொடங்கிவைத்த தெலுங்கு கங்கைத் திட்டத்தை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்க அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த இந்த 4 ஆண்டுக் காலகட்டத்தில் நான், 3 முறை ஐதராபாத் சென்று, ஆந்திர முதலமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றேன். இத்திட்டத்தின் காலதாமதத்திற்கு ஆந்திர மாநிலமும், மத்திய அரசும்தான் காரணமே தவிர, நிச்சயமாகத் தமிழ்நாடு அல்ல. ஆரம்பத்தில் இருந்தே ஆந்திர மாநிலம் ஒப்பந்தப்படிதான் செலவிட வேண்டிய பணத்தைச் செலவிடவில்லை, முடிக்க வேண்டியப் பணிகளையும் செய்து முடிக்கவில்லை. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு செலவிட வேண்டிய தொகையையும் செலவிட்டிருக்கிறோம். முடிக்கவேண்டிய பணியையும் முடித்திருக்கின்றோம். இன்னும் நாங்கள் முடிக்கவேண்டிய பணி, மிகமிகச் சொற்பமே.

ஆந்திர மாநிலம் வனப்பகுதிகளில் கால்வாய் வெட்ட மத்திய அரசிற்கு அனுமதி கோரி எழுதியபோது, மத்திய அரசு அனுமதியை எளிதில் வழங்கவில்லை. இதனாலும் இத்திட்டம் தாமதப்பட்டது. எனவே, தமிழ்நாடு அரசைக் குறைசொல்லி ஒரு பயனும் இல்லை. தெலுங்கு கங்கைத் திட்டத்தை எங்களிடம் இருக்கின்ற அனைத்துச் சக்திகளையும் பயன்படுத்தி விரைவில் முடிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.கு.தமிழரசன் அவர்கள், ஆதி திராவிட நலப் பள்ளிகளில், பாடப் புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைச் சுட்டிக் காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், இயங்கிவரும் 1126 பள்ளிகளில் சுமார் 2,57,000 மாணவ மாணவிகளுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட நலத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு ஜூன் மாதத்திற்குள்ளாகப் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் எந்தக் காலதாமதமும் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீருடையைப் பொறுத்தவரையில், ஆண்டொன்றுக்கு 3.45 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தேவையான அளவிற்குச் சில வகைத் துணிகள் கிடைக்காததாலும், சீருடைகளை அளவெடுத்துத் தைத்து வழங்க வேண்டி இருப்பதாலும், ஆண்டுத் தொடக்கத்திலேயே சீருடைகளை வழங்கமுடிவதில்லை. எனினும், ஆண்டுத் தொடக்கத்திலேயே சீருடைகளை வழங்குவதற்குச் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியவர் சிவராஜ் சிலைத் திறப்பு விழாவின்போது, ஆதிதிராவிட சமுதாயத்திற்குக் குறிப்பாக, மாணவ மாணவிகளுக்கும், இளைய தலைமுறையினருக்கும் நன்மை பயக்கும் 12 நலத்திட்டங்களுக்கான அரசாணைகளை நான் வழங்கியுள்ளேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள புத்த விஹாரங்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார்கள்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வரும் எங்கள் அரசு, அனைத்து மத வழிபாட்டுத் தலங்களையும் சமமாக மதிக்கின்றது. எனவே, புத்த விஹாரங்களிலிருந்து நிதி உதவி கோரி வேண்டுகோள்கள் அரசுக்கு வந்தால், நிச்சயமாக அவற்றைப் பரிசீலித்து நல்ல முடிவு எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது உரையில், மத்திய சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் காவலர்களால் தாக்கப்பட்டார்கள் என்ற குற்றம் சாட்டிப்பேசினார்கள்.

27 .2. 1995 அன்றுTADA சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த, 9 LTTE போராளிகள் மத்திய சிறையிலிருந்து தப்பிச்சென்றதைத் தொடர்ந்து, எல்லாச் சிறைகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டன. 28.2.1995 அன்று, சென்னை மத்தியச் சிறைச்சாலையில், சிறைத் துறை அதிகாரிகள்

சிறைவாசிகளின் அறைகளைச் சோதனையிட முற்பட்டபோது, TADA கைதிகளும், இதரக் கைதிகளும், அதைத் தடுத்து நிறுத்தியதுடன், சிறை அதிகாரிகளுடன் தகராறும் செய்துள்ளனர். சிறை அதிகாரிகளைச் சில கைதிகள் தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 12 காவலர்கள் காயம் அடைந்துள்ளனர்.

சிறைவாசிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும், முறையான சோதனையை மேற்கொள்ளவும். காவலர்கள் குறைந்த பட்ச பலப்பிரயோகம் Mild Force உபயோகிக்கவேண்டிய அவசியம் எழுந்ததாகத் தெரிகிறது. பின்னர், சிறைவாசிகளின் அறைகளைச் சோதனையிட்ட சிறை அதிகாரிகள் 10,230 ரூபாய் ரொக்கப் பணம், சிறிய அடுப்புகள், காலி சாக்குகள், காலி பாட்டில்கள், விறகுக்கட்டைகள், சிறிய கயிறுகள் போன்ற பொருட்களைக் கைப்பற்றி உள்ளனர்.

28.2.1995 மற்றும் 1.3.1995 ஆகிய நாட்களில் TADA தனி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட TADA கைதிகள், சிறை அதிகாரிகள் தங்களையும், இதரக் கைதிகளையும் தாக்கியதாகவும், அதனால் தங்களுக்குக் காயம் ஏற்பட்டதாகவும், நீதிபதி அவர்களிடம் புகார் கூறியுள்ளனர். நீதிபதி திரு. V. ராதாகிருஷ்ணன் அவர்கள் புகார் கொடுத்ததன் அடிப்படையில், 8 சிறைவாசிகளை, மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளார்கள். எனவே, 8 சிறைவாசிகள் சிகிச்சைக்காக அரசுப் பொது மருத்துவமனைக்கு, 1.3.1995 அன்று அழைத்துச் செல்லப்பட்டனர். சிகிச்சை அளிக்கப்பட்ட பின்பு, அன்று இரவே அவர்கள் சிறைச்சாலைக்கு மீண்டும், கொண்டுசெல்லப்பட்டனர்.

மக்கள் நல உரிமைக் கழகத்தின் செயலாளர், சிறையில் கைதிகள் காவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகச் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2.3.1995 அன்று ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை விசாரணை செய்த மாண்புமிகு நீதிபதி Shivaraj Patil அவர்கள், TADA தனி நீதிமன்ற நீதிபதி, திரு V. இராதாகிருஷ்ணன் அவர்களை, சென்னை மத்தியச் சிறைச்சாலைக்குச் சென்று, TADA கைதிகளைப் பார்வையிட்டு, காயம் அடைந்தவர்களின் விவரங்களையும், காயங்களின் தன்மைகளையும் உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்குமாறு ஆணையிட்டார்கள்.

TADA தனி நீதிபதி அவர்கள், 2.3.1995 அன்று சிறைச்சாலையில் கிட்டத்தட்ட 250 சிறைவாசிகளை விசாரணை செய்து, 27 TADA கைதிகள், உட்பட, 87 சிறைவாசிகள் பலவகையான காயங்கள் அடைந்துள்ளதாக, உயர்நீதி மன்றத்திற்கு 6.3.1995 அன்று தனது அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்கள். உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சை அளிக்கவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சென்னை மத்திய சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் எதிர் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இன்னும் நான்கு வாரத்திற்குள் சிறைத்துறை காவல் துறைத் தலைவரும், தமிழக அரசும் தங்களது எதிர் மனுவினைத் தாக்கல் செய்யவேண்டுமென உயர்நீதிமன்றம் ஆணையிட்டு வழக்கினை ஒத்திவைத்துள்ளது.

TADAகைதிகள் சிறை அதிகாரிகளின் கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்ததாலும், காவலர்களைக் கைதிகள் தாக்கியதாலும், நிலைமையைச் சமாளிக்க லேசான பலப்பரயோகம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக, காவல்துறை தரப்பில் கூறப்பட்டுள்ளது. சிறைக் கைதிகள் தாக்கப்பட்டதாகக் கொடுக்கப்பட்ட புகார் மீது சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 376/95, 377/95 மற்றும் 385/95 ஆகியவற்றில் சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் மீது, மூன்று வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. காவல் துறையினர் இது குறித்து மேல் விசாரணை செய்து வருகிறார்கள்.

சிறைக் கைதிகள் தாக்கப்பட்டது தொடர்பான வழக்கு, உயர்நீதிமன்ற விசாரணையில் இருந்துவருவதால், இந்த நிகழ்ச்சியைப் பற்றி, மேலும் கருத்துக்களைத் தெரிவிப்பது சரியான நடைமுறை ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், அடிப்படை மனித உரிமைகள் எவருக்கும் மறுக்கப்படக் கூடாது என்பதில் தீவிரமாக உள்ளது. அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் ஆபத்தான பணிகளில், ஈடுபடும் காவலர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலைகளையும், தாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்புகள்

திரைப்படப் பணியாளர்கள் ஓய்வூதியம் மற்றும் விபத்துக் காப்புறுதித் திட்டம்

3 மணி நேரம் திரைப்படம் காண்பவர்களுக்கு அந்தப் படத்தின் முக்கியக் கதாபாத்திரங்கள், இயக்குநர், இசை அமைப்பாளர் ஆகியோர் மட்டுமே நினைவுக்கு வருவார்கள், திரைப்படத்திற்குப் பின்னால் இருந்து பணியாற்றும் ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்களை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. தென்னிந்தியத் திரைப்பட உலகம், பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற ஒரு மாபெரும் தொழில் என்பதைப் பலர் மறந்துவிடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள எத்தனையோ நலிந்த பிரிவினர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குத் திட்டங்களை வகுத்து, வெற்றிகரமாகச் செயலாக்கிவருகிறது எங்கள் அரசு. அதன் அடிப்படையில் திரைப்படத் தொழிலாளர்களின் நலனுக்காக, "விபத்துக் காப்புறுதித் திட்டம்" மற்றும் "ஓய்வூதியத் திட்டம்" ஆகிய இரண்டு புதிய திட்டங்களை இன்று இந்த மாமன்றத்தின் வாயிலாக அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், திரைப்படத் தயாரிப்பின் போது, விபத்து ஏற்படும் தொழிலாளருக்குக் காப்புறுதித் தொகையாக 50,000 ரூபாய் வரை வழங்கப்படும். ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 60 வயதைக் கடந்த நலிவுற்ற திரைப்படத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 300 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 1000 முதல் 1500 தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள். திரைப்படத் தொழிலாளர்களிடம் இத்திட்டத்திற்காக மிகச்சிறிய பங்குத் தொகையும் வசூலிக்கப்படும். இந்த இரு திட்டங்களும், திரைப்படத் துறையில் உள்ள வசதியற்ற தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

2. அரசு அலுவலர்களுக்கு வீட்டுக் கடன் உயர்வு

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்குத் தற்போது வீடு கட்டுவதற்கும், புதிய வீட்டை வாங்குவதற்கும் அதிகபட்சம் 2,50,000 ரூபாய் வழங்கப்பட்டுவருகிறது. இந்த அதிகபட்சத் தொகை, 2,50,000 ரூபாயிலிருந்து 4,00,000 ரூபாயாக இன்று முதல் உயர்த்தி ஆணை வழங்கி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, கட்டிய வீட்டை விரிவாக்கம் செய்ய, தற்போது வழங்கப்பட்டுவருகின்ற கடன் உதவியை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து, இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயில்பவர்களுக்கு, மாதாந்திர உணவுச் செலவிற்கு 18 ரூபாயும், பள்ளி விடுதிகளில் பயில்பவர்களுக்கு, உணவுச் செலவிற்கு 15 ரூபாயும் கூடுதலாக வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. குடிநீரில் Fluoride அதிகமாக இருந்தால், அது மனிதர்களின் உடல் நலத்தைப் பாதிக்கும். Fluoride அதிகமாக இருக்கின்ற 124 குடியிருப்புகளில் Fluoride குறைக்கும் திட்டம் ஏழரைக் கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் முதன் முதலாகச் செயல்படுத்தப்படும் என்பதையும், அதற்கான ஆணைகளை நான் பிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவுரை

சென்ற ஆண்டு இதே சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் உரை மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையை அளிக்கும்போது, நான் குறிப்பிட்ட ஒரு கருத்தை நினைவுகூர்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"ஒரு அரசாங்கத்தின் முக்கியமான கடமை, மற்றவர்கள் ஏற்கெனவே செய்துகொண்டிருக்கின்ற பணியை, அவர்களை விடச் சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ செய்வது அல்ல, ஆனால் இதுவரை யாருமே செய்யாத பணிகளை, மேற்கொண்டு செய்வதுதான், அரசாங்கத்தின் முக்கிய கடமை" என்று குறிப்பிட்டிருந்தேன்.

புதிய சிந்தனையுடன், புதிய பாதையை வகுத்து நல்ல பல திட்டங்களை Innovative Schemeகளை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த இடைப்பட்ட ஓராண்டுக்

காலத்திலும், யாரும் செய்யாத எத்தனையோ பணிகளை நாங்கள் ஆற்றியுள்ளோம். மகளிருக்கான முன்னேற்றக் கொள்கையை வகுத்துத் தந்தோம் குழந்தைகள் நல 15 அம்ச நலத் திட்டத்தையும் வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம். ஊனமுற்றோர் நலனைக் கவனிக்க ஒரு துறையைத் தனியே துவக்கிவைத்து, உடல் ஊனமுற்றோருக்கான வளர்ச்சிக்கு ஒரு கொள்கையை வகுத்துத் தந்தோம். ஒரு வேளை பூஜை கூட நடைபெறாத கோயில்களைக் கணக்கெடுத்து, அந்தக் கோயில்கள் ஒவ்வொன்றிற்கும் 25,000 ரூபாய் செலவில் நிதிக் கட்டளை ஒன்றை ஏற்படுத்தி, குறைந்தபட்சம் ஒரு காலப் பூஜையாவது நடைபெறச் செய்தோம். விளையாட்டு வீரர்களையும், வீராங்கனை களையும் ஊக்குவிக்கும் வண்ணம், அவர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ள நிதி உதவியும், பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டும், பரிசுகளும் வழங்கி ஊக்கப்படுத்தி உள்ளோம். உலக வங்கி நிர்ணயித்த காலக் கெடுவிற்குள் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டினோம். 1952-ஆம் ஆண்டிலிருந்தே கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்து, தப்பிச் செல்வது ஒரு சாதாரண சம்பவமாக மாறிவிட்ட சூழ்நிலையை, இனி மாற்றிக்காட்ட வேண்டும் என்பதற்காக, இதுவரை யாரும் மேற்கொள்ளாத அதிரடிப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சிறைகளில் மேற்கொண்டு வருகிறோம். இன்னும் சொல்லிக்கொண்டே போனால், இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஒன்று மட்டும் நிச்சயம். இதுவரை யாருமே செய்யாத பல பணிகளை, எங்கள் அரசு செய்து வருகிறது என்பதை, நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பல சந்தேகங்களுக்கு, எனது பதில்கள் தெளிவான விளக்கங்களை அளித்திருக்கும் என்று நம்புகிறேன். தமிழக அரசின் செயல்பாடு களைப் புள்ளி விவரங்களோடு எடுத்து விளக்கி உள்ளேன். மக்கள் மனம் அறிந்து நடக்கின்ற அரசு இது. எனவே, மக்களின் நலனும், அவர்களின் முன்னேற்றமும் தான், எங்களை இயக்குகின்ற மாபெரும் சக்திகளாக உள்ளன. மக்கள் சக்தியை மட்டுமே மதிப்பவர்கள் நாங்கள். எனவே தான், மக்கள் சக்தியின் துணையுடன் சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு, சாதனைகளாக்கிக் கொண்டு வருகிறோம்.

"சோதனை மேல் சோதனை
போதுமடா சாமி"

என்று நாங்கள் இடிந்து போய் ஒப்பாரி வைக்கமாட்டோம்.

எத்தனை சோதனைகள் வேண்டுமானாலும், கொடுங்கள் சாமி அவற்றையும் எதிர்கொண்டு வென்று காட்டுவோம், என்று தான் நாங்கள் கூறுவோம்.

அரசியலிலே மனமாச்சர்யங்கள் இருந்தாலும், கொள்கையிலே வேறுபாடுகள் இருந்தாலும், சிந்தனைகளிலே மாறுபாடுகள் இருந்தாலும், நமது நோக்கம் எல்லாம் மக்களின் நலன் என்ற ஒன்றைத் தான் சுற்றி வர வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. பாரம்பரியம் படைத்த இந்த மாபெரும் சபையில் நாம் செலவிடுகின்ற ஒவ்வொரு மணித் துளியும் மக்களின் நல்வாழ்விற்காக, மக்களின் முன்னேற்றத்திற்காக, தமிழகத்தின் வளர்ச்சிக்காகச் செலவிடப்பட வேண்டும் என்பதே எனது பேரவா.

"இயற்றலும் ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும், வல்லது அரசு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, எங்கள் அரசு தொடர்ந்து மக்கள் நலனை முன் வைத்துப் பணியாற்றும். அரசியல் கட்சிகளிடையே உள்ள மனமாச்சர்யங்களும், காழ்ப்புணர்ச்சிகளும், மக்களுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளுக்குக் குந்தகமாக மாறி விடக் கூடாது என்ற கருத்தையும் இந்தப் பேரவையின் முன் வைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்பதை எடுத்துரைத்து,

"இன்றும் தமிழ், என்றும் தமிழ்".

"அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்" என்ற புதிய எழுச்சி முழக்கத்தை உங்கள் அனைவரின் சார்பிலும் இந்த மாமன்றத்தின் முன் வைத்து, அமைகின்றேன்.

(மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, 20.3.1995 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரை)

கிசான் விகாஸ் பத்திரம்
செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்



சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 13.13% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

மேலும் விவரங்களுக்கு அணுகவும்:

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

DIPR/D18/95

வளர்ச்சிக்கும் வளமைக்கும் எடுத்துக்காட்டாய் ஒளிவீசித் திகழும் தமிழகம்!

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரை

தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், 1995-96ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப்பேரவையில்வைத்து, 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1994-95ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1995-96ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

உண்மையான ஆட்சித் தலைவர், அரசுக்குப் பொருள் வருகின்ற வழிகளை இயற்றிப் பொருள்களைத் திரட்டுதல், அவ்வாறு திரட்டப்படும் பொருள்களை ஒருங்கு சேர்த்தல், அப்படிச் சேர்த்த பொருள்களைப் பாதுகாத்தல், பின்பு அவற்றை நாட்டு மக்களின் நலனுக்காக மதிநுட்பத்தோடு பயன்படுத்துதல் ஆகியவற்றில் வல்லவராக இருக்க வேண்டும். இவை, தமிழ்மறை கண்ட சான்றோர் திருவள்ளுவர் மேற்காணும் தமது குறட்பாவில் தொகுத்துரைத்துள்ள, எக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஆட்சி நெறியின் அடிப்படைத் தத்துவங்களாகும். இவை இன்றைக்கும் கூட அப்படியே பொருந்தி நிற்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாள் முதல், பெரும்புலவர் திருவள்ளுவர் வகுத்தளித்துள்ள நெறியைத் திண்மையாகப் பின்பற்றி வருகிறார். தமிழ்நாட்டிற்கென்று சிறப்பான நிருவாகத்தை வழங்கிட, ஓய்வு ஒழிவின்றிப் பாடுபட்டு வந்துள்ள அவர்களுக்குத் தமிழக மக்கள் முழு ஆதரவளித்து அவர் பின்னே நிற்கின்றார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக அரிய முன்னோக்குடனும், பேராற்றலுடனும் பெருந்திறலுடனும் ஆற்றிவரும் பணிகளால் இந்நாட்டின் மிகப்பெரும், தன்னிகரற்ற ஆட்சித் தலைவராக உயர்ந்து விளங்குகின்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த சனநாயக ஆட்சிமுறைத் தத்துவங்களையும், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மனித நேயத்துடன், மக்கள் நலன் நோக்கில் வகுத்துச் செயல்படுத்திய திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, இந்நாடு முழுவதும் பின்பற்றத்தக்க மிகச் சிறந்த ஆட்சியை உருவாக்கியுள்ளது.

2. தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கை மிகச் செம்மையாகப் பேணிப்பாதுகாத்தல் என்கிற உறுதியான அடித்தளத்தின் மீது எழுந்த 'வளர்ச்சி-மேம்பாடு' என்ற அழகிய கண்கவர் மண்டபத்தைப் பாங்குற அமைத்துள்ளது இவ்வரசு. இங்கு வெளிநாட்டுப் போராளிகளாலும், தீவிரவாதிகளாலும் எழுந்த அச்சுறுத்தல்கள் அறவே ஒழிக்கப்பட்டு விட்டன. ஆக்க நிறைவாகவும், குறிப்பிட்ட நன்மை விளையும் நோக்கிலும் இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவால், இம்மாநிலம், சமுதாய நல்லிணக்கத்திற்கும், சமூகத்தின் பல தரப்பினரும் ஒற்றுமையாகக் கலந்து வாழும் இயல்புக்கும் தனிச் சிறப்புடைய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இத்தகைய உறுதியான அடிப்படையின் பேரில்தான், விரைந்த பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்தது. தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு செம்மையாகப் பேணி வரப்படுவதன் காரணமாக, இம் மாநிலம் நாட்டிலேயே மிகச் சிறப்பாக ஆட்சி செலுத்தப்படும் மாநிலங்களில் ஒன்று என எளிதில் கூற முடிகிறது என்னும் உண்மையை நான் வலியுறுத்த விழைகிறேன்.

3. வரலாறு காணாத அளவுக்குப் பொருளாதாரச் சிக்கலில் நாடு இருந்தபோது இந்த அரசு 1991 ஜூன் திங்களில் பதவி ஏற்றுக் கொண்டது. நாட்டின் மொத்தப் பொருளாதார நிலைமை இப்பொழுது சீரடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், அதனைப் பாதிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. இதற்கு ஏற்றவாறு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாகப் பெரும் பொருளாதார நிருவாகத்திற்கான வழிவகைகள் அனைத்தும் மத்திய அரசிடமே உள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உறுதி செய்வது மத்திய அரசின் தலையாய கடமையாகும். விலை ஏற்றத்தைத் தடுக்க மத்திய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம்.

வரு... கோதுமை. அரிசி. சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் உயராமல் இருப்பதை உறுதி செய்யக் கிடைக்கக் கூடிய வழிவகைகள் அனைத்தையும் மத்திய அரசு பயன்படுத்தும் என்று மத்திய நிதி அமைச்சர் தனது அண்மைய நிதி நிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார். இன்றியமையாப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க, தாமதமின்றி அந்நியச் செலாவணிச் சேம நிதிகளைச் செவ்விய முறையில் பயன்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துவோம். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் மத்திய அரசு தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

4. ஒரு பக்கம் வளர்ச்சி, முதலீடு, நவீனப்படுத்தல் ஆகியவற்றை விரைவுபடுத்தவும், மற்றொரு பக்கம் வறுமை ஒழிப்புத் திட்டங்களை வலுப்படுத்தவுமான இருவழிப் பொருளாதாரச் செயல் திட்டங்களைக் குறித்து மத்திய நிதி அமைச்சர் தமது நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டார். வறியோர் வாழ்வில் வளமை சேர்க்கும் பணியைப் பொருளாதார நிகழ்ச்சி நிரலின் முக்கிய இனமாக வைக்க வேண்டிய அவசியத்தை மத்திய அரசு இப்போதாவது உணர்ந்துள்ளது பற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய பொருளாதாரக் கொள்கையினால், ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து இந்த அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளது. பொது விநியோக முறையில் அரிசி விலைகளை உயர்த்தக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் ஒவ்வொன்றிலும் மத்திய அரசுக்கு எடுத்துரைத்துள்ளார். பொது விநியோக முறையில் வழங்கல் விலைகள் மேலும் உயராமல் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் அறிவிக்கப்பட்ட மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் கூட, பொது விநியோக முறையிலான வழங்கல் விலை உயர்த்தப்பட மாட்டாது என்று திட்டவட்டமான உறுதிமொழி ஏதும் இல்லை. பொது விநியோக முறையில் அரிசியின் விலையை மத்திய அரசு மேற்கொண்டும் உயர்த்தக் கூடாது என்று வலியுறுத்த இந்த அரசு விழைகிறது. கடும் நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும்கூட, ஏழை, எளியோரைப் பாதுகாக்க நாங்கள் பெரு முயற்சி எடுத்து வந்துள்ளோம். உணவுப் பொருள் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 1990–91ஆம் ஆண்டில் ரூ.105 கோடியாக இருந்தது. அது படிப்படியாக உயர்ந்து 1994–95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.440 கோடி என்ற அளவை அடைந்துள்ளது. மேலும், 1994–95இல், முந்தைய ஆண்டுகள் தொடர்பான உணவுப் பொருளுக்கான உதவித் தொகை நிலுவையைச் சரிக்கட்ட ரூ.75 கோடியை ஒதுக்கியுள்ளோம். இந்த அரசு, உணவுப் பொருளுக்கான உதவித் தொகைக்காக ஒதுக்கியுள்ள தொகை 1995–96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.450 கோடியாக இருக்கும். ஏழை மக்களுக்கு நலனளிக்கும் நோக்குடன், பொது விநியோக முறையில் அரிசியின் வழங்கல் விலையைப் பற்றிப் பரிசீலிக்க, தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டம் ஒன்றினைக் கூட்டுமாறு நாங்கள் கேட்டுள்ளோம். ஆனால், அக்கூட்டத்திற்காகக் காத்திராமல், பொது விநியோக முறையில் அரிசியின் விலையை அனைத்து ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வீதம் குறைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். எனவே, 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 இலிருந்து, ரூ.2.50 ஆகக் குறைக்கப்படும். சன்ன ரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.4.75 இலிருந்து ரூ.3.75 ஆக குறைக்கப்படும். இதன் காரணமாக உணவுப் பொருள்களுக்காக வழங்கப்படும் உதவித்தொகை மேலும் ரூ.150 கோடி அதிகரித்து, மொத்தம் ரூ.600 கோடியாக இருக்கும். விலைவாசி உயர்வுக் கொடுமையிலிருந்து ஏழை, எளிய மக்களைப் பாதுகாப்பதில் இந்த அரசு எந்த அளவிற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு தெளிவான சான்றாகும்.

> ★ ரேஷன் அரிசி விலை கிலோ வுக்கு ஒரு ரூபாய் குறைப்பு. (ரூ. 3.50-க்குப் பதில் ரூ. 2.50)
>
> ★ உணவு விடுதிகளில் பண்டங்கள் மீதான விற்பனை வரி ரத்து.

5. மத்தியில் வலுவான கூட்டாட்சி, மாநிலத்தில் வளமான சுயாட்சி என்ற எங்கள் கொள்கைக்கேற்ப, நாட்டின் இறையாண்மையைப் பேணிக் காக்க வேண்டியதற்கான அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமும், வளர்ச்சிப்பணி, நலப்பணி குறித்த பொறுப்புகள் மாநில அரசுகளிடமும் நிலை பெறும் வகையில், அரசமைப்புச் சட்டத்தைத் தகுந்தவாறு திருத்த வேண்டுமென நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். இதே நிலையை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருவோம். அண்மைக்காலப் பொருளாதார நிலை, தேசிய மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தவிர, சமூகத் துறையில் அரசின் பங்கு இன்னும் அதிக முக்கியமானதாக ஆகியுள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்நிலைக்கேற்ப, நிதிவள வாய்ப்புகள் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

பத்தாம் நிதிக் குழு

6. பத்தாம் நிதிக் குழுவின் அறிக்கை மத்திய அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விளக்கக் குறிப்புடன், அண்மையில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கை, மாநிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பொறுப்புகள் வந்து சேர்ந்துள்ள நிலைமைக்கேற்ப, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவுகள் இன்னும் அதிக அளவில் நியாயமான முறையில் இருக்கும் என்கிற எங்களுடைய எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி விட்டது என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். மாநிலங்களின் ஒட்டு மொத்த நிதி ஆதாரங்களை உயர்த்துவதற்குப் பத்தாவது நிதிக் குழு திட்டத்தட்ட ஒன்றுமே செய்யவில்லை. மத்திய ஆயத் தீர்வைகளில் மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பங்கு 45 சதவீதத்திலிருந்து 47.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில், வருமான வரியில் மாநிலங்களின் பங்கு 85 சதவீதத்திலிருந்து 77.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. மொத்தத்தில், மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பங்கில் கிட்டத்தட்ட எவ்வித உயர்வும் இல்லை. இது உண்மையில் மிகவும் ஏமாற்றம் தருவதாகும்.

> ★ கர்ப்பிணிகளுக்குச் சத்துணவு.
>
> ★ மின்னணுச் சாதனம் மீது வரிக் குறைப்பு.

7. பத்தாம் நிதிக் குழு 1994 மே திங்களில் மாநிலத்திற்கு வந்தபோது, வருமான வரியில் மாநிலங்களின் பங்கை 85 சதவீதமாகவே தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என்கிற அதே சமயம், மத்திய ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கைத் தற்போதைய அளவான 45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார். மத்திய ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கை 45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்துவது படிப்படியாகச் செய்யப்படலாம் என்று, அதாவது, 1995–97இல் 45 சதவீதத்திலிருந்து 52.5 சதவீதமாகவும், 1997 முதல் 2000 வரையிலான இறுதி மூன்றாண்டுகளில் இதனை 60 சதவீதமாகவும் உயர்த்தலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொறுப்பு வாய்ந்த கருத்து ஒன்றைத் தெரிவித்தார். மத்திய ஆயத் தீர்வையின் கீழ் நிதிகளைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு மாற்றுவதில் தனிப்பட்ட ஒதுக்கீடு எதுவும் இருக்கக் கூடாது என்றும், 275(1) பிரிவின் கீழ் மானியங்கள் வழங்குவதன் மூலம் பற்றாக்குறை மாநிலங்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். மத்திய ஆயத்தீர்வையின் கீழ் உள்ள மொத்தம் 47.5 சதவீதத்தில், 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்குப் பத்தாம் நிதிக் குழு ஒதுக்கியுள்ளது. பத்தாம் நிதிக் குழு மாநிலங்களுக்கு மொத்தத்தில் நிதிகளை மாற்றுவதில் அதே நிலைமை தொடரும் வகையில் பரிந்துரை அளித்தது வேதனை அளிப்பதாகும். மாநிலங்களுக்குப் பத்தாம் நிதிக் குழு ஏதேனும் நியாயம் வழங்கியுள்ளதா என்பது எங்களைப் பெரும் ஐயப்பாட்டிற்குள் ஆழ்த்துகிறது.

8. 1996 ஏப்ரல் 1ஆம் நாள் முதல் செயல் வடிவம் பெறும் வகையில் நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கும் ஒரு மாற்றுத் திட்டத்தையும் பத்தாம் நிதிக் குழு தெரிவித்துள்ளது. அதன்படி, மத்திய வரிகளின் மொத்த வரவினத்தில் மாநிலங்களின் பங்கு 26 சதவீதமாக இருக்கும் என்று பரிந்துரைத்துள்ளது. இதனுடன், அடிப்படை ஆயத்தீர்வையுடன் கூடுதல் ஆயத்தீர்வை சேர்க்கப்பட வேண்டும் என்றும், அதன்பின்னர், மேலும் 3 சதவீதம் சேர்க்கப்பட்டு, 29 சதவீதத் தொகையை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமென்றும் பரிந்துரை செய்துள்ளது. மாநிலங்களுக்கு இது போன்று 26 சதவீதம், 3 சதவீதம் என்ற வகையில், நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் தக்கவாறு வகை செய்யப்பட வேண்டுமென்றும், 15

ஆண்டுகளுக்கொரு முறை இது ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்துள்ளது. நிதிகளைப் பகிர்ந்தளிக்கும் இந்த மாற்றுத் திட்டம் குறித்து, மத்திய அரசு எந்தவிதமான உறுதியும் அளிக்கவில்லை. பத்தாம் நிதிக் குழு தெரிவித்த [illegible] சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட [illegible] 1980-81இல் 26 சதவீத அளவைப் பெற்றது. 1994-95இல் அது 25.15 சதவீதமாக உள்ளது என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். [illegible] சதவீதப் பகிர்வைப் பொறுத்தவரையில் 1980-81 [illegible] 29.4 சதவீதமாக இருந்தது. அது 1994-95 [illegible] 269இல் கீழ் வரும் சில வரிகளும் பகிர்ந்தளிக்கத் தக்க தொகுப்பில் கொண்டுவரப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். இந்த மாற்றுத் திட்டத்தில் தற்போதைய நிதிப் பகிர்வு எந்தவித மாற்றமுமின்றிக் கிட்டத்தட்ட அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். இப்பரிந்துரை மாநிலங்களுக்கு நிறுவன வரியில் ஒரு பங்கு அளிக்கப்பட வேண்டுமென்று மாநிலங்கள் முயற்சிப்பதை விட்டு விட்டு வேறு திசையில் கவனத்தைத் திருப்பிவிடும். நிறுவன வரியில்தான் தங்களுக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டுமென்று மாநிலங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இதுபற்றிப் பத்தாம் நிதிக் குழுவிடம் எடுத்துரைத்து நிறுவன வரியில் 20 சதவீதம் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டவட்டமான பரிந்துரையை நிதிக் குழு செய்யலாமெனக் கேட்டுக் கொண்டார்.

9. பத்தாம் நிதிக் குழு தெரிவித்த மாற்றுத் திட்டம் பரந்த செயல் விளைவுடையது. அதற்கு அரசமைப்புச் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அது நிறைவேறுமென்று தோன்றவில்லை. சரக்கு ஒப்படை வரியைப் பொறுத்தவரையில், அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்த பின்னர் [illegible] என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மைய-மாநில உறவுகள் தொடர்பாகச் சர்க்காரியா குழு தெரிவித்த கருத்துப்படி, நிறுவன வரியில் மாநிலங்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை, மாற்றுத் திட்டத்தில் இணைக்கப்பட்டதன் மூலம், பத்தாம் நிதிக் குழுவால் ஓசையின்றி ஒதுக்கிவிடப்பட்டு விட்டது. நிதியைப் பகிர்ந்தளிக்கும் மாற்றுத் திட்டம் குறித்து தனது கருத்தைத் தெரிவிக்குமாறு, அல்லது, மாநிலங்களுக்கு உடனடியாகக் நிறுவன வரியில் பங்கு கொடுக்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

★ அரசு ஊழியருக்குக் கூடுதல் சலுகைகள்.

★ ஏழைகளுக்கு மருத்துவ வசதி.

10. மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மொத்தப் பங்கு குறித்து பத்தாம் நிதிக்குழு பயனுள்ள எதையும் செய்யத் தவறி விட்டது என்று நான் இதுவரை குறிப்பிட்டிருந்தேன். இனி, மாநிலங்களிடையே நிதியைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான பிரச்சினை குறித்து நான் குறிப்பிட விரும்புகிறேன். நன்கு செயல்பட்டு வருகிற சில மாநிலங்களைப் பத்தாம் நிதிக் குழு தண்டித்துள்ளது. இதனால், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, குஜராத், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நன்கு நிருவகிக்கப்பட்ட, நல்ல முறையில் செயல்படுகின்ற சில மாநிலங்கள் கடுமையாக நடத்தப்பட்டுள்ளன. நன்கு நிருவகிக்கப்படுகின்ற மாநிலங்கள் அடுத்தடுத்து வரும் நிதிக் குழுக்களால் தண்டிக்கப்படும் இந்தவழக்கத்தை நிறுத்த வேண்டும்.

11. பத்தாம் நிதிக் குழு, மாநிலங்களிடையே வருமான வரியையும், ஆயத்தீர்வையையும் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு பொதுவான விதிமுறையைப் (Formula) பின்பற்றியுள்ளது. தமிழ்நாடு மத்திய ஆயத் தீர்வையைவிட வருமான வரியில்தான் எப்போதும் அதிகப் பங்கு பெற்றுவந்துள்ளது. வருமானவரியையும், மத்திய ஆயத்தீர்வையையும் பகிர்ந்தளிக்கும் ஒரு பொதுவான விதிமுறையைப் பின்பற்றுவதானது, தமிழ்நாடு வருமான வரியில் பெறுவதற்குரிய அதிகப் பங்கு, மத்திய ஆயத் தீர்வையில் உள்ளது போன்ற அதே அளவிற்குத் தற்போது குறைக்கப்பட்டுவிட்டது என்று பொருள்படுகிறது. பகிர்ந்தளிக்கும் புதிய பொதுவான விதிமுறையின்படி, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 20 சதவீதமும், மாநில நபர்வாரி வருமானம், அதிகபட்ச மாநில நபர்வாரி வருமான அளவைவிட எந்த அளவிற்குக் குறைவாக உள்ளது என்ற அடிப்படையில் 60 சதவீதமும், "பரப்பளவு" குறித்த புதிய கோட்பாட்டின் அடிப்படையில் 5 சதவீதமும், அடிப்படை வசதிக் குறியீட்டு எண் அடிப்படையில் 5 சதவீதமும், வரி வசூலிப்பு முயற்சி அடிப்படையில் 10 சதவீதமும் நிதி பிரித்தளிக்கப்படுகிறது. இந்த புதிய விதிமுறை, மாநில நபர்வாரி வருமானம் அதிகபட்ச மாநில நபர்வாரி வருமானத்தைக் காட்டிலும் குறைந்திருப்பதை குறிக்கும் விதிமுறைக்கு (criterion) அதிகப்பங்கை ஒதுக்குகிறது. மத்திய புள்ளிவிவர நிறுவனம் கணக்கிட்டுத் தந்தவாறு பத்தாம் நிதிக்குழு பயன்படுத்திய மதிப்பீடுகள், தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரி நபர்வாரி வருமானத்தை விட அதிகமாகவுள்ளது என்று தெரிவிக்கின்றன. நபர்வாரி வருமானம் குறைவாக இருக்கின்ற அடிப்படை விதிமுறைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக, மத்திய புள்ளிவிவர நிறுவனம் கணக்கிட்டவாறு தேசிய சராசரிக்கு மேல் அதிக நபர்வாரி வருமானம் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ள தமிழ் நாடு குறைந்த பங்கினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய புள்ளிவிவர நிறுவனம் ஒப்பு நோக்கு அடிப்படையில் நபர்வாரி வருமானத்தை மதிப்பிட்டதில் குறைபாடுகள் உள்ளன என்றும், நடப்பு மக்கள் தொகைக் கணக்கு பின்பற்றப்பட்டது என்றும், ஆய்வு வரம்பில் சொல்லியுள்ளவாறு 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு பின்பற்றப்படவில்லை என்றும் நாங்கள் பத்தாம் நிதிக்குழுவிடம் தெள்ளத் தெளிவாக எடுத்துரைஎன்னோம். இச் செயல் மக்கள் தொகையை வரம்பிற்குள் வைத்திருக்கும் பணியை நன்கு நிறைவேற்றிய மாநிலங்களைத் தண்டிப்பதாகவே அமையும். ஏழ்மை சதவீதம் குறித்த மத்திய திட்டக் குழுவின் 1992 ஆம் ஆண்டு அறிக்கையைப் பத்தாம் நிதிக் குழு பரிசீலித்திருந்தால், அது மேலும் அறிவார்ந்த முற்போக்குடைய செயலாக இருந்திருக்கும். தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம், தேசிய சராசரியைக் காட்டிலும் உயர்வாகக் காட்டப்பட்டிருந்தபோதிலும், மத்திய திட்டக் குழுவின் வல்லுநர் குழுவின் மதிப்பீடுகளின்படி, 1987-88 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஏழை மக்களின் எண்ணிக்கை சதவீதம் தேசிய சராசரிஅளவைவிட அதிகமாகவே இருந்தது. இதனைப் பத்தாம் நிதிக் குழு கவனிக்கத் தவறியுள்ளது. பொருளாதாரத்தில் பின் தங்கிய குறியீடுபோன்ற வலுவான அளவுகோல்களைக் கருத்தில்கொள்ளாமல் விட்டுவிட்டு, பரப்பளவு, அடிப்படை வசதி மேம்பாடு போன்ற புதிய அளவு கோல்களை பத்தாம் நிதிக்குழு தெரிந்தெடுத்திருப்பது குறித்து நாங்கள் வியப்படைகிறோம். புதுமை செய்ய விழைந்த இம்முயற்சி, அதிக மக்கள் தொகை நெருக்கத்தைப் பெற்றுள்ள, அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு ஏற்கெனவே முதலீடு செய்துள்ள மாநிலங்களை தண்டித்துள்ளது. மொத்தத்தில், பத்தாம் நிதிக்குழு வகுத்துள்ள இந்தப் புதிய நிதிப் பகிர்வு அடிப்படை விதிமுறை மிகவும் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

12. மத்திய அரசுக்கு மாநில அரசுகள் அளித்துள்ள வரி வசூலிப்பு அதிகார (tax-rental) அடிப்படையில் வசூலிக்கப்படும் கூடுதல் ஆயத்தீர்வையைப் பகிர்ந்தளிப்பதைப் பொறுத்தமட்டில், 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலான மக்கள் தொகை அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒன்பதாம் நிதிக்குழுவைப் போலவே பத்தாம் நிதிக்குழுவும் மீண்டும் பிழை செய்துள்ளது. இது ஆய்வு வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பது எங்கள் கருத்தாகும்.

13. 1995-2000 ஆம் ஆண்டு கால அளவிற்குப் பல்வேறு மாநிலங்களின் நிதி நிலைமையைப் பத்தாம் நிதிக் குழு மதிப்பீடு செய்து, அதன்பிறகு, வரித் தொகையைப் பிரித்துக் கொடுத்த பின், பற்றாக்குறை ஏதேனும் இருந்தால் அதனைச் சரிக்கட்ட, அரசமைப்புச் சட்டத்தின் 275(1) பிரிவின் கீழ் அவற்றுக்குத் தனி மானியம் வழங்குவது தேவையா என்பது குறித்துத் தீர்மானித்துள்ளது. சிறப்பு வகைப்பாட்டின் கீழ்வராத, ஆந்திரப் பிரதேசம், பீகார், கோவா, ஒரிசா, இராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மட்டுமே, பற்றாக்குறை மானியத்தைப் (deficit grant) பெறுவதற்குத் தகுதியுடையனவாக்கப்பட்டுள்ளன. 30.5.1994 ஆம் நாளன்று பத்தாம் நிதிக்குழு தமிழ் நாட்டிற்கு வந்தபோது, குழுவின் தலைவர், வரித் தொகையைப் பகிர்ந்தளித்த பின் தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கின் கீழ்வரும், திட்டத்தில் சேராத பணிகளின் கணக்கு பற்றாக்குறையைக் காட்டுகிறது என்று தெரிவித்தார். ஆனால், நிதிக் குழு 1995-2000 ஆம் ஆண்டு கால அளவிற்கான தனது முன்கணிப்பில், தமிழ்நாட்டின், திட்டத்தில் சேராத பணிகள் குறித்த வருவாய்க் கணக்கில் உபரி உள்ளது என்று தெரிவித்துள்ளது. 1995-2000 ஆண்டு கால அளவிற்கு மாநிலங்களின் நிதி நிலைமையை மதிப்பீடு செய்கையில், பத்தாம் நிதிக்குழு, மிகவும் கடுமையாக இருந்துள்ளது. மிக உயர்வான அளவில் வருவாய்க் கணக்கு வரவுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளன. அதே நேரத்தில், செலவை மதிப்பிடுகையில், பத்தாம் நிதிக் குழு முற்றிலும் நடப்புக்குப் புறம்பாக மதிப்பிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு எதிர்காலத்தில் செய்யப்பட

நிவாரணத் தொகை கிடைக்குமென்று எதிர்பார்க்க இயலும். பத்தாம் நிதிக் குழு, மிகுந்த நிதிநெருக்கடி நிலையில் உள்ள, சிறப்பு வகையின் கீழ் வராத மூன்று மாநிலங்களுக்கும், சிறப்பு வகையின் கீழ்வரும் மாநிலங்களுக்கும் மட்டுமே சிறப்புக் கடன் நிவாரணம் அளித்துள்ளது. இந்தப் பட்டியலில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. கடன் நிவாரணத் திட்டம் மொத்தத்தில் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படை. நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்ற ஒரு பிரச்சினைக்குப் பத்தாம் நிதிக் குழு போதிய தீர்வு காணவில்லை என்பதில் நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

19. ஒரு மாநிலம் அதனுடைய பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள மூலதனத்தைப் பங்குகளை விற்பதன் மூலம் திரும்பப் பெறுவதன் வாயிலாகக் (disinvestment) கடன் நிவாரணம் பெறும் புதிய திட்டமொன்றையும் பத்தாம் நிதிக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து மாநிலங்களும் அவற்றின் பொதுத்துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் கோட்பாட்டை உருவாக்க வேண்டியது அவசியம் என்று பத்தாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. அத்தகைய நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த மூலதனப்பங்கில் 20 சதவீதம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும், அவ்வாறு திரும்பப்பெறப்பட்ட முதலீட்டின் வரவு, மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஒரு மாநில அரசு அவ்வாறு செய்தால், அதனை ஊக்குவிக்கும் வகையில், அந்த மாநிலம் முதலீட்டைத் திரும்பப் பெற்று மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்திய தொகைக்குச் சமமான கடன் தொகையை மத்திய அரசு கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. இது புதிய கருத்துரையாகும். ஆனால், பத்தாம் நிதிக்குழு மாநிலங்களுக்கு மட்டும் கடுமையான வரையறையை விதித்துள்ளது எனத் தோன்றும். ஏனெனில், மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வரவுக் கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்படுவதில்லை. அத்தொகை, மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிரப்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மாநிலங்களைப் பொறுத்த வரையில், திரும்பப் பெறப்பட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வரவு மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று பத்தாம் நிதிக்குழு விரும்புகிறது. இது நியாயமற்றது என்பது தெளிவு. கடன் நிவாரணத் திட்டம், திரும்பப் பெறப்பட்ட முதலீட்டு அளவிற்கே பொருந்தக் கூடியதாகவும், அத்தொகையை மத்திய அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தாமலும் இருக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்வோம்.

20. மாவட்ட நிருவாகத்தை நிலை உயர்த்துவதற்கான மொத்த மானியம் ரூ.858.32 கோடியாகும். இதில், தமிழ் நாட்டிற்கு ரூ.29.91 கோடி மட்டுமே வழங்கப் பத்தாம் நிதிக் குழு வகை செய்துள்ளது. தொடக்கக் கல்வியை நிலையுயர்த்த, 1995ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆண்டு வரையிலான கால அளவிற்கு மானியமாக ரூ.755.75 கோடியை பத்தாம் நிதிக் குழு அனுமதித்துள்ளது. இந்த மானியத்தில் ரூ.10.94 கோடி மட்டுமே தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தனிப் பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.1246 கோடியில், குடிசைப் பகுதி மேம்பாட்டுக்காகத் தமிழ்நாடு ரூ.60 கோடியைப் பெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், மொத்தம் ரூ.2608.50 கோடியில் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த தொகை ரூ.100.85 கோடி மட்டுமேயாகும். நிருவாகத்தின் அனைத்துக் கூறுகளிலும் தமிழ்நாடு செயற்கரிய சாதனை புரிந்துள்ள காரணத்தால், தமிழ்நாடு மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

21. பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் சிறந்த அம்சங்களில் ஒன்று, உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட குறிப்பான பரிந்துரையாகும். அரசமைப்புச் சட்டத்தின் 73வது, 74வது திருத்தங்களின் கீழ் மாநிலங்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அளவு நிதி ஆதாரங்களை மாற்றி அளிக்க வேண்டியது அவசியம் என்பதால், 1994ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாள் பத்தாம் நிதிக் குழு சென்னைக்கு வருகை தந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கூடுதலாக மானியம் அளிக்கும்படி குழுவிடம் குறிப்பாகக் கேட்டிருந்தார். 1996–97ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி, 1999–2000ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு மொத்தம் ரூ.402.86 கோடி கிடைக்க வகை செய்கின்ற பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கின்றோம். உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றி அளிப்பதற்காக அனைத்து மாநிலங்களுக்குமாக பத்தாம் நிதிக் குழு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ.5380.93 கோடியாகும். இந்தப் பரிந்துரைகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மாநிலத் திட்டங்களுக்கான தொகையின் ஒரு பகுதியாகக் கருதப்படவிருப்பதுடன், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டியது என ஒதுக்கப்படவுள்ளது. இது, உள்ளாட்சி மன்றங்களின் நிதியைப் பெருமளவுக்கு அதிகரிக்கச் செய்யும். எனவே, இது வரவேற்கப்படத்தக்க மிகச் சிறந்த பரிந்துரையாகும்.

22. மத்திய அரசு ஏற்றுக் கொண்ட பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக நம்முடைய முக்கியமான கவலைகளை நான் விரிவாக விளக்கியுள்ளேன். மாநிலங்களின் மொத்தப் பங்கினை முறையாக மாற்றுவதில் மாநிலங்களின் பங்கு அதிகரிக்கவே இல்லை என்பதைக் கண்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். 1995–2000 வரையிலான கால அளவில் மாநிலங்களின் நிதி நிலைமை உபரியான / பற்றாக்குறையான நிலையில் இருக்கும் என்ற மதிப்பீடு மிகவும் கடுமையானதாகும். அது ஒரு போதும் உண்மை நிலையைக் காட்டவில்லை. நன்கு நிருவகிக்கப்பட்டு வருகின்ற மாநிலங்களுக்குத் தண்டனையாக அமைகிற பகிர்ந்தளிப்பு விதிமுறையும் நமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. மாநில இடர் நிவாரண நிதிக்காக அனுமதிக்கப்படுகின்ற மானியங்கள் போதுமானவையல்ல. கடன் நிவாரணத் திட்டமும் அறவே போதுமானதன்று. நிருவாகத்தை நிலை உயர்த்தவும், தனிப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் மானியங்களை ஒதுக்கீடு செய்வதில், நன்கு நிருவகிக்கப்பட்டு வருகின்ற மாநிலங்கள் மீண்டும் பாதிப்பை அடைகின்றன. நமக்குச் சற்று ஆறுதல் தரும் அம்சம், உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளிப்பதாகும். எனவே, பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமக்கு ஏமாற்றம் அளிப்பவையாக இருக்கின்றன எனக் கருதுவதற்கு அனைத்துக் காரணங்களும் உள்ளன.

ஆண்டுத் திட்டம்

23. தமிழ்நாடு ஒவ்வோர் ஆண்டும் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவைத் தொடர்ந்து அதிகரித்து வந்து சாதனை புரிந்துள்ளது. அதைக் காட்டிலும், 1991–92 முதல் ஒவ்வோர் ஆண்டிலும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டிற்கு மேலும் அதிக அளவில் திட்டச் செலவை எய்தியதன் மூலம் குறிப்பிடத்தக்க சிறப்பான சாதனை புரிந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1992–93 மற்றும் 1993–94 ஆகிய இரு ஆண்டுகளிலும் 15 பெரிய மாநிலங்களில் 8 மாநிலங்கள், அவற்றின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை எய்த முடியாமல் இருந்துள்ள சூழலில் இதனைக் காணும்போது, தமிழ்நாடு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டிய அருஞ்சாதனை இன்னும் பெருமளவில் பாராட்டத் தக்கதாகும். இந்தச் சாதனைக்காக, மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், 20–1–1995 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளார். 1991–92இல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1725.98 கோடியாகும். 1992–93இல் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1935.14 கோடியாகும். மீண்டும், 1993–94இல் இந்தச் சாதனை தொடர்ந்து எய்தப்பட்டு, ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி என்றிருக்க, அடைந்த சாதனை ரூ.2234.79 கோடி ஆகும்.

24. 1994–95ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்திற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமான, அதாவது, ரூ.2750 கோடி அளவிற்குத் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1994–95இல் இந்த மிகப் பெரிய உயர்வு, மாநிலத்தின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டை தேசிய சராசரிக்குமேல் உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை மாநில அரசு உண்மையில் நிறைவேற்ற முடியுமா என்றுகூட சில பேரிடமிருந்து ஐயப்பாடு தெரிவிக்கப்பட்டது. நடப்பாண்டில், ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவை மாநிலம் முழுமையாக எய்தும் வகையில் உள்ளது என்பதையும், 1994–95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.2771.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

25. 1995–96ஆம் ஆண்டிற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ரூ.3200 கோடி அளவிற்கு மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்துள்ளார்கள். இது நடப்பாண்டு ஒதுக்கீட்டைவிட 16.36 சதவீதம் உயர்வாக உள்ளது. வரும் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு, 1994–95இல் அடைந்த வளர்ச்சியை நிலைப்படுத்தும் வகையில் உள்ளது. மேலும், இது தமிழ்நாட்டிற்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டான ரூ.10,200 கோடி என்ற குறித்த தொகையளவால் மட்டுமின்றி, பணவீக்கத்தை உள்ளடக்கி வரும் உண்மையான தொகையளவாலும் எய்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும். 1995–96இல், மாநில அரசு இந்தத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக எய்துவதற்கு உறுதிபூண்டுள்ளது. இதன் காரணமாகத்தான், ரூ.3,200 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டிற்கு, 1995–96 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3,250.58 கோடி அளவு ஒதுக்கப்பட்டுள்ளது.

★ முதியோர், விதவைப் பெண்கள், ஊனமுற்றோர் உதவித் தொகை ரூ. 100 ஆக உயர்வு.

★ வயதான விவசாயிகளுக்கு மாதம் ரூ. 100.

வேண்டிய சம்பளத் திருத்தங்களைச் செயற்படுத்துகையில் ஏற்படும் செலவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாநில அரசுகள் வழங்கிவரும் உணவு உதவித் தொகைகளை, 1995-96 ஆம் ஆண்டு முதற்கொண்டு படிப்படியாகக் குறைத்து விட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்காகத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அரசு வழங்கும் ரொக்க உதவித் தொகையைப் பத்தாம் நிதிக்குழு முழுமையாக ஏற்கவில்லை என்பது மற்றொரு பாதகமான அம்சமாகும். மேலும், பாசன வரவுகள், செயல்பாட்டு-பராமரிப்புச் செலவைத் திரும்பப் பெறும் வகையில் மட்டும் இல்லாமல், முதலீடு செய்துள்ள மூலதனத்திற்கு ஆண்டொன்றுக்கு 1 சதவீதம் ஆதாயம் கிடைக்கும் வகையிலும் இருக்க வேண்டும் என்று பத்தாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இவ்வாறு மதிப்பிட்டதன் விளைவாக, திருத்த அடிப்படையில் மத்திய வரிகளைப் பகிர்ந்தளித்த பிறகு, தமிழ்நாடு உபரி நிலையில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு 275(1) பிரிவின் கீழ் அளிக்கப்படும் [illegible] [illegible] தொகையிலிருந்து ஒரு பங்கையும் பெறத் தகுதியற்றதாகிறது.

14. பத்தாம் நிதிக்குழு, தன்னிச்சையாக, உணவு உதவித் தொகையை ஒதுக்கித் தள்ளிவிட்டும், விவசாய பம்புச் செட்டுகளுக்கான உதவித் தொகையை முழுமையாக அகற்றிவிட்டும், 1995-2000 ஆம் ஆண்டு கால அளவிற்கான இம்மாநிலத்தின் செலவுத் தேவைகளை மிகவும் குறைத்து மதிப்பிட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு இக்குழு நம் மாநிலத்தை மிக இடர்ப்பாடான நிலையில் வைத்துள்ளது.

15. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றதும், கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தும் மதுவிலக்கைச் செயற்படுத்தியது. மதுவிலக்கு காரணமாக ஏற்படும் வருவாய் இழப்பில் 50 சதவீதம் வரையிலான இழப்பை மாநிலங்களுக்கு ஈடு செய்வது குறித்து நாங்கள் மத்திய அரசிடம் முறையிட்டோம். எனினும், மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் முந்தைய திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதாக மத்திய அரசு சுட்டிக்காட்டியது. இப்பிரச்சினையை நாங்கள் பத்தாம் நிதிக் குழுவிடம் தெரிவித்தோம். மேலும், அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாநில அரசின் நெறிமுறைக் கோட்பாடாக விளங்கும் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய, மானியமொன்றை வழங்கக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்குமாறும் கேட்டுக் கொண்டோம். மாநில ஆயத்தீர்வை வருமானத்தின் மீது மாநிலத்தின் மதுவிலக்குக் கொள்கை எந்த அளவிற்கு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை, ஏற்கெனவே தான் கருத்திற் கொண்டு வருவாய் மதிப்பீடுகளைச் செய்துள்ளதாகத் தெரிவித்து, பத்தாம் நிதிக் குழு இந்த வேண்டுகோளை ஒதுக்கிவிட்டது நல்வாய்ப்பற்ற நிலையாகும். பத்தாம் நிதிக் குழு இது போன்றதொரு வாதத்தைத் தெரிவித்துள்ளது முற்றிலும் வியப்பாக இருக்கிறது. மதுவிலக்கு செயலில் இல்லாதபோது நாம் வருவாயாக எவ்வளவு தொகையைப் பெற்றிருப்போம் என்பதற்கும், உண்மையில் எவ்வளவு தொகை கிடைத்துள்ளது என்பதற்குமிடையே உள்ள வேறுபாட்டுத் தொகையை ஈடுசெய்ய நாம் குறிப்பிட்ட கோரிக்கை விடுவித்துள்ளோம். குறைந்த வருவாய் கிடைக்கும் தற்போதைய நிலையைப் பற்றித்தான் அது கருத்திற்கொள்ள முடியும் என்றும் ஈடுசெய்யும் பிரச்சினையைக் [illegible] என்றும் மத்திய நிதிக்குழு குறிப்பிட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1995-96 ஆம் ஆண்டிற்கு மாநில ஆயத்தீர்வையிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய வருவாய் என்று பத்தாம் நிதிக்குழுவில் மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.687.84 கோடியாகும். ஆனால், இன்றும்கூட நாம் இதற்குக் குறைவாகவே வருவாய் பெற்று வருகிறோம். இது மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தும் மாநிலங்களை உண்மையில் மிகவும் கடுமையாக நடத்துவதற்கு ஒப்பாகும்.

16. அடிக்கடி புயல், வெள்ளம் ஏற்பட்டு, அவற்றால் இம்மாநில அரசுக்குப் பிரச்சினைகள் உருவாகின என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவர். மாநில இடர் நிவாரண நிதிக்குத் தற்போது வழங்கப்படும் ஆண்டுக்கு ரூ.38 கோடி என்ற தொகை அளவு போதுமானதல்ல என்பதையும், தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்த வேண்டும் என்பதையும், தேசிய இயற்கைச் சீற்றங்களாக வகைப்படுத்தப்படக்கூடிய கடும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது இந்த நிதியை அணுகலாம் என்பதையும் நாங்கள் பத்தாம் நிதிக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்த மத்திய அரசு தொகை வழங்க வேண்டும் என்று நாங்கள் கருத்து தெரிவித்திருந்தோம். தமிழ்நாட்டில், அண்மையில் இயற்கைச் சீற்றத் துயர்தணிப்புச் செலவு தொடர்பாக ஏற்பட்ட அனுபவத்தின் பேரில், தமிழ்நாடு இடர் நிவாரண நிதியின் அளவை ஆண்டொன்றுக்கு ரூ.235 கோடி அளவிற்கு உயர்த்த வேண்டும் என்றும், அதில் 80 சதவீதத்தை மத்திய அரசும், 20 சதவீதத்தை மாநில அரசும் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம். தேசிய நிதி குறித்த கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது பற்றி நாம் மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில், தமிழ்நாடு இடர் நிவாரண நிதியின் அளவை 1995-96இல் ரூ.39 கோடியிலிருந்து, வெறும் ரூ.56.02 கோடிக்கும், 1999-2000 ஆம் ஆண்டில் படிப்படியாக ரூ.68.61 கோடிக்கு மட்டும் உயர்த்தியுள்ளது குறித்து நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இடர் நிவாரணப் பணிகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூ.94.97 கோடி அளவிற்கும், 1993-94 ஆம் ஆண்டில் ரூ.147.28 கோடி அளவிற்கும் நாம் செலவு செய்திருக்கும் போது, பத்தாம் நிதிக்குழு வெறும் ரூ.56.02 கோடியை மட்டும் அனுமதித்துள்ளது வியப்பளிப்பதாக உள்ளது. தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்தியிருப்பதும், இந்நிதியின் செயல்பாடுகளை மேற்பார்வையிட, ஐந்து முதலமைச்சர்கள் உள்ளடங்கிய தேசிய வளர்ச்சி மன்றத்தின் துணைக் குழு பரிந்துரைந்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாக இருந்தபோதிலும், தேசிய நிதிக்கு மாநிலங்களும் தொகை அளிக்க வேண்டுமென்ற நிபந்தனை விதித்ததைத் தவிர்த்திருக்கலாம்.

17. மாநிலத்தின் கடன்சுமை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, கடன் சுமையிலிருந்து கணிசமான அளவுக்கு நிவாரணம் பெற வேண்டிய அவசியம் குறித்து நாங்கள் விளக்கமான கருத்துரைகளைத் தெரிவித்திருந்தோம். 1995 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்று, தமிழ்நாட்டின் மொத்தக் கடன் ரூ.13,396.57 கோடியாக இருக்கும் என்று பத்தாம் நிதிக் குழு மதிப்பீடு செய்துள்ளது. 30 : 70 என்ற

★ ஊராட்சிகளுக்கு கலர் டி.வி.

★ கேபிள் டி.வி.க்குப் பாதி வரி.

விகிதத்தில் உள்ள மானியம், கடன் வடிவிலான மத்திய நிதியுதவி, 50 : 50 என்ற விகித அளவில் இருக்கும்படி திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். சிறுசேமிப்புக் கடன்கள் நிலைத்த கடன்களாகக் கருதப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். சிறுசேமிப்பு நிகர வசூலில் 80 சதவீதத்திற்குச் சமமான சிறுசேமிப்புக் கடன்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், சிறுசேமிப்புக் கடனுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கேட்டிருந்தோம். 1989-90ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களில் 50 சதவீதம் 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளபடி தொகுக்கப்பட்டுக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்படலாம் என்றும், எஞ்சியுள்ள தொகுக்கப்பட்ட கடனுக்குப் புதிதாக 8 சதவீத வட்டி விதிக்கப்படலாம் என்றும், அது, 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் திருப்பிச் செலுத்தப்படலாம் என்றும் நாங்கள் குறிப்பாகக் கேட்டிருந்தோம்.

18. பத்தாம் நிதிக் குழு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. சிறு சேமிப்புக் கடன்களை நிலைத்த கடன்களாகக் கருத வேண்டும் என்ற மாநிலங்களின் கோரிக்கையை அது நிராகரித்து விட்டது. மாநிலங்களின் நிதிச் செயல்பாட்டுடன் இணைந்த பொதுவான கடன் நிவாரணத் திட்டம் ஒன்றைப் பத்தாம் நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் நிதிச் சாதனையைப் பொறுத்துத் தமிழ்நாட்டிற்கு 1995ஆம் ஆண்டிலிருந்து 2000 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.31.17 கோடியிலிருந்து ரூ.62.34 கோடி வரையில் கடன்

★ திரி ஸ்டவ்வுக்கு வரி விலக்கு.

★ லாட்டரிச் சீட்டு விற்பனை வரியில் மாற்றம்.

காவல்

26. தமிழ்நாடு காவல்படையை நாட்டிலேயே மிகச் சிறந்த காவல் படையாக ஆக்குவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் ஆற்றியுள்ளதைப் போல வேறு எந்த முதலமைச்சரும் செய்யவில்லை. அவருடைய திறமையான நெறிப்படுத்துதலின் கீழ், மாநிலக் காவல் துறை புதிய இலட்சிய உணர்வுடனும் எழுச்சியுடனும் செயல்பட்டு வருகிறது. விரைவான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் அமைதியும் நல்லிணக்கமும் நிலவ உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் மாநிலக் காவல் படை விரைந்து செயல்பட்டுப் பிரச்சினைகள் அனைத்தையும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் சமாளித்தது.

27. காவல்துறைக்கு 1994-95இல் ரூ.387.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு நிகராக, 1995-96 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.420.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் படையை நவீனப்படுத்த நாம் மத்திய அரசிடம் ரூ.80.45 கோடி கேட்டிருந்தோம். 1991-92இல் மத்திய அரசு கொடுத்த ரூ.10 கோடி தவிர வேறு நிதிகள் எதுவும் வழங்கப்படாதபோதிலும், நாம் மனம் தளர்ந்துவிடவில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளோம். ஒவ்வொரு வரவு-செலவுத் திட்டத்திலும் இதற்காக நாம் தொகை ஒதுக்கியுள்ளோம். காவல்துறை நிருவாகத்தை நவீனப் படுத்துவதற்கு ரூ.668 கோடியை நிலையுயர்த்தும் மானியமாக வழங்கவேண்டும் என்று நாங்கள் பத்தாம் நிதிக் குழுவைக் கேட்டிருந்தோம். ஆனால், பத்தாம் நிதிக் குழு ரூ.12.13 கோடி மட்டுமே மானியமாக அனுமதித்தது. ஆனால், இதுவும் 1996 முதல் 2000 வரையிலான கால அளவிற்கு 1996-97ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே வழங்கப்படும். இவ்வாறு, நாம் மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டங்களுக்குச் செலவிட நம் சொந்த வருவாய் ஆதாரங்களையே சார்ந்திருக்கும் நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளோம். மாநிலக் காவல்படையை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 1995-96 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தனி ஒதுக்கமாக ரூ.12.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. காவல்துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது, புதிய திட்டங்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பார்.

28. காவல்துறை வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாம் உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். இதுவரை 2002 காவலர் குடியிருப்புகள் ரூ.28.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. காவலர் வீட்டுவசதிக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 'ஹட்கோ'விடமிருந்து திரட்டப்படும் நிறுவன நிதியுடன் சேர்த்து, 1995-96 இல் 1500 குடியிருப்புகளைக் கட்ட நாம் திட்டமிட்டுள்ளோம். சென்னையில் காவல் துறை நகரத்தைப் படிப்படியாகக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். சென்னை அருகே வீராபுரத்தில் காவலர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்துவதற்குரிய அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி 1995-96 இல் தொடங்கும். சீருடைப் படையினர் தேர்வு வாரியம் 10,000 புதிய காவலர்களை சுமுகமான, திறமையான முறையில் தெரிந்தெடுத்தது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். புதிய காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுத் துறையில் நியமிக்கப்பட்டு வருகின்றனர். காவல்படையின் திறமையை மேம்படுத்த இது மிக இன்றியமையாதது ஆகும்.

விரைவு படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சிக்கான செயல் திட்டம்.

29. மத்திய அரசு அண்மையில் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கி வைத்துள்ளது. இதில், உரிமம் வழங்கும் முறை மற்றும் ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளை நீக்குதல் போன்றவை இடம் பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து, தொழில் வளர்ச்சியில் புதிய போட்டிச் சூழல் உருவாகியுள்ளது. புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட வேண்டியுள்ளன. தொழில் வளர்ச்சி வங்கியின் 1993-94 ஆம் ஆண்டறிக்கையில் கண்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மிகச் சிறப்பான பணிபுரிந்துள்ள போதிலும், நாம் நமக்கான இப்புகழ் மாலைகளில் மயங்கலாகாது. இதன் காரணமாகவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விரைந்த தொழில் வளர்ச்சிக்காகப் புதிய மாநிலத்தின் குறிப்பான செயல்திட்டம் ஒன்றை வகுக்கவேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். 1992 ஆம் ஆண்டில் இவ்வரசு வெளியிட்ட புதிய தொழில் கொள்கையின் தொடர்ச்சியாகவே இச்செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

30. அரசு, தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான நடவடிக்கையைத் தொடங்கி வைக்க வேண்டிய முக்கியமான பகுதிகள் பலவற்றை நாங்கள் கண்டறிந்துள்ளோம். இவற்றில் பின்வருவன அடங்கும்:-

* திறமையான மற்றும் தரமான, அடிப்படை வசதிகளைச் செய்துதருதல்.
* விரைந்து தொழில் அனுமதிகளை வழங்க உரிய அமைப்பு ஒன்றை உருவாக்குதல்.
* நிலம், நீர், மின்சக்தி ஆகியவற்றை எளிதில் பெறச் செய்தல்.
* குறிப்பாக எந்தெந்தத் தொழில் தொகுதிகளைத் தொடங்குவதற்கு, இம்மாநிலத்தில் மற்ற மாநிலங்களைவிட அனுகூலமான நிலை உள்ளதோ அவற்றுக்கு ஊக்கம் அளித்தல்.
* தொழில் நல்லுறவுக்கு உகந்த சூழல் நிலவச் செய்தல்.
* தொழில் நுட்ப மனித வளத்தை மேம்படுத்துதல்.
* நிலையான நிதிக் கொள்கையைக் கடைப்பிடித்தல், மற்றும்
* நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு வசதியையும் வீட்டு வசதியையும், உருவாக்குதல்.

31. விரைவான தொழில் வளர்ச்சிக்கு உதவ இந்த முக்கியப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கை குறித்து இவ்வரசு நாட்டம் செலுத்தும். அரசு ஏற்கெனவே எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் பற்றி ஆளுநர் உரையில் விரிவாக ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டத்தில் பல்வேறு இனங்களுக்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய போட்டி மிகுந்த சூழ்நிலையில் தமிழ்நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு உறுதி செய்யப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

★ தமிழ்நாட்டில் கடல்வழிப் போக்கு வரத்து வாரியம் அமைப்பு.

ஏழை மக்களுக்கான சமூகப்பாதுகாப்புத் திட்டம்

32. மத்திய அரசு, புதிய பொருளாதாரக் கொள்கைகளை அறிவித்ததையடுத்து, நிலைப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கை, பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கிடையே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக விரிவான சமூகப் பாதுகாப்பிற்கு வகைசெய்வதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உறுதிபடக் கூறியிருந்தார். அதற்கிணங்க, இவ்வரசு, 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புக் கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கியிருந்தது. இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நடப்பாண்டில் நாங்கள் வலுப்படுத்தியுள்ளோம். சமூகப் பாதுகாப்பைப் பற்றிக் கூறுகையில், நாடு முழுவதிலும் தமிழ்நாடு மாநிலமே முதலிடம் வகிக்கிறது என்பதை உணரவேண்டும். பொருளாதார நிச்சயமற்ற தன்மை நிலவுவதற்கிடையே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு மேற்கொண்ட முயற்சிகள் பெரிதும் பாராட்டைப் பெற்றுள்ளன. ஏழை மக்களின் நலன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்கு நாங்கள் அளித்துள்ள ஆதரவை, நிதி இடர்ப்பாடுகள் எந்த விதத்திலும் பாதிக்க நாங்கள் அனுமதிக்கவில்லை. நிதிப் பிரச்சனைகளும்,

இடர்ப்பாடுகளும் தொடர்ந்து நிலவிய சூழ்நிலையில், ஏழை மக்களுக்கு விரிவான சமூகப் பாதுகாப்பு அளிப்பதில் நாங்கள் எக்காரணம் கொண்டும் பின்வாங்க மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

33. மிக அண்மையில்தான், அதுவும் கூட 1995 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 15 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில்தான், செவ்விய சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றின் அவசியத்தை மத்திய அரசு உணர்ந்துள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்காமல் நாம் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். மத்திய அரசின் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள புதிய நெறியினை வரவேற்கின்ற அதே சமயத்தில், ஏழை மக்களின் நலனுக்கான இத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு முற்றிலும் மாநில அரசுகளிடம் விட்டுவிடப்படவேண்டும் என்பதை நாங்கள் உறுதிபடக் கூற விழைகிறோம். பெரும்பாலான திட்டங்களில், மாநிலங்களை ஒதுக்கிவிட்டு மத்திய அரசே நேரடியாகத் தலையிடும் போக்கினை நாங்கள் ஏற்கெனவே கண்டு வருகிறோம். புதிய சமூக உதவித் திட்டம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான நிதி, மாநிலங்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும் என்றும், எவ்விதக் குறுக்கீடுமின்றி மாநில அரசுகள் இத்திட்டங்களைச் செயல்படுத்த அனுமதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்த விழைகிறோம். இத் திட்டங்களை நேரடியாகச் செயல்படுத்த மத்திய அரசு முயற்சி செய்தால் அது நன்மை பயக்காது.

34. கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கிய ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.1960.93 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்:

* உணவுக்கு உத்தரவாதம்.
* முதியோர், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்குச் சத்துணவு வழங்குதல்.
* ஏழை மக்களுக்குத் தொடக்கச் சுகாதார வசதி மற்றும் மருத்துவப் பணிகள்.
* அனைவருக்கும் தொடக்கக் கல்வி.
* ஏழை மக்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள்.
* இன்றியமையாக் குடிநீர் வசதி.
* வீடில்லாதவர்களுக்குப் புகலிடமளித்தல்.
* சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.
* நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்.

35. ஏழை மக்களின் விரிவான சமூகப் பாதுகாப்பிற்கான இத்திட்டம் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாகவும் ஆக்கியுள்ளது. ஏழை மக்களின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் மேம்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

36. முதியோர்கள், நலிவுற்ற வேளாண் தொழிலாளர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்குத் தமிழக அரசு மாதமொன்றுக்கு உதவித் தொகையாக ரூ.75 வழங்கிவருகிறது என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டங்களினால் 6 இலட்சம் பேர் பயன் பெறுகிறார்கள். இந்தத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ.75-லிருந்து ரூ.100 ஆக உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.18 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

37. தற்போது குறு விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஏதும் இல்லை. **65 வயதைக் கடந்த குறுவிவசாயிகள் பயன்பெறும் புதிய உதவித் தொகைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் மாதமொன்றுக்கு ரூ.100 உதவித் தொகையாக வழங்கப்படும்.** இத்திட்டத்தில் பயன்பெற, நிலவுடைமை விதியைத் தவிர ஏனைய அனைத்து விதிகளும் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் விதிகளைப் போலவே இருக்கும். **இத்திட்டத்தினால் 1 இலட்சம் குறு விவசாயிகள் பயன் பெறுவர் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தினால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.12 கோடியாக அமையும்.**

38. உழைத்து ஊதியம் பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றும் குடும்பத் தலைவர் / தலைவி இறக்க நேரிட்டால், குடும்ப இடருதவித் திட்டத்தின் கீழ், அக்குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக நாம் ரூ.5000 வழங்கிவருகிறோம். ஆண்டுதோறும் சுமார் 50,000 குடும்பங்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படுகிறது. இதுபோன்ற குடும்பங்களின் 'குழந்தை ஆதரவுத் திட்டம்' ஒன்றைப் புதிதாகச் செயல்படுத்த நாங்கள் முடிவெடுத்துள்ளோம். நிவாரணத் தொகையான ரூ.5,000 வழங்கப்பட்டவுடன், இதுபோன்ற குடும்பத்திலுள்ள ஒரு குழந்தைக்கு எட்டாம் வகுப்பு வரையாவது படிப்பதற்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். குடும்பத் தலைவர்/தலைவி இறக்கும்பட்சத்தில், வீட்டிலுள்ள குழந்தை கல்வியறிவு இல்லாமல் பாதிக்கப்படாமலிருக்க இத்திட்டம் உறுதி செய்யும்.

39. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கருவுற்ற பெண்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.75 வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ.300 உதவித் தொகையாக அரசு வழங்கிவருகிறது. இக்கால கட்டத்தில் இவர்களின் வருமான இழப்பை இது ஈடுசெய்த போதிலும், இவர்களுக்குத் தேவையான சத்துணவை வழங்க இந்த உதவித் தொகை போதுமானதாக இல்லை. எனவே, **இதுபோன்ற கருவுற்ற பெண்களுக்கு அருகிலுள்ள மதிய சத்துணவு மையத்தின் மூலம் சத்துணவு வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக ரூ.300 பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் நான்கு மாதங்களுக்கு, சத்துணவு மையத்தில் தினமும் ஒருமுறை சத்துணவு இலவசமாக வழங்க வழி செய்யப்படும். இத்திட்டம் கருவுற்ற பெண்களில் சுமார் 2 இலட்சம் பேருக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.**

40. நமது மாநிலத்தில் உள்ள நலிந்த ஏழை மக்களுக்குப் பயன் தரக்கூடிய பல புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவதைப் பேரவை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பர் என்று நான் நம்புகிறேன். இத்துடன், நலிந்த ஏழை மக்களுக்குப் பயனளிப்பதில் தமிழகம் தொடர்ந்து இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக அமையும்.

வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

41. இதுவரை, 1995-96 ஆம் ஆண்டில் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான கொள்கைப் பிரச்சனைகள் குறித்து எடுத்துக் கூறியுள்ளேன். இதில் அதிக நேரத்தைச் செலவிடாமலிருக்கவேண்டி, வெவ்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், பணிகள் என் உரையின் பகுதி -"B" ல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவை என்னால் படிக்கப்பட்டவையாகக் கருதப்படலாம். எனினும், உதவி தேவைப்படுகிற வெவ்வேறு தொகுதியினரின் பயனுக்காக, வெவ்வேறு துறைகளில் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இப்புதிய திட்டங்கள் சிலவற்றைச் சுருக்கமாக விவரிக்க நான் கருதியுள்ளேன். அவை வருமாறு:

* 1994-95இல் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்களைத் தாண்டிவிடும். உழவர்களுக்கு ஆதாயமுள்ள விலையை உறுதி செய்வதே மாநில வேளாண்மைக் கொள்கையின் நோக்கமாகும். **ரூ.94.56 கோடி செலவிலான வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம், 1995-96 இல் ரூ.10 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.** தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்திற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.73.43 கோடிக்கு உயர்த்தப்படும். **கூட்டுத் துறையிலும், இணைத் துறையிலும் உணவுப் பொருள் பதப்படுத்தும் பிரிவுகளை ரூ.1 கோடி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்று 1995-96இல் தொடங்கப்படும்.**

* பம்பை-அச்சன் கோவில்-வைகை இணைப்பை உடனடியாகச் செயல்படுத்த, நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். 40 இலட்சம் உழவர்கள் பயனடையும் ரூ.1140 கோடி செலவிலான நீர்வள ஆதாரங்கள் நிலைப்படுத்தும் திட்டம், ரூ.68.57 கோடி வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் 1995-96இல் செயல்படுத்தப்பட உள்ளது. **வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே புதிய நீர்த் தேக்கம் ஒன்று ரூ.16 கோடி செலவில் கட்டப்படும். மாநிலப் பாசனத் திட்டம் 1995-96இல் ரூ.10 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். வெள்ளத்தால் பாசன ஏற்பாட்டுக்கு ஏற்பட்ட**

★ அனைத்துத் தொழில்களும் வெளி மாநிலங்களுடன் போட்டியிட அரசு சலுகை.

★ மெழுகுவர்த்தி, ரப்பர் பந்து, அரிக்கேன் விளக்கு, மண்ணெண்ணெய் விளக்குகளுக்கு விற்பனை வரி ரத்து.

சேதத்தைப் பழுதுபார்க்கும் பணி ரூ.10 கோடி சிறப்பு நிதி ஒதுக்கத்துடன் 1995-96இல் மேற்கொள்ளப்படும்.

- அதிகாரப்பரவல் முறையில் மாவட்ட அளவில் வகுக்கப்படும் திட்டம் குறித்த ஒதுக்கீடு ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளைப் பராமரித்தல், சொத்துக்களை மேம்படுத்தல் ஆகியவை முற்றிலும் சீரமைக்கப்படும். மாநிலத்தில் உள்ள ஊராட்சிகள் அனைத்துக்கும் 1995 ஜூன் மாதத்திற்குள் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

- வெறிநாய்க்கடி மருந்து தயாரிப்பை மும்மடங்கு அதிகரிக்க, இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம் வலுப்படுத்தப்படும்.

- செயற்கைக் கட்டுமரங்களைப் பிரபலப்படுத்தும் புதிய திட்டம் ஒன்று ரூ.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

- புதிய வன வள ஆராய்ச்சிக் கல்வி- விரிவாக்க திட்டம் ரூ.7.54 கோடி செலவில் 1995-96இல் ரூ.1.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். காடுகள் அல்லாத பகுதிகளில் காடுவளர்க்கும் புதிய திட்டம் (Operation Greening) 1995-96இல் ரூ.50 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

- திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் செய்யாற்றில் 600 ஏக்கர் பரப்பில் ரூ.17.80 கோடி செலவில் புதிய தொழிற்பேட்டையை "சிப்காட்" நிறுவும். 1995-96இல் மொத்தம் ரூ.5805.93 கோடி திட்டச் செலவில் "டிட்கோ" 19 திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் ரூ.525 கோடி செலவிலான விரிவாக்கத் திட்டம் 1995 ஜூனுக்குள் முடிக்கப்படும். மகளிர் தொழில் முனைவோர்களுக்கென்றே 1995-96இல் சென்னைக்கு அருகே தொழிற்பேட்டை ஒன்றை "சிட்கோ" ஏற்படுத்தும்.

- மின்சக்தித் துறைக்கான திட்ட ஒதுக்கீடு 1994-95இல் ரூ.624.38 கோடி என்பதிலிருந்து 1995-96இல் ரூ.750 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டின் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. அனைத்திந்திய உற்பத்தித் திறனளவான 180 மெகாவாட்டில், தமிழ்நாட்டின் மொத்த நிறுவுதிறன் 132 மெகாவாட் ஆகும்.

- சாலைகள் குறித்த திட்ட ஒதுக்கீடு ரூ.153.16 கோடியாக உயர்த்தப்படும். இது, 1994-95 ஆம் ஆண்டை விட 19 சதவீதம் அதிகமாகும். ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு ரூ.10 கோடி செலவில் தார் சாலை போடும் புதிய திட்டமொன்று 1995-96 இல் மேற்கொள்ளப்படும். கடற்கரைச் சாலை மேம்பாட்டுப் புதிய திட்டமொன்று 1995-96இல் ரூ.6.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். மலைப்பகுதி சாலை மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டமொன்று 1995-96இல் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் 39 பாலங்களைப் புதுப்பிக்கும் பணி மொத்தம் ரூ.21 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். தொழிற்சாலைப் பகுதிகளிலுள்ள சாலைகளுக்கு மேம்பாடுகள் செய்யும் புதிய சிறப்புத் திட்டம் 1995-96இல் ரூ.2.50 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.

- நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்கள் மேம்பாட்டை விரைவுபடுத்த, தமிழ்நாடு கடல்வழிப் போக்குவரத்து வாரியம் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டங்கள் மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி, சென்னை துறைமுகங்களை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- நகராட்சிப் பகுதிகளின் அடிப்படை வசதிக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நகர்ப்பகுதி அடிப்படை வசதி நிதியுதவி நிறுவனம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.653.20 கோடி செலவில் மேற்கொள்ள புதிய திருப்பூர் பகுதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- 'எழில்மிகு சென்னை 2000' திட்டத்தின் கீழ்ப் பல்வேறு பிரிவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகரில் மொத்தம் ரூ.4,000 கோடி முதலீடு செய்ய இது வகை செய்கிறது.

- 1995-96இல் ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் ரூ.6.40 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

- குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு 1995-96இல் ரூ.419.97 கோடியாக உயர்த்தப்படும். புதிய வீராணம் திட்டம் உலகவங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.159.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) உதவியுடன் ரூ.57.2 கோடி செலவில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க, புதிதாக நிதி வழங்கும் ஏற்பாடு 1995-96 இல் ரூ.25 கோடி நிறுவன நிதி பெறும் வகையில் வகுக்கப்படும். இது வரை குடிநீர் வசதியைப் பெற்றிராத எஞ்சிய 1037 குடியிருப்புகள் அனைத்திற்கும் 1995 டிசம்பருக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். திருத்தியமைக்கப்பட்ட ரூ.894 கோடி செலவிலான தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் தூய்மைப்படுத்தும் திட்டம் நிதியுதவிக்காக உலகவங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மொத்தத்தில் 1183 ஆதி திராவிடர் குடியிருப்புகள் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், 1994-95 மற்றும், 1995-96 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ.22 கோடி ஒதுக்கீட்டுடன் எடுத்துக் கொள்ளப்படும். தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் குடிநீரில் புளோரைடு மிகுதியாகக் கலந்து விட்டதால் பாதிக்கப்பட்ட 458 குடியிருப்புகள் மொத்தம் ரூ.42.27 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். குடிநீரில் அதிக உவர்த்தன்மை காரணமாகப் பாதிக்கப்பட்ட 100 கடலோர மீனவக் குடியிருப்புகளுக்கு 1995-96இல் ரூ.6.40 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

- சுற்றுச் சூழல் துறை ஒன்று புதிதாக 1995-96இல் ஏற்படுத்தப்படும். தோல் தொழிலுக்கும் துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிலுக்கும் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும் தமிழ்நாடு தோல்பொருள் வளர்ச்சிக் கழகத்தாலும் நிறுவப்படும்.

- கல்வி குறித்த மொத்த ஒதுக்கீடு 1995-96இல் ரூ.2233.17 கோடியாக இருக்கும். மூன்றாண்டுக் கல்வி அடிப்படை வசதித் திட்டம் ஒன்று 1995-96இல் ரூ.160.24 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். ஏழாவது தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்படும். ரூ.125 கோடி செலவிலான போட்டி விளையாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

- 1995-96 இல் ரூ.1.75 கோடி ஒதுக்கீட்டில் 70 தொடக்கச் சுகாதார நிலையங்கள் புதிதாகக் கட்டப்படும். ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், மகளிர் நோயியல், சிறார் மருத்துவம், கண் நோயியல் ஆகிய துறைகளில் உரிய குறைந்த அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். 20 வட்ட மருத்துவமனைகளில் எக்ஸ் கதிர் இயந்திரங்களுக்கு வகை செய்யப்படும். மருந்துப் பொருட்கள், மருந்துகள் ஆகியவற்றுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.96 கோடியாகும்.

- 1995-96 ஆம் ஆண்டில், பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் 1.5 இலட்சம் மகளிர் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவியளிக்கப்படும். குழந்தை நலத் துணைத் திட்டம், 1995-96 ஆம் ஆண்டில் ரூ.768.62 கோடி ஒதுக்கீட்டைப் பெறும். உடலூனமுற்றோரின் நலனுக்காக விரிவான கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

- ஆதி திராவிடர் பெண் குழந்தைகளை ஆதரிக்கும் திட்டம், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு-அம்பேத்தார், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய மேலும் 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். 5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைகளை வழங்கும் திட்ட இலக்கு 1995-96ஆம் ஆண்டில் எய்தப்படும். இதற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.10.50 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டில் 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். ஆதி திராவிடர்களுக்கான மாணவரில்லக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஒதுக்கீடு ரூ.4 கோடியாக உயர்த்தப்படும். 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.105 கோடி செலவில் ஆதி திராவிடர்களுக்காக 50,000 காங்கிரீட் தள வீடுகள் கட்டப்படும். ஆதி திராவிடர்களுக்கான 30,000 வீடுகள் ரூ.15 கோடி செலவில் நிலையுயர்த்தும் புதிய திட்டம் 1995-96 இல் செயல்படுத்தப்படும்.

- 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.13.81 கோடி செலவில், 6577 வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஊரக ஏழைமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

துறைகளில் பயன்படுத்தப்பட உற்பத்தித் திறனைப் பெறுதல், திட்டங்கள் அவைத்தின் பயன்களும் இயன்றவரை தகுதியுள்ள, தேவைப்படும் ஏழை மக்களுக்கு மட்டுமே கிடைக்குமாறு செய்படுத்துதல், ஏழைமக்கள் அல்லாத பிறருக்கு அளிக்கப்படும் பல்வேறு பணிகளுக்கான செலவைப் போதுமான அளவிற்கு வசூலித்தல், 1995-96 முதல் பொதுத் துறை நிறுவனங்கள் அடைந்து வரும் இழப்புக்கு அளிக்கப்படும் நிதியுதவியை நிறுத்தி விடுதல், இறுதியாக சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றைத் தொடர்ந்து ஆர்வத்துடன் பின்பற்றுவோம். இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் 1995-96இலும் நாம் தொடர்ந்து மேற்கொள்வோம். என் முயற்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அவையின் ஒத்துழைப்பையும் நாடுகிறேன்.

வரிகள்

விற்பனை வரி

49. இந்த அரசு எந்த ஒரு பகுதியினரையும் பாதிக்காத வகையில் நல்ல முறைக்கு ஏற்ற வரி விதிப்புக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. வரி விதிப்புக் கொள்கையில் இருக்கும் இந்த நிரந்தரத் தன்மையை எல்லோரும் வரவேற்றுள்ளனர். 1993-94இல் விற்பனை வரி விதிப்பு முறையில் நாங்கள் கொண்டு வந்த முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இவை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளன. பல மாநிலங்கள் நம்மைப் பின்பற்றி உள்ளன. தொழில் மற்றும் வாணிகத் துறையினர் கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி ஆகியவற்றை அடிப்படை விற்பனை வரியுடன் இணைத்து எளிதாக்கப்பட்ட விற்பனை வரி முறையை உருவாக்க வேண்டும் என்றும், முதலீட்டுப் பொருட்களுக்கு சலுகை விகிதங்கள் விதிக்கப்பட வேண்டும் என்றும் கோரி வருகின்றனர். இக்கோரிக்கையும் கூட்டப்பட்ட மதிப்பின் மீதான வரி (Value Added Tax) செயல்முறைக்கு கொண்டு வருவது பற்றிய தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கை நிறுவனத்தின் (National Institute of Public Finance and Policy) ஆய்வில் அடங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் அறிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக 1994ம் ஆண்டு மே மாதம் 27ம் தேதி மத்திய நிதியமைச்சர் அனைத்து மாநில நிதியமைச்சர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தினார். அப்பொழுது வரி சீரமைப்பு குறித்து எல்லாப் பொருட்களையும் ஆய்வு செய்வதற்காக 10 மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. சரக்கு ஒப்படை வரி (Consignment Tax) பற்றியும் இந்தக் குழு ஆய்வு செய்யும் என முடிவு செய்யப்பட்டது. இக்குழு பல்வேறு கூட்டங்களை நடத்தியது. இதன் துணைக் குழுக்களும் இது சம்பந்தப்பட்ட பல பொருட்களைப் பற்றி ஆராய்ந்தன. கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி மீதான மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவற்றை அடிப்படை விற்பனை வரியுடன் சேர்ப்பது, மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான சலுகைகள் போன்ற சீரமைப்புகள் ஆகியவை, மத்திய அரசு மூன்று பொருட்களுக்கு, கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதன் விளைவாக மாநிலங்களுக்கு விற்பனை வரி விதிக்கும் உரிமை தடை செய்யப்பட்டதைத் திரும்ப பெறுதல், சரக்கு ஒப்படை வரி விதித்தல் போன்றவையுடன் இணைந்ததாகும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒருமித்த கருத்து உருவாக்கப்படவேண்டும். மற்ற மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் மற்றும் மத்திய அரசு ஆகியவற்றுடன் கூடிய விரைவில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு மாநில நிதியமைச்சர்கள் குழுவில் இதைப்பற்றி நாங்கள் விரிவாக நடவடிக்கை எடுப்போம்.

50. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் நிதிக் கொள்கையில் சில நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இறக்குமதித் தீர்வைகள் குறைவின் காரணமாகவும் பொருளாதாரச் சலுகைகள் காரணமாகவும் இந்தியத் தொழில் துறை மற்ற நாடுகளுடன் போட்டியிடுவதற்கு ஏற்ற வலிவு பெற வேண்டும். புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு மாநிலங்களிடையே போட்டி உருவாகி வருகின்றது. மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட செயல் திட்டம் ஒன்றை நாம் ஏற்கனவே தொடங்கியுள்ளோம். நன்றாகச் சீரமைக்கப்பட்ட வரி விதிப்புக் கொள்கை இதில் உள்ளடங்கும். தமிழ் நாட்டில் எளிமையான, முற்போக்கான வரி விதிப்பு முறையை அமைப்பதில் நாம் முனைந்துள்ளோம். தொழில் இடுபொருட்கள் மீதான விற்பனை வரி விகிதம் பல்வேறு மாநிலங்களிடையே உள்ள தொழிற்சாலைகளின் போட்டியிடும் திறனைப் பாதிக்கக்கூடிய ஒரு அம்சமாகும். அடுக்கடுக்காக அமையும் வரி விகிதத்தைக் குறைப்பது நமது குறிக்கோள். இந்த முயற்சியின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பொது விற்பனை வரி, சட்டத்தின் பிரிவு 3(3)இன் கீழ் வரும் இடுபொருட்கள் மீதான சலுகை விற்பனை வரியை பல பொருட்களுக்கு விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை 1993-94ல் எடுத்துள்ளோம். மீண்டும் 1994-95ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பிரிவு 3(3)இன் கீழான சலுகை விற்பனை வரி சில குறிப்பிடப்பட்ட கனிம எண்ணெய் மற்றும் வாயுக்கள் போன்றவற்றிற்கு விரிவு படுத்தப்படுமென கூறியிருந்தேன். வருவாய் இழப்பைக் கவனத்தில் கொண்டு, இந்தச் சலுகையைச் செயல்படுத்த இயலவில்லை. தற்போது தொழில் துறையில் பயன்படுத்தக்கூடிய இடுபொருட்கள் குறித்த விற்பனை வரி பற்றி முழுமையாக ஆய்வு செய்துள்ளோம். உருவாகி வரும் புதிய போட்டிச் சூழ்நிலையில் உற்பத்தி அல்லது தொழில் முறையில் பயன்படுத்தப்படும் அனைத்து இடுபொருட்கள் மீதான வரி குறைந்த பட்ச அளவில் இருக்க வேண்டும் என்ற கருத்தில் போதிய வலு உள்ளது. இவ்வாறான ஒரு கொள்கையை நாம் செயல்படுத்த முடிவு செய்துள்ளோம். இதன்படி தற்போது பிரிவு 3(3)இன் கீழ் சலுகை முறையிலான விற்னை வரிக்கு உட்படாத எல்லா கனிம எண்ணெய், மசகு (Lubricating) எண்ணெய், குவென்சிங்(Quenching) எண்ணெய், கிரீஸ்(Grease) மற்றும் வாயுக்கள் ஆகியவற்றிற்கும் 3 சதவிகித விற்பனை வரி விதிப்பதென முடிவு செய்துள்ளோம். இதனால், கனிம எண்ணெய் மற்றும் வாயுக்களை இடுப்பொருட்களாவும் அடிப்படை எரிபொருளாகவும் கொண்டுள்ள அனைத்து தொழில்களும் மற்றவையுடன் போட்டியிட ஏதுவாக இருக்குமென கருதுகிறோம். (பெரும்பாலான வாகனங்களுக்கு எரிபொருளாக பயன்படக்கூடிய டீசல் இந்தச் சலுகைக்கு உட்படாது. பெட்ரோல், விமான எரிபொருள், மது ஆகியவையும், இடுபொருள்கள் இல்லாததால், இந்தச் சலுகைக்கு உட்படாது). இந்தச் சலுகையினால் அரசுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ 80 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்தை முடுக்கி விடுவதற்காக இந்த முற்போக்குச் சீரமைப்பு வழி வகை செய்யும் எனக் கருதுவதால், இக்கொள்கையைச் செயல்படுத்த முனைந்துள்ளோம்.

51.சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீது 5 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுவதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ரூ 3 இலட்சம் வரை ஆண்டு விற்பனை உள்ள நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த வரிவிகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று பல முறையீடுகள் வந்துள்ளன. பெருவாரியான தொழிலாளர்கள் தங்களது உணவிற்காக தினந்தோறும் சிறிய உணவகங்களுக்குச் செல்கிறார்கள் என்றும், அங்கு விலைவாசியைக் கட்டுப்படுத்துவது அவர்களுக்கு பெரிதும் உதவும் என்றும் கருதப்படுகிறது. நட்சத்திர உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு மற்றும் பானங்கள் தவிர ஏனைய உணவகங்களுக்கு இந்த வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. இதனால் உணவகங்களை நடத்துபவர்கள் அங்கு விற்கப்படும் உணவுப்பொருட்களின் விலையைக் குறைப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். பாமர மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் இந்த முயற்சியை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ 20 கோடி வரி இழப்பு ஏற்படும்.

52. வரி விதிப்பு அடிப்படையை விரிவு படுத்துவதற்காக விற்பனை வரியில் இருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்களை ஆராய்ந்து, குறைந்தபட்ச வரி விதிப்பு விதிக்கப்படத்தக்கவை எனச் சில பொருட்களைச் சென்ற ஆண்டு நாம் வரி விதிப்பு முறைக்குக் கொண்டு வந்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். பிறகு பெறப்பட்ட பல முறையீடுகளின் அடிப்படையில் பின் வரும் பொருட்களுக்கு ஏற்கெனவே மீண்டும் விலக்கு அளித்துள்ளோம்:-

- தென்னங்கீற்றுத் தட்டிகள்
- விறகு
- பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட படிப்பதற்கான புத்தகங்கள்
- மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களும், கையெத்துப் பயிற்சிப் புத்தகங்களும்
- கோழித்தீவனம், முயல் தீவனம், குரங்குத் தீவனம், பன்றித் தீவனம்
- கோரைப்புல்
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புப் பொருட்கள்
- உலர்த்திய தேங்காய்
- துடைப்பம்
- எழுதும் பென்சில்கள் வண்ணப் பென்சில்கள், அழிப்பான்கள், கூர் சீவிகள்
- பேனாக்கள், உருள் குழை முனைப் பேனாக்கள், மைக்குச்சிகள் எபோனைட் பேனாக்கள், எபோனைட் உருள் குழை முனைப் பேனாக்கள், மை வில்லைகள்

★ குடும்பத் தலைவர் இறந்தால், ஒரு குழந்தையின் படிப்புக்கு 4 ஆண்டுக்கு மாதம் ரூ. 50 உதவி.

★ 1,300 மீனவர்களுக்கு ரூ. 13 கோடியே 12 இலட்சம் செலவில் படகு, வலை, செயற்கைக் கட்டுமரம்.

• கூட்டுறவு நூற்பாலை இணையம் ஒன்று, ரூ.25 கோடி தொடக்க மூலதனப்பங்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் ரூ.1.90 கோடி ஒதுக்கீட்டில் கைத்தறி நெசவாளர்களுக்காக 1000 தறிக்கூடம் இணைந்த வீடுகள் கட்டப்படும். 1995-96 ஆம் ஆண்டில் இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள 60 இலட்சம் மகளிர், மற்றும் 60 இலட்சம் ஆடவர் பயன் பெறுவர்.

• ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு ரூ.311.64 கோடியாக இருக்கும். இது 1994-95 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் 40 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது என்பதைக் காட்டும். பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ், 1995-96 ஆம் ஆண்டில் 10.20 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும்.

நிதி நிலைமை

42. 1995-96இல் இந்த அரசு பெரும் இலட்சிய வேட்கையுடன் வகுத்துக் கொண்டு எய்த விழைந்துள்ள திட்டங்களையும், திட்டப் பணிகளையும் கருத்தில் கொண்டு, வரவினங்களிலிருந்து செலவினங்களுக்கு நிதி ஒதுக்கும் மிகக் கடினமான பணியைப் பற்றி நான் கூற விழைகிறேன். இந்த அரசு பதவியேற்றபோது உள்ள கடுமையான நிதி நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். தமிழ்நாடு அரசு, தன்னுடைய திட்ட ஒதுக்கீட்டில் அதிகமான அளவுக்குக் குறைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது என்றும், தன்னுடைய பணியாளர்களின் சம்பளத்தைக் கூடக் கொடுக்க முடியாத அளவுக்கு அதற்கு இடர்ப்பாடு ஏற்பட்டது என்றும் அப்போது உணரப்பட்டது. தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மறைமுகமாகக் கடன் வாங்கும் ஒரு அவல நிலை பல மாநிலங்களில் நிலவியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நாம் இந்நிலை ஏற்பட இடம் கொடுக்கவில்லை. 1991-92 முதல் ஒவ்வோராண்டும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை விட நாம் அதிகமாகவே செலவிட்டுள்ளோம். 1994-95ஆம் ஆண்டிலும் நாம் அதே போலச் செயற்பட்டுச் சாதனை நிகழ்த்த முனைப்புக் காட்டியுள்ளோம். 1995-96ஆம் ஆண்டில் நாம் ரூ.3,200 கோடி திட்ட ஒதுக்கீட்டை இலக்காகக் கொண்டுள்ளோம். நமக்குப் பெரிதும் தேவைப்படும் நிதி நிவாரணத்தை அளிக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்த பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமது நம்பிக்கையை முற்றிலும் பொய்யாக்கி விட்டன என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். அவ்வாறிருந்தும், தமிழ் நாட்டை வளமையை நோக்கி இட்டுச் செல்லும் பணிக்கு நம்மையே நாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

43. 1994-95ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.7844.37 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் மொத்த செலவு ரூ.9083.53கோடியாகவும் இருந்தது. இறுதியில் இதன் விளைவாக ஏற்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை (-)ரூ.1239.16 கோடியாகும். நாம் மதிப்பீடு செய்தபடியான தொடக்கப் பற்றாக்குறைத் தொகை (-)ரூ.196.82 கோடியுடன், எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்று வரவுகளின் நிகர விளைவு (-)ரூ.201.23 கோடி, சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிகர மிச்சம் ரூ.95 கோடி, புதிய வரிகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிகர வருமானம் ரூ.48 கோடி ஆகிய அனைத்தையும் சேர்த்து, 1994-95ஆம் ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை ரூ.(-)255.05 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டைக் கைவிடாமல் நிலைமையைச் சமாளிக்க நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

44. 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.8135.44 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.9187.16 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.1051.72 கோடி எனவும் காட்டுகிறது. வருவாய்ப் பற்றாக்குறையை நாம் குறைத்துள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். 1993-94ஆம் ஆண்டின் இறுதி இருப்பான ரூ.69.79 கோடியுடன், எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்றுவரவுகளின் நிகர விளைவான (-)ரூ.93.89 கோடியுடன் சேர்த்து, 1994-95ஆம் ஆண்டின் முடிவில் இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.24.10 கோடி ஆக இருக்கும் என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிலைமையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் காண உறுதி செய்ததுடன், திட்ட ஒதுக்கீடு ரூ.2771.26 கோடிக்கு வகை செய்ய நாம் முயற்சி எடுத்துள்ளோம் என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

45. 1995-96ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள், வருவாய்க் கணக்கில் வரவு ரூ.8985.07 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.9910.62 கோடியாகவும். இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை (-)ரூ.925.55 கோடியாகவும் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைத்துக் கணக்குகளின் கீழ் வரும் பற்று வரவுகளின் நிகர விளைவு (-)ரூ.1.40 கோடி பற்றாக்குறையாக இருக்கும். 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.24.10 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 1995-96ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பற்றாக்குறை (-)ரூ.25.50 கோடியாக இருக்கும் என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

46. வருவாய்ப் பற்றாக்குறையைக் கணிசமான அளவு குறைக்க, நாம் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடலாம். மொத்தப் பற்றாக்குறை பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையை இவ்வாறு சீர் செய்ய நாம் எடுத்துள்ள திறமையான நிதி நிருவாகத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பாராட்டுவர். மொத்தப் பற்றாக்குறையையும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையையும் குறைத்துள்ளது பற்றி நாம் உரிமையோடு பெருமைப்படலாம். எனினும், கூடுதலாக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நமக்கு அவ்வளவாக வாய்ப்பு இல்லாததால், மொத்த நிதி நிலைமையைக் குறித்து நாம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

★ 74,100 ஏக்கர் நிலப்பரப்பில் காகிதக்கூழ் மரங்கள்.

★ குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டத்துக்கு ரூ. 770 கோடி ஒதுக்கீடு.

எனவே, செலவைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

செலவுக் கொள்கை

47. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், இவ்வரசு செயல்படுத்தவுள்ள செலவுக் கொள்கையின் அடிப்படை விதிகளைக் குறித்து ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருந்தேன். மற்றவர்கள் திறம்பட்ட வகையில் செயல்படுத்தக் கூடிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்த செலவை, அரசு மேற்கொள்வது உகந்ததாக இராது. அரசு சில முக்கியமான பணிகள் மீது, குறிப்பாக ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய செலவுக் கொள்கையை உருவாக்குவதில் இதனை முக்கியமான வழிகாட்டும் விதியாக நாம் வைத்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு, அரசின் செலவு குறித்த தேவைகளை மதிப்பீடு செய்வதில் மிகக் கடுமையாக இருந்துள்ளதுடன், மாநிலங்கள் தேவையற்ற நிதிப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது. எனவே, நம்முடைய செலவுக் கொள்கையை வகுப்பதில் நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியுள்ளது.

48. நான் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருந்த கொள்கையை, அதாவது விரைந்த வளர்ச்சிக்காகத் தொடக்க நிலையிலிருந்து வரவு-செலவுத் திட்டமிடும் முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம், அரசுத்

உள்ளிட்ட எழுதும் மை
- துருப்பிடிக்காத இரும்பு எழுது முனைகள்
- கரும்பலகைகள், துடைப்பான்கள், வடிவியல் பெட்டிகள், பகுத்தாய்வுப் பெட்டிகள், பகுத்தாய்வு பெறுவதற்கான அல்லது வரைவதற்கான பிற கருவிகள்
- தைக்கப்பட்ட கைத்தறி மற்றும் ஆலையில் தயாரிக்கப்பட்ட கைக்குட்டைகள்
- பனை வெல்லம்
- அடுப்புக் கரி
- 50 கிராம் எடைக்குட்பட்ட சிப்பம் கட்டப்பட்ட ஊறுகாய்கள்
- அனைத்து வகையான அப்பளங்களும், வடங்களும்

53. மேலும், பெறப்பட்ட பல்வேறு முறையீடுகளின் அடிப்படையில், பாமர மக்கள் மற்றும் சிறார்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கீழ்க் கண்ட பொருட்களின் மீதான விற்பனை வரியை விலக்கிக் கொள்வதென முடிவு செய்துள்ளோம்:-

- மெழுகு வர்த்திகள்
- இரப்பராலான விளையாட்டுப் பந்துகள்
- எண்ணெயில் எரியும் அரிக்கேன் விளக்குகள்.
- மண்ணெண்ணெய் விளக்குகள் (வாயு மற்றும் பெட்ரோமேக்ஸ் விளக்குகள் தவிர) அவற்றின் திரிகள், மற்றும் கண்ணாடி கூடுகள் (சிம்னி).
- அழுத்த விசையில்லாத மண்ணெண்ணெய் அடுப்புகள்.

54. கையினால் இயக்கப்படும் விவசாய சமன் படுத்தும் கருவி, களை எடுக்கும் கருவி, விலங்கினால் இழுக்கப்படும் சமன் செய்யும் கருவி ஆகியவற்றிற்கும் இனி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

55. அட்டையினால் தயார் செய்யப்படும் பெட்டிகள் மீது தற்போது ஏனைய பொருட்கள் என்னும் தலைப்பின் கீழ் 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. நெளிவுள்ள பெட்டிகள் மீது 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதற்கென அட்டவணை I இல் உள்ள விவரம் விரிவாக்கப்பட்டு அட்டைத் தாள்களால் செய்யப்பட்ட பெட்டிகளுக்கும் 5 சதவீத வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

56. மின்னணுத் துறை விரிவடைந்து வரும் ஒரு துறையாகும். மின்னணுப் பொருட்கள் மீதான வரி ஏற்கெனவே 3 சதவீதம் என்று குறைந்த அளவில் விதிக்கப்படுகிறது. இருப்பினும், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி மற்றும் மின்னணுச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான மின்விசை மாற்றமைவுகள் மற்றும் கொள்திறன் கருவிகள் (Capacitors) மீது கூடுதலான வரி விதிக்கப்படுவதாக மின்னணுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் முறையீடு செய்துள்ளனர். இவை அனைத்துக்கும் ஒரே வகையான வரி வீதம் விதிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர். இந்த வேண்டுகோளை அரசு கவனமாகப் பரிசீலித்துள்ளது. அதன் படி மின்னியல் விசை மற்றும் கட்டுப்பாடு மாற்றமைவுகள் (230 வோல்டிலிருந்து 100 வோல்ட்டுக்குக் கீழ் குறைப்பவை, மின் விசைத் திறன் 250 வோல்ட்- ஆம்பியருக்கு மிகாதவை), குறைத்தல்/மிகைப்படுத்தல் மின்னியல் விசை மாற்றமைவுகள் (230 வோல்டிலிருந்து 100 வோல்ட்டுக்குக் கீழ் குறைப்பவை), திருப்பம் செய்யும் மின்னியல் விசை மாற்றமைவுகள், தனிமைப்படுத்தும் மின்னியல் விசை மாற்றமைவுகள், சீர் செய்யும் மின்னியல் விசை மாற்றமைவுகள், ஃபெர்ரோ ரெசோனண்ட் (Ferro resonant) மின்னியல் விசை மாற்றமைவுகள், லைன் டிரைவர் மின்னியல் விசை மாற்றமைவுகள் (50 வோல்ட்-ஆம்பியருக்குக் குறைவானவை), ஃபிளைபேக் (Flyback) மின்னியல் விசை மாற்றமைவுகள்/லைன் அவுட்புட் (Line output) மின்னியல் விசை மாற்றமைவுகள், அதிக உயரழுத்த மின்னியல் விசை மாற்றமைவுகள், மூல வடிகட்டும் (Main filter) மின்னியல் விசை மாற்றமைவுகள், ஃபெர்ரைட் கோர் (Ferrite core) லைன் டிரைவர் மின்னியல் விசை மாற்றமைவுகள்,

★ நெசவாளர்களுக்குத் தறிக் கூடத்துடன் 1,000 வீடுகள்.

★ 1998-ஆம் ஆண்டில் அனை வருக்கும் கல்வி - புதிதாக 100 தொடக்கப் பள்ளிகள்.

டொராயிடல் கோர் (Toroidal core) மின்னியல் விசை மாற்றமைவுகள் மற்றும் ஆர்-கோர் (R-Core) மின்னியல் விசை மாற்றமைவுகள், சுவிட்ச் மோடு (Switch mode) மின் வழங்கும் மின்னியல் விசை மாற்றமைவுகள் போன்ற மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சிறிய மின் மாற்றமைவுகள் மீதான வரி வீதத்தை 12 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அட்டவணை I பகுதி D இனம் 38 A ல் குறிப்பிடப்படவுள்ளவை தவிர, பிற கொள்திறன் கருவிகள் (capacitors) மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்கப்படும். குறிப்பிடப்படவுள்ள அட்டவணை I பகுதி D இனம் 38 A ல் பவர் ஃபேக்டர் மற்றும் ஷண்ட் (Power factor and shunt) கொள்திறன் கருவிகள் (1 கே.வி.ஏ.ஆர். முதல் 100 கே.வி.ஏ.ஆர் - 415 வோல்ட் அல்லது 660 வோல்ட்) தொடர்ந்து குறிப்பாக 8 சதவீத வரி விதிப்பிற்கு உட்படும். அனைத்து மின்சாதன மின்னியல் விசை மாற்றமைவுகள் மின் அனுப்புதல மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் (33 கே.வி முதல் 232 கே.வி வரை), பகிர்ந்தளிப்பு மின்னியல் விசை மாற்றமைவுகள் (33 கே.வி.யிலிருந்து 3.3 கே.வி வரை), டிராக்சன் (Traction) மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் (110 கே.வி.), மிகைப்படுத்து மின்னியல் விசை மாற்றமைவுகள் (சற்றேறக்குறைய 25 கே.வி.), உலைக்கலன் மின்னியல் விசை மாற்றமைவுகள், ரெஸின் பாட்டெட் (Resin potted) மின்னியல் விசை மாற்றமைவுகள் (சற்றேறக் குறைய 11 கே.வி.) வெல்டிங் (Welding) மின்னியல் விசை மாற்றமைவுகள், உயர்படுத்தும் மின்னியல் விசை மாற்றமைவுகள் (230 V/ up, 5 to 50 KV and 415/5 to 50 KV) தானியங்கி மின்னியல் விசை மாற்றமைவுகள் (வேரியாக்), சாதன மின்னியல் விசை மாற்றமைவுகள் போன்ற மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் பொட்டென்ஷியல் (Potential) மின்னியல் விசை மாற்றமைவுகள் மற்றும் பாகங்கள், உப பொருட்கள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி தொடர்ந்து 12 சதவீதமாக இருக்கும்.

57. தற்போது பரிசுச் சீட்டின் விலையின் மீது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. பிற மாநிலங்களில் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பரிசுச் சீட்டின் மீதான விற்பனை வரி முறை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படை மதிப்பு மிகவும் குறைவாக இருப்பதனால், பிற பொருட்களிலிருந்து பரிசுச் சீட்டுகள் மாறுபட்டிருக்கின்றன. நீண்டகால அளவில் இவை வாங்கி விற்கக்கூடிய அல்லது கைப்பற்றக்கூடிய பொருட்கள் அல்ல. ஒரு குலுக்கலுக்குப் பிறகு பரிசு பெற்ற சீட்டைத் தவிர மற்றவை மதிப்பில்லாதவை. விற்கப்படாத சீட்டுகளால் ஏற்படும் பிரச்சினை குறித்தும் பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள் முறையீடு செய்துள்ளனர். இதனால் ஒட்டுமொத்த கம்பௌண்டிங் (compounding) முறையைச் செயல்படுத்தலாமெனக் கேட்டுக் கொண்டுள்ளனர். இவ்வகையான முறை இராஜஸ்தான் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையீடுகளைக் கருத்தில் கொண்டு, பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து கணிசமான வருவாய் கிட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒட்டுமொத்த கம்பௌண்டிங் (compounding) முறையைச் செயல்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, பங்கிட்டாளர் (distributor) உட்பட, அனைத்து பரிசுச் சீட்டு விற்பனையாளர்களும் வரிவிதிப்பு முறைக்குப் பதிலாக ஒட்டு மொத்தத் தொகை செலுத்த முன்வரலாம். அதற்கான தொகைகள் பின்வருமாறு இருக்கும்:-

குலுக்கல் முறை	ஒவ்வொரு குலுக்கலுக்கும் செலுத்த வேண்டிய தொகை.
வாராந்திரக் குலுக்கல்	ரூ. 6,000
மாதாந்திர உடனடிக் குலுக்கல்	ரூ. 15,000
மாதாந்திர பம்பர் குலுக்கல்	ரூ. 15,000
விழாக்கால பம்பர் குலுக்கல்	ரூ. 20,000

இந்த ஒட்டு மொத்தத் தொகை செலுத்தும் முறை விற்பனையாளரின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் அமையும். அதற்கு 30.6.1995க்குள் விற்பனையாளர்கள் தேர்வைத் தெரிவிக்க வேண்டும்.

★ கடலூர்த் துறைமுகத்தை மேம்படுத்த ரூ. 600 கோடி.

★ நாகப்பட்டினத்துக்குப் புதிய திட்டம்.

★ தூத்துக்குடித் துறைமுகத்தில் சேமிப்புக் கிடங்கு வசதி.

58. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட விற்பனை வரியானது இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்படும் வரியை விடக் குறைவானதாக இருக்குமாயின், அபராதத் தொகை விதிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது கடைசியாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதத்திற்குக் குறைவாக தொகை செலுத்தப்பட்டிருந்தால், குறைந்தபட்ச அபராதமாக 50 சதவீதம் விதிக்கப்படுகின்றது. வரி செலுத்தப்படுவதற்கும் கடைசி மதிப்பீட்டிற்கும் இடையே கணக்கிட்டு முறைகளினாலும் கணினி இயக்கத்தில் ஏற்படும் தவறுகளினாலும், குறைந்த அளவிலான வேறுபாடுகள் இருப்பது இயல்பு என வணிகர்கள் முறையிட்டுள்ளனர். இதற்கும் மிகக் கடுமையான 50 சதவீத அபராத தொகை விதிக்கப்படக்கூடாது எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். ஆகவே செலுத்தப்பட்ட வரி, இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட வரியை விட 5 சதவீதத்திற்கு குறைவாக இருப்பின், அபராதத் தொகை 25 சதவீதமாக இருக்குமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட வரித் தொகைக்கும் இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட வரித் தொகைக்கும் உள்ள குறைபாடு 5 சதவீதத்திற்கு மேல், ஆனால் 15 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்குமானால், தற்போதுள்ள 50 சதவீத அபராதத் தொகை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அபராதத் தொகை குறித்த மற்ற விகிதங்களில் மாற்றம் ஏதுமில்லை.

59. தற்போது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாங்கப்படும் பருப்பு வகைகள், எண்ணெய் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விற்பனை செய்யப்படும் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மாற்று உணவு மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளித்து தனிப்பட்ட அறிவிக்கை வெளியிடப்படும்.

60. அட்டவணை III Bல், தண்ணீரைப் பொறுத்த இனம் கீழ்க்கண்டவாறு தெளிவாகத் திருத்தி அமைக்கப்படும்: சுத்திகரிக்கப்பட்ட மற்றும் கனிம நீர் எவ்வித கொள்கலனில் விற்கப்பட்டாலும், வரி விலக்கு இடையாது என்ற நிலைமை தொடரும். சாதாரணத் தண்ணீர் புட்டிகளிலும், பிளாஸ்டிக் பைகளிலும் விற்கப்பட்டால், வரி விலக்கு கிடையாது என்ற நிலைமையும் தொடரும். மேலும், தண்ணீர் ஜாடிகளிலோ, ஜெரிக்கேன்களிலோ விற்கப்பட்டாலும் வரி விலக்குக் கிடையாது எனத் தெளிவுபடுத்தப்படும். ஆனால், மிகப் பெரிய பீப்பாய்களிலும், லாரி மற்றும் டிராக்டர் அல்லது விலங்குகள் மூலம் இழுக்கப்படும் டேங்கர்களில் விற்கப்படும் தண்ணீருக்கு தொடர்ந்து விலக்கு அளிக்கப்படும்.

61. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் இடை மாறுபாட்டுக் கால-விற்பனைகள் (In transit sales) குறித்த 40 நாள் காலக் கெடுவினைப் பற்றி வணிகர்களிடையே இரண்டுவித கருத்து நிலவுகிறது. இதைத் தெளிவுப் படுத்தும் வகையில், இந்தக் காலக் கெடு ஒட்டுமொத்தக் கெடுவாக, அதே பொருட்கள் அடுத்தடுத்து விற்பனை செய்யப்பட்டபோதும் 40 நாட்களுக்கு மிகாமல் அமையும் என அறிவிக்கை வெளியிடப்படும். இருப்பினும் 1-4-1995க்கு முற்பட்ட விற்பனைகளுக்கு இது அமல்படுத்தப்படமாட்டாது.

62. விற்பனை வரியில் செய்யப்படும் மேற்கூறிய மாற்றங்கள் 1995 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இதற்கான சட்டத் திருத்தங்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

கேளிக்கை வரி

63. மேல் நிலை விற்பனை வரி சீர்திருத்தக் குழு அளித்த பரிந்துரையை ஏற்று, கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது 40 சதவீத கேளிக்கை வரி விதிக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் 40 சதவீத வரி மிகக் கூடுதலான ஒன்று என்றும் இது கணிசமாக குறைக்கப்பட வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் முறையீடு செய்துள்ளார்கள். கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்களின் கோரிக்கையை முழுமையாக ஏற்காமல், அதே சமயத்தில் வரி செலுத்துவதற்கு இணங்குவதை மேம்படுத்தவும், தொடர்ச்சியாக வழக்குகள் தொடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், இந்த வரி வீதத்தை 1995 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து 20 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.8.50 கோடி வருவாய் வீழ்ச்சி அடையும்.

64. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் இதற்குத் தேவையான திருத்தங்கள் இந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

விவசாய வருமான வரி

65. தோட்டப் பயிர்த் தொழில் ஏற்றுமதி வாய்ப்புகளை உடைய ஒரு தொழிலாக கருதுகின்றோம். ஆகவே சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் தோட்டப்பயிர்த் தொழில்களுக்கென சில ஊக்குவிப்புகள் அறிவித்திருந்தேன். புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகத் தோட்டப் பயிர் வளர்ச்சி நிதித் திட்டம் ஒன்றை தொடங்க உள்ளோம். இந்தத் திட்டத்தின் கீழ், வேளாண்மை வருமான வரி செலுத்துபவர்கள் அவரது வரி விதிப்பிற்கு உட்பட்ட வருவாயில் 8 சதவீதத்திற்கு மிகாமல் புதிதாக நிறுவப்படவுள்ள தோட்டப்பயிர் வளர்ச்சி நிதியில் செலுத்துவராயின், அந்தத் தொகைக்கு ஈடான தொகை வருமான வரிக்கு உட்பட்ட வருவாயிலிருந்து குறைக்கப்படும். இந்தத் தொகை தேசிய விவசாய வளர்ச்சி வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி, அல்லது, தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஆகிய ஏதாவது ஒன்றில் தனிப்பட்டக் கணக்காகப் பராமரிக்கப்பட வேண்டும். ஓராண்டு காலத்திற்கு பிறகு இத் தொகையின் மீதான வட்டியுடன் தமிழ்நாட்டில் தோட்டப் பயிரில் முதலீடு செய்வதற்காகச் சில குறிப்பிட்ட செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். மீண்டும் தோட்டப்பயிர்களை நடுவது, தோட்டப்பயிர்ப் பகுதியை விரிவு செய்வது, சாலைகள் பாலங்கள் போன்றவற்றைப் புதிதாக கட்டுவது மற்றும் விரிவாக்குவது, தொழிற்சாலைகள், இடங்குகள் கட்டுதல், தொழிற்சாலைகளுக்கான கருவிகள் வாங்குதல் போன்ற செலவினங்களுக்கு இந்தத் தொகை பயன்படுத்தப்படலாம்.

66. கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள், பொதுத்துறை நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மீது செலவிடப்படும் வட்டித் தொகையை முழுமையாக வரவிலிருந்து குறைக்க அனுமதிக்கப்பட்டது. தற்போது இந்நிபந்தனை மேலும் தளர்த்தப்பட்டு, உறவினர்களைத் தவிர மற்ற ஆதாரங்களிலிருந்து பெறப்படும் வழிவகை முன்பணங்களுக்கும் இச்சலுகை வழங்கப்படும். ஆனால், 15 சதவீதத்திற்குட்பட்ட வட்டி மட்டுமே சலுகை பெறும்.

★ 1995- 96-ஆம் ஆண்டில் ரூ.10 கோடி செலவில் மாநில ஏரிப்பாசனத் திட்டம் தொடங்கப் படும்.

★ கால்நடை மேம்பாட்டுக்கு மொத்தம் ரூ.10.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

67. சட்டத்தின் பிரிவு 5 (e) ன் கீழ் அறப்பயன்களுக்கு வழங்கப்படும் தொகைகளும் நன்கொடைகளும் குறித்து, தொகையைக் கழித்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. இத்தகைய தொகைகளுக்கான தற்போதைய உச்சவரம்பு ரூ.10,000 ஆகவுள்ளது. இது இனி, ரூ.25,000 என உயர்த்தப்படுகிறது. இதே போன்று, இவ்வகையில், முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகள் தொடர்பாகக் கழித்துக் கொள்ளப்படும் தொகைகளுக்குரிய உச்சவரம்பு ரூ.50,000 என்று உயர்த்தப்படுகின்றது.

68. விவசாய வருமான வரிச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் இதற்கான திருத்தங்கள் இந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும். இந்தத் திருத்தங்கள் 1995-96 வரி விதிப்பு ஆண்டிலிருந்து செயல்பாட்டிற்கு வரும்.

முடிவுரை

69. 1995-96ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை (-)ரூ25.50 கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருந்தேன். கூடுதல் வரிவிதிப்பிற்கு எவ்விதச் செயற்குறிப்புகளையும் நான் முன்வைக்கவில்லை என்பதையும், ஆனால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ஏழை, எளிய மக்களின் நலனைப் பேணிக்காக்கவும் பல சலுகைகளை நான் அளித்துள்ளேன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம். இச்சலுகைகளின் காரணமாக ரூ.110 கோடி வருவாய் இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள செலவைக் கட்டுப்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், வரிகளையும், வரிகளல்லாத ஏனைய வருவாயையும் வசூலிப்பதன் மூலமும் எதிர்பார்க்கப்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யலாமென்று நான் நம்புகிறேன். பொது விநியோக முறையில் அரிசியின் அனைத்து ரகங்களுக்கும் 1.4.1995 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.1 குறைக்க எடுத்த முடிவின் விளைவாக, கூடுதல் சுமை ரூ.150 கோடி ஆகும். இத்தொகையையும் சேர்த்து, நிகர இறுதிப் பற்றாக்குறை ரூ.175.50 கோடியாக இருக்கும். ஏறத்தாழ

நான்காண்டுகளுக்கு முன் நாங்கள் பதவி ஏற்றபோது இருந்ததைவிட. ஒரு நல்ல நிதிநிலைமையை இது பிரதிபலிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம்.

70. வருவாய்க்கணக்கில் பற்றாக்குறை. அதிகரித்து வரும் போக்கை நாங்கள் மாற்றியபோதிலும். பயனுள்ள நிதி நிவாரணத்தை அளிப்பதற்குப் பத்தாம் நிதிக்குழு தவறிவிட்டதால். செலவைக் கட்டுப்படுத்த நாம் தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டியது அவசியமாகிறது. மாநிலங்கள் தங்கள் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள அவை நீண்ட காலமாகக் கேட்டு வந்த கோரிக்கை எதனையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கூட்டு நிறுவன வரியில் ஒரு பங்கை அளிக்க வேண்டுமென்பது ஒரு நீண்டகாலக் கோரிக்கையாகும். இது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மறைந்த மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பதவியில் இருந்தபோது செயல்படுத்தப்படும் நிலைக்குவந்த சரக்கு ஒப்படை வரி கிட்டத்தட்ட கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இது நிதியாதாரங்களை மத்திய. மாநில அரசுகளிடையே நியாயமாகப் பகிர்ந்து கொள்வது பற்றிய நல்ல அறிகுறியாக அமையவில்லை. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் இந்த நிலைமையைச் சீரடையச் செய்யவேயில்லை.

71. பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு விருப்பின்பாற்பட்டு வழங்கும் நிதியுதவியைப் பெறுவதற்குப் பதிலாக. அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த நிதி ஆதாரப்பங்கினைச் சீரடையச் செய்வதே சிறந்த நடைமுறையாகுமென்று நாம் தொடர்ந்து கூறிவந்துள்ளோம். இது மாநில அரசுகளை அவற்றின் பொறுப்புகளுக்கு ஏற்ப. தற்சார்புடையனவாகச் செய்யும். இத்துறையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. பத்தாம் நிதிக்குழு. இந்நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்குக் கிடைத்த பெரிய வாய்ப்பினை இழந்துவிட்டது. பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ப. மத்திய. மாநில அரசுகளுக்கு இடையே நிதி ஆதாரங்களைப் பங்கிடு செய்வது குறித்துப் பொருளார்ந்த முறையில் விவாதிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

72. ஒரு மாநில அரசு வெளி நாட்டு வணிகக் கடனைப் பயன்படுத்தி இன்றியமையாத அடிப்படை வசதிகளை அமைப்பதற்குப் புதிய திட்டங்களைத் தொடங்க விரும்பினாலும். அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஏனெனில். அதற்குரிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் உள்ளன. அத்தகைய கடன்களைப் பெறுவதற்கு நிறுவனங்களே அனுமதிக்கப்படுகிறபோது. இன்றியமையாத திட்டங்களுக்கென்று அவ்வாறு கடன் பெற்றுக் கொள்ள மாநில அரசுகளுக்கு ஒரு ஒதுக்கீட்டளவை மத்திய அரசு ஏன் அனுமதிக்கக் கூடாது என்பது தெரியவில்லை. மத்திய அரசு இதுபற்றிப் பரிசிலித்து அத்தகைய முதலீடுகளை ஈர்க்கக் கூடிய. மாநிலங்களுக்கு வெளிநாட்டு வணிகக் கடனிலிருந்து ஒரு பங்கினை ஒதுக்க. வேண்டுமென்று நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

73. மாநில மக்களின் நலனைப் பேணிக்காக்கப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அ.இ.அ.தி.மு. கழகத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் 1991 ஜூன் திங்களில் மிகப் பெருமளவில் வாக்களித்து வெற்றிபெறச் செய்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எப்போதும் மாநில மக்களுக்குத் துணை நிற்கத் தயங்கியதில்லை. வெளிநாட்டுப் போராளிகள். தீவிரவாதிகளால் ஏற்பட்ட கடுமையான அச்சுறுத்தல்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டன. மாநிலம் முழுவதும் அமைதியும் நல்லிணக்கமும் நிலவுகிறது. இந்திய மாநிலங்களிடையே. நிலைத் தன்மையும். ஒழுங்கமைதியும் வளர்ச்சிக்கும் வளமைக்கும் வழி வகுத்துள்ளதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழகம் ஒளி வீசித் திகழ்கிறது. ஏழை. எளிய மக்களின் நலனே. நமது வளர்ச்சித் திட்டத்திற்கும் பணிகளுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் நபர் வாரி திட்ட ஒதுக்கீடு மீண்டும் தேசிய சராசரியை விட உயர்ந்துள்ளது. தமிழ்நாடு விரைவாக வளர்ந்துவரும் மாநிலங்களில் ஒன்றாகும் என்பது தெளிவு. இது ஒரு வியத்தகு சாதனையாகும். இதற்காக நாம் பெருமைப்பட உரிமையுண்டு.

74. இந்த அரசு பல பிரச்சினைக்குரிய நிலைமைகளை எதிர் நோக்கியிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள். ஒவ்வொரு மட்டத்திலும் மாநிலத்தின் உரிமைகளைக் காக்க அயர்வின்றிப் பாடுபட்டார். அவருடைய தொலைநோக்கு. உறுதியான நடவடிக்கை. திட்பமான. தெளிவான வழிகாட்டல் ஆகியவை தமிழ்நாடு வளமிக்க வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட வழி வகுத்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். ஆதி திராவிடர். பழங்குடியினர். சீர்மரபினர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பிலும். கல்வியிலும் இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்காக. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட சமூகநீதி காக்கும் குறிப்பான பயன் நோக்கில் அமைந்த கொள்கை. அவர்களுடைய உறுதியான நடவடிக்கைகள் மூலம் பெரிதும் வலுப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் பெருமளவில் பாராட்டைப்பெற்றுள்ளது. இதனை மற்றவர்களும் பின்பற்றி வருகின்றனர். மாநிலப் பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சி பெறும் பொருட்டு. இந்த வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு ஒரு புதிய நாட்டம் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில். ஏழை எளிய மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பயன்தரும் பல திட்டங்களும் பணிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ரூ.3250.58 கோடி திட்ட ஒதுக்கீடு மிகப் பெரிய இலட்சிய வேட்கையுடன் அமைந்ததாகும். ஆனால். மக்களுக்கு நாம் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற நாம் இதனையும் தாண்டிவிடுவோம்.

75. இந்த நிதிநிலை அறிக்கை தொடர்பாக. நீதி. உண்மை. நேர்மை ஆகிய வலுவான கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த. ஆக்கப்பூர்வமான கருத்துக்களை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களிடமிருந்து நான் வரவேற்கிறேன். மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் விருப்பு வெறுப்புக்களையும் காழ்ப்புணர்ச்சிகளையும் தவிர்த்து. மக்களுக்குச் சீரிய முறையில் பணிபுரிய எங்களுக்கு உதவும் வகையிலான சீரிய பயனுள்ள கருத்துரைகளை வழங்கியுதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

76. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாகவும். செம்மையாகவும் உருவாக்கப் பெருந்துணையாக இருந்து பேருதவி புரிந்த நிதித் துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன். இ.ஆ.ப. அவர்களுக்கும். நிதித் துறையைச் சார்ந்த ஏனைய அலுவலாளர்களுக்கும். பிற அரசுத் துறைகளைச் சார்ந்த செயலாளர்கள். அலுவலாளர். ஆகியோர்க்கும் என் பாராட்டுதல்களையும் உளங்கனிந்த நன்றியும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

77. 1995-96 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர்

சென்னை
1995 ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 22 ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு-2026.
பங்குனித் திங்கள் 8 ஆம் நாள்.

வியத்தகு சாதனை !

இந்திய மாநிலங்களிடையே நிலைத் தன்மையும், ஒழுங்கமைதியும் வளர்ச்சிக்கும் வளமைக்கும் வழி வகுத்துள்ளதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழகம் ஒளி வீசித் திகழ்கிறது.

ஏழை எளிய மக்களின் நலனே, நமது வளர்ச்சித் திட்டத்திற்கும் பணிகளுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் நபர் வாரித்திட்ட ஒதுக்கீடு மீண்டும் தேசிய சராசரியைவிட உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு விரைவாக வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகும் என்பது தெளிவு. இது ஒரு வியத்தகு சாதனையாகும். இதற்காக நாம் பெருமைப்பட உரிமையுண்டு.

— நிதிநிலை அறிக்கையில்,
மாண்புமிகு நிதியமைச்சர்

நிதி நிலை அறிக்கையின் (1995-96) 'பகுதி-ஆ' அடுத்த இதழில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் தமிழகம்!

புதுக்கோட்டை விளையாட்டரங்கத்தில், புதுக்கோட்டை மற்றும் மணப்பாறை குடிநீர்த் திட்டங்கள், அரசு திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

7.2.1994 அன்று, இதே புதுக்கோட்டை நகருக்கு வருகை தந்து, இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக நான், 248 கோடி ரூபாய் மதிப்பில், வளர்ச்சிப் பணிகளை அர்ப்பணித்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கியது, இன்னும் எனது மனதில் பசுமையாக உள்ளது. உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு, நீங்கள் அன்று எந்த உணர்வுடன், கோலாகலமான ஒரு வரவேற்பினை அளித்தீர்களோ, அதே உணர்வு சற்றும் குன்றாமல், இன்றும் அத்தகைய வரவேற்பினை அளித்த உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியும், தமிழக மக்களின் நல்வாழ்க்கையும் தான், எங்கள் இலட்சியங்கள், அந்த இலட்சியங்களை, அடைய நாங்கள் தொலைநோக்குப் பார்வையுடன், செயல்பட்டு வருகிறோம் என்பதைச் சென்ற முறை நான் உங்களைச் சந்தித்து, பேசும்போது குறிப்பிட்டேன். அந்தத் தொலைநோக்குப் பார்வையின், உச்சகட்ட வெளிப்பாடு தான், 3 தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட, தமிழக அரசின், மக்கள் நலன் காக்கும் Budget என்றால், அது மிகையாகாது.

வளர்ச்சிப் பணிகள் முடுக்கி விட்டு தொழில் துறையிலும், மின் உற்பத்தித் துறையிலும் ஒரு மாபெரும் புரட்சியை, ஏற்படுத்தி வரும் அதே நேரத்தில் சமூக நலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், முனைப்புடன் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. அகில இந்திய அளவில், மற்ற மாநிலங்களுக்கு, சமூகத் துறையிலும், திட்டப் பணிகள் செயலாக்கத்திலும், ஒரு முன்னோடியாக, வழிகாட்டியாக, இன்று தமிழகம் விளங்குகிறது. சமூகத் திட்டங்களில், அதாவது Social Sector-களில், அதிகமான நிதி ஒதுக்கீடு செய்கிறீர்களே என்று, எங்களைக் குறை கூறியவர்களும் உண்டு. எங்களைக் கண்டித்தவர்களும் உண்டு. ஆனால், நமது திட்டங்களால் ஏற்பட்ட பயன்களை உணர்ந்து, இன்று மத்திய அரசே, இந்தச் சமூக நலத் திட்டங்களை, இந்த ஆண்டு, மத்திய வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளது. நமது தொலைநோக்குப் பார்வைக்கும், முன்னோடித் தன்மைக்கும் கிடைத்த, மாபெரும் பாராட்டு ஆகும்.

மத்திய அரசு, Dunkel ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது, அதில் உள்ள நல்ல கருத்துக்களை வரவேற்றோம். ஆனால், ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் வண்ணம் மானியங்கள் தொடர்வதற்குத் தடை விதிக்கப்பட்டதைக் கடுமையாக எதிர்த்தோம். நாங்கள் அரசியல் ஆதாரம் தேடுபவர்கள் அல்ல! மக்கள் நலன் காப்பதற்கு, அச்சமின்றிச் செயல்படுபவர்கள்.

உங்கள் அன்புச் சகோதரி ஆகிய என்னிடம், என்றைக்குத் தமிழக மக்கள், மிகுந்த நம்பிக்கையுடன் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்களோ அன்றிலிருந்து, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் அரிசியின் விலையை, எந்தக் காரணத்தைக் கொண்டும், உயர்த்தக் கூடாது என்பதில், தீவிரமாக இருந்தேன். அரிசி விலையை உயர்த்தக் கூடாது என்று, மத்திய அரசையும் வலியுறுத்தினேன். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் குறிப்பிட்டேன். தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், அகில இந்திய அளவில், அனைத்து மக்களும், மானிய விலையில் அரிசியைப் பெறுகிற, ஒரு சூழ்நிலை உண்டாக வேண்டும் என்பதே, எனது அவா. எனவே தான், மத்திய அரசு, அரிசியின் விலையைத் தொடர்ந்து உயர்த்தினாலும், நாங்கள் அந்த அளவிற்கு, அரிசி விலையை என்றைக்கும் உயர்த்தவில்லை.

நிதி நெருக்கடி எவ்வளவு வந்தாலும், எப்படியாவது அரிசி விலையைக் குறைத்து, ஏழை எளிய மக்களின் மனங்களைக், குளிர வைக்க வேண்டும் என்ற உறுதி, என் மனதில் ஒரு வைராக்கியமாக உருவெடுத்தது. அந்த வைராக்கியத்தைச் செயல்படுத்தத் துணிந்து, இன்று தமிழகத்தில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அரிசி விலையை, 1.4.1995 முதல், கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம், குறைத்திருக்கிறோம்.

குறைந்த விலையில் அரிசி வழங்குவதால், நாங்கள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு வரும் மானியத்தொகை, 450 கோடி ரூபாய் ஆகும். அரிசி விலை, மேலும் ஒரு ரூபாய் குறைத்ததால், ஏற்படும் கூடுதல் மானியத் தொகை மட்டும், 150 கோடி ரூபாய். ஆக மொத்தம், ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாயாக, எங்கள் நிதிச் சுமை அதிகரித்துள்ளது. எங்கள் நிதிப் பளு அதிகமானாலும், சாதாரண ரக அரிசியை, ஒரு கிலோ இரண்டரை ரூபாய்க்கு, மக்களுக்குக் கிடைக்கச் செய்வதால், ஏற்படுகின்ற ஆனந்தத்தையும் மனநிறைவையும் எண்ணி, என் மனம் பூரிப்பு அடைகின்றது.

தேர்தலை மனதில் வைத்து, போடப்பட்ட பட்ஜெட் என்று, சிலர் கூறுகிறார்கள். அது தவறு, இது மக்களின் நலனை மனதிலே வைத்து போடப்பட்ட பட்ஜெட், ஏழை எளிய மக்கள், நலிவுற்ற பாட்டாளி மக்கள், முதியோர்கள், விதவைகள், ஊனமுற்றோர், ஆகியோருடைய வாழ்வில், வளம் பெருக வேண்டும் என்ற எண்ணத்தோடு போடப்பட்ட பட்ஜெட். உழவும் தொழிலும் தமிழ்நாட்டில், செழித்துப் பெருக வேண்டும், என்ற நோக்கத்தோடு போடப்பட்ட பட்ஜெட். அது மட்டுமல்லாமல், மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட, மக்கள் நலனைப் பற்றி, எவ்விதக் கவலையும் படாத, அரசியல்வாதிகளின் வயிற்றிலே, புளியைக் கரைக்கின்ற பட்ஜெட். அதுதான் அப்பட்டமான உண்மை.

ஒரு காலக் கட்டத்தில், தமிழ்நாடு இழந்துவிட்ட அமைதியையும், மறைந்துவிட்ட செழிப்பையும், மீண்டும் பெற்றுத் தருவதற்காக, நாங்கள் எதிர்கொண்ட இன்னல்களும், இடர்ப்பாடுகளும், எத்தனை எத்தனை? தமிழகத்தை இன்று பல்வேறு துறைகளில், வளர்ச்சிப் பாதையில் கொண்டு வந்துள்ளோம். ஆனால், நாம் கண்ட முன்னேற்றமே, நமக்குப் பாதகமாக அமைகிற விந்தையை, இன்று நாம் பார்க்கிறோம். எங்களது விரல்களை வைத்தே, எங்கள் கண்களைக் குத்த வைக்கிற விநோதத்தை, இன்று பார்க்கிறோம். மத்திய அரசின் பத்தாவது நிதிக் கமிஷன், தமிழ்நாட்டிற்கு வருமானத்தைப் பங்கு போட்டுக் கொடுப்பதில், காட்டியிருக்கும் பாரபட்சம், இதை நிரூபித்துள்ளது.

தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம், இன்று தேசிய சராசரியைவிட அதிகரித்துள்ளது,

நான்காம் ஆட்டை சொல்லும் செய்தி:

ஒரு சாதனை தான்! இந்த சாதனைக்காக, பத்தாவது நிதிக் கமிஷன், நமக்குக் கொடுத்த பரிசு, என்ன தெரியுமா? வருமான வரி மற்றும் ஆயத்தீர்வை, அதாவது Income Tax மற்றும் Excise Duty, ஆகியவற்றிலிருந்து, தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய பங்கை, கணிசமாகக் குறைத்துள்ளது! ஆக, தேசிய சராசரியைவிட, தனி நபர் வருமானம் அதிகமாக இருப்பதால், தமிழ் நாட்டிற்குத் தண்டனை தரப்பட்டதாகத்தானே பொருள்?

தேசிய நலனைக் கருதி, மக்கள் தொகையைக் குறைக்கத் தமிழ் நாடு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை, நன்முறையில் செயல்படுத்தியதால், இன்று மக்கள் தொகை குறைந்துள்ளது. மக்களை தொகை அடிப்படையில், மானிய உதவியை வழங்கினால், தமிழ் நாட்டுக்குக் கிடைக்கின்ற நிதி உதவி, குறையும் அல்லவா? மக்கள் தொகையைக் குறைத்த மாநிலங்களுக்குத் தண்டனையாக அல்லவா, இது அமைந்துவிட்டது?

இதுபோன்று, எத்தனைப் பிரச்சினைகள் வந்தாலும், புதிய வரிகளை விதிக்காமல், கூடுதலாக சமூக நலத் திட்டங்களை, எங்களால் செயல்படுத்த முடியும் என்பதைத்தான், இந்தப் பட்ஜெட் காட்டுகிறது.

நாங்கள் பதவி ஏற்றபோது, முதியோர்கள், விதவைகள், நலிவுற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஊனமுற்றோர், ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த, மாதாந்திர ஓய்வூதியத்தை, 50 ரூபாயிலிருந்து, 75 ரூபாயாக, உயர்த்தி வழங்கினோம். வரும் நிதி ஆண்டிலிருந்து, இந்த ஓய்வூதியத் தொகை, 75 ரூபாயிலிருந்து, 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதியோர் உதவித் தொகையை, இரண்டு மடங்காக்கி உள்ளோம்.

65 வயதைக் கடந்த, குறு விவசாயிகளுக்கு, மாதம் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கும், புரட்சிகரமான திட்டத்தையும், இந்த ஆண்டு Budgetஇல் அறிவித்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குழந்தைகள் நலத் திட்டம், Child Welfare Scheme என்ற திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத் தலைவர், அல்லது குடும்பத் தலைவி இறந்து விட்டால், அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகளின் கல்வி, பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு, 50 ரூபாய் வீதம், 4 ஆண்டுகளுக்கு, உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தையும், இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த உள்ளோம்.

1995-96-ஆம் ஆண்டில், 105 கோடி ரூபாய் செலவில், 50,000 கான்கிரீட் தள வீடுகள், ஆதி திராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டி வழ்ங்கப்படும். மேலும் 30,000 ஆதிதிராவிடப் பெருமக்களின் வீடுகள், 15 கோடி ரூபாய் செலவில், மேம்படுத்தப்படும். வரும் நிதியாண்டிற்குள், எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள், அதாவது, Colour Television Set-கள் வழங்கவும், திட்டமிட்டுள்ளோம்.

தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள, குக்கிராமங்கள் வரை, எல்லா இடங்களுக்கும், நல்ல குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், நாங்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறோம். அந்த வகையில், 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, புதுக்கோட்டை குடிநீர்த் திட்டத்தையும் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, திருச்சி மாவட்டம் மணப்பாறை குடிநீர்த் திட்டத்தையும் இன்று தொடங்கிவைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவிரி ஆற்றின் கரையில், கிணறு ஒன்றை அமைத்து, 90 கிலோமீட்டர் தூரம் குழாய் வழியாக, காவிரி நீர், புதுக்கோட்டை நகருக்குக் கொண்டு வரப்படுகிறது. மணப்பாறை குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரை, குளித்தலை அருகில், காவிரி ஆற்றுக்கு அருகில், கிணறு ஒன்றை அமைத்து, 49 கிலோ மீட்டர் தூரம் குழாய் வழியாக, காவிரி நீர், மணப்பாறைக்குக் கொண்டு வரப்படுகிறது.

ஒரு காலத்தில் காவிரி நீர், புதுக்கோட்டை மக்களுக்கு, கானல் நீராகத் தான் தெரிந்தது. இன்று எங்களது ஆட்சியில், காவிரி நீரைப் புதுக்கோட்டைக்குக் கொண்டுவந்து, குடி நீராகக் கொடுத்துள்ளோம். நாங்கள் பொறுப்பேற்றப் பிறகு, மேற்கொண்ட குடிநீர்த் திட்டங்களை,

முறையாகச் செயல்படுத்தி, வெற்றிகண்டு வருகிறோம் என்பதற்கு, இந்த இரண்டு குடிநீர்த் திட்டங்களே சாட்சி.

புதுக்கோட்டை நகராட்சி, இலுப்பூர், கீரனூர், அன்னவாசல். நகராட்சிகளிலும், மற்றும் 15 வழியோரக் கிராமக் குடியிருப்புகளிலும், வாழும் இரண்டரை இலட்சம் மக்கள், புதுக்கோட்டைக் குடிநீர்த் திட்டத்தினால், பயன் பெறுவார்கள். திருச்சி மாவட்டம், மணப்பாறை நகராட்சி, மற்றும் 51 குடியிருப்புகளில் வாழும், ஒன்றே கால் இலட்சம் மக்கள், மணப்பாறை குடிநீர்த் திட்டத்தினால் பயன் பெறுவார்கள்.

1985-ஆம் ஆண்டில், மதுரை, கோவை, சேலம் ஆகிய மாநகரங்களுக்குக் குடிநீர் வழங்க் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவை திட்டமிட்டபடி நடந்திருந்தால், 1990-ஆம் ஆண்டே, நிறைவு அடைந்திருக்க வேண்டும்.

ஆனால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, இவற்றில் எந்தவொரு திட்டமும், முடிக்கப் படவில்லை. ஏன், எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. 60 இலட்சம் மக்கள், பயன்பெறும் குடிநீர்த் திட்டங்கள், உறங்கிக் கிடந்தன. உறங்கிக் கிடந்த திட்டங்களை, உருப்படியாக்கிச் செயல்பட வைத்தது, எங்கள் அரசு தான்.

இந்த அரசின் மாபெரும் சாதனை இது என்பதை, எங்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் கூட, மறுக்க முடியாது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, இன்றுவரை, கிராமக் குடிநீர்த் திட்டங்களின் கீழ், 313 கோடி ரூபாய் செலவில், 14,692 கிராமக் குடியிருப்புகளில் வாழும், ஒரு கோடி மக்கள் பயன் பெறும் வண்ணம், பல திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம். இவற்றில், 7,174 குடியிருப்புக்கள், ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடிப் [illegible]

புறக் குடியிருப்புக்கள் ஆகும். எனது அன்பிற்குரிய. ஆதிதிராவிடச் சகோதரிகளும், தாய்மார்களும், ஒரு குடம் குடிநீருக்காக, நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலைமையை, என்றைக்கு நான் கண்டேனோ அன்றைக்கே இத்தகைய சூழ்நிலையைத் தமிழகத்தில் மாற்றி அமைக்க வேண்டும், என்று உறுதி பூண்டேன். அந்த மன உறுதியின் வெளிப்பாடாகத் தான், இன்று 7,174 ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்கு, நாங்கள் குடிநீர் வசதியைச் செய்து கொடுத்துள்ளோம்.

இந்த விழாவில், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, மேலும் 48 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்ததிலும் புதியத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கு வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள், புதுக் கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். புதுக் கோட்டை நகர எல்லைக்கு வெளியே அமைந்துள்ள தஞ்சாவூர்ச் சாலையில் 16 புறநகர்ப் பகுதிகளுக்கும், ஆலங்குடிச் சாலையில் அமைந்துள்ள 12 புறநகர்ப் பகுதிகளுக்கும், திருச்சிச் சாலையில் அமைந்துள்ள பழனியப்பா நகர் மற்றும் திருமயம் சாலையில் உள்ள லட்சுமி நகர், மறைமலை நகர், ஆகிய புறநகர்ப் பகுதிகளுக்கும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் இப்பகுதி மக்களின் நீண்ட நாளைய குறையை நீக்கும் வகையில், வருகிற 31.12.1995-க்குள் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் காவிரி நீர் வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் மற்றும் [illegible] நலம் காக்க, பல்வேறு [illegible]

எடுத்து வருகின்ற எங்கள் அரசு, இதே புதுக்கோட்டை மாவட்டத்தில், தனியார் கல் குவாரிகளில், பணிபுரிந்து வந்த மகளிரின், பொருளாதார சமூக வாழ்க்கையை, மேம்படுத்திக் காட்டியுள்ளது. 1991-ஆம் ஆண்டுக்கு முன், கிட்டத்தட்ட 520 தனியார் கல் குவாரிகளில், நாள் முழுவதும் உழைத்து, 6 ரூபாய் மட்டுமே, ஊதியம் பெற்று வந்த, 4,500 பெண்மணிகளின் வாழ்க்கையில், வசந்தத்தை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

தனியாரின் கல் உடைக்கும் உரிமங்களை, நாங்கள் நீட்டிக்கவில்லை. மாறாக, இந்தக் கல் குவாரிகளில், குருதி சிந்தி, கடுமையாக உழைத்த பெண் தொழிலாளர்களை, 152 குழுக்களாகப் பிரித்து, இந்தக் குழுக்களிடம், இந்தக் கல் குவாரிகளை ஒப்படைத்தோம். Development of Women and children in Rural Areas, ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கான திட்டத்தின் கீழ், இந்த மகளிருக்குத் தொழில் நடத்தத் தேவையான மூலதனம் பெற்றத் தரவும், தொழில் நுட்ப உதவிகளை வழங்கவும், நாங்கள் ஏற்பாடு செய்தோம். அவர்கள் வாழ்க்கையில், இன்று வசந்தம் வீசுகிறது. 6 ரூபாய்க்காக, இடுப்பொடிய அனுதினமும் பாடுபட்ட, அந்த அன்புச் சகோதரிகள், இன்று நாள் ஒன்றுக்கு, 30 ரூபாய் வருமானம் பெற்று வருகிறார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம், இன்று உயர்ந்துள்ளது. இதை நாங்கள் மட்டும் கூறவில்லை. National Institute of Adult Education, என்ற மத்திய ஆய்வு நிறுவனம், தான் மேற்கொண்ட ஆய்வின் முடிவாக, இந்த மாவட்டத்தில், உழைக்கும் மகளிர் அடைந்துள்ள உன்னதமான, சமூகப் பொருளாதார மேம்பாட்டை, மனம் மகிழ்ந்து பாராட்டியுள்ளது.

மகளிர் மேம்பாடு அடைந் [illegible]

குடும்பங்கள் பலன் அடைந்ததை, எவரும் மறுக்க முடியாது!

கல் குவாரிகளின் குத்தகைத் தொகையை உயர்த்தியபோது, இவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று, நான் முடிவு செய்தேன். இந்த உயர்வு இவர்களைப் பாதிக்காமல் இருக்க, குத்தகைத் தொகை எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டதோ, அந்த அளவிற்கு, முதலாண்டிற்கு மானியமும்; அடுத்த சில ஆண்டுகளுக்கு, கணிசமான மானியமும்; அரசுத் தரப்பிலிருந்து வழங்க, ஆணையிட்டுள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கல் குவாரிகளின் குத்தகை உரிமங்கள், ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு செய்யப்படுவதால், இவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது என்பது, எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இம்மகளிரின் நல்வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கல் குவாரிகளின் குத்தகை உரிமங்களை, 5 ஆண்டுக் காலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டும் என ஆணை வழங்கியுள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

27,051 பேருக்கு, இங்கே அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், வழங்கப்பட உள்ளன. பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள், வறியவர்கள், நலிந்தவர்கள், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற வேண்டும் என்கின்ற எண்ணத்தில், ஏற்கெனவே மாவட்டந்தோறும் ஒரு முறை சென்று, நலத்திட்ட உதவிகளை வழங்கி இருந்தாலும், மீண்டும் இங்கே 27,051 பேருக்கு, 10 கோடி ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதில், எனக்கு உண்மையில், ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது. இன்று அரசின் உதவிகளைப் பெறுகின்றவர்கள், வளமானதொரு வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று, மனதார வாழ்த்துகிறேன்.

இந்த மேடையில் ஒரு சிலருக்கு மட்டும், அரசின் நலத்திட்ட உதவிகளை, எனது கரங்களால், நானே வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், எனது முன்னிலையில் வழங்குவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனை இடர்ப்பாடுகள், எத்தனை இன்னல்கள் வந்தாலும், உறுதியான உள்ளத்தோடு அதைத் தாங்குவோம். தமிழக மக்களின் பேராதரவும், பேரன்பும், ஒரு மாபெரும் சக்தியாக, எங்களுக்கு உறுதுணையாக இருக்கும்போது, உலகத்தில் வேறு எந்தச் சக்தியாலும், எங்களை ஒன்றும் செய்து விட முடியாது. மக்கள் நலன் காப்பதிலும், மக்கள் பணி ஆற்றுவதிலும், இன்னும் முனைப்புடன், நாங்கள் செயல்படுவோம் என்று, இந்த நேரத்தில் உறுதி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கோடைக்கால வெயிலின் கொடுமையையும் மீறி, என்னைக் காண்பதற்கும், என் பேச்சைக் கேட்பதற்கும், இங்கு குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை உரிதாக்கிக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும், எல்லா வளமும், எல்லா நலமும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புகழ் மிக்க புதுகையில் புதிய சரித்திரம்

பொங்கு புனல் காவிரி நீரைப் புதுகை மக்கள் பருகிடவும், இம்மாவட்டம் புதிய பொலிவு பெறவும், மக்கள் வாழ்வில் வளம் பெருகவும். 25.3.95 அன்று புதுக்கோட்டை விளையாட்டரங்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மற்றும் மணப்பாறை குடிநீர்த் திட்டங்கள், மற்றும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து, பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். வாழ்த்துரையாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.டி.எம்.செல்வகணபதி அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.பொன்னுசாமி அவர்களும் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றிய பின்பு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விழாப்பேருரையாற்றினார். பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் பாரதி மற்றும் தனலட்சுமி பெண் குழந்தைகளுக்குத் தங்க மோதிரமும், அறந்தாங்கியைச் சார்ந்த மாரிமுத்து - காந்திமதி ஆகிய தம்பதியர்க்கு தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தில் ரூபாய் ஆயிரமும், ஆதரவற்ற பெண்கள் நிதி உதவித் திட்டத்தின்படி கருப்பாயி என்ற பெண்ணுக்கு ரூபாய் இரண்டாயிரமும், விதவை மகள் திருமண நிதி உதவித்திட்டத்தின்படி மகமாயி என்பருக்கு ரூபாய் இரண்டாயிரமும், சண்முகம் என்ற பெண்ணுக்கு இலவச மூன்று சக்கர வண்டியும், சசிகலா என்ற ஊனமுற்ற பெண்ணுக்குக் கம்பிக் காலுறை மற்றும் கைத்தாங்கிகள், டாக்டர் ஜெ.ஜெயலலிதா கண் ஒளித்திட்டத்தின்படி வள்ளியம்மை என்ற பெண்ணுக்கு மூக்குக் கண்ணாடியும், சந்திரா என்ற பெண்ணுக்குப் பாசிபவளமும், மெய்வழிச்சாலையைச் சார்ந்த தமிழரசிக்குத் தையல் எந்திரமும், மாங்குடியைச் சார்ந்த பானுமதி என்ற பெண்ணுக்குப் பிளாஸ்டிக் ஒயர் கூடைபின்னுதல் கருவியும், கூடலூரைச் சேர்ந்த மூக்கன் என்பவருக்கு மைக்செட்டையும், அன்னவாசல் கிராமத்தைச் சார்ந்த பழனியம்மாள் என்ற ஏழைப் பெண்ணுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாவும், ராஜேந்திரன் என்பவருக்கு இலவசச் சலவைப்பெட்டியும், மூக்காயி என்ற பெண்ணுக்கு விதவை உதவித்தொகையும், நலிந்தோர் நலத் திட்டத்தின் படி விசாலாட்சி என்ற பெண்ணுக்கு ரூபாய் ஐந்தாயிரமும், வீரபத்திரன் என்பருக்குப் பெட்ரோமாக்ஸ் லைட்டையும், கருப்பையா என்பருக்கு விசைத்தெளிப்பான் கருவியும், ஆனந்தி என்ற பெண்ணுக்குத் தென்னங்கன்றையும் வழங்கினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட அமைச்சர்கள் அனைவரும் விழாப்பந்தலுக்குள் அமர்ந்துள்ள, ஏழை, எளிய மக்கள் இருந்த இடத்திற்குச் சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இறுதியாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வெ.வரப்பிரசாதராவ், இ.ஆ.ப. நன்றியுரையாற்றினார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
அ. மதிமாறன்.

மனம் குளிர்ந்தது!

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் புதுக்கோட்டைக்கு ரூ.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர்த்திட்டத்தை ஒரு பொத்தானை அமுக்கித் தொடங்கி வைத்தார். அப்பொழுது காவிரித்தாய் போல வடிவமைக்கப்பட்ட சிலையின் கரங்களில் உள்ள குடத்தில் இருந்து காவிரித் தண்ணீர் வரும் காட்சியைக் கண்ட ஏராளமான பொதுமக்களின் மனது குளிர்ந்தது. மேலும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் புதிய வழித்தடங்களையும் துவக்கி வைத்தார். அடுத்து ரூ.10 கோடி செலவில் அமைக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தையும் தொடங்கி வைத்த நிகழ்ச்சிகள் இவ்விழாவின் முத்தாய்ப்பாக அமைந்தன.

தமிழரசு

நூல்நயம்

தமிழில் ஆட்சிச் சொற்கள்

ஆசிரியர்: டாக்டர் சி. செல்வராஜ்

வெளியிட்டோர்: அன்பு பதிப்பகம்,
10, பொன்னுசாமி
நாயக்கன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014

பக்கம்:476 விலை:ரூ.75

தாய் மொழியாம் தமிழ்மொழி எண்ணற்ற ஆட்சிச் சொற்களைக் கொண்டதாகப் பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது என வரலாறுகள் தெரிவிக்கின்றன. அயலவர் ஆதிகக ஆட்சிகள் இங்கே நிலைபெற்ற காலத்தில், அவர்களுடைய அயல் மொழி ஆதிக்கங்களும் ஏற்படலாயின. அப்போதெல்லாம் அவர்கள் மொழி ஆட்சிச் சொற்களும் அரிசியிடை உமிபோல் தமிழில் கலந்தன. ஆதிக்கம் பெற்றன.

அவைகளையெல்லாம் தேடிப் பிடித்துத் தோலுரித்துக் காட்டும் திறம் மிக்க பணியையே இந் நூலாசிரியர் செய்திருக்கிறார். ஆட்சிச் சொற்களில் சிதைந்தவை, மறைந்தவை, மருவியவை, புதிதாக உருவாக்கப்பட்டவைகள்ளயெல்லாம் கூட நமக்கு அருமையாகத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார்.

'தமிழில் ஆட்சிச் சொற்களுக்கான ஆராய்ச்சி மூலங்கள்' என்பதில் தொடங்கி 'விடுதலைக்குப் பின் ஆட்சிச் சொற்கள்' என்பது வரை, ஏழு தலைப்புகளின் கீழான கட்டுரைகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கட்டுரையிலும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநராக உள்ள நூலாசிரியரின் இலக்கண - உயர்வு, இலக்கியப் பயிற்சி, மொழியியல் அறிவு, ஆட்சி முறை அனுபவம், பன்மொழித் திறன், ஆய்வுத்துறை ஆற்றல் ஆகியவை வெளிப்படுவதை நாம் அறிய முடிகிறது.

ஏறத்தாழ 2150 ஆட்சிச் சொற்கள் இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டு உள்ளன.

தமிழ் வாழ, வளர, செழித்திட இத்தகைய நூற்களைக் கற்றறிவாளர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

- 'இந்திரன்'

கடலுக்குள்ளே ஒரு சிறைச்சாலை

ஆசிரியர்: டாக்டர் மலையமான்

வெளியீடு: அன்புப் பதிப்பகம்,
63-A, ரங்காச்சாரி
சாலை,
சென்னை 600 018.

பக்கம்: 112 விலை: ரூ.16

கடல் பற்றி, கடல் வாழ் உயிரினங்கள் பற்றி தாவரங்கள் பற்றி, கடலில் கிடைக்கும் எண்ணெய் வளங்கள், கனிமங்கள் பற்றி, ஓர் நெடுங்கதையோடு இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது. கடல் பற்றி பல புதிய தகவல்கள் இந்நூலில் கிடைக்கின்றன. தமிழில் பயனுள்ள வித்தியாசமான ஓர் அறிவியல் நூல்.

குமார்

எல்லா விஷக் கடிகளுக்கும் வைத்தியம்

ஆசிரியர்: சூரியநாத்

வெளியீடு: கார்த்திகா
பப்ளிகேஷன்ஸ்
96, கங்கையம்மன்
கோவில் தெரு,
வடபழனி,
சென்னை 600 026

பக்கம்: 96 விலை ரூ.14

பாம்பு, தேள், பூரான் போன்ற கொடிய விஷ ஜந்துக்களால் மட்டுமல்ல, ஈ, கொசு, கரப்பான் போன்றவற்றின் கடிகளால் நமக்கு ஏற்படும் நோய்களை விளக்கி அவற்றிற்கு உரிய மருந்துகளையும் அவற்றை உபயோகிக்கும் முறைகளையும் இந்நூல் விளக்குகிறது.

'மேல்நாட்டு மேதைகள்'

ஆசிரியர்: இலக்கியச் சித்தர்
தங்கவயல்
லோகிதாசன்

வெளியீடு: பாண்டியன் பதிப்பகம்,
20,சீனிவாச பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014.

பக்கம்: 104 விலை: ரூ.12

மேல்நாட்டு மேதைகளின் வாழ்க்கையில் நடைபெற்ற நீதி, நேர்மை, நகைச்சுவை கலந்த பல சுவையான நிகழ்ச்சிகள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

பல தரப்பட்ட குணாதிசயங்களை உடைய பல மனிதர்களைச் சந்தித்துப் பழக வேண்டிய இக்காலச் சூழ்நிலையில் நாம் நேர் கொள்ள வேண்டிய பிரச்சினைகளை, எவ்வாறு பிறர் மனம் புண்படாமல், நம்மைத் தற்காத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதை 'வேறு தலை என் தலைக்குப் பொருந்தாதே!' 'ஈக்குச் சமாதி கட்டிய இணையற்ற கவிஞன்' போன்ற தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

'சாவதற்குள் ஒரு புது விஷயம்' தலைப்பின் கீழ் சாக்ரடீஸ் தன் மரணத்தை எதிர்நோக்கி இருக்கும் தறுவாயிலும் சிறையிலிருந்த மற்றொரு கைதியின் பாடலை மறுமுறை பாடக் கேட்டதாகக் குறிப்பிட்டிருப்பது மனத்தின்மையை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

கு. மல்லிகா

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
[illegible] கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
[illegible] கோ-ஆப்டெக்ஸ்.



உலகத் தமிழ் மாநாடு
இசை நிகழ்ச்சிகளில் சில...

இந்த இதழில்...

✦ தமிழக நிதி நிலை அறிக்கை: 1995 - 96
–மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் நாவலர்
இரா. நெடுஞ்செழியன் அவர்கள்
ஆற்றிய உரை 2

✦ வள்ளுவர் கூறும் அறம்
–டாக்டர் பழனி அரங்கசாமி . . . 38

✦ அட்டைப்பட விளக்கம் 42

✦ நீ ஓர் சகாப்தம்!
–கவிஞர் பெரி. சிவனடியான். . . . 43

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026

சித்திரைத் திங்கள்: 3

மலர்: 25 இதழ்: 20

16.4.1995

விலை: ரூ. 3

இதழ்தோறும் ஓர் இனியகுறள்

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின் (19)

மழை பெய்யவில்லையானால், இந்தப் பெரிய உலகத்தில் பிறர்பொருட்டுச் செய்யும் தானமும், தம்பொருட்டுச் செய்யும் தவமும் இல்லையாகும்.

தமிழக நிதிநிலை அறிக்கை: 1995-96

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரை

பகுதி – ஆ

வேளாண்மை

தமிழ்நாடு தொடர்ந்து நான்காவது ஆண்டாக அமோக விளைச்சல் கண்டுள்ளது. 1994-95இல் மொத்த உணவு உற்பத்தி 100 இலட்சம் டன்னைத் தாண்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது உழவர்களின் இந்த வியத்தகு சாதனை மிகப்பெரும் பாராட்டிற்குரியது.

2. பொருளாதார மாறுதல்களின் தொடக்கக் கட்டத்தில் இருந்துவரும் நம்மைப் போன்ற வளரும் நாடொன்றில், வறுமையைப் போக்குவதற்கு சராசரித் தொழிலாளியின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும், அதே சமயம் கூடுதல் தொழிலாளர்களுக்கு வேலையளிப்பதும் வேளாண்மைத் துறையை எதிர்நோக்கியுள்ள இருவேறு அறைகூவல்களாகும் என்பது தற்போது அனைவராலும் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளை ஈடுபடுத்தித் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் மூலமாக உற்பத்தி திறனை அதிகரித்து, வேளாண்மை வளர்ச்சியைப் பரவலாக்குவதன் மூலமே ஏழ்மையை ஒழிப்பதற்கும், தேவையான அளவு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் நம்மால் இயலும். தமிழ்நாட்டின் பொருளாதாரம் இத்தகைய ஒரு மாறுதல் நிகழும் காலகட்டத்தில் உள்ளது. 1981–82இல் நமது மாநிலத்தின் உற்பத்தியில் 29.42 சதவிகிதமாக இருந்த வேளாண்மையின் பங்கு எதிர்பார்க்கப்பட்டவாறு 1992–93இல் 24.18 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இத்தகைய மாறுதல் நிகழும் காலகட்டத்தில்தான், வறுமை ஒழிப்புக்காக வேளாண்மை இன்னும் அதிக முக்கியப் பங்கு ஆற்ற வேண்டியுள்ளது.

3. பொருளாதார நிலையில் இத்தகைய மாறுதல் நிகழ்ந்துவருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, விரைவான வேளாண்மை வளர்ச்சிக்கு உதவக் கூடிய கொள்கை ஒன்றை நாம் வகுத்துள்ளோம். முதலாவதாகவும் மிக முக்கியமானதாகவும், உழவர்களுக்கு அதிக விலையைப் பெற்றுத் தந்து, உதவித் தொகையை அதிகம் நம்பியிராத வகையில் அரசின் கொள்கையை மாற்றியமைப்பதே நமது குறிக்கோளாக இருக்கும். இவ்வாறாக, விலைக் கொள்கை தவிர, விற்பனைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், உழவர்கள் நலனை இயன்ற அளவு உயர்த்தப் பாடுபடுதல் ஆகியவை அரசின் செயற்பாட்டில், பொதுவான குறிக்கோள்களாக இடம்பெறும். இரண்டாவதாக, பண்ணை இடுபொருள்களின் அளவும், தரமும் உயர்த்தப்படும். மூன்றாவதாக, ஊரகக் கடன் வழங்கு அமைப்புக்குப் புத்துயிர் ஊட்டப்படும். நான்காவதாக, வேளாண்மை ஆதரவுப் பணிகளின் நிலை உயர்த்தப்படும். தொழில்நுட்பவியல் மாற்றங்களைப் பின்பற்றி, உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும் அதே சமயத்தில், வறுமையைப் போக்குவதுமே மொத்தத்தில் அரசின் நோக்கமாக இருக்கும்.

4. இக் கொள்கையமைப்பைக் கருத்தில் கொண்டு, உழவர்களின் பயனுக்காக அவர்களுக்குக் களத்து மேட்டில் கொடுக்கப்படும் கொள்முதல் விலையை இந்த அரசு பெரிதும் அதிகரித்துள்ளது. நெல்லுக்கான கொள்முதல் விலை, மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.185 ஆகவும், நேர்த்தி ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.195 ஆகவும், மிக நேர்த்தி ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.205 ஆகவும் 1990 மார்ச்சுத் திங்களில் இருந்தன. இவை, தற்போது, அதாவது 1995 மார்ச்சுத் திங்கள் இறுதி வாக்கில், மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.340 ஆகவும், நேர்த்தி ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.360 ஆகவும் மிக நேர்த்தி ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.380 ஆகவும் உயர்ந்துள்ளன. இவ்வாறு இந்த விலைகள் கிட்டத்தட்ட இரட்டிப்பாக உயர்ந்துள்ளன என்பது தெரியவரும். 1990 மார்ச்சில் கரும்புக்கான மாநில அரசின் ஆதரவு விலை ரூ.250 ஆக இருந்தது. இது தற்போது மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.525 ஆக உயர்ந்துவிட்டது. இது முன் எப்போதும் இல்லாத உயர் அளவாகும். அதேசமயத்தில், உணவு தானியங்கள் போக்குவரத்தை முறைப்படுத்தும் ஏற்பாடு நீக்கப்பட்டுவிட்டது. இதனால் உழவர்களுக்கு நல்ல விலை கிடைத்தது. அதே சமயத்தில், மாநிலம் முழுவதும் உணவு தானியங்கள் எளிதாகக் கிடைத்தன.

5. நியாயமான விலைகளில் தரமான இடு பொருள்களைத் தடையின்றித் தாராளமாகக் கிடைக்கச் செய்வது திறமையான வேளாண்மைப் பணிக்கு மிக இன்றியமையாததாகும். உரங்களுக்கான உதவித் தொகையை மத்திய அரசு திடீரெனக் குறைத்ததால், அதன்

காரணமாக உரங்கள் கிடைப்பதில் ஏற்பட்ட பிரச்சினைகளும் இந்த அரசுக்குக் கடும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. அப்படியிருந்தும், நிலைமை மிகவும் திறம்படச் சமாளிக்கப்பட்டுள்ளது. இது அனைத்துத் தரப்பினர்க்கும் மன நிறைவைத் தந்துள்ளது. விவசாய உற்பத்திப் பொருள்களின் விலையை உழவர்களுக்குப் பயன் தரும் வகையில் உயர்த்த வேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, அதே சமயம் பண்ணையின் உண்மை வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு உதவித்தொகையை நிறுத்துவதைப் படிப்படியாகச் செயற்படுத்த வேண்டும். பாசன நீர் வசதி போன்ற ஏனைய பண்ணை இடு பொருள்கள் கிடைப்பதற்குத் திறமையாக ஏற்பாடு செய்ய வேண்டும். உரிய நேரத்தில் நீர் கிடைக்கச் செய்வதற்கும், நீர் ஆதாரங்களைச் செவ்விய முறையில் பயன் கொள்வதற்கும் பாசன நீர்ப் பயன்பாட்டுச் சங்கங்களை ஏற்படுத்துவதை இந்த அரசு ஊக்குவிக்கும். நிதி இடர்ப்பாடு இருந்தும், அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும் இந்த அரசு தொடர்ந்து இலவச மின்சக்தி அளித்து வருகிறது. இந்த உதவியைத் தொடர்ந்து வழங்குதல் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டியிருப்பின், அப்போது பண்ணை உற்பத்திப் பொருள்களின் விற்பனை விலைகளையும், செலவுகளையும் குறித்து முற்றிலுமாக ஆய்வு செய்ய வேண்டியிருக்கும் என்பதை இவ்வரசு முழுமையாக உணர்ந்துள்ளது.

6. பொருளாதார மாறுதல் ஏற்பட்டு வரும் சூழ்நிலையில், வேளாண்மையை ஆற்றல் மிக்கதாக ஆக்கும் நடைமுறையில் ஒரு பகுதியாக, ஊரகக் கடன் வழங்கு நடைமுறைக்குப் புத்துயிரும் புதிய வலிவும் அளிப்பதற்கு அரசு மிகவுயர்ந்த முக்கியத்துவம் அளிக்கிறது. 1995–96 இல், கூட்டுறவுக் கடன் வழங்கு முறையை முற்றிலும் சீரமைக்கவும் உழவர்களின் தேவையை நிறைவு செய்வதில் தொடக்க நிலவள வங்கிகளின் பணியை மேம்படுத்தவும் நாம் முயற்சிகள் மேற்கொள்வோம். வேளாண்மையில் மூலதன முதலீட்டை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.

7. வேளாண்மை ஆதரவுப் பணிகளைச் சிறப்பாக அளிக்கும் வகையில் அரசு தலையிட்டு நடவடிக்கைகளை எடுப்பது மிகமிக இன்றியமையாததாகும். தொழில்நுட்ப மாற்றங்களை மேற்கொள்வதற்கு இந்த அரசு உழவர்களுக்கு முழுமையாக ஆதரவளித்துள்ளது. வேளாண்மை ஆராய்ச்சிப் பணிகள் பெரிதும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் "எம்.ஜி.ஆர்" என்றழைக்கப்படும் முதல் உயர் ரகக் கலப்பின வகை நெல்லை அறிமுகப்படுத்தியுள்ளது. 1995–96 இல்

இது 13,758 ஏக்கர்களில் பயிரிடப்படும். வரும் ஆண்டில் இந்த வகையைப் பிரபலப்படுத்தச் செயல்முறை விளக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

8. வேளாண்மையில், உயிரின வாழ்க்கைக்கு இணக்கமாக அமையும் நடைமுறைகளை, மேம்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சிக் கட்டுப்பாட்டுத் திட்டம் 1995–96இல் ரூ.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். இயற்கை உர உற்பத்தி 1993–94இல் 1000 டன்னிலிருந்து 1994–95 இல் 1200 டன்னாக உயர்ந்தது. 1995–96 இல் இது 1450 டன்னாக மேலும் உயர்த்தப்படும். சேலத்தில் உள்ள இயற்கை உர உற்பத்தி மையம் 1995–96 இல் ரூ.28 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்படும்.

9. தமிழ்நாட்டில் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.94.56 கோடி செலவில் செயல்படுத்த உலக வங்கி 1995 பிப்ரவரியில் இறுதி அனுமதி அளித்துள்ளது என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இந்தப் புதிய பெருந் திட்டம், வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மைக் கல்வி மற்றும் திறன் உயர்வு ஆகியவற்றைப் பெரிதும் மேம்படுத்தும். இத்திட்டத்திற்கு 1995–96 வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 'டேனிடா' உதவியுடனான தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் நிலை–II ரூ.28.73 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது 1995–96 இல் மேலும் 8 மாவட்டங்களுக்கு, அதாவது, வட ஆர்க்காடு அம்பேத்கார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல்–அண்ணா, நாகப்பட்டினம் காயிதே மில்லத், பெரியார், காமராஜர் ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும். இத்திட்டம், சிறு, குறு உழவர் பண்ணைகளில் பணிபுரியும் ஊரக மகளிருக்கு அவர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சியை அளிக்கும். 1995–96ல் மொத்தம் 11,025 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

11. உலக வங்கி உதவியுடனான தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 1995–96இல் ரூ.410 கோடி திருத்தச் செலவில் செயல்படுத்தப்படும். 1995–96ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு ரூ.73.43 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

12. கிடைக்கக் கூடிய நீரைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கு மிக உயர்ந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.13.51 கோடி செலவில் 27,000 ஏக்கரில் நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் "டேனிடா" உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்வர். இதே போன்ற மற்றொரு திட்டம் திருநெல்வேலி–கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் 1,04,000 ஏக்கரில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.41.32 கோடி செலவாகும். வானவாரி பகுதிகளுக்கான தேசிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1995–96இல் 84 ஊராட்சி ஒன்றியங்களில் 2.94 இலட்சம் ஏக்கரில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1995–96இல் 2.22 இலட்சம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும்.

13. திறமையான முறையில் நீர் வழங்கலை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி, கோதையாறு–சித்தாறு பட்டணங்கால் ஆகிய பாசனப் பகுதிகள் பயனடையும் வகையில், ரூ.46.74 கோடி செலவில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1995–96இல் இத்திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.23.50 கோடி செலவில் 1.07 இலட்சம் ஏக்கர்கள் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. உழவர்களுக்குக் கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் வருமானம் தரக்கூடிய வேளாண்மை, தோட்டக்கலை, மலர்ச் செடி வளர்ப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கூட்டுத் துறை, இணைத் துறையில் உணவு மற்றும் மலர் உற்பத்தி செய்து பதப்படுத்தும் புதிய பிரிவுகளை ஏற்படுத்த 1995–96ல் ரூ.1 கோடி மூலதனத்துடன் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும். இத்திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் செயல்படுத்தும். பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை அதிகரிக்கவும், அதன் ஏற்றுமதியை உயர்த்தவும் ரூ.1.15 கோடி அடிப்படை மூலதனத்துடன், தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர் கூட்டுறவு முயற்சி இணையம் (TANHOPE) தொடங்கப் பட்டுள்ளது.

பாசனம்

15. 1995–96 ஆம் ஆண்டில் சிறுபாசனம் உள்பட, பாசனத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.137.07 கோடியாக இருக்கும்.

16. தமிழ்நாடு ஏற்கெனவே, அதன் மேற்பரப்பு நீரில் 98 சதவீதத்தையும், நிலத்தடிநீரில் 62 சதவீதத்தையும் பயன்படுத்தியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டப் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் 20.1.1995 ஆம் நாளன்று, புதுடில்லியில் மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் அவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தேசிய திட்டத்தின் முதல் கட்டப் பணியாக தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தின் முதற்பிரிவாக பம்பை–அச்சன் கோயில்–வைகை இணைப்புப் பணியையாகிலும் ரூ.680 கோடி செலவில் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இவ்வாறு மேற்கொள்ளப்படும் முதல்பிரிவுப்பணி வறட்சிப்பாங்கான மாவட்டங்களான காமராசர், திருநெல்வேலி–கட்டபொம்மன், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் உள்ள சுமார் 2.47 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசனம் அளிக்க ஏதுவாக 2300 கோடி கன அடி நீரைத் திருப்பிவிட வகை செய்யும். மேற்கொண்டும் காலதாமதமின்றி தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தைத் தேசியத் திட்டமாக மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு, மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தும்.

17. கடந்த பத்தாண்டுகளில் பாசன அமைப்பு முறை கணிசமான அளவிற்கு மாறியுள்ளது. தற்போதுள்ள பாசன முறைகள் குறித்த விவரம் வருமாறு:–

	இலட்சம் ஏக்கர்கள்
i) பெரும் பாசன ஏற்பாடுகள் ஆற்றுப்பாசனம், கிளை வாய்க்கால்கள்	23.47
ii)பாசன ஏரிகள்	22.23
iii)குழாய்க் கிணறுகள்	28.41
iv) ஏனையவை	8.65
மொத்தம்	82.76

18. பாசனம் பெறும் பகுதிகளின் பரப்பளவு பயிரிடப்படும் பரப்பளவில் 47 சதவீதமாகும். நம்முடைய பாசனத் திட்டங்கள், இந்நிலையைக் கருத்தில் கொண்டதாக இருப்பதோடு, கிடைக்கக் கூடிய நீரைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும் இருக்க வேண்டும்.

19. இந்த நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள பாசன ஏற்பாடுகள் அனைத்தையும் முழுமையாகச் சீராக்கி நவீனப் படுத்துவதற்கு ஒரு பெருந்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வாய்ப்புக் குறித்து உலக வங்கியுடன் விவாதித்து வருகிறோம். இந்தத் திட்டம், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களும் உரிய காலத்தில் முடிக்கப்படுவதை உறுதி செய்யும். மேலும், இது தற்போது உள்ள பாசன வசதிகள் அனைத்தையும் முற்றிலுமாக நவீனப்படுத்தும். இந்தத் திட்டத்தால் 40 இலட்சம் பேர் பயன் அடைவர் என்றும், அதில் 75 சதவீதத்தினர் சிறு மற்றும் குறு உழவர்களாக இருப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கியிடமிருந்து நிதியுதவிபெற்று நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தை தொடங்குவோம் என நம்புகிறோம். இத்திட்டத்திற்கு ரூ.1140 கோடி முதலீட்டுச் செலவுபிடிக்கும். இது 7 ஆண்டுகால அளவில் செயல்படுத்தப்படும். 1995-96 ஆம் ஆண்டில் நீர்ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.68.57 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

20. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மலட்டாற்றுக்குக் குறுக்கே ஒரு புதிய நீர்த் தேக்கம் கட்டப்படும். இத்திட்டத்திற்கு ரூ.16 கோடி செலவாகும். இதனால் 2779.48 ஏக்கர் புன்செய் நிலம் பயன்பெறும். இதனால் பேரணாம்பட்டு நகரில் குடிநீர் வழங்கல் நிலைமையும் சீர்படும்.

21. 1995-96 ஆம் ஆண்டில் ரூ.10 கோடி செலவில் புதிதாக மாநில ஏரிப்பாசனத் திட்டம் (STIP) தொடங்கப்படும். இத்திட்டம், பாசன ஏரிகளைத் தரப்படுத்தி நவீனப்படுத்தும் பணிக்கு மட்டுமே வகை செய்யும். இத் திட்டத்தில் இரண்டு பகுதிகள் இருக்கும். முதல் பகுதி முன்னாள் ஜமீன் ஏரிகளை தரப்படுத்தல் ஆகும். இரண்டாம் பகுதி, பொதுப்பணித் துறையின் பொறுப்பிலுள்ள ஏனைய ஏரிகளைத் தரப்படுத்தலும் சீரமைத்தலும் ஆகும். 1995-96 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் முன்னாள் ஜமீன் ஏரிகள் அனைத்தும், அவற்றை மேற்கொண்டும் பராமரிப்பதற்காக, அவற்றின் அளவிற்கேற்ப அவை ஊராட்சி ஒன்றியங்களிடம் அல்லது பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

22. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவியுடன் கூடிய ஏரிகளை நவீனப்படுத்தல் திட்டம், 1995-96 ஆம் ஆண்டில் ரூ.21.57 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மொத்தம் ரூ.14.40 கோடி செலவில், 30,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதி கொண்ட மேலும் 100 ஏரிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில் இத் திட்டத்தை நீட்டிக்க வேண்டுமென ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிடம் கேட்டுள்ளோம். 1995-96 ஆம் ஆண்டில் இந்த விரிவாக்கத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறோம்.

23. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு முக்கியத் திட்டம் அணைக்கட்டுப் பாதுகாப்பு உறுதி மற்றும் சீரமைப்புத் திட்டமாகும். 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.2.13 கோடியாகும். இத் திட்டம் ரூ.8.10 கோடி செலவில் 12 அணைக்கட்டுகளுக்கு அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளை நல்கும். மேலும், 7 அணைக்கட்டுக்களுக்கு ரூ.58.01 கோடி செலவில் குறைகளைச் சரிசெய்யும் பணிகளுக்கு வகைசெய்யப்படும்.

24. பாசன ஆதாரங்களைப் பராமரிக்க வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். பாசன வாயில்களைப் பராமரிப்பதற்கான செலவை, விவசாயிகள் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. பெரிய, நடுத்தரப் பாசன ஏற்பாடுகளைப் பராமரிக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ.267.50 என்றும், சிறு பாசன ஏற்பாட்டைப் பராமரிக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ.297.50 என்றும் இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் பெரிய நடுத்தரப் பாசன ஏற்பாடுகளின் பராமரிப்புப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.27.76 கோடியாகும். சிறுபாசன ஏற்பாடுகளுக்கு ரூ.10.71 கோடியாகும். வெள்ளத்தால் பாசன ஏற்பாடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை முழுமையாகச் சீரமைக்க ரூ.10 கோடி தனி நிதி ஒதுக்கம் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

25. காவிரி நீர்த் தகராற்றில் தமிழ்நாட்டின் நிலையைச் சீரிய முறையில் எடுத்துரைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள மிகப்பெரு முயற்சிகளை அவை உறுப்பினர்கள் நன்கறிவர். காவிரி நீர்த் தகராற்று நடுவர் மன்றம், தமிழ்நாட்டின் நான்கு சாட்சிகளை விசாரித்துள்ளது. எஞ்சியுள்ள தமிழ்நாடு சாட்சிகளையும், கருநாடக, கேரளா, பாண்டிச்சேரி மாநிலங்களின் சாட்சிகளையும் விசாரித்த பிறகு நடுவர் மன்றத்தில் விவாதங்கள் நடைபெறும். 10.12.1991 முதல் உள்ள நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை கருநாடக மாநிலம் முழுமையாகவும் உண்மையோடும் நிறைவேற்றாதபோதிலும் கடந்த மூன்றாண்டுகளில் பருவமழை நன்கு பெய்து மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் மிகுதியாக நிரம்பியதால், இம்மாநிலத்தில் காவிரிபாசனப் பகுதிகளுக்கு உரிய நேரத்தில் போதுமான அளவு நீர் வழங்க முடிந்தது. வரும் பருவ காலத்தில், கருநாடக அரசு, இந்த இடைக்கால ஆணையை நிறைவேற்றும் என்று நம்புகிறோம். இதில் பயனுள்ள முறையில் தலையிட்டு, இந்த இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டுமெனக் கருநாடக அரசிடம் எடுத்துரைத்து ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

ஊரக வளர்ச்சி

26. வேளாண்மை வளத்தைப் பெருக்குவதுடன் அதனுடன் இணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களைத் திறம்பட அமல் படுத்துவதன் வாயிலாக ஏழ்மையை ஒழிப்பதில் சிறந்த சாதனை புரிய இயலும் என்பது இந்த அரசின் பொருளாதாரத் தத்துவமாகும்.

27. 1995 ஜூன் திங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது குறித்த அரசின் நோக்கத்தை அறிவித்ததையடுத்து, பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிதி கிடைப்பதில் எவ்விதப் பிரச்சினையும் எழாது என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (JVVT), 1995-96 ஆம் ஆண்டிலும் ரூ.311.64 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும் என்பதை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். வரவு-செலவுத் திட்டத்தில் இத் திட்டத்திற்காக மாநில அரசின் பங்கான ரூ.68.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் (EAS) 1995-96 ஆம் ஆண்டில் ரூ.45.80 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். இத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்கான ரூ.9.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), 1995-96 ஆம் ஆண்டில் ரூ.80.30 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்கு ரூ.42.58 கோடி, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

28. கூட்டாட்சி அமைப்பில், மாநிலங்களுக்குச் சில பொறுப்புகள் உள்ளன. இந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற அவற்றுக்கு நிகரான நிதி ஆதாரங்கள் வழங்கப்பட வேண்டும். விருப்பின்பாற்பட்டு வழங்கப் பெறும் மத்திய அரசின் நிதியுதவியை அவை சார்ந்திருக்கக் கூடாது. ஊரக வளர்ச்சி, வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன் போன்ற முக்கியமான துறைகளில் இவ்வாறு வழங்கப்பெறும் நிதி ஆதாரங்களே கூடுதலாகி வருகின்றன. ஆனால், மாநிலங்கள் இத்தகைய திட்டங்களைத் தாங்களாகவே நிறைவேற்ற இயலும் வகையில், அவற்றின் நிதி ஆதாரங்களை மத்திய அரசு வலுப்படுத்தியிருக்க வேண்டியதே தக்க வழியாகும். மாநில அரசுகளைப்

புறக்கணித்து, மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கு நேரடியாக நிதி வழங்குவது அறவே நலந்தரும் போக்கு அன்று. ஒரிரு மாநிலங்களில், மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கு மத்திய அரசின் பங்குத் தொகை உரிய காலத்தில் வழங்கப்படாதது உண்மையாக இருந்திருக்கக் கூடும். ஆனால், மாநில அரசுகளைப் புறக்கணிப்பதாக அமைகின்ற இத்தகைய புதிய நடைமுறைகள் மூலம் மத்திய-மாநில அரசுகளுக்கிடையில் நிதி உறவுகளில் விரிசல் ஏற்பட்டு விடக்கூடாது.

29. கிராமப் பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளன. இன்று, தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் 1,43,266 கைப்பம்புகளும் 28,809 விசைப்பம்புகளும் 8,62,874 தெருவிளக்குகளும் உள்ளன. இந்த வசதிகளைப் முறையாகப் பராமரிக்கத் தற்போது உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. **கைப்பம்புகளைப் பராமரிக்க ரூ.3.19 கோடிக்கும், விசைப்பம்புகளை இயக்க ரூ.2.45 கோடிக்கும், தெருவிளக்குகளைப் பராமரிக்க ரூ.3 கோடிக்கும்** வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த வசதிகளை முறையாகப் பராமரிக்க, நலிவுற்ற நிலையிலுள்ள ஊராட்சிகளுக்கு ஆதரவாக இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

30. இவ்வாறு அனைத்து அடிப்படை வசதிகளுக்கும் நிதியொதுக்கம் செய்த பின்னருங்கூட, சில உள்ளூர்த் தேவைகள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கக் கூடும். இத்தகைய தேவைகளை உரியகாலத்தில் நிறைவு செய்யும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, இந்த அரசு, அதிகாரத்தைப் பிரித்தளித்து மாவட்ட அளவில் வகுக்கப்பெறும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் எந்தவொரு அவசியமான வசதிக்கும் அல்லது ஊரக வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட திட்டத்திற்கும் நிதியைப் பயன்படுத்த மாவட்ட நிருவாகத்திற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. **1995-96 ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்கான நிதியொதுக்கம் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.**

31. ஊரகச் சுகாதாரத்தைப் பேணுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 'டேனிடா' நிதியுதவியுடன் மரக்காணத்தில், நாங்கள், ஏற்கெனவே ஒரு வெற்றிகரமான திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளோம். தென் ஆர்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களில் ரூ. 69.30 கோடி செலவில் ஊரகச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் திட்டங்களைச் செயல் படுத்த 'டேனிடா' வின் ஆதரவை நாங்கள் கோரியுள்ளோம். இத் திட்டம் வரும் ஆண்டில் 'டேனிடா' நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். மத்திய ஊரகச் சுகாதாரத்திட்டத்தின் கீழ் ஊரகச் சுகாதாரப் பிரச்சினையைச் சமாளிக்கும் பணியை நாங்கள் பெருமளவிற்குத் தொடங்கிவிட்டுள்ளோம். **1994-95 ஆம் ஆண்டில், கிராமப் பகுதிகளில் உள்ள தனியார் வீடுகளில் 59,924 கழிவறைகளும், மகளிருக்கான 260 கழிவறைத் தொகுப்புகளும் கட்டி முடிக்கப்படும். வரும் ஆண்டிலும் இதே போன்றதொரு திட்டத்தை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.**

32. 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இத்திட்டம் ரூ.2.90 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2000 ஊராட்சிகள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும்.

33. மாவட்ட அளவில் திட்டத்தை வகுக்கும் ஏற்பாட்டின் கீழ்ப் பல்வேறு திட்டப் பணிகளைப் பராமரிப்பதற்கான செலவும், வருவாயும் முறையாகச் சமன் செய்யப்பட வேண்டியது இன்றியமையாததாகும். **ஊராட்சி ஒன்றிய அளவில் பாசனம், சாலைகள், குடிநீர் வழங்கல், காடு வளர்ப்பு, தெரு விளக்குகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றுக்காகத் தனிக் கணக்குகளைப் புதிதாகத் தொடங்க நாங்கள் கருதியுள்ளோம். இந்தப்** பணிகளின் பராமரிப்புச் செலவையும் இப்பணிகளுக்கு வழங்கப்படுகின்ற நிதியையும் இப்புதிய கணக்குகள் தெளிவாகக் காட்டும்.

கால்நடை வளர்ப்பு

34. பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இந்நெறியில் அரசு தொடர்ந்து தனது கொள்கையை வகுத்துச் செயற்படுத்தி வருவதன் விளைவாகக் கால்நடை வளர்ப்பு, கிராமப் பகுதிகளில் வெறும் துணைத் தொழிலாக இருந்த நிலை மாறி, ஆதாயம் தரத்தக்க தொழிலாக ஆகியுள்ளது. செயற்கை முறைக் கருத்தரிப்பு மற்றும் ஏனைய கால்நடை வளர்ப்புத் தொழில்நுட்ப உத்திகள் மூலம், கால்நடை இனங்களின் மரபை மேம்படுத்தல் சரிவிகித தீவன-உணவு உற்பத்தி, கால்நடை சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் போன்ற செயல்முறைத் திட்ட நடவடிக்கைகளால் இம்மாநிலத்தில் பால், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1982இல், 17.9 இலட்சம் டன்னாக இருந்த பால் உற்பத்தி, 1994இல் 39.6 இலட்சம் டன் என்ற உற்பத்தியளவை எட்டியுள்ளது. இறைச்சி உற்பத்தி 451.50 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது. முட்டை உற்பத்தி, 1982இல் 89 கோடியாக இருந்தது, 1994இல், 306.6 கோடியாக அதிகரித்துள்ளது.

35. கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, **உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கால்நடை மேம்பாட்டிற்கு மொத்தம் ரூ.10.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** கால்நடை வளர்ப்புத் துறையும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் கூட, புதிய வேளாண்மை-மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். இத்திட்டத்திற்கும் உலக வங்கி நிதி உதவி வழங்குகிறது.

36. ஏற்கெனவே அறிவித்தவாறு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று என்ற விகிதத்தில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 386 ஏற்படுத்தப்பட்டுள்ளன. **கால்நடை மருத்துவர்களிடையே சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் புதிய திட்டமொன்று 1995-96ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் நிதியொதுக்கத்துடன் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 66 மருத்துவர்கள் சொந்தத்தில் கால்நடை மருந்தகங்களை** ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்குத் தொடக்க உதவித் தொகை அளிக்கப்படும். **இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் 10 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்த வகை செய்கிறது.**

37. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம், தரமான ஊசி மருந்து தயாரிப்பிற்குப் பெயர் பெற்றது. **வெறிநாய்க் கடி சிகிச்சை ஊசி மருந்து உற்பத்திப் பிரிவை வலுப்படுத்த ரூ.42.50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியொதுக்கம், உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 7,500 டோஸ் என்ற அளவிலிருந்து 25,000 டோஸ் என்னும் அளவிற்கு உயர்த்த உதவும்.**

38. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டமொன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன், ரூ.7 கோடி மொத்தச் செலவில் 1995-96இல் முடிக்கப்படும். 1995-96இல் ரூ.4.66 கோடி செலவில் காமராஜர் மாவட்டத்தில் **ஒருங்கிணைந்த புதிய பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ்த் திருவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணைத் திட்டமொன்று தொடங்கப்படும். வரவு-செலவுத் திட்டத்தில், இதற்கு ரூ.50 இலட்சம் சேர்க்கப்பட்டிருக்கிறது.**

39. இம்மாநிலத்தில் 1992-93இல் நாளொன்றுக்கு 11.83 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் அளவு, 1994-95இல் 14.69 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. வருமாண்டில், பால் கொள்முதல் நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டரை எட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். காக்களூரிலும், திருவில்லிபுத்தூரிலும் உள்ள பாலைக் குளிர வைக்கும் மையங்களைப் பால் பண்ணைகளாக மாற்றியதால், இம்மாநிலத்தில், மொத்தப் பால் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 19.64 இலட்சம் லிட்டர் என்ற அளவை எட்டியுள்ளது. சோளிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பெரிய அளவிலான புதிய பால் பண்ணையொன்று தொடங்கப்பட்டுள்ளது. வருமாண்டில், திருச்சிராப்பள்ளியில் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணையொன்றை நிறுவும் பணி முடிக்கப்படும். கோடக்கல், சானூர் ஆகிய இரண்டு இடங்களில் நாளொன்றுக்கு 60,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பால்

குளிர்விக்கும் இரண்டு நிலையங்களை நிறுவும் பணிகள் வரும் ஆண்டில் முடிக்கப்படும். நாமக்கல், சங்கரானந்தபாளையம், சண்முகபுரம், கல்தான்பேட்டை, ஆத்தூர், பெரம்பலூர், கரூர் ஆகிய இடங்களில் பாலைக் குளிரவைக்கும் திறன் 1995-96இல் நாளொன்றுக்கு மேலும் 2,14,000 லிட்டர் அதிகரிக்கும்.

40. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கால்நடைத் தீவன மேம்பாட்டுப் பகுதியின் கீழ் மொத்தம் 47,000 ஏக்கர் பரப்பளவு இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப் பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் மேலும் 57,800 ஏக்கர் பரப்பு இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென்று ரூ.77 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மீனளம்

41. தஞ்சாவூர், இராமநாதபுரம், வ.உ.சிதம்பரனார், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., கன்னியாகுமரி ஆகிய ஐந்து கடற்கரை மாவட்டங்களில், ரூ.15.88 கோடி மொத்தச் செலவில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கடல் மீனள மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995-96ல் ரூ.3.12 கோடி மொத்தச் செலவில், மொத்தம் 1,300 மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள், மீன்பிடி வலைகள் ஏனைய சாதனங்கள் வாங்க நிதி உதவியளிக்கப்படும்.

42. 1995-96ல் செயற்கைக் கட்டுமரங்களைப் பிரபலப்படுத்தும் திட்டமொன்றை நாம் தொடங்குவோம். செயற்கைக் கட்டுமரங்களை வாங்க 50 சதவீதம் உதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டம் ரூ. 25 இலட்சம் மொத்தச் செலவில் செயல்படுத்தப்படும்.

43. கடற்கரைப் பகுதியில் மீன் வளர்ப்பில் உயிரின வாழ்க்கைச் சூழல் நிலைத்தன்மைக்கு இந்த அரசு, மிக உயர்ந்த முக்கியத்துவம் அளித்துவருவதால், இம்மாநிலத்தில் கடற்கரைப்பகுதிகளில் தனியார் துறையினர் மீன் பண்ணைகளை ஏற்படுத்தி, அவற்றை நிருவகிப்பதை முறைப்படுத்துவதற்கான சட்டமொன்று வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த தீவிரக் கண்காணிப்பின்கீழ், 1995-96ல் மேலும் 1500 ஏக்கர் பரப்பில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

44. மீனவர்களின் நலனுக்கு இந்த அரசு மிகவுயர்ந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. மீனவர்களுக்கு 2000 நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் 1995-96இலும் தொடரும். இந்த இலவச வீட்டுவசதித் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.4.80 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

45. மீன்பிடி தொழில் நன்டபெறாத காலங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையில், சேமிப்பு-நிவாரணத் திட்டத்தின் கீழ் 1994-95ல் 1.35 இலட்சம் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.9.74 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்குப் பெரும் பயனளிக்கும் இத்திட்டம், 1995-96இலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

வனவளம்

46. தற்போதுள்ள காடுகளைப் பாதுகாத்தல், காடுகளுக்கான புவியியலமைப்புப் பரப்பளவை விரிவுபடுத்துதல் ஆகிய பணிகள் தொடர்ந்து உயரிய முன்னுரிமை பெறுகின்றன. காடுகள் அமைந்துள்ள பகுதிகள் 1981ஆம் ஆண்டில் மொத்த நிலப்பரப்பில் 16.8 சதவீதமாக இருந்தன. இதுவே 1994இல் 17.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில், காடுவளர்ப்புத் துறைக்கான மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.50.44

கோடியாக இருக்கும்.

47. உலக வங்கி நிதியுதவியுடன், காடு வளர்ப்பு ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கப்பணிக்கான ஒரு புதிய திட்டம் ரூ.7.54 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், வனவள ஆராய்ச்சியும் களக்காடு புலிகள் காப்பு வனத்தில், மேற்கொள்ளப்படக்கூடிய வனப் பாதுகாப்புப் பணிகளும் அடங்கும். 1995-96 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.1.50 கோடியாக இருக்கும்.

48. தமிழ்நாடு காடுவளர்ப்பு அடங்கல் திட்டம் ஒன்றை நாம் வகுத்திருந்தோம். அதற்கு நிதியுதவி பெறுவதற்காக அது உலகவங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு சுற்றுச் சூழல் காடுவளர்ப்பு அமைச்சகம் தெரிவித்த சில கருத்துக்களின் அடிப்படையில், இத்திட்டம், மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான திருத்தப்பட்ட திட்டச் செலவு ரூ. 463 கோடி ஆகும். 1995-96 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான நிதியுதவி, உலகவங்கியிடமிருந்தாவது அல்லது ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்திடமிருந்தாவது இடைக்குமென எதிர்பார்க்கிறோம். தாவரங்களும் பிற உயிரினங்களும் அழிவதைத் தடுக்க, பல்வகைத் தாவரங்களையும் தாவரங்கள் வளரும் பகுதிகளையும் பாதுகாக்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம், 13.68 இலட்சம் ஏக்கர் வனப் பகுதியில் செயல்படுத்தப்படும். மேலும், அவ்வனப் பகுதிகளில் இடையிடையே உள்ள 1,000 கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

49. 1995-96ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில், காடுகள் இல்லாத பகுதிகளில் காடுகளை உருவாக்குவதற்காக "Operation Greening" என்னும் புதிய காடு வளர்ப்பு இயக்கத்தை மேற்கொள்ளும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும். பிச்சாவரத்தில் சதுப்புநிலத் தாவர வகைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு முன்னோடித் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப்படும். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1995-96ஆம் ஆண்டில், காடு வளர்ப்புத் திட்டப் பணிகளுக்காக மொத்தம் ரூ.12.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

50. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். 1995-96ல் ரூ.3.24 கோடி செலவில், மொத்தம் 2,370 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் இதனால் பயனடையும். மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1995-96ஆம் ஆண்டில் 5,650 ஏக்கர் நிலப்பரப்பு பயன் அடையும் வகையில், ரூ.2.55 கோடி செலவில் பணி மேற்கொள்ள முன்னுரிமை நிர்ணயிக்கப்பட்ட நீர்வரத்துப் பகுதிகளில், காடு வளர்ப்புப் பணிகளும் அவற்றுடன் மண் வளப் பொறியியல் மற்றும் மண் வளப் பாதுகாப்புப் பணிகளும் செயல்படுத்தப்படும்.

51. வனச் செல்வங்களைப் பாதுகாக்க இந்த அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கைகளைப் பற்றி அவை உறுப்பினர்கள் நன்கறிவர். 1994-95ஆம் ஆண்டில், பல்வேறு புதிய வன பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள மொத்தம் ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1995-96ஆம் ஆண்டில், 21 வனப் பாதுகாப்பு நிலையங்கள் ஏற்படுத்துவது உள்பட, வனப் பாதுகாப்புப் பணிகளுக்காக ரூ.28.50 இலட்சம் செலவிடப்படவுள்ளது. இத்துடன், வனச் செல்வங்கள் கொள்ளை போகும் வாய்ப்புடைய பகுதிகளில் வனச் செல்வங்களைத் திறம்படப் பாதுகாப்பதற்கு உறுதி செய்யும்பொருட்டு, அங்கு பணியமர்த்தப்பட்டுள்ள வனப் பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருள்களும் வழங்க ரூ.15 இலட்சம் ஒதுக்கப்படும்.

52. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், ரூ.85 கோடி செலவில், 74,100 ஏக்கர் நிலப் பரப்பில், பெரிய அளவில் காகிதக் கூழ் மரங்களை வளர்க்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும். 1995-96ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில் 12,350 ஏக்கர் பரப்பளவு நிலம் பயனடையும்.

தொழில்கள்

53. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய இம்மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்குரிய குறிப்பிட்ட செயல் திட்டம், ஆளுநர் உரையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கை பற்றிய விவரங்கள் வெவ்வேறு துறைகளின் கீழ்க் காட்டப்பட்டுள்ளன. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இந்த ஒருமித்த செயல் திட்டத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் வரவேற்பார்கள்.

54. நல்ல தரமான அடிப்படை வசதிகளுடன் கூடிய, முறையான தொழில் மண்டலங்களுக்கு வகை செய்ய வேண்டியது முக்கியமான

முயற்சியாகும். 1995-96ஆம் ஆண்டில் புதிய தொழிற்சாலைகள் தொழில் வளர்ச்சி மையங்களில் அமையவிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இத்தகைய தொழில் வளர்ச்சி மையங்கள் பெரியார் மாவட்டம் பெருந்துறையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானிலும் அமையவிருக்கின்றன. 1995-96ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் நிலக்கோட்டையிலும், தருமபுரி மாவட்டம் பருகூரிலும் தொழிற் மையங்களை முழுமையாக அமைக்கும். இந்த வரவு-செலவுத் திட்டம், தமிழ்நாடு தொழில் அடிப்படைவசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ.10 கோடிக்கு வகை செய்கிறது. சென்னைக்கு அருகே வல்லத்துக்கோட்டையில் பெரிய தொழில் வளர்ச்சி மையம் ஒன்றை ஏற்படுத்தும் பணிகளையும் "டாசிட்" நிறுவனம் மேற்கொள்ளும். திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் செய்யாற்றில் 600 ஏக்கரில் ரூ.17.80 கோடி செலவில் புதிய தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கும் பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொள்ளும். சிப்காட் நிறுவனம், கும்மிடிபூண்டியில் ரூ.20 கோடி செலவில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்கா ஒன்றை அமைக்கும். எல்காட் நிறுவனம், சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் மின்னணுவியல் நகர் ஒன்றை நிறுவியுள்ளது. எல்லா வசதிகளும் நிறைந்த தொழிற்சாலை மனைகள் கிடைப்பது விரைவான தொழில் வளர்ச்சிக்குப் பெருதவி புரியும்.

55. சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் சென்னை தொழிற் பூங்காவை அமைக்கும் பணி 1995-96இல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற் பூங்கா அமையவிருப்பதால் 100 கோடி அமெரிக்க டாலர் முதலீடு நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

56. 1994-95ஆம் ஆண்டில் "டிட்கோ" நிறுவனம் மொத்தம் ரூ.1742.19 கோடி செலவில் 18 தொழிற்சாலைகளுக்கு ஆதரவளித்துள்ளது. "டிட்கோ" நிறுவனம், 1995-96ஆம் ஆண்டில் 19 தொழிற்சாலைகளுக்கு ஆதரவளிக்கும். இதற்காகும் மொத்தத் திட்டச் செலவு ரூ.5805.93 கோடி ஆகும். இதில் தூத்துக்குடியில் தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனத்துடன் (TPL) கூட்டாக, ரூ.2300 கோடி செலவில் நிறுவப்படவிருக்கும் 500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல்மின் நிலையமும் அடங்கும். டிட்கோ நிறுவனத்தின் திட்டப் பணிகளுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.9.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டில் "சிப்காட்" நிறுவனம் வழங்கிய கடன் ரூ.79.88 கோடியை எட்டும் என்பது ஒரு புதிய சாதனையாகும். "சிப்காட்" நிறுவனத்தின் திட்டப் பணிகளுக்கு 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.24.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

57. "டிட்கோ" போன்ற முகவரமைப்புகள் கூட்டுத் துறை, இணைத்துறை, மேற்பார்வைத் துறை ஆகிய துறைகளின் கீழ்த் திட்டங்களை நிறுவியுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். புதிய திட்டங்களுக்கு ஆதரவளிக்க இவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள் மீண்டும் பயன்படுத்தப்படுவது அவசியமாகும். புதிய முதலீடுகள் செய்ய இயலும் வகையில், இத்தகைய திட்டங்களிலிருந்து முதலீடுகளைத் திரும்பப் பெறுவது இயல்பாகவும், விரைவாகவும் நடைபெற வேண்டும். இணைத்துறையில் உள்ள திட்டங்களைப் பொறுத்தவரை, ஒப்பந்தம் கையெழுத்தான நாளிலிருந்து மூன்றாண்டு இறுதியில் "டிட்கோ" பங்குகளை விற்பதன் மூலம் முதலீட்டைத் திரும்பப் பெறலாமென்று அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாறு செய்வது மூலதனத்தை விரைந்து பிற திட்டங்களுக்குப் பயன்படுத்தவும், புதிய திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கவும் உதவும்.

58. தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தை மொத்தம் ரூ.525 கோடி செலவில் விரிவுபடுத்தும் பெருந்திட்டத்தை, 1995 ஜூன் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், 7.5 கோடி டாலர் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எகிப்து நாட்டிற்குக் காகிதத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம் தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனம் ஒரு புதிய விற்பனைக் களத்தை ஏற்படுத்தியுள்ளது.

59. தொழில் வளர்ச்சியுடன் இணைந்த நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு முக்கியமான திட்டமான திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு ரூ.653.20 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய நிறுவனத்திற்கு மூலதனப் பங்காக ரூ.30 கோடிக்கு வகை செய்யும்படி மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். இத்திட்டம் குறித்த பணிகள் விரைவில் தொடங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

60. சிறு தொழில்கள் மற்றும் மிகச் சிறிய தொழில்களை மேம்படுத்தும், முழுப் பொறுப்பையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நமது நாட்டின் மொத்தத் தொழில் உற்பத்தியில் சிறு தொழில்களின் பங்கு 40 சதவீதம் என்று குறிப்பிடலாம். இது ஒரு முக்கியமான துறையாகும். 1990-91ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1,27,202ஆக இருந்தது. இது, 1994ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 1,98,699ஆக அதிகரித்துள்ளது. 1990-91ஆம் ஆண்டில் இத்தொழில் பிரிவுகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13.74 இலட்சமாக இருந்தது. 1994ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21.45 இலட்சமாக உயர்ந்தது. சிறு தொழில்களுக்கு அனுமதிகள் கிடைப்பதை விரைவுபடுத்த, மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

61. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. பெண் தொழில் முனைவோரைத் தெரிவு செய்யும் திட்டம் வெற்றியடைந்துள்ளது. 1994-95ஆம் ஆண்டின் இறுதிவரையில் 3400 பெண் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் 1400 பெண் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சியளிக்க, வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

62. 1994-95ஆம் ஆண்டில் "சிட்கோ" நிறுவனம் ரூ.8 கோடி செலவில் 200 தொழிற் கொட்டகைகளின் கட்டுமானப் பணியை முடித்துவிடும். 1995-96இல் சிட்கோ மேலும் 200 தொழிற் கொட்டகைகளைக் கட்டி முடிக்கக் கருதுகிறது. 1995-96ஆம் ஆண்டில் "சிட்கோ" நிறுவனம், சென்னைக்கு அருகில் முற்றிலும் பெண் தொழில் முனைவர்களுக்கென்றே அமைந்த தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கும்.

63. நடைமுறைகளை எளிமையாக்கவும், அனுமதி கிடைப்பதை விரைவுபடுத்தவும் எடுக்கப்படும் ஒருமித்த விரைவு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சிறு தொழில் பிரிவுகளை ஆய்வு செய்யும் பணி ஆண்டுக்கொரு முறை அங்கொன்றும் இங்கொன்றுமாக (random basis) ஆய்வு செய்யும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. அபாயகரமான, தீங்கு விளைவிக்கக் கூடிய, சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடிய சிறு தொழில் பிரிவுகள் மட்டுமே ஆண்டுக்கு இருமுறை ஆய்வு செய்யப்பட வேண்டும். உரிமம் முதற்கண் வழங்கப்படுவதை அல்லது புதுப்பிக்கப்படுவதை ஆண்டுதோறும் செய்வதற்குப் பதிலாக தொடர்ச்சியாக 5 ஆண்டு காலத்திற்கு உரிமம் வழங்கப் பெறலாம் அல்லது புதுப்பிக்கப் பெறலாம். தொழிற் பிரிவுகளை ஆய்வு செய்யும் தொழிலாளர் நல அதிகாரிகளின் வருகை தேவைப்படக் கூடிய குறைந்த அளவிற்கு இருக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

64. 1995-96இல் மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சில நடவடிக்கைகளில் இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு வங்கியில் தொழில் நுட்பவியல் வளர்ச்சி-நவீனப் படுத்துதல் நிதியொன்றை ஏற்படுத்துதல் மிகச் சிறிய தொழில்களுக்குத் தேசிய முதலீட்டுப் பங்கு நிதித் திட்டத்தை நீட்டித்தல், சிறப்புத் தன்மை வாய்ந்த 100 வங்கிக் கிளைகளைத் தொடங்கத் திட்டமிடுதல் ஆகியவை போன்ற சில நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியவையாகும். இத்துறைக்கான மூலதனத் தேவைகளை நிறைவு செய்ய வணிக வங்கிகள் ஒருமித்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. சில முக்கிய உற்பத்திக் குழுக்களை கண்டறிந்து, சிறு தொழிலில் முதலீடு செய்வதை விரைவுபடுத்தச் சில முனைப்பு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு வல்லுநர் குழு ஒன்றை ஏற்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம்.

எரிசக்தி

65. தமிழ்நாட்டில் 1994-95இல் மின் வெட்டு அறவே இல்லாதிருந்தது.

மனம் மகிழ்வுறும் இந்நிலை, 1995-96லும் தொடரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். வடசென்னை அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 15-2-1995 அன்று தொடங்கி வைத்துள்ளார். ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மேலும் இரு மின் உற்பத்திப் பிரிவுகள் 1995-96இல் தொடங்கப்படும். ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட மொத்தம் 120 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட நான்கு பிரிவுகள் 1995-96இல் பேசின் பாலம் நிலையத்தில் தொடங்கப்படும். 1995-96இல் இத்தகைய கூடுதலான மின் உற்பத்தித் திறனுடன் தமிழ்நாட்டில் மின் உற்பத்தி நிலைமை தொடர்ந்து மன நிறைவு தரும் வகையில் இருக்கும்.

66. மின் துறைக்கான திட்ட ஒதுக்கீடு 1994-95இல் ரூ.624.38 கோடி என்பதிலிருந்து 1995-96இல் ரூ.750 கோடி என்னும் அளவிற்கு உயர்ந்துள்ளது. மின் உற்பத்திக்கான ரூ.520.33 கோடியும், மின் அனுப்புகை மற்றும் பகிர்வுக்கான ரூ.198.35 கோடியும் இதில் அடங்கும்.

67. தனியார் துறையில் புதிய மின் உற்பத்தித் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் "எஸ்.டி-சிஎம்எஸ் பவர் கம்பெனி"யின் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்தை நிறுவும் திட்டம், மத்திய அரசின் எதிர் உத்தரவாதத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உத்தரவாதம் கிடைக்கப் பெற்றதும் உடனடியாக இத்திட்டத்தைத் தொடங்க முடியும். ஆளுநர் உரையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தவாறு, தனியார் துறையில் ரூ.29,925 கோடி ஒதுக்கீட்டில் மொத்தம் 7,120 மெகாவாட் திறன் கொண்ட புதிய எரிவாயு-அனல் மின் நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மொத்தம் 400 மெகாவாட் திறன் கொண்ட 3 டீசல் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவும் பணியும் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்-மின் உற்பத்தித் திட்டம் குறித்த இறுதி நிலை நிதிச் சாத்தியக்கூறு ஆய்வு விரைவில் மேற்கொள்ளப்படும்.

68. தனியார் துறையிடம் மின் உற்பத்தி செய்யும் பணி ஒப்படைக்கப்படுவதையொட்டி, தமிழ்நாடு மின்சார வாரியம், மின் அனுப்புகை-பகிர்வுக்கான நிதி ஒதுக்கீட்டை மேம்படுத்திக் கொள்ளும் நிலையை அடைந்துள்ளது. மின் அனுப்புகை-பகிர்வில் ஏற்படும் இழப்பு கணிசமான அளவு குறைக்கப்பட்டு, தற்போது இழப்பு தேசிய சராசரிக்கும் குறைவாகவே இருக்கிறது. 1994-95இல் 38 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகரப் பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியொதுக்கீட்டுடன் ரூ.225 கோடி செலவில் மின் அனுப்புகை-பகிர்வு ஏற்பாட்டினை மேம்படுத்தும் விரிவான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

69. மின் கட்டணத்தைத் திருத்தியமைத்த பின்னருங்கூட, தமிழ்நாடு மின்சார வாரியம் 1995-96இல் மொத்தம் ரூ.522.32 கோடி நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாய பம்பு செட்டுகளுக்குத் தொடர்ந்து இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பெரும் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. 1994-95இல் இலவசமாக வழங்கப்பட்ட மின்சாரத்தின் மொத்தக் கட்டண வகையிலான செலவு ரூ.1112.40 கோடியாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. தொடர்ந்து இச்செலவு அதிகரிப்பதாலும், அரசு ரொக்க உதவித் தொகையை ரூ.350 கோடிக்கு மேல் வழங்க முடியாமல் இருப்பதாலும், ஏனைய மின் பயனீட்டாளர்களுக்கு அதிக மின் கட்டணம் விதிக்க முடியாததாலும், நிலைமை மிகவும் சிக்கலாகி உள்ளது. விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்கான செலவுக்காக தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரொக்க உதவித் தொகை வழங்குவதற்கான நிதியொதுக்கத்தைப் பத்தாம் நிதிக் குழு முழுவதுமாக அனுமதிக்கவில்லை. இதற்கு நாளடைவில் நீண்டகாலத் தீர்வு ஒன்றினை விரைவில் கண்டறிய வேண்டியுள்ளது.

70. மரபு சாராத புதிய எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. காற்றாலை மின் உற்பத்தியில், அனைத்திந்திய நிறுவு திறனான 180 மெகாவாட்டில், தமிழ்நாடு மொத்தம் 132 மெகாவாட் உற்பத்தித் திறனைப் பெற்று இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கிறது. காற்றாலை மின் உற்பத்தியில், தனியார் துறையினரை ஈர்க்கும் தமிழ்நாட்டின் முற்போக்குக் கொள்கை பெரும் வெற்றி கண்டுள்ளது. கடல் நீர் வெப்ப ஆற்றல் மின் சக்தியை மேம்படுத்த அமெரிக்க நாட்டைச் சேர்ந்த "சீ சோலார்" (Sea Solar) நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை வகுப்பதன் மூலம், இத்துறையில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. இதன் வாயிலாக 100 மெகாவாட் மின் உற்பத்தி பெற வாய்ப்பு உள்ளது. 1995-96இல் மேலும் நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக எரி சக்தித் திட்டம் விரிவுபடுத்தப்படும். முன்னோடித் திட்ட அடிப்படையில் சூரிய வெப்ப மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர், தென்-ஆர்க்காடு வள்ளலார் ஆகிய மாவட்டங்களில், ஒவ்வொன்றும் 600 வாட்ஸ் திறன் கொண்ட 50 சூரிய வெப்ப மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன.

சாலைகளும் சாலைப் போக்குவரத்தும்

71. சாலைகள், அடிப்படை கட்டமைப்பு வசதித் துறையின் முக்கியக் கூறு என்பதனை ஏற்றுக் கொண்டு நாங்கள் இம்மாநிலத்தில் சாலைகளின் மேம்பாட்டிற்காக வலியுறுத்துவோம். சாலைகள் குறித்தத் திட்ட ஒதுக்கீடு, 1994-95 ஆம் ஆண்டில் ரூ.120.94 கோடியாக இருந்தது. 1995-96 ஆம் ஆண்டில் இது ரூ.153.16 கோடியாகக் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

72. சாலைகளின் பராமரிப்பிற்காக 1995-96 ஆம் ஆண்டில், நாங்கள், மொத்தம் ரூ.195 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். நடப்பு விலைகளுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டு, ஒன்பதாவது நிதிக்குழுவால் வரையறை செய்யப்பட்ட அடிப்படை விதிமுறைகளின்படி இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 52,585 கி.மீ. நீளமுள்ள மொத்தச் சாலைகளின் பராமரிப்புப் பணியை மேற்கொள்ள இது போதுமானதாகும்.

73. சாலைகளின் பராமரிப்பில் முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ள, 1991-92 ஆம் ஆண்டில் நாங்கள் சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியிருந்தோம். இத் திட்டத்திற்காக முதலில் ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கம் ரூ.150 கோடியாகும். அவ்வாறிருக்க நாங்கள் இத்திட்டத்திற்காகச் செய்யும் செலவு, 1995-96 ஆம் ஆண்டு நிதியொதுக்கீடான ரூ.45 கோடி உட்பட, ரூ.186.51 கோடியாக இருக்கும். நடப்பாண்டு வரையில் 13,132 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. இத் திட்டம் 1995-96ல் முடிக்கப்படும்.

74. கிராமப் பகுதிகளிலும் நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்துவதை நாங்கள் பெரும் பொறுப்புணர்ச்சியோடு மேற்கொண்டுள்ளோம். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்திலும் எல்லாக் காலநிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைப்பதன் மூலம் சாலை இணைப்பை ஏற்படுத்த ஊரகச் சாலைகள் திட்டம் தொடங்கப்பட்டது. இத்தகைய கிராமங்கள் அனைத்திலும் 1995-96 ஆம் ஆண்டில் ஊரகச் சாலைகள் அமைக்கப்படும். இத் திட்டத்திற்கான 1995-96 ஆம் ஆண்டு நிதியொதுக்கீடு ரூ.18.50 கோடியாக இருக்கும். ரூ.14 கோடி நிதியொதுக்கீட்டில் பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ்ப் புதிதாகத் தொடங்கப்பட்டவையும் முன்பு உள்ளாட்சி மன்றங்களால் பராமரிக்கப்பட்டுவந்தவையுமான 350 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகள், நெடுஞ்சாலைகள் துறைப் பராமரிப்பின் கீழ்க் கொண்டுவரப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கிராம அங்காடி மையங்களுக்குச் செல்லும் சாலைத் திட்டம் ஒன்று உள்ளது. இத் திட்டம், கிராமப் பகுதிகளிலுள்ள 800 கி.மீ. நீளமுள்ள நல்ல சாலைகளை அமைத்து 20 பெரிய அங்காடி மையங்களுக்குச் செல்ல வகை செய்கிறது. சாலைகள் அமைக்கும் திட்டம், 20 பெரிய அங்காடி மையங்களுக்குச் செல்ல, கிராமப் பகுதிகளில் 800 கி.மீ. நீளமுள்ள நல்ல சாலைகள் அமைய வகை செய்கிறது. நடப்பாண்டில் இத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.10 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டில் இது ரூ.12.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கரும்பு மேல்வரி சாலை மேம்பாட்டு நிதித் திட்டத்தின்

கீழ், 1995-96 ஆம் ஆண்டில் ரூ.6.43 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்குத் தார் போடும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம் என்று நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத் திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கீடு ரூ.10 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டில் உள்ளூர்ச் சாலைகள் மானியம் ரூ.20 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

75. மாநிலத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளின் தனித் தேவைகள் குறித்துச் சிறப்பாகக் கவனம் செலுத்தி வருகிறோம் என்பதையும், இந்தப் பகுதிகளில் சாலைகளைப் போதுமான அளவுக்கு மேம்படுத்த இரண்டு புதிய திட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளோம் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கடலோரப் பகுதிகளிலுள்ள சாலைகள், மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற புயலாலும், மோசமான தட்ப வெப்ப நிலைகளினாலும் பாதிக்கப்படுகின்றன. கடலோரப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைய, அச்சாலைகளை மேம்படுத்த வேண்டியது உடனடித் தேவை என்று கருதப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, 1995-96 ஆம் ஆண்டில் ரூ.4.50 கோடி நிதியொதுக்கீட்டில் கடலோரச் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். முதற்கட்டமாக, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். அவ்வாறே, மாநிலத்தின் மலைப் பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளின் மேம்பாடு, அவற்றை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் ஆகியவற்றை நாங்கள் உணர்ந்துள்ளோம். 1995-96 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கத்துடன் மலைப்பகுதிச் சாலை மேம்பாட்டு சிறப்புத் திட்டம் தொடங்கப்படும். முதற்கட்டமாக நீலகிரி மாவட்டச் சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும்.

76. அடிக்கடி ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் ஆகியவை, குறிப்பாகக் கடலோரச் சாலைகளில் உள்ள பாலங்கள், மதகுகள் போன்றவற்றைப் பெரிதும் பாதித்துள்ளன என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.21 கோடி செலவில், புயல், வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் 39 பாலங்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத் திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

77. மாநிலத்தில் போக்குவரத்து நெரிசல் மிக்க சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை நாங்கள் தயாரித்திருந்தோம். ரூ.950 கோடி நிதியொதுக்கீட்டுடனான இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதில் உலக வங்கி மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளது. அதன் ஆலோசனையின்பேரில் மேம்படுத்தப்பட வேண்டிய சாலைகளைப் பற்றித் தீர்மானிப்பதற்காக ஆலோசகர் ஒருவரை நாங்கள் நியமித்துள்ளோம். 528 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இரு வழிப்பாதைகளாக்குவது, வலுக்குன்றிய, பழுதுபட்ட பாலங்களை மீண்டும் கட்டுவது, அத்துடன், தற்போதுள்ள 1293 கிலோ மீட்டர் நீளமுள்ள இரு வழிப்பாதை சாலைகளை வலுப்படுத்துவது ஆகிய பணிகள் இம்மேம்பாட்டுப் பணியில் அடங்கும். இத்திட்டம், நமது சாலைப் போக்குவரத்து முறையில் போக்குவரத்து நெரிசல் மிக்க வழித் தடங்களை முழுவதுமாக நிலை உயர்த்தும். இத்திட்டம், 1995-96 ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் முழுவதுமாகச் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

78. தமிழ்நாடு பெருமளவில் நகர்ப்பகுதிமயமாகியுள்ள மாநிலமாகும். நமது நகர்ப் பகுதிகளில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, நாங்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சரக்கு, சாலைப் போக்குவரத்து நிருவாகத் திட்டத்தின் (TRAMP) ஒரு பகுதியாக, மாநிலத்தின் 10 முக்கியமான நகரங்களில் மொத்தம் ரூ.148.66 கோடி செலவில், நாங்கள் 37 பணிகளை மேற்கொண்டுள்ளோம். 1995-96 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான நிதியொதுக்கீடு ரூ.35 கோடியாக இருக்கும். அவ்வாறே, மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காகச் சிறப்பான திட்டமொன்றை நாங்கள் தொடங்கியுள்ளோம். இத் திட்டத்திற்கு, 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட தொழிற்சாலைப் பகுதிகளிலுள்ள சாலைகளுக்கான சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டத்துடன் இப்புதிய திட்டம் கூடுதலாகச் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே மேற்கொண்டுள்ள திட்டம், 1995-96இல் ரூ.5 கோடி ஒதுக்கீட்டுடன், 1996 மார்ச் திங்களில் நிறைவடையும்.

79. கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள தொழில் நுட்பச் சுற்றுச் சூழல், ஒப்பந்தம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, இத்திட்டம், 1994-95-ல் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இத்திட்டத்திற்கான அடுத்த ஆண்டு ஒதுக்கீடு ரூ.20 கோடியாகும்.

80. தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நகர்ப்பகுதிகளுக்குச் செல்லும் விரைவு வழிப் பாதைகள், மாநகர எல்லையோரப் பகுதிப் பாதைகள் ஆகியவற்றை அமைக்கும் புதிய பெரும் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். முதற் கட்டமாகச் சென்னை-கன்னியாகுமரி, சென்னை-பெங்களூர் ஆகியவற்றுக்கிடையே உயர் வேக விரைவு வழிப் பாதையையும், சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களில் எல்லையோரப் பகுதிப் பாதையையும் அமைக்கும் பணி மேற் கொள்ளப்படும்.

81. 1994 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாளிலிருந்து டீசல் விலை உயர்வு, ஏனைய பல்வேறு இடுபொருட்களின் விலையில் ஏற்பட்ட உயர்வு ஆகியவற்றால் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலையை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். 1993 டிசம்பர் திங்களிலிருந்து பேருந்துக் கட்டணங்கள் மாற்றமின்றி ஒரே நிலையில் இருந்ததால், போக்குவரத்துக் கழகங்களால் இடுபொருட்களின் விலை உயர்வைத் தங்கள் வருவாய்க்குள் அடக்கிச் சமாளிக்க இயலவில்லை. அதனால், 1995-96ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.130 கோடி இழப்பைக் காட்டவிருக்கின்றன. டீசல் மற்றும் ஏனைய முக்கிய இடுபொருட்களின் விலைகளில் மீண்டும் மீண்டும் ஏற்படும் உயர்வைச் சமாளிப்பதில் உள்ள இடர்ப்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. செயல் திறன் அடிப்படையிலான விதிக் கோட்பாட்டின்படி செலவுக் குறியீட்டெண்ணை வகுத்துச் செலவுக் குறியீட்டெண்களின் அடிப்படையில், செலவுகளின் உயர்வு நிகழும் பொழுதெல்லாம் அவற்றோடிணைந்து பேருந்துக் கட்டணங்களும் ஆண்டுதோறும் திருத்தியமைக்கப் படலாமா என்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கருதிப் பார்க்கலாம்.

துறைமுகங்கள்

82. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தத் தேவையான முக்கிய அடிப்படை வசதிகளில் துறைமுகங்களும் ஒன்றாகும் என நாங்கள் கண்டறிந்துள்ளோம். எனவே வரும் நிதியாண்டில் மாநிலத்திலுள்ள பல்வேறு துறைமுகங்களைப் பெரிய அளவில் விரிவுபடுத்தவும், நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

83. எண்ணூர் துணைத் துறைமுகத்தை உருவாக்கும் நடவடிக்கையை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளும்படி நாம் மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளோம். நாம் மேற்கொண்ட இந்த முயற்சிகளினாலேயே ஆசிய வளர்ச்சி வங்கியின் ரூ.450 கோடி நிதியுதவியுடன், மொத்தம் ரூ.590 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது விரிவான பொறியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணூர் துறைமுகத்தின் கட்டுமானப் பணி, 1996 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட சென்னை அனல் மின் திட்டம், எண்ணூர் மின் உற்பத்தி நிலையம், மேட்டூர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றுக்குத் தேவையான நிலக்கரியைக் கையாள்வதில் இத்துறைமுகம் பெரிய அளவில் உதவும்.

84. நமது மாநிலத்திலுள்ள நடுத்தரத் துறைமுகங்கள், சிறு துறைமுகங்கள் ஆகியவை விரைவாக வளர்ச்சி அடைய வேண்டும் என்பதையும் அவை தனித்துச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் கடல் வழிப் போக்குவரத்து வாரியம் (Maritime Board) ஒன்றை ஏற்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்ற பின்னர், தமிழ்நாடு கடல் வழிப்

போக்குவரத்து வாரியச் சட்ட முன்வடிவு, சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்படும். நமது மாநிலத்தில் உள்ள சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கு, இவ்வாரியம் அதிக முக்கியத்துவம் கொடுக்கும். கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களைப் பெரிய அளவில் மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிகளை நாங்கள் பரிசீலித்து வருகிறோம். கடலூர் மின் உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கடலூர் துறைமுகம் மேம்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த முதலீடு ரூ.860 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை, தனியார் நிறுவனங்களிடமிருந்து திரட்டப்படும். அனைத்துத் தட்ப வெட்ப நிலைகளுக்கும் ஏற்ற, பல்வேறு சரக்குகளைக் கையாளும் துறைமுகமாக கடலூர்த் துறைமுகத்தை மேம்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அவ்வாறே, நாகப்பட்டினம் துறைமுகத்தில் எண்ணெயைக் கையாளுகின்ற தனி வசதியை ஏற்படுத்த, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இத்துறைமுகத்தை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம்.

85. தூத்துக்குடித் துறைமுகம் அமைந்துள்ள இடத்தையும் அங்கு இயற்கையாக உள்ள அனுகூலங்களையும் அதனைச் சார்ந்தமைந்த உள் நாட்டுப் பகுதியின் சிறப்பான தனித் தன்மைகளையும் நாம் கவனமாக ஆராய்ந்துள்ளோம். இத் துறைமுகத்தைப் பெரிய அளவில் கப்பல் போக்குவரத்து முனையமாக மேம்படுத்த, அதனை விரிவுபடுத்தும் பணியை விரைவில் மேற்கொள்ளும்படியும், நவீன அடிப்படை வசதிகளைப் பயன்படுத்திப் பல்வேறு வகையான சரக்குகளைக் கையாளும் வகையில் பன்னாட்டுத் தரத்திற்கேற்பத் துறைமுகச் சேமிப்புக் கிடங்கு வசதியைச் செய்து கொடுக்கும்படியும் மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

நகர்ப்பகுதி வளர்ச்சி

86. தமிழ்நாடு விரைவாக நகர்மயமாகி வரும் மாநிலம் என்பதையும், நகர்ப் பகுதியில் இட நெருக்கடியை நீக்குதல், ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க அதிக அளவு முதலீடு செய்யவேண்டியது அவசியம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்கான நிதி ஆதாரங்களைப் பொதுத் துறையிடமிருந்து மட்டுமன்றித் தனியார் துறையிடமிருந்தும் திரட்ட வேண்டியது அவசியமாகிறது. தனியார் துறையிடமிருந்தும், மூலதனச் சந்தைகளிலிருந்தும் அடிப்படை வசதித் திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களைத் திரட்ட, தனித் திறம் வாய்ந்த ஓர் அமைப்பு அவசியமாகும். நகர்ப் பகுதிக் கட்டமைப்பு அடிப்படை வசதிகளை நிறுவுவதற்கான நிதியுதவி பெறுவதற்கு நகர்ப்பகுதிக் கட்டமைப்பு அடிப்படை வசதி நிதியுதவி நிறுவனம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. தொடக்கத்தில் இந்நிறுவனம், தற்போது செயலிலுள்ள நகராட்சி-நகர்ப் பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து சொத்துக்களை மாற்றுவதன் அடிப்படையில், ரூ.175 கோடி தொகுநிதியுடன் செயல்படத் தொடங்கும். கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் இப்புதிய நிறுவனம் அனைத்திந்திய நிதியுதவி நிறுவனத்திடமிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டும். இந்நிதி, நகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

87. இந்த மாநிலம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் அனைத்து நாட்டு மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்ட நிதி நிறுவனச் சீரமைப்பு-விரிவாக்கம் (FIRE) என்ற திட்டத்தின் கீழ்ப் புதிய திட்டப்பணிகளை மேற்கொள்ளும். இத்திட்டம், நாட்டில் கடன் சந்தை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார ரீதியில் தனித்து இயங்கக் கூடிய அடிப்படை வசதித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க வகை செய்கிறது.

88. 1994-95 ஆம் ஆண்டில், அதிராமப்பட்டினம், பொன்னேரி, மானாமதுரை, உசிலம்பட்டி, அவினாசி, சத்துவாச்சேரி, பல்லடம், கோத்தகிரி, தூவூர், திருவள்ளூர் ஆகிய நகரங்களில் ரூ.8.39 கோடி முதலீட்டுடனான 39 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. பூவிருந்தவல்லி, காங்கேயம், வீரப்பன் சத்திரம், காசிப்பாளையம், குளித்தலை, வந்தவாசி, இளையான்குடி, திருச்செந்தூர், சோளிங்கர், வாணியம்பாடி, கூத்தாநல்லூர் ஆகிய நகரங்களில் ரூ.8.30 கோடி முதலீட்டுடனான மேலும் 49 திட்டப்பணிகளை மேற்கொள்ள, நாங்கள், மத்திய அரசை அணுகியுள்ளோம்.

89. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம், ரூ.112 கோடி வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கீடு உட்பட, உயர்த்தப்பட்ட ஒதுக்கீடு ரூ.202 கோடி செலவில் 1995-96ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நிதியுதவியை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கக் கோரி நாங்கள் உலக வங்கியை அணுகியுள்ளோம்.

சென்னை மாநகர் மேம்பாடு

90. "எழில்மிகு சென்னை-2000" திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை, இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரை 2000 ஆம் ஆண்டில் முன்னோடிப் பெருநகராக உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் வரையப்பட்டுள்ளது.

91. என்னுடைய கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4000 கோடியாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன். இத்திட்டத்தை நாங்கள் 1994-95-ல் தொடங்கியுள்ளோம். இது சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ரூ.4000 கோடி முதலீடு என்பது அடுத்த 5 ஆண்டுகளில் செலவிடப்படுவதற்கு உறுதி செய்யப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தத் திட்டத்தில் உள்ள ரூ.1600 கோடி செலவிலான குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றுப் பணித்திட்டப் பகுதிக்கு உலக வங்கியிடமிருந்து நிதி பெற ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம். இது 1995-96ல் மேற்கொள்ளப்படும். ரூ.650 கோடி செலவிலான மின் அனுப்புகை-விநியோக மேம்பாடு 120 மெகாவாட் என்ற மின்கமை உச்சத்தேவைத்தருணங்களில் மின் உற்பத்தித் திறனுக்கு வகை செய்தல் ஆகிய பணிகள், ஆசிய வளர்ச்சி வங்கி, ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சாலைப் போக்குவரத்து ஏற்பாட்டில் காணும் நெரிசல்களை நீக்குதல், அதனை நிலையுயர்த்துதல் மற்றும் போக்குவரத்து நிருவாகம் ஆகியவற்றிற்கான

ஒதுக்கீடு ரூ.300 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 1994-95-ல் ரூ.55 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1995-96-இல் ஒதுக்கீடு ரூ.65 கோடியாக இருக்கும். சுற்றுச்சூழல் துப்புரவுப்பணித் திட்டத்திற்கும் மாநகர நீர்வழி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் உரிய ஒதுக்கீடு ரூ.400 கோடியாகும். இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு நாங்கள் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம். வரும் ஆண்டில் அவர்களின் ஒப்புதலைப் பெறுவோம் என நம்புகிறோம். வெள்ள நீர் வடிகால் திட்டப்பணி ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995-96-ல் இதற்கான ஒதுக்கீடு ரூ.12 கோடியாக இருக்கும். வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.175 கோடியாக இருக்கும். மாநகரப் போக்குவரத்துத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 1995-96-இல் பேரளவு விரைவுப் போக்குவரத்துத் திட்டம் நிலை-II பணி தொடங்கப்படும் என்று நம்புகிறோம். எழில்மிகு சென்னை-2000 திட்டத்தின் அனைத்துக் கூறுகளும் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இவற்றிலிருந்து அறியலாம்.

92. சென்னை போன்ற பெருநகரங்களுக்குத் தேவைப்படக்கூடிய முதலீடு மிக அதிகமாகும். இதற்குத் தனியாக ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை உருவாக்க நாங்கள் இப்போது முயன்று வருகிறோம். இந்நிறுவனத்தின் பங்கு மூலதன உதவித் தொகைக்கு, மாநில அரசின் பங்காக ரூ.20 கோடியை, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்த்துள்ளோம். இதற்கு இணையாக மத்திய அரசும் அதன் பங்காக ரூ.20 கோடி அளிக்க உறுதி அளித்துள்ளது. இவ்வாறாக, இந்நிறுவனம், சென்னைப் பெருநகரப் பகுதிகளில் முக்கிய முதலீடுகளைச் செய்யும் பணியை மேற்கொள்ள இயலும். சென்னை மாநகராட்சியின் வரவு-செலவுத் திட்டத்தில் மூலதன முதலீடு 1991இல் ரூ.22 கோடியாக இருந்தது. இது 1994-95இல் ரூ.118 கோடியாக உயர்ந்துள்ளது.

வீட்டு வசதி

93. இந்த அரசு, வீட்டு வசதித் திட்டத்திற்கு மிகவுயர்ந்த முன்னுரிமை வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். வீட்டு வசதித் திட்டம், ஒரு பொருளாதாரப் பணித் திட்டம் என்கிற வகையில், மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இது, கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவதுடன், ஒட்டு மொத்தப் பொருளாதார நடவடிக்கைக்கு ஓர் தூண்டுகோலாகவும் அமைகிறது. வீட்டு வசதி உண்மையில் எந்த

அளவிற்குத் தேவையாக உள்ளது என்பதைக் கண்டறிந்து உறுதிசெய்ய, ஒரு ஆய்வு நடத்தப்பட்டிருந்தது என்பதை நான் என்னுடைய கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் தெரிவித்திருந்தேன். அந்த ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் தற்போது பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. தொடக்கப் புள்ளி விவரங்களின் அடிப்படையில், குறைந்தது 1.40 இலட்சம் வீடுகளை நாம் உருவாக்க வேண்டுமென மதிப்பிடப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள தேவைகளை விரைந்து சமாளிக்க, மாநில அரசின் அமைப்புகளும், தனியார் துறையும் ஊக்குவிக்கப்படும்.

94. 1995-96ஆம் ஆண்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.50.50 கோடி செலவில் 8,000 வீட்டுமனைகளை உருவாக்கும். இத்துடன் ரூ.191.50 கோடி செலவில் 12,100 வீடுகள் (Units) உருவாக்கப்படும். ரூ.80 கோடி செலவில் 1995-96ஆம் ஆண்டில் 10,000 வீடுகள் கட்ட, நகர்ப் பகுதி வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் ஆதரவளிக்கும்.

95. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், 1995-96ஆம் ஆண்டில் ரூ.8 கோடி செலவில், 4,000 குடியிருப்பு அடுக்ககங்களையும், வீடுகளையும் கட்டும். இத்துடன், நடைபாதைவாசிகள் குடியிருப்பு வசதித் திட்டத்தின் கீழ் 1995-96ஆம் ஆண்டில் 2,000 குடும்பங்கள் பயனடையும். ஆற்றுக் கரையோரங்கள், பொதுப் பயன்பாட்டு பகுதிகள், சாலை, இரயில்பாதை ஓரப் பகுதிகள் போன்ற தூய்மையற்றப் பகுதிகளில் வாழும் 55,000 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்காக, உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரும் ரூ.100 கோடிக்கான திட்ட அறிக்கை ஒன்று, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

96. 1995-96ஆம் ஆண்டில், வட்ட அளவிலான (Taluk) வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.6.40 கோடி ஒதுக்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் வீடுகளின் நிலை உயர்த்தல் (SHUPRA) என்ற திட்டம், 1995-96ல் மேலும் 10,000 குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் நீட்டிக்கப்படும். இத்திட்டத்திற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்படுகிறது.

97. கிராமப் பகுதிகளில், ஆதி திராவிடர் அல்லாத பிற வகுப்பைச் சேர்ந்த ஏழை, எளியோருக்கு சிமெண்ட் கற்கலவைக் கூரையுடன் கூடிய வீடுகளை இலவசமாக வழங்குவதற்காக ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.13.81 கோடி ஆகும். இதில், ரூ.4.60 கோடி, வீட்டு வசதித் துறையின் கீழ் வரும் ஒதுக்கீடாகும். 1995-96ஆம் ஆண்டில், கிராமப்புற ஏழைகளுக்கு 6,577 வீடுகள் இலவசமாக வழங்கப்படும்.

குடிநீர் வழங்கல்

98. குடிநீர் போதுமான அளவிற்கு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு இவ்வரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் பணிக்கு 1994-95ஆம் ஆண்டில் ரூ.387.72 கோடி நிதியொதுக்கீடு செய்யப் பட்டிருந்தது. 1995-96ஆம் ஆண்டில் இது ரூ.419.97 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

99. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றும் பணியை மேம்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநகரத்திற்கு நாளொன்றுக்கு 18 கோடி லிட்டர் குடிநீரைக் கொண்டு வர, மொத்தம் ரூ.1,638 கோடி செலவில் புதிய வீராணம் திட்டம் 1995-96இல் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.159.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



100. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட இடையறாத முயற்சிகளின் விளைவாக, முடிவில் தெலுங்கு-கங்கை திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 1995ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் சென்னை மாநகருக்கு 300 கோடி கன அடி கிருஷ்ணா நதி நீரை வழங்க ஆந்திரப் பிரதேசம் ஒப்புக் கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஆந்திரப் பிரதேச அரசு அளித்த தெலுங்கு-கங்கை திட்டத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட தற்காலிகச் செலவான ரூ.2190 கோடியில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.521 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு ரூ.367 கோடி அளித்துள்ளது. ஆந்திரப் பிரதேச அரசுக்கு மேற்கொண்டும் கொடுக்கும் தொகைக்காக, வரவு-செலவுத் திட்டம் ரூ.75 கோடிக்கு வகை செய்கிறது. ஆந்திரப் பிரதேச அரசு இத்திட்டத்தை நிறைவேற்றும் விரைவின் அடிப்படையிலும் இத்திட்டத்தின் மதிப்பீடுகள் முடிவு செய்யப்படுவதன் அடிப்படையிலும் தேவைப்படக்கூடிய தொகைக்கு உரியவாறு வகை செய்ய, நாங்கள் இந்நிதியொதுக்கீட்டை உயர்த்துவோம். தமிழ்நாட்டிற்குள் இத்திட்டத்துடன் இணைந்த பணிகளை பொதுப்பணித் துறை செயல்படுத்துவதற்காக வரவு-செலவுத் திட்டம் ரூ.14.55 கோடிக்கு வகை செய்கிறது. 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 300 கோடி கன அடி நீர் கிடைக்கப்பெறும் போது, அதனைப் பெற்று வழங்க சென்னை மாநகர் ஆயத்தமாக இருக்க வேண்டும். இதற்காக ரூ.177 கோடி செலவில் திட்டப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை முடிக்க, வரவு-செலவுத் திட்டம் ரூ.10 கோடிக்கு வகை செய்கிறது.

101. கிருஷ்ணா நதிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் முடிவாக எதிர்பார்க்கின்ற 1200 கோடி கன அடி நீரைப் பயன்படுத்த, ரூ.1231 கோடி நிதியுதவி அளிக்கும்படி நாங்கள் உலக வங்கியிடம் கோரியுள்ளோம்.

102. வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) நிதியுதவி பெற்ற கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டத்தை 1995-96 இல் செயல்படுத்தத் தொடங்குவோம். இத்திட்டம், ரூ.572 கோடி செலவில் செயல்படுத்தப் படவுள்ளது. இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

103. ரூ.252 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம் 1995-96ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

104. உலகவங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம் 1994 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிறைவடைந்துள்ளது. கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகியவற்றில் குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான இத்திட்டப் பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

105. மாநிலத்திலுள்ள 96 நகராட்சிகளுக்கு முழுவதுமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் 1995-96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 8 மாநகராட்சிக்குக் குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான திட்டப்பணிகள் 1994-95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். கரூர், ஒசூர், எடப்பாடி, உதகமண்டலம், திண்டுக்கல் ஆகிய 5 நகராட்சிகளில் குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான திட்டப்பணிகள் 1995-96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 1995-96 ஆம் ஆண்டில் ஏனைய இரு நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

106. தமிழ்நாட்டில் 355 நகர்ப்பகுதி பேரூராட்சிகளும், 265 கிராமப் பகுதி பேரூராட்சிகளும் உள்ளன. 1994-95ஆம் ஆண்டு இறுதிக்குள் 307 நகர்ப்பகுதி பேரூராட்சிகளுக்கும், 157 கிராமப் பகுதி பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் 10 நகர்ப்பகுதி பேரூராட்சிகளுக்கும், 33 கிராமப்பகுதி பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

107. பேரூராட்சிகள் உட்பட, நகர்ப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் நிலைமையைச் சமாளிக்கச் செய்யப்பட்ட நிதியுதவி ஏற்பாடுகள் போதுமானவையாக இல்லை. தற்போது, ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்திடமிருந்து இத்திட்டங்களுக்காக நாம் ஓரளவு நிதியைப் பெறுகின்றோம். ஆனால், இவற்றுக்கான நிதித் தேவை மிக் அதிகமாக உள்ளது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் செலவு பிடிக்கும் சிறு திட்டங்களைக் கூட, நகராட்சிகள் தாமாகவே மேற்கொள்ள முடியாத அளவிற்கு, தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியச் சட்டத்தில் வரையறைச் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய திட்டங்களுக்கு அதிக நிதியுதவி பெற இயலும் வகையில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு

வருவது உட்பட, விரிவான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு நிறுவன நிதியைக் கோருவதன் மூலம், 1995–96ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.25 கோடியையாவது பெற வேண்டும் என்பதே எங்களுடைய திட்ட இலக்காகும்.

108. ஊரகக் குடியிருப்புகளில் கிடைக்கின்ற குடிநீரின் அளவையொட்டி அவற்றின் தகுதி நிலையை உறுதி செய்வதற்காக, 1992ஆம் ஆண்டில் விரிவான மறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். அந்த ஆய்வின் அடிப்படையில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதனையும் பெற்றிராத குடியிருப்புக்கள் அனைத்திற்கும், மற்றும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் கிடைக்கின்ற, ஓரளவில் மட்டிலும் குடிநீர் வசதி அளிக்கப்பட்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் முழு அளவில் குடிநீர் வசதி அளிக்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம். இதுவரை 1-4-1992ஆம் நாளிலிருந்து, 1994–95ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குடியிருப்புகள் உட்பட, 1994–95ஆம் ஆண்டில் மொத்தம் 9,300 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1-4-1995ஆம் நாளன்று இதுவரையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதனையும் பெறாமல் உள்ள குடியிருப்புகள் 1037 ஆகும். எஞ்சியுள்ள இந்த 1037 குடியிருப்புகள் அனைத்திற்கும் 1995ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

109. கிராமப் பகுதிகளுக்குப் போதிய அளவு நீர் வழங்கும் திட்டத்திற்கு இந்த அரசு மிக உயர்ந்த முன்னுரிமை அளித்துள்ளது. 40 ஊரகப் பகுதி பேரூராட்சிகளுக்கும், 9,938 ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ரூ.894 கோடி செலவு பிடிக்கும் தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல்–துப்புரவுத் திட்டம், நிதியுதவி பெறுவதற்காக உலக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த இயலும்வகையில் இது தொடர்பாக மத்திய அரசுடனும், உலக வங்கியுடனும் நாங்கள் மேற்கொண்டும் தொடர்பு கொள்வோம்.

110. ஊரகக் குடிநீர் வழங்கலுக்கான மொத்த நிதியொதுக்கீடு ரூ.188.41 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது, நடப்பாண்டின் நிதி ஒதுக்கீடான ரூ.127.60 கோடிக்கும் மேலாக ஒரு குறிப்பிடத்தக்க உயர்வைக் காட்டுகிறது. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு, 1994–95ஆம் ஆண்டில் ரூ.50 கோடி அளவுக்கு மத்திய அரசின் நிதியுதவியை நாங்கள் கோரியிருந்ததை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். நடப்பாண்டிலும் ரூ.38.84 கோடி மத்திய அரசின் நிதியுதவியை நாம் பெறவிருக்கிறோம். இத் திட்டத்தின் கீழ் 1995–96ஆம் ஆண்டில், ரூ.40 கோடி நிதியொதுக்கீட்டை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

111. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை குடிநீர் வழங்கல் வசதிகள் போதிய அளவுக்குச் செய்யப்படாதது குறித்து மதிப்பீடு ஒன்று செய்யப்பட்டது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்ய, தனி நிதியொதுக்கீடு செய்யும்படி கோரியிருந்த எங்களுடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1994–95ஆம் ஆண்டில் ரூ.10.42 கோடி செலவில் 570 ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டு வருவது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். 1995–96ஆம் ஆண்டில் ரூ.11.58 கோடி செலவில் 613 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் 1995 டிசம்பர் திங்களுக்குள் இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு ஆதி திராவிடர் குடியிருப்பிற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

112. குடிநீரில் புளோரைடு அதிகமாகக் கலந்துவிட்ட பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் அடங்கல் திட்டம் ஒன்று புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்களில் புளோரைடினால் குடிநீர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் ரூ.42.27 கோடி செலவில், 2 கட்டங்களில் 458 குடியிருப்புகள் பயன்பெறும். இத்திட்டத்திற்கு, 1995–96ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.33.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

113. குடிநீரில் அதிக அளவு உவர்த் தன்மை உள்ள பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.8.40 கோடி செலவில் 160 கடலோர மீனவக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும்.

சுற்றுச் சூழல்

114. சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கவும், நிலைத்திருக்கக்கூடிய மேம்பாட்டிற்கு உறுதி செய்யவும் இவ்வரசு மிக உயர்ந்த முக்கியத்துவம்



அளித்து வருகிறது. சுற்றுச் சூழல் துறையில், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சுற்றுச் சூழலை முறைப்படுத்தும் பணியினை ஆற்றி வருகிறது. அதனைத் தவிர, இத்துறையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கென்று ஒரு அமைப்பு தேவைப்படுகிறது. இந்த நோக்கத்தினை எய்த, 1995–96இல் புதிதாகச் சுற்றுச் சூழல் துறை ஏற்படுத்தப்படும். ரியோடி ஜெனிரோவில் 1992 ஜூன் திங்களில் உலகச் சுற்றுச் சூழல் மேம்பாடு குறித்த ஐக்கிய மாநாடு (UNCED) வகுத்தளித்த நிகழ்ச்சி நிரல் இனம் 21 ல்(Agenda 21) இடம் பெற்றுள்ள பணித்திட்டத்தின் கீழ் வரும் அரசு செயல் திட்டப் பணியை இப்புதிய துறை மேற்கொள்ளும்.

115. பெருமளவு மாசு ஏற்படுத்தும் 17 தொழில் தொகுதிகளினால் ஏற்படும் மாசு அளவைக் கண்காணிக்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் திறம்பட நிறைவேற்றி வருகிறது. மாசுக்கட்டுப்பாடு குறித்துக் கண்காணிக்கப்படுவதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்ட 119 தொழில் பிரிவுகளில் 59 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே மாசுக் கட்டுப்பாடு குறித்த தர நிர்ணயங்களுக்கு இணங்கப் போதிய வசதிகள் செய்து கொண்டுள்ளன. எஞ்சிய தொழில் பிரிவுகளும், மாசுக்கட்டுப்பாட்டுத் தர நிர்ணயங்களுக்கு இணங்க இருக்கும் வகையில் விரைவில் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

116. தோல் பதனிடு தொழிற்சாலைக் கழிவு நீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க நாம் சிறந்த நடவடிக்கையினை எடுத்துள்ளோம். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பம்மலில் ரூ.7.03 கோடி செலவில் தொழிற்சாலைக் கழிவு நீர் சுத்திகரிப்புப் பொது நிலையமொன்றை நிறுவியுள்ளது. தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனம் (TALCO) வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் ரூ.27.08 கோடி திருத்தச் செலவில் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் பொது நிலையத்தை நிறுவியுள்ளது. திருத்தச் செலவில் இந்த அரசு தன் பங்காக, கூடுதலாக ரூ.2.68 கோடியை வழங்கும். திருத்தச் செலவில் மத்திய அரசு அதன் பங்கிற்குக் கூடுதலாக ரூ.3.08 கோடி வழங்குமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம். சாயம் தோய்க்கும் தொழிலுக்காகத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் 23 பொது நிலையங்களை ஏற்படுத்தும். இது, செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்., பெரியார், சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள மொத்தம் 1847 பிரிவுகளுக்குப் பயனளிக்கும்.

117. காவிரியாற்றில் தெரிந்தெடுக்கப்பட்ட 5 இடங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட தொலைவுப் பகுதிகளில் ரூ.38.20 கோடி மொத்தச் செலவில் மாசு அகற்றும் பணியினை மேற்கொள்வதற்கு ஆற்று நீர்ப்பயன்பாட்டு தேசிய செயல் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இந்த 5 பகுதிகள் ஈரோடு, திருச்சிராப்பள்ளி, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், பவானி ஆகிய இடங்களில் உள்ளவையாகும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

118. அத்துடன், காவிரியாற்றில் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் மாசு ஏற்படுவதைத் தடுக்கவும், ரூ.421.75 கோடி செலவில் திருத்தியமைக்கப்பட்ட திட்ட அறிக்கை ஒன்றை ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 1995–96இல் நிதியுதவி கோரும் திட்டங்களில் இத்திட்டமும் சேர்க்கப்படுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

119. சென்னை மாநகர் நீர் வழிகளில் மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்கு ரூ.355.30 கோடி செலவிலான திருத்தியமைக்கப்பட்ட திட்ட அறிக்கை ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கழிவு நீரை அகற்றுதல், அவற்றை வெளியேற்றுதல் மற்றும் தொடர்புடைய பணிகள் குறித்த

கூடிய அனைத்து முயற்சிகளும், முக்கியமாக கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில்தான் அமையும். அரசு கல்லூரிகளை மேம்படுத்துவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில்ரூ.48.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கல்லூரிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தைத் தொடங்குவதற்கு மாநில உயர் கல்விக் குழுவும், சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களும் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயல்படும் நிலையில் உள்ளன. உயர் கல்விக்கு நிதியுதவி வழங்குவது குறித்த பிரச்சினை ஆய்வில் உள்ளது. அனைத்து வகை உயர் கல்விக்கும் மொத்தம் ரூ.213.28 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. திருப்பி வசூலிக்கப்படும் செலவுத் தொகை ரூ.2.93 கோடி மட்டுமே ஆகும். மொத்த மாணவர்களில் 40 சதவீதத்தினர் அவர்களின் படிப்புக் கட்டணங்களை முற்றிலுமாகச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பட்டுள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு மாணவர்கள் படிப்புக் கட்டணச் சலுகையை ஏதாவதொரு வகையில் பெறுகின்றனர். அண்மையில் ரூ.25 இலட்சம் செலவில் கடன் படிப்புதவித் திட்டம் ஒன்றை தொடங்கியுள்ளோம். உயர் கல்விக்கான செலவுத் தொகை வசூலிக்கப்படுவதற்கேற்ப இத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

132. தொழில் நுட்பக் கல்விக்கு நாம் உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளோம். தொழில் நுட்பப் பணியாளர் கல்வியில் மாணவர்களை சேர்ப்பதில் நாம் நாட்டிலேயே இரண்டாம் இடத்தில் உள்ளோம். மொத்த மாணவர் தொகையில், இந்த மாணவர்களின் சதவீதம் அனைத்திந்திய அளவைவிட ஏறக்குறைய இருமடங்காகும். மொத்தம் ரூ.76 கோடி செலவில், உலக வங்கி ஆதரவு பெற்ற தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக உருவாகிவரும் தொழில் நுட்பவியல் பாடங்களில் 24 புதிய பட்டயப்படிப்புகளும், 2 பட்டய மேற்படிப்புகளும் கொண்டு வரப்பட்டுள்ளன. மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் அவற்றின் கல்வி பயிற்றுவிக்கும் திட்டங்களுக்குத் துணைபுரியும் வகையில் கட்டிடப் பணிகளை மேற்கொள்ளக் கடனுதவி அளிக்கப்படும். இத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

133. தமிழ் நாட்டில் விளையாட்டுகளை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நன்கறிவர். அவருடைய வழிகாட்டலின் கீழ், புகழ்மிக்க ஜஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மிக குறுகிய காலத்தில், அதாவது 7 1/2 மாத கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது. விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம் இம் மாநிலத்தில் அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விளையாட்டு வீரர்கள் சிறந்த சாதனை புரிவதற்காக அவர்களுக்குப் பெரும் அளவில் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளன. விளையாட்டு வீரர் இல்லத் திட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெறவுள்ள மாபெரும் நிகழ்ச்சியான ஏழாவது தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டி விழாவை நடத்தும் பெரும் புகழைச் சென்னை மாநகர் பெறவுள்ளது. இந்த விளையாட்டுத் திட்டம் மொத்தம் ரூ.125 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதில், நிறுவன நிதியுடன், கோயம்பேட்டில் கட்டப்பட்டுவரும் ரூ.70 கோடி செலவிலான விளையாட்டு கிராமமும், ரூ.45.46 கோடி செலவிலான பன்னாட்டு தரத்தில் அமையும், டென்னிஸ், ஆக்கி விளையாட்டுகள் உடற் பயிற்சித் திறன் போட்டியில் நீச்சல் திறன் போட்டிகள், துப்பாக்கி சுடும் போட்டிகள் ஆகியவற்றிற்கான அரங்க வசதிகளும் அடங்கும். இதற்கு அதிக நிதி தேவைப்படுவதைக் கருதிப் பார்த்து, இந்த போட்டி விளையாட்டுக்களை நடத்த குறைந்தது ரூ.25 கோடியாகிலும் தனி நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

தமிழ் வளர்ச்சி – பண்பாடு

134. தஞ்சாவூரில், 1995 ஜனவரியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தம்மால் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டார். வருங்காலவளமை "அறிவியல் தமிழ்" வளர்ச்சியில்தான் உள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இம்மாநாட்டில் வலியுறுத்தியுள்ளார். "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற முழக்கத்தையும் அறிவித்துள்ளார். மேலும், தமிழ் மொழி, பண்பாட்டின் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சிறப்பாக வகுத்திட்ட ஒன்பது அம்சச் செயல் திட்டம் ஒன்றையும் இம்மாநாட்டில் அறிவித்தார். மதுரையிலுள்ள உலகத் தமிழ் சங்கத்தைப் புதுப்பிப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.25 இலட்சம் தொடக்க நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. விரிவான தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுதிகளைத் தயாரிப்பதற்கும் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப்பணிகளை முடிப்பதற்கும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் இல்லம் ஒன்றை ஏற்படுத்தவும், ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் கரந்தைத் தமிழ் சங்கத்திற்கு ரூ.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மொரிசியஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வு இருக்கையொன்றினை நாம் ஏற்படுத்துவோம். மயிலாடுதுறையில் தருமபுரம் ஞானாம்பிகை மகளிர் அரசு கல்லூரிக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

135. அறிவியல் தமிழின் பயன்பாட்டை எங்கும் பரப்ப, 1995-96இல் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தமிழில் கணினியின் பயன்பாட்டினைப் பரவலாக்கும் பணியினை மேற்கொள்ளத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வலுப்படுத்தப்படும். கணினி விசைப் பலகையை (Computer key board) முறைப்படுத்தும் பொருட்டு, தமிழில் கணினி தகவல் தொகுப்பு சாதனைப் பயன்பாட்டைக் குறித்து ஆய்வு செய்வதற்கு வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

136. மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகாலை ரூ.78.30 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணியினை நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் அறிவர். இப்பணி 1996 மார்ச் வாக்கில் முடிவடையும். சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள அரசு கீழ்த் திசையியல் சுவடிகள் நூலகத்திற்கு வருமாண்டில் ரூ.23.62 இலட்சம் செலவில் சீர்வளி வசதி செய்து கொடுத்துப் புதுப்பித்து, தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்படும். திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பழனியில் புதிய அருங்காட்சியகம் ஒன்று ஏற்படுத்தப்படும். சென்னை அருங்காட்சியகத்திலுள்ள விலைமதிப்பற்ற கலைக் கருவூலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, படிமக்கலைக்கூடம் ரூ.22 இலட்சம் செலவில் சீர்வளி வசதி செய்யப்படும். புகழ்பெற்ற அமராவதி சிற்பங்களை வைப்பதற்கு புத்த சமய நிலையம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துவது குறித்து விரிவான செயற்குறிப்பு ஒன்றினை நாம் தயாரித்துள்ளோம். கோயம்புத்தூர் இசைக் கல்லூரிக்கு ரூ.10 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுக்கப்படும்.



மக்கள் நல்வாழ்வு – குடும்ப நலன்

137. மக்கள் நல்வாழ்வு - குடும்பநலனுக்கு 1994-95ல் ஒதுக்கீடு ரூ643.14 கோடியாக இருந்தது. இது 1995-96இல் ரூ.688.85 கோடியாக உயர்த்தப்படும்.

138. சிறந்த முறையில் தொடக்கச் சுகாதாரப் பாதுகாப்பு முறையை மேம்படுத்துவதற்கு நாம் அதிக முக்கியத்துவம் அளித்து வந்துள்ளோம். தமிழ்நாட்டில் 8681 துணைச் சுகாதார நிலையங்களும் 1446 தொடக்கச் சுகாதார நிலையங்களும் உள்ளன. 1995-96 இல் 70 புதிய தொடக்கச் சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டப்படும் என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1.75 கோடி நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

139. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பள்ளிச் சுகாதாரத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இதுவரையில் 62 இலட்சம் சிறார்களுக்குச் சோதனை செய்து தேவையான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிச் சுகாதாரச் சிகிச்சை முகாம்கள், சமுதாய மக்களிடையே நோய் ஏற்படுவதைக் குறைக்கும் அதே சமயம், குறைந்த செலவில் நிறைந்த பயன்தரும் ஒரு வழி என்று வெளிநாட்டு நிறுவனங்கள் பாராட்டியுள்ளன.

140. வட்ட அளவிலான மருத்துவமனைகளில் போதிய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு இந்த அரசு தனி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு வட்ட மருத்துவமனைக்கும் மகளிர் நோயியல், சிறார் மருத்துவம், கண் நோயியல், ஆகிய துறைகளில் குறைந்த அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படுவது உறுதி செய்யப்படும். 50க்கும் அதிகமான படுக்கை வசதிகளைக் கொண்டுள்ள வட்ட மருத்துவ மனைகள்,

விரிவான ஆய்வின் அடிப்படையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், இத்திட்டத்திற்கு வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுத் தருமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

120. மோசமாகப் பாதிக்கக்கூடிய சில கடற்கரைப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க ரூ.50 கோடி மொத்தச் செலவிலான திட்டமொன்று வெளிநாட்டு நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 'டச்சு' அரசு ஆர்வம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், கடலரிப்பிற்கு உள்ளாகக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் புதுமையான, நிலைத்திருக்கக்கூடிய வகையிலான சில பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். கடலரிப்பைத் தடுக்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1.31 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

121. மோட்டார் வண்டிகளால் ஏற்படும் தூய்மைக் கேட்டைக் கண்காணிக்கும் புதிய திட்டமொன்று 1994-95இல் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மொத்தம் ரூ.5 இலட்சம் செலவில் 1995-96 இலும் தொடரப்படும். "ஓசோனைக் குறைப்பதை" (Ozone depletion) கண்காணிக்கும் புதிய திட்டமொன்று ரூ.2.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் ஓசோனைக் குறைக்கும் (Ozone depletion) பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கண்காணிக்கப்படும்.

கல்வி

122. கல்வித்துறை 1995-96 ஆம் ஆண்டில் ரூ.2213.17 கோடி நிதி ஒதுக்கத்தைப் பெற்றுள்ளதன் மூலம் நிதியொதுக்க அளவில் தனிப் பெருந்துறையாகத் தொடர்ந்து திகழ்கிறது.

123. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் "1998ஆம் ஆண்டில் அனைவர்க்கும் கல்வி" என்ற குறிக்கோளை வகுத்துள்ளார்கள். இதற்காக ஒருங்கிணைந்த முறையில் பல்வேறு துணை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. தொடக்கக் கல்விக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அதன் மூலம் இப்போது தொடக்கக் கல்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. போதிய அளவிற்குக் கல்வி வசதிகள் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்க, விரிவான மக்கள் தொகைப் புள்ளி விவரம் மற்றும் பள்ளிகளின் இடப்பரப்பு ஆகியவை குறித்த ஆய்வை நாம் மேற்கொண்டுள்ளோம். பிறப்பு விகிதம் மிகவும் குறைந்ததை அடுத்து, 1995ஆம் ஆண்டு முதற்கொண்டு பள்ளிக்குச் சென்று கல்வி பயில வேண்டிய சிறார்களின் எண்ணிக்கையும் உண்மையில் குறையும் என்ற மகிழ்ச்சிகரமான நிலையில் தமிழ்நாடு உள்ளது. அதாவது இனிமேல் புதிய வசதிகளை அதிக அளவில் உருவாக்க நாம் முதலீடு செய்ய வேண்டியிராது. அதற்குப் பதிலாகத், தற்போதுள்ள வசதிகளின் தரத்தை மேம்படுத்தக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். 1995-96ஆம் ஆண்டில் புதிதாக 100 தொடக்கப் பள்ளிகள் தொடங்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இது, எளிதில் சென்றுவர முடியாத தொலை தூரத்தில் அமைந்துள்ள ஊர்களில் பள்ளிகளை ஏற்படுத்தும் பிரச்சினையைச் சமாளிக்கவும் வழிவகுக்கும். 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிக்கும் 1 கி.மீ. தொலைவிற்குள் ஒரு தொடக்கப் பள்ளி என்கிற கோட்பாட்டை முழுமையாக எய்தவும் இது உதவும்.

124. இப்போது நாம் கல்வித் தரத்தின் அம்சங்களைக் கவனிப்போமாக. இந்த நோக்கங்களின் பேரில்தான், முதல் வகுப்பு, ஆறாம் வகுப்பு, பதினோராம் வகுப்புப் பாடப் புத்தகங்களும் பாடத் திட்டங்களும் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. கல்வி கற்றலில் குறைந்தபட்சத் தகுதி (MLL) என்ற கோட்பாடு குறித்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு முதல் வகுப்பு பாடப் புத்தகம் மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம், ரூ.120 கோடி செலவில், கல்வி நிலையில் பின்தங்கியுள்ள 4 மாவட்டங்களில், அதாவது, தருமபுரி,



திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. 1995-96 இல் இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

125. 1994-95ஆம் ஆண்டில் இந்த அரசு, கல்வி அடிப்படை வசதித் திட்டத்தைத் (EIP) தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 1994-95ஆம் ஆண்டு தொடங்கி 3 ஆண்டு கால அளவில், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள மேனிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் அனைத்திற்கும் போதிய அளவிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். விரிவான ஆய்வின்படி, 7202 நடுநிலைப் பள்ளிகளுக்கும், தொடக்கப்பள்ளிகளுக்கும் கூடுதலாக நிரந்தரக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியுள்ளது. 1994-95ல் 1600 கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995-96ல் கூடுதலாக 2802 கட்டிடங்கள் கட்டப்படும். 1995-96ல், 3073 மகளிர் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.3.42 கோடி செலவில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

126. 6-14 வயதுத் தொகுதியிலுள்ள பள்ளி செல்லாத, பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்ட சிறார்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை மீண்டும் முறையான கல்விப் பாதையில் கொண்டு செல்ல, படித்த தன்னார்வத் தொண்டர் பணித் திட்டம் (Educated Volunteer Service Scheme) (EVSS) செயல்படுத்தப்பட்டுள்ளது. முதலாண்டில் 3.5 இலட்சம் சிறார்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளனர். 1995-96ல் 10 இலட்சம் சிறார்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது.

127. இம்மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளை முறையாகப் பராமரித்து வருவது, சிறார்களைப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்க இப்போது தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது, முறைசாராக் கல்விக்கு ஆதரவான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது ஆகியவற்றையொட்டி, தமிழ்நாடு "அனைவருக்கும் கட்டாயக் கல்வி" என்னும் கனவை நனவாக்கும் நிலையில் உள்ளது. 1994 ஏப்ரலில் இம்மாமன்றத்தில், புது நெறி வகுக்கும் சட்டம் இயற்றப்பட்டதை அவை உறுப்பினர்கள் அன்புகூர்ந்து நினைவு கூரலாம். இந்தச் சட்டமுன் வடிவு குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற வேண்டியுள்ளது. இதனைச் செயற்படுத்தத் தேவையான வலிமையை நாங்கள் பெற்றிருப்பதால், இதற்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

128. வரும் ஆண்டில் 25 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 40 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 30 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். கல்வி அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் 1995-96 ஆம் ஆண்டில் உயர்நிலை/மேனிலை பள்ளிகளுக்குக்காக 797 கூடுதல் கட்டிடங்கள் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். 1967 உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்குப் பெண்களுக்கான கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படும். இதற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.2.00 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 840 உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். விளையாட்டுத் திடல், விளையாட்டுப் பொருள்கள், விளக்கு வசதி, தாவர வேலியமைத்தல், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள் உள்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதே இந்த அரசின் திட்டமாகும். இந்த மூன்றாண்டு கல்வி அடிப்படை வசதித் திட்டம், பொதுமக்கள், பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் ஏனையோரிடமிருந்து பெறும் நிதி உள்பட, 1995-96இல் ரூ.160.24 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

129. அறிவொளி இயக்கத்தின் கீழ், 1995-96ஆம் ஆண்டில் முழுமையான எழுத்தறிவுத் திட்டம் சென்னை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும். இந்த இரண்டு மாவட்டங்களில் சுமார் 4.8 இலட்சம் எழுத்தறிவற்றவர்கள் பயன்பெறுவர். இதுவரை தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கத்தின் கீழ் 82.60 இலட்சம் பேர் பயன் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டின் இச்சாதனையை 'யுனெஸ்கோ' நிறுவனம் பெரிதும் பாராட்டியுள்ளது. இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

130. சென்னை மாநகரிலும் 6 வளர்ச்சி வட்டாரங்களிலும் செயல்படுத்துவதற்கான ஒரு புதிய முறைசாராக் கல்வித் திட்டம் 1995-96இல் தொடங்கப்படும். இந்தத் திட்டம், குறிப்பாகக் குழந்தைத் தொழிலாளர் முறை செயலில் உள்ள பகுதிகளை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படும்.

131. இனிமேல் கல்லூரிக் கல்வியைப் பொறுத்தமட்டில் நாம் எடுக்கக்

முடநீக்கியல், பல்மருத்துவம் போன்ற துறைகளில் கூடுதல் வசதிகளைப் பெற்றிருக்கும். தொலைபேசி வசதியில்லாத எஞ்சிய 40 வட்ட மருத்துவமனைகளுக்கும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

141. 38 வட்ட மருத்துவமனைகள் 'எக்ஸ்' கதிர் வசதிகளைப் பெற்றிருக்கவில்லை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் 20 வட்ட மருத்துவமனைகளுக்கு 'எக்ஸ்' கதிர் வசதிகள் செய்து கொடுப்பதற்குரிய சிறப்புத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

142. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் மேம்படுத்தப்படும். 8 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு ரூ.76 இலட்சம் செலவில், அவற்றின் பிணவறைகளுக்குக் குளிர்பதன வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன் மூலம் அனைத்து மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளும் இத்தகைய வசதிகளைப் பெறும். 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் வரும் ஆண்டில் மொத்தம் ரூ.22.50 இலட்சம் செலவில் நோயாளிகள் தங்குவதற்குக் கழிப்பிட வசதியுடன் கூடிய அறைகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

143. உளுந்தூர்பேட்டை, ஓசூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய வட்ட மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.45 இலட்சம் செலவில் "விபத்து அவசரச் சிகிச்சைப் பிரிவுகள்" ஏற்படுத்தப்படும்.

144. சுகாதாரத் துறையில் பல்வேறு வெளிநாட்டு நிதியுதவிபெறும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. இந்திய மக்கள் தொகைத் திட்டம் V இன் கீழ் வட்ட, மாவட்ட மருத்துவமனைகளில் பல்வேறு மருத்துவ வசதிகளை அளிக்கவும், குறிப்பாக மகப்பேறு, சிறார் நலக் காப்பிற்கு உரிய மருத்துவ வசதிகளை அளிக்கவும் மீதமுள்ள தொகையைப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

145. உலக வங்கி நிதியுதவியுடன்கூடிய 'எய்ட்ஸ்' நோய் தடுப்புத் திட்டம் தமிழ்நாடு 'எய்ட்ஸ்' நோய்த் தடுப்புச் சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995–96இல் இத்திட்டத்திற்காக ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.50 கோடி திருத்தச் செலவில் தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களுக்கும் புதிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த டேனிடா நிறுவனம் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

146. தமிழ்நாட்டில் ரூ.64 கோடி செலவில் பார்வையின்மை குறித்த தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1470 படுக்கைகள் அடங்கிய கூடுதல் கண் நோய் சிகிச்சைப் பிரிவுகள் 24 இந்த மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும். அறுவைச் சிகிச்சைக்கூடங்கள் ஐந்தினைக் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். கடந்தகாலத்தில் செய்து முடிக்கப்படாமல் இருந்த கண்புரை சிகிச்சைகளை 3 ஆண்டுகளில் செய்து முடிப்பது, 2000 ஆண்டு வாக்கில் கண்புரை நோய் ஏற்படுவதை 1.6 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதமாகக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

147. மருந்துப் பொருட்களும் மருந்துகளும் வழங்கப்படுவதைச் சீரமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தனி முயற்சிகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1995–96 இல் மருந்துப் பொருட்கள், மருந்துகளை வழங்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.96 கோடி நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. தரமான மருந்துப் பொருட்கள் உரியவாறு சிப்பம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றனவா என்பதை இது உறுதி செய்யும். மருந்துப் பொருட்களை வழங்கும் பணியினை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் மேற்கொள்ளும்.

மகளிர் மேம்பாடு, குழந்தை நலன், சத்துணவு

148. 1994 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 9 ஆம் நாள் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கம் ஒன்றில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மகளிர் குறித்த விரிவான கொள்கை பற்றி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். சுய வேலைவாய்ப்பையும் நவீனப் பயிற்சியையும் அளிப்பதன் வாயிலாக மகளிருக்கு அதிகாரம் அளித்தல் என்ற முக்கியமான அம்சமும், மகளிர் பற்றிய இவ்வரசின் கொள்கையில் அடங்கும். இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டே, வேளாண்மை வளர்ச்சிக்கான அனைத்து நாட்டு நிதி (IFAD) யிலிருந்து உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1995–96 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கத்தை ரூ.10 கோடி என்ற குறிப்பிடத்தக்க அளவுக்கு நாங்கள் உயர்த்தியுள்ளோம். இத்திட்டம் தற்போது தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு-வள்ளலார், மதுரை,

இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராசர் ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தால் 16,100 மகளிர் பயனடைவர். நகர்ப் பகுதிகளில் பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மகளிருக்கு ரூ.35 இலட்சம் செலவில் சுய வேலைவாய்ப்பு அளிக்கும் புதிய திட்டம் ஒன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். 1995–96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தால் 3,500 மகளிர் பயனடைவர். அதிக மகளிர் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். 1995–96 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்புக்கான பல்வேறு வழி வகைகளின் கீழ் 1.5 இலட்சத்திற்கு மேற்பட்ட மகளிர்க்குப் பயன்தர வேண்டும் என்பது எங்களுடைய திட்ட இலக்காகும்.

149. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள் தொடங்கிவைத்த குழந்தைகள் நலனுக்கான புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்களின் 15 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இவ்வரசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். 15 அம்சத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் செயல்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறோம். இத்திட்டத்திலுள்ள அனைத்து அம்சங்களும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குள் நிறைவேற்றப்படும். நடப்பாண்டில் தொடங்கப்பட்ட குழந்தை நலத் துணைத்திட்டம் 1995–96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூ.768.62 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கூறுகள் வருமாறு:

	ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
பாதுகாப்பான மகப்பேற்றிற்கும் பிறந்த குழந்தையின் எடையை 3 கிலோவாக அதிகரிப்பதற்கும் வகை செய்தல்.	79.00
தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்களை முற்றிலுமாக ஒழித்தல்	4.84
குழந்தை இறப்பு வீதத்தை உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 30 என்ற அளவுக்கும் கீழ்க் குறைத்தல்.	6.67
குழந்தைகளிடையே காணப்படுகிற கடுமையான சத்துக் குறைவையும் ஓரளவு சத்துக் குறைவையும் குறைத்தல்.	328.84
நுண் ஊட்டச் சத்துக் குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல்.	5.35
அனைத்து மருத்துவ மனைகளையும், மகப்பேறு நிலையங்களையும், மழலையர் சீராட்டும் நிலையங்களாக்குதல்.	8.52
மகளிர் இளம் வயதிலும், அடிக்கடியும் தாய்மையடைவதைத் தடுத்தல்.	90.21
அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியளித்தல்	90.17

	ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
மகளிரின் எழுத்தறிவையும் நிலையையும் உயர்த்துதல்	40.41
குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும் சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொடுத்தலும்.	96.98
குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல்.	0.13

பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைச் செயற்படுத்தல்	10.00
பெண் சிசுக் கொலை என்ற சமூகக் கொடுமையை ஒழித்தல்.	0.45
குழந்தைப் பருவத்தில் ஏலாமையுறுவதைத் தடுத்தலும் மறுவாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும்.	6.80
பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல்.	0.25

மொத்தம் - குழந்தை நலத் துணைத் திட்டம்:	768.62
	--------

150. பெண் சிசுக் கொலையைத் தடுத்தல், பெண் குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தல், "சிறிய குடும்பமே சிறந்தது" என்ற கோட்பாட்டை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம் வியத்தகு வெற்றியை அடைந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், இதுவரை, 14,781 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

151. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான ஒட்டுமொத்த நிதியொதுக்கம் 1994-95 ஆம் ஆண்டில் ரூ.345.36 கோடியாக இருந்தது. 1995-96 ஆம் ஆண்டில் ரூ.367.97 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஆகியவை செயல்படுத்தப் பட்டிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பேருவகை அடைவர். 6 மாதம் முதல் 60 மாதங்கள் வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் வளர்ச்சியை முழுவதுமாகக் கண்காணித்தல், துணைச் சத்துணவு அளித்தல் ஆகிய பணிகளின் மூலம் தமிழ்நாடு பெருமை மிகு சாதனை படைத்துள்ளது.

152. சத்துணவுத் திட்டத்தை, குறிப்பாக "மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திவருவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்திட்டத்தால் பள்ளிகளில் பயிலும் 60.97 இலட்சம் குழந்தைகளும், பாலர் பள்ளிகளில் பயிலும் 11.56 இலட்சம் சிறார்களும் பயனடைகின்றனர். பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்க 1995-96 ஆம் ஆண்டில் ரூ.233.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களைப் படிப்படியாக விரிவுபடுத்த, மத்திய அரசு விருப்பங்கொண்டிருப்பதை மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டம் குறிப்பிடுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கான விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தை 1982-83 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு செயல்படுத்திவந்துள்ளது. இந்த வகையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அவ்வாறிருக்கையில், இத்திட்டத்தைப் புதிதாகச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு மட்டுமே மத்திய அரசு ஆதரவு அளித்தால், அது மிகவும் துன்பகரமானதாக இருக்கும். இத்தகைய ஒருசார்பான அணுகுமுறையை மேற்கொள்ளாமல் இருக்கும்படி மத்திய அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். தற்போது தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் சத்துணவுத் திட்டத்திற்கு முழு ஆதரவும் தரும்படி மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

ஊனமுற்றோர் நலன்

153. ஊனமுற்றோர் நலனைக் காப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடியாக இருந்து வந்துள்ளது. இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் ஊனமுற்றோர் நலனுக்காக விரிவான கொள்கை ஒன்றை முதன் முதலில் வகுத்துள்ளது. 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் நாள் செயல்படத் தொடங்கிய இந்த விரிவான கொள்கையின் முக்கிய நோக்கம், ஊனத்தை இளம் வயதிலேயே கண்டறிதல், ஊனமுற்றோருக்குச் சிகிச்சை அளித்தல், தொழிலுதவி வழங்குதல், பொருளாதார உதவியளித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களைத் தம்மைத் தாமே பேணிக் கொள்ளும் குடிமக்களாக்கி, சமுதாயத்தின் இணைந்த அங்கமாக அவர்களின் நிலைமையை மேம்படுத்துவதாகும். பார்வையற்றோர், காதுகேளாதோர், கை, கால் இயங்காதோர், மூளை வளர்ச்சி குன்றியோர், மனநோயுற்றோர் ஆகியோருக்கான திட்டங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. உடலூனமுற்றோருக்கான திட்டங்களை மேற்கொள்ள, இந்த அரசு, அரசு சாராத நிறுவனங்களுக்குப் (NGO'S) பெரிதும் ஆதரவளிக்கும்.

154. ஊனமுற்றோருக்கான உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 37,121 பேர் பயனடைந்து வருகின்றனர். 1995-96 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.3.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் கண்ணியமான தொரு வாழ்க்கையை மேற்கொள்ள இவ்வரசு அவர்களுக்கு நல்ல பாதுகாப்பும், வசதியும் அளிப்பதற்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் கொடுக்கும்.

ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலன்

155. ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலனுக்கான மொத்த ஒதுக்கீடு 1994-95 ஆம் ஆண்டில் ரூ.151.28 கோடியாக இருந்தது. இது 1995-96இல் ரூ.193.75 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

156. ஆதி திராவிடர் - பழங்குடியினர் அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி அடைய, இந்த அரசு, மிகவுயர்ந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. அமைச்சர்கள் அடங்கிய உயர் அதிகாரக் குழு, அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பதற்கான சிறப்புத் திட்டம் செயல் படுத்தப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. 1996 மார்ச்சுத் திங்கள் வாக்கில் இந்தத் திட்டம் முடிக்கப்பட வேண்டுமென இந்த அரசு விரும்புகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு பகுதிகளுக்குமான செயல்திட்ட இலக்கு, அவற்றிற்கான ஒதுக்கீடு ஆகிய விவரங்களை இங்கு நான் எடுத்துரைக்க விழைகிறேன்.

திட்டப்பணி	1995-96இன் இலக்கு	மொத்த ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
வீட்டுமனைகளுக்கு நிலம் கையகப் படுத்தல்	5 இலட்சம்	24.19
இடுகாடுகளுக்கு நிலம் கையகப்படுத்தல்	2123 குடியிருப்புகள்	9.00

திட்டப்பணி	1995-96இன் இலக்கு	மொத்த ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
இடுகாடுகளுக்குச் செல்லும் நடைபாதைகள்	3076 குடியிருப்புகள்	24.64
இணைப்புச் சாலைகள்	2309 குடியிருப்புகள்	35.52
தெருவிளக்குகள்	2085 குடியிருப்புகள்	3.34
ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு	2 இலட்சம் குடிசைகள்	25.50
குடிநீர் வசதி	2754 குடியிருப்புகள்	10.35
மருத்துவத் துணைத் தாதியர் (DAIS) பயிற்சி	5000 மகளிர்	0.70
ஆதி திராவிடர் மகளிருக்கு முதலுதவிச் சிகிச்சை முறையில் பயிற்சி	30000 மகளிர்	3.00

157. ஆதி திராவிடர்களின் நலனுக்கான ஓர் விரிவான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1994 டிசம்பரில் தொடங்கியுள்ளார். அதற்கேற்ப, இத்திட்டத்தைச் செயல்படுத்த பல்வேறு ஒதுக்கீடுகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் பெண் குழந்தை ஆதரவுத் திட்டம் ஆண்டுக்கு ரூ.1.50 கோடி செலவில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு அம்பேத்கர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும். ஆண்டு வருமான அளவு ரூ.50,000/-க்குள் இருப்பவர்கள் பயன் அடையும் வகையிலான புதிய சிறப்புப் படிப்புதவித் திட்டத்திற்காக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், தற்போது செயலில் இருந்துவரும் திட்டம், ஆண்டொன்றுக்கு வருமானம் ரூ.24,000/-க்குக் குறைவாக உள்ள குடும்பங்களை மட்டும் உள்ளடக்கியதாகவுள்ளது. 1000 மாணவிகள், 1000 மாணவர்களுக்குப் பயன்

அளிக்கும் புதிய தகுதிப் பரிசுத் திட்டத்திற்காக ரூ.36 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேயர் சிவராஜ் பெயரில் ஒரு புதிய அறக்கட்டளையை உருவாக்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. **30,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் அடையக்கூடிய வீடு நிலை உயர்த்தும் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.15 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் 5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்க வேண்டுமென்ற இலக்கை எய்த ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்காக ரூ.3 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.** 1000 ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் கட்டும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். **கடன், உதவித் தொகை ஆதரவுடன் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு 1000 லாரிகள் வழங்குவதற்கான அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.** இதற்கு ரூ.25 கோடி செலவாகும். 10,000 ஆதி திராவிடர் மகளிர் பயன் அடையும் வகையில், **சுயவேலை வாய்ப்பிற்கான வாய்ப்புகளை உருவாக்க ரூ.5 கோடி செலவிடப்படும்.** வரும் ஆண்டில், ஆதி திராவிடர் பழங்குடியினரின் நலனுக்காகத் தன்னலமற்ற வகையில் சிறந்த தொண்டாற்றுவர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் பரிசு வழங்கப்படும். ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசான இந்த மதிப்புமிக்க பரிசு, ஆதி திராவிடர், பழங்குடியினரின் நலன் காக்கத் தன்னிகரற்ற பணி ஆற்றும் ஒருவருக்கு வழங்கப்படும்.

158. வரும் ஆண்டில் 20 புதிய மாணவரில்லங்கள் ஏற்படுத்தப்படும். **மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ.4 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.** அனைத்து மாணவரில்லங்களுக்கும் மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும். இத் திட்டத்தின் கீழ், வரும் ஆண்டில் ரூ.16.08 இலட்சம் செலவில் 268 மாணவரில்லங்களுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

159. **1995-96 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.105 கோடி செலவில், ஆதி திராவிடர்களுக்காக 50,000 காங்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும்.**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

160. இம்மாநிலத்தில் சமூக நீதியைப் பெற்றுத்தர, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளுக்காக, 1994ஆம் ஆண்டு நினைவில் நிற்கும். இம்மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், சீர்மரபினர்க்கும், ஆதி திராவிடர் பழங்குடியினர்க்கும் 69 சதவீத மொத்த இட ஒதுக்கீடு செய்வதற்கு, 31-12-1993 அன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டமொன்றை இந்த அவை இயற்றியது என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இந்தச் சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமையேற்று அக்குழுவினரை 25-6-1994ஆம் நாளன்று புது டில்லிக்கு அழைத்துச் சென்றார்கள். இந்தியக் குடியரசுத் தலைவர் 1994ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17ஆம் நாளன்று அவருடைய ஒப்புதலை வழங்கினார். அதன்பின் இச்சட்ட முன்வடிவு சட்டமாயிற்று. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதாவின் தளராத முயற்சி காரணமாக இந்திய நாடாளுமன்றத்தில் 1994ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் (எழுபத்தாறாம் திருத்தம்) மூலம், அரசியலமைப்புச் சட்டத்தில் ஒன்பதாம் அட்டவணையில், தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு 45ஆம் சட்டம் சேர்க்கப்பட்டது. இந்தியக் குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டத் திருத்தச் சட்ட முன்வடிவிற்கு 31-8-1994 அன்று அவருடைய ஒப்புதலை அளித்தார்.** மற்ற எல்லாவற்றையும்விட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அனைத்து வகைகளிலும் மேம்பாட்டினைப் பெற வழிவகுத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

161. மாநிலம் எங்கணும் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாணவரில்லங்கள் மூலம், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இம்மாநில அரசு தொடர்ந்து கல்வி வாய்ப்பினை அளித்து வருகிறது. **மகளிர் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன், 1995-96இல் ரூ.31 இலட்சம் மொத்தச் செலவில் 15 புதிய மாணவியரில்லங்கள் ஏற்படுத்தப்படும்.** மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டும் படிப்படியான திட்டமும் நடைபெற்று வருகிறது. 1995-96 ரூ.69.94 இலட்சம் செலவில் 12 புதிய மாணவரில்லக் கட்டிடங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். அதனையடுத்து மாணவரில்லங்களின் மொத்த எண்ணிக்கை 155 ஆக உயர்ந்தது. **சீர்மரபினருக்கான பள்ளிகளையும், மாணவரில்லக் கட்டிடங்களையும் மேம்படுத்துவதற்கு மொத்தம் ரூ.80 இலட்சம் செலவிலான பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

162. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடி சேர்க்கப்பட்டிருக்கிறது. 1995-96இல் கிராமப்புற ஏழை, எளியோருக்கு ரூ.13.81 கோடி செலவில் இலவசமாக 6,577 வீடுகள் வழங்கப்படும்.

163. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்திற்கு மீண்டும் புத்தாக்கமளிக்கப்பட்டுள்ளது. **இக்கழகம் 28,918 பேருக்கு ரூ.4.26 கோடி மதிப்புள்ள கடன்களை வழங்கியுள்ளது. இந்தக் கடன் வழங்கு திட்டம் சுமார் 15,000 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும், கிறித்தவர்கள் உட்பட 5,000 சிறுபான்மையினருக்கும் உதவிடும்வகையில் 1995-96இல் ரூ.20 கோடியாக மேலும் உயர்த்தப்படும்** என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெசவாளர் நலன்

164. பருத்தி நூல் பற்றாக்குறையாலும், அவற்றின் விலை உயர்வாலும் இம் மாநிலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள சிறப்பு முயற்சிகளை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நன்கறிவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், கைத்தறித் துறை மத்திய அமைச்சர் அவர்கள் சிட்ட நூலுக்கான உதவித் தொகையைக் கிலோ ஒன்றுக்கு ரூ.15 லிருந்து ரூ.20 ஆக உயர்த்த ஒப்புக்கொண்டுள்ளார். பருத்தி, குறைந்த தர இழைநூல் ஆகியவற்றின் ஏற்றுமதியைத் தடை செய்வதைப் பரிசீலிக்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

165. இம் மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலைகளில், தரமான நூல் கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதற்கான மற்றொரு நடவடிக்கையாக, மாநில அரசு, ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலைகள் இணையத்தை (TANSPIN) அமைத்துள்ளது. இந்த இணையம், இம் மாநிலத்திலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான நல்ல தரமான பருத்தியைக் கொள்முதல் செய்யும். **இந்த இணையத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவியாக ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

166. இதுவரை இம்மாநிலத்தில் 8 இலட்சம் நெசவாளர்கள், அதாவது

மொத்த நெசவாளர்களில் சுமார் 75 சதவீதத்தினர் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். நெசவாளர் சேமிப்பு-பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1,12,899 நெசவாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250 என்ற வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. **கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் இணைந்த வீடுகள் வழங்கும் திட்டம் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1995-96 ஆம் ஆண்டில், இத் திட்டத்தின் கீழ் மொத்தம் 1000 வீடுகள் கட்டப்படும். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 60 இலட்சம் மகளிர்க்கும், 60 இலட்சம் ஆடவர்க்கும் இலவசமாக சேலைகள், வேட்டிகள் வழங்கும் இத்திட்டம் 1995-96ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

167. **தமிழகத்தில் 111 கைத்தறி மேம்பாட்டு மையங்களையும் 18 தரமான சாயப் பட்டறைகளையும் மொத்தம் ரூ.4.02 கோடி செலவில் நிறுவும் திட்டமொன்று மிக அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.** விசைத்தறி நிலையங்களுக்குச் சிறப்பான முறையில் ஆதரவும், பணி வசதியும் அளிப்பதற்காக விசைத்தறிப் பதிவு நிதி (Power loom Registration Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. 31.12.94 ஆம் நாள் நிலவரப்படி இந் நிதியில் ரூ.4.43 கோடி உள்ளது. இது, புதிய விசைத்தறிப் பணி வசதி நிலையங்களை நிறுவுவதற்கும் ஏனைய திட்டங்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்படும்.

தொழிலாளர் நலன்

168. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகத் தொழிற் கட்டமைப்பு, சீரமைப்பு ஆகிய பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதைக் கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டிருந்தேன். மாநிலத்தின் பொதுத் துறையில் விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தைச் செயல்படுத்த, தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி கோரி இவ்வரசு செயற்குறிப்புகளை அனுப்பியிருந்தது என்பதையும் நான் குறிப்பிட்டிருந்தேன். ஓராண்டு கழிந்த பின்னருங்கூட, இத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதியளிக்காமல் இருப்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். மத்திய அரசிடமிருந்த ரூ.33.72 கோடி நிதியுதவி கோரி நாம் அனுப்பிய செயற்குறிப்புகளுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. இதுவரை தேசிய புதுப்பிப்பு நிதி, மத்திய அரசின் சில நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது என்று தெரியவந்துள்ளது. இந்த நிதி மத்திய அரசு நிறுவனங்களின் விருப்பு ஓய்வு பெறும் திட்ட நிதியாகவே ஆகிவிட்டது. இது தேசிய புதுப்பிப்பு நிதியின் நோக்கத்திற்கு மாறுபட்டதாகும். இந்த நிதியிலிருந்து இப்போதாவது உதவியளிக்கும்படி மத்திய அரசை நாம் கோருவோம். இல்லையெனில், அந்நிதி ஏற்படுத்தப்பட்ட நோக்கமே பொருளற்றதாகிவிடும்.

169. மாநிலத்தில் தொழில் உறவு நிலைமை தொடர்ந்து நன்றாக இருந்து வருகிறது. **1993 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட மனித உழைப்பு நாட்களின் இழப்பு 24.22 இலட்சமாக இருந்தது. 1994 ஆம் ஆண்டில் இது 14.72 இலட்சமாக மேலும் குறைக்கப்பட்டது.** இவ்வாறு குறைக்கப்பட்டிருப்பது, தொழில் மேம்பாடு, தொழிலாளர்களின் உரிமைகள் ஆகியவற்றுக்கான தேவைகளைத் திறம்பட்ட வகையில் ஒருங்கிணைப்பதில் இவ்வரசு மேற்கொண்ட நடைமுறைக்குகந்த அணுகுமுறைக்குக் கிடைத்துள்ள நற்சான்றாகும்.

170. பல்வேறு வகை வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கும் பணி மேலும் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1994 ஆம் ஆண்டில், முதன் முறையாக, கடல்படு உணவுப் பொருள் தயாரிப்புத் தொழிலுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டன. தையல் தொழில், கைத்தறிப் பட்டு நெசவு, மருத்துவமனைகள், மருந்தகங்கள், கைத்தறிப் பருத்தி நெசவு, புகையிலை



(பொடி) தயாரிப்பு, பாத்திரம் தயாரிப்பு, ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள், கடலை மாவு, அரிசி மாவு தயாரிப்பு, செங்கல்-ஓடு தயாரிப்பு ஆகிய தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியங்கள் உயர்த்தப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டன.

171. **கட்டுமானத் தொழிலில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் குறிப்பாக மகளிர் பயனடைகின்ற வகையில், தமிழ்நாடு உடலுழைப்புத் (கட்டுமானத் தொழிலாளர்கள்) தொழிலாளர் நலத் திட்டம் 1994-95 ஆம் ஆண்டில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.** இத்திட்டம், சுகாதாரப் பாதுகாப்பு, விபத்து நிவாரணம், குழந்தைகள் காப்பகங்கள் நடத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். திரைப்படத் தொழிலாளர்களுக்கு ஓய்வு காலப் பயன்கள் விபத்துக் காப்புறுதி, ஆகிய வசதிகளை அளிப்பதற்கான திட்டம் ஒன்று 1995-96 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

172. குறிப்பாக அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை சமாளிக்க இவ்வரசு விரைவான முடிவுகளை எடுத்துள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பது, குழந்தை நலனுக்கான முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்த முக்கியத் திட்டத்தை முறையாக வழிப்படுத்த, மாநில அளவில் ஓர் ஆலோசனைக் குழுவும், மாநில அளவில் ஒரு அதிகார மன்றமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள ஏழு மாவட்டங்களில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இது, நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு

173. **இம்மாநிலத்தில் வேலைவாய்ப்பைப் பெருக்க இந்த அரசு பல்வேறு புதிய நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது என்பதை உறுப்பினர்கள் அறிவர். 1995-96ஆம் ஆண்டில், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ரூ.311.84 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இது, 1994-95ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடான ரூ.220.59 கோடியோடு ஒப்பிடுகையில் 40 சதவீதத்திற்கும் மேல் அதிகமானதாகும். மும்முர ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ரூ.32.55 கோடி செலவில் செயல்படுத்தப்படும். 1995-96இல் ரூ.45.80 கோடி செலவில் வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் செயல்படுத்தப்படும். 1995-96இல், இந்தத் திட்டங்களால், 10.20 கோடி மனித உழைப்பு நாட்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இது ஒரு புதிய சாதனை ஆகும்.**

174. **ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம், ஊரகப் பகுதிகளில்** வேலைவாய்ப்பை உருவாக்கும் சக்தி வாய்ந்த ஏதுவாகத் தொடர்ந்து செயல்படுகிறது. 1994-95ஆம் ஆண்டில், 1.25 இலட்சம் பேர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. **1995-96இல் இத்திட்டத்தின் கீழ் 1.35 இலட்சம் பேர் பயனடைவர்.**

175. பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பவரை இழந்து நிற்கும் குடும்பங்களுக்குத் துயர் துடைப்பு நிவாரணம் அளிக்கும் திட்டம் 1995-96இல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். **ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000 நிதி ஒதுக்கத்துடன், இத்திட்டத்தின் கீழ் 50,000 குடும்பங்கள் பயன் அடைவர்.**

176. படித்தவர்களுக்கான தன்னார்வத் தொண்டர் பணித் திட்டத்தின் கீழ், 1.5 இலட்சம் இளைஞர்கள் வெற்றிகரமாகத் திரட்டப்பட்டு, பள்ளிசாராக் கல்வி அளிப்பதிலும், மதுவிலக்கு பிரச்சாரத்திலும் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர். இந்தப் புதிய முயற்சி, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதுடன், சமூகப் பணி ஆற்றவும் வகை செய்கிறது.

177. வேலைவாய்ப்புத் துறையில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் பயன் அளித்து வருகின்றன. 1993 டிசம்பர் முதல் 1994 டிசம்பர் வரையான கால அளவில் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 1.79 இலட்சம் குறைந்துள்ளது. அதே கால அளவில், படித்த வேலைவாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை 0.92 இலட்சம் குறைந்தது.

178. வேலை தேடுபவர்களுக்கும், வேலை கொடுப்பவர்களுக்கும் முற்றிலும் குறைபாடுகளின்றிச் சிறந்த முறையில் பணி ஆற்றுவதற்காக வேலைவாய்ப்பகங்களைக் கணினி மயமாக்கும் திட்டம், இம் மாநிலத்தில் முறையாகச் செயல்படுத்தப்பட்டுவருகிறது. **1994-95 வரை 16 வேலைவாய்ப்பகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. 1995-96இல் மேலும் 3 வேலைவாய்ப்பகங்கள், அதாவது ஈரோடு, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ளவை கணினி மயமாக்கப்படும்.** இம்மாநிலத்தில் குறிப்பாக ஊரகப் பகுதிகளில், இளைஞர்களுக்கு வேலை தேடுவதற்குப் பயனுள்ள முறையில் வழிகாட்ட வேலைவாய்ப்பகங்கள் அதிகமான அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலை தேடுவதற்கு வழிகாட்ட 200 மாணவர்களுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு மேனிலைப் பள்ளிளை எடுத்துக் கொள்வதற்கான ஒரு முன்னோடித் திட்டம் 1994-95இல் தொடங்கப்பட்டுள்ளது.

179. உலக வங்கி நிதியுதவியுடன் திறன் மேம்பாட்டுத் திட்டம் ரூ.21.74 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 1995-96ஆம் ஆண்டில் முடிக்கப்படும். **31 தொழிற்பயிற்சி நிலையங்களில் பழைய, வழக்கொழிந்த இயந்திரங்களை மாற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களுடன் அவை நவீனப் படுத்தப்பட்டு வருகின்றன.** அம்பத்தூரில் மாநில அளவிலான இயந்திர சாதனங்களைப் பராமரிக்கும் பணிக்களரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திர சாதனங்களைப் பராமரிக்கும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிற்பயிற்சியை மேம்படுத்துவதற்காக 38 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ஒலி ஒளிக் காட்சி விளக்கச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்பவும் தொழில்களைப் பலதிறப்படுத்துவதற்கு ஏற்பவும் 16 தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பயிற்சிப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

180. ஊரக மகளிருக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை அளிக்கும் பொருட்டுப் புதிதாக மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

வள்ளுவர் கூறும் அறம்

டாக்டர் பழனி அரங்கசாமி அவர்கள்

நான் இங்கே பேச வந்தது 'திருக்குறளிலே அறம்'. நம்முடைய அமைச்சர் அவர்கள் புற்றுநோயைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஆங்கிலப் பாடத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற பேராசிரியன். ஆங்கிலத்தில் 'கேன்சர்' என்ற சொல்லுக்கு எப்படி ஆதாரம் வந்தது என்று தெரியவில்லை. 'கேன்சர்' என்பதற்கு என்னாலும் விளக்கம் கொடுக்க முடியவில்லை. ஆனால், தமிழன் அதற்குப் 'புற்றுநோய்' என்று சொன்னானே! என்ன ஆணித்தரமாகவும் பொருள் உணர்ச்சியோடும் கொடுத்திருக்கிறான் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை நான் குறிப்பிடுவதன் நோக்கம் என்னவென்றால், 'அறம்' என்ற சொல்லை எந்தத் தமிழன் எந்தக்காலத்தில் எப்படி உண்டாக்கினான் என்று தெரியவில்லை. ஆனால், அதற்குக் கிடைத்த பொருள் இருக்கிறதே, எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் அறம் என்று சொன்னார்; திருவள்ளுவரே அறத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், நாம் திருவள்ளுவரைப் பற்றிப் பெருமையாகச் சொல்லுவோம். ஏனெனில், இதன்கண் இல்லாத எப்பொருளும் இல்லையால். திருக்குறளில் இல்லாதது இல்லை. அந்தத் திருக்குறளைப் படைத்த திருவள்ளுவ நாயனாரே இந்த 'அறம்' என்ற சொல்லைக் குறித்து விளக்கம் கொடுப்பதற்குத் திண்டாடுகின்ற தன்மையைப் பார்க்கிறோம்.

Not that I hate Thiruvalluvar, but I Love the very origin of the word.

திருக்குறளை நான் குறைவாகவோ, திருவள்ளுவரை நான் குறைவாகப் பேசுவதாகவோ யாரும் நினைக்கக் கூடாது. ஜூலியஸ் சீஸரில், 'ஷேக்ஸ்பியர்' சொன்னதுபோல் சொல்வதானால்.

Not that I hate Thiruvalluvar, but I love the word 'அறம்' more.

விதித்தன செய்தல், விலக்கியன ஒழித்தல் என்பது அறம் என்றார்.

திருக்குறளில், திருவள்ளுவர் அவர்களே 'அறம்' என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுப்பதற்குப் பாடுபடுகிறார். 1330 அருங் குறள்களிலே ஒரு இடத்தில் 'அறன் வலியுறுத்தல்' என்று சொல்லி முடித்துவிட்டார். விட்டு விடலாம் அல்லவா! விடவில்லை. நெடுக, நெடுக அங்கங்கே சொல்லிக் கொண்டே வருகிறார். அதற்கு என்ன அர்த்தம்? இன்னும் எனக்குத் திருப்தி இல்லை. அந்த 'அறம்' என்ற சொல்லுக்குப் பொருளைச் சொல்லி நான் இன்னும் திருப்தி அடையவில்லை' என்ற கருத்தை – வள்ளுவர் காட்டுகின்ற பேருண்மையை நாம் காண்கின்றோம்.

'அறம்' என்ற சொல் அத்தனைச் செறிவும், திண்மையும், பொருண்மையும், ஆழமும் நிறைந்த சொல்லாகும்.

1862-ஆம் ஆண்டு 'வின்சுலோ' என்ற அமெரிக்கப் பாதிரியார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அறம் என்ற சொல்லுக்கு 32 விளக்கங்கள் கொடுத்திருக்கிறார் அந்த 32 பொருள்களில் என்ன இருக்கிறது என்றால் 'மொராலிட்டி', 'ரிலீஜியாசிட்டி' என்று அவர் அடுக்கிக்கொண்டே போகிறார். 'ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறசமயத்தார்க்கு உண்டி என்று சொல்லி விட்டார். 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளால்' வேறாம்' என்று ஆறு வகையான சமயத்து மக்கள் இருந்தாலும், அவர்களுக்கு உணவு போடு, அது அறம் என்று சொன்னான். முதலாம் உலகப் போர், இரண்டாவது போருக்குப்பின் மூன்றாவது உலகப் போர் இந்த உலகத்தை அழித்து விடுமோ என்று நாம் அஞ்சிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், போரிடுகின்ற இடங்களில் எவன் எந்தப் படையைச் சார்ந்தவன், எவன் எந்த நாட்டைச் சார்ந்தவன் என்று எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் 'இண்டர்நேஷனல் ரெட் கிராஸ்' காயமுற்றவர்களை எடுத்துக் கொண்டு போகிறதே, அதற்குப் பேர்தான் 'அறம்'.

யார் காயம் அடைந்தது, எந்த நாட்டுக்காரன், எந்த இனத்துக்காரன், எந்த மதத்தைச்சார்ந்தவன் என்று அவர்கள் பார்ப்பதில்லை. 'ரெட் கிராஸ்' சிம்பலை போட்டுக்கொண்டு 'காயம் உற்றவன் எவனாக இருந்தாலும் அவனை நான் எடுத்துக் கொண்டு செல்வேன்' என்று சொல்லுகிறானே, அதற்குப் பெயர் 'அறம்'. ரிக் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

Let noble thoughts come to us from every side அந்த Noble thoughts-க்குப் பெயர்தான் 'அறம்'.

1908-இல் தமிழிலும் ஆங்கிலத்திலும் விஸ்வநாதப்பிள்ளை அவர்கள் எழுதியதில் கூட 32 பொருள்களைத்தான் சொல்லுகிறார். 'அறம்' என்ற சொல்லுக்கு இவ்வளவுதான் பொருள் என்று இல்லை. அறத்தினுடைய பொருளை விளக்கமாக, திட்டமாக, அறுதியிட்டுக் கூறமுடியாது. அந்த அளவுக்கு அது ஆழமான ஒரு சொல்லாகும்.

ஆங்கிலத்தில் 'ரொமாண்டிக்' என்ற சொல் ஒன்று உண்டு. அந்தச் சொல்லுக்கு விளக்கம் கொடுக்க முடியாமல் நூற்றுக் கணக்கான பொருள் அந்தச் சொல்லுக்கு உண்டு என்று ஆங்கிலத் திறனாய்வாளர்கள் சொல்லுகிறார்கள். எனவே, தமிழ் மொழியிலே இருக்கக்கூடிய 'அறம்' என்கின்ற சொல், ஆங்கில மொழியிலே இருக்கக்கூடிய 'ரொமாண்டிக்' என்ற சொல்லுக்குப் பொருள் ஆழத்தில் ஒப்புமையாக்க் காட்டக்கூடிய தொன்மைப்படைத்தச் சொல் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

> ஒரு நல்ல சமுதாயத்தில் ஒரு மனிதன்...
>
> 1. உபயோகமானவனாக இருக்கவேண்டும்.
>
> 2. கூடுமானவரை தகுதியற்ற துரதிருஷ்டங்களினின்று காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.
>
> 3. எல்லா வகைகளிலும் தைரியமாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் பெற்றிருக்க வேண்டும். அது இதரர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்கவேண்டும்.
>
> –பெர்ட்ராண்டு ரஸ்ஸல்

இப்படிப் பல்நாட்டாரும் கூறக்கூடிய இந்தச் சொல் ஆழத்தினாலும், அருமையினாலும், ஆங்கிலத்தில் 'ரொமாண்டிக்' என்ற சொல்லுக்கு ஒப்புமையாகச் சொல்லலாம்.

நான் முன்னர் கூறியதுபோல் வள்ளுவர் கூட 'அறம்' என்ற சொல்லுக்கு நிறைவான பொருளைக் கூற இயலவில்லை. அறத்தின் இயல்பு பற்றிக் குறிப்பிடும்போது சொல்லுகிறார் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்'. மனதில் குற்றம் இருக்கக் கூடாது. அவ்வளவுதான், அது ஒரே வரிதான். மனத்தில் குற்றம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், குற்றமில்லாமல் இந்த மனதை வைத்துக்கொள்ள முடிகிறதா?

நான்கு கொலைகளைச் செய்து விட்டு நீதிமன்றத்திலே நின்று, கடவுள் பெயரையும் அங்கே இழுத்து, 'அந்தக் கொலைகளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது' என்று சொல்லுகிறான். அப்போது அவன் உள்மனது ஒன்றைச் சொல்லிக்கொண்டிருக்கும். அது என்ன தெரியுமா? 'பொய் சொல்லுகிறாய், பொய் சொல்லுகிறாய், பொய் சொல்லுகிறாய்' என்று சொல்லிக் கொண்டிருக்கும். அதற்குப் பெயர்தான் மனச்சான்று.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்று சொல்லுகிறோம் அல்லவா! மாசு இல்லாமல் இருக்கக்கூடிய மனச்சான்று இருக்கிறதே, அந்த மனச்சான்றுக்குப் பெயர் 'அறம்'. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற' என்று வள்ளுவர் சொன்னார். அப்படி 'அறத்தை' வலியுறுத்திச் சொல்லுகின்றார். இந்த மாதிரி அறமான செயலை, அறத்தை, மக்கள் எந்தக் காலத்தும் செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வுடன்தான் அவர் 'அறத்தைப்' பற்றி ஏராளமான விளக்கங்களைக் கொடுக்கிறார். அறத்தை எப்போது செய்ய வேண்டுமென்றால்

'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை'

'இன்றைக்கு இருப்பார், நாளை இருப்பார் என்று எண்ணவோ திடமில்லை' என்று,

5 ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகளிரின் பயனுக்காகத் துணிகளில் அச்சிடுவதிலும். ஆடை தயாரிப்பிலும் கணிப்பொறி வாயிலாக நூல் அச்சிட்டு வெளியிடும் பயிற்சியிலும் (Desk Top Publishing) குறுகிய காலப் பயிற்சித் திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

அரசு ஊழியர் நலன்

181. அரசு ஊழியர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு.அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இவ்வரசால், 1992ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்ட அரசப்பணியாளர் நல்வாழ்வு நிதித் திட்டம் பேராதரவைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயன்களை அதிகரிக்க வேண்டியும். மேலும். சிலவகை அறுவைச் சிகிச்சைகளுக்குச் சிறப்பு உதவியளிக்க வேண்டியும் பல கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உயர்ந்தபட்ச உதவித் தொகையை ரூ.50,000லிருந்து உயர்த்தி. சிகிச்சைச் செலவில் 75 சதவீதம். அல்லது. ரூ.1 இலட்சம் இதில் எது குறைவோ அவ்வளவிற்கு நிர்ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது. வெளிநாட்டில் சிகிச்சை பெற வேண்டியிருந்தால், கூடுதல் கடன் உதவியாக ரூ.1 இலட்சம் வழங்கப்படும். தற்போதுள்ள பல்வேறு சிகிச்சைகளுடன்.மூளை அறுவை சிகிச்சை. இடுப்புமூட்டு அறுவை சிகிச்சை. தண்டுவட அறுவை சிகிச்சை ஆகியவற்றையும் சேர்க்கும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

182. "மோபெட்" வண்டிகள் வாங்க முன்பணம் பெறுவதற்கு அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.950-ம் அதற்கு மேலும் இருத்தல் வேண்டும். இந்த ஊதிய வரம்பினை நீக்கி, ஆறு ஆண்டுகள் பணி முடித்துள்ள காலச் சம்பள முறையில் நியமனம் பெற்றுப் பணி முறைப்படுத்தப்பட்டுள்ள. அனைத்து அரசு ஊழியர்களும் "மோபெட்" வண்டி வாங்குவதற்கு முன்பணம் பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம்.

183. அரசு ஊழியரின் மகள் திருமணத்திற்கு வழங்கப்படும் முன்பணத் தொகையை ரூ.5.000லிருந்து ரூ.10,000 ஆகவும். மகன் திருமணத்திற்கு வழங்கப்படும் முன்பணத் தொகையை ரூ.3,000லிருந்து ரூ.6,000 ஆகவும் உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

184. 1994–95ஆம் ஆண்டு வீடு கட்டும் முன்பணத்திற்கான ஒதுக்கீடு ரூ.39.05 கோடி என்றிருந்ததை உயர்த்தி 1995–96ஆம் ஆண்டு ரூ.50.20 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்போது வீடு கட்டும் முன் பணத்திற்கான உச்சவரம்புத் தொகை ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் முன்பணத் தொகையாக ரூ.25 கோடி வழங்குவதற்கென இவ்வரசு. வீட்டு வசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் (HOUSING DEVELOPMENT FINANCE CORPORATION), கேன் ஃபின் ஹோம்ஸ் (CANFIN HOMES). இன்ட் பேங்க் ஹவுஸிங் (IND BANK HOUSING) ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இத்தொகை 1995–96இல் முழுமையாக வழங்கப்படும்.

185. ஓய்வூதியம் பெறுபவர்களும். அரசுப் பணியாளர் நல்வாழ்வு நிதித் திட்டத்தில் சேர்க்கப்படுவர். இவர்களுக்கான உயர்ந்தபட்ச உதவித் தொகை ரூ.50,000 அல்லது. குறிப்பிட்ட அறுவை சிகிச்சையின் செலவில் 75 சதவீதம். இதில் எது குறைவோ அவ்வளவிற்கு நிர்ணயிக்கப்படும். இதற்கென அவர்களிடமிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.5 விருப்பச் சந்தாவாகப் பெறப்படும். ஓய்வூதியம் பெறும் 1.6 இலட்சம் பேர் இத்திட்டத்தினால் பயனடைவர். அரசு இத்தொகைக்கு நிகரான தொகையை இந்நிதிக்கு வழங்கும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் குடும்ப நல நிதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தவும் அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

சென்னை,
1995ஆம் ஆண்டு.
மார்ச்சுத் திங்கள் 22ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2026.
பங்குனித் திங்கள் 8ஆம் நாள்.

இரா.நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர்.

நல்ல மனம் படைத்தோர்!

எப்படி விதைநெல் தன்னைத்தானே மங்க வைத்துக்கொண்டு நல்ல விளைச்சல் ஏற்பட வகை செய்கிறதோ, அப்படி நல்ல மனம் படைத்த செல்வர்கள் சமுதாயம் வாழ வழி செய்வார்கள்.
-பேரறிஞர் அண்ணா



சொன்னார். நீ செத்து மடிவதற்குள்ளாகச் செய்,

'நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்'

— என்று சொன்னார்.

எப்போது 'அறத்தைச்' செய்வது, 'நல்வினை' செய்வது என்று கேட்டால்

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்'

என்று சொன்னார். எப்போது போவாய் என்று தெரியாது. அதற்குள் செய்துவிடு. அதைத்தான் திருவள்ளுவர்

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல்'

என்று சொன்னார். எனவே, அடக்கம் உடைமை, வெகுளியை அடக்குதல், இவற்றில் எல்லாம்கூட திருவள்ளுவருக்குத் திருப்தி யில்லாமல் 'பிறனில் விழையாமை'யிலே 'அறம்', 'பொறையுடைமை'யிலே 'அறம்', 'அழுக்காறாமை'யிலே 'அறம்', 'தீவினையச் சத்திலே 'அறம்' 'அருளுடைமையிலே அறம்' என்று சொன்னார். 'அருளுடைமையைச் சொல்லும்போது, ஐந்து நாள் கடுமையான கெந்து வட்டி வாங்கியவன், ஆறாம் நாள் பாம்புக்குப் பால் ஊற்றுகிறான். நெடுக நிறைய சோறு போட்டுக்கொண்டு வருகிறான். ஐந்து நாள் வட்டி கட்டாமல் உட்கார்ந்தான் என்று சொன்னால், அவனிடம் நகையை வைத்தவன் திருப்பி வாங்கவே முடியாது. நகை முழுகிவிட்டது என்றுதான் திரும்பி வரவேண்டும். அப்படி ஐந்து நாள் கெந்து வட்டி வாங்கிவிட்டு ஆறாம் நாள் பாம்புக்கு பால் ஊற்றுகிறான் என்றால் அது 'அறம்' இல்லை என்று சொன்னார்.

'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரில்
அருளாதான் செய்யும் அறம்'

என்று சொன்னார்.

அருள் இல்லாதவன் செய்யும் அறம் இருக்கிறதே, அதனால் எந்தப் பயனும் இல்லை என்ற கருத்தைச் சொல்லுகிறார். எனவே, கல்லாமை, கொல்லாமை, என்ற எல்லாவற்றிலும் 'அறம்' தங்கியிருக்கிறது என்ற கருத்தை வள்ளுவர் பெருமான் கூறி விளக்கம் கொடுக்கிறார்.

'இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு'.

இந்த உலகம் இருப்பதே, அறத்தைத் தன்னுடைய வாழ்க்கையிலே கடைப்பிடிப்பவர்கள் இருப்பதனால்தான், இந்த உலகம் இருக்கிறது என்ற கருத்தையும் வள்ளுவர் பெருமான் சொல்லுகிறார்.

எனவே, அன்புசால் பெருமக்களே! அறம் என்ற சொல்லுக்கு அறுதியிட்டுக்கூற முடியாத விளக்கத்தை வள்ளுவரின் திருக்குறளிலே நாம் காண்கின்றோம். 'அறம்' என்பது விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் என்ற கருத்தைத்தான் வள்ளுவர் பல கோணங்களிலே காட்டிச் சொல்லுகிறார் என்ற கருத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேண்டும்...

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும்
வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும்
வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம்
செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும்
வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை
யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும்
வேண்டும்.

—பாவேந்தர் பாரதிதாசன்

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அறிவியல் தமிழ் கண்டோம் - இன்றும் தமிழ் - என்றும் தமிழ்

நன்றி! நன்றி!! நன்றி!!!

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சாவூர்

தமிழ் வளர்க்க, கரந்தைத் தமிழ்ச்சங்கம் கண்ட தஞ்சையினில்
தமிழ் செழிக்கப்பல்கலைக்கழகம் கண்ட தஞ்சையினில்
தமிழ் சிறக்க எட்டாம் உலகத் தமிழ் மாநாடு கண்ட தஞ்சையினில்
நிறைவு விழா கொண்டாடி, நெஞ்சம் மகிழ,
கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கு
எழுபத்தைந்து இலட்சம் ரூபாய் அள்ளிக்கொடுத்த வள்ளல்

மாண்புமிகு தமிழக முதல்வர்

புரட்சித்தலைவி

அவர்களுக்கும்
தமிழக வருவாய்த்துறை அமைச்சர்
மாண்புமிகு எஸ்.டி.எஸ். அவர்களுக்கும்

நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு படைக்கின்றோம்!

வாழ்க நின் கொற்றம்! வளர்க நின் தமிழ்த் தொண்டு!

இங்ஙனம்

ச. இராமநாதன், தலைவர்

மற்றும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அறிவியல் தமிழ் கண்டோம் - இன்றும் தமிழ் - என்றும் தமிழ்

அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை சொல்லும் செய்தி

பெல்ஜியம் நாட்டு இளவரசர் திரு பிலிப் அவர்கள் 29.3.95 அன்று சென்னை கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு 30 நிமிடம் நடந்தது.

அப்போது தொலைத் தொடர்பு, துறைமுகங்களின் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு உதவுவதில் பெல்ஜியம் அரசு ஆர்வம் காட்டி வருவதாக இளவரசர் திரு பிலிப் கூறினார். இந்தியாவில் உள்ள தொழில் நிறுவனங்களின் உதவியுடன் இங்கு தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக, பெல்ஜியம் நாட்டுக் குழு வந்து இருப்பதாக இளவரசர் திரு. பிலிப் தெரிவித்தார்.

அப்போது, பெல்ஜியம் நாட்டுத் தொழில் அதிபர்களைத் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வருமாறும், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தரத் தயாராக இருப்பதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார். தமிழ்நாட்டில் தொழில் துறையை மேம்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும், தொழில் தொடங்குவதற்கு நேரடியாக அனுமதி வழங்கும் முறை குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்.

பெண் தொழில் முனைவோருக்கு எத்தகைய உதவிகள் செய்கிறீர்கள் என்று இளவரசர் பிலிப் கேட்டார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிட்கோ மூலம் பெண் தொழில் முனைவோருக்குத் தொழிற்பேட்டைகள் அமைத்துக் கொடுப்பது பற்றியும், முன்னுரிமை அடிப்படையில் பெண் தொழில் முனைவோர்க்கு 30 சதவீதத் தொழில் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும், பெண்கள் சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்குப் பயிற்சி அளிக்கப்படுவது பற்றியும் எடுத்துக் கூறினார்.

1991-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சமூக மேம்பாடு பற்றியும், பெண் குழந்தைகளைப் பாதுகாக்கத் தமிழக அரசு நிறைவேற்றிவரும் தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்றவை குறித்தும் விளக்கிக் கூறினார். மேலும், வயதானவர்கள், உடல் ஊனமுற்றோர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக நிறைவேற்றப்படும் சமுதாயப் பாதுகாப்புத் திட்டங்கள் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்.

முழுக்கல்வி அறிவுத் திட்டம், சென்னை நகரில் மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றியும் அவர் விளக்கிக் கூறினார்.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும், அதன் சாதனைகளையும் கேட்டு அறிந்த இளவரசர் திரு பிலிப் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனம் திறந்து பாராட்டினார்.

✠ ✠ ✠

ஜப்பான் நாட்டுத் தூதுவர் திரு. யுசுகி காகு, மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தமிழக அரசு செயல்படுத்தி வரும் தொட்டில் குழந்தைகள் திட்டத்தை ஜப்பானில் வெகுவாகப் பாராட்டுவதாகக் கூறினார். மேலும், சேலத்தில் தொட்டில் குழந்தைகளுக்குப் பராமரிப்பு இல்லம் கட்டுவதற்காக ரூ.22 இலட்சத்திற்கான காசோலையை அவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

✶ ✶ ✶

சென்னையில் உள்ள சிங்கப்பூர் நாட்டின் தூதுவர் திரு முருகன் அவர்களும், அவரது மனைவி திருமதி லதா அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

நான்காவது அட்டை சொல்லும் செய்தி:

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1995- 96-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து உரையாற்றினார் (22.3.95).

நீ ஓர் சகாப்தம்!

கவிஞர் பெரி. சிவனடியான்

பைந்தமிழ்த் தாயே உன் பட்டான மேனிக்குப்
பாவாடை கட்ட வந்தார்
பாவாடை கட்டிடும் பாவாணர் நாவிற்குப்
பால் வார்க்க நீ ஓடிவா!

அந்த நாள் போல் இன்று வந்துள்ள
கவிஞரும்

ஆயிரம் பாச் சூட்டினார்
ஆயிரம் பாச் சூட்டும் அன்பர்க்குப் பூச்சூட
அன்னைநீ இங்கோடி வா
பூவே நீ பூச்சூட வா!

சந்தம் முழக்கிச் சதிராட வைத்திங்கே
தாயுன்னைக் காண வந்தார்
தாந்திமிதோம் என்று தாயாடும் ஆட்டத்தில்
தம்மை மறக்க வந்தார்! இவர்
தம்மை மறக்க வந்தார்!

செந்தமிழ்ப் பாட்டில் மயங்கித் திளைத்திட
சீக்கிரம் நீ ஓடி வா!
சிந்துபைரவி தந்து முழக்கிட
தேவி நீ இங்கோடி வா! எம்
தேவி நீ இங்கோடி வா!

மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள்

தஞ்சைத் தரணியிலே தமிழுலக மாநாட்டைக்
கொஞ்சும் தமிழ் முழங்கக் கூட்டிவைத்த
பெருமாட்டி
மாதர் குலவிளக்கு மக்கள் மனத்தரசி
பூதலமே போற்றுகிற புரட்சித் தலைவிஇவர்

மாமதுரை மீனாட்சி மதுரையை
ஆண்டதுபோல்

தாமரைப் பொற்செல்வி
தைரியலட்சுமி தமிழகத்தை ஆளுகின்றார்!

வெற்றிப் பவனி வரும் வீராங்கனைத் தேவி
நெற்றிக்கண் திறந்தாலும் நீதிக்குப்
போரிடுவார்!

குற்றம் குற்றமெனக் கூறிய
நக்கீரனைப் போல்
நெற்றிக்கண் திறந்தாலும் நீதிக்குப்
போரிடுவார்!

சரித்திரத்தில் வீரப்பெண் ஜான்ஸி எனச்
சாற்றிடினும்

சரித்திரமே நம் முதல்வர் சான்றாவார்
யாருண்டு?

உலகக் கவிஞர்களில் ஒருவர் சரோஜினியார்!
உலகக் அரசியுலில் ஒருவர்
புரட்சித் தலைவி!

இதயக் கருணையிலே இளகுகிற வெல்லம்
இவர்

அதனால்தான் தாய்க்குலமே அடிபணிந்து
நிற்கிறது

அன்னை தெரசாவே அருள்மொழியால்
போற்றியபின்

என்பாட்டும் பாராட்டும் இதயாஞ்சலி யாகும்!
நாள்முழுதும் ஜெயபேரிகை
நாமுழுதும் லலிததமிழ்
வாழ்நாள் முழுதும் வெற்றிவாகையே
சூடிடுவீர்!

திடமனமும் நல்ல தீர்க்க தரிசனமும்
உடையநம் முதல்வரை
உள்ளத்தால் வணங்குகிறேன்!

தொடக்கக் கவி படித்துத் தமிழைத்
துலங்க வைத்த

அமைச்சரவர்களே!
முன்னிலை வகித்துத் தமிழை முழக்கிய

அமைச்சரவர்களே!
மற்றும் அணிதிரண்டு வந்துள்ள
அமைச்சர் பெருமக்காள்!
பணிந்தும்மைப் போற்றுகிறேன்
படைக்கலன்கள் நீரன்றோ!
-இவ்வரசின் படைக்கலன்கள் நீரன்றோ!

கவியரங்கத் தலைவர்

தலைமைக் கவிஞர் தமிழ்ப்
புலமைப் பித்தன்இவர்
நிலைத்த புகழ்ச்சித்தர் நினைவெல்லாம்
பாட்டாகும்
அரசவைக் கவிஞராய் அலங்கரித்த
பெருமகனைச்

சிரந்தாழ்த்தி வணங்கி இச்சபையில்
பாட்டிசைப்பேன்!

ஆன்றோரே சான்றோரே அருமைமிகு
தாய்மாரே,
தோன்றாத் துணையாகித் துடிக்கின்ற
இளைஞர்களே!
உலகம் வியக்க உடன்பாடி அமர்ந்துள்ள
இலகுதமிழ்க் கவிஞர்களே!
எல்லோர்க்கும் என் வணக்கம்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர்
முன்னிலையில்
சென்ற ஐந்தாம் மாநாட்டில் சீரார் கவி
படித்தேன்
இன்றோ புரட்சித் தலைவி பொற்சபையில்
வீற்றிருக்க,
நிரம்பக் கவி படிக்கும் நீள்வாய்ப்பைப்
பெற்றேன்நான்!

கவியரசு கண்ணதாசன் அவர்கள்

என் தலைப்புக்குரிய கவிஞர்
ஐந்தாம் மாநாட்டில் மதுரையில்,
அவர் தலைமையில் பாடிவந்து, இந்த
மாநாட்டில்
வழங்குகிறேன் அவர் புகழை!

முத்து முத்தாய்க் கவிதை முத்தையா நீ
உதிர்த்து
நத்தித் தமிழ்படித்த நாள்முதலாய்
நானறிவேன்

எட்டாவதாய்ப் பிறந்து எட்டாவதே படித்து
எட்டும் வரைஎட்டி இமயத்தைத் தொட்டவன்
நீ!

இளமையிலே வறுமை எழிற் கவிஞனாக்கியது
வளமையிலோ வழங்குகிற வள்ளல்குணம்
பெற்றாய்!
உணர்ச்சிப் பெருக்கால் ஒன்றிங்கு
சொல்லிடுவேன்
எனக்குரியதென்றாலும் எடுத்துரைக்கத்
தக்கதது
என் நன்றியுணர்ச்சியது!

'மாலையிட்ட மங்கை' படம் மாமேதை
எடுக்கையிலே,
நான்
மாலையிட்ட மணநாளில் வாழ்த்துரைக்க
வந்தாய்நீ!
எளியேன் இல்லத்திற்கு, மாலையிட்ட
மணநாளில்
வாழ்த்துரைக்க வந்தாய் நீ!
என் மனையில் அன்று வந்து ஏற்றிவைத்த
தமிழ்விளக்கு
இன்றுவரை எரிகிறது இதயம் மிளிர்கிறது!

காசு பணத்தைக் கணக்கிட்டுப் பார்க்காமல்
நேசித்த பெருந்தகைமை நெஞ்சில்
நிலைத்துளது
காசு பணத்தைக் கணக்கிட்டுப் பாராமல்
யாரையும் நேசித்த பெருந்தகைமை
நெஞ்சில் நிலைத்துளது!

தோளுக்குத் தோள்கொடுத்துத் துணையாகி
நின்றதனால்
நாளிதிலே நற்சபையில் நான் நின்று
பாடுகிறேன்!

திரைக்களத்திற் கேற்றபடி சித்திரித்த
பாடல்களாற்
பெருமைபல பெற்றவரில் பேராற்றல்
மிக்கவன்நீ
எண்ணினால் நூறு எண்ணாமல் ஆயிரமாய்
பண்ணார்ந்த இசைப்பாடல் பல்லாயிரம்
தந்தாய்!
மாலுருகப் பாடி–திருமாலுருகப்பாடி
மனக்கவலை தீர்த்த நிலை
நாலு வரி இசைத்தால் நானும் ஒரு பெண்
ஆவேன்!

'கண்ணா கருமை நிறக் கண்ணா,
உன்னைக் காணாத கண் இல்லையே
உன்னை மறுப்பாரில்லை, கண்டு
வெறுப்பாரில்லை
என்னைக் கண்டாலும் பொறுப்பாரில்லை!'

- இப்படி நாலுவரி இசைத்தால் நானும் ஒரு
பெண் ஆவேன்!

பாட்டொன்றுக் காயிரமாய்க் கப்பம் பெற்று
பரந்துபுகழ் எய்தியதாய் இந்த நாட்டார்
ஏட்டளவில் கண்டதனை உண்மையென்று
எடுத்துரைக்கப்
பிறந்தவனே கண்ணதாசன்!
பூட்டிவைத்துக் காத்தாரோ பணத்தை?
கேட்டால்/போனால் போகட்டும் அது
போடா என்பார்
உண்மையிலே பூட்டி வைத்து அப்பணத்தைக்
காத்திருந்தால்,
புறப்பட்டு வாராது அவர்க்குப் பாட்டு;
பூட்டி வைத்து அப்பணத்தைக் காத்திருந்தால்
புறப்பட்டு வாராது அவர்க்குப் பாட்டு!'
காரணம் அனுபவக் கவிஞரவர்
அறியாத பொருளில்லை!
அணுவணுவாய் அத்தனையும் அறிந்தறிந்தே
எழுதியவர்!



இந்த உலகத்தில், ஆற்றுநீர் வற்றும்
ஆழ்கடலும் உள்ளடங்கும்!
ஊற்றும் ஒருநாள் ஊறாது கண்ணடைக்கும்
மாரி தவறும் மழையருவி ஓய்ந்துவிடும்!
சீரிளமைத்தோற்றம் சில ஆண்டில்
மாறிவிடும்!

ஏரி வறட்சியுறும் எழிற்பறவை தாம் விலகும்
வேடந்தாங்கலில்
ஏரி வறட்சியுறும் எழிற்பறவை தாம் விலகும்
காரிகையிடம் பேச்சும் கலந்தால்
குறைந்துவிடும்! ஆனால்,

பாரிற் கவியரசு பாடிவைத்த பாட்டெல்லாம்
வாரிவாரிக் கொடுத்தும் வளம்சிறிதும்
குறையவில்லை
மக்கள் வாயசைத்தும் குறையவில்லை!

ஏசுக்கோர் காவியத்தை எழுதித் தந்தாய்
எம்மதமும் சம்மதமென்று எடுத்துரைத்தாய்
ஆசிரியராயிருந்து இதழ்கள் தந்தாய்
அடுக்கடுக்காய் நூல்கள் பல ஆக்கித் தந்தாய்!
பேசுகிற மேடையெலாம் தமிழை வாரிப்
பிரவாகமாக நீ ஓட விட்டாய்!
ஆசுகவியாய் நின்று அரைக்கணத்தில்
அவரவர்க்கும் ஏற்றபடி பாட்டை யாத்தாய்!

திரைப்படத்துக் கவிஞராய் மட்டும் இல்லை
திரைக்கேற்ற கதைவசனம் தீட்டித் தந்தாய்
திரைப்படத்தில் நாடகத்தில் நடித்தும்
பார்த்தாய்
திரைப்படங்கள் எடுத்ததனால் இழப்பும்
கொண்டாய்

அரைகுறையாய் எதையும் நீ படித்ததில்லை
அப்படியே படித்ததெலாம் ஜீரணித்தாய்
திரும்பவும் நீ அதை அழகாய்ப் பெற்றெடுத்துத்
திக்கெட்டும் போற்றும் வகை புதுமை
செய்தாய்!
அதுதான் பழம்பாடல் புதுப்பாட்டு!

தென்றலென முல்லையென இதழ்களுக்குச்
சிறப்பான
பெயரிட்டுத் திகழவைத்தாய்
ஒன்றையும் நீ விட்டதில்லை
இலக்கியத்தில் உயர்துறைகள் அத்தனையும்
உனதாயிற்று!

தமிழரசு

மே-1 இதழ்

கோவை மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!

- கண்ணைக் கவரும் வண்ண முகப்பு
- அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்
- மகத்தான மாவட்ட வளர்ச்சிப் பணிகள்
- கருத்தைக் கவரும் கட்டுரைகள்
- கரும்பு நிகர் கவிதைகள்
- சிந்தைக்கு விருந்தூட்டும் சிறுகதைகள்
- சுவையான துணுக்குகள்
- பக்கத்துக்குப் பக்கம் படங்கள்

கோவை மாவட்டச் சிறப்பிதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!

இரண்டாவது அட்டை	ரூ. 25,000
மூன்றாவது அட்டை	ரூ. 20,000
நான்காவது அட்டை	ரூ. 30,000
முழுப் பக்கம் (உள்ளே: கறுப்பு-வெள்ளை)	ரூ. 5,000
முழுப் பக்கம் (உள்ளே - வண்ணம்)	ரூ. 10,000

விளம்பர அளவு: 23 X 17 செ.மீ.

பக்க அளவு 25 X 20 செ.மீ.

—விவரங்களுக்கு—

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை 600 002

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை 600 002. தொலைபேசி எண் 568926, 568927

தூய பட்டு

தூய சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு.
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
30 மே 1995
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

1.5.1995 ரூ.3

கோவை மாவட்டச் சிறப்பிதழ்



திரு துர்காபிரசாத்-வீணை இசை

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு இசையரங்கம்

திரு விசுவேசுவரன்-சந்தூர் இசை

திருவாளர்கள்
சி.கே. பதஞ்சலி,
சி.வி. மகாலிங்கம்
புல்லாங்குழல் இசை

மே திருநாள்!

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சிகாகோ நகரில் ஆண்டாண்டு காலமாகக் கொத்தடிமையாக உழைத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சிந்தித்து ஒன்று கூடிப் போராடி, ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் பணி நேரமாக வரையறுக்கப்பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, உழைக்கும் வர்க்கம் அடிமை விலங்கை ஒடித்து நொறுக்கி விடுதலை பெற்று வீறு கொண்டு, எழுந்த நாள் 1889 'மே' முதல் நாள் ஆகும். அந்தநாள், ஆண்டுதோறும் 'மே' தினத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆதிக்க வெறியர்களின் ஆணவத்தை அழித்து அன்று முழங்கிய உழைப்பாளாகளின் உரிமைகீதம் தான், இன்று வாழ்வில் வசந்தமாகப் பல உரிமைகளைத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது.

சாதி, மதம், இனப்பாகுபாடு இன்றி உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களும் ஒன்று கூடி, தங்களது உரிமைக்காகப் போராடிப் பெற்ற வெற்றியாகக் கொண்டாடும் மகிழ்ச்சியான திருநாள் இந்த 'மே' திருநாளாகும்.

- மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ.ஜெயலலிதா

இந்த இதழில்...

★ கேபிள் டிவி. உரிமையாளர்கள் சங்க மாநில நன்றி அறிவிப்பு மாநாடு - மாண்புமிகு முதலமைச்சர் உரை
★ திரைப்படத் தொழிலாளர்கள் குடியிருப்பு அடிக்கல் நாட்டுவிழா மாண்புமிகு முதலமைச்சர் உரை . . . 9
★ காடம்பாறை மின்திட்டம் . . . 17
★ சிறுவாணி குடிநீர்த் திட்டம் 19
★ வளர்ச்சியுறும் திருப்பூர் 23
★ வேளாண்மை வளர்ச்சி. 25
★ கல்லாறு கனித்தோட்டம் 29
★ கோவை மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் 33
★ உடுமலை நாராயண கவி 37
★ கோவை மருத்துவக் கல்லூரி 40
★ கோரா பட்டுச்சேலை. 43
★ கோவை மாவட்டத் தொழில் மையம் 49
★ உள்ளங்கவரும் உடுமலைப்பேட்டை . 59
★ சிவாஜிக்கு செவாலியே விருது வழங்கும் விழா. 65
★ மருதமலை மாமணியே முருகையா . 73
★ கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் 77

. . . 1995
. . . காப்பகம்
. . . -600 008

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:



நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. (20)

* எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026
சித்திரைத் திங்கள்: 18
மலர்: 25 இதழ்: 21
1.5.1995 விலை: ரூ. 3

கோயம்புத்தூர் மாவட்டம்



மாவட்டத்தின் பரப்பளவு: 7,469 சதுர கிலோ மீட்டர்.

மாவட்டத் தலைநகரம்: கோயம்புத்தூர்.

மாவட்டத்தின் எல்லைகள்: வடக்கெல்லை பெரியார் மாவட்டம், கர்நாடக மாநிலம். தெற்கெல்லை மதுரை மாவட்டம், கேரள மாநிலம், மேற்கு எல்லை கேரள மாநிலம், நீலகிரி மாவட்டம், மைசூர் மாநிலம். கிழக்கெல்லை சேலம் மாவட்டம், திருச்சிராப் பள்ளி மாவட்டம்.

இதில் அடங்கியுள்ள 7 வட்டங்கள்: கோவை தெற்கு, கோவை வடக்கு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, உடுமலை, வால்பாறை, திருப்பூர், அவினாசி, பல்லடம்.

ஊராட்சி ஒன்றியங்கள் 24; அவை: கோவைப் பிரிவில் மதுக்கரை, தொண்டா முத்தூர், பேரூர், பெரியநாயக்கன் பாளையம், சர்க்கார் சாமகுளம், காரமடை பொள்ளாச் சிப் பிரிவில் பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாசசி வடக்கு, கிணத்துக்கடவு, குடிமங்கலம், மடத்துக்குளம், உடுமலைப் பேட்டை, ஆனைமலை, வால்பாறை திருப்பூர் வட்டத்தில் அன்னூர், அவினாசி, திருப்பூர் பல்லடம், பொங்கலூர், சுல்தான் பேட்டை, சூலூர்.



திருப்பணி வேலை நடைபெற்றுவரும் - மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் (பழைய தோற்றம்)

'புதிய விடியல்'

18.4.1995 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழகக் கேபிள் டி.வி. உரிமையாளர்கள் சங்க மாநில நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை

மூலைக்கு ஒன்றாகச் சிதறிக் கிடந்த, கேபிள் டி.வி.ஆபரேட்டர்கள், உரிமையாளர்கள் அனைவரும், ஒற்றுமை உணர்வோடு ஒன்று சேர்ந்து, ஒரு சக்தி மிக்க இயக்கமாக

உருப்பெற்று, நடத்துகின்ற மாநில நன்றி அறிவிப்பு மாநாட்டில், பங்கு கொள்வதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கேபிள் டி.வி. உரிமையாளர்களை, ஒரு பாச மிக்க குடும்பத்தின் அங்கத்தினர்களாக, என் முன்னே இங்கே காண்பதில், என் மகிழ்ச்சி இரட்டிப்பு ஆகிறது.

தொலைக்காட்சியும், செயற்கைக் கோள் வழி ஒளிபரப்பும், இந்த இருபதாம் நூற்றாண்டின், ஈடு இணையற்ற அறிவியல் அற்புதங்கள். நமது வாழ்க்கையின் அடிப் படைகளிலே, மாபெரும் மாறுதல்களை ஏற்படுத்தும் ஆற்றலும், மக்களின் கண்ணையும், கருத்தையும், ஒருங்கே கவரக் கூடிய ஈர்ப்புச் சக்தியும், தொலைத்தொடர்புச் சாதன மான, தொலைக்காட்சிக்கு உண்டு என்பது, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பேருண்மை ஆகும். Seeing is believing; எதைக் காண்கிறோமோ அதைத் தான் நம்புகிறோம் என்பதன் அடிப்படையில், கண்ணுக்கு எட்டாதவைகளையும், கருத்துக்குப் புலன் ஆகாதவைகளையும், நமது கண்களாலே நுகர்ந்து, புரிந்து கொள்ள வைக்கின்ற, ஒரு சக்தி மிக்க சாதனம் தான். விண்கோள் வழித்

தொலைக்காட்சி ஒளிபரப்பு என்கிற அறிவியல் அற்புதம் ஆகும். நாம் வாழ்ந்து வருகின்ற பூமி, பரந்து விரிந்து கிடந்தாலும், பூமியின் இதரப் பகுதிகளில், நிகழ்கின்ற நிகழ்ச்சிகள், நொடிப் பொழுதில் நம் கண்ணுக்கு முன்னே, சின்னத்திரையில் ஒளிரும்போது, உலகம் மிகவும் குறுகியதாக மாறி, உலக மக்கள் அனைவரும், ஒரு குடும்பத்தவரே, என்கின்ற உயர்ந்த எண்ணத்தை, இந்தச் செயற்கைக் கோள் ஒளிபரப்பு ஏற்படுத்தி வருகின்றது.

நமது கலாச்சாரம், பண்பாடு ஆகியவை. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவுவதற்கும், இந்திய நாட்டின் தொன்மைச் சிறப்பை, உலகத்தின் அனைத்துப் பகுதி வாழ் மக்களும், உணர்ந்து கொள்வதற்கும், இதே சாதனம், ஒரு கருவியாக விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. நமது கலைகள், கலாச்சாரம், பண்பாடு ஆகியவை, மேலை நாடுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, ஒரு புதிய திருப்புமுனைக்கு, வழி வகுக்கும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

அத்தகைய ஓர் அரிய, அறிவியல் அற்புதத்தை, ஒவ்வொரு வீட்டிற்கும், ஏன், ஒவ்வொரு தனி மனிதன் முன்னாலும், கொண்டு செல்கின்ற, ஒரு மாபெரும் சமுதாயப் பொறுப்பும், கடமையும் உள்ள, வல்லவர்களின் கூட்டம் தான், இங்கே என் முன்னே அமர்ந்து இருக்கின்ற, கேபிள் டி.வி உரிமையாளர்கள். இந்த உண்மையை, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், என்னைப் பொருத்த வரையில், உங்களது சமுதாயக் கடமையையும், முக்கியத்துவத்தையும், நான் அங்கீகரிக்க விரும்புகிறேன்.

பொழுதுபோக்குக்கு மட்டும் இன்றி, மக்களின் நல்வாழ்விற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ப, தொலைக்காட்சி ஒளிபரப்பை, மக்களுக்கு வழங்குகின்ற சமுதாயத் தொண்டர்களாகத் தான், உங்களை நான் காண்கின்றேன். உங்கள் வாழ்க்கை வளம் பெற்றால், மற்றவர்களின் வாழ்க்கையும் வளம் பெறும், என்ற உந்துதலின் அடிப்படையில், எங்கள் அரசு, இந்தத் தொழிலின் முக்கியத்துவத்தை, அங்கீகரிக்கும் வகையில் பல சலுகைகளை அறிவித்துள்ளதை, இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கேபிள் டி.வி. உரிமையாளர்கள், இயக்குபவர்கள், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற, ஒரு விஞ்ஞான அற்புதத்தை, இனிய தமிழக மக்களின் இல்லங்களில், கொண்டு செல்லும் தொண்டர் படை, என்கின்ற எண்ணத்தை, மக்கள் மனதில் நீங்கள் அனைவரும், உருவாக்க வேண்டும் என்று, இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்தச்செயற்கைக் கோள் ஒளிபரப்பு, வியாபார ரீதியில் நடத்தப்படும். ஒரு வர்த்தகம் என்றும், மக்களின் நேரத்தை வீணடிக்கின்ற ஒரு சாதனம் என்றும், பல இடங்களில், அபிப்பிராயங்கள் நிலவுவதை, நான் அறிவேன்.

அந்த எண்ணம் மறைய வேண்டும் என்றால், செயற்கைக் கோள் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்கள். தங்கள் சமுதாயக் கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டும். சமுதாயத்தின் பலமுனை வளர்ச்சிக்கு வித்திடுகின்ற, புதுமைக் கருத்துக்களையும், தகவல்களையும், உலகின் பல்வேறு மூலைகளிலிருந்து, கொண்டு வந்து வழங்க வேண்டும். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும் நிகழ்ச்சிகளையும், நம் அறிவையும்,திறமையையும், வளர்ப்பவைகளாவும் அமைக்க வேண்டும், என்கின்ற ஒரு வேண்டுகோளை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக, முன் வைக்க விரும்புகிறேன்.

மூவேந்தர் ஆண்ட நாடு

பசும்பூண் பாண்டியன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் - சேரன் பல்யானைச் செங்கெழு குட்டுவன், இளஞ்சேரல் இரும்பொறை, சேரன் செங்குட்டுவன் ஆகிய மூவேந்தரும் கொங்கு நாட்டை வென்றதாக வரலாறு இருக்கிறது. ஆனால், யாரும் நீண்டகாலம் நிலையாக ஆண்டதில்லை!

செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே, ஒரு பாலமாகத் திகழ்பவர்கள், இந்தக் கேபிள் டி.வி. உரிமையாளர்கள், மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களின் உள்ளக் கிடக்கையை, அறியும் வாய்ப்பும், ஆற்றலும் பெற்றவர்கள். இந்த விஞ்ஞானத்தின் அற்புதம், மனிதகுல வளர்ச்சிக்கு, எந்த வகையில் உறுதுணையாகச் செயல்பட வேண்டும் என்று பொதுமக்கள் கருதுகிறார்களோ, அந்த எண்ண ஓட்டத்தைச் செயற்கைக் கோள் ஒளிபரப்பாளர்களுக்குச் கொண்டு செல்லுகின்ற மாபெரும் கடமையும், பொறுப்பும், உங்களுக்கு உண்டு.

கருத்துப் பரிமாற்றத்திற்கும், புதிய முற்போக்குச் சிந்தனைக்கும், வழி வகுக்கும் வகையில், சமுதாயத்தில் பணி ஆற்ற வேண்டிய கடமை, உங்களுக்கு உண்டு என்பதை, நீங்கள் ஒரு கணமும் மறக்கலாகாது.

வணிகம், வர்த்தகம் என்ற உணர்வு, ஒரு புறம் இருந்தாலும், நாம் மேற்கொள்ளுகின்ற பணி, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், அடிப்படையாக விளங்குகிறது என்ற உணர்வும், பெருமிதமும், மறுபுறம் இருக்க வேண்டும். இந்தச் சமுதாயம் உயர்வதற்கு, நாம் ஒரு கருவி என்ற எண்ணம், உங்கள் ஆழ்மனதில், நிச்சயமாக வேரூன்ற வேண்டும்.

எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, நீங்கள் அனைவரும் இந்தப் பணியை, ஒரு புனிதப் பணியாக மேற்கொள்வீர்கள் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன். அத்தகைய ஒரு லட்சிய உணர்வுடன், இந்தப் பணியை மேற்கொள்ளும்போது, நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய இன்னல்களையும், இடையூறுகளையும், தீர்த்து வைக்க, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எப்போதும் தயாராக இருக்கும் என்பதையும், தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கொள்கையின் அடிப்படையில், நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறீர்கள்.

உங்களது வாழ்க்கையில, ஒரு புதிய விடியல், உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. உங்கள் தொழிலுக்கு, ஒரு புதிய அங்கீகாரம் கிடைத்துள்ளது, உங்கள் வாழ்க்கையில், புது வசந்தம் நிலவப் போகிறது. எதிர்காலத்தில், இத்துறையின் வளர்ச்சிக்கு,, எங்கள் அரசு, உற்ற துணையாக என்றென்றும் விளங்கும்.

பொதுவாக, பாராட்டு விழா நிகழ்ச்சிகளில், நான் பங்கு கொள்வது இல்லை. ஆனால், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், நன்றி கூற விரும்புகிறவர்களின், மனிதாபிமானத்தை, நான் பாராட்ட வேண்டும், என்ற ஓர் எண்ணத்துடன், இத்தகைய விழாக்களில் நான் பங்கேற்று வருகிறேன். உங்கள் அனைவரின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும், கண்ட பின்பு தான், நான் இந்த நன்றி பாராட்டு விழாவில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டேன்.

தங்கள் சொந்த இச்சைகளை முன்னிறுத்தி, மக்கள் நலனைக் காற்றிலே பறக்கவிட்டு, சிலர் தமிழகத்தில், செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், நீங்கள் அனைவரும் ஒன்று கூடி, எனக்குத் தெரிவித்த பாராட்டுதல்களுக்கும், ஆதரவுக்கும், எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

பொது வாழ்வில் ஈடுபடுவோர்கள்,மக்கள் நலன் ஒன்றையே, தங்கள் குறிக்கோளாகக்

கொண்டு செயலாற்ற வேண்டும், என்கின்ற அடிப்படை சித்தாந்தத்தில், எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. ஆனால், தமிழ் நாட்டில், சமீப காலத்தில், நடைபெற்று வருகின்ற சில சம்பவங்கள், அந்த சித்தாந்தத்தின் அடிப்படைகளையே, தகர்த்து எறிந்து விடுமோ, என்ற அஞ்ச வேண்டி உள்ளது.

என்னைப் பொறுத்த வரையில், மக்கள் சக்தி ஒன்றையே, நான் நம்பி இருக்கிறேன். இங்கே குழுமி இருக்கின்ற, அத்தனை அன்புச் சகோதர, சகோதரிகள், ஆகியோரின் ஆதரவையும், நல்லெண்ணத்தையும், மாபெரும் சொத்தாகக் கருதுகிறேன்.

தமிழக மக்களின் பேராதரவும், நம்பிக்கையும், மக்கள் பணி ஆற்ற, எனக்கு உறுதுணையாக இருக்கும், மாபெரும் சக்தி என்றால், அது மிகையாகாது.

அவதூறு கூறுவதற்கென்றே, சிலர் அவதாரங்கள் எடுத்து வந்துள்ளனர். நல்லவர்களுக்கு மேலே, வட்டமிடும் வல்லூறுகளைப் போல், திட்டமிட்டு தீயவைகளைத் திக்கெட்டும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். விஷவித்துக்களை வியாபாரம் செய்யும், அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காரர்கள், மலிந்து விட்டார்கள்.

தமிழகத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு ஆட்சியை, சில மனிதர்கள் ஒன்று கூடி, சதித் திட்டங்கள் தீட்டி, மக்களின் விருப்பத்திற்கு எதிராகக் கலைத்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்கள். சில குறுகிய அரசியல் லாபங்களுக்காக, சிலர் என் மீது களங்கம் கற்பிக்க, தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது, தமிழகத்து மக்களுக்கு நன்கு தெரியும்.

தனி நபர்களின், விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில், பிறப்பிக்கப்படுகின்ற ஓர் ஆணை, மக்கள் மாமன்றத்தின் முன்னே, வைக்கப்படும்போது, தீயின் முன் வைக்கப்

முதல் பரிசு

அண்மையில், சென்னையில் முடிவுற்ற 21-வது சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் எல்லா மாவட்டங்களின் சார்பிலும் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன; அவற்றில் மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசு பெற்றது கோவை மாவட்ட அரங்கு!

பட்ட வைக்கோல் போல், எரிந்து சாம்பலாகி விடும்.

மக்கள் சக்தியைப் புரிந்தவர்களுக்கு, இந்தப்பேருண்மை புலனாகும் • இருப்பினும், இத்தகைய நேரத்தில், தங்கள் மனதில் உள்ள கருத்துக்களை, மறைக்காமல், துணிவுடன் வெளியிட்டு, தர்மம் என் பக்கம் தான், என்பதைத் தெளிவாக்கி, எனக்கு ஆதரவு தெரிவித்த, மாண்புமிகு ஆந்திரப பிரதேச முதலமைச்சர் திரு.என்.டி.ராமா ராவ், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு.தேவ கவுடா, மாண்புமிகு பீகார் மாநில முதலமைச்சர் திரு லல்லுபிரசாத் யாதவ், பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு வெங்கய்யா மற்றும் மாண்புமிகு நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், திரு ஏ.பி. வாஜ்பாய், ஒரிசா மாநில முன்னாள் முதலமைச்சர் திரு பிஜூ பட்நாயக், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், திரு கி. வீரமணி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் பொதுச் செயலாளர், திரு அப்துஸ் ஸமது ஆகியோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒதுங்கிப் போவதற்கும், பயந்து போவதற்கும், வேறுபாடுகள் உள்ளன. தீயவைகளையும், தீயவர்களையும் கண்டு நாம் ஒதுங்கிப் போனால், நாம் பயந்து விட்டவர்களாக ஆக மாட்டோம் மாறாக, அறிவுடையவர்களாகத் தான் ஆவோம், இந்தத் தீயவர்களால், தீயவை தான் ஏற்படும் என்பதால் நான், ஒதுங்கிப் போகிறேனே தவிர, அவர்களுக்குப் பயந்து அல்ல.

ஒரு நேரத்தில், தீயவர்களை எதிர்க்க

வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் நல்லவர்களின் படைகள் அனைத்தும், ஒரு தர்ம யுத்தத்திற்கு, அணி திரண்டு நிற்கும், என்பது தான் வரலாறு.

தமிழகக் கலைத் துறையைச் சேர்ந்த பலர், எனக்குத் தங்களது ஆதரவைத் தெரிவித்ததோடு, நான் முதலமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டிய அவசியமும் இல்லை. என்று கருத்து தெரிவித்துள்ளனர். அந்த அன்பு நெஞ்சங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சகோதரர் திரு சரத்குமார் தயாரிப்பாளர்கள் திரு கே.ஆர்.ஜி. திரு டி. ராமானுஜம், திரு ஏவி.எம். சரவணன், நடிகர் சங்கத் தலைவர் திரு ராதாரவி, தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர், திரு மோகன் காந்திராமன் என்று எண்ணற்றவர்கள் எனக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

எத்தனையோ சங்கங்கள், சமூகநல அமைப்புகள், எனக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

எத்தனையோ தனிப்பட்ட நபர்களின் ஆதரவும், பாராட்டுதல்களுமே, இந்த நாட்டின் மிக உயரிய ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கின்றன.

மாநிலங்களில், எத்தகையதொரு ஜனநாயகம், தொடர வேண்டும் என்று, அண்ணல் காந்தி, பண்டிட் ஜவகர்லால் நேரு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் விரும்பினார்களோ, அந்த ஜனநாயகம் இன்று, குழி தோண்டிப் புதைக்கப்பட்டு வருகின்றது. **Today Democracy itself is at stake,** ஜனநாயகவாதிகள், என்கின்ற போர்வைக்குள் இருந்துகொண்டு, ஜனநாயகத்திற்கே வேட்டு வைக்க வந்துள்ள, ஒரு கும்பலை எதிர்த்து, நடைபெறும் தர்மயுத்தம், மக்கள் ஆதரவுடன், நிச்சயமாக வெற்றி பெறும்.

மக்கள் தேர்ந்தெடுத்த ஒரு அரசாங்கத்தை, ஒரு சில சதிகாரர்கள், ஒன்றுகூடிக் கலைத்து விட முடியாது என்பதையும் அப்படிச் செய்தால், எத்தனை அவதாரம் வேண்டுமானாலும் எடுத்து மக்களாட்சித் தத்துவத்தின் மகிமை, அவர்களுக்கு உணர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், ஜனநாயக உணர்வு, மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மக்களிடையே ஜனநாயக உணர்வை வளர்க்க, கேபிள் டி.வி. உரிமையாளர்கள், ஜனநாயகக் கருத்துக்களை, மக்களிடையே பரப்ப வேண்டும். ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதை ஒரு இயக்கமாக அகில இந்திய அளவில், கொண்டு வர வேண்டும் என்பதே, எனது அவா. இந்தத் தர்மயுத்தத்தில், கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் அனைவரும் ஜனநாயகத்தின் பக்கம் தர்மயுத்தத்தின் பக்கம் என்றும் துணையாக இருப்பார்கள் என்று, உறுதியாக நம்புகிறேன்.

செயற்கைக் கோள் ஒளிபரப்பில், புதிய எல்லைகளைக் கண்டு, வரலாறு படைத்திடப் புறப்படும் உங்களுக்கு, எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். கருத்துப் பரிமாற்றத்திற்கு, ஒரு புதிய பரிமாணத்தை அளித்திட, நீங்கள் மேற்கொள்ளும் இலட்சியப் பயணம் வெற்றி பெறட்டும்.

கேபிள் டி.வி. உரிமையாளர்களின் சார்பில் உரையாற்றிய அன்புச் சகோதரர் D.G.V.P. சேகர் அவர்கள் கேபிள் டி.வி. உரிமையாளர்கள் வைத்துள்ள இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் A,

"அடுத்தவனை அனுப்பினால் அத்துவம். மகனை அனுப்பினால் மத்துவம். தானே போவதுதான் உத்தமம்!"

- வால்பாறைப் பகுதியில் வழங்கும் ஒரு பழமொழி.

B. C, D, என்று அவர்களை வகைப்படுத்தி, அதன் அடிப்படையில் வரி விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை என்முன் வைத்தார்கள். உங்கள் கோரிக்கையில் உள்ள நியாயம் எனக்குப் புரிகிறது. எனவே, கொள்கை அடிப்படையில் (In Principle) . அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கோரிக்கை விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டு, விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு T.R. லங்காராம் அவர்கள் இங்கே உரையாற்றும்போது, கேபிள் டி.வி.க்கு இரண்டாண்டு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார்கள். ஏற்கெனவே சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப் போல் இப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் அதுவும், வரவு செலவுக் கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், இது குறித்து உடனடியாக எந்த முடிவையும் இங்கே அறிவிக்க இயலாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கை மட்டும் இன்றி மேலும் நீங்கள் என் முன் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும், நான் கனிவுடன் பரிசீலனை செய்து உங்கள் வாழ்க்கைக்கு ஏற்றம் அளிக்கும் வண்ணம் முடிவுகளை அறிவிப்பேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே தம்பி வெங்கடேஷ் அவர்கள் உரையாற்றுகின்றபோது, ஒரு தாய் பிள்ளைக்கு, சாக்லேட் கொடுத்தால் அந்தத் தாயிடம் இன்னும் நிறைய சாக்லேட்டுகள் உண்டு என்பதைத் தெரிந்து கொண்டு இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று அந்தப் பிள்ளை கேட்கும் என்று குறிப்பிட்டார். அதைப் போலவே இங்கு உரையாற்றிய என்னுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒருவிதமான சாக்லேட்டைக் கேட்டார்கள். ஒருவர் மில்க் சாக்லேட் கேட்டார். ஒருவர் புரூட் நெட் (Fruit Nut) சாக்லேட் வேண்டும் என்றார். ஒருவர் டாபி

★ **குருட்டு நம்பிக்கையை அறவே விட்டுவிட்டுப் பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதனால், ஒரு மதமும் நிலைக்காது !**

— தந்தை பெரியார்

(Toffy) வேண்டும் என்றார். ஒருவர் பாரிஸ் ஸ்வீட் (Parrys Sweet) வேண்டும் என்றார். இன்னொருவர் நியூட்ரின் (Nutrine Sweet) வேண்டும் என்றார். ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள் நினைவுபடுத்தியதைப் போல இப்பொழுது பேரவைப் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே நீங்கள் கேட்கின்ற அத்தனைச் சாக்லேட்டுகளையும் வழங்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. இன்னும் நீங்கள் கேட்காத அளவுக்கு 'பைவ் ஸ்டார் பார்' (Five Star Bar) வழங்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உள்ளது. ஆனால், சட்டம் இந்த நேரத்தில் என் கையைக் கட்டிப் போட்டிருக்கிறது. கையை அல்ல, வாயைக் கட்டிப் போட்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்ற உள்ளம், ஆசை எனக்கு இருந்த போதிலும், நான் சட்டப்படி பட்ஜெட் நடைபெறுகின்ற நேரத்தில் பேரவையில் உங்களுக்கெல்லாம் என்னென்ன சாக்லேட்டுகள் வழங்க உள்ளேன் என்பதை அங்கே உள்ளவர்களுக்குத் தெரிவித்துவிட்டு அதன் பின்னர்தான் வழங்க முடியும் என்ற ஒரு விதி இருப்பதால் நீங்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும். விரைவிலேயே உங்களுக்கெல்லாம் நீங்கள் எதிர்பார்த்தபடி சாக்லேட்டுகள் வழங்கப் படும். Five Star Bar- வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக கேபிள் டி.வி. உரிமையாளர்கள் சங்கம், ஆல் போல் தழைத்து, அறம் போல் வளர்ந்திட வேண்டும், என்று நெஞ்சார வாழ்த்துகிறேன். உங்கள் நன்றியினை, உளமார்ந்த அன்புடன் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும், எல்லா நலன்களும், வளங்களும் பெற்று; சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும், என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

"என் கனவு ஈடேறுகிறது!"

85 ஏக்கர் நிலத்தில் திரைப்படத் தொழிலாளர் குடியிருப்புக்கு, அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை

திரைப்படத் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கான அடிக்கல் நாட்டு விழா சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 20.4.95-இல் நடந்தது. அடிக்கல் நாட்டுவித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசியதாவது:

என்னை வளர்த்து ஆளாக்கி விட்ட, பாச மிகு கலைக் குடும்பத்தின், பல்வேறு பிரிவு களைச் சேர்ந்த, உங்கள் அனைவரையும் இங்கே ஒருங்கே காண்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்களின் மனம் குளிரும் வண்ணம் 85 ஏக்கர் நிலப்பரப்பில், புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டி, கலை உலகத்தின், அன்பு நெஞ்சங்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்வதில், நான் பேருவகை அடைகிறேன்.

என்றும் என் நெஞ்சத்தை விட்டு அகலாத, பாசமிகு கலைக்குடும்பம் நடத்துகின்ற இந்த விழாவில், ஒரு குடும்பப் பாச உணர்வு இழையோடுவதை மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடுமையாக உழைத்து, திரைப்படங்களை உருவாக்கித் தரும், திரைப் படத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, ஏதேனும் செய்யவேண்டுமே என்று, கலை உலகில் நான் பணியாற்றிய போதே, நினைத்துப் பார்ப்பது உண்டு. வாய்ப்புக் கிடைத்தால், இவர்கள் வாழ்க்கையில் ஏற்றம் பெற, சில திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று, உள்ளூர நினைப்பது உண்டு. நீறு பூத்த

2

நெருப்பாக இருந்த அந்த உணர்வு. நான் பொது வாழ்க்கையில் ஈடுபட ஆரம்பித்த பின்பு, ஒரு பெரிய இலட்சியமாக உருவெடுத்தது.

இரட்டிப்பு மகிழ்ச்சி

நான் கலையுலகச் சகோதர, சகோதரிகளின் அன்புடனும், தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடனும், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, திரைப்பட உலகின் பல பிரச்சினைகளைத் தீர்த்துவைத்து, திரை உலகத்தின் வளர்ச்சிக்குப் பல பணிகளை மேற்கொள்ளக் காரணமாக இருந்தது, இந்த உணர்வு தான் என்பதைத் தெரிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த உணர்வுகளுக்குச் சிகரம் வைத்தது

போல இன்று திரைப்படத் தொழிலாளர்களின் குடியிருப்பிற்கு அடிக்கல் நாட்டியதில், என் மனம் பூரிப்பு அடைகின்றது.

இதுவரை எவரும் செய்யாத ஒரு சாதனையாகத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 25 சகோதர, சகோதரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப் போவதிலும் என் மகிழ்ச்சி இரப்படிப்பாகின்றது.

கலை உலகம் இன்னும் பலரால் புரிந்து கொள்ள முடியாத ஒரு விசித்திர உலகம் ஆகும். மற்ற தொழில் துறைகளைப் போல, கலைத் துறையை எளிதாக எடைபோட்டு விட முடியாது. ஒவ்வொரு பிரச்சினையும், ஒவ்வொரு விதமாகத்தான் இருக்கும் என்பதே, அதன் அடிப்படை ரகசியம். என்னைப் பொறுத்தவரையில் கலை உலகத்தின் தனித்தன்மைகளை அனுபவபூர்வமாக நன்கு புரிந்து வைத்திருப்பதால்தான், கடந்த நான்கு ஆண்டுகளாகக் கலை உலகில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடு, என்னால் எளிதில் தீர்வுகளைக் காணமுடிந்தது என்று கருதுகிறேன்.

இலட்சியக் கதை

அந்த வகையில்தான் திரைப்படத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒரு ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தி அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்ற எனது ஆரம்ப கால இலட்சியக்கனவு, இன்று நிறைவு பெற்று உள்ளது. திரைப்படத் தொழிலாளர்களின் நல்வாழ்க்கைக்கு நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் போதெல்லாம், என் மனம், ஒருவிதமான நிறைவைக் காண்பதை நான் உணர்கிறேன். திரைப்படத் தொழிலாளர்களும், அவர்தம் வாழ்க்கையில், ஏற்றம் பெறவேண்டும் என்ற உள்ளுணர்வு என் மனதில் பரிபூரணமாகப் படர்ந்திருப்பதே அந்த மன நிறைவுக்குக் காரணம் என்றால் அது மிகையாகாது.



கடந்த நான்கு ஆண்டுக்காலத்தில், தமிழ்த்திரை உலகம் நசிந்து விடாமல் இருக்க, தமிழக அரசு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். கேளிக்கை வரியில் சலுகை, திரை அரங்குகளுக்குக் கட்டணம் நிர்ணயிக்கும் சுதந்திரம், வீடியோ திருட்டை ஒழிக்கத் தனிக் காவல் படை, மாநில அரசு வழங்கும் திரைப்பட விருதுகளின் மதிப்பு உயர்வு, குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான படங்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்வு, மானிய உதவித் தொகை பெறும் படங்களின் எண்ணிக்கை 50 லிருந்து 75 ஆக உயர்வு, திரைப்படத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் திரைப்படக் கல்லூரியில் இட ஒதுக்கீடு, திரைப் படத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் நலிந்த தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் என்று பல சாதனைகளை என்னால் சுட்டிக் காட்ட முடியும்.

சமரசப் பேச்சு

1993-ஆம் ஆண்டில், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு இடையே தொடங்கிய மனக்கசப்பு ஒரு பெரிய தொழில் பிரச்சினையாக மாறி, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பே நின்று விடுமோ, என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்; கலை உலகின் மீதும், திரைப்படத் தொழிலாளர்களின் மீதும் எனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக அனைத்துத் தரப்பினரையும் கூட்டி, நான் நடத்திய பேச்சு வார்த்தை பல நெருடலான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை ஏற்படுத்தியதை எனது கலையுலக நன்றிக் கடனாகக் கருதுகிறேன்.

பின்னர் தெலுங்குத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்களுக்கும் இடையே அண்மையில் ஏற்பட்ட மனக்கசப்பை அகற்றி, ஒற்றுமை உணர்வுடன் செயலாற்ற வழி வகுத்ததையும், மனநிறைவோடு எண்ணிப் பார்க்கின்றேன்.

தமிழக அரசு Video Piracy ஐத் தடுத்து நிறுத்த ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததோடு, அந்தச் சட்டத்தைச் செயல்படுத்தத் தனிக் காவல் படையையும் அமைத்துள்ளது. கேபிள் டி.வி.யை முறைப்படுத்த ஒரு சட்டத்தையும் கொண்டு வந்து, எந்த ஒரு தொழிலும் நசிந்து விடாமல், அதே நேரத்தில் எல்லாத் தொழில்களும், ஒன்றோடொன்று சேர்ந்து வளர்ச்சி பெற வழி வகுத்துள்ளது. உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

விபத்துக் காப்புறுதி

திரைப்படத் தொழிலாளர்களின் நல்வாழ்விற்காகச் சமீபத்தில் விபத்துக் காப்புறுத்தித் திட்டத்தையும் திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தையும் நான் அறிவித்தேன்.

விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், திரைப்படத் தயாரிப்பின்போது, விபத்திற்கு உள்ளாகும் தொழிலாளருக்கு 50,000 ரூபாய் வரை காப்புறுதித் தொகை வழங்கப்படும்.

திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 60 வயதைக் கடந்த நலிவுற்ற திரைப்படத் தொழிலாளருக்கு, 300 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஆண்டு ஒன்றுக்கு 1000 முதல் 1500 திரைப்படத்தொழிலாளர்கள் பயன்பெறும் இந்தத் திட்டம், வசதியற்ற திரைப்படத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் எனது அருமைச் சகோதரர் மோகன் காந்தி ராமன் அவர்கள், திரைப்படத் தொழிலாளர்களின், நல்வாழ்விலும், கலையுலக வளர்ச்சியிலும்

எனக்குள்ள ஈடுபாட்டை நன்கு அறிந்தவர். எனவேதான் ஆரம்பத்தில் நிலம் மட்டும் வழங்கினால் போதும் என்று கேட்டவர், அந்த நிலத்தைத் தமிழக அரசு இலவசமாகவும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்துள்ளார்.

'கிடைக்கின்ற இடத்திலேதான் கேட்டுப் பெறவேண்டும்' என்ற அடிப்படை உண்மை இத்தனை நாள் கலைத்துறையில் பணிபுரியும் அவருக்கு, நிச்சயமாகத் தெரியும்.

விதிவிலக்குடன் அரசு நிலம்

அரசு நிர்ணயிக்கும் குறைந்த விலையில், அரசு நிலங்கள் வழங்கப்பட்டு வந்தாலும், ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்களின் நலன் கருதி, தமிழக அரசு பள்ளிக் கரணையில் வழங்கியுள்ள 85 ஏக்கர் நிலத்திற்கு விதி விலக்கு அளித்து முழுமையாக இலவசமாக வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இடத்தின் மதிப்பு ரூ.10 கோடிக்கு மேலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவசமாக உங்களுக்கு வழங்கப்படும் வீட்டு மனை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, திரைப்படத் தொழிலாளர்களுக்கு அளித்த அன்புக் காணிக்கையாக என்றென்றும் விளங்கும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது, என் மனம் பூரிப்பு அடைகின்றது. எனவே இந்தக் குடியிருப்பில் நீங்கள் வீடு கட்டிக் கொள்ள உங்களுக்கு வழங்கப்படும் இடத்திற்கு நீங்கள் எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு மிகக் கடினமான உழைப்பை நல்குகின்ற, திரைப்படத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, நாங்கள் மேற்கொண்டு வரும் நலப்பணிகளின் ஒரு தொடக்கம்தான் இந்தத் திரைப்படத் தொழிலாளர்கள் நகரம்; மேலும் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்ளக் கடனைப் பெறுவதற்கும், வீடுகளைக் கட்டித் தருவதற்கும், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும், ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு உண்மையைத் தெரிவிப்பது எனது கடமையென்று கருதுகிறேன். இந்த 85 ஏக்கர் நிலத்தைத் திரைப்படத் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று அரசு அதிகாரிகளுடன் நான் பேச்சு வார்த்தை நடத்திய போது, இதைப் பல அதிகாரிகள் விரும்பாமல் இது நடைபெறக் கூடாது என்பதற்காகப் பல காரணங்களைச் சொல்லி பல தடங்கல்களை ஏற்படுத்திக் கொண்டே இருந்தார்கள். ஆனால் எப்படியும் திரைப்படத் தொழிலாளர்களுக்கு இதை நான் செய்தே ஆகவேண்டும் என்ற உறுதியுடன் எல்லா எதிர் வாதங்களையும் தகர்த்தெறிந்து நான் இந்த

முடிவில் உறுதியாக நின்றேன்.

எதைச் செய்தாலும் குற்றம் குறை கூறுவதற்காகவே இந்த உலகில் சிலபேர் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

திரைப்பட நகரையே எடுத்துக் கொள்ளுங்கள், இந்தத் திரைப்பட நகருக்கு 86 ஏக்கர் நிலம் கொடுத்து, அதற்கு மேல் அதன் விரிவாக்கத்திற்காகச் சும்மா கிடந்த நிலத்தை, எத்தனையோ வருடம் யாரும் பயன்படுத்தாத நிலத்தை எடுத்துக்கொடுத்தால், அதற்கு உள்நோக்கம் கற்பித்துப் பல பேர் குற்றம் சாட்டிப் பேசினார்கள். விமர்சித்துப் பேசினார்கள்.

அதைப் போலவேதான் திரைப்படத் தொழிலாளர்களுக்கு இந்த நிலத்தைக் கொடுத்திருப்பது பற்றி நாளை சிலபேர் விமர்சனம் செய்து பேசக்கூடும். இதையும் சில பேர் 'கிரிடிசைஸ்' செய்து பேசக்கூடும். ஆனால் நான் கேட்கிறேன். இப்படியெல்லாம் திரைப்படத் தொழிலாளர்களின், வளர்ச்சிக்கு எதைச் செய்தாலும் குற்றம்குறை பேசுகிறார்களே, இந்தத் திரைப்பட விரிவாக்கத்திற்கு நிலத்தைக் கொடுத்ததைக் குறை கூறுகிறார்களே, திரைப்பட விரிவாக்கத்திற்கு நிலத்தைக் கொடுத்ததைக் குறை கூறுகிறார்களே, திரைப்படத் தொழிலார்களுக்கு நிலம் வழங்கவேண்டும் என்று எண்ணியபோது அதற்குத் தடங்கல் ஏற்படுத்திப் பார்த்தார்களே, இவர்களெல்லாம் சினிமா எப்போதும் பார்ப்பதே இல்லையா? இவர்கள் யாரும் திரைப்படம் பார்த்ததே இல்லையா? எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒரு நிம்மதியை, ஒரு மகிழ்ச்சியைத் தருவது இந்தத் திரைப்படத் துறைதான்.

இப்படித் திரைப்படத் துறையைப் பற்றிக் குறை கூறிப் பேசுபவர்கள் சொல்லட்டும், நாங்கள் திரைப்படங்களைப் பார்ப்பதே இல்லையென்று. திரைப்படம் பார்க்காமல் இருப்பார்களா? இந்தத் திரைப்படம் எப்படி வந்தது, யாருடைய உழைப்பில் வந்தது? தயாரிப்பாளர்களால் வந்தது உண்மை தான். இயக்குநர்கள், இயக்கினார்கள் உண்மைதான். அதில் நடிக்கின்ற கலைஞர்கள், மற்ற கலைஞர்கள் அவர்களுடைய பங்கும், உழைப்பும் அதில் இருக்கின்றது உண்மை தான். அதை வெளியிடுகிற 'எக்ஸிபிட்டர்கள்'

Phone : 04255...62490

B.V.S. INDUSTRIES

Government approved licensced electrical and

Power Pump Contractor

Church Building

Trichy Road, Palladam 641 664

Undertake repair works and erection works of all Electric Motors, Pumpsets, Air Compressors, Jets, Submersible Motor Pump sets, Open Well Motor, Hanging Crane Bed, Well Covers, Others Welding Works and Wiring works with good condition.

Proprietor

M. ESWARAN B.SC,D.E.E.

அவர்களுடைய பங்கும் இருக்கிறது உண்மை தான். அதை வெளியிட ஏற்பாடு செய்கின்ற விநியோகஸ்தர்களின் பங்கும் இருக்கிறது உண்மை தான். அதையும் மறுப்பதற்கும் இல்லை. இந்த எல்லாவற்றிற்கும் மேலாக - இந்தத் திரைப்படம் எப்படி உருவானது!

திரைக்குப் பின்னால்...

திரைக்குப்பின்னால் இருக்கின்றார்களே ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள் அவர்கள் இல்லாமல், அவர்களுடைய உழைப்பு இல்லாமல், திரைப்படம் உருவாக முடியுமா? ஆகவேதான் நான் எண்ணிப் பார்த்தேன், நான் நடிக்கின்ற காலத்திலேயே இந்த எண்ணங்களெல்லாம் என் மனதில் வருவது உண்டு. திரைப்படங்கள் எடுக்கின்றார்கள். அதில் பல பேர் பங்கு கொள்கிறார்கள். அதில் தயாரிப்பாளர்களுக்குப் பெருமளவில் இலாபம் உண்டு. இயக்குநர்களுக்கும் பெருமளவில் லாபம் உண்டு.

நடிகர், நடிகையர்களுக்குக் கேட்கவே வேண்டாம் பெருமளவில் இலாபம் உண்டு. விநியோகஸ்தர்களுக்கும் இலாபம் உண்டு. எக்ஸிபிட்டர்ஸ்களுக்கும் இலாபம் உண்டு. ஆனால் காலை முதல் இரவு வரை சில சமயம் 20 மணிநேரத்திற்கும் மேலாக உழைக்கின்றார்களே, வேர்வையை சிந்தி, இரத்தத்தைச் சிந்தி, திரைப்படத் தொழிலாளர்கள் - அவர்கள் இதனால் என்ன இலாபத்தைக் காணுகிறார்கள்? அவர்கள் வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம்? அவர்களுக்கு என்ன சமூகப் பாதுகாப்பு? அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்று அப்போதே எண்ணினேன்.

ஆனால் அப்போது எனக்கு வழிதான் தெரியவில்லை. எப்படிச் செய்வது என்று புரியவில்லை. பின்னர் இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். அதன் பின்னர் உங்கள் அனைவரின் அன்போடும் ஆதரவோடும் குறிப்பாக - தமிழகத்தின் ஏழை, எளிய மக்களின் ஆதரவோடு நீங்கள் எல்லோரும் எனக்கு வழங்கிய பொறுப்பு, தமிழக முதலமைச்சர் பதவி, இதன் மூலம் தமிழ்த் திரைப்பட உலகிற்கு, குறிப்பாகத் தமிழ்த் திரைப்படத் தொழிலாளர்களுக்கு என்னுடைய நன்றிக் கடனைச் செலுத்த எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமைக்குக் காலமெல்லாம் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புச் சகோதரர் மோகன் காந்திராமன் அவர்கள் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் பணிகளை நன் முறையில் மேற்கொள்ளப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் வழங்கவேண்டும் என்று முன்பும் கேட்டார், இன்றும் அந்தக் கோரிக்கையை என் முன் வைத்துள்ளார். கோடம்பாக்கம் பகுதியில் அரசுக்குச் சொந்தமான இரண்டரை கிரவுண்டு நிலம் சம்மேளனத்திற்கு வழங்கப்படும் என்பதையும், அதற்குரிய ஆணைகளை இன்று நான் பிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகமும், முகமும் மலர்ந்து மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் திரைப்படத் தொழிலாளர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தில் நானும் பங்கு கொள்கிறேன். அவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு நான் மேற்கொள்ளும் பணிகள் எனது பொது வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தத்தையும், பரிமாணத்தையும் அளித்துள்ளது என்றால், அது மிகையாகாது. இந்தக் குடியிருப்புகள், விரைவில் கட்டி முடிக்கப் பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி வாழும், ஒரு மாபெரும் நகரம் உருவாகும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது என் மனம் ஆனந்தம் அடைகின்றது.

புரட்சித்தலைவர் பெயர்

மோகன் காந்திராமன் அவர்கள் பேசும் போது இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பெயரைக் கோடம் பாக்கம் மேம்பாலத்திற்கும், கோடம்பாக்கம் நெடுஞ்சாலைக்கும் சூட்டவேண்டும் என்று கோரினார்கள். அவரது கோரிக்கைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். இதற்கான ஆணைகள் விரைவில் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பழம் பெரும் ஒளிப்பதிவாளர் நிமாய் கோஷ், பெயரை ஒரு சாலைக்கும், பழம்பெரும் இசையமைப்பாளர் அமரர் எம்.பி. சீனிவாசன், பெயரை ஒரு சாலைக்கும் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்தக் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து விரைவில் நல்ல முடிவுகள் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரச்சினைகளைத் துணிவுடன் எதிர் கொண்டு, சமாளிக்கின்ற ஒரு மனப்பக்குவத்தை, எனது கலை உலக அனுபவம், எனக்கு நிறையவே தந்துள்ளது. நல்லவைகளைச் செய்ய முனையும்போது, இன்னல்களும், இடையூறுகளும் எண்ணற்றவை வரும் என்பது பொது வாழ்வின் ஆரம்ப கால அரிச்சுவடி. தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாக நிலவி வருகின்ற ஒரு வெறுக்கத்தக்க சூழ்நிலை அதைத்தான் தெளிவு படுத்தி வருகின்றது. என் மீது களங்கம் ஏற்படுத்த கெடுமதி படைத்த சிலர் மேற்கொண்டு வரும் முயற்சிகளை முறியடிக்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்கள் அனைவரின் ஆதரவுடனும், அன்புடனும் மக்கள் சக்தியின் துணையுடனும், ஒரு தர்மயுத்தத்தைத் தொடங்கியுள்ளேன்.

தர்ம யுத்தம்

தர்மத்தை நிலைநாட்ட, நான் தொடுத்துள்ள தர்ம யுத்தத்திற்குக் கலையுலகின் அன்புச் சகோதரர்கள், சகோதரிகள் பலர் மனம் திறந்து தங்களது நல்லாதரவைத் தெரிவித்துள்ளதைச் சுட்டிக் காட்டி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சம்மேளனத்தின் சார்பில் உரிமைக் குரல் கொடுத்த சகோதரர் மோகன் காந்தி ராமன் அவர்களுக்கும், இந்தச் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

கலை உலகம், எனக்கு அளித்து வருகின்ற ஆதரவு, நான் தொடர்ந்து மக்கள் பணியைப் புதிய முனைப்புடன் மேற்கொள்ளத் தூண்டும் சக்தியாக என்றென்றும் விளங்கும் என்பதில் ஐயமில்லை, தமிழக மக்களின் நல்வாழ்க்கையும், தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியுமே எனது இலட்சியம்.

அந்த இலட்சியத்தை அடையவிடாமல், தடுக்கும் தீய சக்திகளை உங்கள் ஆதரவுடன் துணிவுடன் எதிர்கொண்டு வென்று காட்டுவேன் என்பது மட்டும் உறுதி.

கலையுலகக் குடும்பத்தைச் சேர்ந்த உங்களில் ஒருத்தி என்று நீங்கள் அனைவரும் என்

★ **தமிழ் மொழி மீது**
பற்றுக்கொண்டிருப்பது பிறமொழி
துவேஷம் ஆகாது. தன் குழந்தையை
எடுத்து ஒரு தகப்பன் முத்தம்
கொடுத்தால், அதனாலேயே அவன்
மற்ற குழந்தைகள் மீது துவேஷம்
காட்டுவதாகச் சொல்ல முடியுமா ?

- அறிஞர் அண்ணா

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

மீது வைத்துள்ள அன்பிற்கும், பாசத்திற்கும் நான் என்றென்றும் கட்டுப்பட்டவள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் நாம் அனைவரும் கண்டு களித்த அற்புதமான நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்து வழங்கிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

அன்புச் சகோதரர் ராதாரவி அவர்கள், நடிகர் சங்கத்தின் கடனைத் தீர்ப்பதற்காக ஒரு பிரம்மாண்டமான கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அதற்கு நான் தலைமை தாங்கி அதற்காக ஒரு தேதியை ஒதுக்கித்தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இன்று அவர் பேசும்போது நான் நடிகர் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் என்றார். அவர் என்னை எப்போது பார்த்தாலும் அதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். ஏதோ நான் மறந்து விட்டதைப் போல அவர் எனக்கு நினைவு படுத்திக்கொண்டு இருக்கிறார்.

நான் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் என்பதை ஒரு போதும் மறக்க மாட்டேன். மறந்ததில்லை. இந்தச் சங்கம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எப்படியும் நான் இந்தக் கலைத்துறையில் ஒரு அங்கத்தினர் என்பதை நான் என் ஆயுள் காலம் முழுவதும் நினைவில் வைத்திருப்பேன். இந்தச் சங்கம், மேன்மேலும் வளர வேண்டும். நடிகர் சங்கத்திற்கு ஏற்பட்ட கடன்களைத் துடைக்க வேண்டும் என்ற ஆர்வம், ஆசை எனக்கும் உள்ளது.

ஆகவே ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாகத் தேதி வேண்டும் என்று கேட்டார். அதற்கு முன்பாகவே ஒரு தேதியை உங்களுக்கு நான் தெரிவிப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். எந்த ஒரு நல்ல காரியம் செய்யவேண்டும் என்றாலும் தனிப்பட்ட ஒருவரால் அது முடியாது. அதில் பலரது பங்கும் இருந்தால் தான் அந்தப் பணி சிறக்கும், மென்மேலும் வளர்ச்சி அடையும்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்ட திரைப் படத் தொழிலாளர்களின் குடியிருப்பில் ஒரு இலவச மருத்துவமனையைத் தொடங்கப் போவதாக அறிவித்த அன்புத்தம்பி டாக்டர் ராஜசேகர் அவர்களுக்கும், அங்கே இலவசமாக ஒரு பள்ளிக் கூடம் தொடங்கப்படும் என்று அறிவித்த அன்புச் சகோதரர் ரஜினிகாந்த் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித்தான் எல்லோரும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக ஒன்றுபட்டு அவரவருடைய பங்கைச் செலுத்தவேண்டும். இங்கே இந்த நல்ல விழாவில் பங்கு கொள்வதற்காக வருகை புரிந்திருக்கும் நீங்கள், வாழ்க்கையில் எல்லா வளமும், நலமும் பெற்று, ஏற்ற மிக்கதோர் வாழ்க்கையை வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, விடை பெறுகின்றேன், நன்றி வணக்கம்.

- கோயம்புத்தூர் என்பது கோசர் பெயரால் ஏற்பட்ட ஊர். கோசர் என்பது கோயர் என்றாகி கோயம்புத்தூர் என்று வழங்குகிறது. கோயன் - புத்தூர் - கோயன்புத்தூர். பிறகு இப்பெயர் கோயம்புத்தூர் என்றாயிற்று.
- இம்மாவட்டத்தில் உள்ள காடுகளின் பரப்பளவு 1,54,974 எக்டேர். இந்த மாவட்டத்தில் உள்ள ஆனைமலை விலங்குகள் சரணாலயம் டாப் ஸ்லிப் 1,400 மீட்டர் உயரத்தில் சுமார் 948 சதுர கிலோமீட்டர் பரப்பளவில், கோவைக்கு 90 கி.மீ. தொலைவில், பொள்ளாச்சி வட்டத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகை தருகின்றனர்.
- சிவில் விமானப் போக்குவரத்துத் தளம், கோயம்புத்தூர் அவிநாசி சாலையில், கோவை நகரிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.

நன்றி: 'கோயம்புத்தூர் மாவட்டம்' மணிமேகலை பிரசுரம்.

ஒளிகூட்ட வழிகாட்டும்

காடம்பாறை மின்திட்டம்

நெடிதுயர்ந்த மலைகளும், ஆங்காங்கே சலசலத்தோடும் அருவிகளும், விரிந்து பரந்து விளங்கும் பசுமைப்பரப்புகளும் நிறைந்து விளங்குகிறது கோவை மாவட்டம். மலைப்பகுதியிலுள்ள நீர்வளம் வழிந்தோடி வீணாவதைக் கட்டுப்படுத்தி, அதை வளர்ச்சிப் பணிகளுக்குத் திருப்பிவிட்டால் வளமும் பெருகும் அதனால் நலமும் பெருகும் என்ற நன்நோக்கில் அமைக்கப்பட்டதே காடம்பாறை நீரேற்று நீர் மின் திட்டம்.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மேல் ஆளியாறு அணையின் மேற்பகுதியில் ஓடிவரும் ஆளியாறு நிரைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1878 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது.

காடம்பாறை நீரேற்று நீர் மின்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி உட்கோட்டத்திலுள்ள ஆனைமலைப் பகுதியில் அமைந்துள்ளது. கோயம்புத்தூரிலிருந்து 95 கி.மி. தொலைவிலும், பொள்ளாச்சியிலிருந்து செல்லவேண்டுமெனில் வால்பாறைக்குச் செல்லும் சாலையில் 55 கி.மீ. தொலைவிலும் காடம்பாறை அணைத்திட்டம் அமைந்துள்ளது.

நீராதாரம்

இத்திட்டத்தில், நீர்ப்பிடிப்புப் பகுதி 83 ச.கி.மீ. வரை பரந்துள்ளது. இது ஆளியாற்றின் மேற்பகுதியிலும் அதன் துணை ஆறுகளான காடம்பாறை ஆறு, தேவியாறு ஆகிய ஆறுகள் பாயும்பரப்பையும் கொண்டுள்ளது. இந்த ஆறுகளின் பிறப்பிடம் 2495 மீட்டரிலிருந்து 2282 மீட்டர் வரையிலான உயரத்தில் அமைந்துள்ளது.

இப்பகுதி தென் மேற்கு பருவ மழைமண்டலத்தில் அடங்குவதால் ஆண்டுக்கு சராசரி 381 செ.மீ. முதல் 508 செ.மீ. வரை மழை பெறுகின்றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 105 மில்லியன் கனமீட்டர் நீரைக் கட்டுப்படுத்தி பயன்படுத்த முடிகிறது.

திட்டம் செயல்படும் விதம்

ஆளியாறு நீரைக் கொண்டு வழக்கம் போல் மின் உற்பத்தி செய்வதோடு, நாள்தோறும் ஏற்படும் உச்சகட்ட மின் தேவையை ஓரளவு சரி செய்ய இத்திட்டம் விசையேற்ற நீர் மின் திட்டமாக அமைக்க திட்டமிடப்பட்டது.

இவ்விசையேற்ற நீர்மின் நிலவறை (Underground Power ho·u se Caveru) நின் நிலையத்தையுடையதாகும்.

இத்திட்டத்தில், ஒவ்வொன்றும் 100 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 4 ஜெனரேட்டர்கள் உள்ளன. இந்த ஜெனரேட்டர்கள் பின்னோக்கிச் சுழலுகையில் நீர் விசையேற்றங்களாகச் (மோட்டர் பம்பு) செயல்படுகின்றன. இப்போது தமிழகத்தில்

இயங்கும் அனல்மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தி இரவு நேரத்தில் முழுவதும் பயன்படாமல் உபரியாக உள்ளது. இந்த உபரி மின்சாரத்தைப் பயன்படுத்தி மேல் ஆளியார் தேக்கத்திலிருந்து காடம்பாறை மின் தேக்க அணைக்கு நீர் விசையேற்றங்களால் நீரை மேலேற்றி, மின்தேவையின் உச்ச கட்ட நேரங்களில் இந்த நீரைக்கொண்டு ஜெனரேட்டர்களை இயக்கி மின்சக்தியை உற்பத்தி செய்து உதவுகிறது. இதுவே காடம்பாறை நீரேற்று நீர் மின் திட்டத்தின் சிறப்பாகும்.

ஒரு நீர்த் தேக்க அணையும், திருப்புச் சிற்றணைகளும் அதனை இணைக்கும் 7,80 மீ. நீளமுள்ள வெட்டோடையும், 18 சுரங்களும், இரண்டு பொங்கு கிணறுகளும் இத்திட்டத்தில் உள்ளன.

காடம்பாறை அணை 808 மீ. நீளமும், 67.50 மீ. உயரமும், 457 மீ. அகலமும் கொண்டது. இவ்வணையை ஒட்டி அமைந்துள்ள நிலத்தடி மின் நிலையம் நிலமட்டத்திற்குக் கீழே 204 மீ. ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மின் நிலையம் 128.5 மீ. நீளமும், 20.5 மீ அகலமும், 38.0 மீ. உயரமும் கொண்டது. இதன் தரைமட்டம் 722.128 மீ. பரவியுள்ளது. இது வினாடிக்கு 150 கனமீட்டர் நீரை வெளியேற்றும் திறன் கொண்டதாகும்.

இத்திட்டத்தின் மூலம் 400 மெகாவாட் மின்சக்தி கிடைக்கிறது. இது உடுமலைப்பேட்டையில் தமிழ்நாட்டு, மின் இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் இன்னொரு சிறப்பம்சம் 1130, மீ. நீளத்திற்கு மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட சுரங்கம் ஆகும். இந்த சுரங்கத்தின் உள்ளே நூற்றுக்கணக்கான குழல் விளக்குகள் பொருத்தி வெளிச்சத்தை ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு நிலவரப்படி காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் மொத்த செலவீடு ரூ 180.50 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நூற்றாண்டைக் கடந்து, தொய்வின்றித் தொடர்ந்து பணிபுரியும் இந்தக் காடம்பாறை அணைத்திட்டம், நாட்டில் இருளைக் களைவதோடு, இயந்திரங்களையும் இயக்கி, நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி ஒளிகூட்டுவதாக விளங்குகிறது.

★ தீ நாற்றம் நறுநாற்றத்தைவிட விரைவாகப் பரவுகிறது. கெட்ட வம்புப் பேச்சும் அப்படித்தான் உண்மையைவிட வேகமாகப் பரவுகிறது.

அறிஞர் அண்ணா

உலகிலேயே சுவையான குடிநீர் என்று கணக்குப் பார்க்கிறபோது மூன்றாவது இடம் வகிக்கிறதாம், சிறுவாணி குடிநீர் கோவை மாவட்டத்திற்குப் பெருமை தரும் இந்த நீர் நகரெங்கும் முறைவைத்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நீருக்காக அமைக்கப்படவிருக்கிறது புதியதோர் மேல்நிலைத் தொட்டி.

கோவை மாவட்டம் குனியமுத்தூர் பேரூராட்சிக்குட்பட்டது சுகுணாபுரம். இந்தப் பகுதியின் தற்போதைய மக்கள் தொகை 6,100 ஆகும். இப்பகுதி மேடான இடத்தில் அமைந்துள்ளதாலும், குனியமுத்தூரிலிருந்து வெகுதூரத்திலிருப்பதாலும், இப்பகுதிக்குச் சிறுவாணி நீர் சீராக வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பேரூர் சட்டமன்ற உறுப்பினர் இப்பகுதிக்குச் சிறுவாணி நீர் வழங்குவதற்காகத் தனியாக இரண்டு இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியைக் கோவைப் புதூர் பிரிவில் கட்டித் தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பேரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் ஏற்றுக் கொண்டதற்கிணங்க, சுகுணாபுரம் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.13.17 இலட்சம் செலவில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட உத்தேசிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, குளத்துப்பாளையம் அருகே பதிக்கப்பட்டு உள்ள 80 எம்.எம். 'ஏசி' குழாயிலிருந்து சிறுவாணி நீர் பிரித்தெடுக்கப்பட்டு, தரைமட்டத் தொட்டியில் சேகரிக்கப்பட்டும், பிறகு, நீர் உந்து மூலம் 90 மி.மீ. பி.வி.சி. குழாய்கள் 1300 மீட்டர் நீளத்திற்குப் பதிக்கப்

★கோவை மாவட்டத்திற்கு பவானி, நொய்யல், அமராவதி, ஆளியாறு போன்றவை மட்டுமல்ல, மாவட்டத்தின் கிழக்கெல்லை போல் பாயும் காவிரி நதியும், முக்கியக் காரணமாகும். ஏராளமான அணைக்கட்டுகள் உள்ள மாவட்டம் கோயம்புத்தூர் மாவட்டம். இது தவிர ஏரிகள், குளங்கள், கிணறுகள் அதிகமிருப்பதாலும் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் எப்போதும் பசுமையோடு காணப்படுகின்றன.



பட்டு, கோவைப் புதூர் பிரிவில், பத்ரகாளியம்மன் கோவில் அருகில் கட்டப்பட உள்ள 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக்கு மேல்நிலைத் தொட்டிக்குக் கொண்டு செல்லப்படும்.

பிறகு, ஏற்கெனவே பாலக்காடு நெடுஞ்சாலையில் பதிக்கப்பட்டு உள்ள குழாயில் இணைக்கப்பட்டு, சுகுணாபுரம் பகுதிக்குச் சிறுவாணி நீர் வழங்கப்படும்.

இத்திட்டம் முடிக்கப்பட்ட பிறகு சுகுணாபுரம் பகுதி மக்களுக்குச் சீராகச் சிறுவாணி நீர் விநியோகிக்கப்படும்.



★கோவை நகரைக் குடிநீர்த் தட்டுப்பாடின்றிக் காப்பது மட்டுமல்ல, வேறெந்த மாவட்டத்திலும் கிடைக்காத அளவுக்குச் சுவையான நீர் வழங்கும் சிறப்பும் உடையது சிறுவாணி நீர்த்திட்டம் "நெல்லித்தோப்பு வழியே ஓடிவருவதாலும், நீர்த்தேக்கத்தில் ஏராளமான நெல்லிக்காய்கள் விழுந்து மிதப்பதாலுமே சிறுவாணி சிறுவாணி நீருக்கு இந்தத் தனிச் சுவை" என்கிறார்கள் சிலர். "மலைமேல் அடர்ந்துள்ள மூலிகைகள் இடையே வருகிற தண்ணீர் இது. அதனால்தான் இத்தகையச் சுவை" என்கிறார்கள் மற்றும் சிலர். எது உண்மையோ!

இத்திட்டத்திற்குப் பேரூராட்சி நிதியிலிருந்து ரூ7.17 இலட்சமும் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.6 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.13.17 இலட்சம் செலவழிக்கப் பட உள்ளது.

சலியாத உழைப்பின் சின்னம் இலாபத்தை அளிப்பது திண்ணம்

ஸ்வராஜ் டிராக்டர்கள்

☆ வறண்ட மற்றும் நீர்ப்பாசனமுள்ள நிலங்களின் வேளாண் நிலமைகளுக்கு மிகவும் உகந்தது.

☆ செங்குத்தான சரிவுகளிலும் எளிதாக இரு ட்ராலிகளை எடுத்துச் செல்லும்

☆ சிறந்த எரிபொருள் சிக்கனம் குறைந்த பராமரிப்புச் செலவு.

☆ பணம் ஈட்டும் வாடகைக்கு உபயோகிக்க உகந்தது. சிறந்த மறு விற்பனை மதிப்பை வழங்குகிறது.

கோவை மாவட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

செந்தில் டிராக்டர்ஸ்
39, D6, பாலசுந்தரம் செட்டியார் ரோடு
விற்பனை வரி மற்றும் R.T.O. அலுவலகச் சாலை
கோயம்புத்தூர் - 641 018
போன் 213424 P.P.
Res 866379 & 866390

வட்டார அலுவலகம்
19/2 மரப்பேட்டை
உடுமலை ரோடு
பொள்ளாச்சி
போன் 4626



காற்றாலைகளால் மின் உற்பத்தி

"எங்கெங்குக் காணினும் சக்தியடா ஏழுகடல் அவள் வண்ணமடா என்றார் பாவேந்தர். அளப்பரிய நீர், நிலம், வான், நெருப்பு, காற்று என்ற ஐந்து சக்திகளையும் தன்னாற்றலால் கட்டுப்படுத்தி, தன்னுடைய நலனுக்காகப் பயன்படுத்தும் பேராற்றல் கொண்டது மனித சக்தி. அந்த வகையில், வீணாகும் காற்றுச் சக்தியை, ஆற்றுப்படுத்தி, மின்சக்தியாக மாற்றும் பல வழிமுறைகளில் காற்றாலையும் ஒன்று. நீண்ட கடற்கரையும், நெடிய குன்றுகளும் கொண்ட நமது நாட்டில் காற்றாலை மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். இதில் தமிழ்நாட்டில் மட்டும் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டில் முட்பந்தல், கயத்தாறு, ஆரண்குளம், புளியங்குளம் என்ற இடங்களிலும், கோவை மாவட்டத்தில் கேத்தனூர், பூலாவாடி, இடையர்பாளையம் போன்ற இடங்களிலும் காற்றாலைகள் அமைக்கப்படுகின்றன. தற்போது பாலக்காடு கணவாய் பகுதிகளில் வீசும் காற்றின் வேகத்தை வைத்து சுமார் 20 மெகாவாட் அளவுள்ள மின் காற்றாடி மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

காற்றாலைகள் ஒலமாகத் தயாரிக்கப்படும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரிய கிரிட்டில் இணைப்புக் கொடுப்பதற்குத் தகுந்த மின்நிலையங்கள் நிறுவப்படவேண்டும். இதற்காக ஏற்கனவே கேத்தனூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது, பல்லடம் அருகே இடையர்பாளையத்தில் 43 காற்றாலைகள் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. இவைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தைத் தமிழ்நாடு கிரிட்டில் இணைக்கும் துணை மின் நிலையம் ஒன்று ரூ.5.76 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இது இவ்வாண்டு இறுதிக்குள் செயல்படத் தொடங்கும்.

மலைகள்

★கோவை மாவட்டத்தின் தெற்கில் உள்ள ஆனைமலையும், அண்ணா மாவட்டத்தில் உள்ள பழனி மலையும் கைகோத்து நிமிர்ந்து நின்று மாவட்டத்திற்குப் பாதுகாப்பும், பல்வேறு வளங்களும் அளிக்கின்றன.

இவை தவிர வெள்ளிங்கிரி மலையும், சோழக்கரை பொலம்பட்டி மலைகளும், அசனூர்-பர்கூர், பாலமலைக் குன்றுகளும், லேம்ப்டன் சிகரமும் இம்மாவட்டத்தில் உண்டு.

ஆனைமலைக்கு மேல்பரப்பில் 6000 அடி உயரத்தில் மைக்கேல் பள்ளத்தாக்கு என்று ஒன்று உள்ளது. அதற்கு இப்பெயர் வரக் காரணம், மேயர் மைக்கேல் என்பவரே அதை முதலில் கண்டுபிடித்தார்.

கங்கா 70mm A/c. யமுனா A/c. காவேரி A/c.

KARPAGAM CINE COMPLEX

100 Feet Road,
COIMBATORE - 641 012.
Complex : 48629 Res : 47676, 45747

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

வளர்ச்சியுறும் திருப்பூர்

பனியன் என்றவுடன் சட்டென நினைவுக்கு வருவது திருப்பூர் நகரம். கோவை மாவட்டத்தின் சுறுசுறுப்பான தொழில்நகரம். இந்தியாவிலேயே பனியன் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் திருப்பூர் நகரிலும் அதன் சுற்றுப புறங்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பெருகி வரும், தொழிலகங்கள், மக்கள் தொகை இவைகளைக் கருத்தில் கொண்டு திருப்பூர் பேரூராட்சி பல நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

புதிய பேருந்து நிலையம்

திருப்பூர் நகருக்கு மேலும் புகழ்ச் சேர்க்க நவீன, தினசரிச் சந்தை மற்றும் வணிக வளாகம் ஆகியவை முதல் அடுக்கிலும், 25 பேருந்துகள் நிறுத்துவதற்கான வசதி கொண்ட புதிய பேருந்து நிலையம் அடித்தளத்திலும், ரூ.67.70 இலட்சம் செலவீட்டில் அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. இதன் மற்றொரு பகுதி ரூ.160.13 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நவீன இரண்டடுக்குகள் கொண்ட பேருந்து நிலையம் செயல்படும் போது, பொது மக்களுக்கும், வணிகர்களுக்கும் கூடுதலான போக்குவரத்து வசதிகளும், வணிக வசதியும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருப்பூர் நகரக் குடிநீர்த் திட்டம்

திருப்பூர் நகரில் குடிநீர் வசதி வழங்குத் திட்டத்தின்கீழ் 21 ஆயிரம் வீடுகளுக்குக் குழாய் இணைப்புகள் வழங்கத் திட்டம் தீட்டப்பட்டது. இதுவரை 9,000 இணைப்புகள் கொடுத்தாகிவிட்டது. இதற்காக 91 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் நிலத்தில் அமைக்கப்பட வேண்டும். இதில் 70 கி.மீ. நீளம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 124 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு விட்டது.

தமிழ்நாட்டில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வளர்ந்துவரும் நகரங்களில் 8 நகரங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே நகர வளர்ச்சிப் பணிகளை அமைத்திட தமிழ்நாடு அரசு ரூ.25 கோடி செலவிடவுள்ளது. அந்த நகர்களில் திருப்பூரும் ஒன்றாகும்.

இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் நகரில் கால்வாசி நகரப் பகுதிகளில், தெருவிளக்குகள் மற்றும் சாலைகள் அமைக்கப்பட விரிவான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

சென்றாண்டில் (1994-95)திருப்பூர் நகரில் ரூ.1.86 கோடி செலவீட்டில் சாலைகள் மேம்படுத்தவும் மற்றும் சாலைப்புற கழிவுநீர் வடிகால்கள் அமைக்கவும் செலவிடப்பட்டது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

திருப்பூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அனைத்து வசதிகளையும் அமைத்து மேம்படுத்த, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இக்கழகத்தில் தமிழ்நாடு நகர் கட்டமைப்பு வளர்ச்சிக் (Tamil Nadu Corporation for Infrastructure Development) கழகமும், நகர் கட்டமைப்பு லீசிங் மற்றும் நிதிவழங்கு பணிகள் கழகமும் (Infrastructure Leasing and Finance Service Corporation Ltd.) திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் பங்குதாரர்களாக உள்ளார்கள்.

இக்கழகத்தின் முதல் திட்டமாகத் திருப்பூர் குடிநீர் வழங்குத் திட்டம் ரூ.150 கோடி மதிப்பீட்டில் தீட்டப்பட்டுச் செயல்படுத்த சர்வதேச நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது இந்திய நாட்டுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கும் என்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

திருப்பூர் நகரிய அபிவிருத்தித் திட்டம்

ஏற்கெனவே நூற்றுக்கணக்கான பின்னலாடை தொழிற்கூடங்கள் இருப்பதோடு, மேலும் புதிய தொழிற்சாலைகள் நிறுவவும் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன. இது தவிர, ஒரு சில பகுதிகளில் குறைந்த மின்னழுத்தமும் காணப்படுகிறது. எனவே, பி.எப்.சி. (Power Finance Corporation) நிதியுதவியுடன் ரூ. **4.24** கோடி செலவில் திருப்பூர் துணை மின் நிலையத்தில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் உயர்மின் அழுத்த நிலத்தடி மின்பாதை (Underground Cable) **26** கி.மீ. அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மேம்பாட்டுத் திட்டங்களினால் திருப்பூர் நகரில் நிலவிடும் குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்யவும், புதிய தொழில் கூடங்களுக்கு மின் இணைப்புகள் வழங்கிடவும் வாய்ப்புகள் உள்ளன. இப்படி, பல வளர்ச்சிப் பணிகள் திருப்பூரில் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவிலேயே பின்னலாடை உற்பத்தியில் சிறப்புப் பெற்ற திருப்பூர் நகரம் மேலும் பல புதிய செதிகளைப் பெறுவது மூலம் இந்திய பொருளாதாரத்தின் அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டுதரும் ஒரு கற்பகத்தருவாக விளங்கும் என நம்பலாம்.

With Best Compliments From

SAROJ CORPORATION

Distributors & Stockists of

Bus Body Components and Accessories

Address:
85/6, Petechannappa Industrial Estate,
Sajjepalya, Magadi Road, Bangalore 560 079.
Phone : 3307806

வேளாண்மை வளர்ச்சி

*'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழன்றும் உழவே தலை'*

- என்றார் உலகப் பொதுமறை தந்த உயர் தமிழ் வள்ளுவர். கோயம்புத்தூர் மாவட்டம் இந்த வகையில் பெரிதும் ஏற்றம் பெற்றிருப்பதை நாம் காண முடிந்தது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் ஒன்றாக விளங்குகிறது இம்மாவட்டம்.

நீர்வளமும் நிலவளமும் மிக்கதாக விளங்கும் கோவை மாவட்டத்தில், வேளாண்மை வளர்ச்சியில் பல்வேறு திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தியதன்மூலம் வியத்தகு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தி மெ.டன்னில்

1991-92-இல் 85,762 டன்,

1992 -93-இல் 1,07,225 டன்,

1993-94-இல் 1,20,103 டன்

இவ்வாறாக, உற்பத்தி ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து கொண்டே வருகிறது. இதற்கு முக்கியமான காரணங்கள், அதிகப் பரப்பைச் சாகுபடியின் கீழ் கொண்டு வருதல் உயர் விளைச்சல் தரும் நல்ல தரமான விதைகளை வேளாண் பெருமக்களுக்கு வழங்குதல் நவீன தொழில் நுட்பங்களைச்சாகுபடியில் பின்பற்றுதல் ஆகிய அம்சங்களைப் பின்பற்றிச் செயலாக்கம் செய்யப்பட்டது.

சிறு குறு விவசாயிகளைச் சாகுபடியில் ஊக்குவிக்கும் பொருட்டு விதை விநியோகம், உயிர் உரங்கள் வழங்குதல், களைக்கொல்லி விநியோகம், பயிர்ப் பாதுகாப்புக் கருவி விநியோகம், வேளாண் கருவிகள் விநியோகம், விசை உழவு இயந்திரங்கள் விநியோகம் ஆகிய அம்சங்களுக்கு **55.55** இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதற்குத் துறை அலுவலர்களது விடாமுயற்சியும், தொடர்ந்து விவசாயிகளைச் சந்தித்து தொழில்நுட்பத்தைத் தக்க தருணத்தில் எடுத்துரைத்ததுமேயாகும்.

4

விதைகள், சோள விதைகள், புல் கரணைகள் தட்டை, கொள்ளு விதைகள் முழு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு 50 சதவிகித விலையில் வேளாண் இடுபொருட்கள், வேளாண் கருவிகள் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

1991-92-இல் ரூ. 2,33,000,
1992-93-இல் ரூ. 1,93,075,
1993-94-இல் ரூ. 3,65,000
மானியம் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் காடுகள் தரிசு நிலம் மேம்பாட்டுத் திட்டம்

தரிசு நிலம் மேம்பாட்டிற்கு 500 எக்டேர் பரப்பில் மரக் கன்றுகள் நடும் பணி மேற் கொள்ளப்பட்டன. இதற்கான மானியம் ரூ.12,50,000 வழங்கப் பட்டது.



தேசிய நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம்

இம்மாவட்டத்தில் மதுக்கரை, அன்னூர், அவிநாசி மற்றும் திருப்பூர் வட்டாரங்களில் 4 இடங்களில் இத்திட்டம் செய லாக்கப்படுகிறது. தேசிய நீர்ப் பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சிறு-குறு விவசாயிகளுக்கு மண்வளம் காத்தல், வேளாண் கருவிகள், கால்நடைப் பரா மரித்தல், தீவனப்புல் உற்பத்தி ஆகியவைகளுக்குக் கீழ்க்கண்ட வாறு மானியங்கள் வழங்கப்பட் டுள்ளன:

1991-92-இல் ரூ. 1.84 இலட்சம்,
1992-93-இல் ரூ. 22.16 இலட்சம்,
1993-94-இல் ரூ. 27.20 இலட்சம்.

பயிர் விளைச்சல் போட்டி

உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட் டுள்ளது. போட்டிகள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட அளவில் அதிக நெல் உற்பத்தி செய்யும் முதல் விவசாயிக்கு ரூ.7,000-மும் இரண்டாம் பரிசாக ரூ.3,000-மும் வழங்கப்படுகின்றது. மாநில அள வில் நடத்தப்படும் போட்டியில் பரிசு பெறும் உழவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசாக வழங் கப்படுகின்றது.

The goodness of a name

A name is a good thing to have. It tells people who you are and establishes your identity. All names have meanings. Some of these meanings are self-indicative, like Rose; and Shanti for Peace; and ACC for quality cement. Some names have become famous because they have been made so by illustrious men and women who bore them in the past. Others have achieved fame by association over the years with a product and a tradition, like ACC, which is a household word for cement of the highest quality. You may be sure that such people take great care to guard their good names by the consistent excellence of their products. So when you are buying cement next, you can specify ACC in the fullest confidence that you are buying not only a good product with a good name, but the tradition that goes with the name.

ACC

is a good name. You can depend on ACC

THE ASSOCIATED CEMENT COMPANIES LIMITED
MADUKKARAI CEMENT WORKS

பாறைகள் மலிந்த கல்லாறு

கல்லாறு கனித்தோட்டம்

பல வண்ணப் பூக்கள் அழகு காட்டு கின்ற பூந்தோட்டம் பார்த்திருப் பீர்கள். பலவகைக் கனிகள் குலுங் கும் பழத்தோட்டம் பார்த்திருக் கிறீர்களா? இல்லையென்போர், கல்லாறு தோட்டக் கலைப் பண்ணைக்குச் செல்லுங்கள்!

கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வழியே உதகைக்குச் செல்லுகிறவர்கள், ஊர்க் கடைசியில் 'இங்கே மலைப்பாதை ஆரம்பம்' என்கிற அறிவிப்புப் பலகையைக் காண லாம். பயணத்தை அதற்குமேல் நேரே தொடராமல், கீழே இடப்புறமாகச் சரிந்து குறுக லாகச் செல்லும் சாலையில் போனால், சிறிது தூரம் சென்றதுமே பழவாசம் அப்படியே நம்மைத் தூக்குவதை உணர லாம்.

ஆம், கல்லாறு எனப்படும் அங்கேதான் 1900-இல் அமைக் கப்பட்டிருக்கிறது அரசு தோட்

சிறுதானியங்கள்

சிறுதானியங்கள் கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:

1991-92-இல் 1,30,000,
1992-93-இல் 1,43,000,
1993-94-இல் 2,89,200

இப்படிச் சிறுதானிய உற்பத்தியும் ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வந்துள்ளது. இதற்கு முக்கியமான காரணங்கள் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பல்வேறு தொழில்நுட்பங்களை விவசாயிகளின் வயல்களில் செயல்படுத்தியது உயர் விளைச்சல் தரும் ரகங்களைத் தெரிவு செய்தது இதற்கு மேலாகச் சிறு குறு விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மானிய விலையில் விதைகள், களைக் கொல்லி மருந்து, பயிர்ப் பாதுகாப்பு மருந்து, செயல் விளக்கத் திடல், கருவிகள், பயிற்சி ஆகிய அம்சங்களுக்கு மானியங்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது ஆகியவையாகும்.

மேலும், சிறுதானியப் பயிர்கள் பெரும்பாலும் மானாவாரிப் பயிர்களேயாகும். மானாவாரி நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, மாவட்டத்தில் இரண்டு ஒன்றியங்கள் நான்கு திடல்கள் தெரிவுசெய்து அதில் கோடை உழவு ஊட்டமேற்றிய தொழு உரம், இருபயிர்த் திட்டம், மேலுரமிடுதல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி ஆகிய அம்சங்களுக்கு மானியங்கள் 31.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பயறு உற்பத்தி

பயறு உற்பத்தியில் கீழ்க்கண்டவாறு சாதனை செய்யப்பட்டுள்ளது: மெ. டன்னில்.

1991-92-இல் 21,412, 1992-93-இல் 28,695, 1993-94-இல் 39,707

பயறு உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துகொண்டே வந்துள்ளது.

> **மாவட்டப் பிரிவினை**
>
> 1804-இல் கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் பிரிந்தது. பின்னர், நிர்வாக வசதிக்கென 1979-இல் கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்ட மாவட்டமே பெரியார் மாவட்டம் ஆகும்.

பயறு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசியப் பயறு அபிவிருத்தித் திட்டம் செயலாக்கப்பட்டது. சிறு குறு விவசாயிகளுக்குப் பயறு உற்பத்தியில் பயிற்சி, விதை விநியோகம், செயல் விளக்கத் திடல்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், வேளாண் கருவிகள் ஆகியவைகளுக்கு ஊக்குவிக்கும் பொருட்டு, மானியங்கள் வழங்கப்பட்டன. அதற்காக ரூ.25 இலட்சம் செலவிடப்பட்டது.

பருத்தி உற்பத்தி

1991-92-இல் 47,225, பேல்ஸ்.
1992-93-இல் 51,200, பேல்ஸ்.
1993-94-இல் 39,500, பேல்ஸ்.

இவ்வாறு பருத்தி உற்பத்தியில் 1993-94-ஆம் ஆண்டு குறைந்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டு பருத்தி விலை வீழ்ச்சியின் காரணமாகப் பரப்புக் குறைந்தும் அதனைத் தொடர்ந்து உற்பத்தியும் குறைந்துவிட்டது. இருப்பினும் தொழில்நுட்ப ரீதியில் அனைத்து வழிமுறைகளும் வழங்கப்பட்டு, சிறுகுறு விவசாயிகளுக்கு 28.26 இலட்சம் ரூபாய் கீழ்க்கண்ட அம்சங்களுக்கு மானியம் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது.

1. விதைகள் விநியோகம், 2. பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பு நீர்க் கருவிகள். நடப்பு ஆண்டில் பருத்தி உற்பத்தி 50,000 பேல்கள் அடைய அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

With Best Compliments From

Leela Industries

And

P.R.P. Computer Forms Private Ltd.,
100/B LMW Road,
Athipalayam Post
Coimbatore - 641 110

Suppliers of PNEUMAFIL & CARDING under Casing in Stainless Steel.

Phone: 892687

எண்ணெய் உற்பத்தித் திட்டம்- மெடன்னில்.

1991-92-இல் 61,290,
1992-93-இல் 70,350,
1993-94-இல் 74,680

இதேபோல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில், ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. முக்கியப் பயிர்கள் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, சோயா மொச்சை.

கடந்த ஆண்டு முதல் எண்ணெய்வித்து உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விதை விநியோகம், விதை கொள்முதல், செயல் விளக்கத் திடல்கள், சிறுதளைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், உயிர் உரங்கள், ஜிப்சம், தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள், வேளாண் கருவிகள் ஆகியவைகளுக்குக் குறிப்பாக, சிறு-குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மொத்த மானியத்தொகை 52 இலட்சம்.

பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் தென்னங் கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டத்தின் கீழ், அடியிற்கண்ட அளவுகளில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

1991-92-இல் 4,500 எண்கள்,
1992-93-இல் 7,500 எண்கள்,
1993- 94-இல் 7,500 எண்கள்

அவற்றில் மானியமாக ரூபாயில்.

1991-92-இல், ரூ. 41,250,
1992-93-இல், ரூ. 1,12,500,
1993-94-இல் ரூ. 1,12,500.

சிறு-குறு விவசாயிகளின் பிள்ளைகள்- ஆறாம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு, இத்திட்டம் அதிக அளவில் செயல்படுத்தப்பட்டு 26,000 பள்ளிக் குழந்தைகளுக்கு ரூ.5.20 இலட்சம் மானியத்தில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

தீவனப் பயிர்த் திட்டம்

கோவை மாவட்டத்தில் தீவன அபிவிருத்திக்காக 1992-93-ஆம் ஆண்டு 2,26,800 ரூபாயும், 1993-94-ஆம் ஆண்டு 1,29,077 ரூபாயும், சிறு-குறு விவசாயிகளுக்குத் தீவன மக்காச்சோள

டக்கலைப் பண்ணை, 8.92 ஏக்கர் நிலப்பரப்பில் இப் பண்ணை வெறும் ஆராய்ச்சி நோக்கோடுதான் உருவாக்கப் பட்டிருக்கிறது. இப்போது வெளி நாட்டுப் பழவகை உட்படப் பலவகைப் பழமரங்களும் அடர்ந்து வளர்ந்து பழக் கன்றுகள் விற்பனை செய்கிற அளவிற்கு, அரசின் அரவணைப்பால் தழைத்துச் செழித்துள்ளது.

பலாமரம்

மக்கள் கூட்டம்

மிதமான வெப்ப சீதோஷ்ண நிலை கொண்ட பகுதியிலே அமைக்கப்பட்டிருக்கும் இப் பண்ணையில் பலவிதத் தோட்டக் கலைப் பயிர்கள், வாசனைத் திரவியங்களுக்கு உதவும் பயிர்கள், அலங்காரச் செடி வகைகள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களெல்லாம் இருக்கின்றன.

ஏராளமான மக்கள், இந்தப் பழப் பண்ணையைப் பார்க்கக் கூட்டம் கூட்டமாக நாள் தோறும் வருகை தருகிறார்கள்.

குறிப்பிடத்தக்க பழங்கள்

பப்பாளிப் பழம், கருவைக் கலைத்துவிடும் சக்தியுள்ளது என்கிறார்களல்லவா?... 'நீண்ட காலம் பிள்ளை இல்லாதவர்களுக்குக் கரு உண்டாக்கும் சக்தி மிக்க பழம் இது என்று நமக்கொரு அதிசயப் பழத்தைக் காட்டினார்கள் இப் பண்ணையில். அதன் பெயர் துரியன் பழம் என்பதாகும். இது மலேயாவில்தான் விளையுமாம். அதிசயமாக இப்பண்ணையிலும் விளைந்திருக்கிறது.

கிராம்பு

இங்கே விளையும் மங்குஸ்தான் பழம், பழங்களின் அரசி எனப்படுகிறது. அந்த அளவிற்குச் சுவை மிக்கதாம் இப் பழம்.

இவை தவிர, பலாமரம் அதிலும் குறிப்பாகக் கறிப்பலா, சிங்கப்பூர் பலா, வேலிப் பலா, வெல்வெட் ஆப்பிள், திராட்சை, லிச்சி, ரம்பூட்டான், ஜவிரலி, லாங்சாட், புளிச்சங்காய், மா வகைகள், பம்பிளிமாஸ் பழமரங்களெல்லாம் இங்குள்ளன.

மிளகு, கிராம்பு, கோகோ, பாக்கு, வெனிலா, ஜாதிக் காய், இலவங்கம், ஏலக்காய், பிரியாணி இலை போன்றவைகளும் இங்கே தாராளமாக விளைகின்றன.

கல்லாறு தோட்டக்கலை அலுவலர் திருமதி உமாராணி, அங்கே விளையும் அதிசயப் பூ ஒன்றை நமக்குக் காட்டினார். 'இட்டலிப பூ'வாம் அதன் பெயர்!

"ஆங்கிலத்தில் இதை IX-ORA என்கிறார்கள்" என்றார், மேட்டுப்பாளையம் ஒன்றிய சமூகக் காடுகள் விரிவாக்க அலுவலரான திரு டி. போஜன்; இந்தப் பழப் பண்ணைக் காகவே ஓடி வருவதுபோல மலை மீதிருந்து ஓடிவந்து உற்சாகமாக இறங்குகிறது ஒரு சிற்றருவி. பாறைகளே பரவலாகக் கிடப்பதால் இதன் பெயர் கல்லாறாம்!

நோக்கமும் வளர்ச்சியும்

மேலே நாம் குறிப்பிட்ட மரக்கன்றுகள் யாவும் இங்கே குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

பல்வேறு வகையான பழங்கள், வாசனைத் திரவியப் பயிர்கள் பற்றியெல்லாம் வேளாண்மைத் தாவரவியல் பயிலுகின்ற மாணவ மாணவியர் இங்கே வந்து பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

பொதுமக்களுக்கு இது ஒரு மணக்கும் சுற்றுலாமையம் போல் திகழ்கிறது. ஆனால், கட்டணம் ஏதுமில்லை.

அங்கே வந்து செல்வோர் கூட்டத்தைக் கவனித்த பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்தபோது, "நுழைவுக் கட்டணம் ஏதாவது வைத்து, அதன்மூலம் இப்பண்ணைப் பராமரிப்புச் செலவை ஈடுகட்டலாமே?" என்றோம் நாம்.

"நல்ல யோசனை, பரிசீலிக்கிறேன்" என்றார்.

With best compliments from:

ROOTS INDUSTRIES LIMITED
ULAVAGAM, GANAPATHY
COIMBATORE 641 006 TEL 532100

- Leaders of Automotive Horns
- Meets the continuous and specific requirement of major original equipment manufacturers.
- Far and foremost exporters of Quality Horns to meet International Standards.
- First Horn Manufacturer to get ISI approval in India.
- The First Indian Company to get European Homologation approval for Electric Horn by TUV, Rheinland, Germany.
- Prestigious winner of the American International Quality Award by Fulham Geissler Associates, USA.
- ISO-9001 certified company.
- Now sharing technical expertise with world leaders M/s. Robert Bosch, Spain on Electric Horns.

199920



With best compliments from

- Surya Theatre
- Dhanalakshmi Theatre
- Selvaraja Theatre

Tirupur

கோவை மாவட்டம்

கோயம்புத்தூரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள சுற்றுலாத் தலங்கள் எண்ணற்றவை; எழில் மிக்கவை; காண வருவோரைக் களிக்கச் செய்பவை; திகைக்க வைப்பவை! அவற்றின் பட்டியல் போன்றது இந்தக் கட்டுரை:

கோவை நகரம், மாவட்டத்தின் தலைமையிடமாகவும், தமிழகத்தின் 3-வது பெரிய நகரமாகவும் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் மிக அதிகமான பஞ்சாலைகள் இருப்பதால், இதனைத் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கின்றனர்.

இது தவிர, பலவிதப் பொறியியல் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைந்துள்ளன. இம்மாவட்டம் கைத்தறித் துணிகளுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு கைத்தறித் துணித் தொழில் மேம்பாட்டிற்காகப் பல நிறுவனங்கள் அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்கள் பல உள்ளன. அவை பற்றிய விவரங்கள் வருமாறு:

பேரூர் கோயில்

கரிகால் சோழனால் கட்டப்பட்ட பேரூர் ஆலயம் நொய்யல் நதிக்கரை அருகாமையிலும், கோவையிலிருந்து 7 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இது ஒரு சிவாலயமாகும். இதன் மூலஸ்தானத்தில் அருள்மிகு பட்டீஸ்வரரும், மற்றும் அருள்மிகு பஞ்ச நாயகியும் வீற்றுள்ளனர். இத்திருக்கோயிலில் மிகவும் அழகிய கலைநயம் வாய்ந்த சிற்பங்கள் கொண்ட கனக சபை அமைந்துள்ளது. இது 'மேல் சிதம்பரம்' என்றும் அழைக்கப்படுகிறது.

மருதமலை

கோவை நகரிலிருந்து மருதமலை அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் 12 கி.மீ. தொலைவில் அமைந்

எம். பாலச்சந்திரன்
மாவட்டச் சுற்றுலா அலுவலர்

5

துள்ளது. முருகக் கடவுளின் அறுபடை வீடுகளுக்கு அடுத்து, இதனை 7-வது வீடாகக் கருது கின்றனர். ஏற்ற வழிபாடுகள் நடைபெறுகின்றன. இத்திருக் கோயிலில், பண்டிகைக் காலங் களிலும், விழாக்காலங்களிலும் பக்தர்களின் வழிபாடு மிக அதிகம்.

திருமூர்த்தி மலைக் கோவில்

கோவை-பழநி நெடுஞ்சாலை யில் உடுமலைப்பேட்டையி லிருந்து 20 கி.மீ. தொலைவில் திருமூர்த்திமலையின் அடிவாரத் திலும், திருமூர்த்தி அணையில் அருகாமையிலும் அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக் கோயில் அமைந்துள்ளது. தமிழ் நாடு அரசு சுற்றுலாத் துறை மூலம் அமணலிங்கேசுவரர் திருக்கோயிலிலிருந்து பஞ்லிங்க ஸ்தலம் (நீர்வீழ்ச்சி அருகில்) வரையில் சுமார் ரூ.3.56 இலட்சம் செலவில் நடைபாதை செப் பனிடப்பட்டுள்ளது. மேலும் இது மாவட்ட உலாத் தலமாகத் தேர்வு செய்யப்பட்டு, முன்னேற் றப் பணிகள் செய்யப்பட்டு உள்ளன. தற்பொழுது இவ் வணையருகில் ஒரு நீச்சல்குளம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. மேலும் படகுக் குழாம் அமைக் கப்பட்டு சுற்றுலாப் பயணி களுக்குப் படகுச் சவாரி செய்ய வும் வசதி செய்யப்பட்டுள்ளது.

கோவைக் குற்றாலம்

அனைவராலும், 'கோவைக் குற்றாலம்' என அழைக்கப்படும் 'சிங்குபதி நீர்வீழ்ச்சி' கோவையி லிருந்து சிறுவாணி செல்லும் நெடுஞ்சாலையில் 30 கி.மீ. தொலைவில், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் அமைந்துள் ளது. இது கோவை மாவட்டத் தில் சிறந்த சுற்றுலா இடமாக அமைந்துள்ளது.

இந்நீர்வீழ்ச்சியைக் காணச் செல்லும் பயணிகள் போளுவம் பட்டி சோதனைச் சாவடியில் நுழைவுக் கட்டணமாக ரூ.5 (ரூபாய் ஐந்து மட்டும்) செலுத்தி அனுமதி பெற்ற பின்னர் செல்லலாம்.

இந்நீர்வீழ்ச்சியை அடைய சாலை வசதி மற்றும் குளிப்பதற் கான வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. யானை, சிறுத்தை, கடமான், காட்டாடு போன்ற வன விலங்குகள் உள்ளன, இப்பகுதியில்.

தொள்ளாயிரம் மூர்த்தி கண்டி

கோவையிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும் நரசிபுரம் கிரா மத்திலிருந்து, 6 கி.மீ. தொலை விலும் இந்த நீர்வீழ்ச்சி அமைந் துள்ளது. 'தொள்ளாயிரமூர்த்தி கண்டி' என்று அழைக்கப் படுகிறது, இந்த நீர்வீழ்ச்சி. இந் நீர்வீழ்ச்சியை அடைய வெள்ளி மலைப் பட்டிணத்திலிருந்து நடைப் பயணமாகச் செல்ல வேண்டும். எனவே, அங்கு செல் லும் சாலையைத் தார் இட்டு, சிறந்த சாலையாக அமைக்கவும் மற்ற வசதிகளுக்கும் மேம்படுத்த ரூ.66 இலட்சம் செலவில்



திருமூர்த்தி அணை படகுத்துறை

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

திட்டங்கள் தீட்டப்பட்டு, பரி சீலனையில் உள்ளன. தற் பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை நாம் எல்லோரும் அறியச் செய்ய சீரிய முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இந்திராகாந்தி வனவிலங்கு உய்விடம்

'இந்திராகாந்தி வனவிலங்கு உய்விடம்' எனப்படும் ஆனை மலைப் பகுதி, கடல் மட்டத் திலிருந்து 1400 மீட்டர் உயரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில், பொள்ளாச்சிக்கு அருகில், கோவையிலிருந்து 90 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 958 ச.கி.மீ. கொண்டதாகும். குரங்கருவி, அருகிலுள்ள ஆதாயம்மன் கோயில், புல்மலை (Grass Hills), சின்னார், கோடந்தூர் போன்ற சிறந்த பகுதிகள் அடங்கும். இந்தச் சரணாலயத்தில், காட்டு யானைகளும், காட்டு எருமை களும், புலிகள், சிறுத்தைகள், மான்கள், செந்நாய், இராஜநாகம் போன்றவைகளும் பலவிதப் பறவைகளும் உண்டு. இச் சரணாலயத்தைக் காண ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் தவிர அனைத்து மாதங்களும் உகந்தவை பொள் ளாச்சியில் அமைந்திருக்கும் "வனவிலங்குப் பாதுகாவலர்" மீன்கரைச் சாலை, போன் 25358, பொள்ளாச்சி அவர்களிடம் அனுமதி பெற்று, பொள்ளாச்சி யிலிருந்து 30 கி.மீ. தொலைவு கொண்ட 'டாப்சிலிப்ஸ்' சென்று சரணாலயத்தைக் கண்டுகளிக் கலாம். இங்கு யானையின் மீதும், வேனிலும் சென்று (காலை 6 மணி முதல், 8.30 மணி

With Best Compliments From

RMP

Air Compressor



Borewell Compressor



R.M.P. AGENCIES,
111, Angappa Naicken Street,
Madras - 600 001 Ph : 5231468

சிறுவர்க்கு வசதியாய் நீச்சல் குளம்

வரையிலும், மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரையிலும்) யானை, புலி, சிறுத்தை, கரடி சில நேரங்களில் இராஜ நாகம், போன்ற வன விலங்குகளையும் கண்டுகளிக்கலாம். இங்கு தங்கி கண்டுகளிக்க தங்கும் விடுதிகள் வனத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்கு செல்லும் வழியில் ஆனை மலை என்ற இடத்தில் புகழ் பெற்ற மாசாளியம்மன் கோயில் உள்ளது.

வால்பாறை

தொழில் வளத்தில், முன்னேற்றம் அடைந்துவரும் கோவை மாவட்டத்தில் மலைப்பிரதேசமாக அமைந்துள்ளது வால்பாறை. வற்றாத வளங்கொழிக்கும் வால்பாறை மலை, இன்று இயற்கை அன்னையின் எழில் மிகுந்த ஏற்றமுடன் விளங்குகிறது. இம்மலையினைச் சுற்றிக் காணப்படும் சோலைகள், கண்ணைக் கவரும் அருவிகள், கம்பளம் விரித்தாற்போல் காணப்படும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அருகில் அமைந்துள்ளது. 'இந்திரா காந்தி வன விலங்குச் சரணாலயம்' போன்ற இடங்கள் இம்மலைக்கு மிகுந்த அழகைச் சேர்க்கிறது. இவ்வழகிய மலைப் பிரதேசத்தைச் சுற்றுலாப் பயணிகளின் உல்லாச இடமாக அமையும் வகையில் தங்க வசதியளிக்க வால்பாறை நகரியம் சுமார் ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெற உள்ளது. மேலும் இம்மலையில் சிறுவர்களின் விளையாட்டு மைதானம் (Children'sPlayground) அமைக்க இடம் தேர்வு செய்து, பணிகள் மேற்கொள்ள கோவை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, சுமார் ரூபாய் 30 இலட்சம் செலவில் திட்டம் வகுக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. வால்பாறை செல்லும் வழியில் ஆளியார் அணை அமைந்துள்ளது.

அமராவதி அணை

கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள அமராவதி அணை கோவையிலிருந்து மூணாறு செல்லும் வழியில், உடுமலைக்கு அருகில் அமைந்துள்ளது. அமராவதி அணை அருகில் இந்திரா காந்தி வனவிலங்குக் காப்பாளரால் கண்காணிக்கப்பட்டு வரும் முதலைப் பண்ணை அமைந்துள்ளது. மேலும், இவ்வணையின் அருகில் பல வன விலங்குகளைக் காலை, மாலை வேளைகளில் கண்டுகளிக்கலாம்.

மேற்கண்ட சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களைத் தவிர, கோவை நகரில் பார்க்க வேண்டிய இடங்கள் பல. வேளாண்மைப் பல்கலைக் கழகம், வ.உ. சிதம்பரனார் பூங்கா, வனக் கல்லூரி, ஜி.டி. நாயுடு தொழில் நுட்பப் பொருட்காட்சி ஆகியவை அவற்றுள் சில!

உடுமலை நாராயணகவி

தமிழ்த் திரைப்பட உலகில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு முன்பே 'வாத்தியார்' என்று சிறப்பித்து அழைக்கப்பட்ட சிறப்பினர் உடுமலை நாராயணகவி அவர்கள். இந்நேரத்தில், என்றும் சிரஞ்சீவியாக விளங்கும் அந்தப் பாடல்களை எழுதிய பெருமையாளர் உடுமலை நாராயணகவியை நாம் நினைவு கூரத்தானே வேண்டும்?

அந்நாளையப் படவுலகின் திரைப் படப் பாடல்கள் இவராலேயே ஏற்றம் பெற்றன.

'ஆகும் நெறிஎது ஆகா நெறிஎது அறிந்துகொள்வீரே! நன்றாய்ப் புரிந்துகொள்வீரே!'

'மனிதனாகிப் போனேன்-புது மனிதனாகிப் போனேன்!...'

'குடிச்சுப் பழகணும்-நல்லா குடிச்சுப் பழகணும்...'

'ராஜா மகள் ராணி புது ரோஜா மலர் மேனி...'

- அந்தக் காலத் திரைப்படப் பாடல்கள் சிலவற்றின் தொடக்கங்கள் இவை. இந்தக் காலப் பாடல்களெல்லாம் கேட்ட சிறிது நேரத்திலேயே மறந்து போய்விடும்

கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்திலிருந்த நாம் அவரைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுவதற்காக, அவர் பிறந்த ஊரான பூளவாடி கிராமத்திற்குச் சென்றிருந்தோம். அவருடைய தலைமகன் திரு பி.என் இராமகிருஷ்ணனே கிடைத்தார். அவர் மூலம் நாம் பெற்ற செய்திகள் இவை:

திரு கிருஷ்ணசாமி செட்டியார் திருமதி முத்தம்மாள் தம்பதியருக்கு 25.9.1899-இல் பிறந்தவர்தான் உடுமலை நாராயணகவி அவர்கள்.

இளமைக் காலத்திலேயே, தமிழ் மீது தளராத பற்றுக் கொண்டிருந்த அவரது தந்தையார் மாண்டு போனார். உடுமலைச்சரபம் முத்துசாமிக் கவிராயர் என்பாரிடம் பத்தாண்டுகளுக்கு மேல் முறைப்படி தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொள்வாரானார் உடுமலை நாராயணகவி. அதன்பின், முத்துசாமிக் கவிராயரின் நண்பரும், நாடகத் தமிழ் வளர நல்ல'வண்ணம் பாடுபட்டவருமான திரு சங்கரதாஸ் சுவாமிகள் மூலம் இரண்டாண்டுக் காலம் நல்ல தமிழ் நாடகம் உருவாக்கும் பயிற்சி பெற்றார்.

கழுகுப் பார்வையில் வால்பாறை

★கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலை, வால்பாறை, பேரூர், திருமூர்த்தி, சிறுவாணிக்கு அருகேயுள்ள கோவைக் குற்றாலம் ஆகிய பகுதிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகத் திகழ்கின்றன. வால்பாறையில் சென்ற ஆண்டு கோடை விழா நடத்தப்பட்டது தொடர்ந்து நடத்த அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

திருமணம் முடிந்தபின், தம் குடும்ப முறைப்படி வியாபாரத்தில் ஈடுபட்டார். மனம் தமிழ் மீதிருந்ததால், வியாபாரம் கையைக் கடித்தது. மதுரைக்குச் சென்றார். நாடகத் துறையில் புகழ்பெற்றுவந்த திரு எம்.எம். சிதம்பரநாதனின் நட்புக் கிடைத்தது. தேசிய இயக்கக் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் இசைப் பாடல்கள், நாடகங்கள் எழுதிடலானார். தமிழ் நாடக ரசிகர்களின் கவனம் அவர்மீது திரும்பியது.

இவ்வாறு, கலைத்துறையில் உடுமலை நாராயணகவியின் புகழோங்கியது. 'மதுரை ராயல் டாக்கி' என்கிற திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் முதன்முதலாகத் 'தூக்குத் தூக்கி' என்கிற தமது தயாரிப்புக்குக் கதை, வசனம், பாடல்கள் எழுத ஒப்பந்தம் செய்துகொண்டது.

அதைத் தொடர்ந்து சந்திர மோகனா, விப்ர நாராயணா, தமிழறியும் பெருமாள் போன்ற பல படங்களுக்குப் பாடல்கள் எழுத வாய்ப்பளிக்கப்பட்டது. இதை அடுத்து, ஏறத்தாழ நான்காண்டுக் காலம் சென்னையில் உள்ள எச்.எம்.வி. கிராமபோன் நிறுவனத்தார் ஒப்பந்த அடிப்படையில் பாடல்கள் எழுத ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

இதன்பின், தமிழ்ப்பட உலகில் உடுமலை நாராயணகவி, நல்ல வரவேற்பைப் பெற்றார். கண்ணகி, மகாமாயா, கிருஷ்ணபக்தி, வேலைக்காரி, சொர்க்கவாசல், பராசக்தி போன்ற. பல படங்களுக்குப் பாகு நிகர் பாடல்களை எழுதிக் குவித்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான் அவருக்கு அறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்,

★கோவை மாவட்டத்தில் உள்ள அடர்த்தியான காடுகள் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. மூங்கில், தேக்கு, கனி வகை போன்ற பயன்படு குடும்பப் பொருட்களெல்லாம் அவற்றால் வழங்கப்படுகின்றன.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். போன்றோரின் தோழமை கிடைத்தது. உடுமலை நாராயணகவி பாடல்கள் இல்லாத படமே இல்லை என்ற நிலை திரையுலகில் ஏற்பட்டது.

கலைவாணரின் 'கிந்தனார்' கதாகாலட்சேபம் புத்துணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படச் செய்தது.

22.4.1967-இல் சங்கீத நாடகச் சங்கத்தின் சார்பில், கவிராயருக்குச் 'சாகித்ய ரத்னாகர' என்கிற விருது வழங்கப்பட்டது. அப்போது, திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் அவ்வமைப்பின் தலைவராக இருந்தார்.

சென்னையில், 'பாலர் அரங்கம்' 'கலைவாணர் அரங்கமாகப்' பெயர் மாற்றம் பெற்ற விழாவிற்குச் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார் (29.1.1974). அவ்விழாவில், உடுமலை நாராயணகவிக்கு திரு எம்.ஜி.ஆர். அவர்களால் பொன்னாடைப் போர்த்திச் சிறப்பிக்கப்பட்டது. பொற்கிழி வழங்கப்பட்டது. அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் கவிஞர் கண்ணதாசன், அவ்வை தி.க. சண்முகம், திரு நாரண துரைக்கண்ணன் போன்றோரெல்லாம் உடுமலையாருக்குப் புகழாரம் சூட்டினார்கள்.

மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், நாமக்கல் கவிஞர், திரு வ.ரா., திருசுத்தானந்த பாரதியார், டாக்டர் மு.வரதராச

னார், திரு தண்டபாணி தேசிகர், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை ஆகியோருடனெல்லாம் அன்புள்ளத்தோடு பழகிப் பண்பட்டவர் உடுமலை நாராயணகவி அவர்கள்.

'பாட்டுக்குள்ளே நல்ல பாட்டு பாரதி பாட்டு'...

என அவர் எழுதிய பாடல் ஒன்று தற்போதைய பி.ஏ., பி.காம்., பி.எஸ்ஸி., தமிழ்ப் பாட நூல்களில் இணைக்கப்பட்டுள்ளது.

திரு கி. வீரமணி அவர்களால் 'பெரியார் பெருந்தொண்டன்' என்கிற பட்டம் கவிராயருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறாகத் தமிழ்த் திரைப்படப் பாடல் உலகில் முடிசூடா மன்னராக விளங்கி வந்த உடுமலை நாராயணகவி அவர்கள் தமது முதுமைக் காலத்தே சொந்தக் கிராமமான பூளவாடிக்கே சென்று வாழலானார். அவருடைய செவிகள் கேட்புச் சக்தியை இழந்தன. 1981-இல், தமது 82-ஆவது வயதில் கவிஞர் அவர்கள் கன்னித் தமிழ்க் கவிதையுலகமே கலங்கியழும்படி இறந்து போனார்.

இப்போது அவர் நினைவாகப் பூளவாடி கிராமத்தில் உள்ள அரசு மேனிலைப்பள்ளியில் ரூ.50,000 செலவில் உடுமலை நாராயணகவி நினைவுக் கலையரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. உடுமலை பகுதித் தொழிலதிபரான டாக்டர் கெங்கு சாமி நாயுடு அவர்கள் அதை 5.4.1992-இல் திறந்து வைத்தார்.

உடுமலை நாராயணகவி அவர்களின் நினைவு நாளன்று இப்போதும் அங்கே இனிய தமிழ் விழா ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

அறிவொளியின் நிறம் பச்சை

கோயம்புத்தூர் மாவட்டம், மலைமுகடுகளும், அவைகளுனூடே சில்லிட்டு ஓடும் அருவிகளும், நிறைந்த மாவட்டம், அங்கே, சாடிவயல் என்ற ஒரு குக்கிராமம், எங்கும் மலைவாசிகள், பறவைகள் கிறீச்சிடும் மாலை நேரம். ஆதிவாசிகள் குவிந்திருக்கிறார்கள். குழல் விளக்கு மின்னொளியில் சிறிய மேடை. மாவட்ட ஆட்சித்தலைவர் உற்சாகமாய் பேசிக்கொண்டிருக்கிறார்.

கூட்டத்தில் சிறு சலசலப்பு, அதுவும் பெண்கள் பகுதியில், துறுதுறுவென ஒரு இளம்பெண் கூட்டத்தைக் கையால் விலக்கியபடி மேடையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தாள். ஆதிவாசிகளுக்கு உரிய உடையணிந்திருந்தாள். கூட்டத்திலுள்ள பெண்களின், விழிகள் அகலமாக, ஆச்சரியம் குடிகொண்டது. காவலர் ஒருவர் அந்தப்பெண்ணைத் தடுத்து நிறுத்த, மாவட்ட ஆட்சியர் அவரைக் கையமர்த்தினார். அந்தப்பெண் நேரே மேடைக்கு வர அனுமதியளிக்கப்பட்டாள்.

மேடைக்கூச்சமும் அவைக்கூச்சமும் அந்த இளம்பெண்ணை முற்றுகையிட்டது. மிரள விழித்தாள்.எதுவும் பேசமுடியாமல், வாயடைத்துப்போனாள். முகமெங்கும்முத்துமுத்தாய் வியர்வை அரும்பியது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, விளக்கொளியில் தன்னுடைய முழங்கையை மாவட்ட ஆட்சியரிடமும், கூட்டத்தினரிடமும் உயர்த்திக் காட்டினாள். அதில் பெரிய பெரிய எழுத்துக்களால் பச்சை குத்தப்பட்டிருந்தது. தைரியமாய், ஒவ்வொரு எழுத்தாக எழுத்துக் கூட்டிப் படித்து முடித்தாள். எவரெஸ்ட் சிகரத்தையே எட்டிப் பிடித்து விட்ட மகிழ்ச்சி அவள் முகத்தில்.

ஏன், அந்த மலைவாசிகள் அனைவரிடமுந்தான், அவளுடைய முயற்சியை அங்கீகரித்து, கூட்டம் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தது. மேடையில் இருந்த அனைவரும் அமைதியாகவும், அதே நேரத்தில் உற்சாகமாகவும் இருந்தார்கள்.

மாவட்ட ஆட்சியர் அந்தப் பெண்ணிடம் கேட்டார், அம்மா, பச்சைக் குத்தப்பட்ட பெயர் உன்னுடையதா?"

அந்த இளம்பெண்ணோ வெகுளியாய், ஒரு பெரிய அதிகாரியிடம் பேசுகிறோம் என்ற சிறு அச்சம் கூட இல்லாமல், அதா, அது எனக்கு எழுதப்படிக்கக் கத்துக் குடுத்த எங்க அறிவொளி ஆசிரியை பேருங்கோ" என்று வார்த்தைச் சதங்கைகளைக் கொட்டியதுபோல் சொல்லிவிட்டு உடனே மேடையிலிருந்து இறங்கி கூட்டத்துக்குள் கலந்துவிட்டாள்.

அனைவரும் ஒரு கணம் மெய்சிலிர்த்துப் போனார்கள்.

கோவை மாவட்ட அறிவொளி இயக்கம் எந்த அளவுக்குப் பாமரர்களையும், அடித்தட்டு மக்களையும் பாதித்துள்ளது என்பதற்கு, இது ஒரு சான்று என்று கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் சொன்னார்.

PHONE: 53327
RESI: 52927



SRI MURUGAN ENGINEERING WORKS

50, NORTH CAR STREET
AVANASHI - 641654 COIMBATORE DISTRICT

- ☆ WE HAVE UNDERTAKING SUPPLY AND SERVICE OF SUBMERSIBLE MOTOR-PUMP SETS, CENTRIFUGUAL MOTORS, AIR-COMPRESSER PUMPSETS & OPEN WELL GRAN SETS.
- ☆ ALL KIND OF LATH & WELDING WORKS.

PROP: C. MANI & BROS.

கோரா பட்டுச் சேலை!

கோவை மாவட்டம் நூற்பாலைகள் மலிந்தது என்பது பலருக்கும் தெரியும். ஆனால், ஒருவகைச் சேலைத் தயாரிப்பிலும் அம்மாவட்டம் புகழ்பெற்று விளங்குவது மிகச் சிலருக்கே தெரியும்.

'சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி...

- என்ற பாடல் கேட்டிருப்பீர்களே! அப்படிப்பட்ட அழகுமிக்கதான 'கோரா' பட்டுப் புடவைதான் கோவைக்கு மேலும் புகழ் சேர்க்கும் சிறப்புமிக்கது ஆகும்.

குறிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அன்னூர் ஒன்றியத்தைச் சேர்ந்த திம்மநாயக்கன் பாளையத்தில்தான் ஏறத்தாழ வீட்டுக்கு வீடு இந்த வகைப் புடவைத் தயாரிப்புப் பணிகள் நாள் முழுவதும் இடைவிடாமல் நடைபெற்று வருகின்றன.

சின்னஞ்சிறு கிராமந்தான் என்றாலும், இவ்வகைச் சிங்காரச் சேலைத் தயாரிப்பில் அங்குள்ள இருபது வீட்டுப் பெண்மணிகள் 'டோக்ரா' திட்டத்ின்கீழ் நிதியுதவி பெற்று வேலைபார்த்து வருகிறார்கள். கோவை நகரின் முக்கிய வீதிகளில் உள்ள பெரிய பெரிய துணிக் கடைகளிலெல்லாம் தொங்கிய 'கோரா' பட்டுப்புடவைகளைக்கண்டு கண்பூத்துப் போன நாம், அதை இத்தனை எழிலோடு எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதை அறிவதற்காகத் திம்மநாயக்கன் பாளையத்திற்குச் சென்றோம்.

திரு கே.என். பரமேசுவரன் என்பார் நம்மை வரவேற்று அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கிருந்த இரண்டு மூன்று நூற்மேடைகளிலும் அவருடைய தாயார், மனைவி, மகன் அனைவருமாக நெசவுத் தொடர்பான ஒவ்வொரு வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இதுதான் கைனா சில்க் புடவையா?" என்று, கேட்டயில்

திறமைகளின் விளைநிலமாகத் திகழும்

கோவை மருத்துவக் கல்லூரி

தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் கல்விப் பணியில் முன்னணி வகிக்குமளவுக்குச் சீரிய சிறப்பாகச் செயலாற்றி, சிறந்த மருத்துவர்களை உருவாக்கும் மாபெரும் சமூகப் பணியையும் செய்து வருகிறது கோவை மருத்துவக் கல்லூரி.

ஆண்டுக்கு 110 மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்புக்காக இக்கல்லூரியில் அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போது 1994-95 எம்.பி.பி.எஸ். அனைத்து நிலைகளிலும் 561 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

இக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்புத் தவிர, எம்.டி. பொது மருத்துவம், எம்.எஸ். அறுவையியல், டி.ஜி.ஓ. மகப்பேறு மருத்துவம், டி.சி.எச். குழந்தை நலம், டி.ஏ. மயக்க மருந்தியல் போன்ற மேல்பட்டப் படிப்பு வகுப்புகளும் நடைபெறுகின்றன. இக்கல்லூரி மாணவர்கள் படிப்பிலும், பலதுறைகளிலும் முன்னணிபெற்று விளங்குகிறார்கள். அவற்றுள் சில.

- ☐ தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடந்த எம்.பி.பி.எஸ். தேர்வில் கோவை மருத்துவக் கல்லூரி மாணவர் பாலாஜி சுந்தரேசன் முதன்மையாக வென்று 7 தங்கப்பதக்கங்களையும் பெற்று எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 1994 – 95 ஆண்டின் முதல் மாணவனாகத் தேர்ச்சியடைந்துள்ளார். மேலும் இரண்டாவது இடத்தை, கோவை மருத்துவக் கல்லூரி மாணவி வி. சித்ரா பெற்று, 6 தங்கப்பதக்கங்களையும் வென்றுள்ளார்.
- ☐ அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட சௌரப் 95 என்ற பொது அறிவுப் போட்டியில் கோவை மருத்துவ மாணவர்கள் பங்கு பெற்று, சுழற் கேடயத்தைப் பெற்றுள்ளனர்.
- ☐ பாண்டிச்சேரி ஜிப்மர் வளாகத்தில் நடைபெற்ற அகில இந்திய அனைத்து மருத்துவக் கல்லூரி பங்குபெற ஸ்பான்டன் '94 என்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்று சுழற் கேடயத்தைப் பெற்றிருக்கிறது இக் கல்லூரி.

திப்புவின் ஆட்சி

பிற்காலத்தில் திப்பு சுல்தானின் பிரதிநிதியாகக் கோவையில் மாதையன் என்பான் எல்லா அதிகாரமும் பெற்று ஆட்சி செலுத்தினான். அவனைச் சூழ்ச்சியால் வென்றே ஆங்கிலேயர்கள் இங்கே காலூன்றினார்கள் என்கிறது வரலாறு.

திறமைகளின் விளைநிலமாகத் திகழ்ந்திடும் கோவை மருத்துவக் கல்லூரி, மருத்துவ அறிவியலில் நாளைய சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் இளம் மருத்துவர்களை உருவாக்கும் சக்திமிக்க பாசறையாக விளங்குகிறது. மனித சமுதாயத்திற்கு மரண பயம் விளைவிக்கும் எய்ட்ஸ் போன்ற அபாயகரமான நோய்களிலிருந்து சமூகத்தைக் காக்கும் மாபெரும் பொறுப்புமிக்க மருத்துவர்களை இக்கல்லூரி உருவாக்கி வருகிறதென்றால் அது மிகையல்ல!

அண்மையில், கோயம்புத்தூரில் ரூ. 9.88 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்ட பிரம்மாண்டமான வடகோவை மேம்பாலம்.

கிடந்த ஒன்றைப்பார்த்துக் கேட்டோம், நாம்.

"இது கோரா பட்டுப் புடவைங்க" என்று சிரித்தபடி சொன்னார், அவர் மனைவி.

"சைனாவிலேர்ந்து வர்ற நூல்ல நெய்யிறம்னு அப்பிடிக் கேட்டிங்களாக்கும்? இப்பல்லாம் சிலுக்குப் பொடவை, பட்டுப் பொடவை எல்லாத்தையுங்காட்டிலும் இதுக குத்தாங்க ஏகப்பட்ட கிராக்கி" என்றார், ராட்டை முன்னிருந்த மூதாட்டியொருவர்.

"சைனாவுக்குப் போயே நூல் வாங்கறீங்களா என்ன?"

"இல்லிங்க. சூரத்திலிருந்து ஜரிகை வாங்கறம், சிலுக்கு நூலு... மத்ததெல்லாம் கோயம்புத்தூர்லயே கிடைக்கிது..."

நெய்து முடிக்கப்பட்ட ஒரு புடவையை எடுத்து விரித்துக் கட்டினார், ஒருவர். அழகழகான பூக்கள் அதன் உடம்பெங்கும் கண்ணைக் கவரும் வகையில் கவினுற இழைக்கப்பட்டிருந்தன. இந்தப் பட்டா வனப்பு மட்டுமல்ல, அதன் முந்தியில் அடர்த்தியான பூந்தோட்டம் ஒன்று சுமார் இரண்டு அடி அகலத்திற்குக் காட்சியளித்தது. புடவையை அப்படியிப்படி புரட்டுகிறபோது தெரிந்த ஒரு வகை மினுமினுப்பு, நம் நெஞ்சைக் கொள்ளை கொண்டது.

"இது நல்லாருக்கா?"

"இந்தப் புடவையைப் பாருங்க!"

"இதெப்படி?"

என்றெல்லாம் சில சிறுமிகள் ஒவ்வொரு சேலையைத் தம் மீது எடுத்துப் போட்டு அழகு காட்டினார்கள்.

"ஒரு புடவை நெய்யறதுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்க?" என்றோம் நாம்.

"இதே வேலையா ஒக்காந்தம்னா... ஒரு நாள் ரெண்டு நாள்ல முடிச்சிறுவம். நடுவால வீட்டுவேலைங்களையும் நாங்களே பார்த்துக்கறதால... ஒரு சேலை நெய்து முடிக்க மூணு நாள் ஆவுதுங்க!" என்றார்,

ஒருவர்.

"வெளியிலெயெல்லாம் தறிபோடறதில லீங்களா?"

"வேலை அதிகமா வந்தா போடறது தானுங்க. இன்னிக்கு ஒண்ணும் கண்ணுலபடலியேன்னு கேட்கறீங்களா? திங்கட்கிழமை

With Best Compliments From :

Sri Baba Theatres Private Limited

Archana 70mm A/c. Darsana 35mm A/c.

16/24, Devanga High School Road

Coimbatore - 641 002.

Phone : 444235 & 444335

Sri Baba Films

No.2, Gopalapuram 2nd street

Coimbatore - 641 018.

Phone : 217557

With best compliments from

D.S.P. PROCESS

Karaipudur Panjayat

Palladam Union,

Tirupur - 5.

பாருங்க" னால ரொம்பபேரு சந்தைக்குப் போயிட்டாங்க!"

முன்பெல்லாம் சாதாரணச் சேலைகளுக்குத் தறிபோட்டுக் கொண்டிருந்தவர்கள் இவர்கள். பிறகு அரசு கடனுதவி வழங்க முன்வரவே, இந்த வகை கோரா பட்டுச் சேலை தயாரிக்கும் பணியில் முழுமூச்சோடு குடும்பம் குடும்பமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு குடும்பம் ஒரு மாதத்தில் சுமார் 12 அல்லது 15 சேலைகளை நெய்து முடித்துவிடுகிறது. இந்தச் சேலை நெசவில் போடப்படும் 'பாவு'க்குப் பெயர்தான் 'கோரா' என்பதாகும்.

"ஜரிகையெல்லாம் கறுத்துப் போயிடாமெ இருக்குமுங்களா?" இது நம் கேள்வி.

"அவங்கவங்க உபயோகிக்கற விதத்தைப் பொறுத்ததுங்க அது. டிரைக்ளீனிங் பண்ணினா ஜரிகை மட்டுமில்லே, புடவையெ ரொம்பகாலம் நல்லபடியா இருக்கும்!" இது ஒரு பெண்மணியின் பதில்.

திம்மநாயக்கன் பாளையத்தில் மட்டும் இவ்வகைச் சேலைத் தயாரிப்புக்கென ஐம்பது அறுபது தறிகள் போடப்பட்டிருக்கின்றன.

'தொகுப்பு வீடுகள்' திட்டத்தின்கீழ், இந்த ஏழை நெசவாளர் குடும்பங்களுக்கும் 35 வீடுகள் கட்டி வருகிறது, அரசு. விரைவிலேயே 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் அந்தப் புது வீடுகளில் புதிய பொலிவோடு 'கோரா பட்டுப் புடவை' தயாரிப்புப் பணிகள் புதிய வேகத்தோடு தொடரும் என எதிர்பார்க்கலாம்!

WITH BEST COMPLIMENTS FROM



TEXTOOL COMPANY LIMITED

Ganapathy Post, Coimbatore 641 006
INDIA

Telex: 0855 353 TXT IN

Grams: 'TEXTOLCO' Fax: 91-0422-532848

Phone: 531271, 531320, 531370, 532230, 532421, 532470, 532475, 532521

Manufacturers of:

Carding Frames, Draw Frames, Speed Frames, Ring Spinning Frames, Worsted Ring Spinning Frames, Ring Doubling Frames, Semi Automatic Winders, High Speed Cone Winders, Assembly Winders, Hank to Cone Winders, Cots Grinders, Metal Cutting Machines and Agents for Savio Automotic Winders

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

மாவட்டத் தொழில் மையத்தின் மகத்தான பணிகள்



★தொழில் வளர, தொழிலாளர் மேம்பட, தொழில் ஊக்குவிப்பு முகாம்கள்!

★சொந்தக் காலில் நிற்க, சுய வேலைவாய்ப்புத் திட்டம்!

★உற்பத்திப் பொருள்களுக்குச் சிறப்பு முதலீட்டு மானியம்!

★கைவினைஞர்கள் மற்றும் மகளிருக்கு வேலைவாய்ப்பு!



கோவை மாவட்டம் தொழில் ரீதியில் பார்க்கிறபோது, தமிழ்நாட்டில் முன்னணியில் உள்ள மாவட்டங்களில் முதன்மையானதாக விளங்குகிறது.

இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு, புதிதாகத் தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டியாக, மாவட்டத் தொழில் மையம், செவ்வனே பணி ஆற்றி வருகின்றது.

தற்காலிகச் சிறுதொழில் பதிவு மற்றும் நிரந்தரச் சிறுதொழில் பதிவு

இம்மையத்தின் மூலம் தொழில் முனைவோர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தொழில் தொடங்கத் தேவையான அனைத்து ஆலோசனைகளும் தெரிவித்து, அவர்களுக்குத் தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்று வழங்கப்படுகிறது.

இவ்வாறு தற்காலிகப் பதிவு பெற்ற இனங்களைத் தொடர்பு கொண்டும் உற்பத்தித் தொடங்கிய பின் அவர்களுக்கு நிரந்தரச் சிறுதொழில் பதிவு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு, இம்மாவட்டத்தில் 31.3.94 வரை 24,786 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருவதுடன், இந்நிறுவனங்கள் சுமார் 2.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்து வருகின்றது.

ஒரு முனைத் தீர்வு

சிறுதொழில் முனைவோர் தாம் உத்தேசித்துள்ள தொழில்களைத் தொடங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை விவாதித்து, உரிமங்கள் துரிதமாகக் கிடைக்கவும், ஒருவழிக் கோட்பாட்டுக் குழு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இக்குழு, பிரதி மாதமும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் கூடி விவாதித்து, விரை

காட்டுக்குள்ளே கல்யாணம்!

வால்பாறை வட்டத்துக்குள் 11 ஆதிவாசிக் குடியிருப்புகள், சங்கரன்குடி, சிங்கோனா, பெல்லிமுடி, கல்லார், வில்லோனி, எத்தகுடி, கவர்தல், கீழ்புனாச்சி, காடம்பாறை, பால்கனார், மண்பாறை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இங்குள்ள ஆதிவாசிகள் முதுவர், காடர், புலையர், மலைசரி என்று வகைப்படுத்தி அழைக்கப்படுகின்றனர். இவர்களில் முதுவரின மக்களைத் தவிர மற்றவர்கள் விஞ்ஞானத்தின் வெளிச்சத்தில் நாகரிகப்பூச்சை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். முதுவரின மக்களிடையே சில பழக்கங்கள், மரபுகள் ஆண்டாண்டுக்காலமாய் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

சாவடி

ஆண்களில் 5 வயதுக்கு மேற்பட்ட திருமணம் ஆகாத வாலிபர்கள் மற்றும் மனைவியின்றி வாழும் வயதானவர்கள் இரவில் தங்குவதற்குத் தனி ஆண்கள் சாவடியும், அதேபோல் 5 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் கணவனை இழந்த பெண்கள் இரவில் தங்குவதற்குத்தனியான பெண்கள் சாவடியும் உள்ளன. திருமணமான தம்பதிகள் மற்றும் 5 வயதுக் குட்பட்ட குழந்தைகளுடன் வசிக்கும் குடும்பத்தார் மட்டுமே இந்தச் சாவடிகளை விட்டு வெளியில் வசிக்கிறார்கள். இரண்டு சாவடிகளிலும் அங்கே தங்குபவர்களுக்கு காலையும், இரவும் உணவு வழங்கப்படும். பகல் உணவு முதுவரிடையே கிடையாது. உணவு சமைத்தல், இரவு முழுவதும் தூங்காது தொடர்முறையில் பாதுகாத்தல் போன்ற பணிகளை அந்தந்தச் சாவடிக்காரர்களே பார்த்துக் கொள்கிறார்கள்.

தலைக்கு எண்ணெய் வைக்கும் சடங்கு

பெரும்பாலும் தீபாவளியன்றோ அல்லது கார்த்திகைத் தீபத்தன்றோ ஆண்கள் சாவடியில் உள்ள 10 லிருந்து 20 வயது நிரம்பிய ஆண்மகனுக்கு அவனுடைய தாய்மாமன் அல்லது நெருங்கிய உறவினர் எண்ணெய் வைக்கும் சடங்கு நடைபெறும். நவதானியத்துடன் ஏதாவதொரு எண்ணெயைக் கலந்து பையனின் உச்சந்தலையில் தேய்த்துவிடுவர். அந்த வாலிபன் எண்ணெய் தேய்த்த ஓராண்டுக் காலத்துக்குத் தலைமுடி வெட்டக்கூடாது. அவன் புதிய மல்வேட்டியைத் தலைப்பாகையாகக் கட்ட வேண்டும். அவ்வாறு தலைப்பாகை கட்டிய நாள் முதல் அவன் திருமணத்துக்குத் தயார் என்பது பொருள்.

இதேபோல், பெண்கள் சாவடியிலும் 10 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் (அவள் வயதுக்கு வராவிட்டாலும்) தலையில் நவதானியத்துடன் எண்ணெய் வைக்கப்படும். அவளைவிட வயதில் மூத்த பெண் எண்ணெய் வைப்பாள். எண்ணெய் வைத்துக்கொண்ட பெண் அன்று முதல் கொண்டை போட்டுக்கொள்ள வேண்டும். இந்தக்கோலம், அவள் திருமணத்திற்குத் தயார் என்பதை வெளியுலகுக்குக் காட்டும்.

முதுவரிடையே நான்கு உட்பிரிவுகள் இருக்கின்றன. அவை முறையே, எல்லிக் கூட்டம், தூஸ்திரக்கூட்டம், கணையாட்டுக் கூட்டம், மேலாளக் கூட்டம் ஆகும். ஒரே உட்பிரிவைச் சேர்ந்தவரிடையே திருமணம் நடக்கக்கூடாது என்பது மரபாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

திருமண நிகழ்ச்சி

பெண்கள் சாவடியில் உள்ள கொண்டையிட்ட பெண்ணும், ஆண்கள் சாவடியில் உள்ள தலைக்கு எண்ணெய் வைத்த பையனும் ஒருவரையொருவர் விரும்பினால் மட்டும் திருமணம் நடந்துவிடாது. ஆண்கள் சாவடியிலுள்ள இளைஞர்களில் மூத்தவர் அல்லது தலைவன், பெண்ணின் பெற்றோரிடம் சென்று அவர்கள் எந்த உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுபிடித்து, மணமகனின் விருப்பத்தைச் சொல்வார். எந்த உட்பிரிவோடு எந்த உட்பிரிவு உறவு கொள்ள வேண்டும் என்கிற மரபைப் பின்பற்றி, ஒத்துவருகிற பட்சத்தில் மணமகள் முடிவு செய்யப்படுவாள்.

வரதட்சணை என்கிற வார்த்தையே முதுவர் வாழ்வில் இல்லை.

மாப்பிள்ளையும், பெண்ணும் முடிவானவுடன் பெண்கள் சாவடியிலுள்ள மணப்பெண்ணின் தோழிகள் மணப்பெண்ணை இரவோடு இரவாக காட்டுப்பகுதிக்குள் அழைத்துச் சென்று மறைந்து கொள்வார்கள். அவர்கள் மறைந்துள்ள இடத்தைக் கண்டுபிடிக்க மாப்பிள்ளைத் தோழர்கள் புடவை, கொண்டை ஊசி, மற்றும் சாந்து பொட்டு போன்ற பொருள்களுடன் அலைந்து திரிவார்கள். இந்நிகழ்ச்சி கிட்டத்தட்ட 10 நாட்கள் கூட நீடிப்பதுண்டு. இதில்தான் இருபாலரின் திறமையும் அடங்கியிருக்கிறது. அந்த அளவுக்கு, திறமையானவர்கள் பெண்கள். மணப்பெண்ணின் இடம் தெரிந்தவுடன், நேரிடையாக மணமகனின் கையில் மணப்பெண்ணை ஒப்படைத்து, புத்தாடை அணியச் செய்வார்கள். புதுத்தம்பதிகள் இனி தங்கள் சாவடிகளை விட்டு, தனிக்குடிசையில் வாழத் தொடங்குவார்கள்.

கோவை மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வீட்டுக்கூரை அமைக்க 500 தகர ஓடுகள் ரூ.40 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது. 50 குடும்பங்களுக்குக் காளான் வளர்ப்புத் தொழில் நடத்த அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.

—தகவல்
திரு. கனகராஜ்,
சமூக சேவகர், வால்பாறை.

★ வழியில் முள் இருந்தால் தைக்கும்.
செருப்பில் ஓட்டை இருந்தால் சுடும்.
அதைப்போல நம்மிடம் ஜாதிகள் பல
இருந்தால் அந்நியர் ஊடுருவல்
நேரத்தான் கூடும்!

- அறிஞர் அண்ணா

வில் உரிமங்கள் கிடைக்க இம் மையம் தக்க நடவடிக்கை மேற் கொள்கிறது.

மாவட்ட ஆலோசனைக் குழு

இக்குழு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் பிரதி மாதமும் கூடி, சிறுதொழில் வளர்ச்சிக்களுக்கான சாத்தியக் கூறுகள் மற்றும் அதன் தேவை களைப் பற்றி ஆராய்ந்து தக்க் பரிந்துரை செய்து, தொழில் வளர்ச்சி ஏற்படத் தக்க வழிவகை செய்கிறது.

தொழில் ஊக்குவிப்பு முகாம்

இம்மாவட்டத்தில், வட்டார அளவில் 21 வட்டாரத்திலும் தொழில் முனைவோர்களுக்காக இம்மையத்தின் மூலம், தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப் பட்டு, தொழில்கள் தொடங்க தக்க ஆலோசனைகளும் வழங்கப்படு கின்றன.

தொழில் தகவல் பரப்புக் கூட்டம்

தொழில் முனைவோர் நலனுக் காக, மாவட்டத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தகவல் பரப்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தக் கூட்டத் தில் தொழில் முனைவோர்க்கான அடிப்படை மற்றும் முக்கியமான தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, ஆலோசனை வழங்கப்படுகிறது. இத்துறையின் அலுவலர்கள், பிற துறை அலுவலர்கள் வங்கித் துறை அலுவலர்கள், தொழில் வல்லு நர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொழில் முனைவோருக் கான அனைத்துத் தகவல்களையும் அளிக்கின்றனர். இந்த மாதிரியான கூட்டம், முக்கியமான நகரங்களில்

ஓர் ஆண்டில் நான்கு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள்

கோவை மாவட்டத்தில், 187 பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 100 நிறுவனங்கள் வெவ்வேறு அளவுள்ள நூல் உற்பத்தி மற்றும் நூல் நூற்புத் தொழில்களில் ஈடு பட்டுள்ளன. இவைகளில் மதுக் கரையில் அசோசியேட் சிமெண்ட் கம்பெனியாரின் சிமெண்ட் உற் பத்தி நிறுவனம், தனியார் துறை யின் லெட்சுமி மெசின் ஒர்க்ஸ் மற்றும் செயற்கை இழை உற்பத்தி செய்யும் சிறுமுகையில் அமைந் துள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் லிட் என்ற குறிப்பிடத்தக்க நிறு வனங்கள் அமைந்துள்ளன.

விரைவில் செயல்படுத்திட...

இம்மாவட்டத்தில், புதிதாகத் தொழில் திட்டங்கள் அமைக்கும் பொருட்டு தங்களது தொழில் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதிக்குப் பதிவு செய்துள்ள புதிய தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 194 ஆகும். இந்நிறுவனங்கள் விரைவில் தங் களது தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடனும், செயல்படுத்துவதில் ஏற்படும் நடை முறைப் பிரச்சினைகளையும் தீர்க்க மாநில அளவில் உயர்மட்டக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவில் தங்களது தொழில் திட்டங்களைச் செயல் படுத்த இம்மையத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சுயமாகத் தொழில் தொடங்கிட...

2.10.1993-இல் பாரதப் பிரதம ரால் அறிவிக்கப்பட்ட இத்திட்ட மானது, எஸ்.எஸ்.எல்.சி. படித்த 18 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் உள்ள வேலையற்ற நபர்களுக்குச் சுயமாகத் தொழில் தொடங்க, பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனாத் திட்டத்தில் நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் தேசியமய மாக்கப்பட்ட வங்கி, வர்த்தக வங்கிகள் மூலமாக நிதி வசதிக்கு இம்மையத்தின் மூலம், உரிய பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தில் கடந்த 1993-94-ஆம் ஆண்டில் 736 நபர்கள் வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டு ரூ.157.03 இலட்சங்கள் 221 நபர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளன.

கூடுதல் கட்டடம் கட்ட...

தென்னகத்திலேயே கோவை மாவட்டத்தில் மோட்டார், பம்ப் மற்றும் டீசல் பம்ப் ஆகியவைகள் அதிக அளவில் உற்பத்தி செய்வதால் அதன் தரத்தை உயர்த்தி சர்வதேசத் தரத்திற்கு இணையாகவும் "பிராசஸ் கம் புராடக்ட் டெவலப்மெண்ட் சென்டர்" ஒன்று மத்திய மாநில அரசுகள் நிதியுடன் தனியார் துறையின் கூட்டு முயற்சியில் ரூ.491 இலட்சத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதற்காகக் கோவை குறிச்சித் தொழில் பேட்டைக்கு அருகில் தமிழக அரசு ரூ.29.10 இலட்சம் மதிப்புள்ள 1:32 ஏக்கர் நிலம் மற்றும் 922 சதுர மீட்டர் பரப்புள்ள கட்டடங்களை யும் கோவை மாவட்டச் சிறு தொழில்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திடம் ஒப்படைக் கப்பட்டது.

மேலும், இம்மையத்திற்குக் கூடு தல் கட்டும் பணிக்காக மாநில அரசின் பங்காக ரூ.91 இலட்சம் சிட்டார்க் மூலம் செயல்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகினறன.

முதலீட்டு மானியம்

சிறுதொழில் நிரந்தரச் சான்று பெற்ற நிறுவனங்கள் தமிழக அர சால் இம்மாவட்டத்தின் தொழிலில் பின்தங்கிய வட்டங்கள் என அறி விக்கப்பட்ட பொள்ளாச்சி, வால் பாறை, அவிநாசி, பல்லடம் ஆகிய வட்டங்களில் அமைந்திருந்தால், அச்சிறு தொழில் நிறுவனங் களுக்குத் தங்களது நிலையான முதலீட்டில் 15 சதவிகிதத் தொகை யினை மானியமாக அளித்து, இப்

காவிரி சூழ் கொங்கு

வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
கழித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு!

- பழந்தமிழ்ப் பாடல்

பின்தங்கிய வட்டங்களில் நிறுவப் படும் சிறுதொழில் நிறுவனங்களும் ஊக்கமுடன் செயல்பட இம்மையத் தின் மூலம் நடவடிக்கை எடுக்கப் படுகின்றன.

சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தங்களது நிலையான மூலதனத்தில் 20 சதவிகிதம் ரூ.15 இலட்சத்திற்கு மேற்படாமல் (தோல் தொழிலுக்கு ரூ.20 இலட்சம் வரை) கீழ்க் காணும் உற்பத்திப் பொருள்களுக்குச் சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படு கின்றது.

மின்னணுப் பொருட்கள், வாகன உதிரிப்பாகம், மருந்துப் பொருட்கள், உணவு பதனிடும் தொழில்கள், சூரிய சக்தியால் இயங் கப்பெறும் உபகரணங்கள் உற்பத்தி, ஏற்றுமதிக்கான தங்கம், வைர நகைகள் உற்பத்தி, மாசுக் கட்டுப் பாட்டு உபகரணங்கள், விளை யாட்டுப் பொருட்கள், அலுமினியம், பி.வி.சி. முதலியவற்றால் தயாரிக் கப்படும் சன்னல், கதவு கட்டடப் பொருட்கள்.

மின் மானியம்

இதனைத் தவிர, பதிவு பெற்ற சிறுதொழில் நிறுவனங்கள் தங் களின் தொழிலகத்துச் செலுத்தப் பட்ட மின்சாரக் கட்டணத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40%, 30%, 20% என்ற அடிப்படையில் மின் கட்டணத் தொகையில் மின் மானியமாகவும் அளிக்கப்படுகின்றது.

உயர் அழுத்த மின்சாரம் மற்றும் ஒசையிரி கிளாத் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்குத் தவிர, மீதம் உள்ள அனைத்துப் பதிவு செய்த சிறுதொழில் நிறுவனங்களுக் கும், தங்கள் உற்பத்திக்குத் தேவைப் படும் ஜெனரேட்டர் வாங்குவதற்கு ஜெனரேட்டர் விலையில் 15 சத விகிதம் ஜெனரேட்டர் மானியமாக வும் வழங்கப்படுகிறது.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

கோவை மாவட்டத்தில் இயங் கும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங் களில் தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். இம்மாவட் டத்தில் இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையத்தின் கீழ் இயங்கி வருகிறது.

இம்மாவட்டத்தில் 19 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இவ்வகை யான தொழிற்கூட்டுறவுச் சங்கங் களைத் தொடங்கியதன் முக்கிய நோக்கமே வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள திறன் பெற்ற கைவினை ஞர்கள் மற்றும் பயிற்சி பெற்ற பெண்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களின் பொரு

ளாதார நிலையை உயர்த்துவதே ஆகும்.

இம்மாவட்டத்தில் மோட்டார் வாகனப் பராமரிப்பு, நிலக்கரி விநியோகம், கயிறு, குடை, சிமெண்ட் பொருட்கள், சாக்குப் பைகள் தயாரித்தல், பித்தளை, செம்பு, எவர்சில்வர் பாத்திரங்கள் உற்பத்தி செய்தல், பால் கேன்கள், பாலிதீன் பைகள் தயாரித்தல் ஆகிய தொழில்களில் திறன் பெற்ற கைவினைஞர்களைக் கொண்டு 13 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தவிர, கோவை மாவட்டத் தைச் சார்ந்த ஊரக ஆயுதப்படை, சிறப்புப் படையைச் சார்ந்த காவலர்களின் குடும்பங்களுக் கெனத் தனியே மூன்று தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. மேலும், இம்மாவட்டத்தில் பரந்து விரிவு பட்ட தொழில்துறை வாய்ப்பு களைக் கருத்தில் கொண்டு, சிறு தொழில் முனைவோருக்காகச் சிறிய தொழில்களை உருவாக்கும் நோக்கத்துடன் மூன்று தொழிற் கூட்டுறவுப் பேட்டைகள் பொள்ளாச்சி, கருமத்தம்பட்டி, சோமையம்பாளை யம் ஆகிய இடங்களில் தொடங்கப் பட்டு இயங்கி வருகின்றன.

மேற்கண்ட 19 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த உறுப்பினர்கள் 3,204 ஆகும். இந்த தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த பங்குத் தொகை ரூ.30.36 இலட்சம் ஆகும். மேற்கண்ட தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழக அரசுப் பங்குத் தொகைக் கடனாகவும், பங்கு மூலதனமாகவும் நிதி உதவி அளித்துள்ளது. இச்சங் கங்களின் மூலம் 366 உறுப்பினர்கள் நேரடியாகவும், 2,828 உறுப் பினர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் பெற்று வருகின்றனர்.

பல்வேறுச் சங்கங்கள் தங் களுடைய பொருட்களை உற்பத்தி செய்து அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், கூட்டுறவுச் சங் கங்கள் மற்றும் வெளியாட்கள் ஆகியோருக்கு விற்பனை செய்து வருகின்றன. இந்தச் சங்கங்களானது நடப்பு 1994-95-ஆம் ஆண்டில் பிப்ரவரி 1995 முடிய 176.78 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. இதில் குறிப்பிடத் தக்க அம்சம் என்னவெனில், நலிந்த பிரிவினர்களுக்கெனத் தனியாகத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும், பெண்களுக்கெனத் தனியாக 5 தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருவது தான்.

மேற்கண்ட கூட்டுறவுச் சங் கங்கள், தமிழக அரசு உதவியுடன் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப் பளித்து, அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தி, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருவதை இங்கே குறிப்பிட வேண்டும்.

நல்வாழ்த்துக்கள்

அம்மாருண் பவுண்ட்ரீஸ்,

80/6 A, இரத்தின கிரி ரோடு,

விளாங்குறிச்சி அஞ்சல்,

கோயமுத்தூர்–641 035

போன்: 866611/2/3 தந்தி: CAST IRON

தயாரிப்பாளர்: தரமான வார்ப்பு இரும்பு கேஸ்டிங்குகள்

தென்னை நார்த் தொழிற்சாலை
(காயிர்–ஆன்)

கோவை மாவட்டமெங்கும் பெருந்தொழில்கள் மட்டும்தான் என்பதில்லை. சிறுதொழில்களும் அப்படியும் இல்லாமல் இப்படியும் இல்லாமல் உள்ள தொழில்களும் பரவலாக வளர்ந்து வருவதைக் காணலாம். பொள்ளாச்சியில் இந்த மூன்றாவது ரகத் தொழில் வளர்ச்சியில் முதன்மை பெற்றிருப்பது காயிர் ஆர் COIR-ON தொழிற்சாலை. மென்மையாக்கப்பட்ட தேங்காய் நாரைப் பக்குவமாக்கி மெத்து மெத்தென்று உருவாக்கப்படும் மெத்தைகள், தலையணைகள், சோபா இருக்கைகள் போன்றவை இங்கே தயாரிக்கப்படுகின்றன.

1986-இல் நிறுவப்பட்ட இத்தொழிற்சாலையில் சுமார் முப்பது பேர் பணிபுரிகின்றனர் அவர்களில் அறுவர் பெண்கள்.



கோவை ஏடுகள்

கோயம்புத்தூரிலிருந்து சில பத்திரிகைகளும், பல நாளேடு களும் வெளிவருகின்றன. அவற் றுள் குறிப்பிடத்தக்கவை:

கலைக்கதிர், கோவைச் செய்தி, இந்து (ஆங்கிலம்), இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்), தினமணி, தினத்தந்தி, மக்கள் குரல், தினபூமி, அதிர்ஷ்டம், பிற்பகல், மாலை முரசு, மாலைமலர், ஆப்டர் நூன் (ஆங்கிலம்) தினமலர், தினகரன்.

With best compliments from

★ **Theatre - Ragam 70mm A.C.**

★ **Theatre - Thanam 35mm A.C.**

★ **Theatre - Pallavi 35mm A.c.**

★ **Theatre - Anupallavi 35mm A.C.**

K G ARTS CENTRE (P) LTD

(Props. of : K.G. Theatre Complex
Bungalow Road
Coimbatore - 641 018
Phone : 211213, 211214, 211215

கோவை மாவட்டம்

✦ கொங்குநாடு, தமிழ்கூறும் நல்லுலகின் தொன்மைப் பெருமை கொண்ட ஒரு பகுதியாக சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போன்ற தனித்ததொரு நாடாக மிகமிகப் பண்டைக் காலத்திலிருந்தே இருந்தது என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவும் ஆதாரங்களைத் தந்துள்ளன.

தமிழ்ச் சங்கங்களை நாம் மிகவும் பண்டைக் காலத்திலிருந்தே மொழி வளத்துக்காக இயங்கிடும் பெருமன்றங்களாகவே கருதுகிறோம். இச்சங்கங்களின் காலத்திற்கு முன்னரே கொங்குநாடு தனித்தியங்கிய தமிழகப் பகுதி என்பதை எட்டுத்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை மற்றும் தேவார நூல்கள், சிலப்பதிகாரம், திருப்புகழ் போன்றனவும், கொங்குமண்டலச் சங்கம், சோழன் பூர்வ பட்டயம், கொங்குதேச ராசாக்கள் போன்ற பண்டைய ஏட்டுச் சுவடிகளும், பேரூர் தல புராணம் போன்ற அண்மைக் காலக் காவியங்களும் உறுதிப்படுத்துகின்றன.

✦ கொங்குநாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மேலை நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. இதை நிரூபித்திட பண்டைய அயல்நாட்டு நாணயங்கள் தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளைக் காட்டிலும் அதிகமாகக் கொங்கு நாட்டில்தான் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

✦ கொங்கு நாட்டுப் பழங்குடிகள், கொங்கர், கோசர், வேளிர், ஓவியர், ஆவியர், இருளர், குறும்பர், கங்கர், காடர், வேடர் எனப்படுவர்.

✦ கொங்கு நாட்டின் நிலவியல் நிலைப்படி அப்பகுதி சுற்றிலும் மலைத் தொடர்கள் கொண்ட ஒரு சமநிலைப் பீடபூமியாகும். வடக்கே தலைமலை, மேற்கே வெள்ளிமலை, தெற்கே வராகமலை, கிழக்கே கொல்லி மலைத் தொடர்களை எல்லையாகக் கொண்டதே கொங்கு என்பதை ஒரு பழைய தமிழ்ப்பாடல் நினைவுப்படுத்துகிறது.

✦ சங்க காலப் பெருமை பெற்ற கொங்கின் குறுநில மன்னர்களான - பேகன், ஆய், அண்டிரன், நன்னன், பழையன், விச்சிக்கோன் ஆகியோர் மூவேந்தர்களுக்கீடான பெருமை பெற்றோர்.

✦ அக்காலக் கொங்கு நாட்டின் உட்பகுதிகள் 24 நாடுகள் ஆகும். அதாவது ஆரை நாடு, நெடுவெங்க நாடு, வாரக்க நாடு, பொங்கலூர் நாடு, காங்கய நாடு, குறும்ப நாடு, காஞ்சிக்கோயில் நாடு, வடகரை நாடு, பூந்துரை நாடு, அரைய நாடு, தென்கரை நாடு, மண நாடு, வெங்கால நாடு, வையாபுரி நாடு, நல்லுருக்க நாடு, காவடிக்கா நாடு, ஆனைமலை நாடு, பூவாணி நாடு, வாழவந்தி நாடு, ராசிபுர நாடு ஆகிய இருபத்து நான்கே அவை.

ஆதாரம்:
'கொங்குநாட்டு வரலாறு'
மா. லட்சுமி நாராயணன்
எழுதியது.



மூன்று ஷிப்ட் என்கிற முறையில் இங்கே வேலை நடக்கிறது.

பொள்ளாச்சியிலேயே தென்னை நார் அதிகம் கிடைப்பினும், கேரளத்திலிருந்தும் தருவிக்கப்படுகிறது. துணி உறைகள் பம்பாயிலிருந்தும், இரசாயனப் பொருட்கள் சென்னையிலிருந்தும், மதுரை, கொச்சி போன்ற இடங்களிலிருந்தும் வரவழைக்கப்படுகின்றன.

ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலைக்கு, அரசு மூலம் ஐ.ஆர்.டி.,பி கடனும் அளிக்கப்பட்டுள்ளது. எல்லோருமே ஊக்கத்தோடு பணிபுரிகிறார்கள்.

பார்க் ஸ்கூல் (RESIDENTIAL)

(மெட்ரிக்குலேஷன் & ஹையர் செகண்டரி)

சின்னக்கரை, திருப்பூர் – 641 605. கோவை மாவட்டம். போன் : 710223

INTERNATIONAL EDUCATION AT INDIAN RATES

தமிழகக்கல்வித்துறையின் முன்னோடிகள்

ஆங்கிலம் மீடியம், தமிழ், இந்தி முதல் மொழிகள்

அனுமதி : நர்சரி முதல் 11–ம் வகுப்பு வரை மாணவ, மாணவியர்



- தென்றல் தவழும் இயற்கையுடன் இணைந்த அழகிய கட்டிடங்கள்.
- அன்பான பராமரிப்பு, அறுசுவை உணவுடன் மிகச் சிறந்த தங்கும் விடுதி.
- நீச்சல் குளம், குதிரையேற்றம், தடகளப்பயிற்சி இன்னும் . . . இன்னும் . . . விளையாட்டுகள்.
- பொதுத் தேர்வுகளில் 100% வெற்றி.
- பள்ளிகள், தொழில்நுட்ப பயிலகம், கல்லூரிகள் என கல்வித்துறையில் கால் நூற்றாண்டுகள் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற கல்வியாளர்களால் நடத்தப் பெறுகிறது.
- விண்ணப்பம், விளக்கவுரை பெற ரூ 100/– M.O. செய்யவும்.
- அட்மிஷன் துவக்கம் 1–3–1995 முதல்.

Dr. P.V. ரவி, M.A., M.Phil., B.Sc., B.Ed., Ph.D., நிறுவனர்

Mrs. K. பிரேமாரவி, B.A., B.Ed., C.P.Ed., தாளாளர்



மண்வளம்

கோவை மாவட்டத்தில், பலவகைப் பயிர்களும் விளைகிற அளவுக்கான மண்வளம் உள்ளது. ஆங்காங்கே சின்னஞ் சிறிய அல்லது பெரிய பெரிய மலைகள் தலை தூக்கியிருந்த போதிலும் நெல், கரும்பு, சோளம், பருத்தி, எள், சூரிய காந்திப் பூ முல்லை, திராட்சை எனப் பலவகைப் பயிர்களும் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவலாக விளைந்திருப்பதைக் காண முடிகிறது.

இரண்டடி உயரம் மட்டுமே உள்ள கறிவேப்பிலைச் செடிகள், வயல்காடுகளில் சாரிசாரியாகப் பச்சைப் பசேலென அணிவகுத்து நிற்கின்றன. இது ஒரு புதுவகைப் பயிராக நமக் குப்பட்டது. 'கம்'மென்று மணம் வீசும் இந்தக் கறிவேப்பிலையின் வயது மூன்றாண்டுகளாம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இதன் தழையை வெட்டி வியாபாரத்திற்கு அனுப்புவார்களாம்.

இவ்வகைக் கறிவேப்பிலை, ஒரு ஏக்கருக்குச் சராசரி 3 டன் வரை விளையுமாம். கிலோ மூன்று ரூபாய்க்கும் விற்கும் ஆறு ரூபாய்க்கும் விற்கும்" என்றார் ரங்கசாமி என்கிற ஒரு விவசாயி. "சில நேரங்களில் தேவைக்கு மேலேயும் தழைக்கும் அப்படிப்பட்ட நேரங்களில் இதை வெட்டிக் கீழே போடுவதைவிட வேறு வழியில்லை!" என்றும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

திம்மம்பாளையம் புதூர் பகுதியில் அதிகம் முல்லை விளைகிறது ஆகவே, அப்பகுதியில் மணக்கும் செண்ட் பாக்டரி நிறுவ, பிற மாநிலத்தார் சிலர் முயன்று வருகிறார்கள்.

3.51 ஏக்கர் பரப்பளவில், 'டிக்' நிதியுதவியோடு 'சிக்மா எஸ்ஸென்ஸ் அண்ட் ஆரோமேடிக்ஸ் பி.லிட்.' என்கிற நிறுவனத்தை அமைத்து மாதிரி 'செண்ட்' வரை தயாரித்து விட்ட ஒருவர் "அரசு அனுமதிக்காகக் காத்திருக்கிறோம்" என்றார், நம்மிடம்.

With Best compliments from

RANGAMMA STEELS AND MALLEABLES

8-D, Post Office Road
Krishnasamy Nagar,
COIMBATORE 641 045.

Manufacturers Of Quality Autoparts.

With Best Compliments From

M/s.Kitply Industries Ltd.

150, Sydenhams Road
Phone : 586599, 585153
Fax : 91-44-588708 Cable-Kitply
Telex : 041-6843 KITIM

'கன்னித் தமிழ்ச் சாலையோரம்' பாடலால் நம் மனதையெல்லாம் கவர்ந்திழுத்த உடுமலை நாராயணகவி பிறந்த அந்த வட்டத்தில் நம் பார்வை படர்ந்தது. தேவையான விவரங்களை நாம் பெறப் பெரிதும் உதவினார் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு வி. தட்சணாமூர்த்தி அவர்கள். பேச்சை நிறுத்தி அவர் மூச்சு விட்டுக்கொள்ளும் போது, நூலெடுத்துக் கொடுத்தார் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு என்.எம். பிரசாத் அவர்கள். இருவரும் தெரிவித்த செய்திகளின் சுருக்கமே இந்தக் கட்டுரை.

வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இக்குடியிருப்பிற்காக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வழங்கிப் பாராட்டியிருக்கிறார்.

அப்பகுதியில் **96** தொகுப்பு வீடுகள் சென்ற ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் இந்த வட்டாரத்தில் மிகச் சிறந்த விடுதலைப் போராட்ட வீரராகத் திகழ்ந்த சர்தார் வேலப்பநாயக்கருக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலேயே சிலையெழுப்பிச் சிறப்பித்திருக்கிறார்கள்.

உள்ளங்கவரும் உடுமலைப்பேட்டை



புகழ்பெற்ற ஈச்சநாரி விநாயகர் கோயிலொன்று - **122** சதுர மைல் பரப்புள்ள இந்த வட்டாரத்திற்கு அனைவரையும் அருள் பெற அழைக்கிறது. கோவை-பாலக்காடு முக்கியச் சாலையில் அது அமைந்திருக்கிறது.

அறிவொளி இயக்கம்

மாவட்டத்திலேயே அறிவொளி இயக்கத்தைப் பொறுத்த வரையில் முழு நிறைவு பெற்றிருக்கிறது, பள்ளபாளையம் இந்திரா நகர். அதுமட்டுமல்ல, இந்தக் குடியிருப்பே மிகச் சிறந்த ஆதிதிராவிடர் குடியிருப்புக்கான முதல் பரிசும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பெற்றிருக்கிறது.

பரிசு என்ன தெரியுமா? 20.8.1993-இல் கோவைக்கு

சுண்ணாம்புக் காளவாய்ப் பணி

சுற்றுலாத் தலம்

1991 கணக்கெடுப்பின்படி, உடுமலைப்பேட்டை வட்டத்தின் மக்கட்தொகை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 335 ஆகும். இந்த வட்டத்தில் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விரிவாகி வருகிறது, 26 கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருமூர்த்தி மலையின் மடிப் பகுதி. நாகம் படமெடுத்து நிழல் அளிக்கும் அமைப்பில் குளம், உள்ளம் கவரும் உல்லாசப் பூங்கா, அதற்குச் சற்றுத் தள்ளி, பார்க்கவரும் சுற்றுலாப் பயணிகளின் மனதைச் சுண்டியிழுக்கும் படகுத் துறை என்றெல்லாம் அமர்க்களப் படுத்தியிருக்கிறார்கள். படகில் எத்தனை ரகம் உண்டோ அத்தனையும் அங்குள்ளன.

நாலரை இலட்சம் ரூபாய் பொது நிதி மூலமும், ஐந்து இலட்சம் ரூபாய் சிறுசேமிப்பு ஊக்குவிப்பு நிதி மூலமும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆதரவோடு இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கத்திற்குப் பரம்பிக் குளம் (ஆளியாறு) தண்ணீர் வரத்து, காண்டூல் கால்வாய் வழியே இருக்கிறது.

அரசின் ஆக்கப் பணிகள்

மடத்துக்குளம், கீழ்மங்கலம், உடுமலைப்பேட்டை வட்டாரத்து மண்ணில் நெல் மட்டுமல்ல கரும்பு, மக்காச்சோளம், கொண்டைக் கடலை, பருத்தி ஆகியவைகளும் வளமுற விளைகின்றன.

இப்பகுதியில் நூல் மில் மட்டுமே 56 இயங்கி வருகிறது.

"இந்த மூன்றாண்டுகளில் மட்டும் முப்பது கிலோ மீட்டர் நீளத்திற்குக் கப்பிரோடு போட்டிருக்கிறோம். பத்துக் கிலோ மீட்டர் தூரத்திற்கு தார் ரோடு போட்டிருக்கிறோம். 72 இலட்சம் ரூபாய் பொது நிதியிலிருந்து, குடிநீரைப் பொறுத்த வரை இப்பகுதியைத் தட்டுப்பாடில்லாத தன்னிறைவுப் பெற்ற பகுதியாக்கும் வகையில் 27 கம்பிரஷர்கள் அமைத்திருக்கிறோம். ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாயில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டி முடித்திருக்கிறோம். அறிவொளி இயக்கத்தைப் பொறுத்து அறுபது சதவிகிதம் பேருக்குக் கல்விக் கண் திறந்தாயிற்று. இரண்டாயிரம் ஆதிதிராவிடர்களை எழுதப் படிக்கச் செய்துவிட்டோம். மற்றவர்களைத் தான் இந்த வகையில் லேசில் எங்களால் இழுக்க முடியவில்லை" என்றெல்லாம் வழிநெடுகச் சொல்லிக்கொண்டே வந்தார் வட்டார வளர்ச்சி அலுவலர்.

போகிற வழியில், உடுமலைப் பேட்டைக்கு வரும் குடிநீரைச் சுத்திகரிக்கும் நிலையம் சுறுசுறுப்பாக இயங்குவதை நம்மால் காணமுடிந்தது.

அமணலிங்கேசுவரர்

திருமூர்த்தி மலையடிவாரத்தில் உள்ள அருள்மிகு அமணலிங்கேசுவரர் கோயில், புராணப் புகழ் மிக்கதாகும். ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் பஞ்சலிங்கம் உள்ள அக் கோயிலைச் சில தமிழ்த் திரைப் படங்களில் பார்த்த நினைவு நமக்கு வந்தது.

அத்திரி முனிவர், அனுசூயா தேவியார், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரைக் கதாபாத்திரங்களாக்கி கர்ண பரம்பரைக் கதையொன்றும் நமக்குச் சொல்லப்பட்டது. "இந்தக் கோயிலில் துலுக்கஞ் செவ்வந்தி, கனகாம்பரம் பூக்கள் - மாலைகள் ஏற்கப்படமாட்டாது" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கே படர்ந்துள்ள பச்சைப் பசேலென்ற காட்டுப் பகுதியில் யானைகள், மான்கள், வரையாடுகள், முயல்கள் எல்லாம் உண்டாம்! இந்திரா காந்தி வன உயிரினக் காப்பகம் என்ற இப் பகுதி, தமிழகத்திலேயே மிகப் பெரியதென அங்குள்ள விளம்பரப் பலகை தெரிவிக்கிறது.

கீற்றுமுடைதல்

தளி நகரியத்தைச் சேர்ந்த திருமூர்த்தி நகர் பங்களாமேடு பகுதியில் மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (டோக்ரா) கீழ் கீற்றுமுடையும் பணி நடந்து வருகிறது. பத்துப் பெண்கள் ஓய்வில்லாமல் வேலை பார்க்கிறார்கள்.

"நூறு தென்னமட்டை அறுவது ரூபாய்க்கு வாங்கறமுங்க. நாள்பூரா அதை முடைஞ்சம்னா, 25 கீத்து முப்பத்தி ரெண்டரை ரூவா, நூறு கீத்து நூத்தி இருவது ரூவான்னுவிப்பம். அப்பதான்

ஊரும் பேரும்

'கோவன்' என்ற இருளர் தலைவனால் உண்டான ஊராதலால் 'கோவன்புத்தூர்' என்று பெயர் ஏற்பட்டதாகும்.

-'கொங்குநாட்டு வரலாறு'
சாந்தலிங்க அடிகளார் கல்லூரி வெளியீடு.

பதப்படுத்தப்பட்ட தென்னை நார்

ஸ்தாபிதம் 1958 போன் 296

காரமடை கூட்டுறவு விவசாய வங்கி லிமிடெட் No.K.1642
காரமடை - 641 104, கோவை மாவட்டம்

நமது வங்கி கீழ்க்கண்ட அரிய சேவைகளைச் செய்து வருகிறது.

நகைக்கடன் பவுனுக்கு ரூ.2400. அதிகபட்சம் ரூ.40,000

டெபாசிட்

இதர வணிக வங்கிகளைவிட 1.5 சதவிகித கூடுதல் வட்டி. டெபாசிட்களுக்குத் தமிழக அரசின் உத்தரவாதம்.

மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டு வட்டி. இல்லத்தரசிகளுக்கு ஏற்ற ரெகரிங் டெபாசிட். வருமான வரி பிடித்தம் இல்லை.

பயிர்க்கடன், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் நியாய விலையில் வழங்கப்படுகிறது. கனிவான எங்கள் சேவை இனிமையான எங்கள் அணுகுமுறை, உங்களுக்குச் சேவை செய்ய எங்களுக்கு வாய்ப்பு அளிக்கவும்!

ஜே.வி. சாம் தருமராஜ் M.A.,DBA
தனி அலுவலர் மற்றும் பணியாளர்கள்

வண்டி வாடகை, ஆள்கூலியெல்லாம் கட்டுப்படியாவும், வியாவாரம் நல்லாருக்கு, அதால தானுங்க, அரசாங்கம் குடுத்த ஆறாயிரம் ரூவா கடனெ காலா காலத்துல பைசல் பண்ணினம்" என்றார் அவ்வமைப்பின் செயலாளராக உள்ள திருமதி மு. ஜோதியம்மாள்.

சுண்ணாம்புக் காளவாய்

அதேபோல் பெண்கள் மூலம் ஆலாம்பாளையத்தில் செயல்பட்டுவரும் சுண்ணாம்புக் காளவாய்களைப் போய்ப் பார்த்தோம்.

வெள்ளைவெளேர் என்ற புகை மண்டலம் விண்ணுக்கு ஏறிக் கொண்டிருந்தது. அவ்வமைப்பின் செயலாளரான திருமதி தத்தம்பாளிடம் பேசினோம்.

"இந்த வேலை கஷ்டமாயில்லிங்களா?"

"கஷ்டத்தைப் பார்த்தா வயிறு காஞ்சுப்பூடும்களே!"

"மழைக்காலத்துல என்ன செய்யறீங்க?"

"அபபத்தானுங்க யாவாரம் இல்லாமெ கஷ்டப்படுவம்!"

"மத்த காலத்துல நீங்க சுடுற சுண்ணாம்பெல்லாம்"...

"நல்லாவே விக்குமுங்க. ஒரு வள்ளத்துக்கு (சுமார் 4 லிட்டர்) அஞ்சு ரூவாய்ங்க. ஒரு கூடை (4 வள்ளம்) இருவது ரூவாய்ங்க. பாக்கிசாக்கியில்லாமெ வாங்குன கடனெ பாங்குல கட்டீர்றம். எங்கள்ள இன்னும் கொஞ்சம் பேருக்கும் அரசாங்கம் கடன் குடுத்து உதவினா நல்லாருக்குமுங்க, கலெக்டரையாகிட்ட சொல்லுங்களேன்".

"கட்டாயம் சொல்றம்" என்றபடி நாம் விடை பெற்றோம்.

மசாலா பொடி

பள்ளபாளையம் பெண்கள் அதேபோல மசாலா பொடி, ஊறுகாய் செய்து 'பாக்கெட்' பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

"இவங்கள்ளலாம் அறிவொளி திட்டத்தின் மூலம் படித்தவர்கள்" என்றார் வட்டார வளர்ச்சி அதிகாரி.

ஒரு நாளைக்கு இவர்கள் நூற்றுக்கு மேலான மசாலா, ஊறுகாய் பாக்கெட்டுகள் தயாரிக்கிறார்களாம். 100 கிராம் பாக்கெட் 5 ரூபாய், 50 கிராம் இரண்டரை ரூபாய்.

"விற்பது எப்படி ?"

"பள்ளிக் கூடங்கள்ல... சத்துணவு மையங்கள்லயே வாங்கிக்கிறாங்க. வெளியாரும் வாங்கிப் போறது உண்டு" என்றார் இவ்வமைப்பின் செயலாளர் - ஊர் நல அலுவலர் பி. தனம்மாள்.

"இங்க வேலை பார்க்கிறதுக்குத் தனிக் கட்டடம் எதுவும் இதுவரை இல்லை. அரசாங்கம் நாற்பதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்காங்க, கூடிய சீக்கிரமே தனியா கட்டிருவம்" என்றார் வட்டார வளர்ச்சி அலுவலர்.

இப்போது அவர்கள் அவற்றைத் தயாரிக்கும் இடம் சமூக நலக்கூடமாம்.

கொங்கு

சங்க இலக்கியத்தில்

கொங்கனென விள்ளுங் கோதைநனி யாண்டதொரு
கொங்குவள நாடு.

- *கச்சியப்ப முனிவரின் பேரூர் புராணம்*

.... இவளோ
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை..............................

- *சிலப்பதிகாரம்*

கொங்கரொடு குடபுலத்து மன்னர்

- *பெரியபுராணம்*

ஆங்கெழு கொங்கர் நாடகப் படுத்த வேல்கெழு தானை
வெருவரு தோன்றல்

- *பதிற்றுப்பத்து*

கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே

- *புறநானூறு*

கொங்கர் ஒட்டி நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்

- *அகநானூறு.*

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

கிசான் விகாஸ் பத்திரம்
செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்



சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

மேலும் விவரங்களுக்கு அணுகவும் :

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,
'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

DIRP/DIS/95

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

With best compliments from

■ Theatre Nataraj

■ Diamond Theatre

■ Gajalakshmi Theatre

■ Universal Theatre

Tiruppur

"ஈடு இணையற்ற கலைச்செல்வம்!"

செவாலியே சிவாஜிக்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி புகழாரம்

உலகில் கலைச் சேவையில் சிறந்த சாதனை புரிந்தவர்களுக்காக பிரான்சு நாடு வழங்கும் உயர்ந்த விருதான செவாலியே விருது நடிகர் திலகம் திரு.சிவாஜிகணேசனுக்கு வழங்கப்பட்டது. இவ்விழாவை, திரைப்பட உலகத்தினர் மிகப் பிரம்மாண்டமான முறையில் 22.4.95 அன்று, சென்னை - சேப்பாக்கத்திலுள்ள எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் சிறப்பாக நடத்தினர். இவ்விழாவின், நிகழ்ச்சிகளை நடிகையும், இயக்குனருமான திருமதி சுகாசினி தொகுத்து வழங்கினார். முதலில், இயக்குநர் திரு.கே.பாலசந்தர் வரவேற்றுப் பேசினார்.

பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் பொன்னாடை அணிவிக்கப்பட்டது. அடுத்து, பிரான்சு நாட்டுத் தூதர் பிலிப் பெடிட் பேசுகையில், இவ்விருது கொடுப்பதில் பிரான்சு நாடு பெருமை அடைகிறது என்று கூறினார். அதன் பிறகு பிரான்சு தூதர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு செவாலியே விருதுக்கான பதக்கத்தை அணிவித்தார். அப்போது பொதுமக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணைத் தொட்டது. இச்சமயத்தில் இசையமைப்பாளர் திரு.எம்.எஸ். விஸ்வநாதன் சிவாஜியைப் பற்றிப் புகழ்ந்து பாடி அனைவரையும் பரவசமடையச் செய்தார்.

'பிலிம் நியூஸ்' ஆனந்தன் தயாரித்த சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, முதல் பிரதியைப் பழம்பெரும் இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு) பெற்றுக் கொண்டார்.

விழாவில் வாழ்த்துரையாக இந்தி நடிகர் திரு.தேவ் ஆனந்த், தெலுங்கு நடிகர்கள் திரு. நாகேஸ்வரராவ், திரு. சிரஞ்சீவி, மலையாள நடிகர்கள் திரு.மது, திரு.மம்முட்டி, நடிகர்கள் திருவாளர்கள் - கமல்ஹாசன், விஜயகாந்த், கார்த்திக், இயக்குநர்கள் திருவாளர்கள் பாரதிராஜா, பி.வாசு, ஆர்.வி. உதயகுமார், இளையராஜா, பிரான்சு தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த பாரிஸ் ஜமால், திருமதி.சரோஜா தேவி, திருமதி

மனோரமா, செல்வி ஸ்ரீதேவி, போன்ற முன்னணி நடிகர், நடிகைகள் வாழ்த்துரைத்தனர். பின்பு, திரை உலகத்தினர் வெள்ளியால் செய்த வீர சிவாஜியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவாஜி கணேசனுக்கு வழங்கினார்கள்.

பின்பு, செவாலியே நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பாராட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில், திரைப்பட உலகத்தினரின் கோரிக்கையை ஏற்று, தியாகராய நகரில் உள்ள போக் சாலை பெயர் மாற்றம் செய்து செவாலியே சிவாஜி கணேசன் சாலை என்று அழைக்கப்படும். இதற்கான ஆணைகள் வெகுவிரைவில் வழங்கப்படும் என்றும், செவாலியே சிவாஜி கணேசன் பெயரில் மாநிலத் திரைப்பட விருது ஒன்று நிறுவப்படும் என்றும் அறிவித்தவுடன் திரை உலகத்தினரும், பொதுமக்களும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தனர். அடுத்து, அனைவரின் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்து நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உரையாற்றினார். நன்றி உரையாக நடிகர் திரு.ரஜினி காந்த் பேசினார்.

முடிவில், பிரான்சு நாட்டின் தேசிய கீதமும், இந்தியத் தேசிய கீதமும் ஒலிக்கப்பட்டு விழா இனிதே முடிந்தது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், திரை உலகத்தினரும், தயாரிப்பாளர்களுமாகப் பலரும் கலந்து கொண்டனர். விழாவின் தொடக்கத்தில் இசையமைப்பாளர் கங்கை அமரன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த வண்ணமிகு விழா ஏற்பாடுகளை, இந்தியத் திரைப்பட சம்மேளனத் தலைவர் திரு. ஏவி.எம். சரவணன், தமிழ்ப்பட அதிபர்கள் சங்கத் தலைவர் கே.ஆர்.ஜி., ஆகியோர் செய்து இருந்தனர்.

ஆசியாக் கண்டத்திலேயே இதுவரை யாரும் பெற்றிராத இவ்விருது, தமிழ்த் திரை உலகின் மூத்த கலைமகனுக்குக் கிடைத்ததில், நாமும் பெருமை கொள்வோம்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில், 22.4.95 அன்று, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சொவாலியே விருது வழங்கும் விழாவுக்குத் தலைமை வகித்து தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசியதாவது:

"அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கலைத் துறையின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட, கலைத்தாயின் மூத்த மகனுக்கு, கலைக்குடும்பம் ஒன்று சேர்ந்து எடுக்கின்ற பாராட்டு விழாவைத் தலைமையேற்று நடத்திவைப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். என்னை வளர்த்த தாய்வீடான, கலைக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் அனைவரையும் ஒருங்கே இங்கே காண்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்த் திரைப்பட உலகிற்கு மட்டுமின்றி, இந்தியத் திரைப்பட உலகிற்கே, இன்று மகிழ்ச்சிகரமான ஒரு பொன்னாள். தமிழ்த் தாயின் தவப்புதல்வன், டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு, பிரான்ஸ் நாடு வழங்கியுள்ள 'ஷெவாலியே' விருது, தமிழ்த் திரை உலகிற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கே பெருமை சேர்த்துள்ளது.

மாபெரும் அங்கீகாரம்

இந்த விருது, இந்தியத் திரைப்படத் துறைக்குக் கிடைக்கப் பெற்ற, ஒரு மாபெரும் அங்கீகாரம் என்றால், அது மிகையாகாது.

இந்தப் பாராட்டு விழாக் குழுவின் தலைவர் ஏவி.எம். சரவணன் அவர்கள், இரண்டு மாதங்களுக்கு முன்பு, இந்த விழாவிற்கு நான் தலைமையேற்க வேண்டும் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார். அவரது அழைப்பினை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதோடு, நடிகர் திலகத்தின் பெயருக்கும், புகழுக்கும் பொருத்தமான வகையில் இந்த விழாவினை மிகச் சிறப்பாக நடத்தவேண்டுமென்ற எனது பேரவாவினையும் தெரிவித்தேன்.

இந்த விழா எத்தகையதொரு எழுச்சியோடு கோலாகலமாக நடைபெற வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அந்த எண்ணம் ஈடேறும் வண்ணம், இந்த விழா இன்று, வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது.

மேலை நாடுகளில், குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில், கலைகளிலும், கலாச்சாரத்திலும், தலை சிறந்து விளங்கும் பிரான்ஸ் நாடு, நடிப்பில் இமயமாக உயர்ந்து விளங்கும் நடிகர் திலகம் அவர்களுக்கு இந்த விருதினை வழங்கி, இந்தியக் கலை உலகத்தைக் கௌரவப்படுத்தியுள்ளது.

ஒளிவீசும் வைரக்கல்

டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள், நீண்ட நெடிய கலை உலகப் பயணத்தில் எத்தனையோ விருதுகளையும், பட்டங்களையும் பெற்றிருந்தாலும், இன்று அவர் பெற்றுள்ள 'ஷெவாலியே' விருது. அவரது சாதனை மணிமகுடத்தில் பதிக்கப்பட்ட மிகப் பிரகாசமான வைரக்கல் என்பதில் ஐயமில்லை.



'செவாலியே விருது'

நடிப்புக் கலையின் அத்தனைப் பரிமாணங்களையும், தனது ஒப்புயர்வற்ற நடிப்பாற்றலால், வெள்ளித்திரையில் கொண்டு வந்தவர், வெற்றி நாயகன் டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள். அவர் ஏற்று நடிக்காத பாத்திரங்களே இல்லை. எல்லாப் பாத்திரங்களிலும் அவர் நடித்துவிட்டார் என்றே சொல்லலாம்.

அவர் நடிப்புத் துறையின் அட்சயப் பாத்திரம், கலை உலகின் பீஷ்மர்.

வரலாற்று நாயகர்கள் ஆனாலும், சமகாலத்துக் கதாபாத்திரங்கள் ஆனாலும், அத்தகைய உயிர்த் துடிப்புள்ள கதாபாத்திரங்களாகவே, மாறி விடுகின்ற திறமை படைத்தவர் ஒருவர் உண்டென்றால், அது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களாகத்தான் இருக்க முடியும்.

கர்ணன், வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜசோழன், கப்பலோட்டிய தமிழன், போன்ற புராண, சரித்திர காலத்துப் பாத்திரங்களை, நாம் கற்பனை செய்து பார்க்கும்போது, நம் மனக் கண் முன் தோன்றுவது அப்பாத்திரங்களில் தோன்றி நடித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் உருவம்தான்.

உலக அளவில் புகழ் பெற்ற நடிகர்களான மார்லன் பிராண்டோ, ரிச்சர்டு பர்டன், லாரன்ஸ் ஆலிவர் போன்றவர்களின்

ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்

நெல்வயல்களில் நெற்பயிர் மட்டும் பயிர் செய்வதோடு, நின்றுவிடாமல் பலவகையான பயறு வகைகளையும், சாகுபடி செய்து நல்ல மகசூல் பெறலாம். இதன்கூடவே வெவ்வேறான உணவுப் பழக்கங்களைக் கொண்ட மீன்வகைகளையும் நீர்க்குட்டைகள் அமைத்து வளர்க்கலாம். குட்டையின் மேல் கோழிக் கூடுகள் அமைத்துக் கோழிகளும் வளர்க்க முடியும். இந்த ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் கோழியும், மீனும் வளர்ப்பதால் நல்ல வருமானமும் கிடைக்கும். அதாவது ஆண்டுக்கு ரூ.5000 வரை வருவாய் பெறலாம், என்று கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சோதனைமுறையில் செய்து காட்டியுள்ளது.

பத்து சென்ட் பரப்புள்ள நீர்க்குட்டையில் 400 மீன்குஞ்சுகளை இட்டு, குட்டையின் மேல்பரப்பில் 20 அடுக்குகள் கொண்ட கோழிப்பண்ணை அமைக்கப்பட்டது. பல இனக்கோழிகளும் இதில் வளர்க்கப்பட்டன.

மீனினத்தைப் பொருத்த வரை, தோப்பாக் கெண்டை, வெள்ளிக்கெண்டை மற்றும் புல் லுண்ணும் கெண்டை போன்றவை நீரின் மேல்மட்டத்திலும், மிரிகால் கெண்டை, சாதாக் கெண்டை, கல்பாக் கெண்டை மற்றும் காவேரிக் கெண்டை போன்றவை நீரின் அடிமட்டத்திலும், ரோகுக்கெண்டை போன்றவை நீரின் இடைமட்டத்திலும் வாழக்கூடியவை. எனவே இந்த வகைக் கெண்டைகளை வளர்த்தால் பலன் மிகுதியாகக் கிடைக்கும்.

சராசரியாகத் தினமும் 2 கிலோ அளவுக்குக் கிடைக்கும் கோழிகளின் எச்சம், மீன்களுக்கு நேரடியாக உணவாகவும், நீர்க் குட்டையின் அடியில் படிந்து நல்ல அடியுரமாகவும் பயன் படுகிறது.

இந்தப் புதியவகை ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டத்தை விவசாயிகள் கையாளுவதன் மூலம், தனிப்பட்ட முறையில் நல்ல வருமானம் பெறுவதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கும் நல்ல முறையில் உதவலாம்.

★ எப்படிப்பட்ட கலையானாலும் சரி ஒழுக்கக் குறைவுக்கும் மூடநம்பிக்கைக்கும் சிறிதும் பயன்படக் கூடாததாக இருக்க வேண்டும்.

தந்தை பெரியார்



Raw material at our back door.

Global markets at our threshold.

Possible only if... you're always ahead of time.

Manali, Madras. A petrochemical landmark on the map of India. It's going to become even more renowned with TPL's futuristic blueprint. For a state-of-the-art EPICHLOROHYDRIN plant. A plant that's twice blessed. One, with rich raw material resources from the neighbouring plants of Madras Refineries Ltd and SPIC Heavy Chemicals Division. And two, with a market that's virtually global. Needless to say, EPICHLOROHYDRIN from the 10,000 MT capacity plant will be in demand from Day One, and will meet the needs of the entire Indian industry and more. It's an important ingredient in epoxy resins which find application in many consumer goods and industries. And also in pesticides and pharmaceuticals. Substituting imports completely while enhancing exports considerably. It will be our sequel to the earlier success story: *Linear Alkyl Benzene - SUPERLAB.* TPL. This is really where we're poised. On the shores where India meets the world.

TAMILNADU PETROPRODUCTS LIMITED
6, Nungambakkam High Road, Madras – 600 034 Tel: 8254545, 8252568/69 Fax: 044-8255798

AHEAD OF ITS TIME

HTA.7161.95

Magenta

வரிசையில் வைத்துப் போற்றத்தக்க ஒரு தலைசிறந்த நடிகர் நமது நடிகர் திலகம் என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

பிரான்ஸ் முந்திக் கொண்டது!

தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியாவிற்கே கிடைத்த ஓர் அரிய கலைப் பொக்கிஷம் அவர். இன்றைய புதிய தலைமுறை நடிக, நடிகையர்கள் நடிப்பைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த படங்களைப் பார்த்தாலே போதும், ஒரு பல்கலைக் கழகத்தில் பயின்றது போன்ற ஒரு உணர்வு ஏற்படும்.

இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் ஒரு விஷயம் மட்டும் என் மனதை நெருடுவதை நான் உணர்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள பிரான்ஸ் நாட்டினர், டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் கலைத் திறமைக்கு, அங்கீகாரம் கொடுத்துள்ள சூழ்நிலையில், இந்திய அரசாங்கம் அவரது திறமையை, அங்கீகரிக்கும் வண்ணம் சிறந்த நடிகருக்கான "பாரத்" விருதினைக் கூட, இது வரை அவருக்கு வழங்கவில்லையே என்ற ஆதங்கம் என் மனதில் எழுகின்றது. மத்திய அரசு "பாரத்" விருதினை நடிகர் திலகத்திற்கு எப்போதோ வழங்கியிருக்க வேண்டும்.

டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 'ஷெவாலியே' விருதை வழங்கி, பிரான்ஸ் நாடு முந்திக் கொண்டது. இனியாவது நமது மத்திய அரசு டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்குத் தகுந்த விருதினைக் கொடுத்துக் கௌரவப்படுத்த வேண்டுமென்று, கலையுலகத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

'பால்கே' விருது வழங்குக!

இந்தியத் திரையுலகில் Life Time Achievemement-க்காக வழங்கப்படும் Dada Saheb Phalke Award-ஐ, டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று, நான் மத்திய அரசை, இந்த விழாவின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

Better Late than Never என்பார்கள். இனியாவது மத்திய அரசு, தனது கடமையை உணர்ந்து, Dada Saheb Phalke Award-ஐ, டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று, மீண்டும் ஒருமுறை வற்புறுத்த விரும்புகிறேன்.

நான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுடன், கலைத்துறையில் பணியாற்றிய அனுபவத்தை நினைவு கூர்வதில், மகிழ்ச்சியடைகிறேன். அவர் ஒரு multifaceted versatile genius, கடுமையான உழைப்பாளி, Strict disciplinarian, Punctuality-க்கு அவர் ஒரு இலக்கணம்.

இதய தெய்வம் புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மட்டும், இன்று நம்மிடையே இருந்திருந்தால், எத்தகைய மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும், அடைந்து இருப்பார் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இந்த விழாவிற்கு, அவரே தலைமையேற்று நடத்தியிருப்பார். ஏனென்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், அவர்களைத் தனது உடன்பிறவாத தம்பியாகத் தனது வாழ்நாள் முதுவதும் கருதி வந்தார்.

நடிகர் திலகம் அவர்களும், புரட்சித்தலைவர் அவர்களை, "அண்ணா" என்றுதான் எப்போதும் அழைப்பார்.

கலையுலகில் பிரவேசித்த ஆரம்ப காலத்தில், இருவரும், ஒரே தட்டில் உணவு உட்கொண்ட உடன்பிறவாச் சகோதரர்களாக வாழ்ந்தார்கள் என்பதைப் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே, பலமுறை என்னிடம் கூறி மகிழ்ந்திருக்கிறார்.

சிவாஜி கணேசன் சாலை!

சற்று முன் பேசிய சகோதரர் சிவகுமார் அவர்கள் போக் சாலைக்கு டாக்டர் சிவாஜி

மலைகள் பல அரண் அமைத்து விளங்கும் கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே மிக உயர்ந்த சிகரம் பெருமாமுடி என்பதாகும். இது மருதமலைக்குத் தென்மேற்கே உள்ளது. இதில் அமைந்துள்ள சிவன் கோயிலொன்று பழம் பெருமை மிக்கது.

இதேபோலக் கோயம்புத்தூருக்குக் கிழக்கே ஏறத்தாழ முப்பைந்து கல் தொலைவில் உள்ள வெள்ளியங்கிரி என்ற மலையும் இந்த மாவட்டத்திற்குப் புகழ் சேர்ப்பதாக உள்ளது. இதன் அடிவாரத்திலேதான் சிறந்த்பெற்ற பூண்டி சின்மயானந்தா குருகுலம் அமைந்திருக்கிறது.

சுமார் ஏழாயிரம் அடி உயரம் கொண்டதான வெள்ளியங்கிரி, மலைமேல் உள்ள சிவன்கோயிலுக்கு இந்தக் கோவிலில்தான் பக்தர்கள் கூட்டம் [illegible]. அப்படிச் செல்வோர், கையில் ஒவ்வொரு மூங்கில் கழி கொண்டுபோவது வழக்கமாயிருக்கிறது. கரடுமுரடான மலைப் பகுதிகள், கொடிய வனவிலங்குகள் ஆகியவற்றுக்காக இந்த வழக்கம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று தெரிகிறது.

வழியில், பலகார மேடை என்றொரு அகன்ற பெருஞ்சிகரம் இருக்கிறது. களைப்புடன் பயணிகள் இங்கேதான் [illegible] எடுத்துக்கொள்ளுவார்கள்.

வெள்ளியங்கிரி மலை உச்சியில் மூன்று நெடுந்தூண் போன்ற பாறைகள் அருகருகே உயர்ந்து நிற்கும். அதன் மேல் கூரைபோல் இன்னொரு பாறை திகழும். அவற்றினிடையே இயற்கையிலேயே ஆலயம் போன்ற அமைப்பில் சிவன் கோயில் உள்ளது.

மேகங்கள் உலா வருதலால், எப்போதும் சில்லென்ற குளிர் இருக்கும் பகுதி இது. பாறைகள் வெள்ளை வெளேர் என்றிருப்பதால் வெள்ளியங்கிரி என்ற பெயர் வந்திருக்கலாம் போலும்.

இம் மலையின் மீதுள்ள நீருற்றிலிருந்து சிறுவாணிக்கும் தண்ணீர் வருகிறது.

நடந்துதான் மேலே போய் வர வேண்டும்.

இதன் நினைவாகவே கோவை மாவட்டத்தில் [illegible] வெள்ளியங்கிரி, வெள்ளியப்பன், வெள்ளியம்மை என்றெல்லாம் பெயர் வைத்திருப்பதைக் காணலாம்.

கணேசன் அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, நடிகர் திலகம் அவர்களுக்கு 'ஷெவாலியே' விருது வழங்கப்பட்டதை நினைவுகூரும் வண்ணம், போக் சாலை பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'ஷெவாலியே சிவாஜி கணேசன் சாலை' என்று அழைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான ஆணைகள் வெகு விரைவில் வழங்கப்படும்.

சிவாஜி விருது!

தென்னிந்தியத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் மோகன் காந்திராமன் அவர்கள், நடிகர் திலகம் அவர்களின் பெயரில் மாநிலத் திரைப்பட விருது ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தெரிவித்தார். அவரது கோரிக்கையை இந்த விழா மேடையிலே ஏற்றுக் கொண்டு 'ஷெவாலியே' சிவாஜி கணேசன் அவர்கள் பெயரில் மாநிலத் திரைப்பட விருது State Film Award ஒன்று நிறுவப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விருது 'சிவாஜி விருது' என்ற பெயரில் கலைத்துறைக்கு அருந்தொண்டு ஆற்றியவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடிகர் திலகம் அவர்கள் நல்ல ஆரோக்கியத்தோடு, இன்னும் பல ஆண்டுக் காலம் நீடு வாழ்ந்து, கலை உலகத்திற்குத் தொடர்ந்து சேவைபுரிந்து தமிழக மக்களை மகிழ்விக்க வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈடுஇணையற்ற கலைச் செல்வமான, ஷெவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து தொடர்ந்து கலைச் சேவையை ஆற்ற வேண்டும்."

நிகழ்ச்சித் தொகுப்பு: அ. மதிமாறன்.

With best compliments from

- **Sangeetha Theatre**
- **Ramlakshman Theatre**
- **Usha Theatre**
- **Pushpa Talkies**

Tirupur

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

கொங்கு நாட்டில் - பேரூர் அருள்மிகு ஈசுவரன் திருக்கோயில், பொள்ளாச்சிக்கருகே உள்ள அருள்மிகு மாசானத்தம்மன் திருக்கோயில், அருள்மிகு ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில், எனப் பல திருக்கோயில்கள் பரவலாகப் புகழோடு பொலிவுற்றிருக்கின்றன.

தமிழ்நாடு அரசு அறநிலையத் துறையானது, அத்தனைத் திருக்கோயில்களும் அணிபெறச் செய்வதில் முனைப்போடுள்ளது; இதோ, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஒன்றுபற்றி மட்டும் இங்கே பாருங்களேன்!

பழமையும் பெருமையும் மிக்க கொங்கு மண்டலத்தின் தலைநகர் கோவை மாநகருக்கு 15 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் முப்புறமும் மலைகளால் சூழப்பட்டு, எழில் கொஞ்சும் இயற்கைச் சூழலில் உள்ளது மருதமலை.

முருகப்பெருமானின் ஏழாவது படைவீடு எனப் போற்றப்படும் வகையில் இங்கே அமைந்துள்ளது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். இக்கோயில் தமிழகத்தின் தலைசிறந்த திருத்தலங்களில் ஒன்றாகவும் போற்றப்படுகிறது.

பாடல் பெற்ற தலங்கள்

கொங்குநாட்டின் திருப்புகழ்ப் பாட்டுத் தலங்கள் திருச்செங்கோடு, கொல்லிமலை, ஓதிமலை, குடிமலை, தென்சேரி மலை, கொங்கணகிரி, கனககிரி, புகழி மலை, சிவகிரி, கருவூர், வெஞ்சமாக் கூடல், கொடுமுடி, சேலம், ராசிபுரம், விசய மங்கலம், காங்கயம், திருமுருகன் பூண்டி, திருவாவிநன்குடி, பழனி, பேரூர், கீரனூர் ஆகியவை.

இத்திருக்கோயிலின் தோற்றம் கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும் எனத் திருமுருகன் பூண்டி, மற்றும் அவினாசி திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகிறது. இத்திருக்கோயிலின் சிறப்பு அம்சம் குறித்து, கச்சியப்ப முனிவர் அவர்களால் இயற்றப்பட்ட பேரூர் புராணத்தின் மருதவரைப்படலத்தில், மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் பற்றிய அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் ஒன்றும் உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க மருதமலை திருக்கோயில் திருப்பணிகள், சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன் துவக்கப்பட்டு- திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முடிந்த வேலைகள்

இத்திருக்கோயிலைச் சார்ந்த வடவள்ளி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மாணவர்கள் தங்க, அன்பு இல்லத்திற்கான கட்டடம் ரூ.3 இலட்சம் செலவில் தொழில் அதிபர் திரு.கே.வி.மோகன் மேனன் அவர்களால் அவரது பெற்றோர்கள் நினைவாக 'ரவுண்ட்டேபிள் 20' என்ற அமைப்பின் மூலம் கட்டித் தரப்பட்டுள்ளது. இதில் சுமார் 50 அனாதை மாணவர்கள் தங்கிப் பயின்று வருகிறார்கள். அவர்களுக்கு உண்ண உணவு, தங்க உறைவிடம், உடுக்க உடை, கல்விச்செலவு ஆகியவை இந்தத் திருக்கோயில் மூலமே செய்யப்பட்டுவருகிறது.

சித்த மருத்துவமனை

வடவள்ளி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதியதாக சித்த மருத்துவமனைக் கட்டடம் ரூ.3 இலட்சம் செலவில் கோவை தொழில் அதிபர் திரு. கே. மோகன்மேனன் அவர்களால் இத்திருக்கோயிலுக்கு உபயமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் 40,000 பேருக்கு இலவசமாகச் சித்த மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்கோயிலைச் சேர்ந்த வடவள்ளியிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு ஏழை எளிய மாணவ மாணவிகள் கல்வி பயிலப் புதிதாகப் பள்ளிக்கட்டடம் முதல் தளம் ரூ.38 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

திருக்கோயிலின் மலைமீது 'மினி-பஸ்' நிற்குமிடத்தில் வழிபடுவோர் வசதிக்காக ஒரு பெரிய நிழற்குடை ரூ.40,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலில் மலைமீது 'கார் பார்க்' அருகில் பழுதடைந்திருந்த பொதுக்குளியல் மற்றும் கழிப்பறை ரூ.1.50 இலட்சம் செலவில் சிறப்புப்பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, சுகாதாரமான முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மலைமீது பாலாலயத் திருக்கோயில் முன்புறம், சுவாமி தரிசனம் செய்யவரும் பக்தர்களுக்கு வெயில் மற்றும் மழை பாதிக்காவண்ணம் ரூ.25,000 செலவில் நிழற்பந்தல் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

கோடையில் நிழற்பந்தல்

மலைமேல் பேருந்து நிற்குமிடத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும் வழிவரை உள்ள படிக்கட்டுகளில், கோடைகாலத்தில் பக்தர்களுக்கு வெயில் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆண்டுதோறும் கோடைக்காலப் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயிலுக்குப் பூம்புகார் நிறுவனத்தால் தங்கரத வேலைகள் செய்யப்பட்டு வரும் இடத்தில் பாதுகாப்பின் பொருட்டு ரூ.95,000/ செலவில் 'ஜி.ஐ.சீட்' கொட்டகையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மூலவர் சன்னதி, முகமண்டபம் முக்கியத் திருப்பணிகள் மகாமண்டபம் கட்டும் திருப்பணிகள்:

இப்பணியில் முதற்கட்டத் திருப்பணி ரூ.30 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு, அதனைத் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் மூலம் கட்டுமானப்பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போது கருங்கற்களினால் ஆன சிற்ப வேலைப்பாடுகள் கலசம் என்னும் விரிவாக்கம் முடிய செய்யப்பட்டுள்ளது.

தங்க ரதத் திருப்பணி

இத்திருக்கோயிலில் தங்கரதம் செய்யும் வேலை, பூம்புகார் நிறுவனத்தால் மிக நேர்த்தியாகச் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மரத்தேர் வேலை முடிவுற்று, அதற்குமேல் செப்புத் தகடுகள் போர்த்தும் பணி முடிவுற்று, வெள்ளித் தகடுகள் போர்த்தும் வேலை நடைபெற்று வருகிறது. வெள்ளித் தகடுகள் போர்த்தப்பட்டவுடன் தங்கத் தகடு போர்த்தும் வேலை நடைபெற உள்ளது.

இத்திருக்கோயிலில் தயாராகி வரும் தங்க ரதத்தின் உயரம் 16 '67/8' ஆகும். இதன் மதிப்பு, சுமார் ரூ.125 இலட்சமாகும்.

இத்திருக்கோயிலைச் சேர்ந்த வடவள்ளியிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் தளம் கட்டுமானப்பணி ரூ.38 இலட்சம் செலவில் நடைபெற்றுவருகிறது.

அரசு உதவியால் எழில்பெற்ற அவினாசித் தேர்

இன்னும் ஒருமாத காலத்தில் அந்த வேலை முடிவுறக் கூடும்.

திருக்கோயிலுக்கு இதுநாள் வரை ராஜகோபுரம் இல்லை. எனவே, ஒரு இலட்சத்திற்கும் மேலான செலவில், புதிதாக ராஜகோபுரம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ராஜகோபுரத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளின் அடித்தளத்தில் கடைகள், கட்டடங்கள் ரூ.120 இலட்சத்தில் புதிதாகக் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் உள்ள திருக்கோயில் நிர்வாக வாரியத்தில் அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தினரால் விரைவில் பணி துவக்கப்படவுள்ளது.

இத்திருக்கோயிலுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் மின்சாரத்தில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதால், பொதுமக்களின் நலன் கருதி, திருக்கோயில் உபயோகத்திற்கெனத் தனியாக ஒரு டிரான்ஸ்பார்மர் நிறுவ இத்துறை ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த வேலைகளைத் தமிழ்நாடு மின்வாரியம் மேற்கொள்ள விருக்கிறது.

தங்கத்தேர் கூடாரம்

திருக்கோயிலில், [illegible]கார் நிறுவனத்தால் [illegible]ட்டு வரும் தங்கரதம் [illegible]முடிந்தவுடன் அற்புதமா[illegible]ந்தத் தங்க ரதத்தைப் [illegible]க்கத் தேர்நிலைக் கட்டடம் ஒன்று தனிப்பட ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்[illegible]ள்ளது.

சன்னதிகள் கட்டும் பணி

ஒவ்வொன்றும் ரூ.13.50 இலட்சம் செலவில் கருங்கற்

நல்வாழ்த்துக்களுடன்............

கோவை மாநகரை ஒட்டி பேரூர்செட்டிபாளையம் ஊராட்சி போஸ்டல் காலனி அருகில் நகரமைப்புத் துறையினரின் ஒப்புதலுடன் 'ஏ' மற்றும் 'பி' டைப் தனித்தனி வீடுகளாகக் கட்டடம், வங்கிக் கடன், அல்லது ரொக்கத்திற்குக் கட்டி விற்பனை செய்கிறோம்.

அணுக வேண்டிய முகவரி :
ஆர். முத்துசாமிகவுண்டர்
கட்டட ஒப்பந்ததாரர்
45, பழைய போஸ்டாபீஸ் சாலை,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக எதிர்ப்புறம்
கோவை.

களினால் சிறப் வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டீசுவரர் மற்றும் மரகதாம்பிகை சன்னதிகள் விரைவில் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

மருதமலை அடிவாரத்தில், பொதுமக்களின் வசதிக்காக ரூ.2.20 இலட்சம் செலவில் நிழற்குடை அமைக்கும் பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையைச் செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருதமலை அடிவாரத்தில், திருக்கோயிலுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், பக்தர்களுக்காக இளைப்பாறும் மண்டபம், குளியலறை, கழிவறை மற்றும் திருமண மண்டபம் ஆகியவை கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

வடவள்ளியில், இத்திருக்கோயில் சார்பில் நடைபெற்று வரும் பள்ளி வளாகத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கழிப்பறை ரூ.1.30 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு இதற்கான பணி விரைவில் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படும்.

திருக்கோயிலுக்குச் சொந்தமாக, வடவள்ளியில் மேல் நிலைப்பள்ளியின் முன்பகுதியில் சாலையின் ஓரம், திருக்கோயிலுக்கு நிரந்தர வருமானம் பெறும் வகையிலும் பொது மக்களின் நலன் கருதியும், வர்த்தக அங்காடியொன்று கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின் துணைக் கோயிலாக, வடவள்ளி அருள்மிகு கரிவரதராஜபெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. அக்கோயில் குடமுழுக்கு நடைபெற்று 40 ஆண்டுகளுக்கு மேலாகிறது, எனவே அத் திருக்கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்குச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணி வேலையுடன், திருமதில் கட்டும் பணியும் ரூ.2.5 இலட்சம் செலவில் செய்யப்பட வேண்டியுள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மத்திய அரசின் 80 சதவிகிதப் பங்கும், மாநில அரசின் 20 சதவிகிதப் பங்குத் தொகையும் கொண்டு கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி, அதன்மூலம் அவர்களுக்கு வருமானம் பெருக்கவும், வாழ்க்கைத்தரம் உயரவும், மேலும் மக்களுக்கு அத்தியாவசியக் கோரிக்கைகள் நிறைவேற்றிடவும், அதன் மூலம் அரசுக்குச் சொத்துக்கள் உருவாக்கிடவும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்தில் 1994-95-ஆம் ஆண்டில் 1600 தொகுப்பு வீடுகள் ரூ.350.40 இலட்சத்தில் கட்ட இலக்கு நிர்ணயித்து, இது வரை 1410 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. இதில் 1,334 வீடுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

64 பள்ளிக் கட்டடங்கள் ரூ.102.50 இலட்சம் மதிப்பீட்டிலும், 12 சத்துணவு மையக் கட்டடங்கள் ரூ.9.60 இலட்சம் மதிப்பிலும், 21 நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் ரூ.14.80 இலட்சம் மதிப்பிலும், 75 சாலைகள் 99 கி.மீ. நீளத்திற்கு ரூ.151.00 இலட்சத்திற்கு இரண்டடுக்குக் கப்பிச் சாலைகளாக அமைத்து, சாலை மேம்பாடு செய்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

29 புதிய கசிவு நீர்க்குட்டைகள் அமைத்து 4 கோயில் குளங்கள் பராமரித்துப் புதுப்பித்தும், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஒரு குளம், ஊராட்சி ஒன்றியக் குளம் ஆகியவை அபிவிருத்தி செய்தும் ரூ.43.50 இலட்சத்தில் நீர்ப்பாசனப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 5 சமுதாய நலக்கூடங்கள், (திருமண மண்டபங்கள்) ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் மதிப்பில் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. இதில் ஒவ்வொரு ஒன்றியத்திலும், குறைந்தது 3 கட்டடங்கள் ஆதிதிராவிடர் காலனியில் கட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனைத்தவிர ஆதிதிராவிடர் மக்களுக்கான பல்வேறு சிறப்பு ஒதுக்கீடுகள் வழங்கி ஆதிதிராவிடர் காலனியில் அடிப்படை வசதிகள் இணைப்புச் சாலைகள் அமைத்தல், அபிவிருத்தி செய்தும், மயானச் சாலைகள் அமைத்தல், அபிவிருத்தி செய்தும், பாலங்கள் கட்டுதல் குடிநீர் வசதிகளுக்காகக் குழாய்க் கிணறு, தரைமட்டத் தொட்டி, குழாய்கள் போடுதல், தெரு விளக்குகள் அமைத்தல், சாக்கடை வசதி செய்தல், கழிப்பிடங்கள் கட்டுதல், ஆகிய பல்வேறு பணிகளுக்காக ரூ.162.80 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன.

சமுதாய மேம்பாட்டிற்கு, சமுதாயக் காடுகள் அபிவிருத்தி செய்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவிட, சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ், இவ்வாண்டில் 13.89 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, 1000 எக்டேர் நிலப்பரப்பில், தோப்பு நடவாகவும், நிறுவன நடவாகவும், தொகுப்பு வீடுகளிலும் நடப்பட்டன.

இதற்காக ரூ.33.35 இலட்சம் அரசு நிதியாக வழங்கி, தொகை மேற்காண் பணிகளுக்குச் செலவிடப்பட்டது.

மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம்

1993- 94-ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு தன்து நிதியினைக் கொண்டு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடன் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் என்று அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1993 -94-ஆம் ஆண்டில், ரூ.109.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு தமிழக அரசினால் வழங்கப்பட்டு இதற்காக 72 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன்.

1994- 95-ஆம் ஆண்டு மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு ரூ.239.50 இலட்சம் வழங்கியது. இதற்கு 308 பணிகள் எடுக்கப்பட்டு உள்ளது. இதுவரை 68 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.82.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறப்பினமாக ஊரகக் கப்பிச்சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றுவதும், மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் மலைப்பகுதியில் உள்ள அவர்களது வீடுகளுக்குத் தகரக் கூரைகள் போட்டுக் கொடுத்ததும் இதில் குறிப்பிடத் தக்கவையாகும்.

இத்திட்டத்தில், ஆதிதிராவிட மக்களுக்குப் பல்வேறு அடிப்படை வசதிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன.

பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி வளர்ச்சித் திட்டம்: 1993-94

இத்திட்டம் 1993 -94-ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. ஒரு தொகுதிக்கு ரூ.5 இலட்சம் வீதம் கீழ்க்கண்டவாறு தொகை பெறப்பட்டு வேலைகள் செய்து முடிக்கப் பட்டன. விவ்ரங்கள் வருமாறு.

நாடாளுமன்ற உறுப்பினரின் பெயர்	எடுத்துச் செய்யப் பட்ட வேலைகள்	ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை
லோக் சபா		
திரு சி.கேகுப்புசாமி எம்.பி. (கோவைத் தொகுதி)	5	5.00
திரு. பா.ராஜாரவிவர்மா, எம்.பி., (பொள்ளாசித் தொகுதி)	7	5.00
திரு. ஆர்.பிரபு, எம்.பி., (நீலகிரித் தொகுதி)	7	2.50.
ராஜ்ய சபா		
திரு.எஸ்.விடுதலை விரும்பி, எம்.பி.	1	5.00
	20	17.50

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம்: 1994-95

இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொகை விடுவிக் கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன:

பாராளுமன்ற உறுப்பினரின் பெயர்	செய்யப்படும் வேலைகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில்
லோக் சபா		
திரு .சி.கே.குப்புசாமி எம்.பி. (கோவைத் தொகுதி)	43	100
திரு. பா.ராஜாரவிவர்மா, எம்.பி., (பொள்ளாசித் தொகுதி)	40	83.50
திரு. ஆர்.பிரபு, எம்.பி., (நீலகிரித் தொகுதி)	74	50.00
ராஜ்ய சபா		
திரு.எஸ்.விடுதலை விரும்பி, எம்.பி.	32	100.00
திரு. டாக்டர் மு.அறம், எம்.பி.	9	120.00
	198	433.50

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித்திட்டப் பணிகள் அனைத்தும்,



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள திரு சந்திரபிரகாஷ் சிங், இ.ஆ.ப.

கிராம மக்கள் அத்தியாவசியத் தேவைகளை அடிப்படையில் கொண்டு மக்கள் பயன்பெறும் வகையில் செய்யப்பட்டு வருகின்றது.

வேலைக்கு உறுதியளிக்கும் திட்டம்

இத்திட்டம் வேலையில்லாத ஏழை எளிய மக்களுக்கு ஒரு குடும்பத்தில் வயது வந்த 2 பேருக்கு வேலை வாய்ப்பினை ஒரு ஆண்டில் 100 நாட்களுக்கு உறுதி செய்யும் திட்டமாகும். அத்துடன் நிரந்தரச் சொத்துக்கள் உருவாக்கப்படும். இத்திட்டம் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல் படுத்தப்படும் திட்டம். தேர்வு செய்யப்பட்ட பின்தங்கிய வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதன்படி 1994-95-ஆம் ஆண்டு முதல் கோவை மாவட்டத்தில், அன்னூர், அவினாசி, பல்லடம் மற்றும் சூலூர் வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்திற்

காக 1994- 95-ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு பங்குத்தொகை ரூ.120/ இலட்சமும், மாநில அரசு பங்குத்தொகை ரூ.30/ இலட்சமும் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பணிகள் சத்துணவுக்கூடங்கள் பள்ளிக் கட்டடங்கள், சாலைகள், சமுதாயக் கூடங்கள், குளங்கள், கசிவுநீர்க்குட்டைகள், நிலத்தடிநீர் பெருக, பல்வேறு திட்டங்கள் செயலாக்கப் படவுள்ளன.

பணிகள் தொடங்கிட ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, விரைவில் செயலாக் கப்படவுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

1994- 95-ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற ஏழைமக்கள் தம் வாழ்வில் முன்னேற்றமடைய, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித்திட்டத்தின் கீழ், 8381 பேர்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்க வேண்டும் எனக் கோவை மாவட்டத்திற்கு அரசால் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. நிதி இலக்கு ரூ.419.200 இலட்சங்கள் எய்தவேண்டும் எனவும் அரசால் குறியீடு வழங்கப்பட்டது.

இந்நிதியாண்டில் 31.3.95 முடிய 14,345 பேர்களுக்கு இத்திட்டத்தில் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டது. அரசு கொடுத்த இலக்கை விஞ்சி, 5964 நபர்களுக்குக் கூடுதலாகக் கடன் வழங்கப்பட்டது. கடன் வழங்கப்பட்டதில் அரசு மானியம் ரூ.371.29 இலட்சங்களும், வங்கிக்கடன் ரூ.556.000 இலட்சங்களும் ஆக மொத்தம் 927.290 இலட்சங்கள் மானியக்கடன் கூடிய கடனாக வழங்கப்பட்டது. இந்தத்திட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் ஆக 20 வங்கிகள் பங்கெடுத்துள்ளன.

இத்திட்டத்தில் 5059 ஆதி திராவிடர் களுக்கும், 215 பழங்குடியினருக்கும், 135 உடல் ஊனமுற்றோர்களுக்கும் 8936 மற்ற வகுப்பினருக்கும் ஆக, 14,345 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இதில் 7852 பேர் மகளிர் ஆவர். இது ஒரு சாதனை அளவாகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில், 10% நிதி ஒதுக்கீடு, அதாவது ரூ.41.92 இலட்சங்கள் உள்கட்டமைப்பு வசதிகளுக்காகச் செலவிட வேண்டும் என அரசால் தெரிவிக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் இதுவரை இவ்வினத்தில் டோக்ரா தொழிற்கூடங்களுக்கு 12 பணிகளுக்கு ரூ.5.80 இலட்சங்களும், கால்நடை பராமரிப்புக்கு 25 பணிகளுக்கு ரூ.35.28 இலட்சங்களும் ஆக மொத்தம் 37 பணிக்கு ரூ.41.08 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாகும். கிராமப்புறத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டிற் குக் கீழுள்ள பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, அவரவர்களுக்கு எந்தத் தொழில் செய்வதற்குத் தெரியுமோ

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
டாக்டர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா
அவர்கள் பங்கேற்ற...

★தமிழகக்கேபிள் டி.வி. உரிமையாளர்கள் சங்க மாநில நன்றி அறிவிப்பு மாநாடு.

★திரைப்படத் தொழிலாளர்கள் குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா.



தமிழரசு
16.5.1995 ரூ.3

அந்தத் தொழில் செய்வதற்கும், மற்றும் கிராமப்புறங்களில் கச்சாப் பொருட்கள் கிடைப்பது, விற்பனை வசதி ஆகியவற்றைப் பொருத்தும் புதிய தொழில் தொடங்கவும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 50% மானியத்துடன் கூடிய கடனும் வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இத்திட்டம் கோவை மாவட்டத்தில் துவங்க 1991- 92-ஆம் ஆண்டில் மார்ச் மாதம் அரசின் உத்தரவு பெறப்பட்டு 1992 -93-ஆம் ஆண்டு முதல் முழுமையாகச் செயல்பட்டு வருகின்றது.

1994 -95-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் தலா 10 டோக்ரா குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் எனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, 160 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 567 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களும், 16 பழங்குடியினத்தவர்களும் மற்றும் 1322 மற்ற வகுப்பினர்களும் ஆக மொத்தம் 1905 பெண்கள் பயனடைந்துள்ளனர் இவர்களுக்கு தொழில்கள் துவங்கக்கடன் தொகை ரூ.63,75,400/ உடன் மானியத் தொகை ரூ.55,26,211/ வங்கியின் மூலம் அனுமதிக் கப்பட்டுள்ளது.

கிராமப்புற சுயவேலைவாய்ப்புத்திட்டம்

'டிரைசம்' ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் துணைத்திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 1994- 95-ஆம் ஆண்டு 1300 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டு, பல்வேறு தொழில் துறைகளில் 1300 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. 31.3.1995 முடிய ரூ.49.28 இலட்சம் இத்திட்டத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.350/ வழங்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு அவர்கள் சுயமாகத் தொழில் செய்ய பயிற்சியளிக்கும் நிறுவனங்களுக்கு ஒரு நபருக்கு மாதம் ரூ.200 மற்றும் கச்சாப்பொருட்களுக்கு ரூ.600 மிகைப் படாமல் வழங்கப்படுகிறது.

பயிற்சி முடித்தவர்களுக்குப்பயிற்சி முடித் ததற்கான 'டிரைசம்' சான்றிதழ்கள் மற்றும் பயிற்சிக்காலத்தில் உற்பத்தி செய்த பொருட் களின் ஏலத்தொகையில் 50% வழங்கப் படுகிறது.

சாண எரிவாயுத் திட்டம்

சாண எரிவாயுக் கலன் அமைப்பதில் முதலில் எந்தக் கொள்ளளவு கலன் சரியானது என்பதைத்தேர்வு செய்தல் முக்கியமானதாகும். கால்நடைகளின் எண் ணிக்கை, வீட்டில் உள்ள நபர்கள், பயன்படுத்தும் நோக்கம் போன்றவைகள் கலன் தேர்வு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

4 க.மீ.தீனபந்து கலன் அமைக்க ரூ.9800 -ம் 4 க.மீ.கே.வி.ஐ.சி.கலன் அமைக்க ரூ.16,000-ம் செலவாகிறது. மானியம் அதிகபட்சமாக ரூ.2600 4 க.மீ. 3 க.மீ., அளவுள் கலன்களுக்கும் ரூ.2400–2000/ 2 க.மீ., 1 க.மீ., கலன்களுக்கும் வழங்கப்படுகிறது.

சாண எரிவாயுவின் பிற உபயோகம்

சாண எரிவாயுக் கலன் மூலம் ஆயில் என்ஜின்கள் இயக்கி விசைத்தறி ஓட்டுதல், அவினாசி வட்டாரத்தில் நம்பியாம்பாளை யத்திலும், மதுக்கரை வட்டாரத்திலுள்ள நவக்கரையில், பால் பதனிடுதலும், பல்லடத் தில் ஐட்ராலிக் ஜாக்கி மூலம் கார் சர்வீஸ் செய்தலும் நடைபெறுகின்றன.

சாதனை விவரம்

கோவை மாவட்டத்தில் 12,857 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கிவருகின்றன. நடப்பு, ஆண்டில் கட்டும் 635 கலன்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் அவிநாசி வட்டாரத் தில் மட்டும் 3000 கலன்கள் அமைக்கப்பட்டு அகில இந்திய அளவில் சிறந்த வட்டாரத்திற்கான பரிசு ரூ.1 இலட்சம் பெற்றுள்ளது.

புகையில்லா அடுப்பு (சூளா)

1983-ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நமது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நிரந்தர அடுப்பினை அமைக்கும் சுய வேலை வாய்ப்பு முகவர்களுக்கு அடுப்பு அமைக்கவும், பராமரிக்கவும் ரூ.20 வழங்கப்படுகிறது.

'தமிழரசு' அடுத்த இதழில்....

[illegible]

-ஆசிரியர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு

தூய
சரிகை

கம்பீரமான ஊதா...
போல் சிகப்பு...
கரமான மஞ்சள்...
வெளிபோல் நீலம்...
அடங்கா
வண்ணங்களில்
பட்டு,
ஆப்டெக்ஸ்.

பம்பாய் சகோதரிகள் - இன்னிசை

உலகத் தமிழ் மாநாடு:

இன்னிசை நிகழ்ச்சிகளில் சில..

திருமதி சரோஜாசுந்தரம் குழுவினரின் தேவார இன்னிசை

சிக்கல் சகோதரிகள் - புல்லாங்குழலிசை

இந்த இதழில்...

★ கோவை மாவட்டத்திற்கு ரூ.3 கோடிக்கு மேலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார் 3

★ முத்தமிழ் வளர்த்த மாமதுரையில் சித்திரைப் பொருட்காட்சி! 5

★ தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா! 7

★ உலகச் சாதனையை எட்டிப்பிடித்த எட்டு வயதுச் சிறுவன்! 9

★ கோவையில் மகளிர் மேம்பாடு 11

★ நமது பண்பாடு
- பாவலர் பாலசுந்தரம் 13

★ வளம் மிகுந்த வால்பாறை 15

★ அரிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு 17

★ தமிழ் நிலைபெற வேண்டும்!
-டத்தோ ஜி. வடிவேலு 19

★ நூல் நயம் 23

★ சாதனைப் பூக்களை மலர்விக்கும் சோலைவனம்! 24

★ சுட்டட மையம் 30

★ இலக்கியத்தில் காதல்!
- டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் 35

★ மாணவர் பக்கம் 42

★ கோவைச் செய்திகள் 45

★ கோவை மாவட்டம் - குடிநீர் வழங்கும் பணிகள் 46

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. (21)

* ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026

வைகாசித் திங்கள்: 2

மலர்: 25 இதழ்: 22

16.5.1995 விலை: ரூ. 3

கோவை மாவட்டத்திற்கு

ரூ.3 கோடிக்கு மேலான நலத்திட்ட உதவிகளை

மாண்புமிகு முதலமைச்சர் வழங்கினார்!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 20.8.93 அன்று கோவைக்குச் சென்றிருந்தபோது, நலிவுற்ற மக்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகளும், அப்போது அவர் ஆற்றிய உரையும், 'தமிழரசு' கோவை மாவட்டச் சிறப்பிதழ் வெளியிட்டதையொட்டி இப்போது நினைவுகூரப் படுகிறது:

கோவை மாவட்ட, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 20.8.93 அன்று காலை, கோவை வ.உ.சி.பூங்கா திடலில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 6212 நபர்களுக்கு ரூபாய் மூன்று கோடியே 10 இலட்சத்து 62 ஆயிரத்து முந்நூற்று இருபத்தி ஏழு மதிப்புள்ள பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரை ஆற்றியபோது குறிப்பிட்டதாவது:

மக்கள் சக்தியின் பேராதரவோடும் நல்வாழ்த்துக்களோடும், உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு முனைப்புடன் மக்கள் பணியாற்றிவருகிறது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். மக்களாட்சியின் மாட்சிமையைப் பெரிதும் மதித்து, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதிலும், மக்கள் தான் இறுதி எஜமானர்கள் என்ற ஜனநாயகக் கோட்பாட்டிலும், நம்பிக்கை வைத்துள்ள நாங்கள் ஐந்தரைக்கோடி தமிழக மக்களின் எண்ணங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும், ஏற்றாற்போல இயங்கி வருகிறோம் என்பதை நாடும் அறியும், நல்லவர்களும் அறிவார்கள்.

சில தேச விரோத சக்திகள், சமூக விரோத சக்திகள், வன்முறையாளர்கள் ஆகியோரது கொடிய பார்வை, என்மீது படிந்துள்ளது என்ற உண்மையை நான் நன்கு அறிந்திருந்த போதிலும் எனது அன்பிற்குரிய மக்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது என்ற காரணத்தால்தான், என் உயிரையும் பொருட்படுத்தாது, நான் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சென்ற ஒவ்வொரு மாவட்டத்திலும், கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்து, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நானே எனது கைப்பட அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கிவந்திருக்கிறேன்.

மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் பல பிரகடனங்களை அறிவித்துக் கொண்டிருப்பதைவிட, பல்வேறு நலத்திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அத்திட்டங்களின் பலன் சென்று அடைகிறதா என்பதைக் கண்காணிப்பதில், ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளது எங்கள் அரசு. அதன் அடிப்படையில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெற்று, தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரிவினர்களிடமிருந்து, மனுக்களை நேரில் பெற்று, துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற



உன்னதமான நல்லெண்ணத்தில், சென்ற ஆண்டு ஒவ்வொரு திங்கட்கிழமையையும், குறிப்பிட்ட மாவட்டத்திற்கு என ஒதுக்கிப் பொது மக்களிடமிருந்து குறைகளைக் கேட்டு மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுத்தேன்.

பொது மக்கள் குறை தீர்ப்பது என்பதைச் சாதாரண பணியாகக் கருதாமல், அதில் தனிக் கவனம் செலுத்தி, மக்களுடைய குறைகளைக் களையவேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணைகள் இட்டதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு துணை ஆட்சியர் அந்தஸ்தில் இதற்காக ஒரு தனி அலுவலரை நியமித்து, குறைதீர்க்கும் பணிக்கு ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளேன். பல்வேறு அரசு நலத்திட்ட பலன்கள், மக்களுக்கு நேரடியாகச் சென்று அடைவது இல்லை என்று, சிலர் குறைகூறி வந்ததால், என்னிடம் மனுக்களை அளித்த மனுதாரர்களுக்கு, நியாயமான முறையில், அரசு நலத்திட்ட பலன்கள், சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தில், அரசாங்கத்தின் செலவில், மனுதாரர்களைச் சென்னைக்கு நேரில் வரவழைத்து, உதவிகளை

நானே வழங்கும், புதிய நடைமுறையைச் செயல்படுத்தினேன்.

23.3.1992 அன்று மாவட்ட வாரியாக மனுக்களைப்பெற ஆரம்பித்து 20.7.1992 முடிய ஒரு சுற்று எல்லா மாவட்ட மக்களிடமிருந்தும், மனுக்களைப்பெற்று, அம்மனுக்களை விசாரணை செய்து, 36,438 தகுதியுடைய மனுதாரர்களை 13.7.1992 முதல் 2.11.1992 வரை பல நாட்களில் வரவழைத்து 52 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கியுள்ளேன்.

இரண்டாவது கட்டமாகத் தற்போது, மீண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்கள் மீது, விரைந்து நடவடிக்கை எடுத்து, அரசு நலத்திட்ட உதவிகளை, நானே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று வழங்குவதற்கு ஒரு திட்டம் தீட்டினேன். அந்தச் சிந்தனையின் செயல்பாடுதான், இன்று கோவை மாவட்டத்தில், 6200 பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மனமகிழ்ச்சியுடன் வழங்க வந்துள்ளேன்.

இன்று வழங்க உள்ள உதவிகளை ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் வழங்கவேண்டும் என்று நான் விரும்பினாலும், நேரம் இன்மையால் 100 பேருக்கு மட்டும் உதவிகளை நானே வழங்க உள்ளேன். மற்றவர்கள் அனைவருக்கும், அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் எனது முன்னிலையிலேயே வழங்குவார்கள். இந்த விழாவில் உதவிகளைப் பெறும் எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள், தங்கள் வாழ்க்கையில் மேலும் பல முன்னேற்றங்களை அடைந்து, சீரோடும், சிறப்போடும் வாழவேண்டும் என்று எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

● சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு என்.டி. ராமாராவ் அவர்கள் சந்தித்துப் பேசினார். (30.4.95)

● சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, கர்நாடக முதல்வர் திரு தேவகவுடா அவர்கள் சந்தித்துப் பேசினார். (10.5.95)

● சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, மகாராஷ்டிரா முதல்வர் திரு மனோகர் ஜோஷி அவர்கள் சந்தித்துப் பேசினார். (28.5.95)

நான்காம் அட்டை:

நடிகர் திலகம் திரு சிவாஜிகணேசன் அவர்களுக்கு, பிரான்சு நாட்டின் 'செவாலியே' விருது வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

முத்தமிழ் வளர்த்த மாமதுரையில் சித்திரைப் பொருட்காட்சி!

முத்தமிழ் வளர்த்த மாமதுரையில், சித்திரைப் பொருட்காட்சி, 23.4.95 அன்று மிகச் சிறப்பாக நடந்தது. இது, தமிழ்நாட்டின் 82-வது அரசுப் பொருட்காட்சியாகும். மதுரையைப் பொறுத்தவரை இது 14-வது பொருட்காட்சியாகும்.

இப்பொருட்காட்சியில் 16 அரசுத்துறை அரங்குகளும், 6 அரசுச் சார்பு நிறுவனங்களும் பங்குகொண்டு சிறப்பித்தன. அவை:

அரசுத்துறைகள்

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத்துறை, தொழில் துறை, இந்து சமய அறநிலையத் துறை, பொதுப்பணித்துறை, மருத்துவக் கல்வித்துறை, மீன் வளத் துறை, வேளாண்மைத்துறை.

வனத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, காவல்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை.

அரசுச் சார்பு நிறுவனங்கள்

பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகராட்சி, தமிழ்நாடு குடி நீர் மற்றும் வடிகால் வாரியம், ஆவின் நிறுவனம், தமிழ்நாடு எய்ட்ஸ் தடுப்புச் சங்கம் முதலியன.

மத்திய அரசுச் சார்பு நிறுவனமான ஆயுள் காப்பீட்டுக் கழக அரங்கும் இடம் பெற்றிருந்தது.

பொதுமக்களின் அன்றாடத் தேவைகளான வீட்டு உபயோகப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், அணிகலன்கள், அழகு சாதனங்கள், ஆயத்த ஆடைகள், பரிசுப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் 49 அங்காடிகள் இடம் பெற்றுள்ளன. தனியார் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் வகையில் 16 அரங்குகளை அமைத்துள்ளன.

கடந்த ஆண்டு மதுரையில் 51 நாட்கள் நடைபெற்ற பொருட்

காட்சியை ஏறத்தாழ 4 இலட்சத்து 93 ஆயிரம் பேர் கண்டு களித்தனர். நுழைவுக் கட்டணம் மூலம் மட்டும் வசூலான தொகை ரூ.8.91 இலட்சம். நிகர லாபமாக அரசுக்கு ரூ.7.41 இலட்சம் கிடைத்தது.

கடந்த நிதி ஆண்டில் (1994-95) இதுவரை மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், காரைக்குடி, தருமபுரி, வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் 8 அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன.

இவற்றுள் எட்டாவது பொருட்காட்சி, தற்போது திருச்சியில் நடைபெற்று வரும் பொருட்காட்சியாகும். இந்த 7 அரசுப் பொருட்காட்சிகள் மூலம் அரசுக்கு ரூ.59.56 இலட்சம் நிகர இலாபம் கிடைத்துள்ளது.

ஆரம்ப காலம் தொட்டு இதுவரை தமிழ்நாடு முழுவதும் நடந்து முடிந்த 79 பொருட்காட்சிகள் மூலம் அரசுக்கு மொத்த வருமானம் ரூ.7.62 கோடியும் அனைத்துச் செலவுகளும் போக, நிகர லாபமாக ரூ.5.14 கோடியும் கிடைத்துள்ளது.

மதுரையில் கடந்த ஆண்டு வரை நடைபெற்ற 13 பொருட்காட்சிகள் மூலம் மட்டும் அரசுக்குக் கிடைத்த நிகர இலாபம் ரூ.56.43 இலட்சமாகும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே, அரசு நேரடியாகப் பொருட்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருவது மட்டும் அல்லாமல், இலாபகரமாகவும் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

– துரை. தாமரைச் செல்வம்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்

All under one Roof

JET DYEING

Automatic Drier with all facility for Hosiery Export & Local

QUALITY DYEING - FAST DELIVERY - BULK SUPPLY

ROOPA PROCESSING

(BALU GARDEN)

S.F. No.119&1, Kunnankalpalayam,

Arulpuram (P.O.) TIRUPUR 641 605

Phone: 710 950, 710 433

Sri Arun Chemical Industries

Mfrs: RAJ SOFT, RAJ FIX & RAJPAL 2B, BVN

Our Sister Concern:

BALU BLEACHING - BALU STEAM - BALU SCREENS - BALU CURING

தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா

தமிழக அரசின் சார்பில், பெரியார் மாவட்டம், காங்கேயத்தில் உள்ள பி.எஸ்.ஜி. பொன்னம்மாள் திருமண மண்டபத்தில் தீரன் சின்னமலையின் 239-வது பிறந்தநாள் விழா சிறப்பாக 1.4.95 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் தீரன் சின்னமலையின் சந்ததியினர் 10 பேர்களுக்கு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். பிறகு அவர் பேசியதாவது:

"இந்திய நாடு தீரன் சின்னமலை போன்ற வீரர்கள் நிறைந்த நாடு. தீரன் சின்னமலை இந்த நாட்டுக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரன் ஆவார். இதை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெள்ளையர்களின் குதிரைப் படையைக் கொங்கு மண்டலத்திலிருந்து, வீரனாகத் தனித்து நின்று தீரன் சின்னமலை விரட்டியடித்தார். தீரன் சின்னமலைக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் தீர்த்தகிரி. வெள்ளையர்களுக்கு எதிராக வரிகொடா இயக்கத்தை நடத்தினார். சமையல்காரன் ஒருவன் தீரன் சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான். இதனால் தீரன் சின்னமலையை வெள்ளையர்கள் பிடித்து சங்ககிரிக் கோட்டையில் தூக்கிலிட்டுக் கொன்றனர். அவர் அழிந்துவிட்டார். ஆனால், அவரது வீரம் அழியவில்லை. அவர் சிந்திய இரத்தத்தில் சுதந்திர மலர்கள் பூத்தன. அந்த மலர்கள் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன" என்றார்.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தியாகிகளை மதித்து அவர்களுக்குப் பல்வேறு நன்மைகளைப் புரட்சித்தலைவி செய்து வருகிறார். தியாகி தீரன் சின்னமலைக்குப் பிறந்தநாள் விழா நடத்தி அவரது வாரிசுகளைக் கவுரவிக்கும் முதல்வராகப் புரட்சித்தலைவி விளங்குகிறார்.

தீரன் சின்னமலை வீரத்தின் சிகரமாக விளங்கினார். அவர், திப்புசுல்தானுடன் சேர்ந்து வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்தார். 'வெள்ளையனே வெளியேறு' என்று வீர முழக்கமிட்டவர். வெள்ளையர்களின் பீரங்கிப் படைகளைக் கண்டு பயப்படாதவர். அவரது வீர தீரச் செயல்களை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. அவருக்குச் சிறப்பு செய்யும் வகையில் புரட்சித்தலைவர் "தீரன் சின்னமலை" பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கினார். ஈரோட்டில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குத் தீரன் சின்னமலை பெயர் சூட்டப் பட்டது. புரட்சித்தலைவி, தீரன் சின்னமலையின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்கி கவுரவித்து வருகிறார். தீரன் சின்னமலை கொங்கு மண்டலத்தில் வணங்கா முடியாகத் திகழ்ந்தவர். தமிழன் என்றும் யாருக்கும் தலை வணங்கமாட்டான் என்று சுட்டிக் காட்டியவர்" என்றார்.

தீரன் சின்னமலையின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு துரை இராமசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்:

"இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்காக உயிர் நீத்த தியாகியாகத் தீரன் சின்னமலை விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்குப் புரட்சித்தலைவி, பிறந்த நாள் விழா நடத்திச் சிறப்பித்துள்ளார். தியாகிகளுக்கு விழா நடத்துவதில் புரட்சித்தலைவிக்கு நிகர் அவர்தான். சரித்திரம் படைத்த நாயகர்களை இன்று சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கும் நாயகி பாராட்டுகிறார். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மனதில் இடம் பெற்ற டாக்டர் அம்பேத்கருக்குச் சென்னையில் புரட்சித்தலைவி சிலை அமைத்தார். அதுபோல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கும், சென்னையில் சிலை வைத்தார். அவர் பிறந்த பசும்பொன் கிராமத்தில் அவருக்கு நினைவாலயம் கட்டினார். மற்ற முதல் அமைச்சர் செய்யாததைப் புரட்சித்தலைவி செய்து வருகிறார். போரில் எதிரிகளைத் தீரன் சின்னமலை புறமுதுகுக் காட்டி ஓடச் செய்தார். வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்" என்று கூறினார்.

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் பேசுகையில், "தீரன் சின்னமலை வீரத் தமிழனாக வாழ்ந்தார். வீரத்தின் தியாகச் சுடராக விளங்கியவர் அவர். கொங்கு மண்டலத்திற்குப் பெருமை சேர்த்தவர். தாயகம் சுதந்திரம் அடைய வேண்டும் என்று வெள்ளையர்களை எதிர்த்துப் போராடினார்" என்றார்.

விழாவில், 153 பேருக்கு ரூ.4.20 இலட்சம் மதிப்புள்ள நலத் திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர்கள் பல்வேறு துறைகளின் மூலம் வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு சி. மாணிக்கம், திரு வே. பெரியசாமி, திருமதி கவிநிலவு தர்மராஜ், திரு வி.பி. பெரியசாமி, பெரியார் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் திரு கே.கே. காளியப்பன், மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு ஆர்.என். கிட்டுசாமி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு கவுந்தி மணிவண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மு. கிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்.

படிப்பு எதற்கு? அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் - நாணயமாய் வாழ்வதற்கு.

- தந்தை பெரியார்

பாக்ஜலசந்தியை நீந்திக் கடந்து

உலகச் சாதனையை எட்டிப் பிடித்த எட்டு வயதுச் சிறுவன் !

நீச்சல் வீரர்களுக்குச் சாதனை புரிய சவால் விடும் இடமாக, பாக்ஜலசந்தி விளங்கி வருகிறது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள சுமார் 32 கி.மீ. தூரம் கொண்ட பாக்ஜலசந்தி ஆபத்து நிறைந்த பகுதியாகும். எனவே, இந்தக் கடல் பகுதியை நீந்திக் கடப்பது சாதனைக்குரிய செயலாகக் கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழகத்தின் இளம் நீச்சல் வீரன் குற்றாலீசுவரன் தனியாக 32 கி.மீட்டரை 16 மணி நேரத்தில் நீந்திக் கடந்து புதிய சாதனை நிகழ்த்தினான்.

27.3.95 அன்று இந்த பாக்ஜலசந்தியை அருண்பாலாஜி, சிறுமி சவ்வி, மற்றும் சிறுமி ரூபாலி மூவரும் கடந்தனர்.

அருண்பாலாஜி

அருண்பாலாஜி (வயது $8^1/_2$) சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவன். தந்தை பெயர் ஜெயபாலன். தாயார் பூங்கோதை. அருண்பாலாஜி செட்டிநாடு வித்யாசிரமம் பள்ளிக்கூடத்தில் 4-ஆம் வகுப்பு படித்துவருகிறான். அருண்பாலாஜி $5\ ^1/_2$ வயதில் முதலில் லிம்கா சாதனைக்காக, 5 ஆயிரத்து 600 மீட்டர் நீந்தி இருக்கிறான். தங்கக் கடற்கரையில் இருந்து சீரணி அரங்கம் கடற்கரை வரை 20 கி.மீட்டர் தூரத்தை ஆறரை மணி நேரத்தில் நீந்திக் கடந்துள்ளான்.

சிறுமி சவ்வி

சிறுமி சவ்வி (வயது $11\ ^1/_2$) கல்கத்தாவைச் சேர்ந்தவள். 7-ஆம் வகுப்பு மாணவி, தந்தை பெயர் மதான். தாயார் பெயர் மாலி. சிறுமி சவ்வி அந்தமான் நீலித்தீவில் 34 கி.மீட்டர் துரத்தை 11.52 மணி நேரத்தில் நீந்திக் கடந்தவள்.

சிறுமி ரூபாலி

ரூபாலி (வயது 13) இவர் 8-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். தந்தை பெயர் ராமதாஸ். இவர் (ரூபாலி) இங்கிலிஷ் கால்வாயை 16.7 மணி நேரத்தில் (56 கி.மீட்டர்) 1994-ஆம் ஆண்டு கடந்தார். இந்தியாவில் 2-வது இளம் வீராங்கனை என்ற பட்டம் பெற்றவர்.

பாக்ஜலசந்தியை நீந்தி 27.3.95 அன்று மாலை 5 மணியளவில், அருண்பாலாஜி, சவ்வி, ரூபாலி,

With best compliments

for Excellence in Engineering Education

KARUNYA INSTITUTE OF TECHNOLOGY

KARUNYA NAGAR, COIMBATORE 641 114.

(Telephone 851608/851618)

(Approved by Government of Tamil Nadu, Recognised by the All India Council for Technical Education, New Delhi and affiliated to Bharathiar University, Coimbatore)

Founders: Dr. D.G.S. DHINAKARAN, Ph.D.,
Dr. PAUL DHINAKARAN, Ph.D.,

(Totally residential for both boys and girls)

HIGHLIGHTS OF THE COLLEGE

1. Academic Instruction & Excellent Results
2. Stress on Discipline & Character Building
3. Situated amidst scenic beauty, surrounded by enchanting mountains & fresh air.
4. Modern hostel facilities for all students.
5. Availability of excellent Play grounds & modern gymnasiums
6. Availability of Bank, Post Office & Hospital

COURSES OFFERED

I. B.E. Degree Course (4 years) in
   a) Mechanical Engineering
   b) Electronics & Communication Engineering
   c) Civil Engineering
   d) Electrical & Electronics Engineering
   e) Computer Science & Engineering

II Post Graduate Courses in
   1. Business Administration (M.B.A.)
   2. Computer Applications (M.C.A.)

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ செந்தில்
இன்ஜினியரிங் இண்டஸ்டிரீஸ்

ஏ.12 கோவை இண்டஸ்டிரியல் எஸ்டேட்
இண்டஸ்டிரியல் எஸ்டேட் அஞ்சல்,
கோவை 21.

நமது பண்பாடு

பாவலர் பாலசுந்தரம் அவர்கள்

நான் தஞ்சையில் பிறந்ததற்காக இன்றைக்கு மகிழ்ச்சியடைகிறேன். அதுமட்டுமல்ல, தஞ்சையில் பிறந்து இதுவரையில் வாழ்வதற்காகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏனென்றால், இராஜராஜன் வாழ்கின்ற காலத்திலே ஒரு பெரிய கோயிலைக் கட்டினான். அவன் எடுக்காத விழா இல்லை. ஆனால், அன்றைக்கு இந்தக் கோயிலோடு அந்த விழாக்களைக் காணுகின்ற பேறு எனக்குக் கிடைக்கவில்லை. இன்றைக்கு அதே இராஜராஜ அருள்மொழித் தேவன் ஒரு பெண் உருவத்திலே இந்தத் தஞ்சையில் இந்த மாநாட்டை- உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி என்னைக் காண வைத்திருக்கிறான். அதற்காக நான் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி செலுத்துகிறேன். அவர்கள் பன்மொழிகளில் வித்தகர். பல கலைகளை அறிந்தவர். எனவே கலைமகள் என்று சொல்லுவதிலே தவறு இல்லை. சிறந்த கலைமகளாகவும், தமிழகத்தின் சிறந்த தலைமகளாகவும் அவர்கள் வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அருட்கண்ணோட்டத்திடையே இந்த விழா சிறப்பாக நடைபெறுவது மட்டுமல்ல, நாமெல்லாம் எதிர்பார்க்கின்ற இந்தத் தமிழுக்குரிய ஏற்றம் எல்லாம் இந்தக் காலத்திலே, இப்போதே, இன்றே நிகழும் என்று நான் எண்ணுகின்றேன். அதையே எதிர்பார்க்கின்றேன்.

அடுத்து, தொல்காப்பியர் வாழ்வியல், தொல்காப்பியர் காலத்து வாழ்வியல் என்பது எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு. வாழ்வியல் என்பது அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் ஒன்றும் மாறுபடவில்லை. ஏனென்றால் உடுக்கின்றோம், உண்ணுகின்றோம். கணவன் மனைவியாக வாழ்கின்றோம், அரசு அமைந்திருக்கிறது, ஆட்சி நடைபெறுகிறது, படைகள் இருக்கின்றன. காவலர்கள் இருக்கிறார்கள், விருந்தினர்கள் வருகின்றார்கள். இந்த நிகழ்ச்சிகள் இரண்டாயிரம், ஏன் மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தேகூட ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனால், ஒரே ஒரு வேறுபாடு, அன்றைக்கு முடியாட்சி இருந்தது. இன்றைக்கு மக்களாட்சி நிகழ்கின்றது. இந்த வேறுபாட்டிலே எவ்வளவு தூரம் மக்கள் நாகரீகம் அடைந்திருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.

அன்றைக்கு அரசனுடைய கட்டளையை ஏற்று எல்லாம் நிகழ்த்தப்பட்டன. இன்றைக்கு மக்களுடைய கட்டளையாலே எல்லாம் நிகழ்கின்றன. அன்றைக்கு வாழ்வை அகம், புறம் என்று இரண்டாகப் பிரித்து ஆசிரியர்கள் பேசினார்கள். அக வாழ்க்கை என்பது கணவனும் மனைவியுமாக மக்களைப் பெற்று, விருந்தோம்பி வாழ்வது. அது இன்றைக்கும் நடைபெறுகிறது. ஆனால், அன்றைய தினம் உடுத்தியிருந்த உடை இன்று மாறுபட்டிருக்கலாம். உண்ணுகின்ற உணவு வேறுபட்டிருக்கலாம். ஆனாலும் உணர்ச்சிகள் வேறுபடவில்லை. பசியிலே வேறுபாடில்லை; காதலிலே வேறுபாடில்லை; இன்னும் மற்ற மனிதப் பண்பாட்டிலே எந்த வேறுபாடும் இல்லை.

தொல்காப்பியர் காலத்து மக்கள் சிறந்த வீரர்களாக இருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். காரணம், இன்றைக்கு மக்களாட்சியிலே இராணுவம் தனி ஒரு பகுதியாக இருக்கிறது. அன்றைக்கு முடியாட்சியிலே இராணுவத்தினராக மக்களே இருந்தார்கள். எனவே, நிலைப்படையாக இருந்த ஒரு பகுதியைத் தவிர, பிற நாடுகளோடு போர் நிகழ வேண்டுமென்றால், அந்தக் குடிமக்கள் அத்தனைப்பேரும் வீரர்களாகச் சென்றார்கள். அவர்களை வீரர்களாகத் தயாரித்தவர்கள் அவர்களுடைய பெற்றோர்கள்.

சரவணவடிவு மற்றும் சந்துரு ஆகிய 5 பேர் கொண்ட குழு நள்ளிரவு 12 மணிக்கு தலைமன்னார் கடலிலிருந்து குதித்தனர்.

தலைமன்னார் பழைய கலங்கரை விளக்கத்தில் இருந்து போட்டி ஆரம்பித்தது. கப்பல் கேப்டன் பி.எஸ். ஜா, வான்த்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு போட்டியைத் தொடங்கி வைத்தார், வீரர்கள்-வீராங்கனைகள் கடலுக்குள் பாய்ந்து தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருபுறமும் படகுகள் வந்தன. எந்திரத் துப்பாக்கி ஏந்திய கடற்படை வீரர்கள் அவற்றில் இருந்தனர். வீரர்களின் இரண்டு பக்கமும் ராட்சத விளக்குகள் பொருத்திய படகுகளும், வீரர்களுக்கு ராட்சத விளக்கு பொருத்திய பைலட் படகும், வீரர்களுக்குப் பின்னால் மற்றொரு படகும் சென்றன. மேலும் இந்தியக் கடற்படை ஹெலிகாப்டரும் வானில் பறந்து பாதுகாப்பு அளித்தது. இவர்கள் அனைவரும் மின்னல் வேகத்தில் தனுஷ்கோடியை நோக்கி நீந்தினார்கள். ஆனால், அவர்களில், அருண்பாலாஜி துடிப்போடு நீந்தினான். ஆரம்பம் முதல் அருண்பாலாஜியே முன்னிலையில் இருந்தான்.

நீச்சல் போட்டியில் இதுவரை எந்தப் போட்டியாளரும் காட்டியிராத வேகத்தில் அருண்பாலாஜி நீந்தினான். கடலில் பொங்கி எழுந்த அலைகளையும் சமாளித்து அவன் முன்னேறினான்.

நள்ளிரவு 12 மணிக்குத் தொடங்கி, மறுநாள் காலை 10.30 மணியளவில் அருண்பாலாஜி தனுஷ்கோடியில் கரையேறினான்.

மனித சமுதாயத்தில் மனக் கவலை ஏற்படுவதற்கு முதல் காரணம், சமதர்மம் சமத்துவம் இல்லாத தன்மையேயாகும். அதாவது பேதநிலை வாழ்வே யாகும்.

அறிவும், அனுபவமும், அவற்றை ஒட்டிய சிந்தனையும் ஏற்படாதவரையில், மனித இனம் கவலையற்ற வாழ்வை அடைய முடியாது என்பது திண்ணம்.

11 மணியளவில் சல்வியும், 11.30 மணியளவில் ரூபாலியும் கரைக்கு வந்தனர். மேலும் இவர்களது பாதுகாப்புக்காக நீந்திய சரவணவடிவு அனைவரின் சாதனையை முறியடிக்கும் வகையில் 10.15 மணிக்கே கரையை அடைந்தார்.

அருண்பாலாஜி நீந்திக் கடந்த 10.30 மணி நேரமும் உலகச் சாதனையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. 8 வயதிற்குள் விரைவாக 32 கி.மீட்டர் தூரத்தை உலகிலேயே யாருமே நீந்திக் கடக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அருண்பாலாஜி உலகச் சாதனை புரிந்தவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

தமிழ்நாடு டிரையாத்லிக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இவர்கள் அனைவருக்கும் அன்று மாலை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியர் திரு இல. கிருட்டினன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அருண்பாலாஜி, சல்வி, ரூபாலி, சரவணவடிவு ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர் பொன்னாடை போர்த்தி வலம்புரிச் சங்குகளைப் பரிசாக வழங்கிப் பேசும்போது, "இராமேஸ்வரம் மண்ணுக்கு அருண்பாலாஜி போன்ற சாதனை வீரர்களால் பெருமை சேர்க்கப்பட்டு உள்ளது. உலகச் சாதனை புரிந்த அருண்பாலாஜிக்குத் தேவையான உதவிகளைத் தமிழக அரசு செய்யும். மேலும் விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து, பல்வேறு விதமான உதவிகளையும் செய்ய அரசு காத்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைந்திட தமிழ்நாடு டிரையாத்லிக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தன.

துரை. ராஜ்குமார்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம்.

கோவையில் மகளிர் மேம்பாடு

கோயம்புத்தூர் மாவட்டத்து மக்கள் பெரிதும் உழைப்பையே நம்பியிருக்கிறார்கள்; ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் ஏதாவதொரு தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு உழைப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் பல பெண்கள் மசாலா பவுடர், கிடுகு தயாரித்தல், சுண்ணாம்புக் காளவாய் போடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

காரமடையில் உள்ள நரிக்குறவர் நலச் சங்கப் பெண்மணிகள் பச்சைமணி, பாசி மணி, பவழம் கோத்து விற்கும் பணியில் தீவிரம் காட்டிவருகின்றனர்.

குறிச்சி பேரூரில் உள்ள பெண்மணிகள் ஒன்று சேர்ந்து பலவகையான வண்ணப் பொம்மைகள் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். அங்கேயே, செல்வி கே. பேபி என்பார் தலைமையில் சில இளம் பெண்கள் ஒன்றுகூடி பைண்டிங், அரசுப் பயனுக்கான விண்ணப்ப மனுக்கள் தயாரித்தல் , ரூலிங், நோட்டுப் புத்தகம் தயாரிப்பு என அச்சகத் தொழிலை அழகுற மேற்கொண்டிருக்கிறார்கள்.



'டோக்ரா' திட்டத்தின்மூலம் நிதியுதவி பெற்று, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திம்மநாயக்கன்பாளையம் கிராமப் பெண்கள் புடவை நெசவு செய்து வருகிறார்கள்.

அந்த வீரன் போர்க்களத்திலே வெற்றி பெற்றான் என்றால், மகிழ்வாள் அவன் தாய். அவன் தோல்வியுற்றான் என்றால், எப்படித் தோல்வியுற்றான் என்று கேட்டு அதிலே இழுக்கு நேருமானால், தன்னுடைய மார்பையே அறுத்துக் கொள்வேன் என்று சொல்லுகின்ற அந்த அளவுக்கு வீரம் பொருந்திய தாய்மார்கள் இருந்தனர்.

வாழ்க்கையிலே ஒரே ஒரு சின்ன செய்தியை மட்டும்தான் தமிழ் அறிஞர்கள் ஒரு குறையாகச் சொல்லுகிறார்கள்; தமிழனுடைய வாழ்விலே ஒரு பரத்தையர் ஒழுக்கம் என்று ஒன்று இருந்தது என்று. அது எவ்வளவு பெரிய அறியாமை என்று நான் சொல்லவில்லை. அதை விளக்க நேரமாகும். தொல்காப்பியர் காலத்திலே, உலகத்தின் மற்றைய நாடுகளின் மற்றைய மக்கள் எப்படி ஆணும் பெண்ணுமாக வாழ்ந்தார்கள் என்பதைச் சரித்திரப் பூர்வமாக எண்ணிப்பார்த்தால், தமிழகத்தில் பரத்தையர் வாழ்வு என்பது எப்படி பண்பாட்டிலும், நாகரீகத்திலும் சிறந்தது என்பது விளங்கும்.

அரசன் என்று சொன்னால் அமைச்சன் உண்டு. அரசு என்று சொன்னால் படை உண்டு. படை என்று சொன்னால் நாற்படைகள் உண்டு. யானைப் படையை எடுத்துக் கொள்வோம், குதிரைப் படையை எடுத்துக்கொள்வோம், குதிரைக்கு, சேணம் போடுகின்ற ஆளும் இருப்பார்கள். அதற்குத் தீனி கொடுக்கும் உழவர்களும் இருப்பார்கள். வணிகர்கள் இருப்பார்கள். மனித வாழ்க்கையிலே ஏற்றத்தாழ்வு என்பது என்றைக்கும் நிலையானது. ஆனால், அன்றைக்கு அவர்கள் எல்லோரும் பசியாற உண்டார்கள். எல்லோரும் உறையுள் பெற்றிருந்தார்கள், எல்லோரும் நன்கு உடுத்தினார்கள் என்ற வேறுபாடுதான் அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் உள்ள சிறிய வேறுபாடாகும்.

அன்றைக்குத் தனி முதலாளித்துவம் எதுவுமே ஏழைகளைச் சுரண்டவில்லை. அன்றைக்கு அவர்களே ஏழைகளாகவும் இருந்தார்கள், அவர்களே பணக்காரர்களாகவும் இருந்தார்கள். அரசனைப் பாடிய பெரும் புலவர்கள், யானை, தேர் முதலிய பெரும் செல்வங்களைப் பெற்றார்கள். ஆனால், அடுத்த கிழமையே அவர்கள் வறுமையாளர்களாக இருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் ஈத்துவக்கும் பண்பை, பகுத்துண்ணும் பண்பை அந்தக் காலத்திலே பெற்றிருந்தார்கள்.

எனவே, பரத்தையர் ஒழுக்கம் என்பது, ஒரு நாட்டிலே கலைகள் வளர வேண்டுமானால், இசை வளரவேண்டுமானால், நாடகம் முதலிய கலைகள் வளர வேண்டுமானால் அதற்கு என்று ஒரு பொறுப்பாளர்கள் அவசியம் இருக்க வேண்டும். எனவே, அவர்களைக் காப்பது அரசனுடைய கடமை. எனவே அரசருடைய அந்தக் கடமையிலே ஒரு பகுதி பரத்தையர் பிரிவு. அது எல்லோருக்கும் வாய்த்ததல்ல. எனக்கும், சாதாரண மனிதர் களுக்கும் அல்ல அது. அரசு கட்டிலிலே வீற்றிருக்கும் அவர்கள் எல்லோரையும் காக்க வேண்டியது, கலைகளைக் காக்க வேண்டியது என்ற ஒரு பொறுப்பினாலே அந்தக் கலைஞர்களைப் பேணினார்கள். அதனை ஊடல் உவகையாகப் பாடுவதற்குத்தான் பரத்தையர் பிரிவு என்பதை வைத்து அங்கே ஊடலும் கூடலும் புலவிநுணுக்கம் உண்டு என்பதற்காக, இந்தத் தொல்காப்பிய ஆசிரியர் அந்தப் பரத்தையர் குறித்து சொல்லுகின்றார். அதை மரபு என ஏற்றுப் பார்க்கும்போது, அந்தக் காலத்திலும் நான்கு பிரிவுகள் இருந்தன. உயர்ந்தோர் இருந்தார்கள். தாழ்ந்தோர் இருந்தார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் மக்களாகவே மதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய தொழில் காரணமாகவே இந்த வேறுபாடு. பின்னர்தான் அது பிறப்பு வேறுபாடாக மாறியது. பிறப்பு வேறுபாடாக மாறிய பின்னர்தான் ஒரு சாரார் அழுத்தப்படுவதற்கும், ஒரு சாரார் உயர்வதற்கும், வஞ்சகர்கள் உயர்வதற்கும், இப்படியெல்லாம் பல்வேறு சூதுகள் வந்தன.

அன்று சூது இல்லை, வஞ்சம் இல்லை. அவரவர்கள் உழைத்தார்கள், வாழ்ந்தார்கள். அந்த வாழ்க்கையை, மன நிறைவான வாழ்க்கையை நாம் மீண்டும் பெறவேண்டும். தற்போதைய நாகரீக வாழ்க்கை நமக்குத் தேவை. அறிவியலில் கிடைக்கின்ற அத்தனை அற்புதங்களையும் நாம் அனுபவிக்க வேண்டும். ஆனால், நம்முடைய பண்பாட்டிலே, தொல்காப்பியர் காலத்தில் இருந்த பண்பாடு மீண்டும் பிறக்க வேண்டும்.

(உலகத் தமிழ் மாநாட்டில், 2.1.95 அன்று நடந்த கருத்தரங்கில், 'தொல்காப்பியத்தில் வாழ்வியல் நெறி' என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து).

வளம் மிகுந்த வால்பாறை!

சிறந்த சுற்றுலாத் தலமாக மாறிவரும் வால்பாறையில் தான் மற்ற மலைப்பிரதேசங்களைவிட தேயிலைப் பயிர்ச் செலவு அதிகம். 40 கொண்டை ஊசி வளைவுகள் உள்ள இம் மலையில் உள்ள 'குரங்கருவி' பார்த்து மகிழவேண்டிய ஒன்று!

வால்பாறை நகரியத்தில் உள்ள எம்.ஜி.ஆர் நகரில் ரூ.20 ஆயிரத்தில் அண்மையில் மலைச்சரிவு பாதுகாப்புச் சுவர் ஒன்று கட்டியுள்ளனர். 560 மீட்டர் நீளக் 'கம்முகுட்டி ரோடும்' 4 கிலோமீட்டர் நீளச் 'சிதம்பரனார் ரோடும்' போட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டில் இங்கே ஒரு பேருந்து நிலையம் ரூ.6.72 இலட்சம் செலவில் அமைத்துள்ளனர். சுற்றுலா மாளிகை, சமூக நலக் கூடமெல்லாம் கட்டும் பணி மிக வேகமாக நடைபெற்று வருகிறது. கோடை விழா தொடர்ந்து இங்கே நடத்தப்பெற அரசு அனுமதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

இப்போதே நகரின் முக்கியச் சாலையிலெல்லாம் ஒயிலாட்டம், மயிலாட்டம் போன்றவற்றால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்விக்கப்படுதை நாம் கண்டோம்.

ஊருக்கு வெளியே, மலைப் பாதை ஓரத்தில் ரூ.45,000 செலவில், பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ், ஒரு சுடுகாடு கட்டடம் கட்டப்படுகிறது.

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ், ஒரு மாருதி கார் முதல் பரிசாக அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததே? அது இந்த வால்பாறை நகரியத்திற்குத்தான் கிடைத்திருக்கிறது!

இங்குள்ள கரிமலை எஸ்டேட்டில், பாலாஜி கோயிலொன்று தனியாரால், கட்டப்பட்டுள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ள இக்கோயிலுக்கு மக்கள் சாரிசாரியாக வந்தவண்ணமிருக்கின்றனர்.

வால்பாறை மலைச் சிகரத்தை -அங்கே தேயிலை பயிராவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை இருப்பதை முதலில் கண்டுபிடித்தாராம் கார்வர் மார்ஷல் துரை என்பார்; அவருடைய சிலை கம்பீரமாக நிற்பதை ஓரிடத்தில் நாம் காணமுடிந்தது!



WITH BEST COMPLIMENTS FROM

○ ***Srinivas Theatre***

○ ***Shanthi Theatre***

○ ***Sivam Theatre***

Tiruppur

அரிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இரு அரிய கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்துள்ளது. இவற்றில் ஒன்று திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், வெண்மந்தை என்ற ஊரில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு.மு.இராஜமாணிக்கம் இக்கல்வெட்டை அறிந்து இத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மதுரை கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டைய முதலாம் பராந்தகச் சோழனின் 33-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி.940-ல் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு வெங்கால நாட்டுக் கருவூரைச் சேர்ந்த கருவூர் தலைமகன் கசுவரன் என்பவன் வெண்குன்றக் கோட்டத்து வாதவூர் நாட்டு வெண்பழந்தை என்ற ஊரில் ஏரிப்பட்டி நிலம் கொடுத்து அதற்கு ஒரு தூம்பும் (மடை) அமைத்திருக்கின்றான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. வெண்மந்தை என்று அழைக்கப்படும் இவ்வூரின் பழைய பெயர் வெண்பழந்தை என்பது இக்கல்வெட்டின் மூலம் தெரிகிறது.

சோழர் வரலாற்றில் ஆதித்தசோழன் தன்னாட்சியின் கீழ் கொங்கு, சேர நாடுகளை முதலில் கொண்டு வந்தான் என்று கூறபபடுகிறது. இவனது மகன் பராந்தகச் சோழன் கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வந்த தங்கத்தைக் கொண்டு சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலின் விமானத்தைப் பொன்வேய்ந்தான். கொங்கு மற்றும் சேரநாட்டுச் சிற்றரசுகளும் தலைவர்களும் பராந்தகச் சோழனுடன் நல்லுறவு கொண்டிருந்ததின் காரணமாக வெகு தொலைவிலுள்ள தொண்டை நாட்டினும் ஏரிகள் வெட்டிப் பாசன வசதிகள் செய்வதற்குக் கொடையளித்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

இரண்டாம் கல்வெட்டு திருச்சி மலைக்கோட்டை கோயில் வடபகுதியில் பாறையில் காணப்படுகிறது. மலைக்கோட்டைக் கோயில் நிர்வாக அலுவலர் திரு.முருகேசன் தந்த தகவலின்படி இத்துறை திருச்சிப் பதிவு அலுவலர் திரு.தரன் இத்துறை இயக்குநரின் கவனத்திற்கு இக்கல்வெட்டைக் கொண்டு வந்தார். இக்கல்வெட்டு எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 14 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இது எனலாம்.

ஒரு முனிவர் சித்தி அடைய வேண்டும் என்பதற்காக ஒரு நிலவறையிலுள் நுழைந்திருக்கிறார். அப்பொழுது தன் சீடர்களிடம் தான் மண் மீதோ அல்லது பொன் மீதோ ஆசை கொண்டு செல்லவில்லை, சித்தியடையவே செல்கின்றேன். எனவே எக்காரணத்தைக் கொண்டும் இதனைத் திறக்கக்கூடாது என்று கூறுவது போல் கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் அருகில் இரு திருவடிகளும் ஒரு முனிவரது உருவமும் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. இது போன்ற செய்தி தரும் கல்வெட்டுக்கள் இதுவரை தமிழ் நாட்டில் அறியப்படவில்லை. ஆதலால் இது ஒரு சிறப்பாகப் புதிய செய்தி தரும் கல்வெட்டாகும்.

தன்னையே தான் உணர வேண்டுமாயின், நித்திரைக்குச் செல்லும் முன்பாக அன்றைய தினம், தான் புரிந்த நல்லவை மற்றும் தீயவை ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பது அவசியம். அறிந்து செய்தவற்றையும் அறியாது செய்தவற்றையும் கருதிப் பார்க்க வேண்டும். இதனால் தன்னையே உணர்ந்து கொள்ள அவனுக்கு முடியும்.

—சாக்ரடீஸ்

தமிழ் நிலை பெற வேண்டும்!

டத்தோ ஜி. வடிவேலு அவர்கள்

பேரவைத் தலைவர், மலேசிய செனட்,
பொதுச் செயலாளர், மலேசிய இந்தியன் காங்கிரஸ்

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்ற தமிழ் முழக்கத்தோடு உலகத் தமிழர்கள் புத்தாண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள். இந்தப் புத்தாண்டு தமிழ்த் தாய்க்கு அணி செய்து அழகு பார்க்கும் புத்தாண்டு. ஜனவரி முதல்நாள் தமிழுக்கு ஒரு ஆராதனை என்ற பெயரில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி சாதனை படைத்து கோலாகலமாக மலர்ந்து இருப்பது கண்டு எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுவதை இங்கே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அந்த இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, ஜனவரி முதல் நாள் தமிழ்த் தாய்க்கு முடிசூட்டும் மகத்தான நாள்— அது ஒன்று. இரண்டு, அந்த நாள் எனது பிறந்த நாள். தமிழ் அன்னையை உலகமே சீராட்டிப்பாராட்டும் ஒரு பொன்னாள், எனக்குப் பிறந்த நாளாக அமைந்திருப்பதை நான் பெற்ற பேறாகக் கருதுகின்றேன். இதில் இன்னொரு சிறப்பு அடங்கி இருப்பதையும் இங்கே நான் சொல்வது பொருத்தம் என்று நினைக்கின்றேன். தமிழ்ப் பரணி பாடும் தஞ்சைத் தரணி என் பெற்றோர்கள் பிறந்த மண். எனது தந்தை பிறந்தது பட்டுக்கோட்டையின் அருகாமையிலுள்ள பொன்னவராயன் கோட்டை என்ற ஒரு கிராமம். என் தாய் பிறந்தது மன்னார்குடி அருகாமையிலுள்ள பரவாக்கோட்டை என்ற ஒரு கிராமம். என் பெற்றோர் பிறந்த மண்ணில், நான் பிறந்த தேதியில் தமிழுக்கு ஒரு திருவிழா எடுப்பதும், இந்த விழாவில் என்னைப் பேச அழைப்பதும் மறக்க முடியாத நிகழ்வாகவும், நினைவாகவும் அமைந்து விட்டது. இதை நான் செய்த பெரும்பேறு என்றே நான் கருதுகின்றேன்.

நாங்கள் இங்கே வந்திருக்கும் நோக்கங்களில் முக்கியமான நோக்கம் ஒன்று என்னவெனில், தமிழையும் தமிழர்களையும் பிரிக்க முடியாது என்று எங்களுடைய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதன் நோக்கம் என்னவென்றால், அங்குள்ள தமிழ் வளர்ச்சிக்கு எந்த பாதகமும் இல்லாமல் அரசு தொடர்ந்து தமிழ்ப் பள்ளிக்கூடங்களையும் பாதுகாக்க வேண்டுமென்பதே எங்களுடைய குறிக்கோள். ஆகவே, எங்கெல்லாம் தமிழ் மாநாடுகள் நடக்கின்றதோ அங்கெல்லாம் நாங்கள் கண்டிப்பாகப் போவோம் என்றே இந்த இடத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே ஆட்சி மொழி என்ற பொருளில் இந்த அரங்கம் நடைபெறுகிறது. நான் மலேசிய நாட்டின் நாடாளுமன்ற மேலவையின் சபாநாயகர் என்ற முறையில் நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு மதிப்பு அளித்துச் செயல்படும் நிலையில் இருப்பதால், ஆட்சிமொழி பற்றி விரிவாகப் பேசும் வாய்ப்பு இல்லை. ஆயினும், மகாநாடு எனக்கு வழங்கியுள்ள இந்த மரியாதையின் காரணமாகப் பொதுவான சில கருத்துக்களை மட்டும் இங்கே உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இந்தியர், சீனர், மலாய்காரர்கள் ஆகிய பிரதான சமூ

கங்கள் வாழும் எங்கள் மலேசிய நாட்டில், மலாய் மொழிதான் ஆட்சிமொழியாக அமைந்து இருக்கிறது. தமிழ் மொழிக்கும், சீன மொழிக்கும் எல்லாத்துறைகளிலும் அங்கீகாரம் அளிக்கப்பட்டு இருந்தாலும், அரசாங்கச் சேவைகளில் அனைத்திலும் மலாய் மொழியே ஆட்சி செய்கிறது. அரசுக்கு ஆங்கிலத்தில் எழுதப்படும் கடிதங்கள் "சீல குணக்கன் பாஷா" என்ற முத்திரையுடன் திரும்பி வருவது உண்டு. "சீல குணக்கன் பாஷா" என்றால், தயவு செய்து மலாய் மொழியைப் பயன்படுத்துங்கள் என்று பொருள். மலாய் மொழி பயன்படுத்தப்படாத கடிதங்களுக்கு அங்கீகாரம் கிடைப்பது கிடையாது.

மலேசியாவில் சுமார் 1 1/2 கோடி மக்களால் மட்டுமே பேசப்படும் மலாய் மொழியை ஆட்சிமொழியாகக் கொண்டுள்ள மலேசியா, இன்று உலக அரங்கில் அதிகம் உச்சரிக்கப்படும் நாடாகத் திகழ்கின்றது. இதை நான் இங்கே பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் நாட்டில், நீதி மன்றங்களிலும் மலாய் மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாதத் தொகுப்புகளும், - தீர்ப்புகளும் மலாய் மொழியில்தான் இன்று வழங்கப்படுகின்றன. மலாய் மொழி நீதித் துறையிலும் பயன்படுத்தப்படுவதில், ஆரம்பத்தில் சில சிக்கல்கள் தோன்றினாலும் நாளடைவில் அது மலேசிய வழக்கறிஞர்களுக்குப் பழக்கப்பட்டு விட்டது. என்னைப் போன்ற வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களில் மலாய் மொழியில் வழக்காடுவதில் இப்போது பிரச்சினை

வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுவதே கலை!

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவாமல், குறுக்கே நிற்பது எதுவானாலும், கலை முதலான எந்தப் பெயரால் வந்து நின்றாலும் அது அழிந்துபோகும்.

- டாக்டர் மு.வ

ஏதும் எதிர்நோக்கவில்லை. அதே போன்று செனட் சபையிலும், சட்டமன்றத்திலும், ஊராட்சி மன்றங்களிலும், முழுமையாக மலாய் மொழியில்தான் நாங்கள் பேசவேண்டும் என்று அங்கே கட்டாயம் இருக்கிறது. ஆகவே, மலேசியா இன்றைக்குப் பல மொழிகளுக்குப் பின்னால் தோன்றிய மலாய் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் ஒரு விவசாய நாடாகத் தோன்றிய மலேசியா இன்றைக்குப் பிரமிப்பூட்டும் தொழில் துறை வளர்ச்சி கண்ட நாடாக உயர்ந்திருக்கிறது.

தமிழ் மொழியைவிட எத்தனையோ ஆண்டுகளுக்கு பிறகு தோன்றிய மலாய் மொழி, சுமார் 1 1/2 கோடி மக்களால் மட்டுமே பேசப்படுகின்ற மலாய் மொழி, ஆட்சி மொழியாக, வெற்றிகரமாகச் செயல்படும்போது உலகமெல்லாம் ஓசை எழுப்புகின்ற தமிழ் மொழி, ஆட்சிமொழியாக அரியாசனம் காண்பதில் என்ன தடை இருக்க முடியும். பல மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட இந்தியாவில் தேசிய ரீதியில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்க முடியுமா என்பது சிந்தனைக்குரிய ஒரு விஷயம். இதைப்பற்றி இங்கே கட்டுரை வழங்க வந்து இருக்கும் அறிஞர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள் என்று நானும் கேட்க ஆவலாய் இருக்கின்றேன்.

இங்கே ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மொழி பேசப்படுகின்றது. ஆந்திராவில் தெலுங்கு கேரளாவில் மலையாளம், கர்நாடகத்தில் கன்னடம் என்று அந்த மொழிகள் அமைந்து உள்ளன. இந்த நிலையில் தேசிய ஐக்கியத்திற்குத் தடைக்கல்லாக விளங்கும் சூழ்நிலை ஏற்படலாம் எனச் சிலர் நினைக்கலாம். ஆகவே, இந்தக் கேள்விக்கும் விடை அளிப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். ஆனால் ஒன்று மட்டும் இந்த இடத்தில் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தின் ஆதரவு இருந்தால் மட்டும் எந்த மொழியும் ஆட்சிமொழியாகப் பிரகாசிக்க முடியாது. முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அறிவியல் தமிழ் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறி இருக்கின்றார்கள். இதை நான் முழுமையாக ஆதரிக்கின்றேன். இந்தக் காலகட்டத்தில் அது பொருத்தமான ஒரு கருத்து என்று நான் நினைக்கின்றேன். அதே வேளையில் தமிழில் விஞ்ஞானம் இல்லை என்று சொல்ல முடியாது. காரணம் நான் ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது ஒரு புத்தகத்தைப் படித்தேன். அந்தப் புத்தகம், History of Mathematics by Smith. அதிலே, ஆங்கிலத்திலே அந்த ஆசிரியர் கூறுகின்றார் 'The Greatest single contribution to mankind was India's discovery of Zero,

நல்லதொரு இலக்கியம்...

உள்ளதை உள்ளவாறு கூறுதல் சிறந்த கலை அன்று, உயர்ந்தோர் மாட்டு நிகழ்வதனை எல்லார்க்கும் பொதுவாக்கிக் கூறுவதே நல்ல இலக்கியமாகும்.

- டாக்டர் மு.வ

Otherwise, science could not have advanced to the same level, it has attained today'' அந்தக் காலகட்டம் பாஸ்கல் போன்ற கணித மேதைகள் இருந்தகாலம். ஆகவே, தமிழில் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு அன்றே வித்திட்டவர்கள் தமிழர்கள்தான்.

மலேசியாவில் மலாய் மொழியின் மேம்பாட்டைக் கண்காணிப்பதற்காக "தேவான் பகாசா டான்புஸ்தகா" என்ற அமைப்பை அரசாங்கம் அமைத்திருக்கிறது. மொழி சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களையும் இந்த அமைப்பே கவனித்துக் கொள்கிறது. இதேபோன்று அரசாங்க ரீதியில் தமிழுக்கு ஓர் அமைப்பு ஏற்பட வேண்டும். சற்றுமுன் தலைவர் கூறினார்கள், தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது என்று. எங்கள் நாட்டில் அந்த அமைப்புக்கு முழு நிதியுதவி வழங்கி இந்த அளவுக்கு மலாய் மொழியை வளர்ச்சி அடையச் செய்து இருக்கின்றார்கள். சாதாரண நிலையில் இருந்த மலேசியா மொழியை இன்று அறிவியல் நூல்களும் வெளியிடப்படும் அளவுக்கு அந்த மொழி வியப்பூட்டும் பிரகாசம் கண்டு இருப்பதற்கு, இந்த அமைப்பே காரணமாக விளங்குகிறது.

ஆகவே, தமிழுக்கும் அரசாங்க ரீதியில் ஓர் அமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும். அந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும். அதற்காகப் பொருள் உதவியும் வழங்கப்பட வேண்டும். சட்டரீதியில் அதற்கு ஆதரவையும் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த இடத்திலே வலியுறுத்த ஆசைப்படுகின்றேன்.

தமிழ் ஆட்சிமொழியாக அரியாசனம் ஏறுவதற்கு எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. ஆனால், தமிழுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பது என்பது இங்கே கேள்வியாகும். 'தேவான் பாஷா டான் புஸ்தகா' போல் தமிழ் நாட்டிலும் அமைக்கப்பட்டால், தமிழ் மொழி ஆட்சிமொழியாக வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு எந்தத் தடையும் இருக்காது என்று நான் நினைக்கின்றேன்.

நாங்கள் ஆட்சியில் மலாய் மொழியைப் பயன்படுத்துகின்றோம். உலகத் தொடர்புக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றோம். குடும்பக் கலாச்சாரத்தில் தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் பயன்படுத்துகின்றோம்.

மலேஷியர்களின் முன்னேற்றத்திற்கு மொழிகள் தடையாக இருந்ததில்லை. ஆங்கிலம் இல்லாமல் ஆட்சி நடத்தமுடியும் என்பதற்கு எங்கள் நாடு ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்று நான் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தமிழ் மொழி வெவ்வேறு தொனிகளில் பேசப்படுகிறது. இது சீரமைக்கப்பட வேண்டும். தமிழ் மொழி எல்லோரும் ஒரேமாதிரி பயன்படுத்தப்படுகின்ற சீரான மொழியாக ஆக்கப்பட வேண்டும். தமிழகத்தில் அனைவரும் போற்றிப் புகழும் வண்ணம் புரட்சிகரமாக ஆட்சி செய்யும் வல்லமை பெற்ற முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அவர்கள், தமிழுக்கு ஒரு நிரந்தர அமைப்பை ஏற்படுத்தி தமிழ் மொழியில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்கு உதவுவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

தமிழர்கள் வீரம் செறிந்தவர்கள், விவேகம் நிறைந்தவர்கள். ஆட்சிமொழியாக உலகில் காண்பதற்கு எல்லாத் தகுதிகளும் தமிழுக்கு உண்டு. தமிழுக்குப் பிறகு தோன்றிய சிறு மொழியும் கூட ஆட்சிமொழியாக இருக்கும் போது, தொன்மையும் பழமையும் வாய்ந்த தமிழ் மொழி ஏன் ஆட்சிமொழியாக வர முடியாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு கருத்தை மட்டும், நான், தலைவர் பேசிய ஒரு கருத்தைத் தொட்டுப் பேசலாம் என்று நினைக்கின்றேன். இந்த நாட்டில் இரட்டை மொழிக் கொள்கை என்று கூறி இருக்கின்றார்கள். ஆகவே, அரசாங்கம் எந்த முயற்சி செய்தாலும்கூட, ஆங்கில மோகம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது என்று சொன்னார்கள். ஆனால், இந்த இடத்திலே ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன்.

நான் முறையாகததமிழ் படித்தவன் அல்ல. இரண்டு ஆண்டுகள் மட்டும் தமிழ்ப் பள்ளிக்குச் சென்றவன். அதற்குப் பிறகு எல்லாம்

ஆங்கிலம்தான். இன்றைக்கு வெளி நாட்டில் சட்டக் கல்வியும் பயின்று ஒரு பாரிஸ்டராக 25 ஆண்டுக் காலம் தொழில் செய்திருக்கிறேன். ஆனாலும், எங்கள் நாட்டில் ஆங்கிலம் கற்றவர்கள் இன்றைக்குத் தமிழ் மொழியும் கற்க வேண்டும் என்ற வேட்கை கொண்டு, தமிழை அவர்களாகவே பயின்று வருகின்றார்கள். என்னுடைய மகனும் ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று, பிறகுதான் நான் தமிழ் மொழி கற்கவேண்டும் என்ற எண்ணத்தைக்கூற, நான் அதற்காக ஒரு தமிழ் ஆசிரியரை வேலைக்கு அமர்த்தி அவனுக்கும் தமிழ் கற்றுக் கொடுத்தேன். ஆகவே, மனமாற்றம் இருந்தால் நாம் வெற்றிகரமாக எந்தவொரு குறிக்கோளையும் அடைய முடியும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்தி, தமிழ் நிலைபெற வேண்டுமென்று, எங்களுடைய அரசாங்கம் இந்த வருடம் 25 மில்லியன் டாலர்ஸ், அதாவது 25 கோடி ரூபாயிலிருந்து 30 கோடி ரூபாய்கள் என்று சொல்லலாம். அந்த அளவுக்கு மலாய் நாட்டு அரசாங்கம் தமிழுக்கு ஆதரவு கொடுத்து வருகின்றது. அங்கே இப்போது 452 தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தத் த்மிழ்ப் பள்ளிக்கூடங்கள் நிலையாக நிலைத்து இருக்கவேண்டும். தமிழ் மொழி நிலைத்து இருக்க வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, எங்கே தமிழர்கள் இருந்தாலும் அங்கே தமிழ் நிலைபெற வேண்டும் என்று வாழ்க்கையில் எப்போதும நம்முடைய ஒரு கொள்கையாக எடுத்துக்கொண்டு, எங்கள் தேசத் தலைவர் மாண்புமிகு சா.சாமுவேல் அவர்கள் தலைமையில், எங்களால் முடிந்த தொண்டை நாங்கள் செய்து கொண்டு வருகிறோம்.

ஆதிதிராவிடர்க்கு மாண்புமிகு முதலமைச்சர் உதவி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் பழங்குடியினர் துணைத் திட்டமும் அடங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இத்திட்டத்தின் கீழ் ரூ.42.63 இலட்சம் செலவில், பெரியார், தர்மபுரி, சேலம், கோவை, காமராசர் மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் சிதறி வாழும் பழங்குடியினருக்காகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களையும், வீட்டு வசதித் திட்டங்களையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார். இத் திட்டங்கள், நடப்பு ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ரூ.5.23 இலட்சம் செலவில், சேலம், திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆர்க்காடு அம்பேத்கர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்காக 42 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை அவர்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில் வழங்க ஆணையிட்டுள்ளார். இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மூலம் செயல்படுத்தப்படும்.

நூல் நயம்

கடவுள்

ஆசிரியர்: மகாத்மா காந்தி

மொழிபெயர்ப்பு :ஜெயமணி சுப்பிரமணியம்

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை 625 020

பக்கம் 77 விலை ரூ.8

அண்ணல் காந்தியடிகள், கடவுள் குறித்த தம் அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

"அகிம்சையே என் கடவுள் சத்தியமே என் கடவுள்" என்று கூறும் காந்தியடிகள், "அகிம்சை என்பது மிகவும் ஆற்றல் வாய்ந்த சக்தி. அதுவே ஆன்ம சக்தி அல்லது நம்முன் வதியும் கடவுளின் சக்தி" என்று கோடிட்டுக் காட்டுகின்றார்.

நூல் முழுவதும் கடவுள் தத்துவம் குறித்த கருத்துரைகள் நிறைந்துள்ளன. அவையாவும் படித்து மனத்திலே இருத்திக் கொள்ளத் தக்க அற்புத வரிகள்.

— மறைமலை

யோகாசனம்

ஆசிரியர் தமிழ்மணி

வெளியீடு கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கையம்மன் கோயில் தெரு,
வடபழனி,
சென்னை 26

பக்கம் 128 விலை ரூ.16

இருபது யோகாசனங்களை, ஒவ்வொரு யோகாசனமும் எப்படிச் செய்ய வேண்டும்? பலன் என்ன? பயிற்சிக்கு உகந்த நேரம் எது? என்று படங்களுடன் விளக்கும் நூல்' இது. சில யோகாசனங்களுக்கு ஆசிரியரின் எச்சரிக்கைகளும் உண்டு. யோகாசனம் பயில விரும்புவோர்க்கு நல்ல வழிகாட்டி.

— என். குமாரசாமி

தியாகம் ஞானம் மோனம்

ஆசிரியர்: ஸ்வாமி முருகானந்தா

வெளியீடு: கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி,
சென்னை 600 026.

பக்கம்:96 விலை: ரூ.12

தியானம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? மோனம் என்றால் என்ன? என்பதை விளக்கும் நூல் இது.

மனதை ஒரு நிலைப்படுத்தும் தியானத்தையும் தன்னை அறிய உதவும் ஞானத்தையும், பரம் பொருளை உணர உதவும் மோனத்தையும், சமயப் பெரியார்கள், சித்தர்கள் அருளாளர்களின் வாக்குகளை மேற்கோள் காட்டி தெளிவுபடுத்தியுள்ளார் ஆசிரியர். ஆன்மீக வாதிகளுக்கு இந்நூல் பக்தியமிர்தம்.

— குமார்

மதங்களின் மந்திரவாக்கு

ஆசிரியர்: தங்கமணி

வெளியீடு: சகுந்தலை நிலையம்
58, ஐயப்பச் செட்டித் தெரு, மண்ணடி,
சென்னை 600 001

பக்கம்:76 விலை: ரூ.12

உலகில் பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்படும் எட்டு மதங்களின் வேத நூல்களின் சாரம் இந்நூல். முத்துக் கோத்தாற்போல் சின்னச் சின்ன வாக்கியங்கள், தெளிவான சொற்றொடரின் மூலம் ஒவ்வொரு மதத்தின் போதனைகளும் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

'மந்திர வாக்குகள் மனநலம் ஊட்டும்'. நிச்சயம் இந்நூலைப் படித்தவர்களுக்கு மனநலம் கிட்டும்.

'ஞானானந்தம்'

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்

வெளியீடு: ஓரி நிலையம்,
337, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம்,
சென்னை 600 035.

பக்கம்:104 விலை: ரூ.15

பிள்ளையார் சுழியின் பொருள் என்ன என்பதிலிருந்து, எதற்கு எல்லைக் கோடு வேண்டும் எதற்கு வேண்டாம் என்பன போன்ற விளக்கங்களும் எத்தனையோ தத்துவங்களுக்குப் பொருளும் இந்நூலில் பொதிந்துள்ளன. படிக்கும்போது மனதுக்கு அமைதியும், மகிழ்ச்சியும் தரும் நூல்.

வலியற்ற இயற்கை மகப்பேறும் குழந்தை நலப் பராமரிப்பும்

ஆசிரியர்: டாக்டர் அன்னாஜி

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிமிடெட்,
41 சி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை 600 098.

பக்கம்: 175 விலை: ரூ.24

இந்நூலில், வலியற்ற மகப்பேற்றிற்கான வழிமுறைகள், கருவுற்ற பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், பயிற்சிகள், கருத்தடை முறைகள், குழந்தை வளர்ப்பு, இளம் குழந்தைப் பருவத்து நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்த அறிவியல் விளக்கங்கள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்கள், இளம் தம்பதிகள், தாய்மார்கள் அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

— கு. மல்லிகா

சாதனைப் பூக்களை மலர்விக்கும் சோலைவனம்

கோவை மாவட்டம்

ஆனைமலையின் அடர்ந்த வனப்பகுதி. மஞ்சளான அந்தி நேரம். விடியலிலிருந்து மரத்துண்டுகளை அயராது அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட யானைகள் மாலையில் மாவுத்தர்களோடு தங்குமிடங்களுக்குச் செல்வது வாடிக்கை. ஆனால், இங்கே ஒரு வேடிக்கை !

இந்த யானைக்கூட்டம் ஏன் இங்கே சூழ்ந்து அசைந்தாடியபடி நிற்கின்றன? ஒரு சிறிய குடிசையின் உள்ளே காற்றுக்கேற்றபடி நடனம் புரிந்து கொண்டிருக்கும் மண்ணெண்ணெய் விளக்கின் தீபம் அருகே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் ஒரு அறிவொளி இயக்க ஆசிரியர்.

யானைகளுக்கும் அறிவொளிக்கும் என்ன சம்பந்தம்? ஆச்சரியமாக இருக்கிறதா, அதோ

அவர் பேர் கேத்தன். அவர் ஒரு அறிவொளி ஆசிரியர் மட்டுமல்ல. அவரருகே அமர்ந்து கல்வி கற்கும் மாவுத்தர்களைப் போல அவரும் ஒரு மாவுத்தர்.

மாவுத்தர்கள் குடிசைக்குள்ளே அறிவொளி பெறுகிறார்கள். அவர்களின் யானைக் கூட்டங்கள் வெளியே அவர்களுக்காகக் காத்திருக்கின்றன. இப்படி யானை பரிவாரத்தைக் கூட காக்கவைக்கும் அளவுக்குக் கோவை மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் வேரூன்றி வியாபித்திருக்கிறது.

கோவை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணம், இந்தப் பின்னணியில், கோவை மாவட்டச் சிறப்பிதழுக்காகத் தமிழரசு குழு கோவையில் 164 -வது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.வி.சங்கர் இ.ஆ.ப., அவர்களை 27.3.95 அன்று சந்தித்தது.

மாவட்ட ஆட்சியரின் இருக்கைக்குப் பின்னால், வரிசையாகக் கேடயங்களும், பாராட்டுக்களும் பளிச்சிட்டன. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்முகத்தோடு வரவேற்று, மாவட்டத்தில் ஆற்றப்பட்டுவரும் அரசின் நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும், புள்ளிவிவரங்களோடு சுட்டிக் காட்டி விளக்கினார்.

கடந்த நான்காண்டுகளாகக் கோவை மாவட்டம் இருபதம்சத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, தமிழ்நாட்டிலேயே முதலிடம் வகித்தமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாராட்டி, சுழற் கேடயம் வழங்கியிருக்கிறார்.

இது தவிர, சென்ற ஆண்டு (1993-94) சிறுசேமிப்பில் மாநிலத்திலேயே அதிகத் தொகை சேர்த்து, முதலாவது இடத்தை வகித்தமைக்காகச் சிறப்புக் கேடயமும் பரிசும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது.

சாண எரிவாயுக்கலன்கள் அமைப்பதில் இந்தியாவிலேயே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அவினாசி ஒன்றியம் சிறப்பிடம் வகிக்கிறது.

சுடர்விடும் அறிவொளி

தொடக்கத்திலேயே இம்மாவட்டத்தில் கல்லாமையை இல்லாமையாக்கும் அறிவொளி இயக்கத்தைத் தனது தலையாய பணியாகச் செய்துவருவதாக மாவட்ட ஆட்சியர் சொன்னார். ஏனென்றால், எந்த ஒரு அரசுத் திட்டமும் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் கல்வியறிவு அவசியம். அதை இந்த அறிவொளி இயக்கம் மூலம் செய்து வருகிறோம் என்றார். அவர் மேலும் சொன்னதாவது:

கடந்த இரண்டாண்டுகளாக அறிவொளி இயக்கம் கோவை மாவட்டத்தில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட மக்கட் தொகையில் 6.25 இலட்சம் பேர் கல்லாதவர்கள். அவர்களில் 5.2 இலட்சம் பேர்களை அரும்பாடுபட்டு இவ்வியக்கத்தில் சேர்த்துள்ளோம். இவர்கள் 9 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்டவர்கள்.

பலதரப்பட்ட மக்கள் மதம், மொழி, ஜாதி, ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி இந்த அறிவொளி இயக்கத்தில் சேர்ந்து பயனடைவதை நேரில் காணமுடிகிறது. இதன் மூலம் சமூக ஒற்றுமையைக் காண்கிறேன். பெண்களும், ஊனமுற்றோரும் இதில் அதிக அளவில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். இதுவரை அறிவொளிப் பயனாளிகளில் 9900 பெண்களுக்குப் பலவகைப்பட்ட கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் பாதிப் பேருக்கு மேல் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

அறிவொளி தொண்டர்களுக்கு, வேலை வாய்ப்பிலும், பிற அரசு நலத்திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்டக் கலைக்கழகம் என்ற அமைப்பு நிறுவப்பட்டு, அதன் மூலம் அறிவொளி மக்களிடையே பேச்சாற்றல், ஓவியம், படைப்பாற்றல் போன்றவை வளர்க்கப்படுகின்றன. இதற்காக ரூ.10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேறெந்த மாவட்டத்திலும் இல்லாதபடி 'அறிவொளிநகர்' என்ற குடியிருப்புகள் 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டமெங்கும் 1200 படிப்பகங்கள் தொடங்கப்பட்டு, அனைத்திற்கும் தினசரிப் பத்திரிகைகள் வாங்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

'கைநாட்டு முதல் கம்யூட்டர் வரை' என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு, எழுதப் படிக்கத் தெரியாதவருக்கு எழுதப்படிக்கவும், நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் கம்ப்யூட்டர் போன்ற கருவிகளில் பயிற்சி பெறவும், வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அறிவொளிப் பயிற்சியில் ஆர்வம் ஏற்பட, 4000 கிராமங்களில் கலைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம், பொம்மலாட்டம், பேரணிகள், திருவிழாக்கள் நடத்தப்பட்டு ஏறக்குறைய 8 முதல் 12 இலட்சம் பேர்கள் இந்நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துள்ளார்கள்.

கிட்டத்தட்ட 15 சதவிகிதம் கற்றோரின் எண்ணிக்கை இந்தத் திட்டத்தின் மூலம் அதிகரித்துள்ளது. இதற்காகத் தொடக்க

அறிவொளி திட்டத்துக்கு 3.8 கோடி ரூபாய் செலவும், இரண்டாம் கட்ட அறிவொளித் திட்டத்துக்கு ரூ.1.94 கோடியும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்வளர்ச்சி

கோவை மாவட்டம் 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என்றழைக்கப்படுகிறது. அந்தச் சீர்மை என்றும் நீடிக்கவும் கோவை மாவட்டத்தில் தொழில் வளரவும் அனைத்து முயற்சிகளும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன சான்றாகக் கடந்த மூன்றாண்டுகளில் கோவை மாவட்டத்தில் 166 உயர்மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின்னிணைப்பும், 10, 258 குறைந்த மின் அழுத்ததொழிற்சாலைகளுக்கு மின்னிணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மின் தட்டுப்பாடு எந்நிலையிலும் வரக்கூடாது என்பதற்காகக் கடந்த 1992-ல் 4 துணை மின் நிலையங்களும், 1994-ல் இரண்டும், 1995-ல் இரண்டும் ஆக எட்டு துணை மின் நிலையங்கள் ரூ.19.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது கூடுதலாக ஆறு துணை மின்னிலையங்கள் ரூ.23 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளன.

காற்றாலைகள்

இது தவிர- கேத்தனூர், பூலாவாடி ஆகிய இடங்களில் 40 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. தற்போது பல்லடம் அருகேயுள்ள இடையர் பாளையம் என்ற ஊரில் ரூ.7 கோடி செலவில் 2 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒரு காற்றாலை 200 எக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படவுள்ளது. தற்போது 18 தனியார் நிறுவனங்கள் காற்றர்லைகள் அமைத்துள்ளன. இது தவிர மேலும் 24 தனியார் நிறுவனங்களுக்குக் காற்றாலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குச் சுமுகமான சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் நிலவிடவேண்டும். அதைக் கோவை மாவட்டம் சிறப்பாகச் செய்து வருகிறது.

பில்லூர் குடிநீர்த் திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினை கணிசமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, குடிமங்கலம் ஆகிய இடங்களில் குடிநீர்த்திட்டங்கள் ரூ.58 கோடி செலவில் வடிவமைக்கப்பட்டு அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் தொழிலாளர் பிரச்சினை ஏதுமின்றித் தொழிலமைதி நிலவ வழிவகை காணப்பட்டுள்ளது.

திருப்பூரில் மில் தொழிலாளர்களிடையே போனஸ் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. தொழில் முனைவோரிடையேயுள்ள குறைகளைத் தீர்க்க மாதந்தோறும் குறைதீர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தொழில் வளர்ச்சிக்கு அனைத்து வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்து, நல்லதொரு சூழலை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே உள்ள 4 தொழிற்பேட்டைகளைத்தவிர, மேலும் புதிதாகக் கோவை மலுமிச்சம்பட்டியிலும், திருப்பூர் செட்டிப்பாளையத்திலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மக்களுக்கும், பெண்களுக்கும் அரசுத்திட்டங்கள், உதவிகள் நிறைவேற்றுவதில் கோவை மாவட்டம் முன்னணியில் உள்ளது. சான்றாக, முதலமைச்சர் சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புக் குடிலுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் 8540 குடிசைகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பில் சென்ற ஆண்டு மாநிலத்திலேயே முதல் மாவட்டமாக விளங்கி



சாதனை படைத்தது. அதே போல இவ்வாண்டும் வசூலில் சாதனை படைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

கோவைக் குற்றாலம்

சுற்றுலா வளர்ச்சிக்குக் கோவை பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கோவைக் குற்றாலம் என்ற புதிய திட்டத்தைச் சிறுவாணிக்கருகே ரூ.24 இலட்சம் செலவில் அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுத்து, அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்க நவீன தங்கும் குடில்கள், குளியலறைகள் போன்றவை அமைக்கப்படும்.

ஆளியார் அணையில் ரூ.1.5 இலட்சம் செலவில் படகுக்குழாம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. வால்பாறையில் ஆண்டுதோறும் மே மாதத்தில் கோடை விழாவும், பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் சிதம்பரத்தில் நடப்பது போல நாட்டியாஞ்சலியும் நடத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளன.

மருதமலையில் ரூ.1.25 கோடியில் தங்கத் தேர் அமைக்கும் பணியும், ரூ.120 இலட்சத்தில் ராஜகோபுரம் கட்டுமானப்பணிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அவினாசி திருக்கோயிலுக்குப் புதிய தேர் ரூபாய் 50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர, பயணிகள் தங்கும் விடுதி, சிறுவர் பூங்கா, சமுதாயக்கூடம் போன்றவை ரூ.162.72 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்சத்திட்டம் குறைவற நிறைவேற்றும் பணியைச் செவ்வனே செய்து வருகிறது கோவை மாவட்டம்.

விளையாட்டு வளர்ச்சி

விளையாட்டுத்துறை வளர்ச்சிக்குக் கோவை மாவட்டம் பல அடிப்படை வசதிகளைச் செய்து ஊக்குவிக்கிறது. குறிப்பாக 18 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.36 இலட்சம் செலவில் ஊரக விளையாட்டு மையங்கள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதன் மூலம் கிராமத்து இளைஞர்களின் விளையாட்டுத் திறமைகள் வெளிப்படும்.

கோவை நகரிலுள்ள சாஸ்திரி மைதானத்தில் பன்னோக்கு விளையாட்டரங்கம் ரூ.2.63 கோடி செலவில் கட்டப்படவுள்ளது. இதனுள், டென்னிஸ், கிரிக்கெட் விளையாட்டுக்கான நவீன தளங்கள் அமைக்கப்படும். மேலும் சர்வதேசத்தரம் வாய்ந்த நீச்சல்குளம் ஒன்றும் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் இவ்விளையாட்டரங்கில் கட்டப்படும்.

கோவையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் ரூ.10 இலட்சம் செலவில் கூடைப்பந்து விளையாட்டு மைதானத்தைச் சுற்றிப் பார்வையாளர் இருக்கைகள் கட்டப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கி விட்டன.

குறிப்பிடத்தக்க சிறப்புகள்

கோவை மாவட்டத்துக்கு வேறுசில சிறப்புகளும் உண்டு. கோவையிலுள்ள ஜப்பானிய காடைக்குஞ்சு பொரிக்கும் மையம் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரியதாகும்.

இந்தியாவிலேயே இரண்டாவது அதிநவீன அஞ்சலகம் கோவையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவெங்கும்

சிறப்புப் பெற்ற சைனிக் பள்ளி அமராவதியில் உள்ளது.

கோவை கருடாம்பாளையத்தில் மத்திய ஆயுதப் படைக்காவலர் பயிற்சி மையம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 400 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் குடிநீர் வழங்கு திட்டம் ரூ.150 கோடி மதிப்பீட்டில் புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டக் குழுமத்தின் வாயிலாக நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டம் நம் நாட்டுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கும்.

இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அத்துறையில் செவ்வனே செயலாற்றி, அவற்றில் சாதனைப்பூக்களை மலர்விக்கும் சோலைவனமாகக் கோவை மாவட்டம் திகழ்கிறது. அதற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் அரசு அலுவலர்களை நிரம்பவே கொண்டிருக்கிறது, இம் மாவட்டம் என்றார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

With Best Compliments From

AEROSPACE

Materials Private Limited

Office: 1044, Cross-Cut Road, Coimbatore,

Tamil Nadu INDIA 641 012

Phone: 436956 Fax: 0422 436536

"Let us salute to the Soldiers
who guard our Nation
Let us salute to the Scientists
who silently elevate Indian Science
in the World Senerio"

செலவைக் குறைத்து வசதியைப் பெருக்கும் கட்டட மையம்

கட்டடத் தொழிலில் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொண்டு, அதனைச் செயல்படுத்துதல், கிராமப் பகுதிகளிலுள்ள கட்டடத் தொழிலாளர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தில் பயிற்சியளித்தல், குறைந்த செலவில் நிறைவான வசதிகளுடன் கட்டடங்கள் அமைத்தல் போன்ற குறிக்கோள்களுடன், வடவள்ளி எனுமிடத்தில் தொடங்கப்பட்டது கட்டட மையம்.

மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகவும், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) உறுப்பினர் செயலாளராகவும் திட்டப் பொறியாளரைச் செயலாளராகவும் கொண்டு இந்தக் கட்டட மையம் இயங்குகிறது.

நவீன தொழில் நுட்பங்கள்

★ இரண்டு கற்களுக்கிடையே இடைவெளி.

★ மங்களூர் ஓடுகளைக் கொண்டு அமைக்கப்படும் மேற்கூறை.

★ மேம்படுத்தப்பட்ட களிமண் தொழில்நுட்பம்.

★ பெரோ சிமெண்ட் கதவுகள் மற்றும் ஜன்னல் கதவுகள்.

★ முதலான தொழில் நுட்பங்கள் கையாளப்படுகின்றன.

கட்டடமையத்தின் செயல்பாடுகள்

கோவைக் கட்டட மையம் நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு சத்துணவு மையக் கட்டடங்கள், பள்ளிக்கட்டடங்கள், கால்நடை மருந்தகக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள், அலுவலகம் மற்றும் தனியார் குடியிருப்புகள் போன்றவை ரூ.40 இலட்சம் செலவீட்டில் கட்டி உள்ளது. இது தவிர ரூ.75 இலட்சத்துக்கான பணிகள் முடிக்கப்பட உள்ளன. கட்டுமானச் செலவில் 30 விழுக்காடு மிச்சப்படுத்த முடியும் என்று கட்டட மையம் செயல்படுத்திக் காட்டி

உள்ளது. இதுவரை 100 கொத்தனார்களுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளன.

வால்பாறை பேரூராட்சியில் கட்டட மையத்தின் மூலம் ஒரு கோடியே 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தங்குமிடங்கள், உணவகங்கள் அமைக்கவும், பேரூரில் நவீன கழிப்பிடங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், மெதாவர் காலனியில் 39 குடியிருப்புகள் ரூ.13 இலட்சத்து 64 ஆயிரம் மதிப்பீட்டிலும், கணபதியில் ஹட்கோ காலனி ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ளன.

கோவைக் கட்டட மையம் குறைந்த செலவில் நிறைந்த வசதிகளைச் செய்து தருவதில் முன்னணியில் இருப்பதோடு, நவீன தொழில் நுட்பங்களைக் கட்டடத் தொழிலாளர்கள் வழியாகப் புகுத்துவதிலும் நிறைவான பணியைச் செய்து வருகிறது. புதுமை எங்கிருந்து வந்தாலும் அதனை இருகை கொண்டு வரவேற்போம் என்கிற குறிக்கோளோடு கோவை மையம் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

உட்கார்ந்து எழுவதில் உலகச் சாதனை

கோவை நகரைச் சேர்ந்த இளைஞர் ஜோசப் ஜேம்ஸ் (வயது 27) உட்கார்ந்து எழுவதில் (பஸ்கி) உலகச் சாதனை படைத்துள்ளார்.

'தி அவுஸ் ஆப் கெடியாஸ்' என்ற அமைப்பின் சார்பில் புது டெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்ட நிகழ்ச்சியில் திரு.ஜேம்ஸ் இந்தச் சாதனையைப் படைத்து உள்ளார். ஏற்கெனவே, ஒரு மணி நேரத்தில் 4289 முறை உட்கார்ந்து எழுந்து திரு.பால்வை மேன்கங் என்பவர் சாதனை புரிந்து, கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

இப்போது, திரு. ஜேம்ஸ் ஒரு மணிநேரத்தில் 4300 முறை உட்கார்ந்து எழுந்து முந்தைய சாதனையை முறியடித்துள்ளார். 'லிம்கா புக் ஆப் ரெக்கார்ட்ஸ்' அலுவலகத்தில் இந்தச் சாதனையை இவர் நிகழ்த்தியுள்ளார்.

கோவையில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 'பூ மகள் மகராசி' என்ற அழகுச் சிலை!

1. 2 HP முதல் 100 HP வரையிலும் சப்மெர்சிபல் மோட்டார் பழுது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்.
2. ஜெட் மோட்டார்கள், சென்ரிபிகள் மோட்டார்கள் பழுது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்.
3. ஆழ்குழாயில் சிக்கிய மோட்டார்கள், பைப்புகள் மற்றும் உதிரி பாகங்களை ஆழ்குழாய் சேதம் அடையாமல் எடுத்துக் கொடுக்கப்படும்.
4. பவர்லூம் தறிக்குத் தேவையான மோட்டார்கள், ஆயில் இன்ஜின்கள், ஜெனரேட்டர்கள் சிறந்த முறையில் பழுது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்.
5. விட்டிற்கும் குடோன்களுக்கும் தேவையான கதவுகள், ஜன்னல்கள், டிரஸ் வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
5. விவசாய கிணறுகளுக்குத் தேவையான கிரேன்கள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

சிறந்த முறையில் செய்து கொடுக்க
அணுகவும்

வீணா இன்ஜினியரிங்
12 - A. T.G. நகர், வீரகேரளம்,
கோயமுத்தூர்.

கோவை: பாலம் கட்டும் பணிகள்



ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில், கோவை மாவட் டத்தில் கவுண்டம்பாளையம் ஒணாம்பாளையம் சாலையில் பாலம் கட்டும் பணி இரவு பகலாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இப்பணி நிறைவடையக்கூடும்.

இதேபோல், கோவை மேட்டுப்பாளையம் சாலையில் பெரியநாயக்கன் பாளையத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய பாலம் கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. மத்தம்பாளையத்தில் ரூ.40 இலட்சத்தில் ஒரு பாலமும் காரமடை அருகே ரூ.40 இலட்சத்தில் ஒரு பெரும் பாலமும் கட்டத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

இதற்காக ரூ.1.50 கோடியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதித்துள்ளார்.

With best compliments from

Asian Radiators

43, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. India.

Phone : 862510 & 862518, Fax:0422-212957, Telex: 0855-658,

Cable : Cool Heat

A Quality Product - Engineered To Last Long

OUR PRODUCT RANGE

- ★ *RADIATORS*
- ★ *CHARGE AIR COOLERS*
- ★ *FIN COIL CONDENSERS AND EVAPORATORS*
- ★ *PRESSED COMPONENTS*
- ★ *WATER COOLED & AIR COOLED OIL COOLERS*
- ★ *AIR HEATERS*

இலக்கியத்தில் காதல்

டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் அவர்கள்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற 4 பிரிவுகளையும் நாம் அறிவோம். இது தமிழர்களுக்கு உரியதும் அல்ல. ஏன் என்றால் திருவள்ளுவர் காமத்துப் பாலுக்கு உரை எழுதப் புகும் முன்—முன்னுரையில் கூறுகின்றார், பரிமேல் அழகர். இவர் பொருள் பாகுபாட்டினை அறம், பொருள், இன்பம் என வடமொழி வழக்கு பற்றி ஒழுகலாம் என்று கூறு கிறார். எனவே, இந்த அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் நம்முடைய பாகுபாட்டில் இரண்டு கூறுகளுக்குள் அடங்குகின்றன. இந்த இன்பத்தை, அகம் என்றும், அறம், பொருள், வீடு ஆகிய மூன்றையும் புறம் என்றும் வகைப்படுத்துவது நம்முடைய மரபு.

மற்றொரு காரணம் காட்டி விளக்கலாம் என்று நினைக்கின்றேன். திருக்கோவையாருக்கு உரை எழுதப் போகின்ற பேராசிரியர் ஒரு வரிக்கு அற்புதமாக உரை எழுதுகின்றார். உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழில் உயர்வாய் தோய்ந்தனையோ என்று ஒரு வரிக்கு எழுதும் போது இந்தத் தீந்தமிழில் துறை என்பதற்குத் தமிழின் துறைகளாவன இந்த அகமும், புறமும். எனவே, இந்த அகம், புறம் என்று அற்புதமான அமைப்பு தமிழுக்குரிய அற்புதமான ஒரு கருவூலம் என்றே நாம் கூறமுடியும். காதல் என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்ளலாம் என்று நினைத்துப் பார்க்கிறேன்.

அடியவர் ஆண்டவன் மீது கொள்ளுகின்ற காதலுக்குப் பக்தி என்று பொருள். 'காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி, ஓது வார்தனை நன்னெறிக்குய்ப்பது, வேதம் நான்கிலும் மெய்ப் பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயமே' என்று ஞான சம்பந்தர் உருகுகின்ற காதலுக்குப் பக்தி என்று பொருள்.

ஒரு தாய் மகனிடம் கொள்ளுகின்ற காதலுக்குப் பாசம் என்று பெயர். ஒரு தலைவன் தலைவி மீது கொள்ளுகின்ற அந்தக் காதலின் ஒரு கூறுக்குக் காமம் என்று பெயர். ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்பது 'வள்ளுவப் பெருந்தகையின் கூற்று. என்ன இந்தப் பாடல்கள் நம்முடைய சமுதாயத்திற்கு உணர்த்துகின்றன என்பதைப் பார்க்கும்போது நம்முடைய சமுதாயத்திலே இருக்கின்ற அடிப்படைத் திருமண முறை, ஆணும், பெண்ணும் தானே, கொள்வாரும் இல்லாமல், கொடுப்பாரும் இல்லாமல் எதிர்ப்பட்டு மணம் செய்து கொண்டிருந்த வழக்கம் மாறி டாக்டர் என்றால் 100 பவுன் நகை, ஒரு கார், ஒரு கிளினிக் இப்படியாகப் பேரம் பேசுகின்ற அவலத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோமே, நம்முடைய பெண்கள் எத்தனைப் பேர் வரதட்சணைக் கொடுமையால் சீரழிந்துகொண்டிருக்கிறார்கள், ஏன் இந்த நிலை? நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

புதுக்கவிஞன் சொல்லுகின்றான், வில்லை ஒடித்து மணக்க ராமன் வராவிட்டாலும் பரவாயில்லை, தூக்கிச் செல்ல ராவணனாவது வர மாட்டானா என்று பெண்கள் வருந்துகின்ற அவல நிலை ஏன் ஏற்பட்டது? இந்தப் பெண்கள் திருமணம் ஆகாமல் முதிர் கன்னிகள் என்ற ஒரு புதிய சொல்லை நாம் படைத்துக்கொண்டிருக்கிறோம்.

வெண்டைக்காய் முற்றலாம்; கத்தரிக்காய் முற்றலாம்; கன்னிப் பெண்கள் முற்றினால் எப்படி இருக்கும்? முதிர்கன்னிகள் என்ற ஒரு சொல்லை நாம் இலக்கியத்தில் படைத்துக்கொண்டிருக்கிறோம். என்ன காரணம்? இந்த அடிப்படை மரபு, காதல் திருமணங்கள் நம்மிடையே மறைந்துபோனது தான்.

எல்லோரையும் பார்த்ததும் காதல் வராது. ஒரு தலைவன் சொல்லுகிறான், என்னுடைய தாயும், உன்னுடைய தாயும் எந்த வகையிலும் உறவு இல்லை. என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் ஒருவரையொருவர் அறிந்தார் இல்லை. நான் உன்னை

SREE SENTHIL ENGINEERING COMPANY

Manufacturers:
Borewell Compressor & Pneumatic Pumps

Factory at:
A-12, The Coimbatore (P) Industrial Estate,
Industrial Estate (PO)
Coimbatore-21

எங்கள் நிறுவனத்தின் மூலம், குடிநீர் சம்பந்தமான காரியங்களுக்கும், விவசாய சம்பந்தமான காரியங்களுக்கும், ஏர் கம்ப்ரசர் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்கள் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

கோவையில்...

★கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே புகழ் பெற்றது பொள்ளாச்சி சந்தை. காய்கறிகள், தேங்காய், வெங்காயம், பச்சைமிளகாய், பரங்கிக்காய், பூசணி போன்றவை இந்தச் சந்தையில் போர் போராகக் குவிக்கப்பட்டிருக்கும். தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்துமட்டுமல்ல; பிற மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் இச்சந்தைக்கு வந்துபோவார்கள்.

★பொள்ளாச்சியில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. எஸ் கந்தசாமி அவர்களிடம் நாம் சில கேள்விகள் கேட்டோம்; அவரளித்த பதில் மூலம் நமக்குத் தெரியவந்த விவரங்கள் இவை:

பொள்ளாச்சி வட்டத்தில் 141 சமூகக் கல்வி நிலையங்களும், 250 கிராம வானொலி மன்றங்களும், 42 இளைஞர் மன்றங்களும், 11 மருத்துவ நிலையங்களும், 38 தாய்சேய் நல நிலையங்களும், 20 தனியார் மருத்துவமனைகளும், 179 மகளிர் மன்றங்களும், 339 மதிய உணவு மையங்களும் இருக்கின்றன.

அவினாசிக்கு முதல் பரிசு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி வட்டாரம், 3,000 சாண எரிவாயுக் கலன்களை அமைத்து அனைத்திந்திய அளவில் சிறந்த வட்டாரத்திற்கான முதல் பரிசு பெற்றுள்ளது.

✪ கொங்குநாடு நெய்தல் நிலவளமற்ற உள்நாட்டுப் பிரதேசமானாலும் குறிஞ்சி நிலவளம் மிகுந்திருந்தது; எனவே, காடும் காட்டைச் சேர்ந்த முல்லை நிலங்களும் அதிகம். நெல் விளையும் மருத நிலங்களும் மிகுதியாயிருந்தன.

இதற்கு முன் பார்த்தது கூட கிடையாது; ஆனால், எப்போது உன்னைப் பார்த்தேனோ அப்போதே நீதான் என் மனைவி என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

"யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்
கலந்தனவே!"

என் தாயும் உன் தாயும் அறியார், என் தந்தையும் உன் தந்தையும் அறியார், நானும் நீயும் பழகியது இல்லை. ஆனால் நீதான் என்னுடைய மனதைப் புரிந்து கொண்டு எனக்கு மனைவியாக வரவேண்டும் என்ற அமைப்பு முறை என்று நம்மிடையே வருகிறதோ அன்றுதான்— இந்த வரதட்சணைக் கொடுமை, ஸ்டவ் வெடித்தல், மாமியார் கொடுமை, அனைத்துமே நம்மிடையே இருந்து விலக முடியும் என்பதைத் தமிழ்ப் பண்பாடு நமக்கு உணர்த்திக் காட்டுகிறது என்பதைக் கூறிக்கொள்ள முன்வருகிறேன்.

அடுத்ததாக ஒன்று இரண்டு காட்சிகளை— நம்முடைய சங்க இலக்கியங்கள் காட்டுகின்ற காதல் காட்சிகளைக் கூறுகிறேன்; அவை என்ன வாழ்வு நெறிகளை நமக்கு உணர்த்துகின்றன என்று சொல்லும்போது, சங்க இலக்கியங்களில் தோழி பெறுகின்ற இடம் மிக அற்புதமான இடம். எப்படி தோழி முக்கியமான இடத்தைப் பெறுகிறாளோ, அதுபோல— அன்னை பல சமயங்களில் கடுமையாகத்

தலைவியால் கோபித்துக் கொள்ளப்படுகிறாள்.

காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். தலைவி படுத்து இருக்கிறாள், பக்கத்திலே அம்மா படுத்து இருக்கிறாள், பக்கத்திலே தோழி. தலைவன் சந்திக்க வருகின்றான், அவன் வெளியே காத்துக்கொண்டிருக்கிறான். இந்த அம்மா தூங்கி விட்டாளா இல்லையா என்று அறிந்துகொள்ள வேண்டும். ஒரு உளவியல் அறிஞனாக நம்முடைய சங்க இலக்கியப் புலவனை நாம் காணுகின்ற இடம் இது. தோழி என்ன செய்கிறாள்? அம்மா தூங்குகிறாளா என்று பார்ப்பதற்கு ஒன்று இரண்டு பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறாள். அம்மாவிடம் சப்தமே இல்லை. சரி அம்மா லேசாக உறங்க ஆரம்பித்து இருக்கிறாள்.

உடனே மெதுவாகப் பேச்சுக் கொடுக்கிறாள், "அம்மா நம்முடைய தோட்டத்தில் கூதள்ம் செடி அருவி நீர்ப் பட்டுக் கலங்குகிற சப்தம் உங்களுக்குக் கேட்கிறதா?" பதிலுக்கு ஒரு குறட்டைச் சப்தம் தான் வருகிறது. அம்மாவுக்குச் சப்தம் எதுவும் கேட்கவில்லை. அம்மா தூங்குகிறாள்; அப்போதும் தோழிக்குப் பயம்.

தலைவி எழுந்திருக்கும்போது திடீரென்று அம்மா விழித்துக் கொண்டால் என்ன செய்வது? எனவே திடுக்கிடும்படியான ஏதாவது ஒரு செய்தியைச் சொல்லி இந்த அம்மா ஆழ்ந்த தூக்கம் கொண்டிருக்கிறாளா அல்லது லேசான தூக்கம் கொண்டிருக்கிறாளா என்பதை அறிந்து கொள்ளவேண்டுமென்று நினைக்கின்ற தோழி மற்றொரு செய்தியைச் சொல்லுகின்றாள்.

"அம்மா உங்களுக்கு விஷயம் தெரியுமோ? நம்முடைய அசோக மரத்தில் ஊஞ்சல் ஆடுவதற்கு ஒரு கயிறு கட்டியிருந்தோம், அந்தக் கயிற்றைப் பாம்பு என்று நினைத்து இடி தடால் என்று விழுந்து அசோக மரம் விழுந்துவிட்டது தெரியுமோ?" என்று படபடவென்று பேசுகிறாள். பதிலுக்குக் குறட்டை சப்தமே வருகிறது. தோழி உணர்ந்து கொள்கிறாள், அம்மாவின் தூக்கம் ஆழ்ந்த தூக்கம். தலைவியைத் தலைவனோடு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறாள். என்ன காரணம் என்றால், அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை.

ஒருவன் ஒருத்தியோடு பழகினான் என்றால் அவர்களின் வாழ்க்கை இறுதி வரை ஒன்றுபட்ட வாழ்க்கையாக இருந்தது. பெற்றோர்கள் சம்மதிக்காவிட்டாலும் உடன்போக்காகச் செல்லுகின்ற நம்முடைய தலைவியரை நம்முடைய இலக்கியங்களில் பார்க்கிறோம். தலைவி சென்று விடுகிறாள். எப்படிப்பட்ட குடும்பத்தில் வாழ்ந்தவள் தெரியுமா? தங்கக் கிண்ணத்தில் பால் சோற்றை அம்மா ஊட்ட அவள் உண்டவள். அப்படிப்பட்ட அவள் அந்தக் கல்லும், முள்ளும் நிறைந்த கானகத்தின் வழியே

செல்வதைத் தாய் பலவிதமாகச் சொல்லிப் புலம்புகின்ற பாடல்களை நம்முடைய இலக்கியங்கள் நிறையக் காட்டுகின்றன.

அந்தத் தாய் வந்து ஊட்டுகின்றபோது சொல்லுகின்றாள் அம்மா— "குழந்தாய், நீ இவ்வளவு நேரம் பந்து விளையாடிக் களைத்துவிட்டாய், இந்தப் பாலைக் குடி. ஒரு வாய் எனக்காக, ஒரு வாய் அப்பாவுக்காக...' என்று சொல்லி முதல் நாள் வரை அந்தப் பாலைக் குடித்த பெண் இன்று கணவன்மீது, கணவன் கூட இல்லை, காதலன்— இனி கணவனாக வரப்போகின்றான் என்ற அந்த நம்பிக்கையில் இந்தக் கல்லும், முள்ளும் நிறைந்த காட்டைக் கடந்து சென்றாள் என்று தன்னுடைய மகளை நினைத்து வருந்துகின்றாள்.

சிலம்பு கழிகின்ற நோன்பு ஒன்று உண்டு. திருமணத்திற்கு முன்னால் பெண் தன்னுடைய காலில் இருக்கின்ற சிலம்பினைக் கழற்றுவாள். என்னுடைய வசதியான வீட்டில் பிறந்த இந்தப் பெண் எங்கோ சென்று ஏழையின் குடிசையில் சிலம்பைக் கழற்றப் போகிறாளோ என்று இந்தத் தாய் புலம்புகின்றாள். அந்தப் பெண் சென்று மணம் செய்துகொண்டு, சில நாட்கள் கழித்து வருகின்றாள். தோழி கேட்கிறாள், என்னம்மா உங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது. அவர் இருக்கின்ற ஊர் மிகவும் வறட்சியான ஒரு பகுதி. கிட்டத்தட்ட 100 அடி ஆழம் கொண்ட கிணறுகள், அந்தக் கிணற்றில் எங்கோ ஒரு இடத்தில் தண்ணீர் இருந்தால்தான் உண்டு. இந்த ஒரு கிணற்றுத் தண்ணீர் தான் பறவைகளுக்கும், அங்கிருக்கின்ற விலங்குகளுக்கும். அதுவும் சுற்றிலும் இருக்கின்ற அந்த மர இலைகள் எல்லாம் வாடி அதில் விழுந்து அழுகிப் போன தண்ணீர் தான் அந்த ஊரில் குடிதண்ணீர்.

இவள் கேலி செய்கிறாள், என்ன உன் காதலனோடு பெரிய வீராப்போடு சென்றாயே, உன்னுடைய ஊரில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லையாமே? என்று— நம்முடைய பெண்ணாக இருந்தால் ஏன் கேட்கிறாய், எல்லாம் என் தலை எழுத்து, இந்தக் காதலனை நம்பி தண்ணீர் இல்லாத காட்டுக்குப் போய்விட்டேன் என்பாள். இப்போதும் அப்படித் தானே சொல்கிறார்கள், ஏதாவது சொன்னால் தண்ணீர் இல்லாத காட்டுக்கு அனுப்பிவிடுவோம் என்று பயமுறுத்துகிறார்கள்.

எனவே, அப்படி அவள் தண்ணீர் இல்லாத காட்டுக்குச் சென்று குடித்தனம் நடத்துகின்றாள். தலைவி தன்னுடைய கணவனை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அவள் சொல்லுகிறாள், ஆமாம் நீ சொல்லுவது உண்மை தான். என் ஊரில் இருப்பது ஒரு கிணறு. அதில் இருக்கிற தண்ணீர்தான் பறவைகளுக்கும்; அதில் இருக்கிற தண்ணீர்தான் விலங்குகளுக்கும்; எல்லா இலைகளும் விழுந்து அழுகிப் போன தண்ணீர் தான். ஆனாலும் கூட அது எவ்வளவு இனிமையானது தெரியுமா? நம் அம்மா தோட்டத்தில் பாலோடு தேன் சேர்ந்து கிடைக்கின்ற அந்தச் சுவையான நீரைக் காட்டிலும் அது எனக்கு உயர்ந்தது. விலங்குகள் வாய் வைத்து நீரை அருந்தியதால் கலங்கிப் போன நீர் என்னுடைய கணவன் வீட்டு நீர் என்று சொல்லும்போது அம்மா வீட்டுப் பாலும் தேனும் கலந்து இனித்ததை விட எனக்குப் பெரியது என்று சொல்லுகிறாள். அந்தப் பக்குவம் இக்காலப் பெண்களுக்கு வர வேண்டும்.

ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையம் தழைக்கும் என்றான் பாரதி. அந்தச் சம உரிமை வேண்டும் என்பதற்காகக் கொடி பிடிப்பதைக் காட்டிலும் இந்த ஒற்றுமையான, புரிந்து கொள்கிற உணர்வு இருக்குமானால் பெண்களின் அந்த வாழ்க்கை இனிமையாக இருக்க முடியும் என்பதை அற்புதமாகச் சங்க இலக்கியத்தில் புலவன் காட்டுகின்ற செய்தியைப் பார்க்கிறோம்.

பணக்கார வீட்டுப் பெண்கள், என்னுடைய மாணவிகளில் சிலருடைய வாழ்க்கை அந்த மாதிரி அமைவதைப் பார்க்

குட்டித் தொல்காப்பியம்!

'இலக்கண விளக்கம்' திருவாரூர் வைத்தியநாத தேசிகரென்னும் சைவப் பெரியாரொருவரால் இயற்றப் பெற்றது. அதற்கு விரிவான உரையொன்றுண்டு. அந்நூல், குட்டித் தொல்காப்பியமென்றும் வழங்கப்படும். அதில் ஐந்திலக்கணங்களையன்றிப் பொருத்த இலக்கணமும், பிரபந்த இலக்கணமும் சேர்க்கப் பெற்றுள்ளன. அந்நூல் உரையில், சில பேரகத்தியச் சூத்திரங்களும், சில சிற்றகத்தியச் சூத்திரங்களும், வேறு சில அரிய பழைய செய்யுட்களும், சூத்திரங்களும் மேற்கோள்களாக வந்துள்ளன.

கிறேன். சில சமயங்களில் நாம் எதிர்பார்க்கிற வாழ்க்கை அமையாமல் சற்று ஏழ்மையான கணவன் அமைந்துவிட்டால் அந்தப் பெண்களின் மனதில் ஏற்படுகின்ற குறைகள் அநேகம். ஆனால், குறைகள் தேவையில்லை. எந்த இடத்திலும் செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

எனவே, இந்தப் பெண் இங்கே வேளா, வேளைக்குப் பாலும் தேனும் சாப்பிடுகிறாள்; அங்கு உண்பதற்குச் சோறு கூடக் கிடையாது. காலையில் 8 மணிக்குச் சிற்றுண்டி ,பகல் 1 மணிக்கு உணவு, இரவு 8 மணிக்குச் சிற்றுண்டி, என்றால் ஒரு நாளைக்கு 3 முறை சாப்பிடுகிறோம். ஆனால், அவள் அப்படிச் சாப்பிடுவது இல்லை. 8 மணி சிற்றுண்டியும், பிற்பகல் உணவையும் சேர்த்து 11 மணிக்குச் சாப்பிடுகிறாள். பொழுது மறுத்து உண்ணுவாள். அந்த இரண்டு நேரச் சாப்பாட்டையும் ஒரு நேரமாகச் சாப்பிடுகிற அளவுக்குத் தன்னுடைய வறுமையைப் பிறருக்குத் தெரியாமல் மறைத்துக்கொள்கின்ற ஆற்றலைத் தான் அந்தத் தலைவன் மீது இருக்கின்ற அன்பினால் பெற்றாள் என்ற அந்தத் தலைவியை நாம் பார்க்கிறோம்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மனது கேட்கவில்லை. வண்டி வண்டியாகச் சாமான்களை அனுப்புகிறார்கள். அந்தச் சாமான்கள் எதையும் ஏற்றுக் கொள்வதற்குத் தலைவியின் மனம் இடம் கொடுக்கவில்லை. கணவனின் கௌரவம் கெட்டுப் போகும் என்பதற்காக வந்த பொருட்களை எல்லாம் மீண்டும் அனுப்பி விடுகின்ற. தலைவியை நாம் பார்க்கின்றோம். இது எதை நமக்கு உணர்த்துகின்றது? எந்த நிலைமையிலும் தன்னுடைய பிறந்த வீட்டுப் பெருமை, பிறந்த வீட்டுப் பொருட்களை நினைக்காமல் எப்போது திருமணம் ஆகி விடுகிறதோ அந்த அன்புடை நெஞ்சம், காதல் கொண்ட நெஞ்சம், கணவனின் கௌரவத்தையும், கணவனின் பெருமையையும் எண்ண வேண்டும் என்ற ஒப்பற்ற பண்பாட்டை இந்தப் பாடல் உணர்த்துகின்றது.

இறுதியாக ஒரு செய்தியைச் சொல்லவேண்டும் என்றால், முன்னோர் தேடிய செல்வத்தை வைத்துக்கொண்டு வாழ்வது என்பது நம்முன்டய இலக்கியங்களைப் பொறுத்தவரையில் மிகவும் தாழ்வாக எண்ணப்பட்ட ஒன்று. அவனுக்கு என்ன? எதற்குப் படிக்கவேண்டும்? பத்துத் தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடலாம். அவன் அப்பா, அம்மா அவ்வளவு சம்பாதித்து வைத்து இருக்கிறார்கள் என்ற ஒரு கூற்றை நாம் கேள்விப்படுகிறோம். அது மிகவும் கேவலமானது என்பதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

தலைவனிடம் நிறைந்த செல்வம் இருந்தாலும் கூட நம்முடைய தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல் தாம் என்று எல்லோருக்கும் ஓம்ப வேண்டும் என்பதற்காக அவன் பொருள் ஈட்டச் செல்கிறான். பொருள் ஈட்டி முடித்து வருகின்றான். தேர்ப்பாகன் தேரை விரைந்து செலுத்துகின்றான். இவன் மனக் கண் முன்னால் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற தலைவியை நினைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் வீடு வந்து சேர்ந்ததைத் தலைவன் நினைக்கவில்லை. திடீரென்று இறங்குங்கள் வீடு வந்துவிட்டது என்று கூறுகின்றான் தேர்ப்பாகன். நாமாக இருந்தால் சரி என்று 3 மாதம் ஆகிவிட்டது— நேரடியாக மனைவியைப் பார்ப்பதற்குச் செல்வோம். எவ்வளவு அருமையான பண்பாட்டினைச் சங்க இலக்கியத் தலைவனிடம் காண்கின்றோம்.

அந்தத் தலைவன் கேட்கின்றான் 'அதற்குள் வீடு வந்து விட்டதா? இந்தக் குதிரைகளுக்குப் பதில் நீ என்ன காற்றையா குதிரைகளாய்ப் பூட்டினாய்? அல்லது வேகமாகச் செல்லுகின்ற என் மனதை நீ தேராகப் பூட்டினாயோ - வான் வழங்கு இயற்கை வலி பூட்டினாயோ, மான் உருவாக நீ மனம் பூட்டினாயோ' என்று சொல்லி அந்த அள்வில் அப்படியே விட்டுவிடாமல் எவ்வளவு அருமையான பண்பு அந்தத் தேர்ப் பாகனை நீ வா, என்னோடு இருந்து இன்று சாப்பிட வேண்டுமென்று சொல்லி வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறான்.

நம்முடைய தாய்க் குலம் சற்று நினைக்க வேண்டும். எப்போது வருவான் என்று நாம் காத்துக் கொண்டு இருப்போம். வரும் போதே ஒரு விருந்தாளியைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தான் என்றால், கட்டாயமாக நம்முடைய மனம் சுருங்கும். ஆனால் அந்தத் தலைவி-அவன் 3,4 மாதங்களுக்கு மேலாக இல்லத்தை விட்டு வெளியே செல்ல, அந்தத் தலைவி. தலைவனுக்காக காத்துக்கொண்டு இருக்கிறாள். அந்த அன்புடை நெஞ்சம், ஒரு விருந்தாளியோடு வந்தான் என்று சொன்னதும் அந்தத் தேர்ப் பாகனை விருந்தினனாக ஏற்று உபசரிக்கிற அந்தப் பண்பு நம்மிடையே எங்கே போயிற்று?

தொலைக்காட்சியில் பல காட்சி அமைப்புகள் வந்ததற்குப் பிறகு, பல அலைவரிசைகள் வந்ததற்குப் பிறகு- யாரேனும் நம் வீட்டுக்கு வந்தால் மனம் சுருங்குகிறது. நல்ல நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கும் போது இவர்கள் வந்து விட்டார்களே என்று நினைக்கின்ற பெண் உள்ளங்களையும், என்று நினைக்கின்ற உறவினர்களையும் நாம் இப்போது பார்க்கிறோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலைப் பொழுதில் நிறைய வீட்டுக்குச் செல்வோம், நண்பர்களையும் பார்ப்போம்- உறவினர்களைப் பார்ப்போம்- என்ற நிலைமைகள் மாறி எப்போதும் நம்முடைய தொலைக்காட்சிப் பெட்டியின் அருகில் நாம் உட்கார்ந்து கொண்டு இருக்கிற சமயத்தில் இந்த விருந்தோம்பல் எந்த அளவுக்கு நடைமுறையில் குறைந்து கொண்டு வருகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இங்கே இருக்கின்ற மலேசிய அன்பர்கள் எல்லாம், நாங்கள் சென்று இருந்த காலகட்டத்தில் அவ்வளவு அன்பாகீ எங்களை விருந்தோம்பினார்கள். அவர்களுக்கு இங்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலும் கூட தயவுசெய்து அவர்கள் அதைப் பொருட்படுத்தக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

ஏன் என்றால் தமிழர்கள் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அந்த விருந்தோம்புகின்ற பண்பினை மிக அருமையாகக் கடைப்பிடிக்கின்றனர். 'அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடலும் இழந்தேனே' என்று தான் கண்ணகி வருந்தினாள். கோவலனோடு இருக்கின்ற இன்பமான வாழ்க்கை போயிற்றே என்று நினைக்கவில்லை. என்னுடைய சொத்துப் போயிற்றே; செல்வம் போயிற்றே; இளமை போயிற்றே என்று நினைக்கவில்லை. நாங்கள் வாழ்ந்த காலகட்டத்தில் சேர்ந்து இருந்தால், நாங்கள் சிலருக்கு விருந்து உபசாரம் செய்து இருப்போமே என்று நினைத்து வருந்தினாள் என்று பார்க்கிறோம். அந்த அற்புதமான விருந்தோம்புகின்ற பண்பாடு, அந்த அற்புதமான கணவனை விட்டுக் கொடுக்காத தன்மை அந்தக் காதல் இருவர் கருத்தொருமித்த ஆதரவுபட்ட இல்லற வாழ்க்கையை, அந்தச் சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

★ ★ ★

நாம் இலட்சியத்தை நோக்கி எவ்வளவுதூரம் போகிறோம் என்பது பின்பற்றும் வழிகளின் தூய்மையையே பொறுத்திருக்கிறது.

— அண்ணல் காந்தியடிகள்

★ ★ ★

வருவதும் போவதும் இன்பமும் துன்பமும்.
வந்தால் போகாதது புகழும் பழியும்.
போனால் வராதது மானமும் உயிரும்.
தானாக வருவது இளமையும் முதுமையும்.
நம்முடன் வருவது பாவமும் புண்ணியமும்.
அடக்க முடியாதது ஆசையும் துக்கமும்.
தவிர்க்க முடியாதது பசியும் தாகமும்.
நம்மால் பிரிக்க முடியாதது பந்தமும் பாசமும்.
அழிவைத் தருவது பொறாமையும் கோபமும்.
எல்லாருக்கும் சமமானது பிறப்பும் இறப்பும்.

—திருமுருக கிருபானந்த வாரியார்

Phone: 571406 - 572853 (STD-0422)

Residence: 815439 (STD-0421)

(Kalliapalaya-Exchange)

சூர்யா ஏர் கம்ப்ரசர்

எல்லைத் தோட்டம், பீளமேடு,

கோவை.4

எங்களிடம் வீட்டு உபயோகத்திற்கு பெல்ட் இல்லாத கம்ப்ரசர், மோனோபிளாக் மோட்டாருடன் இரண்டு வருட உத்தரவாதத்துடன் செய்து தருகிறோம். மேலும், 400 அடி ஆழம் வரை 5 HP - 15 HP வரையிலும் தோட்டத்து விவசாய உபயோகத்திற்கு மிகச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் டாங்குடன் அமைத்துக் கொடுக்கப்படும்.

குறைந்த விலையில் சூர்யா கதிரடிக்கும் மிஷின் விவசாயத்திற்குச் செய்து கொடுக்கப்படும்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

கிசான் விகாஸ் பத்திரம்
செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்



சி ற ப் பு அ ம் ச ங் க ள்

- 5 ½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

மேலும் விவரங்களுக்கு அணுகவும் :

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்

DIRP/D18/95

மாணவர் பக்கம்

பெண் கல்வி

எஸ். ராஜகோபால்
7-ஆம் வகுப்பு
அரசு ஆண்கள்
உயர்நிலைப்பள்ளி
துலூர்,
கோயம்புத்தூர்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

- என்பது கல்வியைக் குறித்து வள்ளுவர் கூறிய கருத்து. கல்வி அழியாது, சிறந்த செல்வமாக அமைந்து பிறவிகள்தோறும் துணைநிற்பது. அத்தகைய கல்வி ஆண், பெண் என்னும் இருபாலருக்கும் பொதுவானது. சங்க காலத்திலும், அதற்கு முன்பும் பெண்கள் கல்வியில் வல்லமை பெற்று விளங்கினர். சங்க காலத்தில் ஔவையார், காக்கைப் பாடினியார், இளவெயினி போன்ற பல பெண்கள் கற்பும் பொற்பும் பெற்றுத் திகழக் காரணம் அவர்கள் பெற்ற கல்வியே ஆகும்.

பெண் கல்வியின் இன்றியமையாமை

'நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும், திமிர்ந்த ஞானச் செருக்கும்' கொண்டு விளங்குவதே பெண் குலத்திற்கு உரிய பண்பு. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவே விழைகிறார்கள்.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்க்ள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண்'

-என்ற எட்டயபுரத்துக் கட்டபொம்மன் பாட்டுக்கொரு புலவன் பாரதியார் கண்ட கனவு நனவாகி வருகிறது. மேலும் நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகமாக விளங்க வேண்டுமென்றால், பெண்கல்வி மிக இன்றியமையாதது. எத்துறையிலும் ஈடுபட்டுப் பெண்கள் பணிபுரிய முடியும் என்பது அறிஞர் பலரது முடிவு.

'தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளுங்கை' என்பது நாம் இன்று கண்கூடாகக் காண்பதாகும். வானூர்தி ஓட்டலாம் பெண்கள்; வையகம் ஆளலாம் பெண்கள் என்ற கூற்று இன்று, உண்மையாகி விட்டது. பெண் ஒருத்தி கல்வி பெற்றால் அவள் வாழும் குடும்பம் ஒளி பெற்றுத் திகழும். குடும்பத்தின் ஒவ்வொரு செயலும் திருத்தமாக நடைபெறும்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே-நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா'

- என்பது கவிமணியின் கனி மொழி, ஆனால், நாடு விடுதலை பெறுவதற்கு முன் அடுப்பூதும், பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கும் ஓடப் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அண்ணல் காந்தியடிகள், இராஜாராம் மோகன்ராய், திருவிக, பெரியார் ஈ.வே.ரா. போன்றோர் மகளிர் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டனர். எல்லா நிலைகளிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வழி தேடினர். இன்றைய அரசு மகளிர்க்கெனப் பள்ளிகளும், கல்லூரிகளும் அமைத்துப் பெண் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. பெண்கள் கல்வி அறிவு பெற்றுப் பீடு நடை போடுகிறார்கள்.

பெண் கல்வியின் நன்மைகள்

ஆண்கள் தத்தம் அலுவல் காரணமாக வெளியே செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்தால் தம் குழந்தைகளுக்கெல்லாம் கல்வியறிவு புகட்ட முடியும். அறியாமை நீங்கப்பெற்ற பெண் மணிதான் குடும்பத்தை நன்கு நடத்த முடியும். குடும்பத்தைத் திறம்பட ஆளக்கூடிய பெண் நாட்டையும் திறம்பட ஆளப் பயிற்சி பெறுகிறாள். சான்றாக, அன்னை . இந்திரா காந்தி இந்தியாவை ஆண்டு உலகப் பெரும்புகழ் பெற்றார். சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் மகளிர் இடம்பெற்று நாட்டுக்கு நன்மை சேர்க்கவும், கல்வி, கலை, மருத்துவம், சட்டம், பொறியியல், விஞ்ஞானம், போன்ற துறைகளில் சிறந்து விளங்கி நாட்டையும் வீட்டையும் நலம் பெறச் செய்வதும், புகழ் பெறச் செய்வதும் பெண் கல்வியே அன்றி வேறொன்றுமில்லை.

'மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்'

- என்னும் பாரதியின் இனிய பழம் (கனி) போல நாட்டின் கண்களாகிய பெண்கள் எல்லாத் துறைகளிலும், பல்லாற்றானும் முன்னேற்றம் பெற்று வைய வாழ்வு தன்னில் இணையற்ற அறிவும், ஆற்றலும் பெற்றுப் பீடு நடை போட வேண்டும்; வளையல் பூட்டும் கைகள் உலகத்தையே வளைத்து ஆளும் கைகளாக மாறும், மாற வேண்டும்!

'தமிழரசு' கோயம்புத்தூர் மாவட்டச் சிறப்பிதழ் வெளியிட்ட நாம் அப்பகுதி மக்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை, ஓவியங்கள் கேட்டிருந்தோம் அவற்றுள் சிறந்தவை இந்த இதழில் அணிசெய்கின்றன.

மக்களின் ஒருமைப்பாட்டால் பாரதம் காப்போம்!



எம். மகாதேவன்
ஓவிய ஆசிரியர்
தேவாங்க மேல்நிலைப்பள்ளி
கோவை-2.

கோயமுத்தூர் மாவட்டம்

ஆனைமலை ஊராட்சி ஒன்றியம்

1993-94 முடிவுற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் 1994-95 செயல்படுத்தப்படும் பணிகள்

வ. எண்	வேலையின் பெயர்	வேலையின் மதிப்பீடு எண்ணிக்கை	இலட்சத்தில்
	பொது நிதி 1993-94		
1.	இரண்டடுக்கு மெட்டல் சாலைகள்	20	19.84
2.	சாலை மேம்பாடு செய்தல்	4	0.46
3.	தரைமட்டத் தொட்டிகள் கட்டல்	1	0.58
4.	சிறு பாலம் கட்டல்	1	0.20
5.	வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்	9	1.85
6.	புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்	3	1.05
7.	ஆழ்குழாய்க் கிணறுகளில் கைபம்பு பொருத்துதல்	5	1.75
8.	புதிய ஏர்கம்பிரசர் மின் மோட்டார் பொருத்துதல்	7	5.47
	மொத்தம்	50	31.20
	1994-95		
1.	இரண்டடுக்கு மெட்டல் சாலைகள்	6 (6 கி.மீ.)	7.10
2.	சாலை மேம்பாடு செய்தல்	2 (2கி.மீ.)	2.80
3.	சிறு பாலம் கட்டல்	6	1.20
4.	வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டல்	2	0.95
5.	புதிய ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்தல்	1	0.45
6.	புதிய ஏர்கம்பிரசர் மினி மோட்டார் பொருத்துதல்	1	1.42
	ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1993-94		
1.	தொகுப்பு வீடுகள் கட்டுதல்	50	9.60
2.	பள்ளிக் கட்டடம் கட்டல்	4	4.80
3.	ஊராட்சிப் பணிகள்	152	30.79
4.	சாலைகளை அமைத்தல்	1.35 கி.மீ.	1.50
5.	மயானம் பாதையமைத்தல்	4.5 கி.மீ.	2.25
6.	சமுதாயக் கூடம் கட்டுதல்	1	0.67
7.	சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்		1.33
			50.94
8.	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளவர்கள்	779	மானியம் 21.82
9.	டோக்ராக்குழு உறுப்பினர்கள்	135	2.91
	1994-95		
1.	தொகுப்பு வீடுகள் கட்டுதல்	70	14.70
2.	பள்ளிக் கட்டடம் கட்டுதல்	4	6.00
3.	ஊராட்சிப் பணிகள்	64	10.51
4.	சாலைகள் அமைத்தல் 3 வேலை	3.00 கி.மீ.	6.00
5.	சமுதாயக் கூடம் கட்டுதல்	4	6.00
6.	சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்	1.10	44.31
7.	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ளவர்கள்	800	61.162
8.	டோக்ரா குழு உறுப்பினர்கள்	10	

க. தேவராஜன்
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
ஆனைமலை

ந. இராதாகிருஷ்ணன்
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
ஆனைமலை

எஸ். கந்தசாமி, பி.ஏ.,
தனி அலுவலர்
ஆனைமலை ஊராட்சி ஒன்றியம்
மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர்,
பொள்ளாச்சி

கோவைச் செய்திகள்



☆ பெரியநாயக்கன் பாளையத்திலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் 1994-95-இல் அமைக்கப்பட்டுள்ளது அறிவொளி நகர். இதற்குக் கோவையிலிருந்து தனிப்பேருந்து வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

☆ கோவை மாவட்டத்தில் உள்ள பில்லூர் அணைக்கட்டு ரூ.17.5 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பாதி மாவட்டத்திற்குமேல் பயனடைகிறது; இவ்வளவு பெரிய அணைக்கட்டு இந்தியாவில் வேறெங்குமே இல்லை!

☆ கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் ரூ.1.9 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு பெரிய விளையாட்டுத்திடல் - ஸ்டேடியம் அமையவிருக்கிறது. அதேபோலத் திருப்பூரில் ஒரு ஸ்டேடியமும், நீச்சல் குளமும் ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

☆ கோவை சாஸ்திரி மைதானத்தில் ரூ.2.63 கோடியில் 'ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ்' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

☆ கோவை மாவட்டத்தில் உள்ள பேரூர் அருள்மிகு பட்டீசுவரர் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.10 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன; கோயிலை ஒட்டியுள்ள நொய்யல் ஆற்றில், படித்துறை கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இக்கோயிலில் ஆண்டுதோறும் 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சி நடத்தப்படவிருக்கிறது.

☆ கோவை மாவட்டத்தில் சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 22 வகையான கன்றுகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

☆ கடந்த ஐந்தாண்டுக் காலமாக, இந்தியாவிலேயே 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கோயம்புத்தூர் மாவட்டம் தான் முதலிடம் பெற்றுவருகிறது.

✪ ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முன்னர், கடைச் சங்க காலத்தில் - துளுநாடு, சேரநாடு, பாண்டியநாடு, சோழநாடு, அருவநாடு, கொங்கு நாடு எனத் தமிழகம் ஆறு நாடுகளாகப் பிரித்திருந்தது. தமிழ்நாட்டின் இடையே, கடற்கரை இல்லாத உள்நாடாகக் கொங்குநாடு(கோவைப்பகுதி) அமைந்துள்ளது.

கோவை மாவட்டம்: குடிநீர் வழங்கும் பணிகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோவை மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டம்

கோவை மாவட்டத்தில், கோவை மாநகருக்குத் தெற்கே சுமார் 40 கிலோ மீட்டரில் மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் மிதமான தட்பவெட்ப நிலையுடன் ஒரு பெரிய விவசாய நிலப்பரப்பு கொண்ட நகரம் பொள்ளாச்சி. கோவை மாவட்டத்திலேயே தென்னை வளம் மிகுந்த பகுதியும் இதுவே.

தமிழ்நாட்டில் பொள்ளாச்சி நகரம் மிகவும் பிரசித்தி பெற்ற வியாபாரச் சந்தையாக விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 82,354. வழியோரக் கிராமங்களின் மக்கட் தொகை 34,200. பொள்ளாச்சி நகருக்குச் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே நகருக்கு மேற்கே சுமார் 9 கி.மீ. துரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஆழியார் நதியில் வடிகால் படுகை (Infiltration Gallary) அமைத்துச் சுத்தமான குடிநீர் இந்நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

1970-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் வடிவமைக்கப்பட்டு 1975-ஆம் ஆண்டு இந்நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. அப்போதைய மக்கள் தொகை சுமார் 50,000. பெருகி வரும் மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 2016-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் 1,77,500 மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு இக் குடிநீர்த் திட்டம் உலக வங்கியின் கடன் உதவியுடன் 1992-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 110 லிட்டர் வீதமும் வழியோர கிராமங்களுக்கு 44,460 மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு 40 லிட்டர் வீதமும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் 30.9.94 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பணிகள் விவரமாவது:

1. இயல்பு நீர் வாங்கும் கிணறு.
2. இயல்பு நீர் இணைப்புக் குழாய்கள்.

3. இயல்பு நீர் உறிஞ்சு கிணறு மற்றும் உந்து விசை அறை.
4. நீர் சுத்திகரிப்பு நிலையம்.
5. சுந்த நீர் சேகரிப்புத் தொட்டி.
6. சுந்த நீர் உந்து விசை அறை.
7. சுந்த நீரேற்றுக் குழாய்கள்.
8. சுந்த நீர் அதி உந்து நிலையம் மற்றும் விசைகள்.
9. மண்டல பகிர்மான சுத்த நீர் மேல் நிலைத் தொட்டிகள்
10. நகரின் சுந்த நீர் பகிர்மானக் குழாய்கள்.

.டச் சிறப்பியல்புகள்

1. தலைமைப் பணியிடம்

அ. நீர் ஆதாரம்

ஆழியார் நதியில் அம்பராம்பாளையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் நீர் வாங்கிக் கிணறு.

ஆ. இயல்பு நீரேற்றும் விசைகள்

40 குதிரைத்திறன் கொண்ட 2 நீரேற்றும் விசைகள் .(16மீ X நிமிடத்திற்கு 7,150 லிட்டர்கள்)

2. இயல்பு நீர் பிரதானக் குழாய்

500 மி.மீ. இரும்புக் குழாய்கள் - 100 மீ

3. நீர் சுந்திகரிப்பு நிலையம்

நாளொன்றுக்கு 147 இலட்சம் லிட்டர் நீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட முழுமையான சுந்திகரிப்பு நிலையம்.

4. சுந்த நீர்த்தேக்கத் தொட்டி
கொள்ளளவு 6 இலட்சம் லிட்டர்கள்.

5. சுந்த நீரேற்றும் விசைகள் 150 குதிரைத் திறன் கொண்ட 2 நீரேற்றும் விசைகள் (70மீ x நிமிடத்திற்கு 6,835 லிட்டர்கள்)

6. சுத்த நீர் பிரதானக் குழாய்கள்

வார்ப்பிரும்புக் குழாய்கள்	7.60 கி.மீ.
கல்நார் சிமெண்ட் குழாய்கள்	2.20 கி.மீ.
மொத்தம்	9.80 கி.மீ.

7. சந்தைப் பேட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அதி நீருந்து நிலையம்.

கொள்ளளவு: 3.5 இலட்சம் லிட்டர்கள்.

நீரேற்று விசைகள்: 125 குதிரைத் திறன் கொண்ட 2 நீரேற்று விசைகள் 65மீ x நிமிடத்திற்கு 6,835 லிட்டர்கள்.

8. மேல்நிலை நீர்த் தொட்டிகள்

	கொள்ளளவு
அ. மண்டலம் I	10.5 இலட்சம்லிட்டர்கள்
ஆ. மண்டலம் II	11.0 "
இ. மண்டலம் III	13.5 "
ஈ. மண்டலம் V	11.5 "
உ. ஜோதிநகர்	3.0 "

9. பகிர்மானக் குழாய்கள் 60 கி.மீ.

10. வீட்டு இணைப்புக் குழாய்கள் 13,570

11. 11 வழியோரக் கிராமங்கள்

அ. மேல்நிலைத் தொட்டிகள் எண்ணிக்கை 6.

ஆ. பகிர்மானக் குழாய்களின் நீளம் 7.65 கி.மீ.

இ. பொதுக் குழாய்களின் எண்ணக்கை 21.

12. திட்ட மதிப்பீடு.

அ. பிரதானத் திட்டம் ரூ.1143 இலட்சங்கள்
ஆ. பொள்ளாச்சி நகராட்சி ரூ.1014 "
இ. 11 வழியோரக் கிராமங்கள் ரூ.129 "

பயனடையும் பகுதிகள்

பெயர்	மக்கள் தொகை (2016-இல்)	திட்ட மதிப்பு
1. பொள்ளாச்சி நகராட்சி	1,77,500	1014 இலட்சங்கள்
2. சிங்காநல்லூர்		
3. கெட்டி மேளம் புதூர்		
4. அகிலாண்டபுரம்		
5.		
6. போடி பாளையம்		
7. நஞ்சேகவுண்டன் புதூர்	44,460	129 இலட்சங்கள்
8. கருப்பம்பாளையம்		
9. காளிபாளையம்		
10. குஞ்சிபாளையம்		
11. ஊத்துக்குளி		
12. மோதிராபுரம்		



Raw material at our back door.

Global markets at our threshold.

Possible only if... you're always ahead of time.

Manali, Madras. A petrochemical landmark on the map of India. It's going to become even more renowned with TPL's futuristic blueprint. For a **state-of-the-art** EPICHLOROHYDRIN plant. A plant that's twice blessed. One, with rich raw material resources from the neighbouring plants of **Madras Refineries Ltd and** SPIC Heavy Chemicals Division. And two, with a market that's virtually global. Needless to say, EPICHLOROHYDRIN **from the 10,000 MT capacity** plant will be in demand from Day One, and will meet the needs of the entire Indian industry and more. It's an important **ingredient in epoxy resins which** find application in many consumer goods and industries. And also in pesticides and pharmaceuticals. Substituting **imports completely while** enhancing exports considerably. It will be our sequel to the earlier success story: Linear Alkyl Benzene - SUPERLAB. **TPL. This is really where** we're poised. On the shores where India meets the world.

TAMILNADU PETROPRODUCTS LIMITED
6, Nungambakkam High Road, Madras - 600 034 Tel: 8254545, 8252568/69 Fax: 044-8255798

AHEAD OF ITS TIME

HTA.7161.95



அச்சிடுவோரும் வெளியிடுவோரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568936, 568927

தமிழரசு

செல்வி. ஷோபனா, இன்னிசை

உலகத் தமிழ் மாநாடு
கலை நிகழ்ச்சிகளில்
சில....

திரு. நரசிம்மாச்சாரி -
திருமதி. வசந்த லட்சுமி, நாட்டியம்

திரு. டி.எம். கிருஷ்ணா, இன்னிசை

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு: 2026
வைகாசித் திங்கள்: 18
மலர்: 25 இதழ்: 23
1.6.1995 விலை: ரூ. 3

இந்த இதழில்...

❋ ஆசியாவிலேயே அமைக்கப்பட்ட முதல் பல்வகை ரோஜா மலர்த்தோட்டம்! 2
❋ திரைப்படக் கல்லூரியின் 31-வது ஆண்டு விழா 7
❋ ஏர்க்காட்டில் எழில்மிகு கோடைவிழா! 9
❋ வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் குழந்தை உழைப்பாளர் குறித்துக் கணக்கெடுப்பு 11
❋ 3 மாவட்டங்களில் 100 சிறப்புக் காவல் அலுவலர்கள் நியமனம் 15
❋ இந்த அரசால் எதுவும் முடியும்! - இயக்குநர் பாரதிராஜா 17
❋ கண்ணியம் மிக்க காயிதே மில்லத் 24
❋ மாணவர் பக்கம் 28
❋ பெண்களின் பெருமை! - டாக்டர் லலிதா காமேஸ்வரன் 30
❋ கோவை மாவட்டம்: பிற்பட்டோர் நலம் 33
❋ திரை உலகின் திருக்குறள்! - கவிஞர் முத்துலிங்கம் 35
❋ பெண்களும் சர்க்கரை நோயும் 41
❋ நூல் நயம் 46

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. [22]

* பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.

199920

அட்டை சொல்லும் செய்தி



ஆசியாவிலேயே அமைக்கப்பட்ட முதல் பல்வகை ரோஜா மலர்த்தோட்டம்!

உதகையில் எண்ணம் கவரும் வண்ணமிகு மலர்த் திருவிழா!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 20.5.95 அன்று காலை 10.30 மணி அளவில் தமிழக அரசு விருந்தினர் மாளிகையில் இருந்து புறப்பட்டு, 10.40 மணி அளவில் அரசு தாவரவியல் பூங்கா (Government Botanical Garden) வந்தடைந்தார்.

வழி நெடுகிலும் சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்கள் மாண்புமிகு முதலமைச்சரைப் பார்த்ததும் ஆரவாரம் செய்து கையசைத்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடன் கையசைத்து, தனது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினார்கள்.

தாவரவியல் பூங்காவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை அதிகாரிகளும், வரவேற்றார்கள்.

சிறப்புத் தூண்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நூறாவது மலர்க் கண்காட்சியின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நூறாவது ஆண்டு மலர்த் திருவிழா சிறப்புத் தூண் ஒன்றினைத் திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு பித்தானை அழுத்தியதும், மேடைக்கு எதிராக அமைக்கப்பட்டிருந்த அழகான தூண் ஒன்று வெளியானது. பின்னர் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு 1919 ரக ரோஜா மலர் வகைகளைக் கொண்ட, விஜயநகரம் அரசுப் பண்ணையில் அமைக்கப்பட்ட ரோஜா மலர்த் தோட்டத்தைத் திறந்து வைக்கும் வகையில் ஒரு பித்தானை அழுத்தி, அங்கிருந்த ஒரு கல்வெட்டை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

புத்தக வெளியீடு

ரோஜா மலர்களைப் பற்றிய புத்தகம்

ஒன்றினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் வெளியிட்டார். அப்புத்தகத்தின் முதல் பிரதியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக்கொண்டார்.

சரித்திரச் சிறப்பு வாய்ந்த அரசு தாவரவியல் பூங்கா (Government Botanical Garden) பற்றி எழுதப்பட்டுள்ள புத்தகம் ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

விழா மலர்

நூறாவது மலர்த் திருவிழாவின் நினைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள விழா மலர் (Souvenir) ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர், திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் விழா மலரின் முதல் பிரதியை, தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

Chandler என்று அழைக்கப்படும் புதிய உயர் ரக ஸ்டிராபெர்ரி பழ வகையினை முதன் முதலாகத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் Chandler வகை ஸ்டிராபெர்ரி பழங்கள் அடங்கிய பழக் கூடை ஒன்றை வழங்க, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் அந்தப் பழக் கூடையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

புதிய ரக ரோஜா!

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்ட புதிய ரக ரோஜா மலர் ஒன்றினை இந்த நிகழ்ச்சியின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர், திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் இந்த புதிய ரக ரோஜா செடியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

> மாலைக்கு மலர் தேவை. மலருக்கோ தோட்ட வளம் தேவை. அதுபோலத்தான் அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை. மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழவோ சமதர்ம முறையில் அமைந்த வாழ்க்கைப் பாதை தேவை.
>
> -பேரறிஞர் அண்ணா

மலர்த் திருவிழா

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நூறாவது மலர்த் திருவிழாவைத் துவக்கி வைக்கும் வண்ணம் ஒரு பித்தானை அழுத்தியதும், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு அலங்காரக் கதவுகள் தானாகத் திறந்து கொண்டன. அப்பகுதியின் உள்ளே சென்று அங்கே சிறப்பாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல்வேறு மலர்ச் செடிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர், மலர்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டு, மலர்களையும், மலர்க் கொத்துக்களையும் கையில் ஏந்தி வந்த 11 பள்ளிக் குழந்தைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் மலர்க் கொத்துக்களையும், மலர்ச்செண்டுகளையும் வழங்கி தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணம் அக்குழந்தைகளைத் தட்டிக் கொடுத்தார்.

பின்னர், தாவரவியல் பூங்காவிலிருந்து புறப்பட்டு, விஜயநகரம் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள புதிய ரோஜா மலர்த் தோட்டத்திற்குச் சென்றார். அங்கே அமைக்கப்பட்டிருந்த ஒரு மேடையில் இருந்து மலர்த் தோட்டம் முழுவதையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர், திரு கு.ப. கிருஷ்ணன் அவர்களும், வேளாண் துறை அரசுச் செயலாளர், திரு ஆர்.சி. பாண்டா அவர்களும், ரோஜா மலர்த் தோட்டத்தின் சிறப்பு அம்சங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

முதல் ரோஜா மலர்த் தோட்டம்!

இந்த ரோஜா மலர்த் தோட்டத்தில் 1919 வகை ரோஜா மலர்ச்செடிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஆசியாவிலேயே இத்தனை வகையான ரோஜா மலர்ச்செடிகளைக் கொண்ட முதல் ரோஜா மலர்த் தோட்டம் இதுவே ஆகும். சண்டிகாரிலும், டெல்லி ராஷ்டிரபதி பவனிலும் அமைந்துள்ள ரோஜா மலர்த் தோட்டங்களிலும் கூட இத்தனை வகையான ரோஜா ரக மலர்ச் செடிகள் அமைக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ரோஜா மலர்த் தோட்டம் எவ்வாறு சிறப்பாகப் பயணிகளைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு வேண்டிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார். இந்த வேளாண் பண்ணையில் அமைந்துள்ள கட்டடங்களையும், இயற்கைச் சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் என்றும், இந்த ரோஜா மலர்த் தோட்டத்தை நன்முறையில் பராமரிக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, சாலையின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கை அசைத்த வண்ணம் தமிழகம் அரசு விருந்தினர் மாளிகைக்கு வந்தடைந்தார்.

வாழ்க தமிழ் மொழி!

- சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.
- வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி யாரம் படைத்த தமிழ்நாடு.
- யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்.
- யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை.

தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்களின் உறுதிமொழி

முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளையொட்டி, 19.5.95 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில், அரசு அலுவலர்கள் உறுதிமொழி ஏற்றனர். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மலரஞ்சலி செலுத்தினார்.

"அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகியவை நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கை உடைய இந்திய மக்களாகிய நாம், எவ்வகையான கொடுஞ்செயல்களையும் வன்முறைகளையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

"எல்லா மக்களிடத்திலும் அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிருக்கும் நற்பண்புகளுக்கும் ஊறுவிளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடவும் நாம் உறுதி கூறுகிறோம்" என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 'கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள்' உறுதிமொழியைச் சொல்ல, மாண்புமிகு அமைச்சர்களும், அலுவலர்களும் அதைத் திரும்பச் சொல்லித் தாமும் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு தலைமைச் செயலாளரும், அரசு உயர் அலுவலர்களும், பிற அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

திரைப்படக் கல்லூரியின் 31-வது ஆண்டு விழா

மாண்புமிகு செய்தி- விளம்பரத்துறை அமைச்சர் பரிசுகள் வழங்கினார்

திரைப்படக் கல்லூரி ஆண்டு விழாவில் சிறந்த மாணவர்களுக்கு மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விருதுகள் வழங்கினார்.

திரைப்படக் கல்லூரியின் 31-வது ஆண்டு விழா, சென்னைத் தரமணியில் உள்ள ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரத்தில் 23.5.95 அன்று நடந்தது. விழாவுக்கு ஜெ.ஜெ. டிவி. நிர்வாக இயக்குநர் திரு வி. பாஸ்கரன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் நடிகை கஸ்தூரி குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

விழாவில், மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் கலந்துகொண்டு, 1993-94-ஆம் ஆண்டில் சிறந்த இயக்குநருக்கான டைரக்டர் கே. சுப்பிரமணியம் நினைவு விருதை, திரைப்படக் கல்லூரி மாணவர் திரு சரவண குமாருக்கு வழங்கினார்.

மற்றும் சிறந்த இயக்குநருக்கான ஏவி.எம். நினைவு விருதை திரு நாகரத்தினம், ஒளிப் பதிவாளர் விருதை திரு கே. வெங்கடேசுவர ராவ், சிறந்த ஒலிப்பதிவாளருக்கான விருதை திரு எஸ். ஜெய்சங்கர், மற்றும் சிறப்புப் பரிசுகளை திரு எஸ். ராஜூ, திரு எல். கோட்டையன், திரு ஜெயபாண்டியன், திரு சோனியா ஆகியோருக்கும் மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.

விழாவில் இயக்குநர் திரு ஆபாவாணன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். திரைப்படக் கல்லூரி முதல்வர் திரு எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரியின் ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

விழாவில், நடிகை ஹீரா கலந்துகொண்டு தி ஆப்ட் டி.வி. நிறுவனம் வழங்கிய விருதை, திரைப்படக் கல்லூரி இயக்குநர் திரு பிரவின் குமார், ஒளிப்பதிவாளர் திரு சுஜிலால், எடிட்டர் திரு கோபாலகிருஷ்ணன், ஒலி அமைப்பாளர், திரு சத்தியமூர்த்தி, பிராசசிங், திரு சுந்தரமூர்த்தி ஆகியோருக்கு வழங்கிப் பாராட்டினார்.

விழாவில் பட அதிபர் திரு கே.ஆர். அவர்கள் (கோதண்டராமன்) கலந்து கொண்டு பேசுகையில், "1975-ஆம் ஆண்டு முதல் எத்தனை முதலமைச்சர்கள் கலைத் துறையில் இருந்து வந்தாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதாதான் திரைப்பட நகரம் அமைத்து, கலைஞர்களுக்கு வீடு கட்ட இலவசமாக நிலம் ஒதுக்கி, சாதனை படைத்திருக்கிறார். அவருக்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

திரைப்படக் கல்லூரியின் ஆண்டு விழா மலரை இயக்குநர் திரு ஆர்.வி. உதயகுமார் அவர்கள் வெளியிட, அதை, ஜெயலலிதா திரைப்பட நகரத்தின் நிர்வாக இயக்குநர் திரு பி. மாதவன் அவர்கள் பெற்றுக் கொண்டார். முடிவில் திரு வி. சிவக்குமார் அவர்கள் நன்றி கூறினார்.

உரிமையை அடையத் துடிக்கின்ற மானிடன் அறிவை அடைய அடிமையாகி விடக் கூடாது. உடற்பயிற்சியைக் கட்டாயத் துடன் பயிலவேண்டும். இதனால் உடலுக்குத் தீமை ஏற்படாது. அறிவைக் கட்டாயமாக நுழைத்தால் நினைவில் நிற்காது போகும்.

—சாக்ரடீஸ்

மக்கள் சுய சுதந்திரம் ஏதுமின்றி இயந்திரம் போன்று வாழ்கின்ற வாழ்வால் எவ்வாறான சமூகப் பயனும் விளையப் போவது கிடையாது.

—பெர்ட்ராண்டு ரஸ்ஸல்

ஏர்க்காட்டில் எழில்மிகு கோடை விழா!

சேலம் மாவட்டம் ஏர்க்காட்டில் 20-வது கோடை விழா மலர்க் கண்காட்சி 14.5.95 அன்று தொடங்கியது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு டி.எம். செல்வகணபதி அவர்கள் கோடை விழாவையும், 20-வது மலர்க் கண்காட்சியையும் தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திரு பி.கே. பிரசாத், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். ஏர்க்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.சி. பெருமாள் அவர்கள் முன்னிலை வகித்தார். கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் (வளர்ச்சி) திரு பி. சோணை, இ.ஆ.ப., வரவேற்றுப் பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள், திரு க. அர்ச்சுணன், திரு அன்பழகன், திருமதி டாக்டர் சரோஜா, திருமதி சுந்தராம்பாள் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

குத்துவிளக்கேற்றிவைத்தும் கோடை விழாவைத் தொடங்கிவைத்தும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

"ஏர்க்காட்டில் கோடை விழா மலர்க்கண்காட்சி தொடங்கி வைப்பது ஆண்டுதோறும் நடந்து வருகிறது. அதேபோல் இந்த ஆண்டும் இன்று மலர்க்கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கண்கொள்ளாக் காட்சியாக மலர்க்கண்காட்சி அமைந்துள்ளது. இது தொடர்ந்து நடைபெறும்.

"இந்த மாவட்டத்திற்குப் பக்கத்தில் உள்ளவர்கள் ஏர்க்காடு மலையின் எழிலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், இந்தப் பேரூராட்சி முக் கியமாக விளங்க வேண்டும் என்றும் இந்த விழா நடத்தப்படுகிறது. ஏர்க்காடு நகரில் எழில் கொஞ்சும் ஏரிக்குத் தனிச் சிறப்பு உண்டு.

"ஏர்க்காட்டை அழகுப்படுத்த ரூ.50 இலட்சம் அரசு சார்பில் செலவழிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மேம்பாட்டுக்கு ரூ.12 இலட்சமும், பஸ் நிலையத்தில் கழிப்பிட வசதிக்கு ரூ.3.50 இலட்சமும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அண்ணா பூங்காவை அழகுபடுத்த ரூ.20 இலட்சமும், லேடீஸ் சீட்டை அழகுபடுத்த ரூ.3.50 இலட்சமும், ஏரியைச் சுற்றி வண்ண விளக்குகள் அமைக்க ரூ.1.90 இலட்சமும் உட்பட ரூ.50 இலட்சம் ஏர்க்காடு வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

"இங்கு பேசியவர்கள் சுற்றுலாப் பயணிகள், ஊட்டி, கொடைக்கானல், ஆகிய பகுதிகளுக்குத்தான் அதிகம் செல்கிறார்கள். ஏர்க்காட்டிற்கு அதிகமாக வருவதில்லை என்றார்கள். இந்தக்குறைகளைப் போக்கவும், சுற்றுலாப் பயணிகள் வருவதற்காகவும் தான் இங்கு ரூ.50 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு நாம் பல்வேறு பணிகளைச் செய்து முடித்துள்ளோம்.

"ஏர்க்காட்டை முழுமையான சுற்றுலா மையமாக்கும் விதத்தில் சிறுவர்களுக்கான பூங்கா அமைக்கும் திட்டத்தை உருவாக்கி, அரசுக்கு அனுப்புங்கள் என மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவித்துள்ளேன். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் உல்லாச ரெயில், மிருகக்காட்சிச் சாலை போன்றவைகள் அமைக்கப்படும்.

"ஏர்க்காடு ஏரியில் அசுத்த நீர் கலக்கிறது எனப் புகார்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் முன்பு எல்லாம் இங்கு சினிமாப் படப்பிடிப்பு அதிகமாக நடந்தது. இப்பொழுது கோபி, பவானி, போன்ற இடங்களுக்குச் செல்கிறார்கள். ஏர்க்காட்டிற்கு வருவதில்லை என்று கவலை தெரிவித்தார்கள்.

"எனவே, ஏர்க்காடு பெரிய சுற்றுலா மையமாக உருவாக்கப்படும். முன்பு போலவே ஏர்க்காட்டில் படப்பிடிப்பு நடத்தும் வகையில் அழகுபடுத்தப்படும்".

–விழாவில் நாள்தோறும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், போட்டிகள், கருத்தரங்கு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அத்துடன் திரைப்படம், அனைத்துத் துறை சார்பில் அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கும் கண்காட்சி அரங்கம், ஆகியவை அனைவரையும் கவர்ந்தன.

படகு அலங்கார அணிவகுப்பு, கோ ஆப்டெக்சின் ஆடை அலங்கார அணி வகுப்பு, படகுப் போட்டி, ஆகியவைகளும் நடத்தப்பட்டன. வெற்றிபெற்ற அனைவருக்கும் 21.5.95 அன்று நடந்த நிறைவு நாள் விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.கே. பிரசாத், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

எஸ். நாகராசன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்



☆ நாம் உரிமைகளைப் போராடிப் பெறுவதற்கு, ஒற்றுமையுடனும், மன உறுதியுடனும், பலத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்ற உறுதியுடன் சத்தியம் செய்யுங்கள். நம் பக்கம் நியாயம் இருக்கும்போது நாம் தோல்வியடையவே முடியாது.

தமிழகத்திலேயே முதன்முறையாக வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் குழந்தை உழைப்பாளர் குறித்து கணக்கெடுப்பு!

தமிழகத்திலேயே குழந்தை உழைப்பாளர்கள் குறித்துப் பல விவரங்களைத் திரட்டும் கணக்கெடுப்புப் பணி முதன்முறையாக வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் நடைபெற்றது. தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறைச் செயலர் திரு பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்ப் புத்தாண்டு நாளான 14.4.95 அன்று காட்பாடி ஒன்றியத்திலுள்ள காசிக்குட்டைப் பகுதியில் கணக்கெடுப்புப் பணியினைத் தொடங்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் குழந்தை உழைப்பாளர் கணக்கெடுப்புப் பணியில் மாவட்டம் முழுவதும் 10,000 கணக்கெடுப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அறிவொளித் தொண்டு நிறுவனங்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் முழு வீச்சில் இந்தக் கணக்கெடுப்பில் ஈடுபட்டனர்.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பீடித் தொழில் மற்றும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தை உழைப்பாளர்களை மீட்டுப் பள்ளிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களைப் பற்றி முழு விவரமும் சேகரிக்க முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இம் மாவட்டத்திலுள்ள காட்பாடி, வேலூர், அணைக்கட்டு, கே.வி. குப்பம், குடியாத்தம், மாதனூர், பேரணாம்பட்டு, ஆலங்காயம், ஜோலார்ப்பேட்டை, நாட்றாம் பள்ளி, திருப்பத்தூர், கந்திலி, ஆகிய 12 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தக் கணக்கெடுப்புகளை நடத்தவும், குழந்தை உழைப்பாளர்கள்குறித்துப்பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கலை நிகழ்ச்சிகள், மனிதச் சங்கிலி, ஊர்வலங்கள், சைக்கிள் பேரணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கலைக்குழு வீதம் 12 ஒன்றியங்களுக்கும் கலைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு குழந்தைத் தொழிலாளர்கள் அவல நிலைகள் பாடல்கள், நாடகங்கள் மூலம் விளக்கப்பட்டது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சைக்கிள் பேரணியும் நடத்தப்பட்டது. கூடுதல் ஆட்சியர் திரு விபுநய்யர், இ.ஆ.ப., அவர்கள் சைக்கிள் பேரணிக்குத் தலைமை தாங்கினார். கல்புதூர், செங்குட்டை, காட்பாடி, தாராடபவேடு, காந்தி நகர் ஆகிய பகுதிகளில் பல கி.மீ. தூரம் சைக்கிளில் சென்று பிரச்சாரம் செய்தார். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் செய்தித்தாள்கள், சுவரெழுத்துக்கள், போஸ்டர்கள், பேனர்கள், மற்றும் வாகனங்கள் மூலம் குழந்தை உழைப்பாளர்கள் நிலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

10.4.95 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் வேலூர் கோட்டை மைதானத்திலிருந்து மாபெரும் குழந்தைத் தொழிலாளர்கள் விழிப்புணர்ச்சி ஊர்வலத்தினைக் காவல்துறை துணைத்தலைவர் திரு ஆர்.வி. கோபாலன், இ.கா.ப., அவர்கள் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். ஊர்வலத்தின் முடிவில் குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்புப் படிவத்தினை வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை இயக்குநர் டாக்டர் வி.ஜ.மாத்தன் அவர்கள் வெளியிட, அறிவொளி இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு செந்தமிழ்ச் செல்வன்

அவர்கள் பெற்றுக்கொண்டார். பின்னர், குழந்தைத் தொழிலாளர் நல்வாழ்வு இயக்கத்தின் சின்னத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டார்.

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக, தமிழ்ப்புத்தாண்டு நாளான 14.4.95 அன்று காட்பாடி ஒன்றியத்திலுள்ள காசிக்குட்டைப் பகுதியில் தமிழக அரசின் தொழிலாளர் துறைச் செயலாளர் திரு பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த கணக்கெடுப்பினைத் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்களுடன் கூடுதல் ஆட்சியர்கள் திரு விபுநய்யர், இ.ஆ.ப., திரு சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., இந்தியக் குழந்தைகள் நலச்சங்கச் செயலாளர் திருமதி திலகவதி ராமையா, யுனிசெப் பிரதிநிதி திரு வித்யாசாகர் ஆகியோர் பங்கேற்றனர். மாவட்டத்தில் மொத்தம் 3 இலட்சம் வீடுகளில் இந்தக் கணக்கெடுப்பு நடைபெற்றது.

தொழிலாளர் துறைச் செயலர் திரு பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடையே பேசும்போது, "தமிழ் நாட்டிலேயே முதன்முறையாகக் குழந்தைத் தொழிலாளர் பற்றிய கணக்கெடுப்பு இம் மாவட்டத்தில் நடைபெறுகிறது. உடல்நலத்தைப் பாதிக்கக்கூடிய தொழில்களில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் முதலில் அடையாளங்கண்டு எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுவும், குழந்தைத் தொழிலாளர்கள் குழுமமும் அமைக்கப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள், தொழில் அதிபர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் இதில் உறுப்பினர்களாக இருப்பர். இம் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்பு மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்டியுள்ளது. வட ஆர்க்காடு அம்பேத்கர் மற்றும் காமராசர் மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் நிலைமை குறித்து அரசு எடுத்த நடவடிக்கையை மத்திய மனித உரிமைக்குழு பாராட்டி இருக்கிறது. பொருளாதாரத் தேவைக்காகப் பெற்றோர்கள் குழந்தைகளைச் சுரண்டுவது மிகவும் வேதனை அளிக்கிறது. குழந்தைத் தொழிலிலிருந்து விடுவிக்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு வருவாய் ஈட்டுவதற்காக அரசு வழங்கும் நிதியுதவியினைச் சரியான முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும். குழந்தைகளைக் கட்டாயம் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பெற்றோரிடம் நேரடிப் பேட்டி:

காசிக்குட்டைப் பகுதியில் வசிக்கும் திரு குமார் திருமதி புஷ்பா ஆகிய தம்பதியினர் தங்களது 8 வயது மகனான ராஜா என்பவனை ரூ.2000 க்கு அடகு வைத்திருந்தார்கள். அவர்களை நேரில் கண்டு விசாரித்த போது, கடந்த ஓராண்டுக் காலமாகத் தங்கள் மகன் ராஜாவைப் பீடித் தொழில் ஏஜென்ட்டிடம் அடகு வைத்ததாகவும், தங்கள் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால் வீட்டில் சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டதாகவும் வறுமையின் காரணமாக வேறு வழியில்லாமல் தங்கள் மகனைப் பீடி வேலைக்கு அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிட்டார். ராஜா என்ற அந்தச்சிறுவனை மாவட்ட நிர்வாகம் மீட்டு, பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளது. தற்போது அந்தச் சிறுவன் இந்தியக் குழந்தைகள் நலச் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் பள்ளியில் படித்து வருகிறான். இனிமேல் தனது குழந்தையை இந்தப் பீடித் தொழிலுக்கு அனுப்ப மாட்டோம் ; என்றும் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பி வைப்போம்" என்று குறிப்பிட்டனர்.

திருமதி பாஞ்சாலை அம்மாள் அவர்கள் வத்சலா என்ற தனது 10 வயது மகளை, பீடித் தொழிலில் ஒரு ஏஜென்ட்டிடம் ரூ.5,000க்கு அடகு வைத்திருந்தார். மாவட்ட நிர்வாகம் மூலம் குழந்தைத் தொழிலாளர்கள் விழிப்புணர்ச்சி குறித்து, பல்வேறு வகைகளில் பொது மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் செல்வி வத்சலா என்ற பெண் மீட்கப்பட்டு பள்ளிக்கு அனுப்பப்பட்டு வருகிறாள். செல்வி வத்சலா என்ற பெண்ணின் தாயார் திருமதி பாஞ்சாலை கூறும்போது, "பீடித் தொழிலில் அடகு வைத்த எனது பெண்ணை அரசாங்கம் மீட்டுக் கொடுத்ததுடன் எங்கள் குடும்பத்தில் வருமானத்தைப் பெருக்க ரூ.12,000 செலவில் கறவை மாடு வழங்கியுள்ளது. இதில் மானியத்தொகை ரூ.4,000 போக மீதித் தொகையை நாங்கள் கட்டினாலே போதும். கறவை மாட்டின் மூலம் ஒரு நாளைக்கு, காலை மாலை இருவேளையும் சேர்த்து 13 லிட்டர் பாலை சேனூர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஊற்றுகிறோம். தற்போது பால் கொள்முதல் விலையும் உயர்த்தப்பட்டுள்ளதால், எங்களது குடும்பச் செலவிற்குப்போதுமான அளவு பணம் கிடைக்கிறது. இதனைக் கொண்டும் குடும்பத்தை நடத்தி வருகிறோம். இனி எக்காரணம் கொண்டும் பீடித் தொழிலுக்குக் குழந்தைகளை அனுப்ப மாட்டோம்" என்று உறுதிமொழி கூறினார்.

★ என் நாட்டு மக்கள் மனிதர்களை விட, நாடு பெரியது என்பதை என்றாவது ஒரு நாளைக்குத் தெரிந்து கொள்ள வேண்டும்.

—டாக்டர் அம்பேத்கர்

★ சமூகச் சீர்திருத்தமே தாழ்த்தப்பட்டவர்க்குச் சகல நன்மைகளையும் தரும்.

—டாக்டர் அம்பேத்கர்

காசிக்குட்டைப் பகுதியைச் சேர்ந்த திரு கொல்லாபுரி என்பவர் லட்சுமி என்ற 9 வயதுள்ள சிறுமியை ரூ.2,300 க்கு ஒரு ஏஜென்ட்டிடம் அடகு வைத்திருந்தார். அரசு நடவடிக்கை காரணமாக, பீடித் தொழிலில் அடமானம் வைக்கப்பட்ட அந்தச் சிறுமி மீட்கப்பட்டு தற்போது பள்ளிக்குச் சென்று வருகிறாள்.

சிறுமியின் தந்தை திரு கொல்லாபுரி கூறுகிறார்: "நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். கடந்த சில ஆண்டுகளாக உடல் நலமின்மை காரணமாக வீட்டில் வருமானத்திற்கு வழியில்லாமல் இருந்தது. எனவே, கடந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக எனது மகளைப் பீடித் தொழிலுக்கு அனுப்பிவைக்கிறேன். கலெக்டர் போன்ற உயர் அதிகாரிகள் வந்து குழந்தைகளை அடமானம் வைப்பதும், வேலைக்கு அனுப்புவதும் குற்றம் என்று கூறியதாலும், அறிவொளி இயக்கத்தில் குழந்தைத் தொழிலாளர் குறித்து விளக்கியதாலும், நான் எனது குழந்தையைப் பீடித் தொழிலுக்கு அனுப்புவதை நிறுத்தி விட்டேன். குழந்தை அடமானம் சட்டப்படி குற்றம். அடமானப் பணத்தை திருப்பித் தர தேவை இல்லை என்று தெரிந்தபின் குழந்தையைத் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று குறிப்பிட்டார். மேலும் "அடமானப் பணத்தை திருப்பி செலுத்தாததால் குழந்தையை மீண்டும் பீடித் தொழிலுக்கு வந்து கூப்பிட்டால் அரசிடம் புகார் செய்வோம். நான் ரேடியோ கடை வைக்க லோன் கேட்டு மனுகொடுத்துள்ளேன். லோன் கிடைத்ததும் நான் சொந்தமாகத் தொழில் தொடங்குவேன்" என்றார்.

சரசுவதி என்ற 13 வயது மகளை அடகு வைத்திருந்த அவளது தந்தை திரு முருகேசன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"நான் சரசுவதி (வயது 13) என்ற மகளை ரூ.3,000 க்கும், சிவமூர்த்தி (வயது 11) என்ற மகனை ரூ.900-க்கும் பீடித் தொழில் ஏஜென்ட் ஒருவரிடம் அடகு வைத்திருந்தேன். சரசுவதி 7 ஆண்டுகளாகப் பீடி சுற்றும் தொழில் கவனித்தாள். மகன் சிவமூர்த்தி பள்ளி செல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பீடி சுற்றச் சென்று விடுவான். தற்போது அரசு எனது குடும்பத்தை மீட்டுள்ளது. இனி எங்களது குழந்தைகளைக் கட்டாயமாக வேலைக்கு அனுப்பமாட்டோம். அரசு கொடுத்துள்ள கறவை மாடுகளை நன்கு பராமரித்து, குடும்பத்தைக் கவனித்துக் கொள்வோம்" என்றார்.

அடகு வைக்கப்பட்ட சிறுமி சரசுவதி கூறும்போது, "எங்களுக்கு விவரம் தெரியும்முன் அடகு வைத்து விடுவதால் எங்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை.

ஒரு நாளைக்கு, குறைந்தது 2,000 பீடி சுற்றுமாறு அடகுக்குப் பணம் கொடுத்தவர்கள் வற்புறுத்துவார்கள். பீடி சுற்றுவது குறைந்துவிட்டால் அடிப்பார்கள். வீட்டிற்குச் சாப்பாட்டிற்கு அனுப்ப மாட்டார்கள். பெற்றோரிடம் சொன்னால் மீண்டும் எங்களுக்கு அடகு பிடித்தவரிடமிருந்து அடி விழும். எனவே, நாங்கள் வெளியே எதையும் சொல்லாமல் பீடி சுற்றிவிட்டு வந்துவிடுவோம். எனக்குப் படிப்பதற்கு ஆர்வம் இருந்தாலும் எங்களைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருந்துவிட்டார்கள்" என்று சோகமாகக் குறிப்பிட்டாள்.

பொதுவாகப் பெண் குழந்தைகளை அதிக அளவில் பீடி சுற்ற அடகு வைத்தது தெரிய வருகிறது. ஆண் குழந்தைகளை ஓரளவு பள்ளிக்கு அனுப்பி வைப்பதும் வெளிப்படையாக உள்ளது. கறவை மாடுகள் பெற்றவர்கள் குறிப்பிடும் ஒரு பொதுவான குறைபாடு என்னவென்றால் கறவை மாடுகளை ஒரு குறிப்பிட்ட நபர் தொடர்ந்து கறந்தால் பால் சரியான அளவில் சுரக்கும், ஒவ்வொரு வேளைக்கும் ஆள் மாற்றி மாற்றி கறப்பதால் கைப்பழக்கத்தின் காரணமாகச் சரியான முறையில் பால் சுரப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள்.

இவர்களது நலனை முன்னிட்டு வேலூர் பால் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று காசிக்குட்டைப் பகுதியில் இயங்கி வருகிறது.

தமிழக அரசு எடுத்துவரும் இந்தச் சீரிய நடவடிக்கையினால் பல நூற்றுக்கணக்கான அடகு வைக்கப்பட்ட குடும்பங்கள் மீட்கப்பட்டன. மாவட்டம் முழுவதும் ஒரு வித விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் கண்கூடாகக் காணமுடிந்தது.

லோ. கிருஷ்ணமூர்த்தி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்.

கல்வி சிறந்த கோவையிலே...

கோயம்புத்தூர் மாவட்டத்தில் – முதன்முதல் 1859-இல், பொள்ளாச்சியிலேதான் மக்கள் நன்கொடை மூலம் ஒரு பள்ளிக்கூடம் துவக்கப்பட்டது. அடுத்த ஐந்தாண்டில் இன்னும் 7 பள்ளிகள் கட்டப்பட்டு, போதுமான மாணவர்கள் சேராததால் அவற்றில் ஐந்து மூடப்பட்டன.

1868-69-இல், கோவை ஆங்கிலோ வெர்ணாகுலர் பள்ளி இரண்டாம் நிலைக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது.

இப்போதோ - சென்னைக்கு அடுத்தபடியாகக் கோயம்புத்தூர் மாவட்டத்திலேதான் கல்வி நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. குறிப்பாக – தொடக்கக் கல்வி உயர்நிலைப்பள்ளிக் கல்வியைவிட, பல்கலைக்கழகக் கல்வியும், தொழிற்கல்வியும் பெரிதும் மேம்பாடு அடைந்திருக்கின்றன.

பாரதியார் பல்கலைக்கழகம், நிர்மலா மகளிர் கல்லூரி, ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி, அரசினர் பெண்கள் பயிற்சிக் கல்லூரி, காலேஜ் ஆஃப் டெக்னாலஜி - கோயம்புத்தூர், இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா ஆசிரியர் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரி, அவினாசிலிங்கம் மகளிர் மனைஇயல் பல்கலைக்கழகம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, விவசாயக் கல்லூரி மற்றும் விவசாய ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

3 மாவட்டங்களில் 100 சிறப்புக் காவல் அலுவலர்கள் நியமனம்

–மாண்புமிகு முதல்வர் ஆணை

கடந்த 1994-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தகுதியுள்ள வேலையற்ற இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து, சிறப்புக் காவல் அலுவலர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினையொட்டி, தமிழகக் காவல் துறை, தற்போது சென்னை நகரம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (கிழக்கு), செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (மேற்கு) காவல் மாவட்டங்கள் ஆகிய இடங்களில் மட்டும் 10 இலட்சம் ரூபாய் செலவில், 100 சிறப்புக் காவல் அலுவலர்களை நியமிக்கச் செயற்குறிப்பு ஒன்றைத் தயார் செய்தது. இந்தச் செயற்குறிப்பை ஆய்வு செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேற்கண்ட 3 மாவட்டங்களிலும், 10 இலட்சம் ரூபாய் செலவில் 100 காவல் அலுவலர்களை நியமிக்க- தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சிறப்புக் காவல் அலுவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்படும். இந்தச் சிறப்புக் காவல் அலுவலர்கள், 1 ரோந்துப் பணி (Patrolling) (2) பாதுகாப்புப் பணி (Bandobust) (3) போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணி (Traffic Regulations) ஆகிய பணிகளில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவார்கள். இவர்கள் பகுதி நேர அரசு ஊழியர்களாக மட்டுமே கருதப்படுவார்கள். தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்படும் இந்த 100 சிறப்புக் காவல் அலுவலர்களுக்குத் தேவையான சீருடைகளும், காலணிகளும் மற்றும் தேவையான உபகரணங்களும் இலவசமாக வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

- அறிஞர் அண்ணா

TNGST No.2/02/10 264706 PHONE: 700534, 700535, 700536

CST No.313647 Dt.27.5.82 RESI: 24535

CITY ELECTRICALS

Dealers in: ALL KINDS OF ELECTRICAL AND HARDWARES

52.Kumaran Road * TIRUPPUR-641 601

எங்கள் இதய தெய்வம்
மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்
ஆட்சியில்,
தங்கத் தமிழகம் சிறந்து முன்னேற
அனைத்து இந்திய நாட்டிலும்
சாதனை புரிய,
எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைக்
காணிக்கையாக்குகிறோம்!

இந்த அரசால் எதுவும் முடியும்

இயக்குநர் பாரதிராஜா

'என் இனிய தமிழ் மக்களே', அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

முதலில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள வேண்டும். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் பாரதிராஜா என்பதை நான் நினைத்து, நினைத்துப் பார்க்கிறேன். அந்த வியப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கும் 14 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சிறப்புக் கிடைத்தது. 'அலைகள் ஓய்வதில்லை' என்ற ஒரு படத்தைத் தயாரித்ததற்காகப் பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் இதயத்தில் இடம் பிடித்த எனக்கு, ஒரு சமூக அங்கீகாரம் வாங்கிக் கொடுத்த அந்தப் பெருந்தகைக்குப் பிறகு, 14 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த 8வது உலகத் தமிழ் மாநாட்டில் எனக்கு, இந்தப் பாமரனுக்கு ஒரு சமூக அங்கீகாரம் கொடுத்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே நன்றி, வணக்கம்.

எனக்கு ஒரு சிறிய தகுதி இருக்கிறது. அந்தக் கடலில் ஒரு சிறங்கைத் தண்ணீரையாவது முகர்ந்து நான் அருந்தியிருக்கிறேன் என்ற ஒரு தகுதியிருக்கிறது. சிறங்கை அளவு தண்ணீரைத்தான் முகர்ந்திருக்கிறேன். இன்னும் அதனுடைய ஆழம் அகலம் மற்றும் பரிமாணம் தெரியாதவன்தான் இந்த பாரதிராஜா.

இங்கு பேசியவர்கள் திரையுலகத்தைக் கடைசியாக ஒரு இடி இடித்து விட்டுத்தான் சென்றார்கள். அது எல்லோருக்கும் பொதுவாக ஒரு சுகமான விஷயம்தான். முனைவர் சிவகாமசுந்தரி அவர்கள் மிகவும் அழகாகப் பேசினார்கள். எனக்குக் கொடுத்த தலைப்பு 'இயற்கை' என்று கூறி, இயற்கையை எந்த அளவுக்கு அவர்கள் நேசிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, இந்த நாட்டில் நடக்கக்கூடிய வக்கிரங்கள், வேகங்கள், குரோதங்கள் பற்றி எல்லாம் சொல்லிவிட்டு கடைசியாகக் காதலைப் பற்றியும் சொன்னார்கள்.

காதலைப் பற்றிச் சொல்லிவிட்டு என்னையும்ஒரு பார்வை பார்த்தார்கள் என்று நினைக்கிறேன். அப்போது பக்கத்திலே இருக்கிற அத்தனைப் பேரும் என்னைப் பார்த்தார்கள். காரணம் - ஏதோ காதலுக்குச் சொந்தக்காரன் பாரதிராஜா என்பதுபோல் பார்த்தார்கள். அதை நான், இல்லை என்று சொல்லவில்லை.

ஆம். இந்த மக்களின் காதலுக்கு நான் சொந்தக்காரன். அவர்கள் பேசியதற்குப் பின்னால் பேசிய நாடகப் பேராசிரியர் பெருமாள் அவர்கள் காலம் விரைந்து போய்க் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். திருக்குறளில் வருவது போல, 'நான் நோக்கும் போது அவள் நிலம் நோக்க, நான் நோக்காக்கால் அவள் நோக்க' என்பது போலெல்லாம் படம் பிடிக்க வேண்டும்

☆ **“கலப்பு மணம் உலக முழுவதும் நடைபெறுதல் வேண்டும்; அதற்கென்று ஆங்காங்குள்ள தலைவர்கள் பல திற இயக்கங்களை நிறுவிக் கலப்பு மணத்தில் கருத்திருத்தல் அறம்.**

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

முதல் படம், 'காளிதாஸ்'தான். அப்போது, நான் பிரமையோடும், மயக்கத்தோடும் பார்த்த சினிமா அது.

எனக்கு முன்னாலே பெரிய ஜாம்பவான்கள் 'ஸ்ரீதர், பீம்சிங், பாலச்சந்தர் போன்றவர்கள் செய்யாதது இல்லை. சமூகவியலையும், மன உணர்வுகளையும், குடும்ப நிகழ்ச்சிகளையும், மனக்கிலேசங்களையும், மிக அழகாக, அற்புதமாக அவர்கள் படம்பிடித்து மக்களிடம் கண்ணீர் வரவழைத்தே, இரக்கப்பட வைத்தே ஜெயித்தார்கள். புளகாங்கிதப்படுத்துவது, பிறகு மெல்லக் கிள்ளிவிடுவது, மெல்ல அழவிட்டுப் பிறகு மெல்ல சிரிக்கவிட்டுப் படம் எடுப்பது என்பது கலையினுடைய நேர்த்தி. அதை அவர்கள் மிகவும் அழகாக, நல்ல கலவையாகவே செய்தார்கள். அதற்குப் பின்னாலே கால மாற்றம் ஏற்பட்டது.

பாரதிதாசன் அவர்கள் கூட தமிழ்ப் படங்கள் பற்றிச் சொல்லுகிறபோது நொந்து நொந்து எழுதியிருக்கிறார்.

“என் தமிழர் படம் எடுக்க ஆரம்பம் செய்தார்

எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக,

ஒன்றேனும் தமிழ் நடையுடை பாவனைகள்

உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ளதில்லை.

ஒன்றேனும் தமிழ் அருமை உணர்த்துவதாய் இல்லை.

ஒன்றேனும் உயர் நோக்கம் அமைந்ததாயும் இல்லை,

வடநாட்டார் போன்றே உடை, வட நாட்டார் மெட்டு,

மாத்தமிழின் நடுவினிலே தெலுங்குக் கீர்த்தனைகள்,

வடமொழியில் சுலோகங்கள்,

ஆங்கிலத்திலே பிரசங்கம்"

- என்று சொல்லுகிறார். அப்படி இருந்தது சினிமா.

'பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போவார்,

பதிவிரதைக்கு இன்னல் வரும், பழையபடி தீரும்'

- என்றும் அவர் சாடுவார். இப்படி சினிமா என்றால் அதனுடைய தலைப்புகளைப் பார்த்தால், 'வள்ளித் திருமணம், சத்தியவான் சாவித்திரி, பார்வதி கல்யாணம், பவளக்கொடி, சதிஅனுசூயா - அதாவது இதிகாசங்களையும், புராணங்களையும் கொண்டுவந்து மிகப் பிரமாதப்படுத்தினார்கள்.

ஆனால், எவ்வளவு பெரிய தமிழ் இலக்கியங்கள் இந்தத் தமிழ்நாட்டில் இருந்தனவோ அந்த இலக்கியங்களையும் தொட்டிருக்கிறார்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக இந்த நாட்டின் கலாச்சாரப் படிவங்கள், காலப்போக்கில், அதனுடைய தடயங்கள் எல்லாம் மறைந்து போய்விடும், நம் பிள்ளைகளுக்கு நாம் அவற்றைச் சொல்லமுடியாது. அதற்காக நான் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுக்க இருக்கிறேன்.

இப்போது நாம் 30 ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த கிராமங்கள் இல்லை. நான் என்னுடைய படங்களில் பழைய கிராமத்தின் தடயங்களை வைத்துத்தான் காட்டிக்கொண்டிருக்கிறேன். ஏனென்றால், கிராமங்களில் இப்போது 'பிரிட்ஜ்' நுழைந்துவிட்டது. டெலிவிஷன் வந்துவிட்டது. பழைய வீடுகளை இடித்துவிட்டார்கள். பொருளாதாரம் வளர்ந்துவிட்டது. அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. நான் பிறந்த கிராமத்தில் நான் பார்த்த கிராமத்தில் அப்போது தெருக்களில் எங்கோ ஒரு கீரைக்காரியின் சத்தம் மட்டுமே கேட்கும், ஒரு சிறிய குழந்தை மூக்கொழுகப் போய்க் கொண்டிருக்கும், ஒரு கிழவி காக்காய் விரட்டிக் கொண்டிருப்பார். அந்த மூன்று பேர்கள் தான் ஒரு தெருவின் ஜனத்தொகையாக இருப்பார்கள்.

இன்றைக்கு அங்கே போகிறேன். தெருக்களிலே நுழைய முடியவில்லை. ஜனத்தொகை கூடிவிட்டது. கட்டடங்கள் உயர்ந்து நிற்கின்றன. ஆகவே, கிராமம் என்பது 30 ஆண்டுகளுக்கு முன்னால் இப்படி இருந்திருக்கிறது என்று சொல்ல

வேண்டும்.

என் பையனிடம் சொன்னால் சிரிக்கிறான். 'சும்மா டாடி' என்கிறான். என் தாயின் மீது நான் வைத்திருக்கும் நெகிழ்ச்சி கூட அவனுக்கு அதிகமாகத் தெரிகிறது. ஓவராக அபெக்ஷன் வைத்திருக்கிறீர்களே என்று கேட்கிறான். அபெக்ஷன் கூட அவனுக்கு ஓவராகத் தெரிகிறது. காரணம்-காலம் மாறுகிறது.

ஆக நேற்று நடந்ததை, நேற்று நடந்த வரலாற்றை எதிர்காலச் சந்ததியினர்களுக்கு வழங்குவதற்காகத் தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளைப் படமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல வேளையாக எஸ்.எஸ்.வாசன் அவர்கள் 'ஔவையார்' படம் எடுத்தார்கள்.

பிள்ளைகளுக்குப் பாடமாக 300 பக்கங்களிலே சொல்லிக் கொடுங்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு இரண்டு மணி நேரத்தில் ஒரு சினிமாவாகக் கொடுங்கள் போதும். சினிமாவுக்கு அவ்வளவு சிறப்பு இருக்கிறது. நீங்கள் 300 பக்கங்களைப் படிக்கச் சொன்னால் அதைத் தூக்கி எறிந்துவிட்டு நம்மோடு சண்டைபோடும் பையன், அதையே படமாக டி.வி.யில் கொடுத்தால், நன்றாகப் பார்ப்பான். படங்களில், இலக்கியத்தைக் கதையாகச் சொல்லுங்கள்.

இணையிலா மாமன்னன் இராசராசன்:

இராசராசனின் துணிச்சல் மிக்க செயல்கள் கடவுளின் தூண்டுதலின் பேரில்தான் நடைபெற்றன எனக்கொள்ள இடமிருக்கிறது. ஏனெனில், தஞ்சையில் மிகப் பெரிய கோவிலைக் கட்டி, அதற்குள் தன்னையும் தன்னுடைமைகளையும் அர்ப்பணித்துள்ளான்.

—மார்க் வெளிமீட்டின் 'தமிழ்நாட்டின் அதிசயங்கள்' என்ற நூலில்.

இராசராசனின் புகழுக்கு, அவனுடைய வீரச் செயல்கள் மட்டும் காரணமல்ல, அவன் வளர்த்த கலைகளும் நிர்வாகத் திறனும் காரணங்களாகும்.

—டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்

பிற கடவுளர்களுக்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை அரசர்களுடன் போரிட்டு முப்புறம் அழித்த பராந்தகனுக்குக் கொடுத்து, சிற்பங்களிலும் ஓவியங்களிலம் வடித்துள்ளான். இதற்குக் காரணம் பல நாடுகளை வெற்றி பெற்று மிகப்பெரிய வீரனாக விளங்கியதேயாகும்.

—மேரிஸ் பஸ்லாக்கி, சிவராமமூர்த்தி

இராசராசனின் போர் வெற்றியும், நெறிப்படுத்தப்பட்ட பேரரசும், கலை மற்றும் இலக்கியப் பற்றும், சமயப் பொறையும் அவனைக் குறிப்பிடத்தக்க மன்னனாகத் திகழச் செய்தது.

- சி. சிவராமமூர்த்தி

முதல் இராசராசன், இராசேந்திரன், ஆகிய இவர்களின் ஐம்பது ஆண்டுக் கால ஆட்சி, தமிழ் மன்னர் அனைவரையும் அடிபணிந்து ஆண்ட காலமாகும்.

—வின்சென்ட் ஏ. ஸ்மித்

இவன் பல்லாண்டுகள் இளவரசராக அமர்ந்து, ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று நடத்தி, அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றிருந்தான். சோழப் பரம்பரையின் பெயரையும் புகழையும் பன்மடங்கு உயர்த்திவிட்டவன் இராசராசனே. இராட்டிரகூடரின் படையெடுப்புக்களினால் திறனிழந்து, வளமிழந்து சுருங்கிவிட்ட சோழ நாடு மீண்டும் விரிவுற்று மிகப் பெரியதொரு பேரரசாக வரலாற்றில் திகழவைத்த பெருமை முதலாம் இராசராசனையே சாரும்.

—டாக்டர் கே.கே. பிள்ளை

என்றார். இப்போதெல்லாம் அவள் நோக்குவதற்கு முன்னாலே கதையே முடிந்து விடுகிறது.

அவன் பார்த்தான், அவள் பார்த்தாள்; 'அவன் பார்த்தான், அவள் பார்த்தாள்' எனச் சொல்லும்போதே, "பார்த்ததுக் கொண்டே இருந்தால் எப்படி, எப்போது பேசப்போகிறாய்?" என்று கேட்கிறார்கள்.

நானும் சில திரைப்படம் எடுத்திருக்கிறேன். 'புதிய வார்ப்புகள்' என்ற படத்தில் காதலர்கள் பார்ப்பதுபோல காட்சி இருக்கும். அந்தப் படத்தில் கதாநாயகனும், நாயகியும், தூண் மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள். அப்போது ஒரு நாதஸ்வர ஓசையின் பின்னணியுடன் மறைவிலிருந்து அழகாக இலக்கிய நயத்துடன் - பார்த்தாள், மெல்ல மறைந்தாள். பார்த்தாள், மெல்ல மறைந்தாள் என்று இசையுடன் கலந்து கொடுத்திருந்தேன்.

அன்று அதைப் பார்க்கும் போது அழகாகத் தெரிந்தது. இன்று கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலே, 'பேசப்பா' என்கிறார்கள் கீழே இருப்பவர்கள். அது பெருமையாக, புதுமையாக இல்லை.

பழைமையை நான் குறை சொல்லவில்லை. காலம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. பேப்பர்களை எடுத்தால் முழுமையாகப் படிப்பதில்லை, தலைப்பு எங்கே இருக்கிறது என்று தேடிப் படித்துவிட்டுத் தூக்கி எறிந்துவிடுகிறார்கள். வேகவேகமாகப் போய்க்

பாய்ந்தோடும் நீர் வெள்ளத்தைத் தேக்கிப் பாய்ச்சினால்தான் பலன் காண முடியும். காட்டாறு பயிரை வளர்க்காது. கட்டுப்பாடு இல்லாத வாழ்வும், அணைக்கட்டு இல்லாத வெள்ளமும் ஆபத்துத்தான்.

-பேரறிஞர் அண்ணா

கொண்டிருக்கிறார்கள். அவசர அவசரமாகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று ஆரவாரமாகவும், வேகமாகவும் போய்க்கொண்டிருக்கின்ற காலம் இது!

ஆயுசு நூறிலே வாழ்பவர்கள் நாம் கம்மி. ஐம்பதிலேயே முடிந்து விடுகிறது. ஆக, வேகவேகமாகவே அழிந்து கொண்டிருக்கிறோம். கலையிலும் சற்று இங்கேயும் அங்கேயும் கொஞ்சம் வேகங்கள் இருக்கலாமென்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'காற்றினிலே வரும் கீதம்' என்பது ஒரு தேமதுரத் தமிழோசை மாதிரி. அப்படியெல்லாம் இப்போது காதிலே வந்து பாய்வது ரொம்ப அற்புதம். நான் சின்ன வயதில் கேட்டது. ஆனால், இன்று நானே பாடியிருக்கிறேன். கட்டைக் குரலில் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறேன். அதை ஜனங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்! இப்போது அப்படியெல்லாம் 'திக்' ஆக ஒரு 'வாய்ஸ்' வேண்டுமென்று 'திங்க்' பண்ணுகிறோம். சுதிக்கும் எனக்கும் ஞானப் பிராப்தமே கிடையாது. கொஞ்சம் கூட சம்பந்தம் கிடையாது.

பாட்டை நான் பாடினால், இளையராஜா அந்தக் காலத்திலே எழுந்து காத தூரத்திற்கு ஓடுவார். நான் பேசினாலே கொஞ்சம் பயமாக இருக்கிறது என்று சொல்லுவார். நான் பாடினால் எப்படி இருக்கும்? ஆனால், இசைக்கு அது தேவையாக, இன்றைய நிலையில் அந்த இசைக் கலைஞனுக்குத் தோன்றியிருக்கிறது, என்னைப் பாட வைத்திருக்கிறார். அத்தகைய மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏனென்றால், கால மாற்றங்களை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மரபுகளை மீறவும் கூடாது, மரபுகளைத் தொற்றிப் பிடித்துக் கொள்ளவும் கூடாது என்பதற்கு நான் உடன்படுகிறேன். சினிமா என்பது ஒரு காலத்தில் இல்லையென்றால், இந்த மாற்றங்கள் வந்திருக்கவே இருக்காது.

லாஸ் ஏஞ்சல்ஸிலே, அமெரிக்காவிலே சினிமா என்பது ஆரம்பித்த காலத்தில், படம் பிடிப்பவனைப் பில்லி தூனியக்காரனைப் போல விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். லாஸ் ஏஞ்சல்ஸிலே காடுகளிலே போய் மறைந்து கொண்டுதான் படம் பிடித்திருக்கிறான். பின்னாலேதான், கொஞ்சம், கொஞ்சமாகத்தான் அது வளர்ந்தது. அதற்குப் பிறகுதான், 'தாமஸ் ஆல்வா எடிச'னுக்கு நாமெல்லோரும் தலை வணங்க வேண்டும். அதுகூட மேலைநாட்டு விஷயம் தான்; இங்கே இறங்கியது.

நாம் எப்படி இருந்தோம் என்றால், இன்றைக்கும் தாய் தாலாட்டுகிறாளே - தாலாட்டும் போது ஒரு கதை சொல்லித்தான் தாலாட்டுவாள். பாட்டி, பேரப் பிள்ளையைத் தட்டிக் கொடுக்கும்போது, கதை சொல்லித்தான் தாலாட்டுவாள். கோவிலுக்குச் சென்றாலும், கதை சொல்லித் தான் காலட்சேபத்தை நிகழ்த்துவார்கள்.

பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகிய இவர்கள்தான் நாடகத்திற்கு உயிர் கொடுத்தவர்கள். கொஞ்சம் வழக்கு முறைகள் மாறியது. சினிமா என்று தோன்றிய காலத்திலே, இந்த நாடகங்கள் சினிமாக்களாக மாற ஆரம்பித்தன. ஆகையினால்தான் அந்தக் காலத்திலிருந்து, சினிமாவிற்குச் சினிமா, தமிழை எடுத்துப் பார்த்தனர்; இந்த 30 ஆண்டுக் காலங்களில், மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அன்றைய காலகட்டத்தில் என்ன பேசினார்கள் என்பதை நானும் பழைய பிரிண்டைப் போட்டுப் பார்த்திருக்கிறேன். "ஸ்வாமி, நாதா...ப்ரியே" என்றெல்லாம் சமஸ்கிருதம் அதிகமாகக் கலக்கப்பட்டு, எனக்கே புரியாத விஷயங்கள் எல்லாம் இருந்த ஒரு காலகட்டம் உண்டு. ஏனென்றால், அந்தக் காலத்தில் அப்படித்தான் இருந்தது. கல்கத்தா, பம்பாய், பூனா அங்கேயெல்லாம் படம் எடுத்தார்கள்.

மெட்ராசிலே அந்தமாதிரி அப்போது படம் எடுக்கவில்லை. மெட்ராசிலே இருக்கிறவர்கள், இங்கே இருந்தவர்கள்தான் நடிகர்கள் - அங்கே போனார்கள். ஆக, தமிழ்ப் படத்தைக்கூட ஆங்கிலேயரான 'எல்லிசார்டங்கன்' எடுத்திருக்கிறார். அப்படி இருந்த தமிழ்த் திரையுலகம், மூன்று பரிமாணங்களில் மாறியது. ஊமைப்படங்கள், அதற்குப் பின்னால் பேசும் படம், அதற்குப் பின்னால், இப்போது வண்ணப்படம். நாளை 21-ஆம் நூற்றாண்டில் என்ன வருமோ தெரியாது.

திரை சுருங்கி இருக்கிறது. சின்னத் திரை என்கிறோம். இது எந்தத் திரையாகப் போய் முடியும் என்பது நமக்குத் தெரியாது. ஏனென்றால், இன்றைக்கு எனக்கே புரியவில்லை.

கம்ப்யூட்டரிலே இவ்வளவு விஷயங்கள் வந்துவிட்டன. நான் பெரிய சினிமா வித்துவான் என்று நினைக்கிறேன். எனக்கே தெரியாத புதிய புதிய உத்திகள் இந்தக் கலையில், புதிய பரிணாமங்களாகத் தோன்றியிருக்கின்றன. கிட்டப்பாவின் பாட்டை ரசித்தவன் நான். பாகவதரின் பாட்டை ரசித்தவன் நான்.

அப்படி ஒரு காலகட்டத்திலே இருந்து மாறி, உரைநடை கொஞ்சம் உயிர்பெற ஆரம்பித்தது. அதற்காகத் திராவிடப் பாரம்பரியம் என்று சொல்கிறோமே, அது இந்தத் திரை உலகத்தில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை, வசன நடைக்குக் கொடுத்தது. அதுவும் திராவிடப் பாரம்பரியம் என்று என்றைக்குக் கூற ஆரம்பித்தோமோ அன்றுதான் என்பதை எந்த மனிதனும், எந்தச் சபையிலும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அதன் தலையாய பெருமை, காஞ்சியில் பிறந்த அறிஞர் அண்ணா அவர்களையே சாரும்.

தஞ்சை ஒரு பெரிய புண்ணிய பூமிதான். நீங்கள் தமிழை மட்டும் வளர்க்கவில்லை. கலையை வளர்த்திருக்கிறீர்கள். ஏன் - கஞ்சி கொடுப்பதற்கு நெல்லையும் வளர்த்தீர்கள். எங்களுடைய கலைஞர் பெருமகன் நடிகர் திலகம் சிவாஜியையும் வளர்த்திருக்கிறீர்கள். ஏனென்றால், மேடையிலே ஏற்றம் இறக்கமாகப் பேசுவதற்குக்கூட ஒரு மனிதன் முதன் முறையாக, 'இப்படித்தான் பேசவேண்டும், வார்த்தைகளை அடுக்க வேண்டும்' என்பதைக் கூட நாமெல்லோரும் சிவாஜியிடமிருந்துதான் கற்றுக்கொண்டோம். தஞ்சை மண்காரர். அதற்கு நாம் இந்தத் தஞ்சை மண்ணிற்குத் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக, அப்படி ஒரு பரிணாமத்தில் வளர்ந்துவந்த சினிமாவில்,

உடற்பயிற்சியிலும் அறிவுப் பயிற்சியிலும் ஒன்றுபோல உற்சாகம் காண்பித்தல் அவசியம். ஒன்றில் மட்டும் ஊக்கமாய் இருந்துவிட்டு, இன்னொன்றில் சேம்பேறித்தனமாக இருத்தலாகாது.

—சாக்ரடீஸ்

அவனுக்கு நாம் வாய்வழியாகச் சொல்வதைக் காட்டிலும், படமாகச் சொல்லுங்கள்; அவனது மண்டையில் அது எளிதாக ஏறிவிடுகிறது. நேரமும் குறைகிறது. தமிழில் நிறைய விஷயங்கள் கிடக்கின்றன. அதை எல்லாம் எடுத்துச் செய்யலாம். இதையெல்லாம் ஒரு பெட்டகமாக இருந்து அரசு செய்ய வேண்டும்.

இப்போது வந்திருக்கின்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரும் அதிபுத்திசாலிகள். உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். மிகவும் கெட்டிக்காரர்கள் இப்போது சினிமாவில் இருக்கிறார்கள். பொருளாதாரச் சந்தை என்ற ஒரு விஷயத்தில் சோரம்போய் விடுகிறார்களே தவிர, மற்ற விஷயத்தில் தெளிவான சிந்தனைகள் உள்ள கலைஞர்கள் இருக்கிறார்கள்.

ஒரு 'பைபிளைப்' படமெடுத்து வெளியே விட முடிகிறது. ஒரு செங்கிஸ் கானைப் படமெடுத்து வெளியிடமுடிகிறது. ஒரு கரிகால் பெருவளத்தானை, இல்லை ஒரு பாண்டிய மன்னனைப் படமாக எடுக்கக்கூடாதா? ஒரு சிவகாமியின் சபதத்தைப் படமாக எடுக்கக்கூடாதா? இதுபோன்ற பெரிய பிரம்மாண்டமான படங்களை இப்போது நாம் எடுக்க முடியும். ஏனென்றால், இப்போது கோடிக்கணக்கில் பிரம்மாண்டங்களைச் செய்யப் பழகிவிட்டார்கள்.

இப்படிச் செய்தால் நாளை வரக்கூடிய சந்ததியினருக்கு

> ●● காலம் முறைகளை மாற்றுமே தவிர, மனப் போக்கையும் உணர்ச்சிகளையும் மாற்றிவிடாது.
> - அறிஞர் அண்ணா ●●

இப்படியெல்லாம் இருந்தது தமிழ்ச் சமுதாயம், இப்படியெல்லாம் இருந்தது வழக்கு முறைகள், இப்படியெல்லாம் இருந்தது அரசு முறைகள் என்று சொல்லுவதற்கு வாய்ப்பாக இந்தத் திரைப்படங்கள் உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நீங்கள் குற்றாலீஸ்வரனைத் தத்தெடுத்து இருக்கிறீர்கள். மகிழ்ச்சி, அளவில்லாத மகிழ்ச்சி. தொட்டில் குழந்தைகள் திட்டம் போட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி, அளவில்லாத மகிழ்ச்சி.

அதைபோல் திரை உலகத்தில் இருக்கின்ற ஜாம்பவான்களையும் நீங்கள் தத்தெடுத்து, அரசு தத்தெடுத்து, நல்ல கலைஞர்களுக்குக் கட்டளையிடுங்கள் அவர்கள் செய்வார்கள். காலத்தால் அழிக்க முடியாத இலக்கியப் படங்களை அவர்கள் செய்வார்கள் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு ஒரு சிறு பெருமை உண்டு. நான் சினிமாவில் ஒரு பதிவேடு போல் இருக்கிறேன். என் அம்மாவே என்னிடம் கேட்பார்கள். நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். "ஏண்டா, எனக்கே மறந்துவிட்டது. இதையெல்லாம் எப்படியடா மகனே நீ செய்கிறாய்?" என்று கேட்பார்கள். அப்படியெல்லாம் பழைய வரலாற்றைச் சொல்வதற்குச்

சினிமா உதவும். இதை இந்த அரசு, நிச்சயமாக நீங்கள் செய்ய வேண்டும்.

ஏதோ நான் இதையெல்லாம் சொல்லி காரியங்களைச் சாதிப்பதற்கான சூழலில் வாழ்கின்ற மனிதன் அல்ல. தெரிந்ததை, உணர்ந்ததை, எனக்குத் தோன்றியதை நான் உரக்கச் சொல்லுவேன், அதையும் மலைமேல் நின்று சொல்லுவேன், நான் எந்தத் தடைக் கல்லுக்கும் பயந்தவன் அல்ல, தனி மனிதன்.

நான் உங்களை வாழ்த்துவதற்காக மனப்பூர்வமான 3 விஷயங்களைச் சொல்லுவேன். நேரு ஸ்டேடியம் உங்களுடைய சாதனை. பிலிம் சிட்டி உங்களுடைய சாதனை இந்த உலகத் தமிழ் மாநாடு உங்களுடைய சாதனை. யாரும் நடத்தலாம். ஆனால், நடத்தியது தடம் பதித்ததாக இருக்க வேண்டும் என்பதில் நீங்கள் அழுத்தமாக இருக்கிறீர்கள் என்பதில் எனக்குப் பெருமை. அதுபோல் கலை உலகில், தயவு செய்து நல்ல கலைஞர்களைத் தத்தெடுத்து, நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தையும், நம்முடைய மண்ணையும், இந்த மக்களுடைய வாழ்க்கை முறைகளையும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு இலக்கியப் பெட்டகங்களாகச் சினிமாவை எங்களுக்குக் கொடுத்து நீங்கள் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

கிசான் விகாஸ் பத்திரம்
செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்



சிறப்பு அம்சங்கள்

- 5 $^{1}/_{2}$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு அணுகவும்:

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சபர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – [illegible]

DIRP/DIS/95

கண்ணியம் மிக்க

காயிதேமில்லத்

காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது

நாடு நலம்பெற, நாட்டு மக்களுக்கு நன்மைகள் விளைந்திட— தன்னலம் கருதாது உழைத்த தலைவர்கள் சிலரை நாம் அறிவோம். அவ்வாறான தேசத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை மட்டுமல்ல; தன்னிகரற்ற தமிழ்ச் சான்றோர்கள், மனிதாபிமானத்தால் மங்காப் புகழ்பெற்ற மதத் தலைவர்கள் ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களையும் தமிழ்நாடு அரசே கொண்டாடி வருவதும் நமக்குத் தெரியும்.

சிலருடைய பிறந்த நாட்கள் அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சிலர் பிறந்த நூற்றாண்டு அரசால் ஆண்டு முழுமையுமே கொண்டாடப்பட்டிருக்கின்றது.

இந்த வகையில், இஸ்லாமிய சமுதாயத்தின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கிய கண்ணியம் மிகுந்த காயிதேமில்லத் அல்ஹாஜ் எம். முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழாவையும் தமிழ்நாடு அரசே கொண்டாடி வந்தது. இந்த ஆண்டு அவர் பிறந்த நூற்றாண்டு; இவ்விழா அரசு மூலம் இனிதே கொண்டாடப்படவிருக்கிறது.

மக்கள் தலைவர்

சிறுபான்மை இனத்தாரின் சிறப்புமிக்க காவலராகப் போற்றப்பட்டார் கண்ணியம் மிக்க முகம்மது இஸ்மாயில் அவர்கள். 'ஹஜ்' பெருநாளில் பிறந்தார் இவர் என்பதால் இபுராகிம் (அலை) அவர்களின் திருக்குமாரர் இஸ்மாயில் (அலை) அவர்களின் நினைவைப் போற்றும் வண்ணம் முகம்மது இஸ்மாயில் என்று பெயர் சூட்டப்பட்டது என்பர்.

'காயிதேமில்லத்' என்பது அவருக்கு மக்களால் வழங்கப்பட்ட சிறப்பு விருது; அந்த அரபுச் சொல்லுக்கு 'மரியாதைக்குரிய மதத் தலைவர்', 'மக்களின் நிகரற்ற வழிகாட்டி' என்றெல்லாம் பொருள்.

பெரும்பான்மை மக்களின் பேரன்பைப் பெற்ற அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முகம்மது இஸ்மாயில் என்பதே.

'காயிதேமில்லத், அமைதியை விரும்பும் அருமையான தலைவர். அடக்கம், பெருந்தன்மை, விவேகம் நிறைந்தவர். அவருடைய பேச்சில் நாற்பதாண்டுக்கால அரசியல் வரலாறு பொதிந்து கிடக்கிறது என்பதை நாம் மறக்க முடியாது' - என்றார், அறிஞர் அண்ணா அவர்கள். காயிதே மில்லத் அவர்கள், அவரோடு மிக நெருக்கமான தோழமை கொண்டிருந்தார்.

. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள 'பேட்டை' என்னும் சிற்றூரில் 1896-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5-ஆம் நாள் பிறந்தார் காயிதே மில்லத் அவர்கள். அவருடைய தந்தையார் பெயர் மியாக்கான் இராவுத்தர்; மார்க்க ஞானம் மிக்க மௌல்வியான அவர், திருவாங்கூர் மன்னர் குடும்பங்களுக்குத் துணி விற்பனை செய்தவர்; பெரிய வியாபாரி; பன்மொழிப் புலவர். காயிதே மில்லத்தின் தாயார் பெயர், முகைதீன் பாத்திமா.

காயிதேமில்லத் அவர்களின் துணைவியார் பெயர் ஜமால் ஹமிதா பீவி என்பதாகும். இவர்களுடைய ஒரே மகன், ஜமால் முகம்மது மியாக்கான் என்று அழைக்கப்பட்டார்.

விடுதலை வேட்கை

தம்முடைய 5-ஆம் வயதிலேயே தந்தையாரை இழந்த காயிதேமில்லத் தம் தாயின் நிழலிலேயே தக்கபடி வளர்ந்தார்.

அது, இந்தியாவெங்கும் சுதந்திரக்கனல் மூண்டுவந்த காலம் ஆதலால், அந்தப் பாதிப்பு இந்தப் பிஞ்சுக்கும் சிறிது சிறிதாக ஏற்படவே செய்தது. இருப்பினும், திருநெல்வேலியில் கசடறக் கற்கத் தொடங்கிய இவர் கல்வி, பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தொடர்ந்தது.

இளமைக் காலம் முதலே மக்கள் தொண்டில் பெரிதும் ஆர்வத்தோடு ஈடுபடலானார், இவர். படிப்பில் மிகுந்த ஊக்கத்தோடிருந்த காயிதேமில்லத்துக்குப் பரிசுகள் பலவும், பாராட்டுதல்களும் அவ்வப்போது கிடைத்தன. கல்லூரிக் காலத்தில் சிறந்த மாணவர் பட்டியலில் இவரே முதலாமவராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சேவை என்பது கூலியை உத்தேசித்தோ தனது சுய நலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் செயல்தான் சேவையாகும்.

அமைப்பாளர் பொறுப்பு

1920-ஆம் ஆண்டில், பி.ஏ. படித்துக் கொண்டிருந்த காயிதே மில்லத் அவர்கள், சென்னை மாகாண அரசியல் மாநாட்டில் முக்கியப் பங்கு வகித்தார். தணியாத சுதந்திர தாகத்தால், காந்தியடிகள் அறிவித்த ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். அதனால், தமது இறுதித் தேர்வைப் புறக்கணித்துவிட்டுக் கல்லூரியை விட்டே வெளியேறினார்.

நாட்டு விடுதலை மீதான இத்தகைய நாட்டமே, அவர் பட்டம் பெறத் தடையாக இருந்தது எனலாம்.

கல்லூரி வாழ்க்கை முடிவுக்கு வந்தபின், புகழ்பெற்ற 'ஜமால் முகய்யத்தீன் தோல் நிறுவனத்தில்' சேர்ந்து பணி புரியலானார் காயிதேமில்லத். பிறகு, உண்மையான உழைப்பாலும், நேர்மையான நடவடிக்கைகளாலும் நாளடைவில் அந்நிறுவனத்தின் நிர்வாகியானார்; பிறகு, அதன் பங்குதாரராகவே உயர்வடைந்தார்.

வணிகராகவே வாழ்வைத் தொடங்கினார் இவர்; எனினும், வாடிக் கிடந்த இஸ்லாமிய மக்களின் வாட்டம் நீக்கும் நாட்டம் கொண்டார். இது மட்டுமன்றி, சாதி வேறுபாடு பாராமல், ஏழை எளியோருக்கெல்லாம் தாராளமாக உதவி புரிந்திடலானார்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான், தனியே பிரிந்த பொழுது, இந்திய யூனியன் முஸ்லீம் லீகிற்கு யாரை அமைப்பாளராக்குவது என்ற வினா எழுந்தது. உண்மையாலும், உழைப்பாலும், தாராளச் சிந்தையாலும் புகழோடு தலைநிமிர்ந்த காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்களே அப்பதவிக்கு ஏற்ற நபர் என்று இஸ்லாமியச் சமுதாயமே அடையாளம் காட்டியது. அவரையே தேர்ந்தெடுத்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் அமைப்பாளராக அறிவித்தார் முகம்மது அலி ஜின்னா.

காங்கிரஸ் கட்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த இவர், முஸ்லீம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டியிருந்த காரணத்தால் அதை விட்டு விலகி, முஸ்லீம் லீகில் சேர்ந்தார்.

அரசியல் வாழ்வு

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து—
அதனை அவன்கண் விடல்'

—என்று வள்ளுவர் காட்டிய

வழிமுறையில், விரைவிலேயே மலபார், கர்நாடகம், ஆந்திரா ஆகியவை இணைந்த சென்னை மாகாண முஸ்லீம் லீக் தலைவர் பதவி, காயிதேமில்லத்திடம் 1948-இல் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் ஒன்று. சிறுபான்மை இனத்தவரான இஸ்லாமியரின் மனத்திலே மட்டுமன்றி, தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பட ஏராளமான எல்லாத்தரப்பு மக்களின் இதயத்திலும் நிறைந்தவராக இருந்தார், இவர். 1946-ஆம் ஆண்டு முதல், 1952 வரை, பழைய சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், காயிதேமில்லத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததே அதற்குத் தக்க சான்று ஆகும்.

அது மட்டுமல்ல, 1952 முதல் 1958 வரை, நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தார்; 1962-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 6 ஆம் நாள் வரை நாடாளுமன்ற உறுப்பினராகவே இருந்து நாடு போற்றத் தொண்டாற்றினார்.

காயிதேமில்லத் இஸ்மாயில் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரே எனினும், இந்திய நாடே போற்ற இணையற்று வாழ்ந்தார். இதற்கோர் எடுத்துக் காட்டு உண்டு; தமிழகத்தில் பிறந்த இவர், தேர்தலில் இரண்டு முறை நின்று வெற்றி பெற்றது, கேரள மாநிலத்தைச் சேர்ந்த மஞ்சேரி தொகுதியேயாகும். இதிலும் இன்னொரு சிறப்புண்டு. அத்தொகுதியிலே போட்டியிட்ட காயிதேமில்லத், தொகுதி மக்கள் தேவையறிந்து, துவளாமல் தூய தொண்டு புரிந்திருக்கிறார். ஆனால், தேர்தல் நடைபெறுவதற்கு முன் பாகத் தேர்தல் பிரச்சாரத்துக்கென்று ஒருமுறைகூட தொகுதிப் பக்கம் சென்றதில்லை!

நாட்டுப் பற்று

அநீதிக்கும், அக்கிரமங்களுக்கும் ஆளான மக்களின் பிரதிநிதியாக நின்று அல்லும் பகலும் அவர்கள் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டார் காயிதேமில்லத்.

தாய்நாட்டு நலனே தனது நலன் என்கிற கொள்கைப் பிடிப்பு அவருக்கு இருந்தது. இந்தியாவைச் சில அண்டை நாடுகள் எதிரி நாடாகக் கருதிய வேளையில், உள்ள உறுதியோடு இந்தியாவைக் காப்போம் என்று முழங்கியவர் காயிதேமில்லத்.

இன்றைக்கும் ஆறாத புண்ணாக இருக்கின்ற காஷ்மீர் பிரச்சினையில் "காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே" என்று அவர் சொன்ன உறுதி மிக்க சொற்கள், ஐக்கிய நாடுகள் சபையிலேயே மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டது.

வழியில் முள் இருந்தால் தைக்கும்;
செருப்பில் ஓட்டை இருந்தால் கடும்;
அதைப்போல நம்மிடம் ஜாதிகள் பல
இருந்தால் அந்நியர் ஊடுருவல்
நேரத்தான் கூடும்!

- அறிஞர் அண்ணா

அதுமட்டுமல்ல; சீனப் போர் மேகம் இந்தியாவைச் சூழ்ந்த போது - 'என் ஒரே மகனைப் போருக்கு அனுப்பவும் நான் தாயார்' என்று நேரு பெருமகனாருக்குக் கடிதம் எழுதிய சிறப்பினர் காயிதேமில்லத் ஆவார்!

இந்தியாவின் பொது மொழியாக எந்த மொழியைத் தேர்ந்தெடுப்பது என்று ஆராய அமைக்கப்பட்ட குழுவில், இவரும் முக்கிய அங்கம் வகித்தார். சிலர் இந்தி மொழிக்கே அத்தகுதி உண்டு என்று வாதாடினர். பழமையானதும் இனிமையான்துமான தமிழுக்கே அந்தத்தகுதி உண்டு என்று வாதாடினார், இவர். தமிழ் செழிக்கவும், ஆங்கிலம் அளவோடு பயன்படுத்தப் படவும் அப்போது இவர் கூறிய அறிவுரைகள், நடத்திய விவாதங்கள் வரலாற்றுப் புகழ் மிக்கவைகள் ஆகும்.

அவருடைய நாட்டுப் பற்றுக்கும், மொழி உணர்வுக்கும் இவ்வாறான சான்றுகள் ஏராளம் உண்டு.

அரசுப் பெருமை

காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் 5.4.1972 அன்று பெரிதும் உடல் நலிவுற்றிருந்து, தமது 76-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவருடைய பூதவுடல், சென்னை திருவல்லிக் கேணியில் உள்ள வாலாஜா மசூதியில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

அந்தப் பெருமகனாரின் பெருமையைப் போற்றிடும் வண்ணம், தமிழ்நாடு அரசு பல நற்பணிகளைச் செய்திருக்கிறது.

சென்னை அறிஞர் அண்ணா சாலையில் உள்ள அரசுப் பெண்கள் கல்லூரிக்குக் 'காயிதேமில்லத் மகளிர் கல்லூரி' என்று பெயரிடப்பட்டது. சென்னை மாநகரில் உள்ள முக்கியச் சாலைகளில் ஒன்றான திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை 'காயிதேமில்லத் சாலை' எனப் பெயர்பெற்றது.

கி.பி.1715-இல் கட்டப்பட்ட வாலாஜா பாலத்திற்குக் 'காயிதே மில்லத் பாலம்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக முதல்வராக இருந்த போது, காயிதேமில்லத் பிறந்த

நாளான ஜூன் 5-ஆம் நாளில், அன்னாரின் பிறந்தநாள் விழா, அரசால் நடத்தப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். 9.8.1980 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் காயிதே மில்லத் அவர்களின் திருவுருவப் படமும் திறந்து வைத்துப் பெருமைப்படுத்தப்பட்டது.

1986-87-ல், சட்டப் பேரவையில் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் உரையாற்றுகையில் காயிதேமில்லத் அவர்கள் பெயரால் தனியொரு மாவட்டமே அமைக்கப்படும் என்று அறிவித்தார்; அந்த அறிவிப்பு, அவர் வழி நடந்து அரசாளும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் 18.10.1991-இல் மெய்யாக்கப் பட்டது. நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 'நாகை காயிதேமில்லத் மாவட்டம்' மலர்ந்திருப்பதை நாம் காண்கிறோம்.

1970-இல் தமிழ்நாடு அரசின் ஒரே ஏடாகத் 'தமிழரசு' தொடங்கப்பட்டபோது, ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில், காயிதேமில்லத் அவர்களும் கலந்து கொண்டார்; முதல் இதழைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கியவர்களில் அவரும் குறிப்பிடத்தக்கவராவார்.

—பி.எல். ராஜேந்திரன், எம்.ஏ.,

தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)	
ஆண்டுச் சந்தா	... ரூ. 72
அரையாண்டுச் சந்தா	... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)	
ஆண்டுச் சந்தா	... ரூ. 36

சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை 600 002.

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

வாழ்வில் உயர்வோம்!

—பூவேந்தன்

கல்கூட கடைந்தெடுத்தால் சிலையாகும்
களர்நிலமும் கைப்பட்டால் விளைவாகும்
புல்கூட சிலஉயிருக் குணவாகும்.
புன்சிரிப்பை முகம்பெற்றால் பொலிவாகும்!

சொல்கூட பொருளிருந்தால் சுகமாகும்
சொந்தங்கள் அன்பிருந்தால் தொடராகும்
கல்விகூட கற்பதனால் வந்துசேரும்
கற்றவரும் போற்றிடவே மதிப்பும்கூடும்!

மலைகூட மனமிருந்தால் கடுகாகும்
மணல்கூட முயற்சித்தால் கயிறாகும்.
அலைகூட ஆர்ப்பரித்தால் அழகாகும்
அனைவரும் ஒன்றுசேர்ந்தால் வளமாகும்!

மொழிநாளும் கற்பவர்க்கு இனிப்பாகும்
மொழிபவரின் திறமையால் சுவையாகும்.
விழியினிலும் கருணையினால் சுடர்தேங்கும்
விலகாத இருள்கூட புறம் போகும்!



நாகூட சுட்டுவிட்டால் வடுவாகும்
நாவடங்கின் நல்வாழ்வு கைகூடும்.
பாகூட பொருளால்தான் அழகாகும்
பாதையினால் தான்பயணம் மகிழ்வாகும்!

சுற்றுப்புறம், தூய்மை செய்வோம்!



நாம் வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்க வேண்டும். ஒன்று நம் உள்ளம். மற்றொன்று உடம்பு. மூன்றாவது, சுற்றுப்புறம். நாம் விரும்பினால், உள்ளத்தை முழுதும் நன்றாக வைத்திருக்க முடியும். ஆனால், எல்லோரும் சேர்ந்து விரும்பினால்தான், சுற்றுப்புறத்தை நன்றாக அமைக்க முடியும்.

- டாக்டர் மு.வ.

புத்தக ஏற்றுமதி!



இந்தியாவிலிருந்து புத்தகங்கள் ஏற்றுமதி 1991-92-இல் ரூ.42 கோடியிலிருந்து, 1992-93-இல் ரூ.50 கோடியாக உயர்ந்தது. புத்தக ஏற்றுமதி மூலம் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, நேப்பாளம் ஓமன், இலங்கை, சவூதி அரேபியா, ஐக்கிய அரசு எமிரேடுகள் ஆகிய நாடுகளிலிருந்து அந்நியச் செலாவணி வருமானம் உயர்ந்திருக்கிறது.

ஊரும் பேரும்

கும்பகோணம்

சோழ நாட்டில் தெய்வ நலம் சிறக்கப் பெற்ற ஒரு தலம் குடமூக்கு என்னும் பெயர் பெற்றிருந்தது. அது குடந்தை எனத் தேவாரப் பாடல்களிலும், ஆழ்வார் திருப்பாசுரங்களிலும் குறிக்கப்படுகின்றது. அவ்வூரின் பெயர் கும்பகோணம் என்று இப்போது வழங்குகின்றது.

விருத்தாசலம்

தென்னார்க்காட்டிலுள்ள சிறந்த சிவத் தலங்களில் ஒன்று திருமுதுகுன்றம். அப்பகுதியில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பழமலைநாதர் என்று இன்னும் சைவர்கள் போற்றுகின்றார்கள். அவ்வூரின் பெயர் வடமொழியில் விருத்தாசலம் எனப் பெயர்த்து அமைக்கப்பட்டது. இன்று பழம் பெயர் மறைந்து புதுப் பெயரே வழங்கி வருகின்றது.

தெரிந்து கொள்ளுங்கள்

அயர்லாந்து

இது, கிரேட் பிரிட்டனுக்குச் சிறிது மேற்கே உள்ள தீவு. நீளம் 302 மைல். அகலம் சராசரி 110 மைல். குன்றுகளால் சூழப்பட்ட சமவெளிகள் கொண்டது. பல ஏரிகளும், ஆறுகளும் இங்கு உள்ளன. பசுமையான புல்வெளிகள் நிறைந்திருப்பதால் இதை 'மரகதத் தீவு' என்ற பாராட்டுவார்கள்.

அயர்லாந்தில் வடபகுதி கிரேட் பிரிட்டனைச் சேர்ந்தது. தலைநகரம் பெல்டாஸ்ம். தென்பகுதி அயர்லாந்து குடியரசு என்னும் ஒரு சுதந்திர நாடாகும். ஏரே என்று அழைக்கப்படுகின்றது. இதன் தலைநகரம் டப்ளின்.

ஏரே மக்களுள் பெரும்பாலோர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். இங்கு ஐரிஷ் அல்லது கேலித் மொழி பேசுகிறார்கள். வட அயர்லாந்து மக்கள் பிராட்டஸ்டெண்ட் கிறிஸ்தவர்கள். இவர்கள் மொழி ஆங்கிலம்.

- குழந்தைகள் கலைக்களஞ்சியம்: தொகுதி - 1

எல்லாம் கம்ப்யூட்டர் மயம்!



எங்கும் கம்ப்யூட்டர், எதிலும் கம்ப்யூட்டர் என்ற இன்றைய காலத்தில், கம்ப்யூட்டர் மூலமே கடிதம் அனுப்பும் வசதியை அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கென நமது இல்லத்தில் கணிப்பொறி இருப்பது அவசியமில்லை என்பதே இதன் சிறப்பு. Hybrid Mail Service என்று வழங்கும் கணிப்பொறி அஞ்சல் சேவையில், அனுப்ப வேண்டிய தகவலை, எழுத்து வடிவிலோ, கம்ப்யூட்டர் பிளாப்பியிலோ அளிக்கலாம். வரி வடிவத்தில் இருக்கும் தகவல் கணினியில் பதிவு செய்யப்பட்டவுடன், சேவைக் கட்டணத்தையும் அதுவே தெரிவித்து விடுகிறது.

இங்கிருந்து சேரவேண்டிய இடத்திலுள்ள அஞ்சலகத்தின் கம்ப்யூட்டருக்கு, செயற்கைக் கோள் மூலம் தகவல் அனுப்பப்படுகிறது. பிற்பகல் மூன்று மணிக்குள் ஏற்கப்படும் தகவல்கள், அன்றைய தினமே பட்டுவாடா ஆகிவிடும்.

பெறுநரின் தொலைபேசி எண் தெரிவிக்கப்பட்டிருந்தால், அவருக்குத் தகவல் வந்துள்ளது குறித்து தொலைபேசி மூலம் தெரிவிக்கப்படும். பெறுநரிடம் கணினி இருக்குமெனில், பிளாப்பியாகவோ அல்லது வரிவடிவிலோ தகவல் அவரது இல்லத்தைச் சென்றடையும்.

1995-ஆம் ஆண்டு ஜனவரி 14-ந் தேதி முதல், சென்னை, பம்பாய், தில்லி, பெங்களூர், சிம்லா, பாட்னாவில் கணிப்பொறி அஞ்சல் சேவை அறிமுகமாகியுள்ளது.

எலும்புகளை ஒட்ட உதவும் அதிசயப் பசை!

மனித உடலில் உடைந்து போன எலும்புகளை ஒட்டுவதற்கு அதிசயப் பசையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எலும்பு முறிவுச் சிகிச்சையில் இது ஒரு புதிய புரட்சியைத் தோற்றுவிக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

மணிக்கட்டு, கணுக்கால், இடுப்பு எலும்புகள் உடைந்து போனால் அவற்றில் உலோகத் தகடுகளைப் பொருத்தித் திருகாணிகள் மூலம் இணைக்கும் முறையையே டாக்டர்கள் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். புதிய பசை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதன் மூலம், இந்த உலோகத் தகடுகளுக்கும் திருகாணிகளுக்கும் இனி வேலை இருக்காது.

உடைந்துபோன எலும்புப் பகுதியில் ஊசி மூலம் இந்தப் பசையைச் செலுத்தினால், பத்து நிமிடங்களுக்குள் அது அப்படியே இறுகிப்போய் விடுகிறது. உடைந்துபோன எலும்பு இந்தப் பசையினால் ஒட்டப்பட்டு, இயற்கையான எலும்பைப் போன்ற வலிமை ஏற்பட்டுவிடுகிறது.

இந்தப் புதிய பசையில் உள்ள பொருட்கள் இயற்கை எலும்பில் உள்ள பொருட்களைப் போன்றே உள்ளதால், உடலின் இயக்கம் இதனை எளிதாக ஏற்றுக் கொள்கிறது. எனவே உடைந்த எலும்பு எளிதாகக் கூடிப்போய் முழுமைபெற்று விடுகிறது.

கலிபோர்னியாவில் கியூப்பர்ட்டினோ என்னும் இடத்தில் உள்ள 'நோரியன் கார்ப்பரேஷன்' என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், பிரெண்ட் கான்ஸ்டன்ஸ் என்பவர் தலைமையில் இந்தப் புதிய கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். இந்தப் புதிய பசைக்கு 'எஸ்.ஆர்.எஸ்.' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.



பெண்களின் பெருமை!

டாக்டர் லலிதா காமேஸ்வரன்

'பெண்ணின் பெருமை' என்ற தலைப்பில் இன்றைய கருத்தரங்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. யாரிடம் இந்தத் தலைப்பைச் சொன்னாலும், அவர் முதலில் என்னிடம் சொன்ன உரை—

'பெண்ணின் பெருந்தக்க
யாவுள
கற்பென்னும் திண்மையுண்
டாகப் பெறின்.

—இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் சொன்ன கூற்று. ஆனால், இந்த நூற்றாண்டில் பாரதியார் பாடினார்:

'கற்பு நிலை என்று சொல்ல
வந்தார்,
இரு கட்சிக்கும் அதனைப்
பொதுவில் வைப்போம்,
எட்டும் அறிவினில்
ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பிள்ளை காண்
என்று கும்மியடி!'

—என்று அவர் சொன்னார்.

அது மட்டுமல்ல,

'நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீர
சுதந்திரம்
பேணும் நற்கொடி
பெண்ணின் குணங்களாம்!'

என்று வலியுறுத்தினார். எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும், பொதுவாக மக்கள் மத்தியில் வழங்கப்படும் ஒரு சிந்தனை—தியாகம்தான் ஒரு பெண்ணுக்குச் சிறப்பு தருகிறது என்ற தத்துவக் கருத்து. அந்தக் கருத்தை வளர்த்து-சாவித்திரி, நளாயினி, தமயந்தி கதைகளை நம்மிடையே பரிமாறி, பகுத்தறிவைக் கடந்த ஒரு நிலைக்குப் போய், 'சதி' எனக் கூறி, இறக்க, கணவனின் சிதையில் வீழ்ந்து எரி ஊட்டி மடிவதே சிறந்த பெண்ணின் இலக்கணம் என்னும், அறியாமையைக்கூட சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தாழ்ந்து விட்டோம் என்று மேல் நாட்டார் நம்மைக் குறை கூறுவர். இத்தகைய விபரீதப் போக்கு உலகில் வேறு எந்த நாட்டிலும் இருக்கவில்லை. பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பது தியாகம் என்ற எண்ணம் முதலில் எப்படி வந்தது? அதை நாம் சிந்திக்க வேண்டும்.

தியாகத்தின் முற்றிய நிலை தான் தாய்மை. தன் தேவைகளை விட, தன் குழந்தைகளின் தேவைகளையும், தன் கணவனின் தேவைகளையும், தன் குடும்பத்தினர் தேவைகளையும் முன்வைத்து வழி நடக்கும் பெண்களின் உணர்வுகள் அவருடைய தாய்மை உணர்வால் தோன்றும் சிறப்பு. தானாக வலிந்து முன்வந்து தியாகம் செய்யும் பெண்ணின் சிறப்பை உணராமல், பெண்கள் பிறருக்கு அடிமை என்று கருதும் மடமை, சமுதாயத்தில் வளர்த்ததனால் தான் இன்று பெண் உரிமை இயக்கங்கள் பல தோன்றி

முழக்கமிடும் நிலையும் வந்திருக்கிறது.

"எட்டும் அறிவினில்
ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண்",

என்று ஒப்புக்கொண்டபின்—அறிவியல், தொழில்நுட்பம் இவைசார்ந்த முன்னேற்றம் அடைந்த சமுதாயத்தில் அறிவாற்றலின் அடிப்படையில் செய்யப்படும் அனைத்துப் பணிகளிலும் மகளிர் பங்குகொள்ளத் துடிப்பது இயற்கையே.

'பட்டங்கள் ஆள்வதும்,
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த
வந்தோம்'

என்ற பாரதியார் பாடலுக்கு இணங்க, இன்று தமிழ்நாட்டில் முதலமைச்சராகப் பாங்குடனும், பொலிவுடனும் அமர்ந்து மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அனைவரும் வியக்கப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருடைய சந்தேகத்தையும் நிவர்த்திக்கும் சான்றாக விளங்குகிறது.

முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய மறைவுக்குப்பின் தமிழ்நாட்டில் பல குழப்பங்கள் விளைந்தன. இவை அனைவரும் அறிந்ததே. எனினும் பல குழப்பங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்கள் செல்வி ஜெயலலிதா அம்மையாரை ஒருமனதுடன் தலைவியாய் ஏற்று ஆட்சி பீடத்தில் அமர்த்தியது குறிப்பாகச் சுட்டிக் காட்டுவது என்ன?

> ☆ **"சாதி மதம் முதலிய வேற்றுமைகளைத் தொலைக்கவல்லது கலப்பு மணம் என்பது எனது கொள்கை.**
>
> **—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

சாதாரண மக்கள் அறிவையும், திறனையும் எங்கே கண்டாலும் போற்றத் தயாராக இருக்கிறார்கள். ஆண் பெண் என்ற வேற்றுமை அவர்களின் சீர்தூக்கும் ஆற்றலை மழுக்கிவிடுவதில்லை. சங்க இலக்கியக் காலத்தில் ஔவையார் காலம்தொட்டு சமய இலக்கியக் காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்றவர்களின் பெருமையைப் போற்றி இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ்நாட்டின் முதல் பெண் முதல்வரை ஆட்சி பீடத்தில் அமர்த்தியிருக்கும் தமிழ்ச் சமுதாயம் பெண்ணின் ஆற்றலையும், திறமையையும், பெருமையையும் நன்றாகவே உணர்ந்திருக்கிறது, போற்றியும் வருகிறது.

தமிழ்நாட்டின் இருபெரும் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரு சிறந்த பெண்களைக் காப்பியத் தலைவிகளாகக் கொண்டு எழுதப்பட்டவை என்பது நம்மைச் சிந்திக்க வைக்கும். மற்றைய நாடுகளிலும், மற்றைய மொழிகளிலும் உருவாக்கப்பட்டிருக்கும் காப்பியங்கள் பலவும், காப்பியத் தலைவர்களையே சுற்றிச் சுற்றிப் பின்னப்பட்ட வரலாற்றுக் கதைகள் அல்லது புராணங்களாகும்.

ஆனால், தமிழ்நாட்டின் சிறந்த இரு காப்பியங்கள், காப்பியத் தலைவிகளாக கண்ணகியையும், மணிமேகலையையும் கொண்டு எழுதப்பட்டவை. இதிலிருந்தே, சிறு வயதில் தந்தையின் கட்டுப்பாடுகள், இளம் வயதில் கணவனின் கட்டுப்பாடுகள், முதுமையில் மகனின் கட்டுப்பாடுகள் என்ற வட்டங்களுக்குள் சுழல்வதுதான் பெண்ணின் சரித்திரம் என்ற மனு தர்மக் கொள்கையைத் தமிழகம் ஜீரணிக்கவில்லை என்பதை உணர்த்துகிறது. சிறப்புப் பெறும் மகளிரைத் தமிழகம் போற்றத் தயங்காது.

'வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்
படும்'

என்ற வள்ளுவர் கூற்று ஆணுக்கும், பெண்ணுக்கும் பொது என்பதை நமக்கு நன்கு உணர்த்த எழுந்த சான்றுகளே ஆங்காங்கே காணும் கண்ணகி கோவில்கள்; அவை, ஆண்களும் பெண்களும் எல்லோரும் ஒரு மிக்க வழுத்தி வணங்கும் கோவில்களாகத் திகழ்கின்றன. காப்பியத் தலைவர்களைச் சுற்றித்தான் பல நாடுகளில் எழுதப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டேன்.

சமயம் என்று எடுத்துக் கொண்டாலும், இந்து மதத்தைப் பொறுத்தவரையில் இறைவனை எவ்வுருவிலும், எப்பெயரிலும் வழிபடலாம். இதை ஒரு ஏற்றுக்

கொள்ளப்பட்ட தத்துவமாக நாம் மதிக்கிறோம். கிறித்துவ சமயம், மற்றும் இஸ்லாமிய சமயம் போன்ற தந்தை வழி சமுதாயங்களில் தோன்றிய மதங்கள் யாவும் இறை பொருளை ஆணாகப் பாவித்துத்தான் வழி படுகின்றன. ஆனால், இந்தியாவில், இறை பொருளை அன்னையாக, உயிர்களுக்கு எல்லாம் தாயாகப் பாவித்து சக்தி வடிவாய்த் தொழும் பழக்கம் தொன்றுதொட்டு இன்று வரை பரவலாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மேலை நாடுகளில் பல உரிமைகளுக்காகப் பல போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. Feminism அல்லது பெண்ணியல் என்ற ஒரு துறையே இப்போது உருவாகி விட்டது. ஆராய்ச்சிப் பொருளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது இந்தத் துறை. தமிழ் நாட்டிலும் பெண்ணியல் துறை ஆய்வுக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுதான் அன்னை தெரசா பல்கலைக் கழகம்.

சமுதாய சமத்துவம், படிப்புரிமை, வாக்குரிமை என்ற பல உரிமைகளுக்காகப் போராட்டங்கள் நடத்தி உரிமைகளைப் பெற்றுக் கொண்டுவரும் செய்திகள் மேலைநாட்டு வரலாற்றில் இடம் பெற்றுவிட்டன. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெண்ணுரிமைக்காகப் போராட்டங்கள் நடத்தும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்துவிடவில்லை.

ஆங்கிலக் கல்வியின் மூலம் தமிழ்நாட்டில் ஊடுருவிய செய்தி விளக்கங்களினால் ஏற்பட்ட தாக்கங்களின் காரணமாக இந்தக் குடியுரிமைக்காகப் போராட்டங்கள் நடத்த வேண்டிய தேவை இந்தியப் பெண்களுக்கு இருக்கவில்லை. பண்டித ஜவகர்லால் நேருவும், அம்பேத்கரும் மக்களாட்சித் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்களாக இருந்ததினால் சட்ட வரைவுகளை முதன் முதலில் நிர்ணயிக்கும் கால கட்டத்திலேயே, 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்குமே வாக்குரிமை வழங்கப்படலாம் என்று நிர்ணயிக்கப்பட்டது. அது மேலும் மாற்றங்கள் பெற்று, இன்று 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் யாவருமே வாக்குரிமை பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். வயதின் அடிப்படையில்தான் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறதே தவிர ஆண், பெண் என்ற வேறுபாடு மேற்கொள்ளப்படவில்லை, என்றாலும் மிகுந்த சுமையும் போட்டிகளும் நிறைந்த வாழ்க்கை நெறியில் மத்திய மற்றும் மாநில ஆட்சி, ஆங்காங்கே நிகழும் நீதி நிர்ணயங்களிலும், பல நிலைகளிலும், மகளிருக்குப் போதுமான வாய்ப்புக் கிடைத்து விட்டன என்று இன்னமும் சொல்ல முடியாது. காந்தியடிகள் காட்டிய வழியில், பஞ்சாயத்து ஆட்சி அரசு வரும்போது ஒரு வேளை மகளிருக்கு ஆட்சியில் கருத்துக் கூற அதிக வாய்ப்பு ஏற்படக்கூடும் என்று சிந்திக்கத் தோன்றுகிறது. வரலாற்றுப் பாதையில் என்னென்ன மாற்றங்கள் விளைந்தாலும் அன்றன்று நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ளவும், சமாளிக்கவும், சவால்களையும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய தகுதி, திறமைகளை மகளிர் எளிதில் கடைப்பிடித்து வாழ்க்கையில் வெற்றி கண்டுவிடுகிறார்கள் என்ற செய்தியே பெண்களின் பெருமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

'அட்டிலைகளும்,
அடுப்பினை ஊதுதலும் கரிய
சட்டி தேய்த்தலும் மட்டுமே,
மாதர் தம் கடனென்ற
கருத்தை வெட்டி
வீழ்த்தும், சமர் செய்ய
நேரிலும்,
சவாலை ஏற்கமகளிரால்
முடியும்'

—என்று எடுத்துக்காட்டும் வகையில் காவல் துறையிலும், படை வீரர்கள் மத்தியிலும், விமானம் செலுத்துவதிலும், பேருந்து ஓட்டுவதிலும், சட்டமன்றங்கள், கல்லூரி மேடைகளில் முழங்கவும், மகளிர் இன்று முன்வந்துவிட்டார்கள். இந்த வாய்ப்புகளைக் குறைவின்றி நிறைவேற்றித் தரும் ஆற்றல் மகளிருக்கு நிச்சயம் உண்டு என்று இந்த நாடே மட்டுமல்ல, உலகமே அறியும்.

(எட்டாம் உலகத் தமிழ் மாநாடு 'மகளிர் அரங்கில்' ஆற்றிய உரை.)

☆ பெண்ணிற்கு மதிப்பு உரிமை கொடுங்கள் வணக்கம் செலுத்துங்கள். பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம், கட்டுப் படுத்துதல் அடிமைப்படுத்தல் கொடுமையாக நடத்தல் அநாகரிகம்.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

கோவை மாவட்டம்: பிற்பட்டோர் நலம்

பிற்பட்டோர் நலம் என்பது பொதுவான தலைப்பானாலும், இது குறிப்பாக பிற்பட்டோர் நலம் மற்றும் மிகப்பிற்பட்டோர் நலம் என்ற இரண்டு தனிப் பிரிவுகளைக் கொண்டதாகும். இந்த இரண்டு பிரிவுகள் சம்பந்தப்பட்ட திட்டங்களை அரசு மட்டத்தில் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறை என்ற ஒரு அரசுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்ட போதிலும், இந்த இரண்டு பிரிவினருக்கான திட்டங்களை முனைப்பாகவும் சீரா:கவும் செயல்படுத்த மாநில நிர்வாக மட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் என்று இரண்டு இயக்குநர்களின் கீழ், இரண்டு இயக்ககங்கள் செயல்படுகின்றன.

ஆனால், மாவட்ட மட்டத்தில் இந்த இரண்டு பிரிவினருக்குமான திட்டங்களைச் செயல்படுத்தும் பணியினை மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மட்டுமே கீழ்க் கண்டவாறு மேற்கொண்டுள்ளார்:

இவ்விரண்டு பிரிவினருக்கும் பொதுவான கீழ்க்கண்ட திட்டங்கள் கோயம்புத்தூர் மாவட்டப் பிற்பட்டோர் நல அலுவலகத்தால் செயல் படுத்தப்படுகின்றன.

1. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர் விடுதி நடத்துதல்.

2. தகுதியுடைய மாணவர் களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல்.

3. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்குதல்.

4. 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குதல்.

5. மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ஊக்கப் பரிசு வழங்குதல்.

6. தொழில் சார்ந்த திட்டத்தின்கீழ் தகுதியுடையவர்களுக்குச் சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சுப் பயிற்சி அளித்தல்.

7. +2 தேர்ச்சி பெற்று தொழிற் கல்வி பயிற்சி பெற, நுழைவுத் தேர்வு எழுத இருப்பவர்களுக்கு முன்பயிற்சி அளித்தல்.

மிகப் பிற்பட்ட மற்றும் சீர்மரபினர்களுக்காகக் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன:

1. ஒரு குடும்பத்தின் முதல் பட்டதாரியானால், கல்விக் கட்டணம் முழுவதிலிருந்தும் விலக்களித்தல்.

2. நலிவுற்ற சமுதாயத் தொழிலாளர்களுக்குச் சலவைப் பெட்டி, சவரக் கருவிகள், போயர் கருவிகள், குலாலர் கருவிகள் இலவசமாக வழங்குதல்.

3. சவரத் தொழிலாளர்கள் சவரக்கடை அமைக்க அரசு மானியம் ரூ.1,500 உடன் ரூ.5,000 வங்கிக் கடன் வழங்குதல்.

☆ ஒவ்வொருவரும் தந்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக்கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர்களுக்கு உதவ வேண்டும்.

☆ ஒவ்வொரு மனிதனும் பண்பாடுள்ள குடிமகனாக இருக்க வேண்டும். மனிதனைப் பகுத்தறிவுள்ளவனாக மாற்றுவது எப்படி என்பதுதான் சமுதாயத்தின் முக்கியச்சிந்தனையாக இருக்க வேண்டும்.

—டாக்டர் அம்பேத்கர்

4. வீடற்ற எளிய பிரிவினருக்கு நில எடுப்புச்செய்து இலவச வீட்டு மனை வழங்குதல்.

மேற்படி திட்டங்களின் மூலம் பயன்பெறுபவர்கள் மாணவர்களாயின் அவரது பெற்றோரது ஆண்டு வருமானம் தனிப்பட்ட நபராயின் அவரது ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேல் இருக்கக்கூடாது.

பிற்பட்டோர் மற்றும் மிகப் பிற்பட்டோர் நலப் பிரிவு மக்களில் தனி நபர் சிறு தொழில் தொடங்கத் தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக ரூ.1,00,000 வரை கடன் வழங்கும் திட்டம் 1993-94-இல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுபவரது ஆண்டு வருமானம் ரூ.22,000-க்கு மிகுதல் கூடாது.

இம்மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 16, மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறை மூலம் 10, ஆகக் கூடுதல் 26 மாணவ மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3 கல்லூரி மாணவர் விடுதிகள் 7 பள்ளி மாணவியர் விடுதிகள் அடக்கமாகும். இந்த விடுதிகளில் மொத்தம் 1,400 மாணவ மாணவியர் தங்கிப் பயில அனுமதிக்கப்பட்டுள்ளது.

பள்ளி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, ரூ.120-ம் கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ரூ.175ம் மாத உணவுக் கட்டணமாக 30.11.94 வரை வழங்கப்பட்டு வந்தது. இதன் பின்னர் அதாவது .1.12.94 முதல், இந்தக் கட்டணம் முறையே ரூ.135 மற்றும் ரூ.198 என உயர்த்தப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் 1993-94-ஆம் ஆண்டில் விடுதி மாணவர்களுக்குச் சீருடை வழங்கியதில் பிற்பட்டோர் நலத்தினர் 608 மாணவர்களும், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 413 மாணவர்களும், அதைப்போல் 1994-95-ஆம் ஆண்டில், பிற்பட்டோர் நலத்தினர் 536 மாணவர்களுக்கு மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 452 மாணவர்களும் பயனடைந்து உள்ளனர்.

கல்வி மேம்பாட்டுக்காகக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தில் 1993-94-ஆம் ஆண்டில் பிற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 12,657. மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களின் எண்ணிக்கை 7,922 ஆகும்.

தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இவ்வலுவலகத்தால், கடன் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. திட்டம் தொடங்கியது முதல் 550 விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்:

தியேட்டர் கீதாலயா

சாஸ்திரி ரோடு

கோயம்புத்தூர் - 9

போன்: 236266

திரை உலகின் திருக்குறள்!

—கவிஞர் முத்துலிங்கம்

சந்தியா தாய்பெற்ற தமிழ்ச்செல்விக்கு
என்வணக்கம்.

பாமாவை ருக்மணியை அறிந்த
கிருஷ்ணன் பழங்கால கிருஷ்ணன்.
இந்த கு.பா. கிருஷ்ணன்
தேமாவை புளிமாவை அறிந்த கிருஷ்ணன்;
இவன் சிறப்பான புலமைக்கு எனது
வாழ்த்து!

முத்தமிழின் பட்டியலை முன்னிலையில்
நின்று
தித்திக்கச் சொன்ன தென்னவன்
அவர்களே!
சான்றாண்மை உடைய சபையோரே!
அரங்கிலுள்ள ஆன்றோரே அமைச்சர்களே!
அனைவர்க்கும் என் வணக்கம்.

எட்டுக்கோட்டை கட்டி இவ்வுலகை
ஆண்டாலும்,
பட்டுக்கோட்டை கட்டிய பாட்டுக்
கோட்டைக்கு

ஜெயலலிதா என்ற சிறந்த சொல்லுக்கே
வெற்றித் திருமகள் என்பதே அர்த்தம்!
ஜெயம் என்றால் வெற்றி
லலிதா் என்றால் சக்திகளுக்கு உரிய பெயர்.
பெயருக்குள்ளேயே வெற்றி இருக்கையில்
இவரை எதிர்ப்பவன் எவன் வெற்றி
பெறுவான்?

புரட்சித் தலைவி ஒரு பூகம்ப விதை,
பூமிக்குள் இவ்விதையைப் புதைத்து விட
முடியுமா?
புரட்சித் தலைவி ஒரு ஆகாயம்,
ஆகாய நீலத்தை அழித்து விட முடியுமா?
இந்தியாவே வியக்க இந்நாட்டை ஆட்சி
செய்யும்

ஈடாக மாட்டாது!
இவனது கவிக்கோட்டை அறிவுச்சுடர்
வீசும் பொற்கோட்டை!
கருத்திலே புதுக்கோட்டை!
தஞ்சை நெற்கோட்டைபோலே
நெடியவயல் தரும் கோட்டை!
முக்கோட்டை போன்ற மூட மனங்களைத்
தகர்க்கும் விற்கோட்டை!
பல கற்கோட்டை போலே காணாமல்
போகாமல்,
இவரது சொற்கோட்டை என்றும்
சூரியன்போல் நிலைத்திருக்கும்.
செங்கோட்டையாலே ஜெயிக்க முடியாத
செயின்ட் ஜார்ஜ் கோட்டைபோல்
திகழ்பவன் பட்டுக்கோட்டை!
மலர்க்கோட்டை போன்ற கவிஞர்கள்
மத்தியிலே
திருச்சி மலைக்கோட்டை போலே
மாண்பில் உயர்ந்தவன்!
ஏறத்தாழ இருநூறு படத்திற்கு
உரையாடல் தீட்டிய உரையாடல் ஆசிரியர்
ஏ.எல். நாராயணன் என்பவராலே
பட்டுக்கோட்டை பட உலகில் நுழைந்தார்!

இவனுக்கு நிகராக எழுதியவர் திரையுலகில்
அன்றைக்கும் இல்லை, இன்றைக்கும்
இல்லை!
மதுவுடைமைக் கொள்கை மலிந்திருந்த
திரையுலகில்
பொதுவுடைமைக் கொள்கையைப் புகுத்திய
பெருங்கவிஞன்!

கண்ணதாசனுக்குப் பின் கலையுலகில்
வந்தாலும்
கண்ணதாசனுக்குப் பின் கலையுலகில்
புகுந்தாலும்
கண்ணதாசனையே பாட்டில் கடந்தவன்
இவன்தான்!
கண்ணதாசன் தமிழோ கவிதைத் தமிழ்
பட்டுக்கோட்டையின் தமிழோ பாட்டாளித்
தமிழ்!



உவமைகளின் சித்திரிப்பு கண்ணதாசன்
பாடல்;
உணர்ச்சிகளின் கொந்தளிப்பு
பட்டுக்கோட்டையின் பாடல்!
கண்ணதாசன் பாடலில் இருந்தது வனப்பு;
பட்டுக்கோட்டை பாடலில் இருந்தது
நெருப்பு!
பாட்டாளித் தோழருக்கு இவன் பாடல்
கற்கண்டு!
தனியுடைமைக் கொள்கைக்கு இவன்
பாடல் வெடிகுண்டு!

இதுவரை படத்திற்கு இவன் வரைந்த
பாடல்கள்
இருநூற்றைம்பதுதான்!

இருநூற்றைம்பதுதான் எனக்குத்
தெரிந்தவரை!
இன்னும் கொஞ்சம் சேர்த்தாலும்
முந்நூறுக்கும் குறைவாய்த்தான்
மொத்தமே இருக்கும்!
இரண்டாயிரம் பாடல் எழுதியவன்
பெரும்புகழை
இருநூற்றைம்பது பாடலே எழுதிப்
பெற்றான் என்றால்
இவன் பாட்டின் கருத்துத்தான் இதற்குக்
காரணம்!

பட்டுக்கோட்டை படவுலகில் எழுதியது
எட்டாண்டுக் காலம்தான் என்றாலும்
இவனைப்போல் எழுச்சி மிகுந்த இதயந்
தூண்டுகின்ற
புரட்சிக்கருத்தைப் பொழிந்தவர்கள்
எவருமில்லை!

சிந்தனையைக் கொதிப்பாக்கி
இரத்தத்தைச் சூடேற்றும் கந்தகக் கிடங்கு
இவன் சந்தங்கள் ஆகும்!
திருக்குறளை மனப்பாடம்செய்வதுபோல்
தொழிலாளர் மனப்பாடம் செய்தது
மண்ணில் இவன் பாட்டைத்தான்!

"வசதி இருக்கிறவன் தர மாட்டான்
அவனை வயிறு பசிக்கிறவன்
விடமாட்டான்"
காரல் மார்க்சின் கம்யூனிச சித்தாந்தத்தை
இந்த இரண்டு வரியிலே இவனைப்போல்
எவன் சொன்னான்?

திரை உலகில் –
திரைப்படக் கவிஞர்கள் இன்று தீட்டும்
பாடலோ
மக்கள் அறிவை மட்டுமே தொடுகின்ற
பாடல்;
கல்யாணசுந்தரம் பாடிய பாடலோ
மக்கள் உள்ளத்தைத் தொட்டு ஊடுருவிய
பாடல்!
மக்கள் உணர்வினை வார்த்தையில்
வடித்ததால் இவனை
மக்கள் கவிஞன் என்று மக்களெல்லாம்
அழைத்தார்கள்.
எத்தனையோ திலகங்கள் இருந்தாலும்
எம்.ஜி.ஆரே மக்கள் திலகம் என்று
மக்களன்று அழைத்தது போல்,
மக்கள் கவிஞரென்று மாநிலத்தில் இவரை
அழைத்தார்கள்!

நாட்டு நடப்புகளை நன்றாக ஆராய்ந்து
பாட்டுப் புனைந்தவன் பட்டுக்கோட்டை!
இன்றைக்கும் நாளைக்கும் என்றைக்கும்
பொருந்தும்வண்ணம்
அன்றைக்கே பாடிவைத்தான்
அதிலே ஒரு பாட்டு –

"எல்லோரும் நம்பும்படி சொல்லும்
திறனிருந்தால்
சொல்லிலே உண்மை இல்லே;
உள்ளதை உள்ளபடி உரைக்கும் மனிதனிடம்
உணர்த்திடும் திறமை இல்லே;
உண்மையும் நம்பவைக்கும் திறனும்
அமைந்திருந்தால்
உலகம் அதை ஏற்பதில்லே;
அது இருந்தா இது இல்லே, இது இருந்தா
அது இல்லே;
அதுவும் இதுவும் சேர்ந்திருந்தா
அவனுக்கிங்கே இடமில்லே!"

"பொதுப்பணியில் செலவழிக்க
நினைக்கும்போது பொருளில்லே
பொருளும் புகழும் சேர்ந்தபின்னே
பொதுப்பணியில் நினைவில்லே
போதுமான பொருளும் வந்து
பொதுப்பணியில் நினைவும் வந்தா
போட்ட திட்டம் நிறைவேற கூட்டாளிகள்
சரியில்லே!"

–இதைப்போல எத்தனையோ இவன்பாடிச்
சென்றுள்ளான்,
காதல் என்ற போர்வையில் காமத்தைத்
தூண்டுகின்ற பாடலைத்தான்
என்போன்றோர் படங்களில் எழுதுகிறோம்!
காதல் பாட்டிலும் கவலையிலே தேயும்
தொழிலாளர் சிந்தனையைச்
சொல்லியவன் இவன்தான்!

"சும்மா கிடந்த நிலத்தக் கொத்தி
சோம்பலில்லாமல் ஏர் நடத்தி
கம்மாங்கரையை உசத்திக் கட்டி
கழனிக்கொல்லையில் வாய்க்கால் வெட்டி
சம்பாப் பயிரைப் பறிச்சு நட்டு
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு

நெல்லு வெளஞ்சிருக்கு, வரப்பு உள்ள
மறஞ்சிருக்கு"

"அட, காடு வௌஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்
காடு வௌயட்டும் பொண்ணே,
நமக்குக் காலம் இருக்குது பின்னே!"
-நாடோடி மன்னனில் நல்லதொரு
பாடலிது!

காதல் பாட்டிலும் இதைப் போன்ற கருத்தை
எம்.ஜி.ஆர். என்பதால் ஏற்றுக் கொண்டார்.
இதுபோல் நாங்கள் இன்றைக்கு எழுதினால்
தயாரிப்பாளர் சம்மதிப்பாரா?
அதனால்தான்
"தரைமேல் பிறக்க வைத்தான்
எங்களைத் தண்ணீரில் பிழைக்க
வைத்தான்
தரைமேல் இருக்க வைத்தான்
எங்களைக் கண்ணீரில் குளிக்க
வைத்தான்!"
என்றெல்லாம் படகோட்டி படத்திலே
பாடல் எழுதிய கவிஞர்கள்-
"எப்படி எப்படி சமஞ்சது எப்படி
இப்படி இப்படி சமஞ்சது இப்படி"
என்றெல்லாம் இன்று எழுதுகின்றனர்.

காக வருமென்றால் கழுதையைக்கூட
குதிரை என்று கூறுகின்ற காலமிது.
ஆனால் பட்டுக்கோட்டை எந்த நிலையிலும்
இதுபோல்

இறங்கிப் பாடல் எழுதிப் பிழைத்தவன்
அல்லன்.
அவனது காலத்தில் வார்த்தைக்கும்
கருத்துக்கும்
முதலிடம் இருந்தது;
எங்கள் காலத்தில் வாத்தியக் கருவிக்கே
முதலிடம் உள்ளது;
அன்றைய பாடல்கள் தெளிவாக நமது
செவியில் கேட்டதற்கும்
இன்று கேட்காமல் இருப்பதற்கும் இதுதான்
காரணம்!

இவன் வரைந்த பாட்டுக்கே
இசையமைப்பாளர்
மெட்டுக்கள் போட்டு மிளிர வைத்தனர்.
நூற்றுக்கு எண்பது பாடல்கள்
இவன் எழுதிய
பிறகு இசையமைத்த பாடல்கள்.
இவன் முதன்முதலில் மெட்டுக்கு மொழிந்த
பாடல்
"சின்னச்சின்ன இழை பின்னிப்பின்னி
வரும்
சித்திரக் கைத்தறி சேலையடி"
என்ற பாடல்தான். இது புதையல் படத்தில்
வரும்!

நானும் புலமைப்பித்தனும் திரைத்துறையில்
அடிவைத்து நுழைந்த ஆரம்ப நாளிலேயே,
மெட்டுக்குத்தான் பாட்டுக்கட்டினோம்.
மெட்டுக்குப் பாட்டுக் கட்டுதல் என்பது
இலக்கணக் கட்டுக்குள் நின்று
கவி புனைவதிலும் கடிது.
இங்கே சிலபேர் எண்ணுவதைப்போல்
அது சுலபமான தொழில் அல்ல,
குருவிக்கரம்பை சண்முகம், மேத்தா,
பொன்னடியான்
போன்றவர்களெல்லாம் மெட்டுக்குத்தான்
முதலிலே எழுதி நுழைந்தார்கள்.
இது சுலபமான தொழில் அல்ல.
அதனால்தான் இலக்கியக் கவிஞர்கள்
எத்தனையோபேர்

கலைத்துறைதன்னில் காலடி வைத்தும்
வெல்ல முடியாமல் விலகிப் போய்
விட்டனர்.
எங்களைப் போன்றோர்
இருக்கின்றோமெனில்
திரைப்பாடல் நுட்பத்தைத் தெரிந்து
கொண்டவர்கள் அவ்வளவே!
பட்டுக்கோட்டை-
பள்ளியில் அதிகம் படிக்காதபோதும்,
அனுபவப் பள்ளியில் அதிகம் படித்தவர்.
இவனுக்கிருந்த சிந்தனைக் கூர்மை
ஐ.ஏ.எஸ். படித்த அதிகாரிக்கில்லை!
படிப்பு வேறு, அறிவு வேறு.
பட்டப் படிப்பு படிக்காதவர்கள்தான்
அகிலத் தலைவராய் அறிவியல் மேதையாய்
உலக அளவில் உயர்ந்திருக்கிறார்கள்.

அதிகம் படித்த அறிவாளி என்பவன்
நம்மையும் இந்த நாட்டையும் ஏய்ப்பவன்.
இதற்கு, இந்திய நாட்டின் ஏவுகணை
ரகசியத்தை
வெளிநாட்டுக்கு விற்ற விஞ்ஞானியே
சாட்சி!
படிக்காதவர்களே பாவ புண்ணியம் பார்த்து
நடக்கும் பண்புள்ளவர்கள்-
பட்டுக்கோட்டையே இதைப் பாடலிலும்
சொல்வான்

"எழுதிப் படிக்க அறியாதவன்தான் உழுது
உழைச்சு சோறு போடுறான்;

எல்லாம் படிச்சவன் ஏதேதோ பேசி நல்லா
நாட்டைக் கூறு போடுறான்!
இவன் சோறு போடுறான், அவன்
கூறுபோடுறான்!"

-மன்னனின் மனத்தை மருதகாசி
போன்றவர்கள்
பண்ணில் வைத்துப் பாடினார்கள்
என்றாலும்,
வாழ்வியல் தத்துவத்தின் வளமான
கருத்தைப்
பாமரத் தமிழில் பாடியவன் இவன்தான்!
"குட்டி ஆடு தப்பி வந்தா குள்ளநரிக்குச்
சொந்தம்;
குள்ளநரி மாட்டிக்கிட்டா குறவனுக்குச்
சொந்தம்;
தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்

சட்டப்படி பார்க்கப்போனா எட்டடிதான்
சொந்தம்
உனக்கெது சொந்தம் எனக்கெது சொந்தம்
உலகத்தில் எதுதான் சொந்தமடா!

ஆட்டிலே குட்டி ஊட்டு மறந்தா
அதோட சொந்தம் தீருமடா!
கூட்டிலே குஞ்சு பறக்க நினைத்தா
குருவியின் சொந்தம் மாறுமடா

காலை நீட்டியே வைத்து நெருப்பிடும்போது
நேசம் பாசம் பொருள் ஆசைக்கெல்லாம்
காட்டிய ஒருபிடி வாய்க்கரிசியிலே
கணக்குத் தீர்ந்திடும் சொந்தமடா"-
இப்படி அருமையாய் எழுதியவன் அவன்!

"பொறக்கும்போது பொறந்த குணம்
போகப்போக மாறுது
எல்லாம் இருக்கும்போது பிரிந்த குணம்
இறக்கும்போது சேருது!
பட்டப்பகல் திருடர்களைப் பட்டாடைகள்
மறைக்குது!

ஒரு பஞ்சாயந்தான் எல்லாம் சேந்து
திருடனென்றே உரைக்குது
நாம் எப்போ போறோன்னு தெரியாம
வாழ்வின் கணக்குப் புரியாமே ஒண்ணு
காசை எண்ணிப் பூட்டுது!
ஆனா, காதோரம் நரச்ச முடி கதை
முடிவைக் காட்டுது!"

—பட்டுக்கோட்டையின் இந்த பாடலை
எம்.ஜி.ஆர். அவர்கள்

என்னிடம் பலமுறை கூறிப்
பாராட்டியிருக்கிறார்.
இதைவிட அவனுக்குச் சிறப்பென்ன
வேண்டும்?

'கரு உலகில் உருவாகி மறு உலகில் வரும்
நாளைக்
கண்டறிந்து சொல்வாருண்டு
இந்தத் திருவுடலில் குடியிருக்கும் ஈசன்
பிரியும் நாளை
தெரிந்தொருவர் சொன்னதுண்டோ?
வருவனவும் போவனவும் விதி என்று
வைத்தவன்
வாழ்வினை விதைத்த உழவன்
அவன் அறுவடைக் காலத்தில் அழுதாலும்
தொழுதாலும்
அனுதாபம் காட்டுவானோ?"—

இத்தகைய அவனது தத்துவங்கள்
அத்தனையும்
சந்தனப் பூங்கொத்துக்கள்!
சத்து கடல் முத்துக்கள்!
கரும்புத்தேன் சொட்டுக்கள்!

பொன்மனச் செல்வி புரட்சித் தலைவி
ஆட்சி செய்யும்
இந்நாளில் அவன் வாழ்ந்திருந்தால்,
மாட்சிபல பெற்றிருப்பான், மகத்துவங்கள்
கண்டிருப்பான்.
ஆயினும், இதுவரை இங்கே அமைந்த
அரசுகளில்

- பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்.

☆ வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.
☆ எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.
☆ வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

-மகாகவி பாரதியார்

பட்டுக்கோட்டையைப் பாடுபொருளாய்
வைத்த அரசு
நமது தலைவியின் அரசுதான்!
அதற்காக நான் இந்த அரசைப்
போற்றுகிறேன்;
எந்தப் பாடல் எதுவானாலும்
அந்தப் பாடலில்
அரியபெரும் கருத்தைக் கட்டி வைத்தவன்
கல்யாணசுந்தரம்.

இவனது பாடல் எப்படிப்பட்டது?
சுருக்கமாகச் சொல் என்றால்,
அது திரை உலகத்தில் திருக்குறள்
என்பேன்!
ஆம். அது கரையில்லாத கங்கைநதிப்
பெருக்கம்;
திரைப்படக் கவிதைக்கே அதுவொரு
இலக்கண விளக்கம்.
வணக்கம்.
—2.1.1995 அன்று தஞ்சையில் நடைபெற்ற
எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக்
கவியரங்கில் பாடிய கவிதை.

மருத்துவக் கட்டுரை:

பெண்களும் சர்க்கரை நோயும்

டாக்டர் அ. பன்னீர்செல்வம், எம்.டி., டி.டயாப்.,
மண்டலச் செயலாளர், இந்தியச் சர்க்கரை நோய்க் கழகம்.

'சர்க்கரை வியாதி' என்பது பொதுவான ஒரு நோய் ஆகும். ஆண் பெண் இருபாலரையும் பாதிக்கக்கூடியது இது. வயது வேறுபாடின்றி - அதாவது சிறுவர்கள், பெரியவர்கள்—கிராமம், நகரம் என்று பாராமல், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமும் இல்லாமல், அனைத்து மதத்தினரையும், அனைத்து நாட்டினரையும் சற்று விகிதாச்சார வித்தியாசத்துடன் பாதிக்கக் கூடிய, உலகமெங்கும் காணப்படும் மிகப் பழம்பெரும் நோய் ஆகும். 'எய்ட்ஸ்' என்னும் உயிர்க்கொல்லி நோய் போலப் புதியதோர் நோய் அல்ல இது!

இப்படிப்பட்ட இந்தச் சர்க்கரை நோயினால், பெண்களுக்கு எந்த அளவிற்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன; அவர்கள் அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதை இங்கே பார்ப்போம். "மகளிர் மட்டும்" என்று இருப்பது போல், இந்நோயினால் அவர்களுக்கு மட்டும் சில தனிச் சிறப்புத் துன்பங்கள் உண்டு.

சிறுமிகளும் சர்க்கரை நோயும்

சிறுவர்க்ளைத் தாக்குகின்ற இந்த நோய்க்கு "ஜீவனைல் டயபிடிஸ்" (Juvenile Diabetes - IDDM - Insuline Dependent Diabetes Mellitus) என்று பெயர்.

இவர்களுக்கு இன்சுலின் சுரப்பே இருக்காது. இன்சுலின் சுரக்கும் உயிரணுக்கள் . பீட்டா செல்கள் முற்றிலுமாக, நிரந்தரமாகச் செயலிழந்து விடுகின்றன. ஆகவே, இவர்கள் வாழ்நாள் முழுதும் இன்சுலின் ஊசியை நம்பியே இருக்கவேண்டியுள்ளது. இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ளவில்லையெனில் இவர்களுக்கு வாழ்வில்லை, உயிரும் இல்லை!

இதுபோன்ற ஒரு கொடிய நோய் பெண் குழந்தைகளுக்கும், சிறுமிகளுக்கும் வந்தால், அக்குழந்தையின் நிலை ஒருபுறம் இருக்க, பெற்றோர்கள் நிலைமையை எண்ணிப் பார்த்தால் அவர்கள் படும் சிரமம் கணக்கில் அடங்காது.

பெற்றோர்களோ இதனால் ஆயிரக்கணக்கான கேள்விகளின் மூலம் மருத்துவர்களைத் துளைத்தெடுத்து விடுவார்கள்.

எவ்வளவு நாள் ஊசி போட்டுக் கொள்வது?

மற்ற மருந்துகள் போல் இதற்கு மாத்திரை வடிவில் சிகிச்சை கிடையாதா?

தினந்தோறும் போடத்தான் வேண்டுமா?

ஒரு வேளை போட்டால் போதாதா?

படிப்பு எப்படி? விளையாட்டு, நடனம், பழகுதல் போன்றவை எப்படி?

திருமணம் செய்யலாமா கூடாதா?

குடும்ப வாழ்க்கை எப்படி?

- இது போன்ற கேள்விகள் அவற்றுள் சில.

இவர்களது அத்தனைக் கேள்விகளுக்கும் சவாலாக, இந்த நோயுடன் நோயற்று ஒரு நபர் போல் வாழ முடியும் (Normal Life Despite Diabetes) என்ற ஒரு மனப்பக்குவத்தை நோய் பாதித்த சிறுமிக்கும், அவரது பெற்றோருக்கும் சிகிச்சை செய்யும் மருத்துவர் ஏற்படுத்தியாக வேண்டும். இப்போதைய மருத்துவ வளர்ச்சியில் பெரியம்மை நோயை ஒழித்ததைப்போல் இந்தச் சர்க்கரை நோயை அறவே ஒழிக்க முடியவில்லை. எனினும் இந்நோய் இருந்தும், நோயற்ற நபர் போல் வாழலாம். நோயற்றவர்களைப் போல் படிக்கலாம். விளையாட்டு, நடனம் முதலியவற்றில் தாராளமாக ஈடுபடலாம்.

இவர்கள் எல்லா நேரங்களிலும் இந்த நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், மேற்கூறிய அனைத்தும் சாதாரணமானவைகளே. 'இன்சுலின்' ஊசி 'ஆண்டிபயாடிக்' இல்லாத காலகட்டங்களில் இந்நோய் பாதித்த அனைவரும் இறந்துள்ளனர்.

இந்நோயின் அறிகுறிகள்

இந்நோய் சிறுமிகள், சிறுவர்கள் மத்தியில் இருப்பதை எவ்வாறு தெரிந்துகொள்வதுஎன எல்லோரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாகச் சிறுநீர் கழிக்கும். தண்ணீர் மிகவும் அதிகமாக உடனுக்குடன் குடிக்கும்; தாகமே லேசில் அடங்காது. பசி அதிகமாக இருக்கும். அடிக்கடி சாப்பிட்டாலும் சோர்வு அதிகமாக இருக்கும். குழந்தையின் எடையும் திடீரென மிக வேகமாகக் குறையும்.

இந்த அறிகுறிகள் ஆரம்பித்த 24 மணி நேரம் முதல் 48 மணி நேரத்திற்குள் - தக்க சிகிச்சை அளிக்கவில்லையெனில், குழந்தை நினைவிழந்த நிலைக்குச் சென்றுவிடும். சில நேரங்களில் இந்நிலையில் உள்ள குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் கண்டுள்ளதோ என்று தவறாகச் சந்தேகிக்கப்படுவதும் உண்டு. இந்நிலையில் உள்ள – முக்கியமாகக் குழந்தைகளுக்கு சிறுநீர்ப் பரிசோதனையும், இரத்தப் பரிசோதனையும் செய்து, இந்த நோய் இருப்பதை நிர்ணயம் செய்து, தக்க சிகிச்சையைத் தக்க நேரத்தில் அளித்தால் கண்டிப்பாகக் காப்பாற்ற முடியும்.

மேற்கொண்டு தொடர் பரிசோதனையும், தொடர் சிகிச்சையும் மிகவும் அவசியம். தற்போது மிக எளியமுறையில் - ஒரு துளி இரத்தத்தில், இரு நிமிடத்திற்கு நோய் பாதித்த நபரோ அல்லது அவரைச் சார்ந்தவரோ இரத்தப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.

'இன்சுலின்' ஊசியும் இப்போது மிகவும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது; பேனா வடிவில் ஊசிகள் வந்துள்ளன. இவை மூலம் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் எளிது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போன்ற எந்தவொரு துன்பமும் தற்போது கிடையாது.

பெண்மணிகளின் நோய்க்கூறு

முப்பது வயதைக் கடந்த பின்புதான் சில பெண்மணிகளுக்கு இந்நோய் வருகிறது. இவர்களுக்கு உடலில் சுரக்கும் இன்சுலின் அளவு போதுமானதாக இல்லாமல் போவது, அல்லது சுரந்த இன்சுலினைச் சரியாக உபயோகிக்க முடியாமல் போவது தான் இந்நோய்க்கு மூலகாரணமாக அமைகிறது. குடும்பத்தில் அப்பா அல்லது அம்மா அல்லது இருவருக்குமே சர்க்கரை நோய் இருந்தாலும், கர்ப்பத்தின் போது சர்க்கரை நோய் வந்திருந்தாலும், உடல் பருமன் அதிகம் இருந்தாலும் இந்நோய் வர அதிக வாய்ப்புகள் உள்ளன.

இச் சூழ்நிலையில் உள்ள சில பெண்களுக்கு இருபது வயதைக் கடந்த பின் கூட இந்நோய் வந்துவிடுகிறது. இந்த நோயானது பெரும்பாலும் எந்த ஒரு அறிகுறியும் இல்லாமலே உடலைப் பாதிக்கிறது. இந்நோய் மட்டுமல்ல, இந்த நோயின் பின் விளைவுகள் கூட நோயாளிகளுக்குச் சட்டெனத் தெரிவதில்லை. சிலருக்கு மட்டும் அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீர் வெளியாகும் இடத்தில் அரிப்பு, அதிக தாகம் எடுத்தல், நாக்கு வறட்சி, அடிக்கடி அதிகமாகச் சிறுநீர்க் கழித்தல், அதிகப் பசி, சோர்வு முதலிய தொல்லைகள் தெரியும்.

இவ்வாறு இருப்பவர்கள் உடனடியாக இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை ஆகியவற்றின் மூலம் இந்நோய் இருப்பதைச் சந்தேகமின்றி நிர்ணயம் செய்து மருத்துவரிடம் தக்க சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். சர்க்கரை நோய் வர அதிக வாய்ப்புகள் உள்ளவர்கள் இந்நோயின் தொந்தரவுகளை எதிர்பார்க்காமல், இருபது வயதுக்குமேல் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சாப்பாட்டின் பிறகு இரண்டு மணி நேரம் பொறுத்து இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதன் அளவு 120 மி.கிக்குக் குறைவாக இருத்தல் வேண்டும். அதிகம் இருந்தால் தவறாமல் தக்க சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

சர்க்கரை நோய் உள்ளது என முடிவு செய்தபின்னால், மருத்துவரின் சிகிச்சையுடன், நோய் பாதித்த பெண்மணியின் ஒத்துழைப்பும், அவரைச் சார்ந்தவர்களின் ஒத்துழைப்பும் மிகமிக அவசியம். வழக்கமாகவே பெண்கள் ஆண்களுக்குப் பறிமாறிவிட்டு மீதமுள்ளதை - அல்லது மீதம் இருந்தால் சாப்பிடும் பழக்கமுள்ளவர்கள். சிலநேரங்களில் எதுவும் சாப்பிடாமல் விட்டுவிடுவதும் உண்டு. சில பெண்கள் இனிப்பு வகைகள், கொழுப்புச் சத்து அதிகம் நிறைந்த உணவு வகைகளை அடிக்கடி உண்ணும் பழக்கமுடையவர்களாக உள்ளனர். சிலர் அதிகமாக விரதங்களைக் கடைப்பிடிக்கின்றனர். யார் எந்தப் பழக்கம் உடையவர்களாய் இருந்தாலும், இந்நோய் உள்ளது எனத் தெரிந்த பிறகாவது உணவில் சில கட்டுப்பாடுகள் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சர்க்கரை இனிப்பு வகைகள், கிழங்குகள் போன்ற குறிப்பிட்ட சில உணவு வகைகளைத் தவிர்த்து ஒவ்வொரு வேளையும் தவறாமல் சாப்பிடும் பழக்கத்தைக் கையாள வேண்டும். சரியாகச் சாப்பிடாதவர்கள், தாழ் சர்க்கரை (Hypoglycemia) நிலைக்கு அடிக்கடி உள்ளாகின்றனர். இதனால் சில நேரங்களில் நினைவிழக்கும் நிலைகூட ஏற்படுகிறது.

அடிக்கடி அதிகம் சாப்பிடுபவர்கள், இனிப்பு சாப்பிடுபவர்கள் ஆகியோருக்குச் சர்க்கரை நோய் சரியாகக் கட்டுப்பாட்டிற்கு வராமல் பல தொந்தரவுகளை ஏற்படுத்துகிறது. எடை அதிகமிருப்போருக்கு இதனால் எடையும் குறைவதில்லை. சிலருக்கு, இந்த நோய் வந்தபின்னர் கூட இனிப்புப் பண்டங்கள் சர்க்கரை முதலியவற்றை நீக்க மனம் வருவதில்லை.

ஆக, இந்நோயின் தன்மைக்கு ஏற்ப, கணவன்மார்களும் உடன் இருப்பவர்களும் இந்நோய் பாதித்த பெண்மணிக்கு உதவியாய் இருக்கவேண்டும். இவர்களும் உணவுக்கட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், பெரும்பாலான வீடுகளில் பெண்கள் தான் சிறுகுழந்தை முதல் வயதான நபர்கள் வரை அவரவர்களுக்கு ஏற்ற உணவைச் சமைத்துப் பரிமாறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு என்று வரும்போது அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை; மற்றவர்களும் கொடுக்க முன் வருவதில்லை. இந்நிலை இருந்தால் உடனடியாக மாற வேண்டும்.

மாதவிடாய் (After Menopause) நின்ற பெண்களிடம் இந்நோய் வேகம் சற்று அதிகமாகக் காணப்படுகிறது. மேலும் இந்த நிலைக்கு வந்த பெண்களிடம், இந்நோயுடன் உயர் இரத்த அழுத்தம் (High BP-Hypertention) இருதய இரத்தக் குழாய் நோய்களும் (Coronary Artery Disease - CAD) மாரடைப்பு ஏற்படுவதும் மிகப் பரவலாகக் காணப்படுகிறது.

நம்மால் உடனே மாற்றியமைக்க முடியாமற் போகலாம். மாற்றியமைக்க வேண்டும் என்று எண்ணுவது நம்மால் ஆகும். எண்ணிய எண்ணத்தைப் பிறரிடம் பரப்ப நம்மால் ஆகும். இன்று எண்ணத்தை வெற்றியுடன் பரப்பிவிட்டால், நாளை அது எப்படியும் செயலாக உருக்கொள்வது திண்ணம். விதைத்த விதை முளைக்கத் தவறினாலும் தவறும். பெரும்பாலோர் எண்ணும் எண்ணம் செயல் ஆகத் தவறாது.

- டாக்டர் மு.வ.

சிலருக்குக் கண்கள் தெரிவதில்லை. காதுகள் கேட்பதில்லை, சிறுநீரகக் கோளாறும் இருக்கும். கடைசியில் நோயாளியின் கால்களேகூட இதன் விளைவாக எடுக்கப்பட்டு விடுகின்றன. சிலருக்கு டி.பி., ஆஸ்த்துமா, புற்றுநோய் போன்றவைகளும் உடன் வருகின்றன.

ஆகவே, இப் பெண்மணிகளுக்குச் சிகிச்சையின் போதும், வீடுகளிலும் மிகவும் தனிக் கவனம் தேவைப்படுகிறது. இது போன்ற சூழ்நிலையில் குடும்பத்தினரின் ஆதரவு இல்லையெனில், இவர்கள் படும் துன்பங்கள் சொல்லிமுடியாது.

கர்ப்பிணிப் பெண்களும் சர்க்கரை நோயும்

இவர்களையும் இந்நோய் விட்டுவைப்பதில்லை. இந்நோயைக் கர்ப்பத்தின் போது பலவகையாகப் பிரிக்கலாம். ஏற்கெனவே சிறு வயது முதல் (Juvenile Diabetes) அது தொடர்ந்து இருந்துகொண்டு, அதனுடன் திருமண வாழ்க்கை, கர்ப்பம் தரித்தல், என்பது ஒரு வகை.

இவ்வகையில் இந்த நோய் ஆரம்பித்த நாள் முதல் சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கர்ப்பத்திற்கு முன்பு நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியம். அதோடு பிரசவிக்கும் வரையில் அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்து மிகவும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

இல்லையேல், கரு கலைந்து போதல் (Abortion), குறைப் பிரசவம், பிறப்பு ஈனம் (Birth defects) உள்ள குழந்தை, புத்தி மந்தம் உள்ள குழந்தை, மிகப் பெரிய குழந்தை முதலியன பிறக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

அல்லது குழந்தை பிறப்பதற்கு முன் அல்லது பிறந்த உடன் இறந்து போவது மூச்சுத் திணறல் முதலிய சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஆகவே, பெற்றோர்களே தங்கள் பெண் குழந்தைக்குச் சர்க்கரை நோய் இருந்தால் ஆரம்ப காலம் முதல் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து பிரசவ காலத்தில் சற்று அதிகமான கவனத்துடன் செயல்பட்டால், பெரும்பாலும் அவர்களுக்குப் பிரசவத்தின் போது மேற்கூறப்பட்ட குறைபாடுகள் ஏதும் இருக்காது. பிரசவம் ஆன பின்பும் இந்நோய் தொடரும். அடுத்த பிரசவத்திற்கும் தொடரும். ஆகவே, ஓரிரு குழந்தையுடன் இவர்கள் கட்டாயம் நிறுத்திக் கொள்ளுவதுதான் நல்லது. அவர்கள் ஈன்றெடுத்த குழந்தைக்குச் சர்க்கரை நோய் வழக்கமாக வரும் என்ற அச்சம் தேவையில்லை.

கர்ப்பத்தினால் சர்க்கரை நோய் வருவது மற்றொரு வகை. (Diabetes due to pregnancy gestational diabetes). கர்ப்பத்திற்கு முன் இந்நோய் இருந்திருக்காது. பிரசவமான பின்பு வழக்கமாக இந்நோய் மறைந்து விடும். இது போன்ற பெண்கள் பெரும்பாலும் சர்க்கரை நோய்க் குடும்பத்தைச் சார்ந்தவர்களாய் உள்ளனர். அதாவது, இவர்களது அப்பா அல்லது அம்மாவுக்கோ, அல்லது இருவருக்குமோ சர்க்கரை நோய் இருக்கலாம். அல்லது அவர்களுக்குச் சர்க்கரை நோய் இல்லாமல் இருந்தால் கூட சில பெண்களுக்குக் கர்ப்பத்தின் போது இந்நோய் வருவதுண்டு. இந்நோய் இருப்பது பெரும்பாலும் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தெரிவதில்லை.

இந்நோயினால் கர்ப்பம் பாதிக்கப்பட்டபின், உணருபவர்கள் ஏராளம். ஆகவே, இந்நோய் உள்ளதா எனக் கர்ப்பம் தரித்த நாள்முதல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை அவசியம் செய்து பார்த்துக்கொள்ள வேண்டும். இவர்களைப் பரிசோதனை செய்யும் பெண் சுகாதாரப் பணியாளர்கள் பெண் மருத்துவர்கள் இந்தப் பரிசோதனைகளின், முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

சாதாரணமாக, கர்ப்பம் தரிக்காத பெண்ணின் சர்க்கரையின் அளவைவிடக் கர்ப்பம் தரித்த பெண்ணின் சர்க்கரையின் அளவு சற்றுக் குறைவாகவே இருக்கும்.

வாயின்றி ஊமைய ராக - இந்த
வையத்தில் வாழ்பவ ருண்டு!
நோயின்றி வாழ்பவ ரில்லை - வரும்
நோய்களுக்கும் அள வில்லை!
- உவமைக் கவிஞர் சுரதா

அதாவது, இரத்தப் பரிசோதனையில் சர்க்கரையின் அளவு 110 மி.கி. குறைவாகவே இருத்தல் வேண்டும். சற்றே அதிகமான சர்க்கரை கருவிற்கும், தாயாருக்கும் அதிகமான தொந்தரவுகளைக் கொடுக்கிறது. இது போன்ற சர்க்கரை நோய், கர்ப்பம் தரித்த ஆறு அல்லது ஏழாவது மாதத்தில் தோன்றி, புத்தி மந்தமான அல்லது மிகப் பெரிய குழந்தையை (Big baby-more than 3.5 kg) உண்டாக்கி விடுகிறது. கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இத்தொந்தரவுகள் தோன்றுவதில்லை.

ஆகவே, இவர்கள் பிரசவத்திற்குப் பிறகு மாதம் ஒரு முறை பரிசோதனை செய்து, அதற்குத் தகுந்தாற்போல் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவது வகையான நோயாளிகள்

இப்போது சர்க்கரை நோய் இருபத்தைந்து வயதிற்கு மேல் வந்து, அதற்கு உணவுக் கட்டுப்பாடு அல்லது மாத்திரைகள் மூலம் கட்டுப் பாட்டில் உள்ள பெண்கள் கர்ப்பம் தரிப்பதாய் இருந்தால் என்ன செய்வது என்று பார்ப்போம். இதுபோன்ற நிலையில் பல பெண்கள் தற்போது உள்ளனர்.

ஆகவே, சர்க்கரை நோய் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்குப் பத்தொன்பது வயதிற்கு மேல் திருமணம் செய்து முடித்து, இருபத்தைந்து வயதிற்குள் குழந்தைகளைப் பெற்று முடித்து விடுதல் நல்லது. கல்யாணத்திற்கு முன்பும் கர்ப்பம் தரிப்பதற்கு முன்பும் இந்நோயுடைய பெண்களுக்குத் தக்க அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்க வேண்டியுள்ளது (Pre-Marrital and Pre-pregnancy counselling essential).

இந்நோயை இன்சுலின் ஊசி மூலம் நல்ல கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்த பிறகு, கர்ப்பம் தரித்தால் நல்லது; மிகவும் அவசியமும் கூட.

கர்ப்பத்தின் போது, சர்க்கரை நோய்க்கு மாத்திரைகள் உகந்ததல்ல. இன்சுலின் ஊசி மூலம் சர்க்கரையை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியம்.

'இன்சுலின்' ஊசியில் கூட மிகவும் சுத்தம் செய்யப்பட்ட மனித வகையைச் சார்ந்த 'இன்சுலின்' (Highly Purified Human Insulin) மிகவும் நல்லது. பழைய இன்சுலின் வகைகள் அவ்வளவாகச் சிறந்தது அல்ல.

ஆகவே பெண்கள் இந்நோயைச் சற்றுச் சிரமத்துடன் தான் சமாளிக்க வேண்டியுள்ளது. இந்நோய் சிறுமிகளுக்கு வந்தால் அவர்களது பெற்றோரும் சேர்ந்து துன்பப்பட வேண்டியுள்ளது. கர்ப்பத்தின் போது அதிகப்படியான கவனம் தேவைப்படுகிறது. இந்நோயுடன் அதன் பின் விளைவுகள், மற்ற நோய்கள் இருந்தால் சிரமங்கள் அதிகமாகின்றன. பாதித்தவருடைய ஒத்துழைப்புடன், அவர்களைச் சார்ந்தவர்கள், பெற்றோர்கள், கணவர் - மற்ற உறவினர்கள், நண்பர்கள் போன்றோர் ஒத்துழைப்பும், மருத்துவர் கண்காணிப்புடன் இருந்தால் இந்நோய் உடைய பெண்கள் சமுதாயத்தில் மற்ற பெண்களைப் போலவே நன்கு வாழலாம் (Normal Life Despite Diabetes). அஞ்சத் தேவையில்லை.

அண்மையில், 1994-95-இல் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 10 வயதுகுட்பட்ட நீரிழிவு நோயாளிகளிடையே ஓவியப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் பங்கேற்ற லட்சுமி ப்ரியா என்ற சிறுமி முதல் பரிசாக மூவாயிரம் ரூபாய் பெற்றார்.

'அருகம்புல்' சாறு நல்லதா?

அருகம்புல் தூளோ, சாறோ நீரிழிவு நோய்க்கு நல்ல மருந்து என்று கூறப்படுகிறது; இது சரியல்ல.

அருகம்புல் சாறுக்கும் நீரிழிவு நோய்க்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. அருகம்புல் என்பது ஒரு சாதாரணப் புல்தான். அதற்கு எந்தவிதமான மருந்துவக் குணமும் இல்லை. இதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது என்று இந்திய நீரிழிவு நோய்க் கழகமே கூறியிருக்கிறது.

(சந்திப்பு: பி.எல்.ஆர்.)



பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!
- புரட்சிக்கவிஞர்

நூல் நயம்

வாழ்த்துவோம் வணங்குவோம்

ஆசிரியர்: பாவலர்
பட்டுக்கோட்டை இராசேந்திரன்

வெளியீடு: சங்கீதா பதிப்பகம்
14/2, பீட்டர்ஸ் காலனி,
சென்னை-14

விலை: ரூ.32 பக்: 198

தமிழுக்கு ஈடு இணை இல்லை. 'தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்' என்றார் பாரதியார். அந்த அமுத மொழி யின் அருமை பெருமையைக் கோடிட்டுக் காட்டும் கவிதைதான் முதல் கவிதை 'தன்னேரில்லாத தமிழ்'.

கனிதரும் சுவையும், ஒத்த
காதலர் காணும் இன்பம்
நனிபெரும் மகிழ்வும், ஆவின்
நறுஞ்சுவைப் பாலும் வண்ணப்
பனிமலர்த் தேனும், தேனில்
படுமொரு சுவையும் எங்கள்
தனிநடைத் தமிழின் முன்னர்
தலைதூக்க வழியே இல்லை;

—என்று கன்னித் தமிழில் எழுதிய கவிஞரின் கன்னி முயற்சி இப்பாடல்.

கன்னி முயற்சியே சுற்கண்டாய் இனிக்கின்றது. மற்ற கவிதை களையும் படிக்கின்றோம்; அவை தேன் பலாச் சுளைதான்!

இன்று கவிதை என்கிற பெயரில் பலவற்றைப் பார்க் கின்றோம், படிக்கின்றோம். இந்தச் சூழலில் எது கவிதை என்ற வினா எழுப்பி, விடையையும் கூறுகின் றார் கவிஞர்.

'கவிதையெனில் கவர்ச்சிமிக்க
வார்த்தை ஜாலம்
காட்டுகின்ற சொற்சிலம்பம்
மட்டும் அல்ல,
கவிதையெனில் சில அடுக்குச்
சொற்களாலே
கட்டிவைத்த கூறும் அல்ல,
கற்றறிந்தார்
கவிதையெனில் யாப்பிலக்கணத்
திற்குள்ளே
கட்டுவது தானென்றார். அதை
மறந்து
கவிதைஎன இன்றுசிலர் வெற்றுச்
சொல்லின்
குடும்பத்தைக் காட்டுகிறார். ஓ!
என் செய்வேன்!'

– என்று மரபுவழிக் கவிதை மலரவேண்டும் என்கிறார் கவிஞர்.

வாழ்த்துவோம், காதல் நினை வுகள், பன்மணித்திரள், வணங்கு வோம்என்று 3 பகுதிகளாகப்பிரித்து கவிதைகளைத் தொகுத்துத் தந் திருக்கிறார் கவிஞர். இதயத்திற்கு இதமான இனிய கவிதைகள்.

—பொன். மறைமலை

மூலிகைக் களஞ்சியம்

ஆசிரியர்: மருத்துவர்
திருமலை நடராசன்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை - 4

விலை:ரூ.125 பக்: 752

நினைப்புக்கு எட்டாத நெடுங் காலத்திற்கு முன்பிருந்தே மூலிகை மருத்துவம் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. இதன் அற்புதச் சக்தி அறிந்த முனிவர்களும், மருத்து வர்களும் அதனை மக்களிடையே பரப்ப நினைத்தனர். நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு இந்த அரிய மூலிகைகளைப் பயன்படுத்தினர். அன்று தொடங்கிய தமிழ் மருத் துவம் இன்றைய நவீன உலகிலும் நற்பயன் விளைவித்து வருகின்றது.

இயற்கை தரும் செல்வங்களான இந்த மூலிகைகளின் தன்மைகளை விளக்கி, அவை குணப்படுத்தும் நோய்களையும் கூறி, தமக்குத்தாமே மருத்துவராக விளங்கிடும் வகை யில் வகுத்தும் தொகுத்தும் தந் திருக்கிறார் நூலாசிரியர்.

இந்நூலில் 431 மூலிகைக் குணங்கள் விளக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, அகத்தியம், இதன் வகை, குணம், வழக்கு முதலான தன்மைகளைக் கூறி, அவற்றால் எந்தெந்த நோய்களை எப்படிக் குணப்படுத்தலாம் என்று கோடிட் டுக் காட்டப்பட்டுள்ளது. இதே போல ஒவ்வொன்றும் விளக்கப்பட் டுள்ளது. மூலிகைப் பெருமை கூறும் வெண்பாவும் சேர்க்கப் பட்டுள்ளது. இல்லந்தோறும் இருக்க வேண்டிய இன்றியமையாத நூல்.

—பி.வி.கிரி.

நமது சுதந்திரப் போராட்டங்கள்

ஆசிரியர்: தங்கவயல்
லோகிதாசனார்

வெளியீடு: தங்கவயல் பதிப்பகம்
31 ஏ, சீனிவாசப்
பெருமாள் சன்னதி
முதல் தெரு,
சென்னை - 14

விலை: ரூ.28 பக்:214

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் நடந்தது அன்று. அந்தப் புனிதப் போரின் விளைவாக, சுதந்திரம் என்னும் வெற்றிக்கனியைப் பறித்தோம். அந்த வீரப்போரில் பங்கு கொண்டவர்கள் யார்? எவர்? என்று பட்டியல் போட்டு ஒரு பட்டயம் தீட்டித் தந்திருக்கிறார் ஆசிரியர்.

இந்த நூலில் 17 கட்டுரைகள் உள்ளன. குஞ்சாலி மரக்காயர் முதல் சிட்டகாங் புரட்சி முடிய சுதந்திரப் போராட்டக் களங் களையும், அதில் குதித்த வீரர், வீராங்கனைகளையும் படம் பிடித் துக் காட்டுவது இந்நூலின் சிறப்பு.

—பி.வி.கிரி.

காந்தியச் சிந்தனைகள்

ஆசிரியர்: டாக்டர் ம.பா.குருசாமி

வெளியீடு: காந்திய இலக்கியச்
சங்கம்
மதுரை - 625020

விலை:ரூ.19 பக் 202

அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை, நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகும். இப்படித்தான் வாழவேண்டும் என்பதற்கு அடித்தளமாக விளங்குவனவாகும். அவர் வாழ்ந்து காட்டிய நெறிகளும், வகுத்துக் காட்டிய கொள்கைகளும் நம்மை வழிநடத்திச் செல்லும் துணைவர்களாகும். அவரது சிந்தனை, செயல் எல்லாமே உலகை உயர்த்தும் உன்னதச் செல்வங்கள். அவற்றையெல்லாம் தொகுத்துச் சொல்கிறது இந்நூல்.

காந்தியடிகளின் வாழ்க்கை, விடுதலை இயக்கத்தில் அண்ண லின் பங்கு, சர்வோதயம், சமுதாய மாற்றங்கள், சத்தியாக்கிரகம், அகிம்சை என்று ஆறு பகுதிகளாகப் பிரித்து அண்ணலின் அற்புதமான கருத்துக்களை ஒன்று திரட்டித் தந்திருக்கிறார் தொகுப்பாசிரியர், இளைய தலைமுறை, இதயத்தில் பதிக்க வேண்டியவை.

—மறைமலை

மல்லிகை முள்

ஆசிரியர்: ராஜ்

வெளியிட்டோர்: சுஜயா
பப்ளிகேஷன்ஸ்

பிளாட் 10, மோபரீஸ் கோர்ட்,

75, மோபரீஸ் சாலை
ஆழ்வார்பேட்டை,
சென்னை 600 018

பக்கம்: 160 விலை: ரூ.30

'வர்ணம்' என்பதில் தொடங்கி 'யாத்திரை' என்பது வரையிலான இனிக்கும் சிறுகதைகள் இருபத்து மூன்றின் தொகுப்பு நூல் இது. இனிய தமிழ், எளிய நடை.

ஒவ்வொரு சிறுகதையும் உள்ளது உள்ளபடியான யதார்த்த மான வாழ்க்கைச் சம்பவங்களோடு, ஒரு கதையைப் படித்துவிட்டு உடனே அடுத்த கதைக்குப் போய் விட முடியாதபடி ஒவ்வொன்றும் நம்மை ஆழ்ந்து சிந்திக்கச் செய்வ தாக உள்ளது. எந்தக் கதையின் தொடக்கமும் அதன் முடிவு இப்படித்தான் இருக்கும் என்று முன்கூட்டியே முடிவெடுக்க விட வில்லை என்பது மற்றொரு சிறப்பு.

கதைகளைப் படிக்கிறபோது நம்மை அறியாமல் நாமே சில கதைகளின் உறுப்பினர்கள் ஆவது போல உணர்கிறோம். சிந்திக்க வைக்கும் சிறுகதைகள், பூரிக்க வைக்கும் புதினங்கள் மலர்வது அருகி வரும் இக்காலத்தில், ராஜ எழுதியுள்ள 'மல்லிகை முள்' ஒரு குறிஞ்சிப் பூவாக எல்லோரையும் எளிதில் கவரும் என்பது திண்ணம்.

—'சோழராஜா'

பேச முடியாமை ஏன்?

ஆசிரியர்: ஜான் முருகசெல்வம்
ஜாய்ஸ் முருகசெல்வம்

வெளியீடு: அலைகள்
வெளியீட்டகம்,
36, தெற்கு சிவன்
கோயில் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 24

பக்கம்140 விலை ரூ.22

குழந்தைகள் பேச இயலாது போய் விடுவது எதனால்? என்ப தற்கான காரணங்களையும், அவற்றை எந்தவகையில், எந்த அளவு நிவர்த்தி செய்யலாம் என்பதையும் விளக்கும் அருமை யான நூல். ஆழ்ந்த ஆய்வும், விளக்கமும் வியப்பூட்டுபவை. ஒவ்வொரு இளம் பெற்றோரிட மும் இருக்க வேண்டிய நூல்.

கீழ்க்காணும் இரண்டு நூல்கள் பாரதி பதிப்பகம் வெளியிட்டவை.

முகவரி
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை 600 017

நூலாசிரியர்:
டாக்டர் சோ. சேசாசலம்

1. பிளாட்டோவின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

பக்கம்: 66 விலை: ரூ.8

கிரேக்கத் தத்துவ ஞானியான பிளாட்டோ உதிர்த்த முத்துக்கள் நூல் முழுவதும் விரவியுள்ளன. அரிஸடாட்டிலின் மாணவரான இவர், வாழ்வாங்கு வாழ்வதற்கான வளமையான கருத்துக்களைத் தந்திருக்கிறார். அவற்றையெல்லாம் அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

2. அரிஸ்டாட்டிலின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

பக்கம்: 65 விலை: ரூ.8

ஏதென்ஸ் நாட்டின் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில். மாவீரன் அலெகசாண்டரின் ஆசிரியர். புரட்சிக கருத்துக்களைப் பொழிந்தவர். அவர் கூறிய அரிய கருத்துக்கள், அவரது வாழக்கைக் குறிப்புடன் நூலில் தரப்பட்டுள்ளது. படிக்க வேண்டிய தொகுப்பு.

- பி.வி. கிரி.

வாழ்வியலில் அறிவியல்

ஆசிரியர்: கார்த்திகேயன்

வெளியீடு: மோகன் புத்தக
நிலையம்
4, வள்ளலார் தெரு,
பத்மநாப நகர்,
சூளைமேடு
சென்னை 600 094

பக்கம்: 128 விலை: ரூ.17

அறிவியலால், கண்டுபிடிக்கப் பட்ட புதிய பல கண்டுபிடிப்புகளால் உலகம் பெரும் பயன் அடைந்து கொண்டிருக்கிறது. இயற்கையில் உள்ள அற்புதங்கள்தான் எத்தனை? இந்நூலில் அறிவியல் மற்றும் இயற்கைச் செல்வங்கள் நமது அன்றாட வாழ்வில் எவ்வளவு பயன் தருகின்றன? விளக்குகிறது இந்நூல். மிகவும் பயனுள்ள தகவல் களஞ்சியம்.

- குமார்.

தமிழரசு
நான்காண்டுச் சாதனைச் சிறப்பிதழ்

தமிழரசு

அடுத்த இதழ்...

மாண்புமிகு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா
அவர்கள்
ஆட்சியின் மாட்சியை
விளக்கிடும் நான்காண்டுச்
சாதனை மலராக
மலரவிருக்கின்றது!

✳ எண்ணம் கவரும் வண்ண முகப்பு!

✳ சிந்தைக்கு விருந்தூட்டும் சிறப்புக் கட்டுரைகள்!

✳ பக்கத்துக்குப் பக்கம் சாதனைப் பூக்கள் மலர்ந்து மணம் வீசும்!

✳ அதிகப் பக்கங்களில் அற்புதச் சிறப்பிதழ்

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927





தமிழ்நாடு அரசின் நான்காண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026
ஆனி: 2 மற்றும் ஆனி: 17
மலர்: 25 இதழ்: 24
மலர்: 26 இதழ்: 1
16.6.1995 - 1.7.1995

விலை ரூபாய் பத்து

26-வது ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' 26-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், அமைச்சர் பெருமக்களின் முக்கிய சொற்பொழிவுகள்— எழுத்தோவியங்கள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரைகள், கதைகள் மற்றும் மாவட்ட மலர்கள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாகத் தமிழரசு விளங்கி வருகிறது. ஆம். படிக்க— பயன்பெற— பாதுகாக்கத் தக்க வகையிலே மிக்க கவனத்துடன் தயாரிக்கப் படுகிறது.

'தமிழரசு' இதழுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சந்தாதாரர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்

ஏழைகளின் துயரினைத் துடைப்பதே என்னுடைய கடமை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், இன்று வரை, மக்கட் பணியே தனது தலையாய கடமை என்பதனை நன்குணர்ந்து, இந்த அரசு உறுதியோடு செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த உண்மையைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக, ஏழைகள், ஆதரவற்றோர், முதியோர், கைம்பெண்டிர், சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்கள் போன்றோரின் துன்பங்களை, துயரங்களை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, அரசு முன்னின்று, முடிந்த வரை தீர்த்து வைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை நாங்கள் கடைப்பிடித்து வருகின்றோம். பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும் கூட, இந்தக் கொள்கையை உங்கள் அரசு சிறிதும் வழுவாமல் பின்பற்றி வர வேண்டும் என்பதில், நானும், எனது அமைச்சரவையும், உறுதியோடு நின்று செயல்பட்டு வருகின்றோம் என்பதை, பெருமிதத்தோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஓர் அரசினையும், அதன் செயல்பாடுகளையும் பற்றிக் குறிப்பிடுகையில், பொதுவாக அரசு இயந்திரம் என்று, பலரும் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இங்கு

இயந்திரம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதை நான் குறை கூறவில்லை. ஆனால், அந்த அரசு இயந்திரத்தை இயக்குபவர்கள், ஓர் இயந்திரமாக, மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும், புரிந்து கொள்ளும் சக்தியின்றி, இயந்திர கதியில் இயங்குவதைத்தான், என்னால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வாக்குகளை அளித்து, தங்களுக்குப் பிடித்தமான அரசினைத் தேர்ந்தெடுத்து, ஆட்சிப்பொறுப்பில் அமர்த்திவிட்டு, தங்களுடைய வாழ்க்கையில் நிலவிக் கொண்டிருக்கும் வறுமையை, வேலையில்லாத் திண்டாட்டத்தை, பொருளாதாரச் சீர்கேட்டினை, மற்றும் எண்ணற்ற அன்றாடப் பிரச்சினைகளை ஓரளவேனும் தாங்கள் தேர்ந்தெடுத்த அரசு, களைய முற்படாதா என்றுதான், சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களும், எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை, நான் நன்கு அறிவேன். அத்தகைய ஏழைகளின் துயரினைத் துடைப்பதைத்தான், என்னுடைய கடமைகளில் முதன்மையானதாகக் கருதுகின்றேன்.

ஆகவே, வருங்காலச் சமுதாயத்திற்கு உதவக்கூடிய வகையில், தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவது, உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகை செய்வது, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைப்பது போன்ற கடமைகள், நீண்ட காலத் திட்டங்களாகவே பெரும்பாலும் இருக்கின்றன.

இவை ஓர் அரசின் இன்றியமையாத கடமைகளாக இருப்பினும் கூட, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அவர்களின் பல்வேறு இன்னல் களையும், உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டும் என்ற மனிதாபிமானக் கடமையினை எந்த ஒரு மக்கள் அரசும் புறக்கணிக்கக் கூடாது என்ற கொள்கையைத்தான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். ஆகிய உத்தமத் தலைவர்கள், தங்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்றி வந்தார்கள். அந்தப் புனிதத் தலைவர்களிடம் உள்ள கோட்பாடுகளுக்கு ஏற்பவே, உங்கள் சகோதரியின் இந்த மக்கள் அரசும் இயங்கி வருகின்றது என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-3
என்னும் நூலிலிருந்து.

வள்ளுவர் வழியில் வளம் பெறும் அரசு

மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு'

—என்பார் திருவள்ளுவர்.

உண்மையான ஆட்சித் தலைவர் அரசுக்குப் பொருள் வருகின்ற வழிகளை இயற்றிப் பொருள்களைத் திரட்டுதல், அவ்வாறு திரட்டப்படும் பொருட்களை ஒருங்கு சேர்த்தல்; அப்படிச் சேர்த்த பொருட்களைப் பாதுகாத்தல்; பின்பு,அவற்றை நாட்டு மக்களின் நலனுக்காக மதி நுட்பத்தோடு பயன்படுத்துதல் ஆகியவற்றில் வல்லவராக இருக்க வேண்டும். இவையே,தமிழ்மறை கண்ட சான்றோர் திருவள்ளுவர் மேற்காணும் தமது குறட்பாவில் தொகுத்துரைத்துள்ள எக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஆட்சி நெறியின் அடிப்படைத் தத்துவங்களாகும். இவை இன்றைக்கும் கூட அப்படியே பொருந்தி நிற்கின்றன.

நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக அரிய முன்னோக்குடனும் பேராற்றலுடனும், பெருந் திறலுடனும் ஆற்றிவரும் பணிகளால் இந் நாட்டின் மிகப்பெரும் தன்னிகரற்ற ஆட்சித் தலைவராக உயர்ந்து விளங்குகின்றார். அவருடைய தண் குடைக்கீழ், தமிழகம் தலைசிறந்து திகழுகின்றது.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான இவ்வரசு, 1991 ஜூனில் பதவியேற்றது. அந்நாளில் நமது அரசு மிகக் கடுமையான நிதி நெருக்கடி நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அன்றைய நிதிநிலையின்படி, அரசு எதிர்கொள்ள வேண்டியிருந்த மொத்தப் பற்றாக்குறை (total deficit) ரூ.1220 கோடி ஆக இருந்தது. நம்முடைய அன்றைய ஆண்டுத் திட்ட ஒதுக்கீடோ ரூ.1600 கோடி, ஆனால், மொத்தப் பற்றாக்குறையோ ரூ.1220 கோடி; நம்முடைய திட்ட ஒதுக்கீட்டை எய்த இயலாமற் போகும் என்றும், மாநிலம் நிதிவகையில் மீள முடியாத கடும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுவிடும் என்றும் அச்சம் எழுந்தது. அப்போது இந்த அரசு, நமது மாநிலத்தின் நிதி நிலையை மேம்படுத்துவதற்காக உறுதியான பல நடவடிக்கைகளை எடுத்தது.

1995-96-ஆம் ஆண்டிற்கு வரி இல்லா வரவு- செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்து, வரலாற்றுப் புகழ் வாய்ந்த சாதனையை எய்தியது.

1995-96-ஆம் ஆண்டில் வறியவர் நலன் காக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ.1960.93 கோடியாகும். இச்சீரிய முயற்சிகளை நாடும் உலகும் பாராட்டியுள்ளன.

இதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் நமது ஒட்டு மொத்த நிதிநிலைமை குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பட்டுள்ளது. இறுதியில், இந்த ஆண்டில், அதாவது 1995-96-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், இந்தப் பற்றாக்குறையை ரூ.175.50 கோடியாகக் குறைக்க முடிந்துள்ளது.

இவ்வாறு மாநிலத்தின் நிதிநிலைமையை மிகச் சிறப்பான வகையில் திறம்பட்ட முறையில் சமாளித்து வந்ததன் வாயிலாக 1980 -81-ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதன் முதலாக இப்போதுதான். அதாவது, 1995- 96-ஆம் ஆண்டிற்கு "வரியில்லா வரவு செலவுத் திட்ட அறிக்கையை" இவ்வரசு தாக்கல் செய்ய முடிந்துள்ளது. இந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த சாதனையை எவ்வாறு எய்த முடிந்தது? "மக்கள் மீதான வரிச்சுமை மிகமிகக் குறைவாக இருக்க வேண்டும், அதே சமயம் வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் நடைபெற வேண்டும்" என்று இவ்வரசு வகுத்துக் கொண்ட கொள்கையின் விளைவாகவே இது சாத்தியமாயிற்று.

பல்வேறுபட்ட நிதி இடர்ப்பாடுகள் நிலவிய சூழ்நிலையிலும், இந்த அரசு, தொடர்ந்து ஒவ்வோராண்டிலும் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு இலக்கை விஞ்சித் திட்டச் செலவைச் செய்து சாதனை நிகழ்த்தியுள்ளது. அதே போன்று, இவ்வரசு சமூக நலப்பணித் துறைகளுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை எப்பாடுபட்டாயினும் உரிய அளவிற்குக் குறையாமல் செய்து காத்து வந்துள்ளது.

1991 -92-ஆம் ஆண்டில், நமது மாநிலத்தின் திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.1065 கோடி; ஆனால், நாம் அந்த ஆண்டில் திட்டப் பணிகளுக்காக ரூ.1725 கோடி செலவிட்டுச் சாதனை புரிந்துள்ளோம். இதேபோன்று, 1992-93-இல் திட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடி, நாம் எய்திய சாதனை ரூ.1935 கோடி. 1993-94-ல் ஏற்பளித்த திட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி, எய்திய சாதனை ரூ.2135 கோடி. 1994 -95-இல் நாம் வரையறுத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவு ரூ.2750 கோடி, இது 1993-94-ஆம் ஆண்டின் அளவைக் காட்டிலும் 30.89 சதவீதம் அதிகமாகும். இந்த ஒதுக்கீட்டளவையும் விஞ்சி இதில் எய்திய சாதனைரூ.2850 கோடியாகும். 1995- 96-இல் மாநிலத்தின் ஆண்டுத்திட்ட ஒதுக்கீடு ரூ.3200 கோடி என்று வரையறுக்கப்பட்டது. 1995 -96-இல், திட்ட ஒதுக்கீட்டினை முழு அளவில் எய்த உறுதி செய்யும் வகையில், வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3250.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறுபோல, உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்.

-திருவள்ளுவர்

இவ்வாறாக, நமது மாநிலம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பொன்னான நான்காண்டுக்கால ஆட்சியில் உயர் வளர்ச்சி வேகத்தை எட்ட முடிந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை நாம் எவ்விதக் குறையுமின்றி நிறைவேற்றும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். பல்வேறு மாநிலங்கள், தங்களுடைய எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை எய்துவதற்கு இயலாமல் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருக்கும் இடர்ப்பாடான சூழலில், நாம் நமது இலக்குகளை முழுமையாக எய்தவிருக்கின்றோம். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், 1994- 95-ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டின் திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரியைக் காட்டிலும் உயர்ந்துள்ளது. 1994 -95-இல்

நபர்வாரித் திட்ட ஒதுக்கீட்டின் தேசிய சராசரியளவு ரூ.433.20 ஆக இருக்க, தமிழ் நாட்டின் நபர்வாரித் திட்ட ஒதுக்கீடு அதை விட அதிகமாக, அதாவது ரூ.492.30 ஆக இருந்தது.

வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங் களைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு தனிச் சிறப்பான சாதனையைப் புரிந்துள்ளது. இந்தத் திட்டங்கள் யாவும் மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டில் மிகவும் குறிப்பிடத்தக்க அளவு பகுதியைக் கொண்டவை.

1994- 95-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு, வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங் களுக்கான கூடுதல் மத்திய நிதியுதவியாக ரூ.671 கோடியைச் செலவிட்டது. இந்திய மாநிலங்கள் அனைத்திலும், நமது மாநிலம் செலவிட்ட இத்தொகையே மிகப் பெரிது ஆகும். இவ்வாறாக, வெளிநாட்டு உதவியை வழங்கும் நிறுவனங்களின் முகவரமைப்புகள், பெரிதும் விருப்பத்துடன் வந்து செயல்பட விழையும் மாநிலமாக நமது மாநிலம் ஆகிவிட்டுள்ளது. இவ்வகையில் இங்கு இரு பெரிய திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கு வதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடந்து முடிந்துள்ளன. இவற்றில் ஒன்று, புதிய வீராணம் திட்டம் ஆகும். இதற்காகும் செலவு ரூ.1638 கோடி, பிறிதொன்று, நீர் ஆதாரங் களை நிலைப்படுத்தும் திட்டம் ஆகும். இதற்காகும் செலவு ரூ.1140 கோடி.

இவ்வாறாக, மிக இன்றியமையாத அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளிலும், சமூகப் பணித் துறைகளிலும் உயர் அளவிற்கு முதலீடுகள் செய்யப்படுவதற்கான அனைத்து வாயில்களையும் இவ்வரசு பயன்படுத்தி வருகிறது எனலாம்.

நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகளைச் சரிக்கட்டல் ஆகியவை தொடர்பாக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலைமையை மிக மோசமாகப் பாதித்துவிடக் கூடுமோ என்ற கடுமையான அச்சம் தோன்றியபொழுது, மிகவும் முக்கியமான சமூகப்பணித் துறை களுக்கான ஒதுக்கீடுகள் உரிய அளவிற்குச் சிறிதும் குறையாதிருக்கும் வகையில், இந்த அரசு தனது நடவடிக்கைகள் மூலம் உறுதி செய்தது. இதற்கென வறியவர் நலன் காக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம், மத்திய அரசு மேற்கொண்ட பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகளை ஒட்டி எழுந்த கடுமையான சமூகப் பதட்டநிலைமை, வறியவர்களைப் பாதிக்காமல் அரண்போல் தடுத்துக் காத்தது.

1995- 96-ஆம் ஆண்டில் வறியவர் நலன் காக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ.1960.93 கோடியாகும். டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமை யிலான தமிழ்நாடு அரசின் இச்சீரிய முயற்சிகளை நாடும் உலகும் ஒருங்கே பாராட்டியுள்ளன.

சிறுசேமிப்புத்துறை இம்மாநிலத்தில் பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்களின் முக் கியத்துவம் பற்றிப் பிரச்சாரம் செய்து வருவதுடன், அவற்றைச் செயற்படுத்துவதைக் கண்காணித்தும் வருகிறது. மத்திய அரசு, சிறுசேமிப்புத் திட்டங்களின் நிகர வசூலில் 75 சதவீதம் தொகையை, இம்மாநிலத்தில் பல்வேறு திட்டப் பணிகளைச் செயற்படுத்து வதற்காக இம்மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது.

கண்ணோட்டம் என்று சொல்லப் படுகின்ற மிகச் சிறந்த அழகு இருக்கும் காரணத்தால்தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது

-திருவள்ளுவர்

வளர்ச்சிப் பணிகளுக்காகச் சிறுசேமிப்பு களைத் திரட்டுவதில் தமிழ்நாடு மிகமிகச் சிறப்பாகப் பணிபுரிந்திருக்கிறது. 1994 -95-ஆம் ஆண்டில் நமது மாநிலம் சிறுசேமிப்பு வசூலில் மிக விரைந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

சிறு சேமிப்பு வசூல் கடந்த நான்காண்டு களில் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது.

வள்ளுவர் காட்டிய வழியில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் வளமும் நலமும் பெற்று வருகிறது. தமிழக அரசு என்பது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. ❋

ஆண்டு	இலக்கு	பெருமொத்த வசூல்	நிகர வசூல்	மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்
		(ரூபாய் கோடியில்)		
1991 -92	550.00	1381.41	579.71	349.75
1992 -93	550.00	1710.70	614.89	401.58
1993- 94	590.00	2211.66	621.47	331.36
1994- 95	600.00	2647.09	674.20	569.91

சட்டத் துறையின் சாதனைப் பணிகள்

மாண்புமிகு சட்ட அமைச்சர்

திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

"சட்டம்" என்பது நாகரிக் சமூகத்தின் அடையாளம். மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள உருவாக்கியிருக்கும் ஏற்பாடுதான் சட்டம்" என்று பேரறிஞர் **அண்ணா அவர்கள்** கூறினார்கள்.

சட்டம் என்பது மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தும் கருவி. முறைப்படி எல்லாம் நடக்க வேண்டும் என்பதற்கான வழிவகைகளைச் சட்டம்தான் தருகிறது.

ஜனநாயகத்தின் மிகமுக் கியமான பொறுப்பு சட்டத் துறையிடம்- நீதித் துறையிடம் விடப்பட்டுள்ளது.

இப்பொறுப்பினை உணர்ந்து செயல்படவேண்டிய இத் துறைகள் சமூக நீதிக்கும் இடம் தரவேண்டும். குற்றமிழைப்போர் திருந்திடவும், தண்டனை பெறு வோர் மறுவாழ்வு பெறவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

புரட்சித்தலைவி அரசின் குறிக்கோள்

மேலே கூறப்பட்ட சீரிய குறிக்கோள்களைக் கொண்டு சட்டம் நீதித் துறைகளின் செயல் பாடுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடத்திவருகிறது.

தமிழகத்தில் சட்ட அலுவலர்களின் கூட்ட மைப்பு மிகவும் சிறந்த முறையில் அமைந்துள் ளது. மாநிலத்திலுள்ள 700 நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு வழக்குரைஞர் என்ற அளவில் அரசு சட்ட அலுவலர்களை அமர்த்தி யுள்ளது.

ஏழை எளியவர்களுக் காக இலவசச் சட்ட உதவி வழங்கிட, தமிழ் நாடு இலவசச் சட்ட உதவி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

"நீதி கிடைக்கவேண்டும், அதுவும் தாமதமின்றி, விரை வாக வழங்கப்பட வேண்டும். செலவின்றி எளிய முறையில் ஏழையும் பெறுகின்ற வகையில் நீதி வழங்கப்பட வேண்டும்" என்பதே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின்- மக்கள் அரசின் குறிக்கோள் ஆகும்.

இந்தக் குறிக்கோளுக்கு ஏற்ப நீதிமன்றங்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீதி நிருவாகம் என்ற கட்ட மைப்பு- குற்றங்களை ஆய்ந்து, குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்யும் பணியை நிறை வேற்றிவரும் காவல்துறையும், இக்குற்றங்களைக் குறித்து வழக்குகளைத் தெள்ளத் தெளிய எடுத்துரைத்து நீதிமன்றங்களில் வழக்காடும் அரசு வழக்குரைஞர் களையும், குற்றவாளிகளைத் தண்டித்து நிரபராதிகளைப் பாதுகாக்கும் பணியினை நீதி மன்றங்களும், குற்றவாளிகள் என்று நிர்ணயிக்கப்பட்ட நபர் களைச் சிறையில் வைத்து, தண்டனையை நிறைவேற்றும் பணியினைச் சிறைத்துறையும்— ஆகிய இந்நான்கும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த அமைப்புகளைத் தன்னகத்தே



கொண்டதாகும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்ச ராகப் பொறுப்பேற்ற காலந் தொட்டு கடந்த நான்காண்டு களில் இத்துறை பல்வேறு ஈடு இணையற்ற சாதனைகள் படைத்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில் 28-ஆக இருந்ததை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் முயற்சியால் 32-ஆக உயர்த்த மைய அரசு இசைந்தது. இன்றைய நிலவரப்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் 29 நீதிபதி களில் 23 பதவிகளில் நீதிபதிகள் உள்ளனர்.

மாவட்ட முன்சீப் பதவி களில் பணியாளர்களை நிய மிக்கத் தமிழ்நாடு தேர்வாணைக் குழு அவசரக் கால நடவடிக் கைகள் மேற்கொண்டுள்ளது. ஏனைய காலியாகவுள்ள பதவி களை நிரப்பவும், உயர்நீதிமன்ற மும், அரசும் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு விவரங்களை நோக்கும்போது—

1985-86-ஆம் ஆண்டில் ரூ.17.20 கோடியாக இருந்தது,

1989-90-ஆம் ஆண்டில் ரூ.29.70 கோடியாக அமைந் திருந்தது.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.40.19 கோடியாகவும்,

1994-95-ஆம் ஆண்டில் ரூ.64.95 கோடியாகவும்,

1995-96-ஆம் ஆண்டில் ரூ.69.80 கோடியாகவும் உயர்த்தி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு சாதனைபடைத்துள்ளது. இதே போல வேறுபல பணிகளுக்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்றப் பிறகு நான்காண்டுகளில் இதுவரை காணாத அளவில் 66 நீதிமன்றங்களைத் துவக்கிச் சாதனை புரிந்துள்ளது.

புதியதாக அமைக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களில் தருமபுரி மற்றும் பெரியார் நீங்கலாக, ஏனைய அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் புதிய மாவட்ட நீதிமன்றம் மற்றும் குற்றவியல் தலைமை நீதிமன்றங்களை அமைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் தலைமையிலான அர சையே சாரும்.

அதிலும், குறிப்பாக, வரு வாய் மாவட்டம் பிரிக்கப்படும் போதே, மாவட்ட நீதிமன்றமும் பிரிக்கப்பட்டு, புதிய மாவட்டத் தில் மாவட்ட நீதிமன்றமும் தோற்றுவித்தல் என்ற கோட் பாடு இவ்வரசின் பிறிதொரு சாதனையாகும்.

இதன் அடிப்படையில், தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பொழுது, விழுப்புரத்தில் மாவட்ட செசன்சு நீதிமன்றம் மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களை அமைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மலைவாழ் மற்றும் பழங்குடி மக்கள் பயனடையும் வகையில் கோடையில் ஒரு நீதிமன்றமும், கோத்தகிரியில் ஒரு நீதிமன்றமும் அமைக்கப்பட்டுள்ளன. பின்

தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் ஒரு முன்சீப் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

சந்தன மரக் கடத்தல் குறித்த வழக்குகளை விசாரிக்க வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு நீதிமன்றமும், சேலத்தில் ஒரு நீதிமன்றமும் அமைக்கப்பட்டன.

சிலை திருட்டு வ்ழக்குகளை விசாரிக்க திருவில்லிபுத்தூரில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்திற்கு, உயர்நீதிமன்ற ஒப்புதலுடன், அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதக் குற்றங்களைத் தடுக்க ஐந்து "தடா" நீதிமன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வழக்காடும் மக்களின் துயர் துடைக்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், உயர்நீதிமன்ற இசைவுடன், 43 குற்றவியல் நீதிமன்றங்களை உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாகச் செயல்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். இதற்கான உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முன்னோடித் திட்டம்

தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 11 இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதனைக் குறைக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய 1987-இல் மைய அரசு நீதிபதி மாலிமத் தலைமையில் ஒரு குழுவினை நியமித்தது.

இக்குழு, பல்வேறு நீதிமன்றங்களை நேரில் ஆய்ந்தறிந்து பல்வேறு அம்சங்களைக் கொண்ட பரிந்துரைகளை மைய அரசின் முன் வைத்தது.

இதற்கான (நீதிமன்ற அதிகார வரம்பினை உயர்த்த) சட்டத் திருத்தங்கள் 1995-96-ஆம் ஆண்டிற்கான 'பட்ஜெட்' கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு சட்டமன்றத்தினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும், உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி திரு கே.ஏ. சுவாமி அவர்கள், "Pilot Project Scheme" என்ற திட்டத்தை 17.10.1994 அன்று அமலாக்கி உள்ளார்கள். இதன்படி, தருமபுரி, நீலகிரி, சிதம்பரனார், நாகை காயிதே மில்லத், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராசர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள வழக்குகளின் தேக்கத்தை இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டடங்கள்
நீதிபதிகள் குடியிருப்புகள்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெருமுயற்சியால் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல், நீதித்துறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் என்ற இருவகைப் பணிகளுக்கான செலவினத்தைத் "திட்ட இனத்தின்" கீழ் கொணர்ந்து 1993-94-ஆம் ஆண்டு முதல் செயலாக்கி வருகிறது.

1993-டிசம்பர் திங்கள் முதல் இன்றுவரை, சேலம், இராமநாதபுரம், கோபிசெட்டிபாளையம் உட்பட 14 நீதிமன்றக் கட்டடங்கள் ரூ.20 கோடி செலவில் கட்டவும், நீதித்துறை அலுவலர்களுக்காக 63 குடியிருப்புகளை ரூ.5 கோடி செலவில் கட்டவும், 77 திட்டங்கள் ரூ.25 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெறுகின்றன.

சென்னை உயர்நீதிமன்றத்திற்கென ரூ.4 கோடி செலவில் 'இணைப்புக் கட்டடம்' 1992-இல் கட்டி, அதனை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 1992 பிப்ரவரித் திங்களில் துவக்கி வைத்தார்கள்.

நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ், 1995-இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேசிய தகவல் தொடர்பு மையம் கணணி தொடர்புகளை நிறுவியுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற இணைப்புக் கட்டடம் மற்றும்

படிப்பு

நாம் எவ்வளவு படிக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் நமது அறியாமை நம்மை விட்டு நீங்குகிறது.

–ஷெல்லி

முன்னேற்றம்

முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும் அடுத்தபடியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.

–சுவாமி விவேகானந்தர்

நீதிபதிகளின் அறைகளைக் குளிர்ப்பதன வசதி செய்வதற்கு அரசு ஆணையிட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 'பேக்ஸ் வசதி' 'மின்னணுத் தட்டச்சு இயந்திரம்' 'ஜெராக்ஸ்' இயந்திரங்கள் போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சட்ட அலுவலர்களின் கூட்டமைப்பு மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளது. மாநிலத்திலுள்ள 700 நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு வழக்குரைஞர் என்ற அளவில் இவ்வரசு சட்ட அலுவலர்களை அமர்த்தியுள்ளது.

நீதித்துறை
அலுவலர்களுக்கான
சலுகைகள்

நீதித்துறை அலுவலர்களுடைய நீண்ட நெடுநாள் கோரிக்கைகளை இவ்வரசு கனிவுடன் அணுகி, மாவட்டங்களில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் பதவிகள், மாவட்ட நீதிபதிகள் நிலை 2 பதவித் தரத்தில் மாவட்டக் கூடுதல் நீதிபதிகளாக நிலை உயர்த்த கொள்கை அளவில் அரசு இசைந்துள்ளது.

உயர்நீதிமன்றம் நீங்கலாக எஞ்சியுள்ள நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக உயர்த்தியும், இவர்களுக்குச் சட்டப் புத்தகங்கள் வாங்க ரூ.49 இலட்சம் ஒதுக்கியும், சென்னை மாநகரிலுள்ள நீதித்துறை அலுவலர்கள் பயனுக்கென 3 வேன்களை அனுமதித்தும் அரசு சலுகைகள் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு நீதித்துறை சார் பணியாளர்கள் சங்கம், தலைமை எழுத்தர் முதலிய பதவிகளை மேல்நிலைக்கு உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையினை 1976-ஆம் ஆண்டு அரசுக்கு வைத்தது.

நீண்டகாலமாக நிலுவையில் இருந்த இக்கோரிக்கையினைத் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலித்து, 364 தலைமை எழுத்தர் போன்ற பதவியினைக் கண்காணிப்பாளர் பதவிகளுக்கும், 500 இளநிலை உதவியாளர் பதவிகளை உதவியாளர் பதவிகளுக்கு நிலை உயர்த்தி (upgrade) செய்து, 1992-93 மற்றும் 1993-94 ஆகிய இரு ஆண்டுகளில் ரூ.54.44 இலட்சம் கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்களுக்கான ஓய்வுக் காலப் பயனை ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.60 ஆயிரமாக உயர்த்த சட்டத் திருத்தங்களை அரசு வெளியிட்டுள்ளது. வழக்குரைஞர்களின் நல நிதிக்கு ரூ.5 இலட்சம் மானியம் வழங்கியும், சென்னை வழக்குரைஞர்களின் சங்க கட்டட மேல்தளம் கட்ட ரூ.6.50 இலட்சம் மானியமாகவும் அரசு வழங்கியுள்ளது.

அரசு வழக்குரைஞர்களின் ஊதியத்தை உயர்த்தியும், அனைத்து அரசு வழக்குரைஞர்களின் (அரசுத் தொடர்பு வழக்குகள்) பணிகளைக் கண்காணிக்க ஒரு தனி இயக்குநரகத்தையும், 7 உதவி இயக்குநர்களையும் நியமித்துள்ளது.

35 உதவி அரசு வழக்குரைஞர்கள் நிலை 2 லிருந்து நிலை 1-க்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளனர். நெடுநாட்களாக நிலுவையிலிருந்த 25 உதவி அரசு வழக்குரைஞர்கள் பதவிகள் அண்மையில் நிரப்பப்பட்டுள்ளன.

Directorate of Prosecution சிறப்பாகச் செயல்பட திரு.பெருமாள் ஐ.பி.எஸ்.காவல் துறைத் தலைவர் தலைமையில் அண்மையில் துவக்கப்பட்டுள்ளது.

ஏழை எளியவர்களுக்கான
இலவச சட்ட உதவி மையம்

அரசியலமைப்புச் சட்டப்படி ஏழை எளியவர்களுக்கான இலவச சட்ட உதவி வழங்குவது அரசின் தலையாய கடமையாகும். இதனைச் சிறப்பாகச் செயல்படுத்த, தமிழ்நாடு இலவசச் சட்ட உதவி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரவும், ஏழை எளியவர்கள் இலவசச் சட்ட உதவி பெறவும், கணவன் மனைவி வழக்குகள், மோட்டார் வாகன விபத்து வழக்குகளில்

மிக விரைவில் தீர்வுகாணவும் வழியேற்பட்டுள்ளது.

இதற்கான மானியத்தினைப் படிப்படியாக உயர்த்தி, தற்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் **1994-95-ஆம் ஆண்டில் ரூ.1** கோடி அனுமதித்துள்ளார்கள்.

சிறைத்துறை சீர்திருத்தங்கள்

"சிறை" என்றால் குற்றவாளிகள் அடைக்கப்படும் இடம் என்றும், அவர்களுக்கு மனிதாபிமானமற்ற வகையில் உடலை வருத்தும் தண்டனைகள் வழங்கப்படும் இடம் என்றும் வழக்கில் இருந்து வந்தது.

இதனை மாற்றி, 'சிறைச்சாலை' என்பது குற்றவாளிகள் திருந்தி, நல்ல மனிதர்களாக மாற ஒரு சமூகக்கூடமாக மாறி வருகிறது. இவர்கள் வெளியே வந்து சமூகத்தில் -சமுதாயத்தில் சேர்ந்துவாழ பல்வேறுதிட்டங்கள் கொண்டுவந்து, பல சிறைவாசிகள் பயனடைந்து வருகின்றனர்.

அனைத்துச் சிறைகளிலும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அனைத்துச் சிறைவாசிகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பிறந்தநாளில், பயிற்சி பெற்ற சிறைவாசிகளுக்கு உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், மிதிவண்டி ரிக்சா, சலவை வண்டி, மாவு அரைக்கும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

சிறுதொழில் பயிற்சி பெற்ற சிறைவாசிகளுக்கு அருகிலுள்ள தொழிற் பயிற்சிப் பள்ளி முதல்வரால் சிறையிலேயே தேர்வு நடத்தி, சான்றிதழ் வழங்கியதால், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, உதவிபெற ரூ.50 ஆயிரம் ஒதுக்கப்பட்டு இதுவரை **200** பேர் பலன் பெற்றுள்ளனர்.

சிறைச்சாலையில் உள்ள தொழிற்கூடங்களில் மரச் சாமான்கள், துணிகள், சோப்பு, அரக்கு, பினாயில், காலணி போன்றவையும் தயாரிக்கப் பட்டு, அதன்மூலம் சிறைவாசிகள் வருமானம் ஈட்டியும் வருகின்றனர்.

அனைத்துச் சிறைகளிலும், ஆசிரியர்கள் 'முதியோர் கல்வி' கற்பிக்கிறார்கள். மேற்படிப்பு படிப்போருக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படுகிறது. நூலக வசதி, பொழுதுபோக்கு வசதி ஆகியவையும், நன்கொடையாளர்களால் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில் இத்துறை கடந்த நான்காண்டுகளில் மாபெரும் சாதனைகள் புரிந்துள்ளது. மேலும் சாதனைகள் தொடர மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வழிகாட்டுதலில் இத்துறை தொடர்ந்து தொய்வில்லாமல் செயலாற்றும் என்பது திண்ணம்.

*

புத்தகசாலை வேண்டும்!

மனிதரெலாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்

இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை.
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலைவேண்டும் நாட்டில் யாண்டும்.

—பாவேந்தர் பாரதிதாசன்

வருவாய்த்துறையின் பெருமைமிகு சாதனைகள்!

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம்

இந்த நான்காண்டுக் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்த் தரணிக்கு ஆற்றியுள்ள பணிகள் அளவற்றவைகளாகும். குறிப்பாக, நம் வருவாய்த்துறைப் பணிகள், அவர் வழிகாட்டுதலால் புகழ்பெற்றுள்ளன.

அரசின் நலத் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடையவும், பொதுமக்கள் தங்களது தேவைகளை உடனுக்குடன் எளிதில் பூர்த்தி செய்து கொள்ளவும், மற்றும் நிர்வாக நலன் கருதியும், அளவில் பெரிதாக உள்ள மாவட்டங்கள், கோட்டங்கள், மற்றும் வட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் **1991 ஜூலைத் திங்கள் முதல் 1995** மே திங்கள் வரை பிரிக்கப்பட்ட, தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் விவரம் வருமாறு:

1. தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களாகவும்,

2. தென்னார்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

3. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் வருவாய் கோட்டம், திருக்கோவிலூர் மற்றும் கள்ளக்குறிச்சி வருவாய்க் கோட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4. மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி வட்டங்களைச் சீரமைத்து, புதியதாகப் பேரையூர் வட்டமும்

5. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து, புதியதாக சங்கராபுரம் வட்டமும்,

6. தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களைச்

நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாகப் புடவை, வேட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் ஆண்டுதோறும் பயன் பெற்று வருகின்றனர்.

நலிந்த குடும்பத்தினருக்கு நிதி உதவி செய்யும் நோக்கத்துடன், அரசு 'தமிழ்நாடு நலிந்தோர் நலத் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.

சீரமைத்து, புதியதாகப் போச்சம்பள்ளி வட்டமும் அமைக்கப்பட்டுள்ளன.

7. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூர் வட்டத்தினை இரண்டாகப் பிரித்து கடலாடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும்

8. தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்திலுள்ள உள்வட்டங்களைச் சீரமைத்து பெரியமுத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய உள்வட்டமும்,

9. முதுகுளத்தூர் வட்டத்தில் மேலக் கொடுமலூர், மற்றும் காக்கூர் ஆகிய இரண்டு உள்வட்டங்களும், கடலாடி வட்டத்தில் அப்பனூர் எஸ். தரைக்குடி ஆகிய இரண்டு உள்வட்டங்களுமாக கூடுதல் நான்கு உள் வட்டங்களும் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

வருவாய்த்துறை
அலுவலர்களுக்குப் பயிற்சி

வருவாய்த்துறை அலுவலர்கள் மேலும் திறம்பட செம்மையாகப் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு நிர்வாகத்தில் பயிற்சி அளிக்கப் படல் வேண்டும் எனவும், இவ்வாறான பயிற்சி அவர்களது திறமையை, மேலும் வளர்த்துக் கொள்ளுவதற்கும், அடிப்படையிலே மாற்றத்தை உருவாக்குவதற்கும், உறுதுணையாக அமையும் எனவும் கருதிய அரசு, வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான வழிமுறைகளை, அரசுக்குப் பரிந்துரைப்பதற்கு என ஒரு குழுவை அமைத்தது.

கிராம நிர்வாக அலுவலர்கள்

கிராம நிர்வாக அலுவலர்கள் மேம்பாட்டுக்காக மலைப்பிரதேசத்தில் பணியாற்றிவரும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 25 அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் கட்ட உத்தரவிடப்பட்டது. கடந்த 14.11.1980-இல் பணியிழந்தபின் தகுதியின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர்களாகப் பணியேற்று, 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்யாது ஓய்வுபெறும் கிராம நிர்வாக அலுவலர்களின் தேர்வுகளில், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு மட்டும் அவர்களது பணிக்காலத்தை அவர்கள் மீண்டும் கிராம நிர்வாக அலுவலர்களாகப் பணியேற்ற தேதியிலிருந்து கணக்கிடுவதற்குப் பதிலாக அவர்கள் பணியிழந்த நாளான 14.11.1980 லிருந்து அவர்கள் பணி ஓய்வு பெறுகின்ற நாள்வரை கணக்கிட்டு, குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

1. கிராம நிர்வாக அலுவலர்கள் கட்டியுள்ள பிணை வைப்புத்தொகை நீண்ட கால வைப்புத் தொகையாக மாற்றப் பட்டுள்ளது.

2. கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கோட்டைப் பகுதியிலும் மற்றும் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் ரூ.825-1200 என்ற ஊதிய விகிதத்தில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஏனைய கிராம நிர்வாக அலுவலர்களைப் போன்ற அனைத்துத் தகுதிகளும் பெற்றிருந்தால் அவர்களுக்கும் ஏனைய கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போல ரூ.975-1660 என்ற ஊதிய விகிதத்தில் அவர்களது ஊதியம் மாற்றியமைக்கப்படுகின்றது.

3. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயணப்படி ரூ.40 லிருந்து ரூ.50 ஆக 1.11.1993 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

4. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலக வாடகை, பராமரிப்பு மற்றும் ஆண்டு ஆய்வுக் கணக்குச் செலவு என்று ஆண்டொன்றுக்கு மொத்தமாக ரூ.1,200 வழங்கப் படுகிறது.

இது தவிர, அரசு கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கக் கட்டடங்கள் கட்டுவதற்குக் கேட்கின்ற நிலத்தின் தன்மைக்கு ஏற்ப, மாவட்ட ஆட்சியர்கள் முடிவு எடுக்கலாம்.

சென்னையில் பணியாற்றும் 53 கிராம கர்ணங்கள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அனைத்துத் தகுதிகள் பெற்றிருந்தால் அவர்களை கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கலாம்.

கிராம உதவியாளர்கள்

1.1.1995 முதல் மதிப்பூதியம் ரூ. 745 ம், பஞ்சப்படி ரூ.80-ம், கூடுதல் பஞ்சப்படி ரூ.246-ம் (33 சதவிகிதம்), இடைக்கால நிவாரணமாக ரூ.40 ம், மொத்தம் ரூ.1,111 ஆகவும் கிராம உதவியாளர்களுக்கு வழங்கப் படுகிறது.

கிராம உதவியாளர்கள், பணியில் இருக்கும்போது இறந்தால், குடும்ப நலநிதி ரூ.40,000 லிருந்து ரூ.60,000 உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படுவதை மற்ற அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் சம்பளப் பட்டியலில் வழங்க ஆணையிடப்பட்டது.

தலையாரி, நீர்கண்டி, வெட்டி என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்ததை மாற்றி அனைத்துத் தரப்பினரையும் கிராம உதவியாளர் என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

அனைத்துக் கிராம உதவியாளர்களுக்கும் அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன.

பண்டிகை முன்பணம் ரூ.200 லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சைக்கிள் வாங்க முன்பணம் ரூ.600 லிருந்து ரூ.800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பெண்களையும் கிராம உதவியாளர்களாக நியமிக்கலாம் என்று ஆணையிடப் பட்டுள்ளது.

பகுதிநேர கிராம உதவியாளர்கள் முழு நேர அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

வறட்சி நிவாரணத் திட்டம் 1995-96

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தன்னிகரற்ற தலைமையிலான இந்த அரசு, 1991-92 முதல் 1993-94 வரை, மொத்தம் ரூ.3693 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாநிலத்தில் கீழ்க்கண்ட குடிநீர்ப் பற்றாக்குறை நிவாரணத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

☆ 1000 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்
☆ குடிநீர்க் குழாய்களை விரிவுபடுத்துதல்.
☆ திறந்தவெளிக் கிணறுகளை அமைத்தல்.
☆ இதர குடிநீர்ப் பற்றாக்குறைத் திட்டங்கள்

கடந்த 1994 நவம்பர் - டிசம்பரில் ஏற்பட்டப் புயல்/வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. புயல் வெள்ளத்தினால் இறப்புற்ற நபர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.10,000 தமிழக அரசின் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளின் சீரமைப்பிற்காக முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குத் தலா ரூ.250-ம் வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகருக்கு மட்டும் ரூ.600-ம் மற்றும் 300-ம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

அரசு ஏற்கெனவே 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள், கடலோரப் பகுதியிலும் மற்றும் மலைப்பகுதியான நீலகிரி மாவட்டத்திலும் கட்டி முடித்துள்ளது. மேலும், 69 புயல் பாதுகாப்பு இல்லங்களை வெளிநாட்டு நிதி உதவியுடன் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1. சாலைகள் பராமரிப்பு, 2. பாசனக் கால்வாய்கள், பாசன ஏரிகள் பராமரிப்பு, 3. பஞ்சாயத்து டவுன் பஞ்சாயத்துச் சாலைகள், நீர்த்தேக்கத் தொட்டிகள் சிறுபாசனக் கால்வாய்கள் பராமரிப்பு, 4. மாநகராட்சிக்குச் சொந்தமான சாலைகள், எம்.எம்.டி.ஏ. காலனிகளின் சாலைகள் பராமரிப்புகள், 5. மீன் துறைக்குச் சொந்தமான படகுகள் பராமரிப்புக்காக மொத்தம் ரூ.6.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு

பொதுமக்களின் குறைகளை விரைவாகவும் செம்மையாகவும் தீர்க்க மாவட்ட நிர்வாகத்தைப் பொதுமக்களிடையே கொண்டு செல்லவேண்டும் என்னும் அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் வண்ணமும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் ஒரு சிறப்புத் துணை ஆட்சியரைத் தலைமையாகவும் மற்றும் அவருக்கு உதவியாக அலுவலர்களும் கொண்ட "பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு" ஏற்படுத்தப் பட்டது.

மக்கள் குறை தீர்க்கும் பிரிவு அமைக்கப்பட்ட பிறகு குறை தீர்க்கும் நாள் மனுக்கள் சிறப்பான முறையில் கண்காணிக்கப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைகள் தீர்க்கப்படுகின்றன.

மக்கள் தொடர்புத் திட்டம் - மனு நீதித் திட்டம்

மாவட்ட வருவாய் அலுவலரும், மாவட்ட ஆட்சியரும் ஒவ்வொரு கோட்டத்தில் ஒவ்வொரு கிராமத்தில் சுழற்சி முறையில் மனு நீதித் திட்டம் நடத்த வேண்டும், ஒரு மாதத்தில் இரண்டு மனு நீதித் திட்ட நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர்- மாவட்ட வருவாய் அலுவலர் நடத்தவேண்டுமெனத் தனித்தனியாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

குறை தீர்க்கும் நாள்

சாதாரணக் குடிமகனும் தனது குறைகள் தீர்க்கப்படுவதற்கு அரசு அலுவலகங்களில் பின்பற்றப்படும் பல்வகை வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகளைத் தகவல் அறிவிப்புப் பலகை மூலம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என இந்த அரசாணை வலியுறுத்துகிறது. மனுக்கள் பெற்றுக் கொண்டமைக்கு முறைப்படி ஒப்புதல் அளிப்பதும், உயர்நிலை அதிகாரிகளைக் கொண்டு நேரடி விசாரணை செய்விப்பதும், 'நிக்நெட்' கணிப்பொறி மூலம் இத்திட்டத்தைத் தொடர்ந்து கண்காணிப்பதும் நடைமுறைப்படுத்தபட்டுள்ளன.

பொங்கல் பண்டிகைக்கு இலவசப் புடவை வேட்டி

தமிழ்நாட்டில் முதன் முதலாக 1992-ஆம் ஆண்டுதான் பொங்கல் பண்டிகைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாக, புடவை வேட்டி வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் ஆண்டுதோறும் பயன்பெற்று வருகின்றனர். மேலும் இயற்கையின் சீற்றம் அதிகமாக இருந்ததால் கூடுதலாக 15 இலட்சம் வேட்டிகளும் 15 இலட்சம் சேலைகளும்

வழங்க 1993-ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏழை எளியோரின் வாட்டம் நீக்கவும், அவர்கள் இல்லந்தோறும் வளமும் நலமும் சேர்க்கவும், நமது முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தமிழ்நாடு அரசு தீட்டிச் செயல்படுத்திவரும் திட்டங்கள் ஏராளம், ஏராளம்.

விபத்து நிவாரணத் திட்டம்

வரன்முறைப்படுத்தப்படாத Unorganised sector தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறக்க நேரிட்டால் அல்லது உடல் அங்ககீனம் ஏற்பட்டால் அதற்கேற்ப அரசு நிதி உதவி அளிப்பதற்காக முதற்கட்டமாக 22 ஏழைத் தொழில்களை மட்டும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது இத்திட்டத்தின் கீழ் 44 ஏழைத் தொழில் வகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1991-92 முதல் 1994-95 வரை 4,062 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. வழங்கப்பட்ட நிவாரணம் ரூ.310 இலட்சம் ஆகும்.

நலிந்தோர் நலத் திட்டம்

தொழிலீட்டுவதன் மூலம் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் குடும்பத் தலைவர் இறக்க நேரிட்டால் குடும்பம் சொல்லமுடியாத துன்பத்திற்கு ஆளாக நேரிடுகிறது. மேற்படி இன்னலுக்கு ஆளாகும் நலிந்த குடும்பத்தினருக்கு நிதி உதவி செய்யும் நோக்கத்துடன் அரசு 'தமிழ்நாடு நலிந்தோர் நலத் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.

குடும்பத்தினருக்கு எல்லா வழிவகைகளிலும் ரூ.5,000-க்கு மிகைப்படாமல் ஆண்டு வருமானம் இருப்பின், அன்னாரின் குடும்ப வாரிசுதாரருக்கு இத்திட்டத்தின் கீழ் நிவாரணமாக ரூ.5,000 வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 1991-92 முதல் 1994-95 வரை பயன்பெற்ற குடும்பங்கள் 1,46,483 ஆகும். வழங்கப்பட்ட தொகை ரூ.59,18,37,800 ஆகும்.

முதியோர் உதவித்தொகைத் திட்டம்

வயது முதிர்ந்த ஆதரவற்றவர்களைக் காப்பாற்றும்பொருட்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசு முதியோர் உதவித் தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அவர்கள் இருந்த இடத்திலேயே முதியோர் உதவித் தொகை பெறுவதற்காக மாதம்தோறும் ரூபாய் 75 அரசு தன் சொந்தச் செலவில் பண அஞ்சல் மூலம் அனுப்புகின்றது. இதைத்தவிர முதியோர் உதவித்தொகை பெறுவோர்க்கு 1979 ஆம் ஆண்டில் இருந்து இலவச வேட்டி புடவை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது இலவசமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் 23 இலட்சம் பேர்கள் வரை பயனடைகின்றனர்.

20 அம்சத் திட்டம்

20 அம்சத் திட்டத்தின் கீழ் அரசு 1991-92 முதல் 1994-95 வரை 12,02,786 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

இதில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்கள் 4,86,281 பேர்கள் ஆகும்.

நில ஒப்படை

நிலமற்ற ஏழைகளுக்கு 1991-92-ஆம் ஆண்டு முதல் 1994-95-ஆம் ஆண்டு வரை 33,037 பேர்களுக்கு வேளாண்மை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

இதில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினர் 7,859 ஆவார்கள்.

மரம் வளர்த்தல் திட்டம்

1991-92 முதல் 1994-95 வரை, மாண்புமிகு புரட்சித்தலைவி ஆட்சியிலிரும் தமிழ்நாட்டில்

அளவையும், உற்பத்தித் திறனையும் கருதிப் பார்த்து, இவ்வணிகர் லெவி திட்டத்தை 29.1.1992 முதல் ரத்து செய்து, ஒரு துணிச்சலான முடிவினைச் செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு சீரிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக, நெல் உற்பத்தி அதிகரித்ததைக் கருத்தில் கொண்டு, 1.5.1993 முதல் ஏகபோகக் கொள்முதல் முறையை ரத்து செய்வது என்ற மற்றுமொரு துணிச்சலான முடிவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு எடுத்தது.

மேலே கூறிய இரு கொள்முதல் முறைகளையும் ரத்து செய்ததன் பயனாக, 1993-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்திலிருந்து இணைக் கொள்முதல் திட்டத்தை இவ்வரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் நெல்-அரிசியை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கோ, அல்லது தனியார் வணிகர்களுக்கோ, எது ஆதாயமோ அங்கு விற்கலாம் என்று ஆயிற்று. இதனால் விவசாயிகள் அதிக வருமானம் பெற்றனர். மேலும் நெல்லும் அரிசியும் மாநிலம் முழுவதும் தங்கு தடையின்றி எடுத்துச் செல்ல ஏதுவாயிற்று. அனைத்து மாவட்டங்களிலும் ஒரே சீரான விலைகள் நிலவ ஆரம்பித்தன.

பொது விநியோக முறையில் வழங்கப்படும் பொருட்களில் அரிசியே தமிழ்நாடு மக்களின் முக்கிய உணவுப் பொருளாகும். பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலை, மைய அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டாலும், இவ்வரசு அரிசியை மானிய விலைகளிலேயே வழங்கி வருகிறது. ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசு 1995 ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் அனைத்து

படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க, உழுபவன் உற்பத்தியைப் பெருக்க இருசாராரும் இணைந்தால்தானே ஏற்றம் காணமுடியும்!

–பேரறிஞர் அண்ணா

ரக அரிசியின் விலைகளையும் கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் குறைத்தது. சாதாரண ரக அரிசி ரூபாய் 3.50 என்றிருந்ததை ரூ.2.50 என்றும். சன்னரக மற்றும் மிகச் சன்னரக அரிசியை ரூ.4.75 என்றிருந்ததை ரூ.3.75 ஆகவும் இவ்வரசு குறைத்தது. 1.7.1995 முதல் சாதாரண ரக அரிசியின் விலையை மேலும் 50 காசுகள் குறைத்து, கிலோ ரூ.2 என்ற வீதத்தில் வழங்க அரசு முடிவெடுத்து உள்ளது.

அனைத்திந்திய அளவிலேயே, தமிழ் நாட்டில்தான், பொது விநியோகத் திட்டத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் எவ்வித வருமான வரம்பும், பாகுபாடும் இல்லாமல் மிகக் குறைந்த விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற வீதத்தில் அரிசி வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு விலையைக் குறைத்து வழங்குவதால், கூடுதலாக ரூ.168 கோடியும், ஆண்டு முழுவதற்குமாக ரூ.618 கோடியும் உணவுப் பொருள் மானியமாக இவ்வரசு ஏற்க வேண்டியுள்ளது. பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இக்கொள்கை முடிவை, இவ்வரசு ஏற்றுள்ளது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திற்கும் ஒரு நியாயவிலைக் கடை எனச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 21,985 முழுநேர நியாயவிலைக் கடைகளுடன், 1,719 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும், தற்போது உள்ளன. இவையன்றி மலைப் பகுதிகள் மற்றும் எளிதில் செல்லமுடியாத பகுதிகள் ஆகியவற்றில் உள்ள மக்கள் அத்தியாவசியப் பொருட்களை அருகாமையில் வாங்க, 27 நடமாடும் நியாயவிலைக்

கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய பெரிய அளவிலான அமைப்பு இருந்தபோதிலும், குக்கிராமங்களில் உள்ள மக்கள் குறிப்பாக பெண்கள், தங்கள் ஊதியத்தைத் துறந்துவிட்டு, சுமார் 3 கிலோமீட்டர் தூரம்வரை நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் பொருட்களை வாங்கி, தங்களது இருப்பிடங்களுக்கு மீண்டும் அவ்வளவு தூரம் நடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இம்மக்களின் நலனை, முக்கியமாக பெண்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இம்மாதிரியான குக்கிராமங்களிலேயே அக்கிராமங்களில் உள்ள பெண்களை முகவர்களாகக் கொண்டு, சில நெறிமுறைக்குட்பட்டு, நியாயவிலைக் கடைகளைத் திறக்க திட்டம் ஒன்றினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசு தற்போது தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் முன்னோடியாகப் பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், தட்டான்காட்டுப்புதூரில் ஒரு கிளை சில்லறை விற்பனைக் கடை திறக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் நெல்-அரிசி உற்பத்தி அதிகரித்த போதிலும், செயற்கையான பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்ற நோக்கில், வெளி மாநிலத்திற்கு நெல்-அரிசி கொண்டு போக விரும்பும் வியாபாரிகள், அவர்கள் எடுத்துச் செல்ல விரும்பும் அளவிற்கு ஈடான நெல்-அரிசியை லெவியாக அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்ற லெவி முறையை இவ்வரசு கடைப்பிடித்து வருகிறது. வெளிநாடுகளில் மிகச் சன்னரக அரிசியை விரும்புவதைக் கருத்திற் கொண்டும் அதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய இலாபங்களைக் கருத்திற்கொண்டும் இவ்வரசு ஜே.ஜே.1992 வகை மிகச்சன்னரக அரிசி மற்றும் பாசுமதியல்லாத மிகச் சன்னரக அரிசி வகைகளை ஏற்றுமதி செய்யும் பொருட்டு, மேற்கூறிய லெவியிலிருந்து விலக்களித்துள்ளது.

ஈகையை விட நல்லது!

முகம் மலர்ந்து இன்சொல் உடையவளாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும்.

–திருவள்ளுவர்

நாடு முழுவதிலும் ஏற்படும் இயல்பான ஏற்ற, இறக்க நிலை நீங்கலாக, மொத்த விலை நிலைமை தமிழ்நாட்டில் பெரிதும் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இன்றியமையாப் பொருட்கள் அனைத்தும் அங்காடியில் எளிதில் கிடைக்கின்றன. தட்டுப்பாடு உள்ளது என்று எங்கும் புகார் இல்லை. விலை நிலவரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தேவையானபோது அங்காடித் தலையீடு (Market Intervention) முதலான நடவடிக்கைகள் மூலம் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுறவுச் சில்லறை விற்பனை நிலையங்கள் பொது விநியோக முறையின் மூலமாகப் பொருட்களை வழங்குவதோடு, நிர்ணயிக்கப்பட்ட விலையில், இன்றியமையாப் பொருட்களையும் விற்பனை செய்கின்றன. தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்துள்ளது. இக்குழு, குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை இன்றியமையாப் பொருட்களின் அங்காடி விலை மற்றும் வழங்கல் நிலைமை பற்றி ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உணவுத் தானியங்களைச் சேமித்து வைப்பதற்குரிய கிடங்கு வசதிகளை இவ்வரசு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு முழுவதும், 110 இடங்களில், மொத்தம் 5,77,755 டன் சேமிப்புத்திறன் கொண்ட கிடங்கு வசதிகளை, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஏற்படுத்தியுள்ளது. இக்கழகம், பொது விநியோக முறையில் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்காக உணவுத்

மொத்தம் 12,78,701 மரங்கள் நடப்பட்டுள்ளன.

நில அளவைத் திட்டம்

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் உள்ள நிலம் பதிவுருக்களைக் கம்ப்யூட்டர் மயமாக்கும் திட்டத்தைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுள்ளது.

இதன் முதற்கட்டமாக இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் உள்ள 10 வட்டங்களில் முன்னோடித் திட்டமாக ரூ.40 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பட்டா பாஸ்புத்தகத் திட்டப்பணி

பட்டா பதிவுப் புத்தகத் திட்டம் 1.4.1993 முதல் வடார்க்காடு அம்பேத்கர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் இணையிலா ஆட்சியில் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் 1991-92 முதல் 1994-95 வரை 52,52,916 பேர்களுக்குப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 14,01,694 பேர்கள் ஆவர்.

வேளாண்மை வருமான வரி

தமிழ்நாட்டில் 1955-ஆம் ஆண்டில் வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, மலைத்தோட்டப் பயிர்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரிவிதிப்பு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1958-ஆம் ஆண்டில் சட்டம் திருத்தப்பட்டு மலைத் தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

திருத்தப்பட்ட சட்டம் 40-91 இன்படி சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத்தோட்டமல்லாத பயிர்கள் மீது வேளாண்மை வருமான வரி விதிப்பு 1.4.92 முதல் முழுமையாகக் கைவிடப்பட்டது. எட்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்போர் மட்டுமே 1.4.92 முதல் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டம் 1955 இன் கீழ் வரி விதிப்புச் செய்யப்படுகின்றனர்.

அகில உலகமும் புரிந்துகொள்ளக்கூடிய மொழி நம்மிடம் ஒன்று உண்டு. அதுதான் அன்பு.

—பெர்னார்டுஷா

தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1978 இன் கீழ் மிகை வெற்று நிலத்துக்குப் பிரிவு 21-இன் கீழ் 1.7.91 முதல் 31.5.95 வரை 70 நேர்வுகளில், 85 எக்டேர் 48 ஏர் 76 ச.மீ.க்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் 1.7.91 முதல் 31.5.95 வரை 1,192 நேர்வுகளில் 784 எக்டேர் 91 ஏர், 53 ச.மீ. நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 30 நேர்வுகளில் 15 எக்டேர், 92 ஏர், 18 ச.மீ. நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலவரிச் சட்டம்

இச்சட்டத்தின் கீழ் 1991-92 முதல் 1994-95 வரை ரூ.2,602 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் கீழ் 1.7.91 முதல் 31.5.95 வரை 45 இலட்சங்களுக்கு, பிரிவு 27 1 இன் கீழ் நகர்ப்புற நிலவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் 1991-92 முதல் 1994-95 வரை 16,919 ஏக்கர் நிலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் பயனடைந்த நபர்கள் 15,301 பேர். இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 5,344 பேர்கள் ஆவார்.

இவ்வாறாக நம் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சி, ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்து விளங்குகிறது ✻



உணவுத்துறையில் தமிழக அரசின் நான்காண்டுச் சாதனைகள்

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்

திரு இராம வீரப்பன்

கடந்த நான்காண்டுகளில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையின் கீழ், தமிழக அரசு உணவுத் துறையில் புரட்சிகரமான செயல்திட்டங்களை மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தியுள்ளது. இன்றியமையாப் பொருட்களைத் தொலை தூர இடங்களில் வசிப்பவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொதுமக்களும் போதுமான அளவிலும், ஏற்புடைய தரத்திலும், நியாயமான விலையிலும், இருப்பிடங்களுக்கு அருகிலும் குடும்ப அட்டைகள் மூலம் பொது விநியோக முறையில் கிடைப்பதை உறுதி செய்ய இவ்வரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பலப்பல.

1992-ஆம் ஆண்டு டிசம்பர் வரை அமலில் இருந்த குடும்ப அட்டைகளை 1993-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 6 ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட்டு, 123 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. மேலும் பொது விநியோக முறையின் பயனைப் பெறவில்லையே என்று நீண்டகாலம் காத்திருந்த பொதுமக்களின் குறைகளைக் களையும் பொருட்டு, இவ்வரசு 1993-94-இல் மேலும் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கியுள்ளது. இதனால் இம்மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் குடும்ப அட்டைகள் பெற்றுப் பொது விநியோக முறையின் பயனை முழுவதுமாக அனுபவித்து வருகின்றன.

பொது விநியோக முறையின் கீழ் விற்பனை செய்யப்படக்கூடிய அரிசி பின்வரும் வழிமுறைகளின் மூலம் பெறப்பட்டு வந்தன:

1. மைய அரசு ஒதுக்கீடு
2. லெவிக் கொள்முதல்
3. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல்
4. வெளிச்சந்தைக் கொள்முதல்

இவ்வரசு பதவியேற்ற பின் நெல்/அரிசி

1993-94-இல் மேலும் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு, குக்கிராமங்களிலேயே, பெண்களை முகவர்களாகக் கொண்டு, நியாயவிலைக் கடைகள் திறக்கத் திட்டம் ஒன்றினை அரசு தயாரித்துள்ளது.

தானியங்களைக் கொள்முதல் செய்து வழங்கும் ஓர் அரசு முகவரமைப்பாகும். இக்கழகத்திற்கு மானியங்கள் வழங்குவதன் மூலம், இது தொடர்பான கட்டுமானச் செலவினை அரசு ஏற்கிறது. 1994-95-ஆம் ஆண்டு 7 இடங்களில், ரூ.143 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், மொத்தம் 10,250 டன் சேமிப்புத் திறன் கொண்ட கிடங்குகளின் கட்டுமானப் பணி நடந்தேறி வருகிறது. 1995-96-ஆம் ஆண்டில், ரூ.110 இலட்சம் செலவில் மேலும் 5 கிடங்குகள் கட்டும் பணி மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

நுகர்வோர் நலனைப் பாதுகாக்கும் வகையில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தையும், அதன் கீழ் வரும் விதிகளையும் செயல்படுத்துவதில் தமிழக அரசு முன்னணி வகிககிறது. 23 மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புக்களைத் தவிர. மாநில அளவில் நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

கலப்படக் குற்றங்களைக் கண்டுபிடித்தல், உணவுப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கப்படுவதைத் தடுத்தல், கள்ளச்சந்தையினைத் தடுத்தல் ஆகிய முக்கியப் பொறுப்புக்களைச் செயலாற்றுவதற்காக, குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத்துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, மாவட்ட எல்லைகளில் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல், பொது விநியோகத்திற்கான பொருட்கள் நியாயவிலைக் கடைகளிலிருந்து வெளிச்சந்தைகளுக்குக் கடத்திச் செல்வதைத் தடுத்தல், நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளைக் கவனித்தல், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் நடத்தும் அரிசி-நெல் பறிமுதல் வழக்குகளில் கலந்து கொள்ளுதல் ஆகிய பணிகளையும் இவர்கள் மேற்கொள்கிறார்கள்.

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு ஆணைகளின்படி, 1994-ஆம் ஆண்டு, 10,542 திடீர்ச் சோதனைகள் செய்யப்பட்டு, 237 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், 3,479 நபர்கள் மீது குற்ற வழக்குகள் நடத்தப்பட்டு, 3,461 நபர்களுக்குத் தண்டனை வழங்கப் பட்டது. இந்த திடீர்ச் சோதனைகள் மூலம் ரூபாய் 147.08 இலட்சம் மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ரூபாய் 267.21 இலட்சம் மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன ❀

உனக்குப் பெருமை வேண்டுமானாலும் உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள்.

—தந்தை பெரியார்

மக்கள் நல்வாழ்வுத் துறையின் சாதனைகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

திரு. எஸ். முத்துசாமி

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தில் பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல எண்ணற்ற பணிகள் அடிமட்ட மக்களுக்கும் சென்றடையும் வகையில் பல மருத்துவ நலத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். மேலும், எவரும் செய்திடாத நிலையில், இந்த நான்கு ஆண்டுகளில் அதிகபட்ச நிதியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கான மொத்த வருவாய்க் கணக்கில் சுமார் 7 சதவீதம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப் படுகிறது. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1990-91-ல் ரூபாய் 343.09 கோடி, 1991-92-ல் ரூபாய் 410.83 கோடி 1992-93-ல் ரூபாய் 469.23 கோடி, 1993-94-ல் ரூபாய் 557.70 கோடி மற்றும் 1994-95-ல் ரூபாய் 618.02 கோடி, 1995-96-ல் 666.95 கோடி ஒதுக்கப்பட்டது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.7.29 கோடி செலவில் 50 புதிய பணிகளை இத்துறை செயல் படுத்தியுள்ளது. மேலும் 1993-94-ல் ரூபாய் 8.44 கோடி செலவில் 61 புதிய திட்டப்பணிகளுக்கான ஆணைகளை இத்துறை வெளியிட்டுள்ளது. 1994-95-ல் ரூ.9.05 கோடி செலவில் 54 புதிய பணிகளைத் தொடர நிதிநிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 1995-96-ல் ரூ.11.49 கோடி செலவில் 52 புதிய பணிகளைத் தொடர நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், ஒதுக்குப்புறத்தில் உள்ள கிராம மக்களுக்கும் மருத்துவ வசதி சென்றடைய வேண்டும், மேலும் அவர்களுக்கு மருத்துவ விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பொது மருத்துவ முகாம் நடத்த ஆலோசனை

"ஏழை மக்களுக்கான விரிவு படுத்தப்பட்ட மருத்துவத் திட்டம்" என்றொரு புதிய திட்டம் 1992-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ஏப்ரல் 1992 முதல் 15.5.95 வரை ரூ.2.34 கோடி நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது.

1995-96-ஆம் ஆண்டிற்கு 70 ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வழங்கினார்கள். அதன் அடிப்படையில் 18.1.1992 அன்று புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டம் தொடங்கப்பட்டது. சுமார் 10 ஆயிரம் முகாம்கள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டன.

மருத்துவ முகாம்களில் பங்கு கொண்டவர்கள் 51,64,641.

சிகிச்சை பெற்றவர்கள் 1,85,400.

குழந்தைகள் நோயினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினருக்கு (அதாவது மகளிர், குழந்தைகள்) மருத்துவச் சோதனையை மேற்கொண்டு சிகிச்சையளிக்கும் அரும் பெரும் திட்டத்தை, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் 1,362 அடிப்படை சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்கள் வாயிலாகப் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

முகாமிற்கு வந்து சிகிச்சை பெற்ற பெண்கள் - 2,16,537, சிறுவர்கள் - 2,23,436.

சிறப்புச் சிகிச்சை முகாமிற்கு அனுப்பப்பட்ட நோயாளிகளில் பெண்கள் - 15,744, சிறுவர்கள் - 9,780.

1988-89- லிருந்து இம்மாநிலத்தில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இளம்பிள்ளை வாத சிகிச்சைத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது பொற்கால அரசு செயல்படுத்தியுள்ளது. இளம்பிள்ளை வாத அறுவை சிகிச்சை பல்வேறு மாவட்ட

மருத்துவமனைகளிலும் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளிலும் 2097 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு உள்ளன.

1994 ஜூன் மாதத்தில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெஜெயலலிதா பள்ளி சுகாதார முகாம்கள் என்ற பெயரில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அதில் பள்ளி சிறார்களுக்கு ஏற்படும் வியாதிகள், குறைபாடுகள் பற்றி கண்டறியப்பட்டது. 28.2.95 வரை 74,48,090 பள்ளிச்சிறார்கள் ஆய்வு செய்யப்பட்டனர். அதில் 42,88,139 சிறார்களுக்கு -வியாதிகள் குறைபாடுகள் இருப்பதாக கண்டறியப்பட்டது. குறைபாடுகள் உடைய 42,88,139 சிறார்களில் 2,17,907 சிறார்கள் தலைமையிட மருத்துவமனைகளில் முழுமையான சிகிச்சை பெற அனுப்பப்பட்டார்கள்.

ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத்திட்டம் என்றொரு புதிய திட்டம் 1992-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஏப்ரல் 1992 முதல் 15.5.95 வரை ரூ.2.34 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இருதய அறுவை சிகிச்சையால் பயனடைந்தோரின் எண்ணிக்கை 1905. மற்றும் சிறுசீரக மாற்று அறுவை சிகிச்சையால் பயனடைந்தே, ரின் எண்ணிக்கை 66 ஆகும்.

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை தணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கட்தொகை 5.56 கோடி ஆகும். தமிழகத்தில் 1995ஆம் ஆண்டின் இடைக்கால உத்தேச மக்கள் தொகை 598.13 இலட்சம் ஆகும் (600 இலட்சம்)

தமிழகம் சீரிய முறையில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றியதின் பயனாக இந்நாட்டில் கி.பி.2000 ஆம் ஆண்டில் எய்த வேண்டிய சில மக்கள் நலக் குறிக்கோள்களை, இம்மாநிலம் 10 ஆண்டுகளுக்கு முன்பே எய்திவிட்டது. தேசிய சுகாதாரக் கொள்கையின்படி பிறப்பு விகிதம் 1000-க்கு 21 ஆகவும், இறப்பு விகிதம் 1000க்கு 9 ஆகவும், குழந்தை இறப்பு விகிதம் 1000-க்கு 60 ஆகவும் கி.பி.2000-ஆம் ஆண்டில் அடைய வேண்டும். இத்தேசிய குறியீட்டைத் தமிழகம் 1993-ஆம் ஆண்டிலேயே அடைந்துவிட்டது. உலக அளவில் சிறப்புப் பணிக்குழு (அமெரிக்க அதிகாரிகளும், வளர்ந்து வரும் நாடுகளின் வல்லுநர்களும்) மேற்சொன்ன திட்டத்தில் இவ்வரசின் சாதனையை மதிப்பிடுவதற் காக 1994 ஜனவரியில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகை தந்து, தமிழ்நாடு சுகாதாரப் பாதுகாப்புச் சேவையில் மிகச் சிறந்த சாதனை ஒன்றை எய்தியுள்ளது, என்றும் இதன் விளைவாக நாட்டின் பிற பகுதிகளை விட இங்கு பத்தாண்டுகளுக்கு முன்னரே எல்லா மக்களும் முழு அளவில் பயனடைந்துள்ளனர் என்றும் அக்குழுவின் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் தொகை நெருக்கடி பற்றிய குழு என்ற ஒரு உலக நிறுவனம் இந்தியாவில் குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் ஐந்து பெரும் மாநிலங்களில் (கேரளம், தமிழ்நாடு, மகாராட்டிரம், குஜராத், பஞ்சாப்) ஒன்றாகத் தமிழ்நாட்டைத் தெரிந்தெடுத்து உள்ளது.

குடும்ப நலத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு எய்திய இலக்கு சாதனைகள் மற்ற அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது மிக அதிகமாகும்.

தொண்டை அழற்சி நோய், கக்குவான் இருமல், இசிவு நோய், எலும்புருக்கி நோய், தட்டம்மை நோய், இளம்பிள்ளைவாதம் போன்ற தடுப்பூசி மருந்தால் தடுக்கத்தக்க நோய்களுக்குத் தடுப்பூசி மருந்து கொடுப்பதன் மூலமாக நோய் பீடிக்கப்படுவதையும் இறப்பு வீதத்தையும் குறைக்க வேண்டும் என்ற கருத்தில் அனைவருக்கும் நோய்த்தடுப்பூசி போடுவதன் மூலம் இம்மாநிலத்தில் தடுப்பூசியினால் கட்டுப்படுத்தப்படும் நோய்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. இளம்பிள்ளைவாத நோயினால் ஊனமுற்ற குழந்தைகளின் எண்ணிக்கை 1987-ஆம் ஆண்டில் 4409-ஆக இருந்தது. 1994-ஆம் ஆண்டில் 262-ஆகக் குறைந்துள்ளது. இசிவு நோய்களின் எண்ணிக்கையும் மிகக் குறைந்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்குவித்தல், ஆண் குழந்தைகள்தான் வேண்டும் என்ற போக்கினை மாற்றுதல், பெண் சிசுக்கொலையை ஒழித்தல், பெண் குழந்தைகளின் நலனை மேம்படுத்துதல் போன்றவற்றிற்காக அரசு பெண் குழந்தைகளுக்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம் என்கிற திட்டம் ஒன்றை 1.4.1992 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்து ஆண் குழந்தை இல்லாத ஏழைக்குடும்பத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அவர்களுக்கு ரூபாய் இரண்டாயிரம் வழங்கப்படும், இத்தொகை ஒரு நிதியில் முதலீடு செய்யப்பட்டு அந்தப் பெண் குழந்தைகளுக்கு அவர்களது தொடக்க கல்வி, நடுநிலைக்கல்வி, உயர்/மேல் நிலைக்கல்வி முடிப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு அத்தொகை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது அடைகிற போது தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு அல்லது உயர் கல்வி தொடர்வதற்கு ஒட்டுமொத்தத் தொகையாக ரூபாய் 10,000 வழங்கப்படும். இத்திட்டம் 1.4.1992ஆம் ஆண்டிற்குப் பின்னர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட தம்பதியர்களுக்குப் பொருந்தும். பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொகையை 11.11.1993 ஆம் நாளன்று ரூபாய் 20,000 ஆக அதிகரித்ததோடு பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளில் தங்கமோதிரம் ஒன்றும் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தார்.

கண் சிகிச்சை முகாம்

கண் சிகிச்சை (காட்ராக்ட் அறுவை சிகிச்சை) செய்யப்பட வேண்டியவர்கள் ஐந்து லட்சம் பேர் உள்ளார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் இந்த 5 இலட்சம் பேருக்கும் அறுவை சிகிச்சை செய்து முடிக்கப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயித்திருந்தாலும், வெகு விரைவிலேயே இவர்கள்

அனைவருக்கும் கண் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டு வருகிறது. இதற்கு மேலும் 500 சிறப்பு முகாம்களை நடத்தி விரைவாக இக்குறியீட்டை எட்டிப் பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டம்

11.05.1994 முதல் தமிழ்நாடு சங்கங்கள் விதியின் கீழ், மாநில எய்ட்ஸ் திட்ட மையம் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் 88 அரசு குருதி வங்கிகள், 61 தனியார் குருதி வங்கிகள் மற்றும் 13 மண்டல குருதி சோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரத்த மாதிரியை சோதனை செய்ய 'எலிஸா ரீடர்' கருவிகள் 11 இடங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. எலிஸா ரீடர் கருவிகள் வழங்கப்படாத சிறிய இரத்த வங்கிகளுக்கு ரேபிட் டெஸ்ட் (சீரோடையா) கிட்ஸ் வழங்கப்பட்டுள்ளன. இன்குபேட்டர், மைக்ரோஸ்கோப் சென்டிரி பியூஜ், ஆட்டோகிளேவ் போன்ற கருவிகள் மற்றும் அன்றாடம் தேவைப்படும் பொருட்கள் 66 குருதி வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் தனியார் குருதி வங்கிகளில் பணிபுரியும் 382 ஆய்வுக்கூட நுட்புனர்களுக்கு ரேபிட் டெஸ்ட் கிட்ஸ் கையாளுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கருவிகளும் டெஸ்ட் கிட்ஸ்களும் வழங்கப்பட்டு உள்ளதால் 1993-ல் சேகரிக்கப்பட்ட 33,645 என்ற குருதியின் அளவு ஜனவரி 1994 முதல் டிசம்பர் 1994 முடிய 50,500 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் காசநோயாளிகள் உள்ளனர். அவர்களில் நான்கில் ஒரு பங்கினர் - அதாவது 2.5 இலட்சம் பேர்களால் நோய் பரவக்கூடிய நிலை உள்ளது. இந்நோய்க்காக அவசர தீவிர சிகிச்சை செய்திட காசநோயாளிகளுக்கெனத் தனிப் படுக்கை வசதிப்பிரிவுகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. இம்மாநிலத்தில் காசநோயாளி நலம் பேண பத்து காசநோய் மருத்துவமனைகள் உள்ளன.

இதே போலத் தொழுநோய் மிக அதிகமாகக் காணப்படும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். கடந்த 10 வருடங்களாகப் பல்வகை மருந்து சிகிச்சை முறையை செயல்படுத்திய பின்னர் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை 63,890 ஆகக் குறைந்துள்ளது. தற்போது ,1000 பேரில் நோய் கண்டுள்ளவர்களின் விகிதாச்சாரம் 1.1. ஆக இருந்து வருகிறது.

பார்வையின்மைத் தடுப்புக்கான தேசியத்திட்டம்

தேசிய சுகாதாரக் கொள்கையில் பார்வையின்மையைத் தடுக்கும் தேசியத் திட்டத்தின் குறிக்கோள் இந்தியாவில் கி.பி. இரண்டாயிரத்தில் கண் பார்வையற்றோர் எண்ணிக்கையை 1000 பேர்களுக்கு 14 பேர் என்ற வீதத்திலிருந்து 1000 பேர்களுக்கு 3 என்ற வீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் பார்வையற்றோரின் எண்ணிக்கை விகிதாச்சார அளவு 165 ஆகும். மேற்குறிப்பிட்ட திட்டப் பணிகளுக்காக 1994-95-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1,76 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கண்சிகிச்சை முகாம்கள் நடத்துவதற்காக இந்திய அரசு மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மாவட்டப் பார்வையின்மை கட்டுப்பாட்டுச் சங்கத்திற்கு ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. உலக வங்கி உதவியுடன் ரூ.64 கோடி தொகைக்கான செயல்பாட்டுடன் கூடிய திட்டத்தை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழக மக்களுக்காக அரசு 1995-96-ஆம் ஆண்டிற்கு 70 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்)

1. 70 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட 350.00.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் செம்மையாகச் செயல்பட 20 உபயோகமற்ற வாகனங்களுக்குப் பதிலாக, 20 புதிய வாகனங்கள் வாங்க 50.00.

இதனைப் போலவே 'டேனிடா மக்கள் நல்வாழ்வுத்திட்டத்தின்' கீழ் இரண்டாம் நிலை பணி சேலம், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் 1.4.89 முதல் 31.3.92 வரை செயல்படுத்தப்பட்டு அது மேலும் 31.3.95 வரை மொத்த திருத்திய மதிப்பீடு ரூ.24.77 கோடிக்கு செயல்படுத்த அனுமதிக்கப்பட்டது.

இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5-ன் கீழ் சென்னை மாநகரிலும் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளிலும் உலக வங்கியின் உதவியுடன் 1988-லிருந்து இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5 செயல்பட்டு வருகிறது. 1995-96-ல் முக்கியமான திட்டமாக திட்டப் பகுதிக்குட்படாத 7 மாவட்டம் மற்றும் 137 வட்ட மருத்துவமனைகளில் உள்ள தாய்சேய் நலப்பிரிவுகளை மேம்படுத்துவதற்கு உலக வங்கி மற்றும் இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கான திட்டமிடப்பட்ட மூலதனச் செலவு ரூ.7 கோடி. இவற்றுள் ரூ.6.35 கோடி உபகரணங்கள் வாங்கவும் மற்றும் ரூ.0.65 கோடி கட்டிடப் பணிகளுக்கும் செலவிடப்படும். 1995-96-க்கான மொத்த வரவு செலவு ரூ.18.55 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டு இத்திட்டத்தின் இறுதி ஆண்டாக இருப்பதால் இத்திட்டத்தின் கீழ் உள்ள பணிகள் 1995-96-க்குள் நிறைவு பெற்றுவிடும்.

தாலுக்கா அளவில் சிறப்பு மருத்துவர்கள் நிரந்தரமாக இல்லாமல் இருந்த சூழ்நிலையை மாற்றும் வண்ணம் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனைகளிலும் குழந்தைகள் நல மருத்துவர் ஒருவர், மகப்பேறு நல மருத்துவர் ஒருவர், மயக்க மருத்துவர் ஒருவர் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்துள்ளது.

மருத்துவமனைகளுக்கு மருந்து கிடைக்காத பிரச்சினை அல்லது உள்ள மருந்தை தேவையான மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்யாதது போன்ற பல்வேறு சிக்கல்கள் நெடுங்காலமாக தொடர்ந்து இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் இதைக் கண்காணிக்க முறையான தனி அமைப்பு இல்லாததே. தற்பொழுது, 'மருந்துக் கழகம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவராக நல்வாழ்வுச் செயலரும் முழுநேர நிர்வாக இயக்குநராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியும் பொது மேலாளராக ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான பணியாளர்கள் - கம்ப்யூட்டர் போன்ற கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. முழுநேரமாக இவர்கள் இப்பணியைப் பார்ப்பதன் மூலம் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, எதிர்காலத்தில் இது சிறப்பாகச் செயல்படும்.

மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ உயர்கல்விக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொரு ஆண்டும் சிக்கல்களும் தவறுகளும் இருந்து கொண்டே இருக்கும். ஒரு நிரந்தரமான அமைப்பும் வசதியான கட்டடமும் இல்லாமல் தற்காலிக அமைப்பாக ஈடுபட்டதே காரணம். இந்நிலையிலும் இந்த ஆண்டு சுமார் 600 மாணவர்கள் அரசினர் மருத்துவத் தேர்வை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தார்கள். அவைகள் அனைத்திலும் உண்மை இல்லை; அரசாங்கம் சரியாகவே மருத்துவ மாணவர்களைத் தேர்வு செய்துள்ளது என்று உச்ச நீதி மன்றம் சுட்டிக் காட்டி அரசை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட அத்தனை மனுக்களையும் ரத்து செய்துள்ளார்கள். இதில் இன்னும் சிறப்பாகச் செயல்படும் வகையில் செலக்ஷன் கமிட்டியை நிரந்தரமானதாக அமைக்கவும், வசதியான கட்டடத்தை கட்டிக்கொடுக்கவும் தேவையான கம்ப்யூட்டர் போன்ற உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

அரசு வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்கள், செவிலியர் பயிற்சியை மட்டுமே பெற்றிருந்தார்கள். சிறப்புப் பயிற்சி இல்லாதவர்களாக இருந்தார்கள். தற்பொழுது அவர்களுக்கு 1 ஆண்டு சிறப்புப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் மருத்துவர்கள் அதற்கான தனிப் பயிற்சியைப் பெற முடியாமல் இதுவரை இருந்த காரணத்தால் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் தொடர்ந்து இருந்து கொண்டு வந்தது. இதைப் போக்கும் வகையில்,

1. தமிழ்நாடு பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து பணிநிலைப் பிரிவு.

2. தமிழ்நாடு மருத்துவப் பணி நிலைப் பிரிவு.

3. தமிழ்நாடு மருத்துவக்கல்வி பணிநிலைப் பிரிவு என்று மூன்று பிரிவுகளை (Cadre) ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

புரட்சித்தலைவியின் தலைமையில் நான்கு ஆண்டுகளில் சீரிய முறையில் இயங்கும் ஆட்சி, ஏழை எளிய மக்களுக்கு சிறப்பான மருத்துவச் சேவை புரிந்து வருவதால், விரைவில் நோயற்ற வாழ்வு என்ற இலக்கினைத் தமிழகம் அடைந்துவிடும் என்பது உறுதி.

*

போக்குவரத்து - வனத்துறைகளின் பொற்காலச் சாதனைகள்

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்



ஓடிவரும் நதி வெள்ளத்தின் வேகம், ஆடிவரும் தென்றலின் அழகு லாவகம், துடி மகிழும் சுந்தர மலர்களின் சுகவாசம், இவை அனைத்தும் ஒருருவாய் மாறி, வாடிநிற்கும் மக்களைத் தேடிவந்து உதவுகின்ற தெய்வ மனோபாவம்... இவையே நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கடந்த நான்காண்டுகளாய் நடத்திவரும் நல்லாட்சியின் இலக்கணம். இன்னும் பல நூற்றாண்டுகளுக்கும் தொடர இருக்கும் இலக்கியம்.

தமிழக அரசு, துறைதோறும் படைத்துள்ள சாதனை, ஓர் உணர்ச்சிமிக்க தமிழகத்தை, தன்னிறைவு கொண்ட தமிழகத்தை, தங்கச் சிறப்புமிகு தமிழகத்தைப் படைத்திருக்கிறது எனில் அது மிகையாகாது. அந்த அளவுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் காட்டிய செயல்வேகம் பல நூறு ஆண்டுகளில் காணாத புயல்வேகம் ஆகும்.

இந்தப்புயல் வேகச் செயல்திறனால், போக்குவரத்துத் துறையிலும், வனத்துறையிலும் ஒரு பொற்காலம் படைத்து, புதிய புதிய சாதனைகளைப் படைத்துள்ளது தமிழக அரசு.

குறைந்த கட்டணம், நிறைந்த சேவை!

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் செயல்திறனில் ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் செயல்பட்டு வருகினறன. அந்த நேரம் பயணக் கட்டணம் மிகக் குறைவாக இருப்பதும் தமிழகத்தில்தான். ஏனைய பல மாநிலங்களில் இருப்பதுபோல கட்டண உயர்வு தமிழகத்தில் இருக்குமே யானால், ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலாக நாம் இலாபம் ஈட்ட முடியும்.

எல்லாக் கிராமங்களுக்கும் வாகனப் போக்குவரத்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

சமூகக் காடுகள் அமைப்பதிலும் ரூ.8,867 இலட்சங்கள் செலவு செய்து, 62,670 எக்டர் பரப்பில் சமூக நிலங்களில் காடுகள் வளர்க் கப்பட்டுள்ளன.

வனத் துறையில் மகளிருக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தின் மக்கள் தொகை சுமார் 6 கோடி, இயக்கப்படும் பேருந்துகளோ 15,209, ஏற்பட்டுள்ள நஷ்டமோ மிக மிகக் குறைவு.

தமிழகத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 14.00 காசு

கர்நாடகத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 16.31 காசு

ஆந்திர மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 17.00 காசு

கேரளா மாநிலத்தில் பேருந்துக்கட்டணம்1 கி.மீட்டருக்கு 18.00 காசு

குஜராத் மாநிலத்தில் பேருந்துக்கட்டணம் 1 கி.மீட்டருக்கு 20.16 காசு

மஹாராஷ்டிராவில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 20.83 காசு

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 21.00 காசு.

பஞ்சாப் மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 21.23 காசு.

தமிழகத்திலே குறைவான கட்டணத்தில் பேருந்துகளை மிக வசதியுடன் இயக்கிக் கொண்டிருக்கிறோம்.

1986-ஆம் ஆண்டு வரையிலும் ரயிலைக் காட்டிலும் பேருந்துக் கட்டணம் அதிகமாக இருந்தது. ஆனால், இன்று ரயிலைக் காட்டிலும் பேருந்துக் கட்டணம் மிக மிகக் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் ஆற்றல்மிக்க முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தைத் தலைமை யேற்று நடத்துவதுதான்.

தலைவியின் உயரிய குறிக்கோளின்படி குறைந்த கட்டணம் வசூலித்து, நிறைந்த சேவையைத் தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் வழங்கி வருகின்றன.

சீரான செயல்திறனுக்குச் சிறப்புமிகு விருதுகள்

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்திறனுக்கு எடுத்துக்காட்டு, அகில இந்திய அமைப்புகளின் விருதுகளைத் தொடர்ந்து பெற்று வருவதே ஆகும். சிறந்த உற்பத்தித் திறன், சீரிய செயல்பாடு, வாகன உற்பத்தி முன்னேற்றம், டீசல் சேமிப்பு போன்ற திறன்மிக்க செயல்களில் முன் அணியாக நின்று, இந்தியப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு, தேசிய உற்பத்தித் திறன் குழு மற்றும் பெட்ரோலியம் காப்பு ஆய்வுக் கழகம் போன்ற அமைப்புகளின் 27 விருதுகளை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுத் திகழ்கின்றன.

(5)

வாழ்க்கை என்பது அலைபோன்றது. அதன் வடிவமும் எண்ணமும் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும்.

–டிஸ்ரேலி

புதிய போக்குவரத்துக் கழகங்கள்

தமிழகத்து மக்கள் அனைவருக்கும் போக்குவரத்து வசதிகளை அளித்திட வேண்டும் என்னும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க,

☆ எல்லாக் கிராமங்களுக்கும் வாகனப் போக்குவரத்து.

☆ பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகமாக்கித் தொய்வின்றி இயக்குதல்.

☆ குறைந்த கட்டணத்தில் இயக்குதல்.

ஆகிய அப்பழுக்கற்ற நோக்கத்தினை நிறைவு செய்திட, தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் நாளும் உழைத்து வருகின்றன. பாட்டாளியின் கூட்டாளியாய்ப் பாடுபடும் இந்தப் பட்டாள வரிசையில் மேலும் நான்கு புதிய போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டு, அவை சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

பேரறிஞர் அண்ணாவை அவனிக்கு அளித்த காஞ்சி மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்......

சென்னைப் பெருநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தி, வடசென்னைப் பகுதிக்கென டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம்....

வெளிமாநிலங்களோடு சிறப்பான போக்குவரத்துத் தொடர்பை ஏற்படுத்தி, போக்குவரத்தில் புதுமை படைத்துவரும் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்......

மலைவாழ் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை முழுமையாக உறுதி செய்திட உதக மண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மகாகவி பாரதியார் பெயர் தாங்கி, புதிய போக்குவரத்துக் கழகம்.....

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்த நான்கு போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து தமிழ்நாட்டில் மொத்தம் 19 போக்குவரத்துக் கழகங்கள் 15,209 பேருந்துகளுடன் தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், ஏற்று மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, தொடர்ந்து பணியாற்றி வருகின்றன.

பயணிகளுக்குப் பலவகை வசதிகள்

பயணிகளின் இனிய பயணத்திற்கு அச்சாரமாக அவர்கள் முன்பதிவு செய்துகொள்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து, சிரமத்தைக் குறைத்திட, முக்கியப்பேருந்து நிலையங்களில் படிப்படியாகக் கம்ப்யூட்டர் வசதி அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், முக்கியப்பேருந்து நிலையங்களில், பயணிகளின் வசதிக்கென நவீன கழிவறை, குளிர்நீர், ஒளி விளக்குகள், சுகாதார வசதிகள், சிறந்த உணவக வசதிகள் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

விழாக் காலங்களிலும், கண்காட்சி முதலான பொது விழாக்கள் திருவிழாக் காலங்களிலும், பயணிகள் தங்குதடையின்றி வசதியுடன் பயணம் செய்யக் கூடுதலாகச் சிறப்புப் பேருந்து வசதிகள் செய்து தரப் படுகின்றன.

மாணவ, மாணவியர் பள்ளி செல்ல, கல்வித்துறையில் தமிழகத்தை முதன்மை மாநிலமாகக் கொண்டுவர மனித நேயம் மிக்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் பல கோடி இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என இலவசப் பயணக் கட்டணச் சலுகை வசதி செய்து தரப்படுகிறது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்ய ரூ.1,20,000 வழங்கியவர் புரட்சித்தலைவி.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரான உடல் ஊனமுற்றோர்க்கும், விடுதலைப் போராட்டத் தியாகிகள், புற்று நோயாளிகள், பத்திரிகை நிருபர்கள், மாணவர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், போன்றவர்களுக்கும் கடும் நிதி நெருக்கடியிலும் பல்வேறு பயணச் சலுகைகளை வழங்கி வருகிறது தமிழக அரசு.

கடனைத் திருப்பிச் செலுத்துவதிலேயே கூட, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு சாதனை சகாப்தத்தைப் படைத்திருக்கிறது. 1983-91 ஆகிய எட்டு ஆண்டுகளில் கட்டிய கடன் தொகையோ ரூ.405 கோடி, ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஒன்றரை ஆண்டுகளில் கட்டிய கடன் தொகையோ ரூ.455 கோடி.

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் மேலை நாடுகளைப் போல் பேருந்துகள் இயக்குகிற மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிற வகையிலேதான் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய புனிதப்பெயரால் இயக்கப்படுகின்ற புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 25 சபரிமலைக்கு இயக்கப்பட்டபோது, அங்கு உள்ளவர்கள் எல்லாம் வியந்து, இப்படிப்பட்ட பேருந்துகள் இந்தியத் திருநாட்டிலே இருக்கிறதா என்று பாராட்டும்படி திகழ்ந்து கொண்டிருக்கிறது.

டீசல் விலை புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் 83 சத வீதம் விலை உயர்ந்துள்ளது. உதிரிப் பாகங்கள் விலை, பேருந்து அடிச்சட்டங்கள் விலை, டயர் மற்றும் மசகு எண்ணை ஆகியவற்றின் விலை உயர்வு; இவ்வளவு விலை உயர்வுக்கும் மத்தியில் நஷ்டம் நமக்கு வந்தாலும் கஷ்டம் மக்களுக்கு வரக்கூடாது என்று மனிதநேயத்துடன் ஆணையிட்டு, குறைந்த கட்டணத்தில் பேருந்துகளைத் தொடர்ந்து புரட்சித்தலைவி அவர்கள் இயக்கி வருகிறார்கள்.

மலேரியா, முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும். –காந்தியடிகள்

பணியாளர் நலனுக்குப் பயன்மிகு திட்டங்கள்

பேருந்துகளைச் சீருந்துகளாய் ஆக்குவதோடு மட்டும் நின்றுவிடவில்லை இந்த அரசு. அவற்றைச் சிறப்பாக இயக்க அடித்தளமாக இருக்கும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களின் நல்வாழ்விலும் சிறப்பான அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றது, புரட்சித்தலைவியின் நல்லரசு.

ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வுக் கால நல்வாழ்வு ஊதியத்திட்டம் மூலம் 1.9.92 முதல் ரூ.50/ அவர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்து, ஓய்வு பெற்ற பின் மாதம் ரூ.300/-க்குக் குறையாமல் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியமாகப் பெறும் ஒப்பற்ற திட்டம் இந்தியாவிலேயே முதல் முதலாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சலுகை விலையில் உணவக வசதி, மருத்துவ வசதி, வீட்டு வசதி, போன்ற அனைத்து அடிப்படைத் தொழிலாளர் நல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சொந்த வீடு தொழிலாளர் பெறும் வண்ணம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீட்டு வசதி, வீடுகட்ட கடன் உதவி போன்றவைகள் சிறப்பாக வழங்கப் படுகின்றன. இரண்டு கோடி சுழலும் நிதி ஒன்று உருவாக்கப்பட்டு வீட்டு வசதி விரைந்து கிடைத்திட ஆவன செய்யப் பட்டுள்ளது.

தானாக முன்வந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு, ஒரு ஆண்டுப் பணிக்கு ரூ.8,500/ வீதம் நிதி உதவி அளிக்கப்படுகிறது பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளை நடத்தி தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வித்துறையில் முன்னேற மிகப்பெரிய வாய்ப்பு உருவாக்கித் தரப் பட்டுள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தனது சிறப்பான பணியின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது.

ஓட்டுநர் உரிமங்கள், வண்டிப் பதிவுச் சான்றிதழ்கள், நடத்துநர் உரிமங்கள், ஒரே நாளில் வழங்கும் சாதனையைப் போக்குவரத்துத்துறை செய்துள்ளது பாராட்டத் தக்கது.

50 சி.சி.க்குக் குறைவாக உள்ள இரண்டு சக்கர வாகனங்கள் தமிழகத்தில் 7 இலட்சத்து 74 ஆயிரத்து 323 உள்ளன. ஏழை எளிய மக்கள் பயன்படுத்துவதால் இவ்வாகனங்களுக்கு வரிவிலக்கு அளித்து சுமார் 41 கோடி ரூபாய் வரியை இழந்திருக்கிறது. காரணம் ஏழை எளிய மக்கள்பால் புரட்சித்தலைவி அவர்கள் வைத்துள்ள பற்றும் பாசமுமே காரணம் ஆகும்.

வனத்துறையில் வரலாற்றுச் சாதனைகள்

தமிழ்கூறும் நல்லுலகில், பல்வகை உயிரினங்களையும் அவற்றுக்கேற்ற பொது இயல் அமைப்பினையும் வேளாண்மைக்குத் தக்க இயற்கைச் சூழ்நிலையைத் தன்னகத்தே கொண்டு அமைந்த இயற்கைச் செல்வத்தையும் பாதுகாத்து, நுண்ணிய உயிரியல் இயற்கைச் சூழலை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசின் கோட்பாடாகும்.

ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம், ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும்.

—மூதறிஞர் ராஜாஜி

தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பு 1,30,057 ச.கி.மீ. இப்பரப்பில் 22,692 ச.கி.மீ. வனங்களைக் கொண்டு சுமார் 17.45 விழுக்காடுகள் கொண்டதாக அமைந்துள்ளது. தரம் தாழ்ந்து வரும் காடுகளின் நிலைதனைத் தடுத்து நிறுத்துவதற்கு, பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் மரத் தோட்டங்கள் எழுப்புதல் செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு திட்டப் பணிகள் மூலமாக ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தலும், காடுகளில் அமைந்துள்ள பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான விறகு, கால்நடைத் தீவனம், போன்றவற்றைத் தருதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அதுமட்டுமன்றிச் சமூக நிலங்களில் சுமார் 3 இலட்சம் எக்டர் பரப்பளவில் மரங்கள் நட்டு மக்களுக்குப் பயன்பட ஏதுவாக, சமூக வனவியல் திட்டம் செயல்பட்டு வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வன வளர்ச்சிக்கென 136 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

1991-92 முதல் 1994-95 வரையிலான காலத்தில் ரூ.209.22 கோடிகள் செலவிட்டு 2,02,000 எக்டேர் பரப்பில் பல்வேறு வன அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளோம்.

1991-92 முதல் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்கி, இது வரை ரூ.2,777 இலட்சங்கள் செலவில் 29,700 எக்டர் பரப்பில் வன அபிருத்திப் பணிகள் மேற்கொண்டுள்ளோம்.

சமூகக்காடுகள் அமைப்பதிலும் ரூ.8,867 இலட்சங்கள் செலவு செய்து 62,670 எக்டர் பரப்பில் சமூக நிலங்களில் காடுகள் வளர்க்கும் பணி செய்துள்ளோம்.

வான்வழி விதைத் தெளிப்புத் திட்டம் 45,500 எக்டர் பரப்பளவில் செய்து, வனத்தின் உயர்வினைச் செய்யும் பணி மேற்கொண்டோம்.

1993-94-ஆம் ஆண்டிலே முதல் முதலாகக் கையால் விதை தூவும் திட்டம், ஆரம்பிக்கப்பட்டு, குறிப்பாகக் கிராமங்களிலே பெண்களைக் கொண்டு விதை தூவும் திட்டம் 22,000 எக்டர் பரப்பளவில் செய்து முடித்துள்ளோம். 22,000 எக்டர் ப்ரப்பளவில் 11 மூலிகைப் பண்ணைகள் அமைத்துள்ளோம். 621 ஏழைப் பெண்களுக்கு மரப்பட்டாக்கள் வழங்கியுள்ளோம்.

காடுகளைக் காப்போம்! வனச் செல்வம் போற்றுவோம்!

காடுகளைப் பாதுகாத்து, வனச் செல்வத்தைப் பேணுவதன் அவசியத்தை உணர்ந்து நம் அரசு பல்வேறு போக்குவரத்து வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை வனத்துறையினருக்கு அளித்துள்ளது.

1.1991-ஆம் ஆண்டில் 309 வாகனங்கள் இருந்தன, கடந்த நான்கு ஆண்டுகளில் 195 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2. அதே போலவே 319 துப்பாக்கி வகைகள்தான் இருந்தன, 168 புதிய துப்பாக்கி வகைகள் வழங்கியுள்ளோம்.

3. 156 தொலைபேசிதான் இருந்தன, நம் அரசு 52 புதிய தொலைபேசி அமைக்க ஆணை தந்து அமைத்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் சந்தன மரக் குற்றவாளிகளிடமிருந்து, 2,729 டன் சந்தன மரங்களைக் கைப்பற்றியுள்ளோம். 487 சந்தன மர மற்றும் வனக் குற்றவாளிகளைக் குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் அடைத்து வைத்துள்ளோம். வனக்குற்றங்களில் ஈடுபட்ட 590 வாகனங்களை அரசு பறிமுதல் செய்துள்ளது. இந்திராகாந்தி வனவிலங்குச் சரணாலயம், கொடைக்கானல், தேனி மற்றும் திண்டுக்கல் கோட்டங்களில் கஞ்சா அழிப்புப் பணியினைச் செயல்படுத்தி அழித்தோம்.

வனப் பணியாளரின் வளமான வாழ்விற்கு...

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,012 வனப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு தந்துள்ளோம்.

வனப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.20 வீதம் தற்காப்புப் படி தந்துள்ளோம்.

வனப் பணியாளர்களுக்குச் சீருடைகள் தருவதற்குப் பதிலாக, சீருடைப் படியாக ரூ.1,500 மற்றும் ரூ.1,000 என்ற விகிதத்தில் சரகர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர் ஆகியோருக்குத் தந்துள்ளோம்.

வனக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் வன ஊழியர்களுக்கும், துப்பு தருவோருக்கும் 1991-92ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூ.25,000 மட்டுமே. ஆனால், கடந்த 4 ஆண்டுக் காலத்திலே சுமார் ரூ.47.50 இலட்சங்கள் செலவில் வெகுமதிகள் பலருக்குத் தரப்பட்டுள்ளன.

சுமார் 4 கோடி முதலீடு செய்து, சைதை, பனகல் கட்டடத்தில் வன அலுவலகத்திற்கு என ஒரு கட்டடம் வாங்குவற்கு இவ்வரசு அனுமதி அளித்து, வனத்துறை வாங்கியுள்ளது.

தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஊக்குவிப்போடும், சீரிய வழி நடத்துதலோடும், செயல்பாட்டுத் திறன் காரணமாகவும், தரம் தாழ்ந்த காடுகளில் மரம் வளர்ப்புச் செய்தலும், ஏழை மக்களுக்கு, குறிப்பாகப் பெண் இனத்திற்கு வனத்துறையில் வேலை வாய்ப்பு வசதிகளை அதிகரிக்கச் செய்தலும், வனச் செல்வத்தைப் பேணிக்காத்தலும் என்ற கோட்பாடுகளுடன் செயல்பட்டு வருகின்றோம்.

வன அலுவர்களுக்கு இவ்வரசு பல்வேறு சலுகைகள் தந்துள்ளது. எங்கள் அரசின் இலட்சியக் கோட்பாடு, வனத்தைக் கட்டிக் காத்தலும், பேணுதலும்தான். இதற்கு வனத்துறை அலுவலர்களின் ஆற்றலும் ஒத்துழைப்பும் கொண்டு இன்றைய மற்றும் நாளைய சமுதாயத்தின் தேவைக்குப் பாடுபடுவோம் என்ற இலட்சியத்தின் அடிப்படையிலே செயல் படுவோம்.

புரட்சித் தலைவி காட்டுகின்ற செயல் வேகம்—
புவி இதுவரை காணாத புயல் வேகம்! ❋



சரித்திர நாயகியின்

தொடரும்

சாதனைகள்

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்

திரு இ. மதுசூதனன்

தமிழகம் நல்லதொரு தலைவரைப் பெற ஏங்கித் தவங்கிடந்த காலத்தில் வாராது வந்துதித்த மாமணிபோல் வந்து,

தமிழக மக்களைக் காத்த அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இந்தியாவிற்கே வழிகாட்டும் அளவில் தன் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணம் செய்து, தமிழகம் எல்லாத் துறையிலும் முன்னோடியாக இருக்க அரும் பாடுபட்டு, தன் ஆட்சிப் பதவி யேற்ற நாளில் இருந்து சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்.

கால்நடைப் பராமரிப்புத் துறை என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன்பு முன்னோடித் துறையாக அல்லது மற்ற துறைகளைச் சார்ந்து இருந்த தன்மையை மாற்றி விவசாயப் பெருங்குடி மக்களும், வாழவழியின்றி வாடிய தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ வழிகாட்டிய மனித தேவதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தை விடவும் தமிழகத்தில் மட்டும்தான் 6,587 விவசாயிகளுக்கு மானியத்துடன் 2,260 செம்மறி ஆட்டுப் பிரிவுகளும், 4,322 கன்று வளர்ப்புப் பிரிவுகளும், 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ரூ.188.21 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.150 இலட்சம் செலவில் 386 நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ.2369.15 இலட்சம் செலவில், அதிகப் பால் உற்பத்தி பெற தீவிரக் கால்நடைப் பெருக்கத் திட்டத்தைச் செயலாக்கி, தமிழகத்தில் வெண்புரட்சிக்கு வித்திட்டார்.

ஏழை மக்களுக்கு அட்சயப் பாத்திரமாய் செம்மறி ஆடுகள் பெருக்கத் திட்டத்தில் தமிழகத்தின் ஆறு மாவட்டங்களில் ரூ.1,366 இலட்சம் செலவில் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ஓர் மாபெரும் திட்டத்தைச் செயலாக்கினார்.

பயிற்சி இல்லாத தொழில் எதுவாயினும் குறைபாடு கொண்டது என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறையில் டானிடா உதவியுடன் ரூ.440 இலட்சம் செலவில் புதுக்கோட்டையில் விவசாயிகளுக்குப் பயிற்சித் திட்டம் ஒன்றைச் செயலாக்கினார்.

இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தைவிடவும், தமிழகத்தில் மட்டும்தான் 6,587 விவசாயிகளுக்கு மானியத்துடன் 2,260 செம்மறி ஆட்டுப் பிரிவுகளும், 4,322 கன்று வளர்ப்புப் பிரிவுகளும், 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ரூ.188.21 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

பழங்குடியினரின் பரம்பரைத் தொழிலாம் கால்நடை வளர்ப்புத் தொழிலை, அவர்கட்கு நன்மை சேர்க்கும் வண்ணம் பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.87.49 இலட்சம் மானியத்துடன் 1,129 விவசாயிகட்கு 435 கறவை மாடுகள், 514 செம்மறி ஆட்டுப் பிரிவு, 80 கன்று வளர்ப்புப் பிரிவுகள் வழங்கப்பட்டன.

வெளிநாடுகளுக்கு இணையாகத் தமிழகத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், காங்கேயம் இனத்தின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ரூ.10 இலட்சம் செலவில் காங்கேயம் இனவிருத்தித் திட்டத்தைக் கொண்டுவந்தார்.

மத்திய அரசின் நிதி உதவியைத் தமிழகத்தின் ஏழை விவசாய மக்கள் பயன்படுத்தி வாழ்வில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 4,070 விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு, ரூ. 172.93 இலட்சம் மானியத்துடன் 4,070 செம்மறி ஆட்டுப் பிரிவை அமைத்துச் செயலாக்கினார்.

வாயில்லா ஜீவன்களின் நோயைத் தீர்க்கும் கற்பக மரமாய், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தொலைதூரத்தில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாத கால்நடைகளுக்கு, ரூ.150 இலட்சம் செலவில் 386 நடமாடும் கால்நடை மருந்தகத்தை அமைத்து, கால்நடைகளின் மருத்துவச் சிகிச்சைக்கு வழி அமைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில்தான் எப்போதும் இல்லா அளவில் பகுதி- 2 திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 41 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 30 கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்

பட்டு கால்நடை மருத்துவமனையாக மாற்றம் செய்யப்பட்டது. சைதாப்பேட்டை, கோவை கால்நடை மருத்துவமனைகள் இலட்சக்கணக்கான செலவில் அதிநவீன உபகரணங்கள் கொண்டு 24 மணிநேரமும் இயங்கும் வண்ணம் பல்நோக்கு மருத்துவமனையாக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

வருமுன் காத்து மக்களை வாழ வைக்கும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கால்நடைகளுக்கும் வருமுன் காத்து அவற்றின் நோய்களைக் கட்டுப்படுத்த ஈரோட்டில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவைத் துவக்கினார். இதேபோல் சேலத்தில் கோழி நோய் ஆராய்ச்சிக் கூடம் அமைத்தார். கால்நடைமேல் அக்கறைகொண்டு, அவற்றை நன்கு பராமரிக்க வேண்டி, சைதை நாய் வளர்ப்புப் பிரிவை ரூ. 2.11 இலட்சம் செலவில் மேம்படுத்தினார், நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.

விவசாய, தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டில் அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இலாபம் தரும் பன்றி வளர்ப்புத் திட்டத்தை ரூ.50 இலட்சம் செலவில் தீவிரப்படுத்தி உள்ளார்.

கால்நடைப் பராமரிப்புத் துறையின் முன்னோடியாக விளங்கும் தமிழகத்தில் இத் துறையின் நூற்றாண்டு விழா மாண்புமிகு தமிழக முதல்வர்



அவர்கள் ஆட்சிக் காலத்தில் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற சாதனைகள் படைக்கப்பட்டன. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத புதிய, புதிய துறைகள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் மருத்துவக் கல்லூரியில் துவங்கப்பட்டது. உயிர்த் தொழில் நுட்பவியல் துறை, வனவிலங்கியல் துறை, கதிரியக்க ஐசோடோப் பிரிவு போன்றவை பெருமை சேர்க்கும் துறையாகும்.

இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பணிகளை இந்தியத் தேசம் அக்கறையோடு தன் வரலாற்றில் பதித்துக் கொள்வதை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் கண்கூடாகக் காணலாம்.

சைனஸ் புற்றுநோய் முதற்கொண்டு ஆடுகளின் நீலநாக்கு நோய் வரை எண்ணற்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரும் வகையில் பல புதிய ஆட்டு இனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பல்வேறு தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார்கள். குடியரசுத்தின அணி வகுப்பு விழாவில் இப் பல்கலைக் கழக மாணவர்கள் ஏழு பதக்கங்களைப் பெற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இன்று வரை கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு, இத்துறை இந்தியாவிற்கு வழிகாட்டும் அளவிற்குச் சாதனைபடைத்துள்ளார். இவரின் சாதனைகள் தொடரும், 21-ஆம் நூற்றாண்டிலும் இது தொடரும்.

போற்றத்தக்க பொதுப்பணித்துறை



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு எஸ். கண்ணப்பன்

அன்னைத் தமிழ் பெற்ற அருந்தவப் புதல்வி, தென்னகம் போற்றிடும் தேசியத் தலைவி, 'தமிழர் நலன்களை இமைகொட்டாமல் விழிப்புடன் காக்கும் காவல் தேவதை, உலகம் போற்றும் அறிவும் ஆற்றலும் படைத்த ஒப்பிலா அறிஞர், "கடையர்க்கும் கடைத் தேற்றம்" (unto the Last) காண விழைந்து அன்னை வடிவிலே தோன்றிய அண்ணல், (பெண்ணுருவில் வந்த மகாத்மா) ஈடிலாக் கருணையுடைய எங்கள் இதய தெய்வம், சமூகநீதி வழங்கிடச் சமநீதி காத்துச் சரித்திரம் கண்ட வீராங்கனை, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமைச் சிறப்புப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்ற - பொய்யர் தூற்றுதலில் - கலங்காத, போற்றுதலில் மயங்காத எங்கள் புகழுரைக்குள் அடங்காத - உயர்வெல்லாம் தன்னகத்தே கொண்ட, உண்மைத் தொண்டர்களையெல்லாம் அருள் உள்ளத்தால் ஆட்கொண்ட எங்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இம்மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வராக அமர்ந்து நான்கு இனிய ஆண்டுகளை" நிறைவு செய்திருக்கும் நன்னாள், இது நமக்கெல்லாம் பொன்னாள்!

தமிழக ஆட்சிப் பொறுப்பில் பொற்காலம் படைத்துப் புகழை நிறுவியுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக

தமிழ்நாட்டில் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 மாவட்டங்களில் 8 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப் பட்டன.

பழுதடைந்துள்ள அரசுச் சாலைகளைச் சீர்செய்வதற்கான சிறப்புச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 12,586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீர் செய்யப்பட்டன. இதற்கான ஐந்தாண்டுகள் ஒதுக்கீடு ரூ. 150 கோடி.

கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஜூன் 1995 வரை ரூ. 36.08 கோடி செலவில் 1,175 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கப் பட்டன.

அரசின் பொதுப்பணித்துறை, மற்றும் அதன் இணைந்த பகுதிகளான நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை, மின்துறை ஆகியவற்றின் நான்காண்டுச் சாதனைகளைக் குறிக்கும் சுருக்க உரையினை உங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பாசனப் பிரிவு

நாட்டின் வளமைக்கு உணவு உற்பத்திப் பெருக்கம் இன்றியமையாதது. உணவு தானிய உற்பத்திக்கு அடிப்படை வேளாண்மை மேம்பாடு, வேளாண்மை மேம்பாட்டிற்கு வேண்டப்படுவது பாசன வளம் அல்லவா? எனவே, பாசனம் வளம்பெருக்கிட அரசு இயன்ற வழிகளில் எல்லாம் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றது. அவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

தமிழ்நாட்டில் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆறு மாவட்டங்களில் எட்டு நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டன. மேலும், சுமார் 333 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கி, பதினான்கு நடுத்தர நீர்ப் பாசனத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தேசீய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி ஆதாரத்துடன் ரூ.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால், 1,52,902 எக்டேர் பகுதி ஆயக்கட்டுகள் பயன்பெறும். மேலும், ரூ.87.62 கோடி ரூபாய் செலவில் சுமார் 1,79,670 எக்டேர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில் மூன்று துணைத்திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இவற்றுக்காக டிசம்பர் 1994 முடிய ரூ.9,580 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு ஜூலைத் திங்கள் 12-ஆம் நாள் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடப் பட்டது.

அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்த 12 அணைகளில் ரூ.100 இலட்சம் செலவில் அணுகு சாலை அமைத்தல், கூடுதல் மின் ஜெனரேட்டர்கள் ஆகியவைகளுக்காகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், பாலாறு படிநிலத்தில் 27.4.1994 முதல் 18.9.1994 வரை 98,588 ஏக்கர் நிலத்திற்கும் (முதல் பகுதி) மற்றும் 26.10.1994 முதல் 8.4.1995 வரை சுமார் 98,418 ஏக்கர் நிலத்திற்கும் (இரண்டாம் பகுதி) நீர் வழங்கப்பட்டுள்ளது. ஆழியாறு வடிநிலத்தில் பொள்ளாச்சிக் கால்வாய் 'அ' பிரிவிற்கும் வேட்டைக்காரன் புதூர் கால்வாய் 'ஆ' பிரிவிற்கும் 28.12.1994 முதல் 11.5.1995 முடிய தண்ணீர் வழங்கப் பட்டது.

கீழ்பவானி திட்டக்கால்வாய், அமராவதி நீர்த்தேக்கம், பெரியாறு வைகை பாசனத் திட்டம் ஆகியவற்றின் கீழ் அமைந்துள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த மட்டில், வரும் பருவ காலத்தில் கருநாடக அரசு இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசு வலியுறுத்தப் பட்டுள்ளது.

கிருஷ்ணா குடிநீர்

சென்னைக் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் மார்ச் 1995 வரை, தமிழ்நாடு அரசு ரூ.362 கோடி ஆந்திர மாநிலத்திற்குக் கொடுத்துள்ளது. 1995 டிசம்பர் மாதத்திற்குள் சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர் வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

வடிகால் வசதி

காவிரி கழிமுக நீர்ப்பகுதி மேம்படுத்துதலில் 963 வடிகால் திட்டங்களில் 482 வடிகால் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை எண்ணூர் நெடுஞ்சாலையிலும், மற்றும் கன்னியாகுமரி, சிதம்பரனார் மாவட்டங்களிலும் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், கடல் அரிப்பைத் தடுக்கச் சுவர்கள் கட்டும் பணிக்கு ரூ.50 கோடியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை

பொதுப்பணித்துறையின் அடுத்த பெரும்பணி நெடுஞ்சாலைகள் ஊரகப் பணிகள் சார்ந்ததாகும். நாட்டின் வளமைக்கு, உணவு உற்பத்திக்கு அடுத்த நிலையில் தொழில் பெருக்கம் வேண்டப்படுகிறது என்றறிவோம். தொழில் பெருக்கத்திற்கு மிகமிக இன்றியமையாதது கட்டமைப்பு வசதிகள் (Infra - Structure) அவற்றின் இன்றியமையாத அடிப்படையாக இருப்பவை சாலைகளே. சாலைகளின் வளர்ச்சியும் போக்குவரத்து வசதிப் பெருக்கமும்தான் தொழில் முன்னேற்றத்தைக் கொண்டு வரவியலும். தமிழக அரசு இதன் இன்றியமையாமையை உணர்ந்து, இத்துறையில் மேற்கொண்டுள்ள பெரும்பணிகள் குறித்த விவரங்களைக் காணலாம்.

பழுதடைந்துள்ள அரசு சாலைகளைச் சீர் செய்வதற்கான சிறப்புச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 12,586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீர் செய்யப்பட்டன. இதற்கான ஐந்தாண்டுகள் ஒதுக்கீடு ரூ.150 கோடி. தொழிற்சாலைப் பகுதியைப் பொறுத்தவரை 1,194 கி.மீ. சாலைகள் சீர்செய்யப்பட்டுள்ளன. 331 பாலங்கள் மற்றும் 302.4 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீர்செய்தல் என்னும் இலக்கிற்கு 414 பெரிய மற்றும் சிறிய பாலங்களும் 758 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் மேற்கொள்ளப் பட்டன.

தஞ்சையில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காக 47 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலைகள் 84.10 கி.மீ. நீளமுள்ள பெரிய மாவட்டச் சாலைகள், 57.30 கி.மீ. நீளமுள்ள

இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு செய்வதற்காகவும், 17.40 கி.மீ. நீளமுள்ள தஞ்சை மாநகருக்குப் புறவழிச்சாலை அமைப்பதற்கும் ரூ.2380.70 இலட்சம் அரசால் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.51.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 சாலைப்பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

தேசீய நெடுஞ்சாலை 45 செயல் திட்டத்தின் கீழ் ஜூன் 1995 வரையில் தாம்பரத்தில் இருந்து புக்ககத்துறை வரை 40 கி.மீ. நீளத்திற்கு 4 புறவழிப்பாதை அமைக்கப் பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இயற்கைச் சீற்றத்தினால் உடைந்த 25 பாலங்களைத் திரும்பக்கட்டவும், 36 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் ரூ.21. கோடி வழங்கப்பட்டுள்ளது. ஜூன் 1995 வரை ரூ.16.59 கோடி செலவிடப் பட்டுள்ளது.

கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜூன் 1991 முதல் ஜூன் 1995 வரை ரூ.52.18 கோடி செலவிடப்பட்டுள்ளது.

கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், ஜூன் 1995 வரை ரூ.36.08 கோடி செலவில் 1,175 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டன.

பேருந்துத்தடைச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் ஜூன் 1995 வரை ரூ.47.19 கோடி செலவில் 1,831 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

தேசீய நெடுஞ்சாலைத்துறை ஜூன் 1991 முதல் ஜூன் 1995 வரை ரூ.26.68 கோடி செலவில் 1,135 கி.மீ. நீளமுள்ள தேசீய நெடுஞ் சாலைகளில் ஓடுதளம் புதுப்பிக்கப்பட்டது.

1993 நவம்பர் மாதம் சென்னை, நெல்லூர், கல்கத்தா, தேசீய நெடுஞ்சாலையில் உடைப்பெடுத்ததனால் தற்காலிகச் சிறப்புச் சீரமைப்புப் பணியாக 51.81 மீட்டர் நீளத்திற்கு ஒரு பெய்லி பாலம் ரூ.196 இலட்சம் செலவில் 50 நாட்களில் அமைக்கப்பட்டது. 3.2.1994 முதல் போக்குவரத்திற்கு இப்பாலம் திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மின்சாரத் துறை

இறுதியாக, ஆனால் எல்லாவற்றைக் காட்டிலும் மேலானதாக, நமது உணவு உற்பத்திப் பெருக்கம், தொழில் மேம்பாடு, போக்குவரத்து வசதி ஆகிய அனைத்துக்கும். மின்வசதி வழங்குவதற்கு மிகப்பெரும் முக்கிவத்துவம் உண்டு என்பதை நாம் அறிவோம். மின்சக்தியே அனைத்து ஆக்கச் சக்திகளுக்கும் தலைமையாக விளங்கும் ஆற்றல் அல்லது சக்தியாகும் மின்சக்தித் துறையில் இயக்கப் பணிகளில் தமிழக அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ஆற்றியுள்ள அருஞ்சாதனைகளைக் கீழே காண்போம்:

அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக அனல் மின் நிலையங்களின் செயல்பாடு குறிப்பிடத்தகுந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டது. நீர்த்தேக்கங்களில் பெருமளவில் நீர் இருப்பு பெற்றமையால் உயர் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 16.10.1992 முதல் முற்றிலுமாக நீக்கப்பட்டது.

மின் கட்டமைப்பின் அன்றாட மின்சக்தி பயனீட்டளவு 13.4.1995 ஆம் நாள், இதுவரை எப்போதும் இல்லாத உயர் அளவான 98.801 மில்லியன் யூனிட்டு என்ற அளவை எட்டியது. மேட்டூர் சுரங்கம் மற்றும் மேட்டூர் மடைகள் ஆகிய இடங்களில் உள்ள புனல் மின் நிலை யங்கள் 1994-95-ஆம் ஆண்டு 1375 மெகாவாட் மின் உற்பத்தியை எய்தி, இதுவரை பதிவாகி யுள்ள மின் உற்பத்தியில் இதற்கு முன் எப் போதும் இராத உயர் பதிவினை எய்தி யுள்ளது. மின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்துடன் கீழ்வரும் புதிய மின் திட்டங்களைத் தமிழ்நாடு மின்சார வாரியம்

நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

210 மெகாவாட் திறன்கொண்ட வட சென்னை மின் திட்டம்.

2. 120 மெகாவாட் திறன்கொண்ட பேசின் பாலம் வாயுச் சுழலி மின் திட்டம்.

3. 7.5 மெகாவாட் திறன்கொண்ட சாத்தனூர் புனல் மின் திட்டம்.

4. 8 மெகாவாட் திறன்கொண்ட கீழ்பவானி புனல் மின் திட்டம்.

5. 100 மெகாவாட் திறன்கொண்ட தனியார் துறை உள்ளிட்ட காற்றாலை மின் திட்டங்கள்.

விருதுகள் விவரம்

1. தூத்துக்குடி அனல் மின்நிலையம் 1991-ஆம் ஆண்டில் இந்திய அரசின் மேன்மைமிக்க விருதினை ஏழாவது தடவையாகப் பெற்றுள்ளது.

2. 1992-93-ஆம் ஆண்டிற்கான மேன்மை மிகு உற்பத்தி விருதினை, மேட்டூர் அனல் மின் நிலையம் பெற்றது.

3. 1993-94-ஆம் ஆண்டிற்கான மேன்மை மிகு உற்பத்தி விருதினை, மேட்டூர் அனல்மின் நிலையம் 2 வது முறையாகப் பெற்றது.

4. குறைவான எண்ணெய் நுகர்வின் பொருட்டு, இந்திய அரசின் ஊக்கப்பரிசினை, எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலை யங்கள் பெற்றன.

5. 1992-ஆம் ஆண்டிற்கான குறைந்த எண்ணெய் நுகர்விற்கான பரிசினைத் தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி நிலையம் பெற்றது.

1993-94-ஆம் ஆண்டிற்கான காற்று விசை மின் உற்பத்தி அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டதைக் குறித்து தமிழ்நாடு மின்வாரியம் தொடர்ந்து நான்காவது முறை யாகப் பாராட்டு விருதினைப் பெற உள்ளது.

விவசாயிகளுக்குச் சிறப்புச் சுயநிதியுதவித் திட்டத்தின் கீழ், பம்பு செட்டுகளுக்கு முன் னுரிமை இணைப்புப்பெற ரூ.25,000 செலுத்த வேண்டும் என்ற விதியினை அரசு தளர்த்தி ஒரே சீராகச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.10,000 என்று குறைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் புதிய தொழில் கொள் கைக்கு இணங்க கீழ்வரும் சலுகைகள் உயர்மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்கட்டண வீதத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

முதல் ஆண்டு 40 சதவிகிதம்.

இரண்டாவது ஆண்டு 30 சதவிகிதம்.

மூன்றாவது ஆண்டு 20 சதவிகிதம்.

விசைத்தறியாளர்கள் செய்து கொண்ட முறையீட்டின் அடிப்படையில் மின்னழுத்தக் கட்டண விகிதம் திங்கள் ஒன்றிற்கு முதல் 250 யூனிட்டுகளுக்கு ரூ.1.10 என்றும், அடுத்த 500 யூனிட்டுகளுக்கு ரூ.1.85 என்றும், 750 யூனிட்டுக்கு மேல் ரூ.2.10 என்றும் கட்டணம் வசூலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் திரையரங்குகளுக்கான மின்கட்டண விகிதமும் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் கீழ் வரும் பல்வகைப் பிரிவுகளும், பொதுமக்களுக்கு எல்லா வழிகளிலும் அரிய பணிபுரியும் துறைகளாகும். அவற்றின் நான்காண்டுச் சாதனைகளில் மிக முக்கியமானவற்றை மட்டுமே இங்கு எடுத்துக் கூறியுள்ளோம். இவை இவ்வரசின் அருஞ்சாதனைகள். வரலாற்றில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளன. இந்தியப் பெருநாட்டில், இந்த மாநிலம், வளர்ச்சிப் பாதையில் மிக விரைந்து நடை போடுவதற்கும், அனைத்துத் துறைகளிலும் நமது மாநிலம் முன்னோடியாக விளங்கி முதலிடச் சிறப்பைப் பெறுவதற்கும் பொதுப் பணித்துறையின் கீழ் வரும் பெருந்துறைகள் சிறப்பாக நற்பணியாற்றிவரும்.

தங்கக் குடத்தில் குங்குமப் பொட்டு!

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்

திரு எஸ். ரகுபதி

"தமிழுண்டு, தமிழ்
மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம்
நல்ல தொண்டு"

—என்ற பாவேந்தர் பாரதிதாசன் கருத்திற்கேற்ப, தமிழ் மலர, தமிழ் மக்கள் உயர காலம் காலமாகத் தமிழகம் செய்து வந்த தவத்தின் பயனாய், வளர்ச்சிப் பாதையிலிருந்து, வழி தவறிப்போய்விட்ட தமிழகத்தை வாழ்வளிக்க வந்த வள்ளல்தான் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

தமிழ் மண்ணில்- தமது ஆற்றலால் புதிய வரலாறு படைத்து, புது உலகத்தின் தலைவாயிலை நோக்கி, தமிழ் மக்களை நடத்திச் செல்கிற சாதனை முதல்வர் சரித்திர நாயகி இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் உள்ள இவ்வரசு, நாலாயிரம் கோடி ஆண்டுகள், தமிழ்நாட்டில் நடைப்பயணம் உள்ளதில், நான்காம் ஆண்டை முடித்து, ஐந்தாம் ஆண்டில் காலடியை எடுத்து வைக்கின்றது.

1991-95-ஆம் ஆண்டுகளில் குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.444.11 கோடி செலவில், 29,485 வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.

1994-95-ஆம் ஆண்டில் புதிய திட்டமாகச் சென்னை கோயம்பேட்டில் சென்னப் புறநகர்ப் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

இந்த நான்கு ஆண்டுகளில் இதயதெய்வத்தினுடைய அரசு படைத்துள்ள சாதனைகள், இமாலயச் சாதனைகள். டாக்டர் புரட்சித்தலைவி அரசின் சாதனையைப் பார்க்கின்ற பொழுது 'சீனப்பெருஞ்சுவர்' இன்றைக்குச் சின்னதாகத் தெரிகின்றது. இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் கூட இன்று தமிழகத்தின் தடம் பார்த்து நடக்கத் துடிக்கின்றன. உலகமே இன்று தமிழக அரசின் சாதனையை உவப்போடு பார்க்கின்றது.

இந்திய அரசியல் வானில் எழுந்தது ஒரு பெருஞ்ஜோதி. இந்த ஒளிப் பிழம்பு உலகத்தின் வழி காட்டியாய், ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. எங்கெங்கு இருள் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த திராவிட ஜோதியின் திருக்கரம் பட்டு வெளிச்சப் பிரதேசங்களாக விளங்குகின்றன.

சில இருட்டு மனிதர்களின், குருட்டுக் கண்கள் மட்டும் இந்தப் புரட்சி ஒளியைக் கண்கொண்டு பார்க்கக் கூடாது என்று, குருட்டு மதியால் இறுக மூடிக்கொள்கின்றார்கள்.

இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது புனித அரசு, நான்காண்டில், நாள்தோறும் ஆற்றிய அடுக்கடுக்கான சாதனையினை எண்ணி, எண்ணிச் செவியுள்ளோர் இன்புறக் கேட்கிறார்கள் வாய் உள்ளோர் மனதார வாழ்த்துகின்றார்கள். கண் உள்ளோர் கவினுறக் காண்கிறார்கள்.

"உறு பசியும் ஓவாப்
பிணியும், இல்லாத
அரசே நல்லரசு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, இன்றைக்கு நல்லாட்சி நடத்தும் அரசு, டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு.

மலர்கள் பல இருக்கலாம் அவை தாமரைக்கு ஈடாவதில்லை!

விண்மீன்கள் எண்ணற்றவை மின்னலாம், அவை முழு நிலவுக்கு ஒப்பாவதில்லை!

அதேபோல், மாநில முதல்வர்கள் பலர் இருக்கலாம்.

அவர்களில் யாரும் எங்கள் புரட்சித்தலைவிக்கு ஈடாக இணையாக எதிர் நிற்க முடிவதில்லை!

புரட்சிப் பெண்ணாக விளங்குபவர் எங்கள் தாய். இத்தனைச் சிறப்புமிக்க எமது பொன்மனச் செல்வி புரட்சித்தலைவியின் ஆட்சியின் சாதனைப் பட்டியல், எதிர் முகாமினருக்கெல்லாம் வேதனைப் பட்டியலாக வளர்ந்து கொண்டிருக்கிறது சோதனைப் பட்டியலாகச் சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் நலிவுற்ற மக்களுக்கெல்லாம் நலம் சேர்க்க வாடிக் கிடப்போர் இல்லத்தில் எல்லாம் வளம்சேர்க்க எங்கள் புரட்சித்தலைவி அவர்கள் தீட்டிச் செயல்படுத்தும் திட்டங்கள்தான் எத்தனையெத்தனை!

அவர்கள் வழிகாட்டுதலோடு, தமிழ்நாடு வீட்டுவ்சதி வாரியம் இந்த நான்காண்டுக் காலத்தில் எத்தனை வலிவோடும் பொலிவோடும் வளர்ச்சி பெற்றிருக்கிறது தெரியுமா?

எங்கும் புகழ் தங்கும் நாடாம் எங்கள் தமிழ்நாட்டில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிப் பணிகள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் வசம்தான் உள்ளது. தனக்குவமை இல்லாத மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையினால், தமிழ்நாடு அரசின் வீட்டுவசதித் திட்டங்கள் மூன்று முகமைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை:

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

3. வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

இந்த முகமைகள் மூலம், கடந்த நான்காண்டுகளில் ரூ.1267.90 கோடி செலவில் 3,81,243 வீடுகள் கட்டி முடிக்

கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

1991-95-ஆம் ஆண்டுகளில், குறைந்த வருவாய், நடுத்தர, வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.444.11 கோடி செலவில் 29,485 வீடுகள் இவ்வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் நில எடுப்பு மற்றும் நில மேம்பாட்டுச் செலவும் அடங்கும்.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதியை ஊக்குவிக்கும் பொருட்டு 1991-ஆம் ஆண்டு முதல் நடப்பு ஐந்தாண்டுகளில், எங்கள் தங்கத் தலைவியின் வழிகாட்டுதலின்படி வீடுகள் கட்டும் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 1991-95-ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 48 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அங்கெல்லாம் ரூ.133.71 கோடி செலவில் 13,729 வீடுகள் கட்டுவதற்கு ஏற்கெனவே உடனடியாகப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 7,051 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியப் பணிகள் முதலாவது கட்டம், இரண்டாவது கட்டமாக, நடப்பாண்டில் (1995-96-இல்), 10,300 வீடுகள் பாங்குற உருவாக்கும் வகையில், ரூ.43 கோடி செலவுகளில், மேலும் 29 நகரங்கள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

வீட்டுவசதி வாரியத்தின் நிழல்போல் திகழ்ந்திடும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1991-95-ஆம் ஆண்டுகளில் 45,088 வீட்டு மனைகள் ரூ.166.17 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

பெண்ணினத்திற்கே பெருமை சேர்க்கும் அருமை பெருமைமிக்க புரட்சித்தலைவி ஆணைப்படி, மாநில அரசு ஊழியர்களுக்கு வீடுகள் வழங்குவதை முக்கியமாகக் கருத்தில் கொண்டு, 1991-95-ஆம் ஆண்டுகளில் ரூ.50.52 கோடி செலவில் 3,749 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தஞ்சை விரிவாக்கத் திட்டத்தில், 380 நடுத்தர மற்றும் 83 உயர் வருவாய் வீடுகளும், தமிழ்ப் பல்கலைக்கழக வளாக நிலப்பகுதியில் 100 நடுத்தர வருவாய்க் குடியிருப்புகளும் மற்றும் 304 அரசு ஊழியர் குடியிருப்புகளும், எங்கள் தமிழ்த் தாயின் இணையற்ற தலைமையில், தஞ்சாவூரில் நடந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காகக் குறிப்பிட்ட தேதிக்கு முன்கூட்டியே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் தங்கிய வெளி மாநில, வெளி நாட்டுப் பிரமுகர்கள், இவ்

வீடுகள் நல்ல முறையில் திருப்தியுடன் இருப்பதாகப் பாராட்டிச் சென்றனர். மேற்காணும் இரண்டு திட்டங்களில் மொத்த மதிப்பீடு ரூ.24.47 கோடியாகும். இவ்வாறு தஞ்சையில் கட்டப்பட்டுள்ள வீடுகள் விரைவில் அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசைவாழ் மக்களின் நலத்தினைக் கருத்தில் கொள்ளுவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். 1991-95-ஆம் ஆண்டுகளில் எல்லாவித இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இன்னல்களைத் தாங்கும் வகையில் ரூ.40.03 கோடி செலவில், குடிசைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் 15,445 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, 1991-95-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குடிசைப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு 35,307 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.12.39 கோடி புகழ்மிக்க எங்கள் புரட்சித்தலைவி அரசால் செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் ஊக்குவிக்கப்பட்டு வருவது, விரைவுப்படுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டமும் ஆகும். அத்திட்டத்தின் கீழ் குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுடைய அல்லல்கள் துடைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 1991-95-ஆம் ஆண்டுகளில் ரூ.8.36 கோடி

செலவிடப்பட்டு 53,564 ஏழைக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. நடைபாதைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் ரூ.3.75 கோடி செலவிடப்பட்டு, 4,201 நலிவே துணையாய் வாழும் நடைபாதைவாசிகளுக்கும் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கான அரிய திட்டத்தின் கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ரூ.12.58 கோடி செலவில் 9,718 புதிய குடியிருப்புகள் பொலிவுறக் கட்டித்தரப்பட்டுள்ளன.

வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நிகரற்ற நிர்வாகத் திறத்தால், எம்மாநிலத்திற்கும் வழிகாட்டும் இம்மாநிலத்தின் கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலும் முதன்மைபெற்ற நிறுவனமாக இயங்கி வருகிறது.

1991-95-ஆம் ஆண்டுகளில் இந்த இணையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின் கீழ், வீடுகள் கட்டுவதற்கு ரூ.562.75 கோடி கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை, இந்த இணையத்தால் வழங்கப்பட்ட கடன்தொகை ரூ.594 கோடியாகும். எனவே, கடந்த நான்காண்டுகளில், அதாவது 1991-95-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனுதவியானது கடந்த 32 ஆண்டுகளில் 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை இவ்விணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகையில் 94 சதவிகிதம் ஆகும்.

இந்த அரசுதான், இந்தியாவிலேயே முதல் முறையாகக் கிராமப்புறங்களில் வீட்டு வசதியை மேம்படுத்துவதற்கு ஒரு பெருமைமிகு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டு முதல் 1995-96 ஜூன் 1995 வரை ரூ.10.32 கோடி செலவில் 40,000 குடும்பங்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளன.

கடந்த நான்காண்டுகளில், ரூ.588.89 கோடி செலவில் 2,41,999 வீடுகள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னை மாநகரின் சீரான வளர்ச்சிக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனிக்கவனம் செலுத்திவருகிறார்கள்.

ரூ.50. கோடி செலவில் சென்னையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, ரூ.6 கோடி செலவில் மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம் ரூ.17 கோடி செலவில், சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களைச் சென்னை நகரத்தின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

மாபெரும் நகரத் திட்டம்

தேசிய நகராண்மைக் குழுமம், ஆறு நகரங்களில் சென்னையையும் "மாபெரும் நகரத்தில்" சேர்த்துள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தின் கீழ், 1993-96-ஆம் ஆண்டிற்குள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.170 கோடி மதிப்பீட்டின் முதல் கட்டமாகத் திட்டங்கள் தீட்ட உத்தேசித்துள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த "பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்" என்ற புதிய அமைப்பு முத்தமிழன்னையாம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணைப்படி ஏற்படுத்தப்பட்டது. அதில் மைய மற்றும் மாநில அரசின் மூலதனப் பங்குத் தொகையாக ரூ.60. கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளத் தடுப்பு ஏற்பாடுகள்

1993-94-ஆம் ஆண்டில் புதிய திட்டமாக, வெளி வட்டச்சாலை ஒன்றை உருவாக்கத் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. வண்டலூர் மற்றும் மீஞ்சூருக்கும் இடையில் உள்ள இந்த 68 கிலோ மீட்டர் முக்கியச் சாலை "கட்டு இயக்கு மற்றும் மாற்றல்" அடிப்படையில் தனியார் முதலீடு மூலம் அமைக்கப்படவுள்ளது. மாதவரம் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்துமிடத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு, மற்றொரு புதுத் திட்டமான பள்ளிக்கரணையில் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சாத்தங்காட்டில் அமைய உள்ள

மரம் மற்றும் இரும்புக் கழிவுகள் மொத்த அங்காடி வளர்ச்சித் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது.

மேலும், 1994-95-ஆம் ஆண்டில் புதிய திட்டமாகச் சென்னை கோயம்பேட்டில் சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்க நம் பொன்னான அரசு எங்கள் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அனுமதித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரிய ஆலோசனைப்படி, சென்னைப் பெருநகர் வெள்ளத் தடுப்புத் தொடர்பான ஒரு கலந்தாய்வு ரூ.3 கோடி செலவில் சிறந்த அனுபவம் வாய்ந்த 'மொட் மெக் டொனால்ட்' என்கிற இங்கிலாந்து நிறுவனத்தால் செய்து முடிக்கப் பட்டது. இந்த ஆய்வானது, மழைநீர் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் தொடர்பான வளர்ச்சிப்பணிகள், சென்னைப் பெருநகரின் வட பகுதியில் வெள்ளத் தடுப்புப் பணிகள், பள்ளிக்கரணையில் கழிவுநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவைகளையும் ஆய்ந்து குறிப்பிட்டுள்ளது.

மிக முக்கியமான போக்குவரத்துச் சாலை தொடர்பான விரிவான ஆய்வானது ரூ.1 கோடி செலவில் மூன்று ஆய்வு நிறுவனங்களால் மேற்கொள்ளப் பட்டு ஜூன் 1995-இல் முடிவு பெறும் தறுவாயில் உள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்ககம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டிற்காக மத்திய அரசு உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மங்காப் புகழ்பெற்ற எங்கள் புரட்சித்தலைவியின் அரசு நகர் ஊரமைப்புத்துறை ஒரு முன்னோடி நிறுவனமாக உள்ளது.

கடந்த நான்காண்டுகளில் இத்திட்டத்தின்கீழ், 41 நகரங்களில் 181 திட்டப்பணிகள் ரூ.4414.86 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. ரூ.906 இலட்சம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை அதன்படி 44 திட்டப் பணிகள் நல்வண்ணம் முடிக்கப் பெற்று, உலக அரங்கில் தமிழக அரசின் புகழ் மேலும் பொலிவுற பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவேதான், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், தங்கக் குடத்திலிட்ட குங்குமப் பொட்டாக—

'கோடையிலே இளைப்பாறிக்
கொள்ளும்
வகைகிடைத்த
குளிர்தருவாக-
தருநிழலாக- நிழல்கனிந்த
கனியாக
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீராக—
உகந்த தண்ணீரிடை மலர்ந்த
சுகந்த மணமலராக
மேடையிலே வீசுகின்ற
மெல்லிய பூங்காற்றாக
மென்காற்றில் விளைசுகமாக

நமது தமிழ்த்தரணி விளங்கி வருகிறது. ❋

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக்கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியாவிலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடு தான் என்று, மைய அரசே பாராட்டி உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள்தான், சகோதரிகள் தான். இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.

புரட்சித்தலைவியின் முழக்கம்
தொகுதி-1 விருந்து.

ஊரகத் தொழில் துறையின் ஒப்பற்ற சாதனைகள்!

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
திரு துரை, இராமசாமி

அரசி எவ்வழி அகிலம் அவ்வழி. இயக்குபவர் அவர்... இயங்குவது அரசு... முற்போக்கு, தொலைநோக்குப் புதுமைக்குப் பூபாளமிசைக்கும் அறிவாற்றல் ... மக்கள் நலமே பெரிதெனக் கருதும் மாட்சிமிகு உள்ளம் ... கொள்கை உறுதி, எண்ணியதை, நினைத்ததை முடிக்கும் ஏற்றமிகு செயல் முறைகள் ... புரட்சித்தலைவியே தமிழகத்தின் "நல்லார் ஒருவர்". அவர் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்கிறது. நான்கு ஆண்டுகளிலும் புரட்சித்தலைவியின் செங்கோல் சிறப்பால் மழைவளம் குன்றாமல் மகிழ்ந்தது இந்நாடு. தொழில் வளரத் தூண்டுதல் நம் புரட்சித்தலைவி.

ஊரகத் தொழில் துறையைத் தனித் துறையாக்கி தழைக்க வைத்த பெருமைக்குரியவர் புரட்சித்தலைவி.

"இந்தியாவின் இதயம் கிராமங்களில் இருக்கிறது" என்றார் காந்தியண்ணல். கிராம மக்களும் நகர்ப்புறத்து வசதிகளைப் பெறுவதற்கு அல்லும் பகலும் அயராது திட்டங்களை அளித்தவர் நம் புரட்சித்தலைவி.

ஏழை எளிய கிராம மக்களுக்குக் கல்வி அறிவு, சிறு தொழில், பெருந்தொழில் வாய்ப்புகள், அடிப்படை வாழ்க்கை வசதிகள் எனப் பல்வேறு திட்டங்களால் 85 சதவிகித கிராம மக்கள் பயன்பெறச் செய்தவர் புரட்சித்தலைவி.

கிடைத்தற்கரிய அவருடைய தலைமையின்கீழ்-வழிகாட்டுதலின்படி இயங்கிடும் தமிழ்நாடு அரசு ஊரகத் தொழில் துறை இந்த நான்காண்டுக் காலத்தில் செய்துள்ள பணிகள் சாதனைகள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறைந்த அளவு முதலீடு, ஆனால் பெரும் அளவில் வேலைவாய்ப்பு அளிப்பது சிறுதொழில் துறையின் சிறப்பு அம்சமாகும். இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1992-ஆம் ஆண்டுக்கான தொழிற் கொள்கையில் புதிய தனித்தன்மை வாய்ந்த நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாகத் தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையில் மிக வேகமான வளர்ச்சி காணப்பட்டு வருகிறது.

பெருமளவில் பொருட்களை வாங்குகின்ற அரசு நிறுவனங்கள் சிறுதொழில்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை உரிய காலத்தில் செலுத்துவதைக் கண்காணிக்க

இதுவரை சுமார் 3,355 பெண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.47 இலட்சத் திட்ட மதிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பெருவாரியான ஆற்றல்மிக்க மகளிர் தொழில் தொடங்குவதில் ஈடுபட்டிருப்பதால் அவர்களை ஊக்குவிப்பதற்காகத் திறம்படச் செயலாற்றும் மகளிர் தொழில் அதிபர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் இப்போது செயலாகி வருகிறது.

அமைக்கப்பட்டக் குழுவின் முன் கொண்டுவரப் பட்ட 196 சிறுதொழில் நிலையங்களுக்குரிய ரூ.1066.60 இலட்சம் வசூலிக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டில் பின்தங்கிய வட்டங்கள் 76லிருந்து 85ஆகவும், மிகவும் பின்தங்கிய வட்டங்கள் 31-லிருந்து 32-ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளன. இதன் விளைவாக 15 சதவிகிதம் மற்றும் 20 சதவிகிதம் மானியம் முறையே பெறப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறைந்தழுத்த மின்சாரத்தை நுகர்கின்ற தொழில்களுக்கு உற்பத்தி தொடங்கிய, நாளிலிருந்து முதல் மூன்றாண்டுகளுக்கு 40 சதவிகிதம், 30 சதவிகிதம், 20 சதவிகிதம் மின் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது அதுமட்டு மல்ல, சிறுதொழில் நிலையத்தின் உபயோகத்திற் கென ஜெனரேட்டர் நிறுவப்பட்ட உயர் அழுத்த - குறைந்தழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்து கின்ற சிறுதொழில் நிலையங்களுக்கு ஜெனரேட் டர் விலையில் 15 சதவிகிதம் அதிகப்படியாக ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல் ஜெனரேட்டர் மானியம் அளிக்கப்படுகிறது. புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுவரை 8,968 நிறுவனங்களுக்குக் குறைந்தழுத்த மின் கட்டண மானியம் ரூ.402.87 இலட்சமும், ஜெனரேட்டர் மானியம் 443 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.99.58 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 2,612 சிறுதொழில் நிறுவனங்களுக்கு மாநில மூலதன மானியம் -| சிறப்பு மூலதன மானியம் ரூ.3253.09 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் வட்டியில்லா விற்பனை வரிக்கடனாக ரூ.231.15 இலட்சம் 213 சிறுதொழில் நிறுவனங்களுக்கும், வட்டியில்லா விற்பனை வரிக்கடன் தள்ளிவைப்புத் திட்டத்தில் 1,139 நிறுவனங்களுக்கும் ரூ.9960.34 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

(இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற காலத்தி லிருந்து 5 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்பட வேண்டிய சிறுதொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ஒரு இலட்சத்தில், இதுவரை சுமார் 92,000 சிறுதொழில்களுக்கு நிரந்தரச் சான் றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவற்றில் முதலீடு ரூ.2,002 கோடியெனவும், இவை சுமார் 9 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன என்றும் மதிப்பிடப்பட்டு உள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்த 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி சிறுதொழில்களுக்கு வழங்கப் பட்ட நிரந்தரச் சான்றிதழ்களில் தமிழகம் 5-வது இடத்தையும், இவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பில் முதலிடத்தையும் வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை சுமார் 3,355 பெண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.47 இலட்ச திட்ட மதிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 1,400 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துறையின் கீழ் 410 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், ரூ.21,300.48 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன ரூ.23,766.44 இலட்சம் மதிப்பில் அவை விற்பனை ஆகியுள்ளன.

இந்தியப் பிரதமரின் "ரோஜ்கார் யோசானா" திட்டத்தின் கீழ் 1993-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் இந்நாள் வரை வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 47,827 விண்ணப்பங்களில், 19,293 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டு, ரூ.11,317.06 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

நலிவுற்ற சிறுதொழில்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்திவைப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

குடிசை குறுந்தொழில் மற்றும் சிறுதொழில் முனைவோருக்கு 5 குதிரைச் சக்தித் திறன் வரை மின் கட்டணச் சலுகையை இந்த ஆண்டு 10 குதிரைச் சக்தித் திறன் வரை என்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் மூலம் இலட்சோப இலட்சம் குறுந்தொழில் முனை வோர்கள் பயன் அடைந்துள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் விற்பனை வரி ஒன்பது ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் விற்பனை வரி ஐந்து ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிறுதொழில் களுக்கு சிறப்புதவித் தொகையாக குறைந்தபட்சம் ரூ.15 இலட்சமாகவும், அதிகப்பட்சம் ரூ.35 இலட்சமாகவும் வழங்கப்படுகிறது.

ரூ.50,000 வரையிலான துணை பிணைப் பத்திர முறையைத் தளர்த்தியது மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசு.

சென்னை நகரில் தொழில் உரிமம் தொடர் பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, குறுந் தொழில் முனைவோர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடம் அளித்து, பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்த பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. புதிதாகத் தொழில் தொடங்கு பவர்களுக்கும், நலிந்த தொழில்களுக்குப் புத்துயிர் ஊட்டவும், அவற்றின் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிந்து தீர்வு காண மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து, தொழில் முனைவோர் பிரதிநிதிகளுக்கு இடம் அளித்து, சிறுதொழில்களின் இடர்ப்பாடுகளுக்குப் பேருதவி செய்து வருகிறது நமது புரட்சித்தலைவி அரசு.

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.

–பாவேந்தர் பாரதிதாசன்

ஆற்றல்மிகு தொழிலதிபர்களுக்கு மாநில அரசின் விருதுகள்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தமிழக அரசு, சிறுதொழில்களுக்கான, மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் மற்றும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான விருதுகள் ஆகியவற்றை ஏற்கெனவே வழங்கி வருகிறது.

பெருவாரியான ஆற்றல்மிக்க, மகளிர் தொழில் தொடங்குவதில் ஈடுபட்டிருப்பதால் அவர்களை ஊக்குவிப்பதற்காகத் திறப்படச் செயலாற்றும் மகளிர் தொழில் அதிபர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை, இப்போது செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முதல் பரிசாக ரூ.25,000 ரொக்கப் பரிசும், ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும், நற்சான்றிதழும் வழங்கப் படுகின்றன. மேலும் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளாக முறையே ரூ.15,000, ரூ.10,000, ரொக்கத் தொகையுடன் கூடிய ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன.

தரமிக்க பொருட்களைத் தயாரிக்கும் தொழிலதிபர்களை ஊக்குவிப்பதற்காகப் பெரிய நடுத்தர மற்றும் சிறுதொழில் துறையின் கீழ் வருகின்ற திறமை வாய்ந்த தொழிலதிபர்களுக்கு முதல் பரிசு ரூ.25,000 மும், இரண்டாவது பரிசு ரூ.15,000 மும், மூன்றாவது பரிசு ரூ.10,000மும் ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன. ❋



வேளாண்மையில் சாதனைப் பூக்கள்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு. கு.ப. கிருஷ்ணன்

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு, பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு முன்பு, தமிழ்நாடு வேளாண்மையில், மேலாண்மைச் சிதைவால், கைக்கும் வாய்க்கும் என்ற நிலையே மிஞ்சியிருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் வேளாண்மையில் வியத்தகு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. தாவி ஏறி முன்னேறி வருகிற வேளாண்மை விஞ்ஞானம், அந்த விஞ்ஞானம் விதைத்துள்ள வியத்தகு தொழில் நுட்பங்கள் அவைகளுக்கு இணையாக ஈடு கொடுக்கும் வகையில் புரட்சிகரமான புதிய உத்திகள் புகுத்தப்பட்டு, முன்னேற்றப் பாதையில் வேளாண்மை முனைப்போடு வளர்ந்து வருகிறது.

உணவு உற்பத்தி

1990- 91-இல் தமிழ்நாட்டில் மொத்த உணவு உற்பத்தி 74.94 இலட்சம் டன்கள்தான். ஆனால் இன்றைக்கு, மொத்த உணவு உற்பத்தி 105 இலட்சம் டன்களை எட்டியுள்ளது. நெஞ்சம் உள்ளவர், நேர்மை உள்ளவர் நிறைவோடு பாராட்டும் சாதனை ஆகும் இது.

> **நான்கு ஆண்டுகளில் அரிசி உற்பத்தி 50 சதவிகிதம் உயர்ந்துள்ளது.**
>
> **ஜே.ஜே. 92 என்ற புதிய வகை வாசனை அரிசி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.**
>
> **அரிசி உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.**

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 12.5 சதவிகிதம் என்ற வளர்ச்சி விகிதத்தில், மொத்த உணவு உற்பத்தியை முழுமையாகப் பெருக்கி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட 50 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வு, இந்தியத் துணைக் கண்டத்தின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமானது.

1990- 91-இல் இந்தியாவின் உணவு உற்பத்தி 176.39 மில்லியன் டன்களாகும். அது 1994-95-இல் 185 மில்லியன் டன்கள் என்ற நிலை. அந்த நிலையிலும் கூட, நான்கு ஆண்டுகளில் இந்தியாவில் மொத்த உற்பத்தி 9 மில்லியன் டன்களாக உயர்ந்திருக்கும். வளர்ச்சி விகிதம் ஆண்டு ஒன்றுக்கு 5.5 சதவிகிதமாக இருக்கும். நம் தமிழ்நாட்டு வளர்ச்சி விகிதம் உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில், ஆண்டு ஒன்றுக்கு 12.5 சதவிகிதம். இந்தச் சாதனையைத் தனித்துப் பார்த்தாலும், தொடர்புடைய மற்றவற்றோடு தொகுத்தும், பகுத்தும் பார்த்தாலும் இந்தியாவிலுள்ள எந்த மாநிலமும் எட்டமுடியாத ஏற்றமிகு சாதனையாகும்.

அரிசி உற்பத்தி

1990 -91-இல் தமிழ்நாட்டின் மொத்த அரிசி உற்பத்தி 57.82 இலட்சம் டன்கள்தான். 1994-95-இல் அது 85 இலட்சம் டன்கள். நான்கு ஆண்டுகளில் அரிசி உற்பத்தி 50 சதவிகிதம் உயர்ந்து, இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டின் உழவர் பெருங்குடி மக்களுக்குத் தக்காரும் இல்லை, மிக்காரும் இல்லை என்ற உன்னதமான உயரிய நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

1990-91-இல் மாநிலத்தில், உணவு தேவையை உரிய முறையில் நிறைவு செய்து கொள்வதற்காக, மொத்த நெல் கொள்முதலை அரசே மேற்கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கோ, அரசு மொத்த நெல் கொள்முதல் கைவிடப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, இணையான கொள்முதல் திட்டத்தை (Parallel Procurement) அரசு மேற் கொண்டு வருகிறது.

சிறுதானிய உற்பத்தி

1990-91-ஆம் ஆண்டில் சோளம், ராகி, கம்பு போன்ற சிறுதானியங்கள் உற்பத்தி 13.53 இலட்சம் டன்களாகும். 1994-95-ஆம் ஆண்டில்- ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நம் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில், 15 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

அதைப்போலவே பயறு வகைகள் உற்பத்தியிலும், உற்பத்தி உயர்வுக்காக இந்த அரசு செயலாக்கப்படுத்தியுள்ள தனிச் சிறப்புத் திட்டங்களின் காரணமாக, முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 42 சதவிகிதம் பயறு உற்பத்தி அதிகரித்திருக்கிறது.

எண்ணெய் வித்து உற்பத்தி

பரப்பளவிலும், உற்பத்தியிலும், உற்பத்தித்திறனிலும் எண்ணெய் வித்துக்களைப் பொறுத்த வரை தமிழ்நாட்டின் எல்லா முனைகளிலும் ஏற்றமிகு விளைச்சல், மாற்றமிகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு எண்ணெய்வித்துக்கள் பயிரிடப்படும் பரப்பளவு 28.57 சதவிகிதம் உயர்ந்துகொண்டு வருகிறது. அதே நேரத்தில் உற்பத்தி, ஆண்டு ஒன்றுக்கு 68.63 சதவிகிதம் உயர்ந்துகொண்டு வருகிறது.

1990-91-இல் எண்ணெய் வித்துக்கள் 11.48 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு இருந்தன. அது 1994-95-இல் 15.83 இலட்சம் எக்டர் ஆகும்.

1990-91-இல் எண்ணெய் வித்து உற்பத்தி 12.41 இலட்சம் டன்களாகும். அது இப்பொழுது. 19.50 இலட்சம் டன்கள். எண்ணெய்வித்துக்கள் உற்பத்தித் திறனில் எக்டர் ஒன்றுக்கு 1360 கிலோ என்று இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் முன்னிலையில் உள்ளது.

கரும்பு உற்பத்தி

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முத்தான, சத்தான கொள்கைகள், திட்டங்கள் காரணமாக, விலை நிர்ணய உத்தியின் காரணமாக, தமிழ் நாட்டில் கரும்பு உற்பத்தியில் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, முழுமையாக, நிறைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பரப்பளவிலும், உற்பத்தியிலும், உற்பத்தித்திறனிலும் இனிய, இணையில்லாத முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

1990-91-இல் கரும்பு 2.3 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்தது. 1994-95-இல் அந்தப் பரப்பளவு 3 இலட்சம் எக்டராக உயர்ந்து விட்டது. 1990 மார்ச் மாதத்தில் ஒரு டன் கரும்பிற்கு ரூ.250/ என்று அரசு வழங்கிய விலை. 1994-95-இல் இரு மடங்குக்கும் மேலாக, ஒரு டன் கரும்பிற்கு அரசு வழங்கும்

விலை ரூ.525/ என்பது இனிப்பான செய்தி, தானே!

ஜே.ஜே.92

ஜே.ஜே.92 என்ற புதிய வகை வாசனை அரிசி மக்கள் மனம் மகிழ அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அரிசி ஏற்றுமதியாவதற்கான வாய்ப்புக் கூறுகள் ஏராளமாகவும், தாராளமாகவும் உள்ளது என்பதை இந்த நாட்டு உழவர் பெருமக்கள் உணர்ந்துவருகிறார்கள். எம்.ஜி.ஆர். உயர் விளைச்சல் ரக நெல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு உழவர்களின் உள்ளத்தில் எண்ணெய்ப்பனை உற்பத்தி செய்வதற்குரிய எண்ணம் விதைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சூரியகாந்தி, சோயா பீன்ஸ் ஆகியவற்றைப் பயிரிடும் பரப்பளவு தெரிவு செய்யப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

உயர் விளைச்சல் சிறுதானியங்களும், புதிய துவரை வகையும் உழவர்களுக்குத் தரப்பட்டுள்ளன.

விஞ்ஞான் வளர்ச்சியின் அங்கமான டிஷ்யூ கல்ச்சர் என்ற உற்பத்தியினைப் பயன்படுத்தி, கரும்பு வளர்ச்சியினைப் பெருக்குவதற்கு உரிய வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

வேளாண்மைக்கு நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைக்கான நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ச்சியாக உயர்த்தி, ஊக்கமும் ஆக்கமும் உவந்து அளிப்பதன் காரணமாகத்தான் என்றும், எங்கும், எவரும் ஏற்படுத்த முடியாத சாதனைகள் வேளாண்மையில் இன்று விளைந்துள்ளன. 1990-91-இல் வேளாண்மைக்கென்று ஒதுக்கப்பட்ட நிதி 438.42 கோடி ரூபாயாகும். அது 1995-96-இல் 764.88 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு 74.46 சதவிகிதம் ஆகும்.

> இயற்கை விதிகளைப் பற்றிய கல்வி கேள்விகளால் பெறக்கூடிய அறிவை நாம் கையகப்படுத்த வேண்டும். இதனால் பெறும் சக்தி, பெரியதோர் சக்தியாகும்.
>
> —பெர்ட்ராண்டு ரஸ்ஸல்

வேளாண்மைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிதி நிலையை, மொத்த நிதி நிலையோடு ஒப்பிட்டு நோக்குகையில் வேளாண்மைக்கான நிதி நிலை 9.64 சதவிகிதம் ஆகும்.

வேளாண்மையில் முதல் நிலையில் தமிழகம்

வேளாண்மையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலம், வழிகாட்டும் மாநிலம், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள், கரும்பு, தேங்காய் ஆகியவற்றின் உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் நிலையில் இருக்கிறது.

அரிசி உற்பத்தித் திறனைத் தொடர்ச்சியாக உயர்த்தி, 1993-94-இல் இந்தியாவிலேயே தமிழ்நாடு 2-வது இடத்தில் இருந்தது. 1994-95-இல் நல்ல மிகு விளைச்சல் காரணமாக அரிசி உற்பத்தித் திறனில் பஞ்சாபையும் மிஞ்சி முதல் இடத்தை எட்டிப் பிடித்திடும் ஏற்றமிகு நிலையில் தமிழகம் இருக்கின்றது.

வாழை பயிர் செய்யும் பரப்பளவில் (74,080 எக்டர் பரப்பளவில்) தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது. அதனால்தான் தேசீய வாழை ஆராய்ச்சி மையத்தைத் தமிழ்நாட்டில் நிறுவிட மத்திய அரசு முடிவு செய்தது.

ஆரஞ்சு உற்பத்தித்திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிற்குத்தான் முதலிடம். தமிழ்நாட்டில் எக்டர் ஒன்றுக்கு 20.51 டன் ஆரஞ்சு உற்பத்தியாகிறது.

அன்னாசிப் பழம் உற்பத்தியிலும் தமிழ்நாட்டிற்கு முதலிடம். எக்டர் ஒன்றுக்கு 40.99 டன் அன்னாசிப் பழம் இங்கே உற்பத்தியாகிறது.

முட்டைகோஸ் உற்பத்தியிலும் எக்டர் ஒன்றுக்கு 40 டன் உற்பத்தி செய்து முதல் இடத்தில் உள்ளது.

தக்காளி உற்பத்தித் திறனில் தமிழ்நாட்டிற்குத் தனி இடம். முதல் இடம். எக்டர் ஒன்றுக்கு 25.61 டன் தக்காளி உற்பத்தியாகிறது.

ஏலக்காய் உற்பத்தியில் எக்டர் ஒன்றுக்கு 115 கிலோ உற்பத்தி என்ற விகிதத்தில் தலைமையிடத்தில் தமிழ்நாடு இருக்கிறது.

எண்ணெய்வித்து உற்பத்தி செய்யும் பரப்பளவில் ஒன்பதாம் இடத்தில் இருந்தாலும், அதன் உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது.

கரும்பு உற்பத்தி செய்யும் பரப்பளவில் தமிழ்நாடு இந்தியாவில் நான்காம் இடத்தில் இருந்தாலும், கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியத் திருநாட்டில் மாத்திரமல்ல, உலகிலேயே, உலக நாடுகளிலேயே முதல் இடம் தமிழ்நாட்டிற்குத்தான்.

1991-92, 1992-93 ஆகிய ஆண்டுகளில் விரிவாக்கத்திற்கும், 1992-93-இல் மானாவாரிச் சாகுபடிக்கும், 1991-92, 1992-93 ஆகிய ஆண்டுகளில் உயிர் உர உற்பத்திக்கும் தமிழ்நாடு, தேசீய உற்பத்தித்திறன் பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது என்பது நினைவிலிருந்து என்றைக்கும் நீங்காத,நிறைவு மிக்க சாதனை ஆகும்.

தேசீய அளவிலும், சர்வதேச நிலையிலும் புதிதாக ஏற்பட்டு வரும் மாற்றங்கள் வேளாண்மைத் தொழிலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்த மாற்றங்கள், இவைகளினால் ஏற்பட்டுள்ள, ஏற்படவுள்ள புதிய சூழல்கள் இவைகளையெல்லாம் கருத்திலும், கவனத்திலும் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகளின் அடிப்படையில், நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கேற்ற வகையில் தமிழ்நாடு வேளாண்மைக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அந்தக் கொள்கை உருவாக்கத்தின் ஆதார முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஞாலம் புகழ் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய தலைமையில், போதிய வேளாண் விஞ்ஞானிகளை உள்ளடக்கிய அடிப்படைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய கொள்கை உருவாக்கத்திற்கெனத் தமிழ்நாடு வேளாண் பெருங்குடி மக்களையெல்லாம் இந்த ஆண்டு சனவரி மாதம் திருச்சி மாநகரில் கூட்டி, அவர்களது எண்ணங்களும் கருத்துக்களும் பெறப்பட்டுள்ளன.

மகராசி வேளாண்மை 2000 பார்வை, பாதை, பரிமாணம்

பல்கிப் பெருகிவரும் மக்கள் தொகை, மாற்றங்களைக் குவித்துவரும் அறிவியல் வளர்ச்சி இவை இரண்டிற்கும் ஈடுகொடுக்கும் வண்ணம் இன்றைய வேளாண்மைத் தொழில் புதுப்பிக்கப்பட வேண்டும், புரட்சிமயப்படுத்தப்பட வேண்டும் எனும் தொலைநோக்குச் சிந்தனையில் கருவாகி உருவாகி காலத்தே கனிந்ததுதான் மகராசி வேளாண்மை 2000 பார்வை, பாதை, பரிமாணம் என்னும் தத்துவக் குறிப்பாகும்.

மகராசி என்பது வேளாண்மை வளர்ச்சியின் மிகப் பெரிய குறியீடு ஆகும்.

இது பசுமைப் புரட்சியின் பரிணாம வளர்ச்சி. இரண்டாம் வேளாண்மைப் புரட்சிக்கு இணையிலா வித்து. வேளாண்மை செல்லவேண்டிய வழியின் வியத்தகு திசைகாட்டி, இந்தத் திசைகாட்டியைத் தேசத்திற்குத் தந்துள்ளவர்கள், அன்னையெனும் தத்துவத்தை அம்புலிக்குக் காட்ட வந்த மின்னலாக, விளங்குகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களாகும்.

புதிய பார்வை கொண்டு, புரட்சிகரமான பாதையில் நடைபோட்டு, புலர்ந்துவரும் பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு வேளாண்மைத் தொழிலை விண்முட்ட உயர்த்த அன்னை நமக்கு அளித்துள்ள குறிக்கோள்கள்:

☆ நீடித்த நிலையான வேளாண்மை.

☆ சீர்மிகு நீர் மேலாண்மை.

☆ பயிர்த்தொழிலுடன் பலன் தரும் பக்கத் தொழில்கள்.

☆ உற்பத்திச் செலவுக்கு உரிய, நெறிய விலை.

☆ வெற்றிதரும் வளர்ச்சிக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

☆ ஆக்கம் தரும் வேளாண்மையில் அறிவியல் பொறிகளின் பணி.

☆ வேளாண்மை விளை பொருட்களுக்கு வெளிநாடுகளில் அங்காடி.

☆ காய்கறி விளைச்சலில் கணிசமான பெருக்கம்

☆ விதை உரிமைகளும் வேண்டிய பல்லுயிர்ப் பெருக்கமும்.

இருபத்தோராம் நூற்றாண்டு வேளாண்மைக்கான குறிப்பும், விளக்கமும் மகராசி வேளாண்மை 2000 என்ற தத்துவத்தில் அடங்கியிருக்கிறது என்பதை வேளாண் விஞ்ஞானிகள் விழி உயர்த்தி வியந்து பாராட்டியுள்ளனர்.

உழவே தொழில்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றான் தீப்பந்தப்பாட்டுக்காரன், தென் தமிழ் நாட்டுக்காரன் தேமதுரப் பாரதி. உழவையும் தொழிலையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்த நிலை அன்றைக்கு. ஆனால் இன்றோ, உழவே தொழிலாகும் உள்ளத்தை நம் நாடு கண்டுகொண்டிருக்கிறது.

1991 நவம்பரில் பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெறுவோர்க்கான முதல் பரிசு ஐம்பதாயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும், இரண்டாம் பரிசு இருபத்தையாயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டு,' நான்கு விஞ்ஞானிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

எம்.ஜி.ஆர்.உயர் விளைச்சல் ரக நெல்லை மாநிலத்திலேயே அதிகமாக உற்பத்தி செய்வோருக்கு ரூ.10,000/ - மதிப்புள்ள தங்கப் பதக்கம் டாக்டர் புரட்சித் தலைவி விருது என்கிற வகையில் வழங்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வேளாண் பெருங்குடி மக்களுக்கு விஞ்ஞானத் தொழில் நுட்பங்களைத் திறமையோடும், திட்பத்தோடும் கொண்டு செல்வதை ஊக்குவிப்பதற்காக விரிவாக்க அலுவலர்களுக்கான டாக்டர் புரட்சித் தலைவி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எண்ணெய்ப்பனை உற்பத்தியை அறிமுகம் செய்து ஆக்கப்பூர்வமான முறையில் அதிகரிப்பதற்கான நடைமுறைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எண்ணெய் பனையிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுப்பதற்கான ஆலை ஒன்று அரசு தரும் ஊக்கத்தோடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முதலில் 309 கோடி செலவில் உருவாக்கப்பட்ட வேளாண்மை வளர்ச்சித் திட்டம், 1991-92ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 410 கோடி ரூபாய் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பயிர் விளைச்சல் போட்டிகளில் வெற்றி பெறும் வேளாண் பெருங்குடி மக்களின் குழந்தைகளுக்குத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கெனத் தனி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தரிசு நில மேம்பாட்டிற்கான தனித்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஜே.ஜே.92 வாசனை அரிசி மற்றும் எம்.ஜி.ஆர். உயர் விளைச்சல் நெல் ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டு, அவை விரிவான முறையில் சாகுபடி செய்வதற்கான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

சமவெளிப்பகுதிகளில் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னங்கன்றுகளும், நீலகிரி மலைப்பகுதியில் வாசனைத் திரவியக்கன்றுகளும் வழங்குவதற்கு ஏற்ற டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ச்சித் திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒன்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு ஒன்றும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு

பொதுவாகப் பேசுமிடத்து, நாகரிகம் என்பதெல்லாம் ஒரு மனிதனிடம் ஒரு மனிதன் நடந்து கொள்ளும் விதத்திலேயே பெரிதும் அடங்கி இருக்கும்.

- தந்தை பெரியார்

ஒன்றும் என மூன்று புதிய வேளாண்மை விற்பனைக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

வேளாண் வளர்ச்சியை விஞ்ஞான ரீதியில் விரைவுபடுத்த கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் புதிய சில அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

போதாவூரில் மைய அரசின் தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம்.

சிதம்பரனார் மாவட்டத்தில் தேசிய பனை ஆராய்ச்சி மையம்.

ஆடுதுறையில் தேசீய எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி மையம்.

பெரும்பலூரில் மானாவாரிப் பயிர்களுக்கான வேளாண்மை ஆராய்ச்சி மையம்.

திருச்சி மாவட்டத்தில் மைய அரசின் வேளாண் பொறியியல் பயிற்சி மற்றும் பரிசோதனை நிறுவனம்.

சேலம், மதுரை, காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், தர்மபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் கிரிஷி விஞ்ஞான் கேந்திரா எனப்படும் வேளாண் விஞ்ஞான மையங்கள் ஆகியன.

குடுமியான் மலையிலுள்ள வேளாண்மைப்பயிற்சி மையம். 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் மாநில வேளாண் மேலாண்மை நிறுவனமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயிரியல் தொழில் நுட்பங்களை ஊக்குவிக்கும் புரட்சித் தலைவி அரசு, தனியார் துறையிலும் டிஷ்யூ கல்ச்சர் பிரிவுகளை ஏற்படுத்த முன்வரும் முனைவோர்க்கு ரூ.5 இலட்சம் மானியம் நல்கி வருகிறது. அரசு சார்பில் உதகமண்டலத்திலும், பெரியகுளத்திலும் டிஷ்யூ கல்ச்சர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எங்கள் பாதையும் பயணமும், சத்தியசோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித் தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம்!

- மாண்புமிகு முதல்வர்

80 இலட்சம் ரூபாய்ச் செலவில் உயிர் உர உற்பத்தி மையங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ரூ.99.25 இலட்சம் செலவில் திருச்சியிலும், சாக்கோட்டையிலும் புதிய உர உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு, 1500 டன் உயிர் உரங்கள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் கழிவுகளும் உயிர் உரமாகும் யுக்திகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆலயத் தல விருட்ச மேம்பாட்டிற்கு டிஷ்யூ கல்ச்சர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மண்ணின் தன்மைகளைப் பகுத்தாய்ந்து, அதனை வளப்படுத்தும் வழிமுறைகளைக் குறிப்பிடும் மண் நல அடங்கல் கணிப்பொறி மூலம் தயாரிக்கப்பட்டு, முன்னோடியாக மூன்று ஒன்றியங்களில் முப்பத்தெட்டாயிரம் நில உடைமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 23.467 குழாய்க்கிணறுகள், 13,614 வடிமுனைக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 98,147 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிட்டியுள்ளது. 1,69,467 ஏக்கர் நிலங்களில், பாசனம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு நமது மாநில நீர் வளப் பற்றாக் குறையைக் கருத்திற்கொண்டு தொலைநோக்குப் பார்வையோடு, சிக்கனப் பாசன முறையான சொட்டு நீர்ப்பாசனத்தை அறிமுகப்படுத்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.10.77 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பலனாக 2,22,882 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

கரும்பு, தென்னை, எணணெய்ப்பனை, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவற்றிற்கான நுண்ணிய பாசன முறைகள் மிகப் பரவலாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்திய அளவில், ஏழாம் நிலையிலிருந்து தமிழகம் சொட்டு நீர்ப்பாசன அறிமுகத்தில், இன்று மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்திற்கு உயர்ந்துள்ளது.

சுழற்சிப் பாசன முறைத் திட்டத்தில், கம்பம் பள்ளத்

தாக்கு, கோதையாறு, சித்தார் பட்டணங்கால் ஆகிய பகுதிகளில், முழுமையான பாசனம் கிடைத்திடவும், பாசன நீர் திறம்பட, சிக்கனமாகவும், சீர்பட நிர்வகிக்கப்படும் வகையிலும் திட்டப் பணிகள் 46.74 கோடி ரூபாய்ச் செலவில் தொடக்கப் பட்டுள்ளன.

1.96 கோடி ரூபாய்ச் செலவில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு டீசல் என்ஜின்களும், மிகு திறன் நீர்ப்பாசனச் சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விவசாயிகள் மரணமடைந்தாலோ, அல்லது விபத்துக் காரணமாக ஊனமடைந்தாலோ, அவர்களுக்கு மொத்தமாக ஒரே தவணையில் 25,000 ரூபாய் கிடைக்கும் இலவச ஈட்டுறுதித் திட்டம்.

மூன்று இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள், உதவிகள் பெற்றுப் பொருளாதார உயர்வு பெறுவதற்கு 15.26 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்கள்.

பெரியார், வட ஆர்க்காடு அம்பேத்கர், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 40,000 ஏக்கர் பரப்பு தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கு, பன்னிரண்டு கோடி ரூபாய்த் திட்டம்.

தமிழ்நாடு வணிக மலர்ச்சாகுபடிக் கொள்கை

சென்னை மாநகரில் வேளாண்மை விற்பனை இயக்ககத்துக்கும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கும், 6.5 கோடி ரூபாய் செலவில் பன்மாடிக் கட்டட வளாகம்.

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விரைந்து கொண்டு செல்லுதல், வேளாண்மை விரிவாக்கத்தைப் பரவலாக்கி வலுப்படுத்துதல், ஆகிய முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மிகப் பெரிய திட்டத்தின் கடந்த நான்கு ஆண்டுச் செயலாக்க காலத்தில், 240 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை வேளாண்மை இயக்குநரகத்திற்குக் கூடுதல் கட்டடங்களும், 112 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சி மாநகரில் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய இதர அலுவலகங்களுக்கான கட்டடங்கள் கொண்ட பெரியதொரு வளாகமும், அதைப்போலவே, 114.50 இலட்சம் ரூபாய்ச் செலவில் திண்டுக்கல், கடலூர் ஆகிய இடங்களில் இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான 2 வளாகங்களும், 80 இலட்சம் ரூபாய் செலவில் 2 இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்களும் 362.25 இலட்சம் ரூபாய் செலவில் 21 உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்களும், ஏற்படுத்துவதற்கான அரசு அனுமதி.

1995-96 மற்றும் 1996-97 ஆகிய ஆண்டுகளில் 1970 இலட்சம் ரூபாய் செலவில், 14 இணை இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள் மற்றும் 33 உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள்.

70 இலட்சம் ரூபாய்ச் செலவில் 140 ஒன்றியங்களில் விவசாயிகள் தகவல் மையம்

சரித்திரம் தொடரும்

தமிழ்நாடு வேளாண்மை முன்னேற்றத்தில் சாதனைகள் சரித்திரமாக உருக்கொண்டு உயர்ந்து வருகிறது.

இது முடிவான சரித்திரம் இல்லை.

தமிழக வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கை விடியலுக்குக் கட்டியம் கூறும் முன்னோட்டச் சரித்திரம் ஆகும்.



ஆட்சிக்குப் புகழ் சேர்க்கும் ஆவின்

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்

திரு. தே. ஜனார்த்தனன்

எந்த ஒரு நாட்டின் முன்னேற்றமும், அந்த நாட்டின் கிராமப்புறங்களின் பொருளாதார வளர்ச்சியில்தான் அமைந்துள்ளது என்பது காந்தியடிகளாரின் கருத்தாகும். அதன் அடிப்படையில், சமுதாய வளர்ச்சிக்காக நாள்தோறும் பல புதிய புரட்சிகரமான திட்டங்களை வகுத்து, எல்லாத்துறைகளிலும் செவ்வனே நடத்திவரும் தமிழகத்து விடிவெள்ளி, சமூக நீதி காத்த வீராங்கனை, சாதனைகளைச் சரித்திரமாக்கிடும் பொன்மனத் தலைவி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பால் வளத் துறையிலே பற்பல அரிய திட்டங்களை வகுத்துச் செவ்வனே செயலாற்றி, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள விவசாயப் பெருமக்களின் வாழ்விலே ஒளிவிளக்காகத் திகழ்ந்து வருகின்றார்.

ஒப்பிலாத் தலைவியின் சீரிய நல்லாட்சியில் பால்வளம் பொங்கிப் பெருகிடும் பாங்கினைக் கண்டுவருகிறோம். தரத்திற்கொரு பெயரென்றால் அது ஆவின் என்று நிலைபெற்றுள்ளது. தரமே தாரக மந்திரமென்று ஆவின் வழங்கும் பாலும், பால் பொருட்களும் மிகுந்த வேட்புடன் மக்களால் மதிக்கப்பெற்று, நல் வரவேற்பை நாளும் பெருக்கிக் கொண்டிருக்கும் நிலையினை நாடெங்கும் காணுகின்றோம்.

பால் உற்பத்தி

தமிழகத்தின் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கடந்த நான்கு ஆண்டுகளில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஒப்பற்ற தலைமையில் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இந்த அரசு, பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. 1991 -92-ஆம் ஆண்டு, சராசரியாக நாளொன்றுக்குப் பால் உற்பத்தி 11.36 இலட்சம் லிட்டர் என்ற இலக்கிலிருந்து 1994- 95-இல் பால் உற்பத்தி நாளொன்றுக்கு 14.42 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இது சுமார் 27 விழுக்காடு வளர்ச்சியினை எட்டியுள்ளது. பால் உற்பத்தி மேலும் நாளொன்றுக்கு 16.50 இலட்சம் லிட்டர் என்ற இலக்கினை இந்த ஆண்டு ஜூலை மாத இறுதிக்குள் அடைந்துவிடும்.

பால் விற்பனை

நல்ல தரமான பால் தங்கு தடையின்றி நுகர்வோருக்குக்

உலக வங்கியின் நிதியுதவி தேசிய பால்வள வாரியத்தின் மூலமாகப் பெறப்பட்டு, மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் சுமார் ரூ.88.238 கோடி மூலதனத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் நாளொன்றுக்கு 30 டன் பால்பொடி தயாரிக்கும் ஆலை ஒன்று ரூ.9 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

1994-95-ஆம் ஆண்டில் இணையம் ஈட்டிய இலாபம் 6.59 கோடி ரூபாய்.

கிடைக்கும் பொருட்டு, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு, தமிழகத்தில் உள்ள எல்லா ஊர்களிலும் தரமான பால் தாராளமாகக் கிடைக்க எற்பாடு செய்துள்ளது இந்த அரசு. தமிழ கத்தில் தற்பொழுது நாளொன் றுக்குச் சராசரியாக 14.27 இலட்சம் லிட்டர் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. இதில் சுமார் 8.24 இலட்சம் லிட்டர் சென்னை மாநகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களின் விற்பனை விலையை ஒப்பிடு கையில், மக்களின் நலன் காக்க அல்லும் பகலும் பாடுபடும் புரட்சித்தலைவின் சீரிய தலை மையில் செவ்வனே செயல் படும் தமிழகத்தில்தான், பாலின் விற்பனை விலை மிகவும் குறைவாக உள்ளது.

பால் கொள்முதல் விலை

நுகர்வோர் நலனில் அக்கறை காட்டும் இந்த அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனிலும் அக்கறை கொண்டு, பால் கொள்முதல் விலையைப்பால் உற்பத்தியாளர்கள் தேவைக்கு ஏற்ப, அவ்வப்போது உயர்த்தி வருகிறது. இதனால் பால் உற் பத்தியாளர்கள் பால் உற்பத்தி யைப் பெருக்க வழிவகை செய் துள்ளது இந்த அரசு.

பால் கொள்முதல் விலை கடந்த 20.4.95 முதல் உயர்த்தப் பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:

	பழைய விலை	உயர்த்தப்பட்ட விலை
	(லிட்டர் ஒன்றுக்கு)	
பசும்பால்	5.66	6.46
எருமைப் பால்	6.72	7.72

பால் பொருட்கள்

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பால் உற்பத்தி யாளர்கள் நல்ல விலையைப் பெறுவதற்காகவும் இந்த அரசு உபரியாக உற்பத்தி செய்யப் படும் பாலைப் பால் பொருட் களாக மாற்றி, நல்ல விலைக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங் களில் விற்பனை செய்து வருகிறது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டம்

உலக வங்கியின் நிதி உதவி தேசிய பால்வள வாரியத்தின் மூலமாகப் பெறப்பட்டு, மூன்றா வது பால் பெருக்குத் திட்டம் தமிழகத்தில் 16 மாவட்டங்களில் சுமார் ரூ.88.238 கோடி மூல தனத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1995-ஆம் ஆண்டு முடிவடையும்.

இத்திட்டத்தில் புதிய சங்கங் களைத் தொடங்கவும், மேலும் பால் உற்பத்தியாளர்களைச் சங்கங்களில் சேர்க்கவும், பால் குளிரூட்டும் மற்றும் பால் பதப் படுத்தும் நிலையங்களை நிறுவ வும் சென்னை மற்றும் மாவட் டங்களில் பால் விற்பனையை அதிகரிக்கவும் வழிவகை செய் யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சென் னையை அடுத்த சோளிங்க நல்லூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன்கொண்ட புதிய பால் பண்ணை ரூ.24.80 கோடி செலவில் கட்டிமுடிக் கப்பட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகின்றது. இந்தப் பால் பண்ணை விரைவில் தொடங்கவிருக்கிறது.

பெரியார் மாவட்டம் ஈரோட் டில் நாளொன்றுக்கு 30 டன் பால் பொடி தயாரிக்கும் ஆலை ஒன்று ரூ.9 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மூன்றாம் பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் திருவண்ணா மலை- சம்புவராயர் மாவட்டத் தில் உள்ள திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டரி லிருந்து நாளொன்றுக்கு 1,00,000

உனக்கு உதவி வேண்டுமா ?
அப்படியானால் நீ முதலில் மற்றவனுக்கு
உதவி செய்ய வேண்டும்.

—எமர்சன்

இலட்சம் லிட்டராகவும் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம், நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராகவும் பெருக்குமளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள் ளன. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி பால் பண்ணை, நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டரிலிருந்து 1.50 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில், நாளொன்றுக்கு 1.50 இலட்சம் தயாரிப்புத் திறன் கொண்ட புதிய பால் பண்ணை கட்டி முடிக்கப்பட்டு, அண்மை யில் துவக்கப்பட்டுள்ளது.

சென்னை செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் சாலூரில், நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட ஒரு குளிரூட்டும் நிலை யமும், அதே அளவு திறன் கொண்ட ஒரு குளிரூட்டும் நிலை யம் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள கொடக் கல்லிலும் உருவாகி வருகின்றன.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், தென்னார்க்காடு, வடார்க்காடு , சேலம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் பெரி யார் மற்றும் தர்மபுரி மாவட்டங் களில் பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களின் விரிவாக்கப் பணிகள் நடை பெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதியில் இப்பணிகள் நிறைவு பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்ட முடிவில், இப்போது இருக்கும் பால் பதப்படுத்தும் வசதி நாளொன்றுக்கு 19.64 இலட்சம் லிட்டரிலிருந்து 28.63 இலட்சம் லிட்டராக உயர்த்தப் படும். அதே பால் குளிரூட்டும் வசதிகள் நாளொன்றுக்கு 9.07 இலட்சம் லிட்டரிலிருந்து 12.29 இலட்சம் லிட்டராக உயர்த்தப் படும்.

இதேபோல் மூன்றாவது பால் பெருக்குத் திட்ட முடிவில், சென்னை நகரில் தற்போது இயங்கி வரும் 184 தானியங்கிப் பால் விற்பனை நிலையங்கள், 250 ஆக உயர்த்தப்படும்.

மூன்றாவது பால் பண்ணை சோளிங்கநல்லூரில் செயல்படத் தொடங்கியதும், அம்பத்தூர் பால் பண்ணையின் திறன் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டரிலிருந்து 4 இலட்சம் லிட்ட ராக விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு இணையம் சென்னை நகரில் நாளொன்றுக்கு 9.30 இலட்சம் லிட்டர் பால் விற் பனை செய்யத் திட்டமிட்டுள் ளது.

ஒருங்கிணைந்த பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள்

திருநெல்வேலி கட்டப் பொம்மன் மாவட்டத்தில், ஒருங் கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டமொன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூ.7.05 கோடி மொத்தச் செல வில் 1995- 96-இல் முடிக்கப்படும். 1995 -96-இல் ரூ.4.66 கோடி செலவில் காமராஜர் மாவட்டத் தில் ஒருங்கிணைந்த புதிய பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத் தின் கீழ் திருவில்லிப்புத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணைத் திட்ட மொன்று தொடங்கப்படும். காக்கலூரிலும், திருவில்லிபுத் தூரிலும் உள்ள பால் குளிர் விக்கும் மையங்களைப் பால் பண்ணைகளாக மாற்றியமைத் தால், இம்மாநிலத்தில் மொத்தப் பால் பதப்படுத்தும் திறன், நாளொன்றுக்கு 26.87 இலட்சம் லிட்டர் என்ற அளவை நடப்பு ஆண்டில் எட்டும்.

கறவை மாடு கடன் உயர்வு

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக முதலமைச்ச ராகப் பொறுப்பேற்றபொழுது, கறவை மாடு வாங்கக் கடனுதவி ரூ.3,200 என்ற அளவே இருந்தது. மாறிவரும் பொருளாதாரச் சூழ் நிலைக்கு எற்ப, கறவை மாடுகள் வாங்கும் தொகை உயர்த்தப் படவேண்டும் என்பதை உணர்ந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1992-93-ஆம் ஆண் டில் கறவை மாடு வாங்க 4,500

ரூபாய் வழங்குமாறு உத்தர விட்டார். அதில் 50 சதவிகிதம் மானியம், 50 சதவீதம் வங்கிக் கடன் ஆகும்.

பால் வற்றும் நிலை வரும்போது, ஒரு மாடு மட்டும் வைத்திருப்பது இலாபகரமாக இருந்ததில்லை, எனவே, ஒரு கறவை மாட்டுக்குப் பதிலாக இரு கறவை மாடுகள் என்னும் திட்டத்தை முதன் முதலாக தாயிற் சிறந்த தாயாக விளங்கு கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தார். கறவை மாட்டின் விலை அதிகரித்துள்ளதையும், பொருளாதார ரீதியாக மேலும் உதவி தேவைப்படுவதையும் உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த ஆண்டு முதல் (1995 -96) ஒரு கறவை மாட்டுக்கு 4,500 ரூபாய்க்குப் பதிலாக 6,000 ரூபாய் என்று உயர்த்தித் தர ஆணையிட்டுள்ளார்கள்.



பால்பண்ணைத் தொழில் நுட்பக் கல்வி

தமிழகத்துப் பால்வளப் புரட்சியில் முக்கியமாக ஈடுபடுகிறவர்கள் பெண்கள். அதற்காகப் பயிற்சி பெறவேண்டுமானால் அவர்கள் அடுத்த மாநிலங்களுக்குத் தான் செல்லவேண்டும் என்கின்ற நிலை.

இந்த உண்மையை முதலில் உணர்ந்தவர் தமிழகத்தில் நமது உயிருக்கு நிகரான மாண்புமிகு முதல்வர் மட்டுமே. அதன் விளைவு இன்று நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பால் பண்ணைத் தொழில் நுட்பக் கல்வியினைத் தமிழகத்திலேயே தொடங்க ஆணையிட்டிருக்கிறார்கள்.

இணையத்தின் இலாபம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற ஐந்தாம் ஆண்டிலே அடியெடுத்து வைக்கிற நம்முடைய தமிழக அரசு பால் வளத்துறை தற்போது, இதுவரை காணாத ஈடற்ற இலாபத்தில் நடைபெறுகிறது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பங்கயக் கைகள் பைந்தமிழ் வளர்க்கும் கைகள் மட்டுமல்ல, பால்வளம் காக்கும் கைகளுமல்லவா? எனவே, 1993-94-ஆம் ஆண்டில் 6.13 கோடி ரூபாய் ஈட்டியது தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம்.

உள்ளது சிறத்தல் என்பது வாழ்வின் அடிப்படை மந்திரமல்லவா? 1993 -94-இல் 6.13 கோடி ரூபாய் இலாபம் என்றால் 1994-95-இல் கூடுதல் இலாபம் பெறவேண்டியது அவசியம். அதன்படி 1994 -95-ஆம் ஆண்டில் இணையம் ஈட்டிய இலாபம் 6.59 கோடி ரூபாய்.

மாண்புமிகு புரட்சித் தலைவியின் சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் இந்த அரசின் வெண்மைப்புரட்சித் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டிலே சுமார் 6 இலட்சம் மகளிர், 5 இலட்சம் தாழ்த்தப்பட்டோர், 12,000 பழங்குடியினர் உட்பட - சுமார் 25 இலட்சம் விவசாயக்குடும்பங்கள் பயனடைகின்றனர். ✻

வளமார் வணிகவரித் துறை சாதனைகள்

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்

திரு வி. சத்தியமூர்த்தி

கடந்த நான்காண்டுக்கு முன்னர், பெருவாரியான மக்களின் பேராதரவுடன், ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, மக்கள் அரசு, பேரறிஞர் அண்ணா மற்றும் பாரதரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் ஆகியோரின் வழிநின்று செயல்படும் இணையற்ற இவ்வரசு, வணிக வரித்துறை மூலம் செய்துவரும் சாதனைகளைப் பட்டியலிட்டால் அடங்காது. எனினும், மக்களுக்கு நினைவூட்டும் வகையில், சிற்சில சாதனைகளை வெளியிடுவதில் இத்துறை பெருமகிழ்ச்சி கொள்கிறது.

கொள்முதல்- வரி நீக்கம்

1992-93-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், குங்குமம், கண்மை, கோதுமை, கணிப்பொறி சாப்ட்வேர், இணைப்புகளுடன் எட்டு கிராமிற்கு மிகாத தங்கத்தாலி போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மேலும், அதே நிதி ஆண்டில், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

நெய் மற்றும் பால் பொருட்கள் (வாணிபக் குறியீட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு இடாதது). குச்சிக் கிழங்கு, சிப்சுகள், மாவு, சேமியா, போலி நகைகள், லேமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள், சில மளிகைப் பொருட்கள், வாடகைச் சீருந்து, பதனிடப்பட்ட தோல் உடைமைகள், வெந்தயம், கிராம்பு முதலியன. தமிழ்நாடு ஜாரி நிறுவனத்திலிருந்து விற்கப்படும் ஜாரிகளுக்கும் கொள் முதல் வரி நீக்கமும் செய்யப் பட்டுள்ளது.

சுயவரி விதிப்பு முறை 68,000 வணிகர்கள் பயன் பெறும் வகையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

கேபிள் தொலைக்காட்சி கேளிக்கை மீதான வரியினை 40 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது.

வணிகவரி மாவட்டம்

விருதுநகர் வணிகவரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிதாக சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையரின் தலைமையில் சிவகாசி வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னை செயலாக்கப் பிரிவில் சுற்றும் படைகளைப் பலப்படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய துணை வணிக வரி அலுவலர் பணியிடங்களும், ஐந்து புதிய உதவி வணிகவரி அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

கோவை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு), வணிகவரி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக உதவி ஆணையரின் தலைமையில் ஒரு வணிகவரி

மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. வணிகவரி மாவட்டங்கள் கோவை சரகம் - 1 (தெற்கு), கோவை சரகம் - 2 (வடக்கு), கோவை - 3 (புதியது) எனப் பெயரிடப்பட்டது.

வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களைப் பலப்படுத்தும் நோக்குடன் துணை வணிகவரி அலுவலர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த பத்து வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு, பத்து வணிகவரி அலுவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டு அவைகள் வணிகவரி அலுவலர் அலுவலகங்களாக உயர்த்தப்பட்டன.

மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிப்பளுவைச் சீர்படுத்தி, மேல்முறையீடுகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் சென்னையில் கூடுதலாக ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

1993-94-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1993-94-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை 12.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டதில், விற்பனை வரிவிதிப்பில் கீழ்க்கண்ட வரிக் குறைப்பு – சலுகைகளை அரசு அறிவித்துள்ளது:

முன்னர் அமலில் இருந்த 17 வரி விகிதங்கள், 9 வரிவிகிதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருட்கள் 5 வரிவிகிதங்களில் கொண்டுவரப்பட்டன. வரிவிகித வாரியாகப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டன.

சாமானிய மக்களால் பயன்படுத்தப்படும் பெரும்பான்மையான பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாகக் காப்பிக் கொட்டை, மண்ணெண்ணெய், தாவர எண்ணெய்கள், மஞ்சள், மிளகாய், தனியா, சிகைக்காய், புளி, மிளகு, வெல்லம், கோதுமைப் பொருட்கள் கையினால் தயாரிக்கப்பட்ட சோப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று மருந்து வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், உலர் மின்கலன்கள் ஆகிய உபயோகப் பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கச்சா திரைப்படச்சுருள், எலக்ட்ரோட்ஸ், மற்றும் உருளைகள் மீதான விற்பனை வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனைத் தொகை இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 60,000 வணிகர்களுக்கும் மேலாகப் பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, ஒரு சில தனியே குறிப்பிட்ட இனங்களைத் தவிர, துணைப் பொருட்கள், உதிரிகள், கூட்டு உறுப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதமும், அவற்றின் மூலப் பொருட்களுக்கான வரிவிகிதத்திற்கு இணையாக அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உற்பத்திச் செலவுக் குறைப்பு

இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் ஒருசில பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள் தவிர எரிசாராயம், நாப்தா, மசகு எண்ணெய், கிரீஸ் அனைத்து வாயு (கேஸ்) உற்பத்தி நிறுவனங்களுக்கும் தேவைப்பட்ட அனைத்து மூலப் பொருட்களுக்கும் பிரிவு 3 (3-இன் கீழ்) விதிக்கப்படும் 3 சதவிகிதச் சலுகை வரி, விற்பனைப் பொருட்களுக்கான பேக்கிங் பொருட்கள், பெயர் வில்லைகள் மற்றும் பயன்படு பொருட்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி

அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயர்வுக்கு இல்லை.

–திருவள்ளுவர்

அவர்கள் அரசில், பணி ஒப்பந்தங்கள் மற்றும் குத்தகை மீதான வரிவிதிப்பு தொர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கிணங்க வரி விதிக்கும் முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வரிவிதிக்கப்பட்ட பொருட்கள் மீது மீண்டும் வரிவிதிக்கப்பட மாட்டாது. மேலும், கட்டடப்பணி ஒப்பந்ததாரர்களுக்கு இணக்க முறையில் இரண்டு சதவிகித வரி செலுத்தும் முறை அமலாக்கப்பட்டுள்ளது.

சுய வரிவிதிப்பு முறை 68,000 வணிகர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரூபாய் 75,000 வரை விற்பனைத் தொகையுள்ள அனைத்து வணிகர்களுக்கும், வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட வரித் தொகையான ரூ.3,016.89 கோடி ரூபாயை விட, கடந்த 1993-94-ஆம் நிதியாண்டில் 382.40 கோடி ரூபாய் அதிகமாக, அதாவது ரூ.3,399.29 கோடி ரூபாய் வசூல் செய்து இத்துறை சாதனை படைத்துள்ளது.

வணிகவரித்துறையின் பணியினை மேம்படுத்தும் வகையில் 1993-94-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் ஆவாரம்பாளையம் மற்றும் சேலம் கோட்டத்தில் அரிசிப்பாளையம் ஆகிய இரண்டு புதிய வரிவிதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சென்னையில் புதிய வணிகவரிச் சரகம், அதாவது 11-வது சரகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விற்பனைவரிமேல்முறையீட்டு வழக்குகளை முடிக்கும் பணியினைத் துரிதப்படுத்தும் வகையில் இரண்டு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் பதவியினை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.

சோதனைச் சாவடிகள்

செயலாக்கப்பிரிவின் பணியினை மேம்படுத்தும் வகையில், 1993-94-ஆம் ஆண்டில் கணியூர் (கருமத்துப்பட்டி) வெளிவரி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து பாண்டிச்சேரி மற்றும் காரைக்காலுக்கும், மேலும் அந்த மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கும் எடுத்துச் செல்லப்படும் பொருட்களைத் தணிக்கை செய்வதற்காகப் பாண்டிச்சேரியைச் சுற்றி 8 சோதனைச் சாவடிகளும், மற்றும் காரைக்காலைச் சுற்றி 3 சோதனைச் சாவடிகளும் அமைத்திட அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. இது செயலாக்கப் பிரிவின் பணியினைத் துரிதப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 1993-94-ஆம் ஆண்டில் திருவள்ளூர், பூவிருந்தவல்லி, செங்கை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட கூடுதல் சுழற் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வணிகவரித்துறை அலுவலகங்களை அரசின் சொந்தக் கட்டடங்களில் அமர்த்தி பணியின் தொடர்ச்சியாக வாணியம்பாடியிலும், ஆரணியிலும் உள்ள வணிகவரி கட்டடங்களைத் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டவும், பன்னாரியில் உள்ள சோதனைச் சாவடிக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டடம் கட்டவும் 1993-இல் அனுமதி அளிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இவ்வரசு வணிகர் நலவாரியத்தின் மூலம் வணிகர்களுக்குப் பல உதவிகள் செய்துவருவது தெரிந்ததே. கடந்த 1993-94-ஆம் ஆண்டில் இவ்வாரியம் மேலும் கணிசமான புதிய குறிப்பிடத்தக்க உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது.

காலந்தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்படப் பல்வேறு விற்பனை வரிச் சலுகைகள் தொழிலகங்களுக்கு இவ்வரசு வழங்கி வருவது தெரிந்ததே. இவ்வகையில் 1993-94-ஆம் ஆண்டில் ரூ.85.76 கோடி வரியினைக், காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகையாகத் தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காலந்தள்ளி வரி செலுத்தும் திட்டத்தின் கீழ் தொழிலகங்கள் ஒதுக்கி வைக்கும் வரித் தொகையினைத் தொழிலகங்களின் வருமானமாகக் கணக்கில்

கொண்டு, வருமான வரியினர் வரிவிதிக்க முயற்சித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மக்கள் அரசு அவ்வகைத் தொகை வரியாகச் செலுத்தப்பட்டதாகக் கருதி, அதைத் தொழிகங்களுக்குக் கடனாக அளித்தாகக் கொள்ளும் வகையில் ஆணை பிறப்பித்து, மேற்படி தொகையின் மீது வருமான வரி விதிப்பைத் தடுத்து, பல நலிந்த தொழிலகங்களைக் காத்து வருகிறது.

மேலும் 1994-95-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சில பொருட்களுக்கு வரிவிகித்து, மாண்புமிகு சட்டப்பேரவையில் இவ்வரசு அறிவித்திருந்தாலும், மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் அதைக் கருத்திற் கொள்ளாமல் பல பொருட்களுக்குப் பூரண வரிவிலக்கு அறிவித்துள்ளது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் கீழமைந்த மக்களரசு தான்.

உதாரணமாக பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள், தென்னங்கீற்று, விறகு போன்ற பெர்ருட்களுக்கு வரிவிலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வணிகர் சங்கங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அவர்களை நேரில் சந்தித்து, ஆறாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்களை முதல் அட்டவணைக்குத் திரும்ப பெறுமாறு வேண்டுகோள் விடுத்தனர். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, அனைத்து வகைத் தாவர எண்ணெய்கள், ஏலக்காய், முன்பதிவு செய்யப்பட்ட கேசட்டுகள் (ஆடியோ மற்றும் வீடியோ) மற்றும் காம்பேக்ட் டிஸ்க், சூட்கேஸ், பிரீப் கேஸ் போன்ற பல பொருட்களை ஆறாம் அட்டவணையிலிருந்து முதல் அட்டவணைக்கு மாற்றி வணிகர்களின் கோரிக்கையை நிறைவேற்றினார்.

திரையரங்குகளுக்குச் சலுகைகள்

மேலும், திரையரங்கு உரிமையாளர்களின் நெடுநாளைய கோரிக்கையான காட்சிகளுக்கான அனுமதிக் கட்டணத்தைத் திரையரங்குகளே நிர்ணயிக்கும் உரிமையை – அதிகாரத்தை மாவட்ட ஆட்சியரிடமிருந்து திரையரங்குகளுக்கு மாற்றம் செய்து இவ்வரது ஆணை பிறப்பித்துள்ளது. எனினும், மூன்றாம் வகுப்பு அல்லது கடைசி வகுப்பிற்கான அனுமதிக் கட்டணத்தை உயர்த்தவோ, அவ்விருக்கைகளின் எண்ணிக்கையைக் குறைக்கவோ ஆன அதிகாரத்தை மாவட்ட ஆட்சியரிடமே தொடர்ந்து தக்கவைக்கச் செய்ததன் மூலம் பாமர மக்கள் இவ்வாணையினால் பாதிக்கப்படாமல் செய்திருப்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதுபோன்றே, வணிகர்களின் பல முறையீடுகளின் அடிப்படையில் பின்வரும் பொருட்களுக்கு 28.9.94 முதல் மீண்டும் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கோரைப்புல், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புப் பொருட்கள், உலர்த்திய தேங்காய், துடைப்பம், எழுதும் பென்சில்கள், வண்ணப் பென்சில்கள், அழிப்பான்கள், கூர் சீவிகள், பேனாக்கள், உருள் குழை முனைப் பேனாக்கள், மைக்குச்சிகள், எபோனைட் பேனாக்கள், எபோனைட் உருள் குழை முனைப் பேனாக்கள், மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை, துருப்பிடிக்காத இரும்பு எழுதும் முனைகள், கரும் பலகைகள், துடைப்பான்கள், வடிவியல் பெட்டிகள், பகுத்தாய்வுப் பெட்டிகள், பகுத்தாய்வு பெறுவதற்கான அல்லது வரைவதற்கான பிற கருவிகள், தைக்கப்பட்ட கைத்தறி மற்றும் ஆலையில் தயாரிக்கப்பட்ட கைக்குட்டைகள், பனை வெல்லம், அடுப்புக்கரி, 50 கிராம் எடைக்குட்பட்ட சிப்பம் கட்டப்பட்ட ஊறுகாய்கள் மற்றும் அனைத்து வகையான அப்பளங்களும், வடாம்களும் அடங்கும்.

1995-96-ஆம் ஆண்டு சாதனைகள்

நடப்பு நிதியாண்டில்(1995-96) புதிய வரிகள் ஏதும் விதிக்காமல், பல்வேறு பொருட்களின்மேல் விதிக்கப்பட்டிருந்த வரியை விலக்கிக் கொண்டும், குறைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களின் நலம் நாடும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், புதிய வரிகள்

ஏதும் விதிக்கப்படாமல் பட்ஜெட் சமர்ப்பித்த டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சாதனையை அறிஞர் பெருமக்களும், வணிகர்களும், பொதுமக்களும் வரவேற்றுப் பாராட்டியுள்ளனர்.

வரிச் சலுகைள்

தொழிலாளர்கள், நடுத்தர மற்றும் பாமர மக்கள் பயன் பெறும் வகையில் இதுவரை செயல்பட்டு வந்த சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் மற்றும் நட்சத்திர அந்தஸ்து இல்லாத அனைத்து உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகளின் மீதான விற்பனை வரி இவ்வாண்டுமுதல் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ரூ.20 கோடி நிதியிழப்பு ஏற்படுமென்றாலும், இதனால் சுமார் ஒரு கோடி மக்கள் பயனடைவார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு அரசு வரிவிலக்கு அளித்துள்ளது.

இதர வரிவிலக்குகள்

பாமர மக்கள் மற்றும் சிறார்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு மெழுகுவர்த்திகள், இரப்பராலான விளையாட்டுப் பந்துகள், எண்ணெயில் எரியும் அரிக்கேன் விளக்குகள், அவற்றின் திரிகள், மற்றும் கண்ணாடிக் கூடுகள், அழுத்த விசையில்லாத மண்ணெண்ணெய் அடுப்புகள், முதலியவற்றிற்கு வரியிலிருந்து முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் பயன் பெறும்வகையில் விவசாயச் சமன்படுத்தும் கருவி, களை எடுக்கும் கருவி, விலங்கினால் இழுக்கப்படும் சமன் செய்யும் கருவி ஆகியவற்றிற்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும்,கேபிள் தொலைக்காட்சி மீதான கேளிக்கை வரியினை 40 சதவிகித்திலிருந்து 20 சதவிகிதமாக 1.4.95 முதல் குறைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக அரசுக்கு ரூ.8.50 கோடி ரூபாய் வருவாயிழப்பு ஏற்படும்.

மின்னணுக் கருவிகள்

அட்டைத்தாள்களினால் செய்யப்பட்ட பெட்டிகள் மீதான 8 சதவிகித வரி நெளிவுற்ற பெட்டிகள் மீதான 5 சதவிகித வரிக்கு இண்ணயாக, 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. விரிவடைந்துவரும் மின்னணுத் துறையில் ப்யன்படுத்தப்படும் கொள்திறன் கருவிகள் (Capacitors) மற்றும் மின்விசை மாற்றமைவுகள் (Transformers) மீதான 12 சதவிகித வரிவிகிதத்தினை மின்னணுப் பொருட்களுக்கு இணையாக 3 சதவிதிகமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

லாட்டரிச் சீட்டு மீது விதிக்கப்பட்ட வரிவிதிப்பு இனிமேல் இணக்கத் தொகையாக (Compounded amount) வசூலிக்க முடிவு செய்து அமல்படுத்தப்பட உள்ளது. இவ்வகை வரிவிதிப்பு முறை பரிசுச் சீட்டின் மீதான வரி வருவாயை அதிகப்படுத்தும் எனவும், பரிசுச் சீட்டுகளின் மீதான வரிவிதிப்பில் காணப்படும் குறைபாடுகளைக் களையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாங்கப்படும் பருப்புவகைகள், எண்ணெய் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது போல், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வரிவிதிப்பு செய்யப்படும் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மாற்று உணவு மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வரிவசூல் தள்ளிவைப்பு

புதிய தொழில்களை ஊக்குவிக்கவும், நலிவுற்ற தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கவும், வரித் தள்ளுபடி மற்றும் வரிவசூல் தள்ளி வைப்பு ஆகிய சலுகைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இவ்வரசு அளித்து வருகிறது. இத்திட்டங்களின் கீழ் 1994-95-ஆம் ஆண்டு 28.2.1995 வரை மட்டும் ரூ.143.09 கோடிக்குச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

1991-92-லிருந்து இதுவரை மேற்கண்ட திட்டங்களின் கீழ் சலுகை அளிக்கப்படத் தொகை ரூ.362.94 கோடியாகும். இந்த வரி தள்ளிவைப்புத் தொகை வசூலிக்

புதிய புதிய நூல்களைப் படிப்பதும், புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் ஏற்படும் உண்மையான செயலுமே கல்வியின் பயன்.

–டாக்டர் மு. வரதராசனார்.

கப்பட்டதாகக் கருதப்பட்டு, தொழில்களுக்கான முதலீட்டிற்கும், விரிவாக்கத்திற்கும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டதாகக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

நாணயத்தின் ஒரு பக்கம் கலாச்சாரம் என்றால், மறுபக்கம் மொழி. ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் ஓர் எல்லைக்கோடு இருக்கின்றது.
—டாக்டர் எம்.ஜி.ஆர்.

வணிகர் நல வாரியம்

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராகவுள்ளார். இவ்வாரியத்தின் மூலம் நலிவுற்ற வணிகர்களின் குடும்பங்களுக்கு இவ்வரசு பல்வேறு உதவிகளைச் செய்துவருகிறது. உதாரணமாக, வருமானவரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாத அனைத்து உறுப்பினர்களும் வாரியத்தின் கீழ்க்கண்ட உதவிகள் பெறலாம்:

1. இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவச் சான்றின்பேரில் ரூ.20,000.

2. வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்குக் குடும்ப நலநிதி ரூ.20,000.

3. நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க உதவி.

4. உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி.

இவை தவிர, வாரிய உறுப்பினர்களின் குழந்தைகள் 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்றால் ரூ.5,000-, இரண்டாம் மதிப்பெண் பெற்றால் ரூ.3,000 மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்றால் ரூ.2,000 பரிசாக வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெறும் உறுப்பினர்களின் மகன் மகளுக்கு அவர்கள் சர்வதேச அளவில் வெற்றி பெற்றிருப்பின் ரூ.25,000-மும் அகில இந்திய அளவிலெனில் ரூ.10,000 மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றால் ரூ.5,000 வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகிறது.

கணிப்பொறி மையம்

வணிகவரித் துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும், நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள கணிப்பொறி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. உயர்மட்ட விற்பனைவரிச் சீராய்வுக்குழு தனது அறிக்கையில் அதிவேகமாக வளர்ந்துவரும் வியாபாரத் துறைக்கு ஈடுகொடுக்கவும், பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்புச் செய்வோரை உறுதியுடன் சமாளிக்கவும், காலதாமதம் செய்யாமல் வணிக வரிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கும் முறையைக் கணிப்பொறி மயமாக்குதல் மூலம் செய்யவேண்டுமென்ற பரிந்துரையை ஏற்று தற்போதுள்ள கணிப்பொறி மையத்தின் அமைப்பை மேம்படுத்துவதற்கு ரூ.35 இலட்சங்கள் அனுமதித்து துறையின் வளர்ச்சிக்கு அடிகோடியுள்ளது இவ்வரசு.

புள்ளி விவரத் தொகுப்பு மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தும் முறையைப் படிப்படியாகப் பரவலாக்கும் பொருட்டு, முதல் கட்டமாக கோவை, திருச்சி மற்றும் மதுரைக் கோட்டங்களில் கணிப்பொறிகள் அமைத்து அவை இயங்கி வருகின்றன.

அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் பணிகளுக்கு இத்துறை குறைந்த செலவில் பெருமளவு நிதி ஆதாரம் ஈட்டித் தருகிறது. இத்துறையின் மூலம், பொது மக்களைப் பாதிக்காத வண்ணமும், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயன்பெறும் வண்ணமும் வரிவிதிக்கப்பட்டு வருவதை நாட்டு மக்கள் நன்கறிவர்.

மேலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ் தமிழக அரசு பொதுச்சேவையில் ஈடுபட்டு வரும் தொண்டு நிறுவனங்கள், அனாதை விடுதிகள், ஆசிரமங்கள் பலவற்றிற்கு விற்பனைவரி மற்றும் நுழைவு வரிகளிலிருந்து பூரண வரி விலக்கு அளித்துவருகிறது. இவ்வாறாகக் குறைந்த வரிவிகிதங்களும், ஏராளமான வரிவிலக்குகளும் அளித்துவரும் தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தன்னலமற்ற சமூகப் பணிகள் இன்றுபோல் என்றும் தொடரும் என்பது திண்ணம்!. ❋



தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம்

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

திரு ம. சின்னசாமி

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் தமிழக அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள். தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்குப் பல தடைகள் இருந்ததைக் கண்டு அந்தத் தடைகளைக் களைந்து, தமிழகம் தொழில் வளர்ச்சியில் வேகமான முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்ற நோக்குடன், எல்லா வகைத் தொழில்களைச் சார்ந்த தொழில் அதிபர்களையும் அழைத்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த கொள்கைகளை மாற்றவும், புதிய தொழில் தொடங்குவதற்குச் சுமூகமான, அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் நலிந்த தொழில்களை உயிர்ப்பிக்கவும் தேவையான ஊக்கச் சலுகைகள், தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாடு ஆகிய திட்டங்களுடன் 1992 ஜனவரியில் தமிழ்நாட்டின் "புதிய தொழில் கொள்கையை" டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்தார்கள்.

இந்தப் புதிய தொழில் கொள்கை - விற்பனை வரி விலக்கு, விற்பனை வரி வசூலைத் தள்ளி வைத்தல், முதலீட்டு மானிய உதவி, சலுகை மின் கட்டணம் ஆகிய தொழில் ஊக்க உதவிகளை அளிக்க வகை செய்கிறது. மேலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான தடையில்லாத் தண்ணீர் மற்றும் மின்சார விநியோகம், தொலைத்தொடர்பு வசதி, மேம்படுத்தப்பட்ட சாலைகள் இவைகளுடன் கூடிய புதிய தொழில் வளாகங்களை உருவாக்கவும் இந்தப் புதிய தொழில் கொள்கை வகை செய்கிறது.

சென்னை அருகில், சோழிங்கநல்லூரில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.450 கோடி செலவில், நவீன தொழில் அடிப்படை வசதிகள் கொண்ட சென்னைத் தொழில் பூங்காத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இதுவரை மொத்தம் ரூ.15,757.74 கோடி மதிப்புள்ள 54 புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தொழில் துறையில் முன்னணி!

பல்வேறு மாநிலங்களில் உள்ள குழப்பமான சூழ்நிலையை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் உள்ள அமைதியான சட்டம் ஒழுங்கு நிலைமை ஆர்வமுள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது.

தொழில் உற்பத்தி, தரம், கடன் வசதி போன்ற பல்வேறு இனங்களில் அகில இந்தியாவில் தமிழகம் மற்ற மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது. குறிப்பாக, சிறு தொழில்களின் ஆண்டு வளர்ச்சி 15.25 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

தொழில் துறையில் எங்கள் முன்னேற்றம் மனநிறைவு அளிப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள நிலையை அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் நினைக்காமல், தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தி, தமிழ்நாட்டைத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதல் இடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறோம்.

–"புரட்சித்தலைவியின் முழக்கம்"

தொகுதி - 2-லிருந்து

SIPCOT எனப்படும் மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் இராணிப்பேட்டை, ஓசூர், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஏற்கெனவே உருவாக்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. தொழிலில் பின்தங்கிய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், செய்யாறு என்னுமிடத்தில் சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு நவீன தொழில் வளாகத்தை SIPCOT நிறுவனம் அமைத்து வருகிறது. இந்த நிறுவனம் கும்மிடிப்பூண்டியில், "ஏற்றுமதி வளர்ச்சி தொழில் பூங்கா" ஒன்றை ரூ.20 கோடி செலவில் 211 ஏக்கர் பரப்பில் அமைத்து வருகிறது. புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TACID) 1992-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம், பெரியார் மாவட்டம் பெருந்துறையிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானிலும், மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் நவீன தொழில் வளர்ச்சி மையங்களை அமைத்து வருகிறது. TACIDநிறுவனம் தருமபுரி மாவட்டம் பருகூரிலும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டையிலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் ஊத்துக் கோட்டையிலும், இராணிப்பேட்டை மூன்றாம் பகுதி ஆகிய இடங்களில் நவீன தொழில் வளாகங்களை மாநில அரசு நிதி உதவியுடன் உருவாக்கி வருகிறது. பனியன் ஏற்றுமதிக்குப் புகழ் பெற்ற திருப்பூர் நகரத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும் ரூ.653.20 கோடி செலவில் ஒரு அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்குடன், TACID நிறுவனம் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்துடனும், பம்பாயிலுள்ள 'அடிப்படை வசதிகள் வாடகை மற்றும் நிதிச் சேவைகள் நிறுவனத்துடனும்' ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் "திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம்" என்ற பெயரில் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெரிய முதலீடுகள்

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்துடனும், SPIC நிறுவனத்துடனும் கூட்டாகச் சேர்ந்து ரூபாய் 2,000 கோடி செலவில் அரோமேடிக் தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு 1,500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை அருகில் சோழிங்கநல்லூரில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 450 கோடி செலவில், நவீன தொழில் அடிப்படை வசதிகள் கொண்ட சென்னை தொழில் பூங்காத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற SPIC நிறுவனமும், சென்னை பாலாஜி குருப் நிறுவனமும், தொழில் முனைவோர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிங்கப்பூர் மலேசியா நாடுகளிலிருந்து இந்தத் திட்டத்தில் பங்கு பெறத் தகுதியான தொழில் நிறுவனத்தைக் கண்டறிய உள்ளனர். இந்தத் தொழில் பூங்கா ஆசியா பசிபிக் பகுதியில் எல்லா நவீன வசதிகளையும் கொண்ட ஒரு எடுத்துக்காட்டுத் தொழில் பூங்காவாக விளங்கும்.

புதிய தொழில் முதலீடுகள்

இந்த அரசு பதவியேற்ற காலத்திலிருந்து இதுவரை, மொத்தம் ரூபாய் 15,757.74 கோடி மதிப்புள்ள 54 புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி மாநில அரசால் வழங்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தின் செயல்திறன் ஆண்டு ஒன்றுக்கு 90,000 மெட்ரிக் டன்னாக இருந்தது. இந்தக் காகித ஆலையின் செயல்திறனை இருமடங்காக்க, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,80,000 மெட்ரிக் டன் காகிதத்தை உற்பத்திய செய்ய ரூபாய் 525 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இந்தக் காகித ஆலை நிறுவனம ரூபாய் 50 கோடி செலவில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில தேவர்குளம் மற்றும் பெருங்குடி கிராமங்களில் 15 மெகாவாட் காற்றாலைத் திட்டம் ஒன்றை அமைத்துள்ளது.

நேரடி நிதியுதவி

1991 ஆம் ஆண்டு முதல் இதுவரை SIPCOT நிறுவனம் 276 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 280.28 கோடி காலக் கடன்கள் வழங்கியுள்ளது. 1995-96-இல் ரூபாய் 65 கோடி கடன்கள் வழங்கப்பட உள்ளது. இவைகள் மூலம் தொழில் முதலீடுகள் அதிகரித்து வேலைவாய்ப்பும் பெருகி உள்ளது. SIPCOT நிறுவனம் நீண்ட காலக் கடன்களை வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக 300 இலட்சங்கள் வரையிலும், வழங்கவும், கூட்டு நிறுவனங்களைப் பொறுத்த வரையில் ரூபாய் 90 இலட்சங்கள் வரை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி முன்னேற்ற மையம்

தொழில் தொடங்குபவருக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அளிக்க தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி மையம் (Guidance) ஒன்றை இவ்வரசு அமைத்துள்ளது. அரசின் தொழில் கொள்கைகள், நடைமுறைகள், ஊக்கச் சலுகைகள், ஏற்றுமதி விவரங்கள் ஆகியவை அடங்கிய பல்வேறு வெளியீடுகளை இம்மையம் தயாரித்துள்ளது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளுக்கு இம்மையம் ஒரு பாலமாகச் செயல்படுகிறது. மேலும், உலகின் பல்வேறு நாடுகளின் ஏற்றுமதி மற்றும் மார்க்கெட் ஏற்றுமதியாளர்களுக்குத் 'தகவல் தொடர்பு வசதி' ஒன்றை (Guidance)மையம் ஏற்படுத்தியுள்ளது. இந்த மையம் நாட்டின் பல பகுதிகளிலும், வளைகுடா நாடுகளிலும் தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள் குறித்துப் பல கருத்தரங்குகள் நடத்தியுள்ளது. ஏற்றுமதி குறித்த உயர்மட்டக் குழுவின் கூட்டங்களுக்கு ஒருங்கிணைப்பாளராக இம்மையம் செயல்பட்டு ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறது.

சர்க்கரைத் தொழில்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள போளூரிலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் வாலாஜாபாத்திலும் புதிய சர்க்கரை ஆலைகள் தனியார் துறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. இணை மின் உற்பத்தித் திட்டத்தின்கீழ் இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மின் உற்பத்தியைத் தொடங்கி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி வருகிறது. இரண்டு தனியார் சர்க்கரை ஆலைகளும் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் இணை மின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

மின்னணுத் தொழில்

தமிழக அரசின் ELCOT நிறுவனம் பொதுத்துறையில் ஒரு தொழிற்சாலையையும், இணைத் துறை, கூட்டுத்துறை, மற்றும் வழிகாட்டுத் துறையில் 23 தொழிற்சாலைகளையும் நிறுவி வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மின்னணு தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு, அதில் ஏற்றுமதிக்கான மின்னணுப்

பொருட்களைத் தயாரிக்கும் 11 தொழிற்சாலைகளை, அமைக்க மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டு, 3 தொழிற்சாலைகள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கி விட்டது. மீதமுள்ள 8 தொழிற்சாலைகள் விரைவில் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

சுரங்கம் மற்றும் கனிமப் பொருட்கள்

தமிழ்நாடு கனிம நிறுவனம் தருமபுரி மாவட்டம் மாதப்பள்ளியில் கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையையும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் சிவகங்கையில் கிராபைட் மேம்படுத்துதல் தொழிற்சாலையையும் அமைத்து உள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்றுமதிக்கான சிறப்புப் பரிசைப் பெற்று வருகிறது. ரூபாய் 50 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படும் பெரிய தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தேவைப்படும் பல்வேறு துறைகளின் அனுமதிகளை ஒரே இடத்தில் வழங்குவதற்கு உயர் அதிகாரக் குழு ஒன்று ஜனவரி 1995-இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்மட்டக் குழு சமீபத்தில் கூடி ரூ.5974.35 கோடிகள் முதலீட்டுடன் 22 தொழில் திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தனியார் துறை தொழில்கள்

நேரடி வெளிநாட்டு முதலீடு

கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவது தான் கல்வி —மாண்புமிகு முதல்வர்

களை ஈர்ப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. 170 வெளிநாட்டு மூலதனங்களுக்கு ஒப்புதல் பெற்று அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தையும், ரூ.1,160 கோடி அளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்று நான்காவது இடத்தையும் தமிழகம் பெற்று உள்ளது.

ஆகஸ்டு 1991 முதல் மார்ச் 1995 வரையிலான காலத்தில் தமிழகத்தில் 1,454 தொழில் முனைவோர் மனுக்கள் ரூ.20,807 கோடி மூலதனத்தில் 2,42,176 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 1,454 தொழில் திட்டங்கள் பதிவு பெற்றுள்ளன. இவைகளில் 506 தொழிற்சாலைகள் செயல்படுத்தப்பட்டு விட்டன. DCM, McNally Bhavar, Duncan Agro Industries, JK Corporation, WIMCO, Surlej Cotton Mills, Pennar, Natco, Enkay Petro Chemicals, Jenson and Nicholson, Skyline Anantapur Spinning Mills, Tapar Dupont, Sterlite போன்ற பெரிய தொழில் நிறுவனத்தார் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வந்துள்ளனர். பம்பாயைச் சேர்ந்த ஸ்டெர்லைட் நிறுவனம் தூத்துக்குடியில் ரூ.1,300 கோடி மதிப்பில் ஒரு காப்பர் தொழிற்சாலையை, நிறுவி வருகிறது.

மேட்டூரில் கடந்த 12 ஆண்டுகளாக மூடிக்கிடந்த Madras Aluminium Co. Ltd., தொழிற்சாலையை இந்த Sterlite நிறுவனம் ஏற்று 1,500 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து நடத்தி வருகிறது. Tappar Dupont என்ற இந்திய நிறுவனம் அமெரிக்காவின் Dupont என்ற பிரபல தொழில் நிறுவனத்துடன் இணைந்து ரூ.1,600 கோடி செலவில் நைலான் 6.6 என்ற இழை தயாரிக்கும் தொழிற்சாலையை சென்னை அருகே கும்மிடிப்பூண்டி SIPCOT தொழில் வளாகத்தில் நிறுவி வருகிறது. எனவே கடந்த நான்கு ஆண்டுகளில் புரட்சித் தலைவியின் புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனாகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பெருமைப்படத்தக்க முன்னேற்றத்தை அடைந்து உள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது.

தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு இந்தியாவின் மாநிலங்களில் தமிழகம் முதல் நிலையை எட்ட எல்லா முயற்சிகளையும் புரட்சித் தலைவியின் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். ❋

சமூக நலத்துறையின் சாதனைச் சரித்திரம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

புலவர் திருமதி இந்திரகுமாரி

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்றார் வள்ளுவர், இந்த வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றவர் தமிழக முதல்வர் நம் அன்புத்தாய் புரட்சித் தலைவி அவர்கள்.

அவர்களின் ஆற்றல், அறிவு, ஞானம் இவை அனைத்தும் இளைய தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டு. சில தலைவர்களின் சாதனைகள் சரித்திரத்திலே இடம் பெறுகின்றன. ஆனால் புரட்சித்தலைவி அவர்களோ சரித்திரங்களையே சாதனைகள் ஆக்கியவர். பெண்களின் முன்னேற்றம், குழந்தைகள் நலம் ஆகியவற்றிற்குத் திட்டங்கள் பல தீட்டியதில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனைக்கு ஈடேது இணையேது?

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்'

—என்ற பாரதியாரின் கவிதைக்கு வடிவம் கொடுத்தவர் தான் நம் புரட்சித்தலைவி அவர்கள்.

எத்தனை, துன்பங்கள் துயரங்கள் அவரைச் சூழ வந்தபோதும் அவையெல்லாம் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து ஓடி ஒளிந்திருக்கிறதே ஒழிய புரட்சித்தலைவி அவர்கள் ஒரு நாளும் அவைகளைக் கண்டு அஞ்சியதில்லை. மாறாக அவைகளை விரட்டி அடித்து நாளும் வெற்றி மீது வெற்றி குவித்துக்கொண்டே இருக்கிறார். அவரின் சாதனைகளை, சரித்திரம் என்றும் நினைவு கொள்ளும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சமூகநலத் துறையின் நான்காண்டுக் காலச் சாதனைகள் எண்ணற்றவை, எண்ணி யெண்ணிப் பூரிக்கத் தக்கவை.

அவற்றுள், குறிப்பிடத்தக்க சில இங்கே அழகுற அணிவகுக்கின்றன.

பெண் குழந்தைகள் பாதுகாப்பு

உடல் ஊனமுற்றோரின் நலனுக்காகத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவிலேயே முதன் முறையாக உடல் ஊனமுற்றோருக்கான கொள்கை, பெண்களுக்கான கொள்கை, குழந்தைகளின் நலனுக்காக டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் 15 அம்சத் திட்டம் மூலம் உருவாக்கப்பட்டது.

கைத்தறித்துறையும், சமூகநலத் துறையும் இந்த நான்காண்டுக் காலத்தில் ஆற்றியுள்ள அரும் பணிகள் புரட்சித்தலைவி அவர்களின் சாதனைச் சரித்திரத்தில் முத்தாய்ப்பாக விளங்குபவையாகும்!

மாநிலத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த வரதட்சணைக் கொடுமைகளை விசாரிப்பதற்காக மாநிலப்பெண்கள் நலக் குழுமம் அமைக்கப்பட்டது.

பெண் குழந்தைகளைப் பிறந்த உடன் கொல்வதைத் தடுப்பதற்காக டாக்டர் புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தக் குழந்தைகளை அரசே வளர்க்கும் என்று, உலக அளவிலேயே முதன் முதலாகத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் இந்தத் திட்டத்தை கொண்டு வந்தார்.

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் கன்னியாகுமரி, நாகை காயிதேமில்லத், தஞ்சாவூர் மாவட்டங்களில் விரிவுபடுத்தியுள்ளோம்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

பெண்கள் சிறு சேமிப்புத் திட்டத்தில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கையால் 11 பரிசுகளும், 3.50 இலட்சம் ரூபாய் பண வெகுமதிகளும் வழங்கப்பட்டன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.200-இல் இருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டது.

முதியோர் உதவித்தொகை ரு.75ல் இருந்து ரு.100-ஆக உயர்த்தப்பட்டது, பொன்மனத் தலைவி எங்கள் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலேதான்.

திருமண உதவித் தொகை ரூ.1000-த்தில் இருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டது.

உடல் ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் கேட்டவர்க்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கப்பட்டது.

பார்வையற்றோருக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை ரூ.50 அதிகம் உயர்த்தப்பட்டது.

மத்திய அரசு அநாதை இல்லங்களுக்குக் கொடுத்து வந்த மான்யத்தை நிறுத்திய போதிலும், மாநில அரசு புரட்சித் தலைவியின் ஆட்சியில் அதிகமாக மானியத்தைக் கொடுத்தது.

சத்துணவுத் திட்டத்திற்குத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கான கொள்கையை மாநில அரசு வகுத்தது; டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் அன்னை தெரசா அவர்கள் அதனை வெளியிட்டார்.

உடல் ஊனமுற்றோர் நெய்த துணியை சீனாவில் உள்ள பெருஞ்சுவரை அலங்கரிப்பதற்கு நமது இணையற்ற முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தமிழக அரசு, சீன நாட்டிற்கு அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளின் இறப்பு விகிதத்தைத் தமிழக அரசு தன்னுடைய அரும்பெரும் திட்டத்தினால் குறைத்துள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல்

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்கிவரும் பழம்பெருமையான கைத்தறித்தொழில் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரும் பங்காற்றி வருகின்றது. பாரம்பரியம் வாய்ந்த கைத்தறித் தொழில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் சிறப்போடு வளர்ந்து நெசவாளர்களின் வாழ்விற்குப் புதிய உத்வேகத்தை உண்டாக்கியுள்ளது.

புரட்சித் தலைவியின் சீரிய முயற்சியினால் இன்று 1,477 நெசவார் கூட்டுறவுச் சங்கங்களில் 4.22 இலட்சம் நெசவாளர்கள் கொண்டுவரப்பட்டு, பயனடைந்து வருகின்றனர். இவ்வாறு 4.22 இலட்சம் நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணர்ந்ததன் மூலமாக 4 ஆண்டுகளுக்கு முன் ரூ.220 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் உற்பத்தி, படிப்படியாக உயர்ந்து இவ்வாண்டு ரூ.347.39 கோடியாக அதிகரித்துள்ளது பெருமைப்படத்தக்க சாதனையாகும்.

இதனைத் தொடர்ந்து விற்பனையினை அதிகரிக்க மேற்கொண்ட தீவிர நடிவடிக்கையின் காரணமாக ரூ.247 கோடியாக இருந்த விற்பனை மதிப்பு 4 ஆண்டுக் காலத்தில் ரூ.400.71 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது இயங்கிவரும் 1477 கூட்டுறவுச் சங்கங்களில் 51% சங்கங்கள் இலாபத்தில் இயங்கும் திறனை எய்தியுள்ளன. இதற்கு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்துறைக்கெனச் சிறப்பாக அளித்த ஊக்கமும் சிறந்த கவனமுமே காரணமாகும்.

நெசவாளர்களுக்குத் தறிக் கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்டி வழங்கிவருகிறது இவ்வரசு. வீடுகட்டும் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தற்போதைய தேவைக்கேற்ப வீடு ஒன்றுக்கு ரூ.36,400-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டில் 1000 வீடுகள் கட்டி வழங்கப்பட்ட உள்ளன.

இலவச வேட்டி சேலை

இருக்க இடம், உடுக்க உடை ஆகிய அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகள் அனைவருக்கும் கிடைக்க வழிவகை காணுவதே உயிர்நோக்கமாகக் கொண்டு செயல்படும் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையின் கீழ் இவ்வரசு நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு இலவசச் சேலை மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்து, இதன்மூலமாக ஏழை நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தங்குதடையின்றி வேலையும், வருவாயும் கிடைக்க வழிவகை கண்டார் நமது முதல்வர்.

இந்தச் சிறப்பு வாய்ந்த திட்டத்திற்கென அரசு ரூ.57.00 கோடி செலவிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைவோர்களாக 61,72,383 ஆண்கள் மற்றும் 62,25,745 பெண்கள் என நிர்ணயம் செய்யப்பட்டு, இத்திட்டத்திற்குத் தேவையான 62,25,745 சேலைகள் மற்றும் 61,72,383 வேட்டிகளைத் தமிழ்கத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுவுச் சங்கங்கள் வாயிலாக உற்பத்தி செய்து, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது; அதன்படி 62,25,745 சேலைகள் மற்றும் 61,72,383 வேட்டிகள் இவ்வாண்டு உற்பத்தி செய்து வழங்கப் பட்டுள்ளது. இதனைத் தவிர முதலாம் வகுப்பு முதல், எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு இலவசச் சீருடை வழங்குவதற்காக இவ்வரசு ஆண்டுதோறும் ரூ.29 கோடி செலவிடுகிறது.

நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு அரசின் பங்காக நெசவாளர் பெறும் கூலியில் ரூபாய்க்கு 12 பைசாவாக இருந்ததனை ரூபாய்க்கு 16 பைசாவாக உயர்த்தி நமது நல்லரசு வழங்கியுள்ளது. இதனால் நெசவாளர் ஓய்வு பெறும்போது பெறும் தொகையும் அதிகரித்து உள்ளது. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஆயுள் காப்பீட்டுத் தொகை ரூ.12,000-த்திலிருந்து ரூ.18,000 ஆக (அரசு ரூ.15,000 +கோ-ஆப்டெக்ஸ் ரூ.3000) தற்போது உயர்த்தி வழங்கியுள்ளது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 1.04 இலட்சம் நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்தியாவிலேயே முதன் முதலாக ,நெசவாளர்களின் குடும்பத்திற்கு ஓய்வு ஊதியம்

வழங்கும் முத்தான திட்டத்தினை இவ்வரசு 1.1.92 முதல் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் திடீரென இறந்துவிட்டால் அவரின் குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.250 ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் நெசவாளர்களின் நீண்டநாள் கனவினை நனவாக்கியுள்ளது. இதுவரை 152 நெசவாளர் குடும்பங்கள் பயன் பெற்று உள்ளன.

நெசவாளர்களின் வருவாயையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தும் முகத்தான் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் கீழ்க்காணும் கிராமங்களில் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள விளாகம் கிராமம்; தென்னார்க்காடு- வள்ளலார் மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை கிராமம்; திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் அம்மாபாளையம் கிராமம்; பெரியார் மாவட்டத்தில் கருக்குபாளையம் கிராமம்; சேலம் மாவட்டத்தில் இடங்கஞ்சாலை கிராமம்; திருச்சி மாவட்டத்தில் கே.பிச்சம்பட்டி கிராமம்; மதுரை மாவட்டத்தில் கொப்பயம் பட்டி கிராமம்; விழுப்புரம் ராமசாமி மாவட்டத்தில் பண்டாரக்கோட்டை கிராமம்; தஞ்சாவூர் மாவட்டத்தில் துகிலி கிராமம் ஆகியவைகளே அவை.

தொழில் வளர்ச்சியில் நீண்டகால நோக்கத்துடன் செயல்படும் புரட்சித் தலைவியின் அரசு, கைத்தறி வடிவமைப்புகளை உருவாக்குவதற்கெனக் கம்யூட்டர் வடிவமைப்பு மையத்தினை ரூ.20 இலட்சம் செலவில் நிறுவியுள்ளது. இதன்மூலம் உருவாக்கப்படும் புத்தம்புதிய வடிவமைப்புகள் நெசவாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்று வருகின்றன.

நெசவாளர் சமூகத்தினரிடையே நிலவி வரும் அறியாமையை நீக்கி, கல்வித் திறனை வளர்க்க ஏதுவாக நெசவாளர்களின் பிள்ளைகள் உயர் கல்வி பெற அறக்கட்டளை நிறுவி அதன் மூலமாக ஆண்டுதோறும் 16 மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக ரூ.1000 முதல் ரூ.2000 வரை நிதி உதவி வழங்கிவருகின்றது.

நெசவாளர்களுக்கு நெசவு தொடர்பான நோய்களான ஆஸ்த்மா, டி.பி., உணவுக் குழாய் வீக்கம் போன்றவற்றுக்குச் சிகிச்சை பெறுவதற்கும், கண்கள் பரிசோதனை மற்றும் கண்ணாடிக்கும் நிதியுதவி வழங்குவதற்காக உடல் நலத்தொகுப்புத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகள், பெண் நெசவாளர்களுக்குப் பேறுகாலப் பலன்கள், நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குக் கூடுதல் இழப்பீடு மற்றும் ஆரம்ப உடல்நலக் கவனிப்பிற்கான அடிப்படைக் கூட்டமைப்பு உருவாக்கம் ஆகியவற்றையும் உட்படுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் மாநில அரசு மூலம் ரூ.99.70 இலட்சத்தை மைய அரசு வழங்கியுள்ளது.

கைத்தறி வளர்ச்சி மையங்கள்

மத்திய அரசு கைத்தறித் தொழில் பகுதிகளில் 3000 கைத்தறி வளர்ச்சி மையங்களையும், 500 தரமான சாயச்சாலைப் பிரிவுகளையும் ஏற்படுத்தும் திட்டத்தை அண்மையில் அறிவித்துள்ளது. இது, இந்நாட்டில் முதல் முறையாகக் கைத்தறி நெசவாளர்களுக்கென ரூ.849.19 கோடி மொத்த நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப் படும் மாபெரும் திட்டமாகும். இந்நிதி ஒதுக்கீட்டில் ரூ.321.815 கோடி மத்திய அரசு உதவியாகும்.மற்றும் ரூ.527.375 கோடி நபார்டின் வாயிலாகக் கிடைக்கும் சலுகைக் கடன் உதவியாகும்.

இத்திட்டம் 4 ஆண்டுக்காலத்தில் இந்நாட்டிலுள்ள மொத்த நெசவாளர்களில் 1/3 பங்கினருக்குப் பலனளிக்கிற திட்டம். இது கூட்டுறவு அமைப்புகளின் கைத்தறி நெசவாளர்கள் இடம் பெற்றுள்ள அளவை தற்பொழுதுள்ள 20-சதவிகிதத்திலிருந்து 50-சதவிகிதம் கூடுதலாக அதிகரிக்க வேண்டுமென விழைகிறது. இதனால் இத்துறையின் கூட்டுறவு இயக்கத்திற்குப் பெரும் ஊக்குவிப்புக் கிடைக்கும்.

இந்தக் கைத்தறி வளர்ச்சி மையங்களும் தரமான சாயச்சாலைகளும் நெசவாளர்களின் அடிப்படை இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும் மத்திய அரசால் 1993-94-ஆம் நிதியாண்டிலிருந்து 1996-97 நிதியாண்டு வரை நாடு முழுவதிலும் 3000 கைத்தறி வளர்ச்சி மையங்களும் 500 தரமான சாயச்சாலைகளும் நிறுவும் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 303 கைத்தறி வளர்ச்சி மையங்களும் 58 தரமான சாயச்சாலைகளும், நிறுவக் குறியீடு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒரு கைத்தறி வளர்ச்சி மையம் நிறுவ திட்ட மதிப்பீடாக ரூ.27.00 இலட்சமும், ஒரு தரமான சாயச்சாலை நிறுவ திட்ட மதிப்பீடாக ரூ.7.83 இலட்சமும் எனத் தெரிவித்து, அதில் ஒரு கைத்தறி வளர்ச்சி மையத்திற்கு மத்திய அரசு ரூ.10.00 இலட்சம் மானியமும், ஒரு தரமான சாயச்சாலைக்கு ரூ.4.265 இலட்சம் மானியமும் மீதித் தொகைகள் தேசீய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD)-ன் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடன் வசதியும் அளிக்க அறிவித்துள்ளது.

1993-94-ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்திற்காக மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளுக்கிணங்க, தமிழ்நாட்டில் முதற்கட்டமான 30 கைத்தறி வளர்ச்சி மையங்கள் நிறுவவும் 6 தரமான சாயச்சாலைகள் நிறுவவும், ரூ.124.85 இலட்சம் விளிம்புத் தொகை மான்யம் அனுமதித்துள்ளது. அத்தொகையை மாநில அரசால் சம்பந்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2.12.94 அன்று தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிமூலம் விடுவிக்கப் பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டிற்கு 152 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறி வளர்ச்சி மையங்களும், 27 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தரமான சாயச்சாலைகளையும் நிறுவத் தேர்வுசெய்து பிரேரணைகள் மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.50.00 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான மத்திய அரசின் பங்கு மானியமாக ரூ.15.20 இலட்சம் மற்றும் ரூ.123.255 இலட்சங்களும் ஆகும். மீதித்தொகையான ரூ.2584 இலட்சம் மற்றும் ரூ.116.285 லட்சம் நபார்டு வங்கியின் மூலம் பெறப்படவேண்டும்.

செய்யும் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்பதற்கேற்ப சிறந்து விளங்கும் நெசவாளர்களின் துயரினைக் களைவதில் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சாதனைகள் மேன்மேலும் அடுக்கடுக்காய்த் தொடர்கின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம்

1994-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் என்ற நிறுவனத்தினை ரூ.25.00 கோடி பங்கு மூலதனத்துடன் தமிழக அரசு புதிதாக அமைத்துள்ளது.

இவ்விணையம் 29.12.94 முதல் செயல்படத் துவங்கியது. பல்வேறு கூட்டுறவு பஞ்சு விற்பனை இணையங்களிடமிருந்து 28.02.95 வரை ரூபாய் 3032 கோடி மதிப்பிற்கு 26,050 பேல்கள் பஞ்சு கொள்முதல் செய்து தமிழகத்தில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நூல் உற்பத்தி செய்ய வழங்கியுள்ளது. *

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தவருக்குத் தொழிற்கடன் அளிக்க வசதியாகத் தேசிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நிதி வளர்ச்சிக் கழகம் ரூ.12.33 கோடியும், மற்றும் தேசிய சிறுபான்மையினர் நிதி வளர்ச்சிக் கழகம் ரூ.4.64 கோடியும் ஆக மொத்தம் ரூ.16.97 கோடி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குக் கடன் வழங்கப்பட்டு அதில் ரூ.4.37 கோடி இக்கழகத்தால் தொழிற்கடன் தகுதி உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நம்பிக்கை என்பது சிறு காற்றின் வேகத்தையும் தாங்காமல் துவண்டுவிழும் மெல்லிய மலரல்ல, அது அடிபெயரா இமயம் போன்றது !

—காந்தியடிகள்

மத்திய அரசுப் பணியிடங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க விரும்பும் மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சாதிச் சான்றிதழ் வழங்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இவ்வரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலம் குறித்து மத்திய அரசின் கொள்கைகளைத் தமிழ்நாட்டு மக்கள் அறியும் வகையில் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் அறிவிப்புகள் செய்து தமிழக மக்கள் அனுபவிக்கும் வகையில் செயல்பட்டுவருகிறது. பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினரின் சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சியினைக் கண்டுகொள்ள ஏதுவாகவும், ஒரு வகுப்பு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தொடர்ந்து இருக்கவேண்டிய அவசியம் குறித்து முடிவு செய்வதற்கு உதவியாகவும் இருக்கும் பொருட்டு விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறையுடன் கூடிய ஒருமாதிரிக்கணக்கெடுப்பினைத் தமிழ்நாட்டில் மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் 5 கோடி ரூபாய் செலவில் ஆட்டோ வழங்குவதற்கான ஆணையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். இப்படி ஆட்டோ வழங்கும்போது படித்த, ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குத் தகுதியுடைய 100 மகளிரைத் தேர்வு செய்து ஆட்டோ வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

18 வயது முதல் 24 வயது வரை உள்ள +2 படித்த 200 பெண்களுக்கு, செக்ரடேரியல் சர்வீஸ் பயிற்சியினைத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அளிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் ரூ.13.81 கோடி செலவில் 6,577 பேருக்கு வீடுகள் கட்டித்தர இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

100 குலாலர் வகுப்பினருக்கு மின் விசைக் கருவிகள் ரூ.7 இலட்சம் செலவில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளவும், அவர்களுக்குச் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆலோசனைக் குழு ஒன்றினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சலவையாளர்கள் சுகாதார முறையில் தங்கள் தொழிலைச் செய்திட ஏதுவாக, சென்னையில் இயந்திரச் சலவையகம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

எளியோரை இகழ்ந்தும் வலியோரை வாழ்த்தியும் பாராட்டும் இவ்வுலகில், சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் முன்னேற்றத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப்படி, நான் பொறுப்பு வகிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பெரும் பங்கு வகிக்கிறது என்றால் அது மிகையாகாது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் மூவரும் உருவாக்கித் தந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை எத்தகைய இடர் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு அவர்கள் காட்டிய வழியில் வெற்றி நடைபோடும் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தனிச் சட்டத்தின் மூலம் பாதுகாத்துத் தந்த தன் வாயிலாக, இந்தியாவிலேயே இணையற்ற முதலமைச்சராக- ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதலமைச்சராகத் திகழ்கிறார்.

சமூகநீதி காத்த வீராங்கனையாக, தமிழ் கூறும் நல்லுலகம் அவரைப் பாராட்டுவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்' என்றார் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா. இதனைக் கருத்தில் கொண்டு பன்னெடுங்காலமாக ஒடுக்கப்பட்ட சமுதாயமாகிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைக் கொணர்வதும், கல்வி ஆர்வத்தினை மேம்படுத்துவதும், பொருளாதார முன்னேற்றத்தினை விரைவுபடுத்துவதும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இத்துறை செயல்படுகிறது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்ளுவேன். ❋

சமூக நீதியைக் காத்திட சமுதாய நிலையிலும், கல்வித் துறையிலும் பிற்படுத்தப்பட்டோரைக் கைதூக்கி உயர்த்தி முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காகக் கல்விச் சலுகைகள், கல்வி நிறுவனங்களிலும், அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களிலும் உரிய ஒதுக்கீடு வழங்குதல், பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் இருந்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட இனத்தவர்க்குக் கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் தனி ஒதுக்கீடு தரப்படுதல் வேண்டும் என்ற இலட்சியத்திற்கு ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு என்பதை அனைவரும் அறிவர். _மாண்புமிகு முதல்வர்

பிற்படுத்தப்பட்டோரின் பொற்கால ஆட்சி!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

திரு கு. லாரன்ஸ்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை, தமிழகத்தில் வாழும் பிற்படுத்தப்பட்டோரைப் பாதுகாப்பதில் எடுத்து வரும் நடவடிக்கைகள் ஏராளம், ஏராளம். சுருங்கச் சொன்னால் பிற்படுத்தப்பட்டோருக்கு இது ஓர் பொற்காலம். இந்தியாவில் பிற்படுத்தப்பட்டோரைப் பாதுகாப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தவருக்கும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கும் முறையே 30, 20, 18, 1 சதவிகிதம் என ஏற்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகக் குறைந்த வட்டியில் கடனுதவி தகுதியுடையவர்களுக்கு அளிக்கப்படுகிறது.



கடந்த நான்காண்டுகளில் 64 புதிய மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டன. தற்போது மொத்தம் 820 விடுதிகள் மாநிலம் முழுவதும் உள்ளன.

16 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

கடந்த நான்காண்டுகளில் 64 புதிய மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டன. தற்போது மொத்தம் 820 விடுதிகள் மாநிலம் முழுவதும் உள்ளன. தனியார் கட்டடங்களில் இயங்கும் வாடகை விடுதிக் கட்டடங்களுக்கு ரூ.15.38 இலட்சம் செலவில், அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் 12 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாணவர்கள் பொது அறிவினை வளர்த்துக் கொள்ளும் வகையில் ரூ. 18.61 இலட்சம் செலவில் ஒவ்வொரு விடுதியிலும் சிறு நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு விடுதிக்கும், துறையின் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரு ஆங்கிலம், ஒரு தமிழ் நாளேடு வழங்கப்படுகிறது. கல்லூரி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒருவருக்கு ரூ.180 ஆகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கு மாதம் ஒருவருக்கு ரூ.120 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து விடுதிகளுக்கும்

மாவரைக்கும் இயந்திரம் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மூன்றாண்டுப் பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் 1,10,329 பிற்படுத்தப்பட்ட வகுப்பின மாணவ மாணவியர்களும், 7,25,208 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களும் பயனடைந்துள்ளனர்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையத்தில் சேர ஆண்டு வருமான வரம்பு நீக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 36 மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள டெல்லி சென்றனர். அவர்களுக்குத் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கும், உணவிற்கும் ஏற்பாடுகள் அரசால் செய்யப்பட்டுள்ளன.

முதுநிலை வழக்கறிஞரிடம் பயிற்சி பெறும் மாணவருக்காக, வழக்கறிஞருக்கு ரூ.750 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

16 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. துறைப் பள்ளிகளுக்கு 24 வகுப்பறைகள் கூடுதலாகக் கட்டித் தரப்பட்டுள்ளன. முக்கியமாக வேலைவாய்ப்பு அளிப்பதற்காகவே வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்களான கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்து, கணிப்பொறி, தொலைபேசி மற்றும் தொலையச்சுப் பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்பட்டுவருகின்றது. இத்துடன், இலவசத் தொழிற் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

புரட்சித்தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் 16,000 சலவையாளர்களுக்கும், 2000 கல்லுடைப்போர்களுக்கும், 2000 முடிதிருத்துவோருக்கும், இலவசமாகத் தொழிற்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் பையூர் பிள்ளைவயல் என்னும் கிராமத்தில் நரிக்குறவர்களுக்கு இலவசமாக 150 வீடுகள் ரூ.30.90 இலட்சம் செலவில் கட்டித்தர அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கெனவே இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ள 1,533 நரிக்குறவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர, தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

முடி திருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம் அமைக்க அரசு மானியமும் வங்கிக் கடனும் வழங்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்குக் குறைவாக வரையறுக்கப்பட்ட பதவிகளுக்கு நியமனம் செய்யும் வயது வரம்பு மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபின இனத்தவருக்கு 30 லிருந்து 32 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாநிலம் மற்றும் மாவட்டங்களில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலவசப் புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் எழுது பலகைகளும் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. நுழைவுத் தேர்விலும் பங்கேற்றுப் பயனடைய மாவட்டங்களில் பயிற்சி மையங்கள் நடத்தப்படுகின்றன.

15,700 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க ஆண்டுதோறும் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுச் செலவிடப்படுகிறது.

செய்தித்துறையில் எய்திய வளர்ச்சி செந்தமிழ் முதல்வரின் சிந்தனைப் புரட்சி!

மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர்

திரு மு. தென்னவன்

ஏழை எளிய மக்கள் ஏற்றிப் போற்றவும், இதயம் உள்ளவர்கள் யாவரும் வாழ்த்திப் பாடவும், தமிழகத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி நான்காண்டுகள் கடந்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

தீயினுள் தெறலாக, பூவினுள் வாசமாக,
கல்லினுள் மணியாக,
சொல்லினுள் வாய்மையாக,
அறத்தினுள் அன்பாக, மறத்தினுள் மைந்தாக,
வேதத்து மறையாக, பூதத்து முதலாக,
வெஞ்சுடர் ஒளியாக, திங்களுள் அளியாக,
அனைத்துமாக,
அந்த அனைத்தின் உட் பொருளுமாக இயங்கி,

அன்னைத் தமிழகத்தையும் இயக்கிக் கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வலுவான தமிழகத்தை - வளமான தமிழகத்தை உருவாக்க அரிய பெரிய திட்டங்களைத் தீட்டி அரும் பாடுபட்டுச் செயலாற்றிவருகின்றார்.

வழிகாட்டும் ஒளி விளக்கு

தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சாதாரணத் தலைவர் அல்லர்; ஏனைய தலைவர்களுக்கெல்லாம் அவர் ஒரு வழிகாட்டி; பிற மாநில முதல்வர்களுக்கெல்லாம் அவர் ஒரு முன் னோடி; தடுமாறித தத்தளிப்போர் தடம் மாறிப் போகாது காக்க வழிகாட்டும் கலங்கரை ஒளிகாட்டி!

திருத்தத்தில் வெற்றி பெற்றான் ஒட்டக்கூத்தன்
தீர்ப்பளித்து வெற்றிபெற்றான் கரிகாற்சோழன்
வருத்தத்தில் வெற்றி பெற்றான் இராமலிங்க வள்ளல்
விருத்தத்தில் வெற்றி பெற்றான் கம்பன்
கனி கொடுத்து வெற்றி பெற்றான் அதியன்
கலிங்கம் தந்து வெற்றி பெற்றான் பேகன்
நிதியளித்து வெற்றி பெற்றான் பாரி - புதிய
விதியெழுதி வெற்றி பெற்றான் பாரதி
வாளேந்தி வெற்றி பெற்றான் சேரலாதன்
பாவேந்தி வெற்றி பெற்றான் பாரதிதாசன்!
ஆனால்,
தனது இதயத்துடிப்பிலே ஏழைகளின் நலம்
உயிர் மூச்சிலே எளியவர் வளம்
உயரிய பேச்சிலே தமிழர்தம் ஏற்றம்
செயல்திறத்திலே தமிழக முன்னேற்றம்

- என்று பாடுபடும் தன்மையால், படைத்து வரும் புதுமைமிகு சாதனைகளால், அல்லும் பகலும் உழைக்கும் அற்புதச் செயல்திறனால், நாளும் வெற்றியைக் கண்டு கொண்டிருப் பவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவார். புரட்சித் தலைவி அவர்களின் அரிய ஆலோசனைகளும் ஆற்றல்மிகு வழிகாட்டுத லும், தமிழக அரசின் துறைகள் யாவற்றிலும் ஒரு புதிய மின்னோட்டத்தைப் பாய்ச்சி, திட்டங்கள் ஒளி வெள்ளப் பெருக்குடன் செயல்படவும், அவை மக்களைச் சென்ற டையவும் வைத்துள்ளது என்றால் அது மிகை யாகாது. அதே வகையில்தான் ஆற்றல்மிகு திட்டங்களால், செய்தி - மக்கள் தொடர்புத் துறை இன்று வலிவும் பொலிவும் மிக்க துறையாக மாறி இருக்கிறது.

> **தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களைப் படமாக்கிச் செய்தி மலர்களாகத் தொகுத்து, திரை யரங்குகள் மூலமாகவும் வீடியோ மூலமாகவும் மக்களிடம் எடுத்துச் சென்று தெரிவிக்கும் சீரிய பணி யைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செயலாற்றி வருகிறது.**
>
> **திரைப்படத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகச் சென்னை அருகே வேளச்சேரி பள்ளிக்கரணையில் ரூ.10 கோடி மதிப்புள்ள 85 ஏக்கர் நிலத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசமாக வழங்கியுள்ளார்.**

நட்புறவை நாடி வளர்ப்போம்
மக்களுக்குச் செய்தி படைப்போம்

செய்தித் துறை என்பது மக்களுக்கும் அரசுக்கும் ஒரு பாலமாக அமைந்து நல் லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்கிற துறையாகும். அரசின் கொள்கைகளை, அதன் செயற்பாடுகளை, ஆற்றிவரும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை, மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களுக்கு விழிப் புணர்வையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்து கின்ற கடமையைச் செய்தி மக்கள் தொடர்புத் துறை செய்து வருகிறது.

கடந்த நான்காண்டுகளில் புதிய புதிய திட்டங்களை வகுத்துத் தந்ததன் மூலம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இந்தச் செயலாற்றலை முறைப்படுத்தி, ஆற்றுகிற கடமையை நெறிப்படுத்தி, மக்கள் தொடர்புத் துறையை மக்கள் துறையாக்கிய பெருமை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

> **திரைப்படத்துறை என்பது, பல்வேறு கலை களைப் பரிவுடன் வளர்க்கும் ஒரு தாய். ஒரு புறம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும், மற்றொரு புறம் இலட்சக் கணக்கான மக்களுக்கு மகிழ்ச்சியையும், ஒரே நேரத்தில் வழங்கிடும் ஓர் அமுதசுரபிதான், திரைப்படத்துறை.**
>
> *- மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர்.*

தென்னிந்திய ஹாலிவுட்
'ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்'

உலகத் திரைப்பட வரைபடத்தில் சென்னைக்குச் சிறப்பிடம் பெற்றுத்தரும் கலைச்சோலை; மேலை நாட்டுத் திரைப்பட நகரான ஹாலிவுட்டையே இடம் பெயர்த்துச் சென்னைக்குக் கொண்டு வந்துவிட்டாரோ நமது புரட்சித் தலைவி என்று வியக்கும் அளவுக்குத் திரை உலகின் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் நிறை வேற்றிக்கொள்ள நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட கலைக்கோட்டம்; அதுவே தமிழக அரசு 86 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைத் தரமணியில் உருவாக்கியுள்ள ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்.

ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரில் உட்புறப்படப்பிடிப்புக்கென - குளிர்சாதன வசதியுடன் படப்பிடிப்புக் கூடம், நீதிமன்றம், வகுப்பறை, அறுவைச் சிகிச்சைக்கூடத்துடன் கூடிய மருத்துவமனை, காவல் நிலையம், சிறைச்சாலை, தீயணைப்பு நிலையம்,

வெளிப்புறப் படப்பிடிப்புக்கென - கிராமியச் சூழல், நகர்புறம், வயல்வெளிகள், கடைத்தெருக்கள், பள்ளிக்கூடம், குளக்கரை,

பஞ்சாயத்து ஆகியவை அமைக்கப்பட்டு உள்ளன.

அதுமட்டுமின்றி, இங்கிலாந்துப் புல்வெளிகளும், மொகலாயத் தோட்டங்களும், ஜப்பானியக் கோயில் வீடுகளுடன் கூடிய ஜப்பானியத் தோட்டமும், இத்தாலி நாட்டு அழகுக் கலைக்கூடத்துடன் இத்தாலியத் தோட்டமும் இங்கே உருவாக்கப்பட்டுள்ளன.

நீருக்கடியிலும் படப்பிடிப்பு நடத்தும் வசதிகளுடன் நீச்சல் குளமும் இங்கே அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறப்பான படப்பிடிப்பு ஆவணக் காப்பகமும், நூல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் படத் தயாரிப்பாளர் தமது படப்பிடிப்புக்கு வேண்டிய பணம், கதை வசனத்துடன் திரைப்பட நகருக்கு வந்து தங்கி, குறைந்த செலவில் படத்தைத் தயாரித்து, முழுத் திரைப்படமாகக் கொண்டு போகலாம்.

நவீனத் தொழில் நுட்பங்களுடன்
தமிழ்நாடு திரைப்பட நிறுவனம்

கலையும், தொழில் நுட்பமும் இணைந்து படைக்கப்பட்ட இணையிலாச் சாதனமான திரைப்படம் மற்றும் தொலைக்காட்சியின் தொழில் நுட்ப வளர்ச்சியினை மாணவர்களுக்குக் கற்பித்து, அதன் தயாரிப்புக் களத்தில், செயல்திறன் கொண்டவர்களாக அவர்களை உருவாக்குவது தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம்.

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, டிப்ளமோ மற்றும் நடிப்புப் பயிற்சிகளில் இட ஒதுக்கீடு செய்துகொடுத்திருக்கிறார் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டுவரும் இக்காலத்தில், அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் நவீன கருவிகள் வாங்கும் முயற்சிகள் ஆண்டுதோறும் தொடரப்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டு, பகுதி இரண்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன முன்னேற்றத்திற்காக ரூ.11 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டு முதல், வண்ண நெகட்டிவ் படச்சுருள் பதனிடும் இயந்திரம் அதன் பணியைத் தொடங்க உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் திரைப்படக் கல்லூரியிலுள்ள நூலகத்தை மேம்படுத்துவதற்கென ரூ.5 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது.

செயற்கைக்கோள் மூலம்
செய்தி ஒளிபரப்பு

தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களைப் படமாக்கிச் செய்தி மலர்களாகத் தொகுத்து, திரையரங்குகள் மூலமாகவும், வீடியோ மூலமாகவும் மக்களிடம் எடுத்துச் சென்று தெரிவிக்கும் சீரிய பணியைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செயலாற்றி வருகிறது.

உலகெங்கிலும் செயற்கைக்கோள் மூலம் ஒளிநாடா நிகழ்ச்சிகள் 24 மணி நேரமும் கண்டு ரசிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பு செய்யப்படுவதற்கான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்து வழங்கலாம் என்று கருதப்படுகிறது. 1990-91, 1991-92-ஆம் ஆண்டுகளுக்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாக்களைப் படமெடுத்து விளம்பரதாரர்கள் வழங்கும் நிகழ்ச்சியாக, திரைப்படப் பிரிவு ஏற்கெனவே நிகழ்ச்சியினைத் தயார் செய்தது. இந்நிகழ்ச்சி விளம்பரதாரர்கள் மூலம் சென்னைத் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டு, கணிசமான வருவாயை அரசுக்கு ஈட்டித்தந்தது. அதேபோலத் தமிழகத்திலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்தும், அரசின் வளர்ச்சிப் பணிகள் குறித்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு விளம்பரதாரர் வழங்கும் தொடர் நிகழ்ச்சியாகத் தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும்.

வித்தகர்க்கு விருதளிப்போம்!
பாராட்டிப் பரிசளிப்போம்!

திரைப்படத் துறையில் சாதனை புரிவோருக்கும், சரித்திரம் படைப்போருக்கும் விருதுகள் வழங்கியும் பரிசுகள் அளித்தும், பாராட்டுகள் அளித்தும் கௌரவித்திட வேண்டும் என்னும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, சிறந்த திரைப்படங்களுக்கு முதற்பரிசாக ரூ.1,25,000, இரண்டாவது பரிசாக ரூ.75,000, மூன்றாவது பரிசாக ரூ.50,000, சிறப்புப் பரிசாக ரூ.50,000 வழங்கப்படுவதுடன் பரிசுக் கேடயமும் வழங்கப்படுகிறது.

குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் சமுதாய நோக்குப் படங்களுக்கான ஆதரவு உதவித் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டதுடன், ஆதரவு உதவித் தொகை பெறும் படங்களின் எண்ணிக்கை 50 லிருந்து 75 ஆக உயர்த்தப்பட்டு, ரூ.2.25 கோடி ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

1994-ஆம் ஆண்டில் திரைப்படத் தொழிலே முடங்கிப் போகுமோ என்ற அளவுக்குச் சிக்கலான பிரச்சினை எழுந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இப்பிரச்சினையில் தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்தி திரைப்படத் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கும், திரைப்படத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கும் உறுதுணையாகத் திகழ்ந்தார்.

சிறந்த கலைத்தொண்டுக்கு
ஜெயலலிதா விருது

திரைப்படத்துறைக்கு ஊக்கமளித்து, கலை, இலக்கியம், பண்பாட்டின் மேன்மைக்கும், திரைப்படத்துறையின் மேம்பாட்டுக்கும் பாடுபட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பெயராலே 'ஜெயலலிதா விருது' என்னும் சிறப்பு விருது, திரைப்படத்துறையில் நீண்ட காலம் சிறந்த தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கலைவாணர், இராஜா சாண்டோ, டாக்டர் எம்.ஜி.ஆர் ஆகியோரது பெயரால் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

'ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்' திறப்புவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க இவ்வாண்டிலிருந்து சிறந்த திரைப்பட ஒப்பனைக் கலைஞர், சிறந்த திரைப்படத் தையற்கலைஞர் ஆகியோருக்கும் விருது வழங்கப்படும். அதே போல நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பெயரில் 'சிவாஜி கணேசன் விருது' வழங்கப்படும் எனவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். இவ்விருதும் இவ்வாண்டு முதல் வழங்கப்பட உள்ளது.

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒரு இடத்திற்கு ஒரு நாளைக்குக் கட்டணம் ரூ.5,000 என்றும், காப்புத் தொகை ரூ.5,000 என்றும் இருந்தது. இக்கட்டண விகிதத்தைப் புராதனச் சின்னம் மற்றும் அதுபோன்ற இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.5,000 ஆகவும், ஏனைய இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.2,500 ஆகவும் குறைத்துப் புரட்சித் தலைவி அவர்கள் சலுகை வழங்கியுள்ளார்.

கலையுலகத் தொழிலாளர் நிலையுயர...

திரைப்படத் தொழிலாளர்களின் நலனின் தனி அக்கறை கொண்டு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திரைப்படத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகச் சென்னை அருகே வேளச்சேரி பள்ளிக்கரணையில் ரூ.10 கோடி மதிப்புள்ள 85 ஏக்கர் நிலத்தினை, தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்திற்கு 20.4.95 அன்று இலவசமாக வழங்கியுள்ளார்.

60 வயது முடிந்த திரைப்படத் தொழிலா

தமிழ் வளர்ப்போம்!

தமிழ் - தமிழ் - தமிழ் என எப்போதும் தமிழை வளர்ப்பதையே தங்கள் கடமையாகக் கொள்ளுங்கள்.

—தமிழ்த் தென்றல் திரு.வி.க.

மனிதனை நல்ல வாழ்க்கையை நோக்கி அழைத்துச் செல்வதோடு, அவனை மனிதாபிமானம் மிக்கவனாகவும், பண்புடையவனாகவும் மாற்றுவது தான் கல்வியின் நோக்கம். _ மாண்புமிகு முதல்வர்

ளர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு முதல்வர் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தால் உடனடியாக 1000 பேர் பயன்பெறுவர்.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலாளரும் ரூ.50,000-க்குக் காப்புறுதி செய்யப்படுவர். விபத்தில் இறந்தால் இந்தத் தொகை குடும்பத்துக்கு வழங்கப்படும். விபத்தில் உடல் ஊனமுற்றால் அதற்குரிய காப்பீடு வழங்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப்படி, 'திரைப்படத் தொழிலாளர் நலநிதி' ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இதன்படி ஒவ்வொரு திரைப்படத் தொழிலாளரும் மாதம் ரூ.25 அல்லது ஆண்டுக்கு ரூ.300 இந்நலநிதிக்குச் சந்தாவாகச் செலுத்தவேண்டும். நிலுவையின்றிச் சந்தா செலுத்தும் திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்திலும், விபத்துக் காப்புறுதித் திட்டத்திலும் சேர்க்கப்படுவர்.

கலைவிருந்தாம் பொருட்காட்சி

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்து, காணுகின்ற மக்களுக்கு மகிழ்வூட்டுவது மட்டுமல்லாமல் அறிவூட்டவும் பயன்படும் வண்ணம், மாநிலத்தில் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறை பொருட்காட்சிகளை நடத்திவருகின்றது.

மேலும் பெருநகரங்களில் வாழ்வோர் மட்டுமல்லாது, பிறமக்களும் பயன்பெறும் வண்ணம், சென்ற ஆண்டில் காரைக்குடி, தருமபுரி ஆகிய இடங்களில் சிறு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. வரும் 1995-96 நிதி ஆண்டில் கூடுதலாக வேலூரிலும், கடலூரிலும் பெரிய அளவிலான பொருட்காட்சிகள் நடத்தப்பட உள்ளன.

காலத்தை வென்ற காவிய நாயகர்
டாக்டர் எம்.ஜி.ஆர். ஒலி - ஒளிக் காட்சி

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், காலத்தை வென்ற காவிய நாயகராய், மறைந்தும் மறையாமல், இறந்தும் இறவாத புகழோடு விளங்குகின்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவரது சீரிய கருத்துக்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் ஒலி-ஒளிக் காட்சிகள் நடத்தவேண்டும் என்று ஆணையிட்டார். அதன்படி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் 21 உறுப்பினர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு வழங்கிய பரிந்துரைப்படி பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். ஒலிஒளிக் காட்சி நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வரலாற்று நாயகர்களை
வாழ்த்தி விழா எடுப்போம்!

இளைய தலைமுறைக்கு, மகத்தான தலைவர்கள் பற்றியும், மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் உணர்த்தவேண்டும் என்பதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேரார்வம் கொண்டு அந்தப் பொறுப்பைச் செய்தி மக்கள் தொடர்புத் துறையிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை மகிழ்வோடு ஏற்று, டாக்டர் அம்பேத்கர், சர்.பிட்டி திராகராயர், பாவேந்தர் பாரதிதாசன், கண்ணியத்தோன்றல் காயிதே மில்லத், கவியரசு கண்ணதாசன், பெருந்தலைவர் காமராஜர், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியார், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்., நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதலான அரும்பெரும் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை அனைத்து மாவட்டங்களிலும் அழகுற நடத்திக் கொண்டிருக்கிறது செய்தி மக்கள் தொடர்புத் துறை. அதுமட்டுமின்றி, விடுதலை நாள், தேசிய மறு சமர்ப்பண நாள், தேசிய ஒருமைப்பாட்டு வாரம், மனித உரிமை நாள் ஆகிய விழாக்களையும் செவ்வனே நடத்தி வருகின்றது.

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில், பூலித் தேவர், ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி, தீரன் சின்னமலை, அழகு முத்துக்கோன் ஆகிய சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு விழா நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இவ்விழாக்கள் சிறப்புற நடத்தப்பெற்றன.

கண்ணியத் தோன்றல் காயிதே மில்லத் அவர்களின் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் 5-ஆம் நாளன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே சென்னை மாநகரில் மிகவும் சீரோடும் சிறப்போடும் நடத்தப்பட்டது. மேலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆணைப்படி, தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும், காயிதே மில்லத் நூற்றாண்டு விழா மற்றும் குமரி மாவட்டத்தில் நேசமணி நூற்றாண்டு விழா ஆகியவை சிறப்புடன் கொண்டாடப் பட உள்ளன.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாரத ரத்னா எம்.ஜி.ஆர். ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளை மிகச் சிறப்பாக நூல் வடிவாக்கி அரசே வெளியிட உள்ளது.

வாழ்வாங்கு வாழ்ந்தவரை
வணங்கிச் சிலை வடிப்போம்!

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தைக் கண்டறிந்து தகர்த்து வீசிட மூண்டெழுந்த பேரிடியாய், தமிழன் இந்த ஞாலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நினைவாக, கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையை ஏற்று, ரூ.15 இலட்சம் செலவில் நினைவகம் எழுப்பப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நினைவகத்தில் நூலகம், தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நிழற்படக் கண்காட்சி, பெரியாரின் திருவுருவச் சிலை, திறந்தவெளிக் கலையரங்கம் ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன.

மகாகவி பாரதி

பட்டினிப் பற்கள் வயிற்றைக் கடித்த போதும், பசி குடலையே சாப்பிடக் கூப்பிட்ட போதும், எட்டையபுரத்தில் கட்டையாய்க் கிடக்காமல் இந்திய தேசத்து நெருப்புப் பந்தமாய் நின்றவன்; பாரதத்திலே, பா ரதத்திலே, பாரதிரப் பாடியவன்; அடையாத சுதந்திரம் ஆயிரம் இருந்தும் ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆனந்த ராகம் பாடியவன்; காலுக்குக் கீழே நின்று கவிஞர்கள் சிந்தித்தபோது, தோளுக்கு மேலே நின்று அண்ட சராசரங்களையும் கவியாலே அளந்து பார்த்த சிந்தனைக் கவிஞன், புதுமைக் கவிஞன் பாரதி, சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்த இல்லத்தை ரூ.5.70 இலட்சம் செலவில் அரசு கையகப்படுத்தி ரூ.6.75 இலட்சம் செலவில் அதைப் புதுப்பித்தது. இந்நினைவில்லத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார்கள். பாரதியாரின் மார்பளவு வெண்கலச் சிலையும், அவரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியும் இவ்வில்லத்தில் இடம் பெற்றுள்ளன. கல்வித் துறை மூலமாக நூலகம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மருது சகோதரர்

உரிமைப்போரில் முன்னின்று தமிழகத்தின் மானம் காத்து, தாயகத்தின் விடுதலைக்காகத் தம்மையே ஈந்த மருது சகோதரர்கள் நினைவாக ரூ.5.46 இலட்சம் செலவில் நினைவு வளாகம் கட்டப்பட்டு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

சிங்கநிகர் மருது சகோதரர் சிலைகளும் ஆங்கு நிறுவப்பட்டுள்ளன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நிலைத்த புகழுக்கோர் நினைவகம்

மக்களின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் மகத்தான வள்ளலாம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம், அவரது அரிய பெயருக்கும் உயரிய பெருமைக்கும் ஏற்ப மிகச் சிறப்பாக அமைந்திட வேண்டும் என்னும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம் ரூ.2.265 கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது கரங்களாலேயே திறந்துவைக்கப்பட்டது. மேலும் இந்நினைவக வளாகத்தில், எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

வள்ளுவர் சிலை

உலகின் பொதுமறை - தமிழரின் திருமறை திருக்குறளைத் தந்த வான்புகழ் வள்ளுவப் பெருந்தகைக்கு, கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறிய பாறை மீது 133 அடி உயரச் சிலை நிறுவ இதுவரை ரூ. 2.315 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. சிலை அமையும் அடிப்பீடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 266 குறட்பாக்கள் பொறிக்கவும், சிலையைச் சுற்றி ஒளி விளக்குகள் அமைக்கவும் ரூ.15.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கவியரசு கண்ணதாசன்

சிறுகூடல் பட்டியில் பிறந்த செட்டிநாட்டுக் கவிஞன்; பொற்பதமும், சொற்பதமும் நிறைந்த கவிஞன்; வாழ்த்துப்பா இசைத்த போதும், வசவுப்பா உதிர்த்த போதும், வளமான கவிதையின் வடிவத்தைச் சிதைக்காது தந்த கவிஞன்; வண்ணத் தமிழ் மகளை வாழ வைப்பதற்கு எண்ணச் சிறகடித்து எண்ணற்ற கவிதைகளை வண்ணமுறத் தந்த கவிஞன்; காலம் என்னும் மாளிகையிலும், காற்று மழை ஊழியிலும், கனல் நெருப்பிலும் அழிக்க முடியாத கவிதைகளைத் தந்த கவிஞன் - கவியரசு கண்ணதாசனுக்கு ரூ.55 இலட்சம் செலவில், காரைக்குடியில் மணிமண்டபம் அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே திறந்து வைத்தார். மேலும் இம் மணிமண்டபத்தில் கண்ணதாசனின் மார்பளவு வெண்கலச் சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட இன மக்களின் மேம்பாட்டுக்குப் பாடுபட்டவரும், சென்னையின் முன்னாள் மேயருமான சிவராஜ் அவர்களின் சிலை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

தான் பிறந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர்சூட்ட வேண்டுமென்று போராடி, உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் சிலை அமைக்க முடிவு செய்யப்பட்டு, சிலை செய்யும் பணி முடிவுபெறும் நிலையில் உள்ளது. அதே போலத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. சிலையும், விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் சிலையும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளன. விரைவில் சிலை நிறுவப்படும்.

நிறைகுடமாம் சான்றோர்க்கு நினைவகங்கள்

"தமிழன் என்பதை மறக்காதே, தாய் மொழிப் பெருமையை துறக்காதே" என்று பாடிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களது நினைவகத்தை நாமக்கல்லிலும், சமுதாயக் கேட்டைத் தகர்ப்பதற்காகப் பாட்டுக் கோட்டை கட்டிய பட்டுக்கோட்டையின் கவிஞன் கல்யாண சுந்தரத்தின் நினைவகத்தைப் பட்டுக் கோட்டையிலும், நீதிக் கட்சிப் பெரியார் சர்.பிட்டி...தியாகராயரின் நினைவிடத்தை வண்ணாரப்பேட்டையிலும், மானுடம் போற்றிய மாமனிதர் ஜீவானந்தம் நினைவகத்தைக் கன்னியாகுமரியிலும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பேசிய திருமுருக கிருபானந்த வாரியார் நினைவகத்தைக் காங்கேயநல்லூரிலும், தீரத்தின் திருவுருவம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவகத்தைப் பசும்பொன்னிலும் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி கொங்குச் செல்வி, குடமலையாட்டி கண்ணகித் தெய்வத்திற்கு சிறப்புச் செய்திட, திருச்செங்கோட்டில் 'கண்ணகிக் கோட்டம்' அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழம்பெருமை வாய்ந்த இராஜாஜி மண்டபத்தில் ரூ.17.97 இலட்சம் செலவிலும் வள்ளுவர் கோட்டத்தில் ரூ.26.61 இலட்சம் செலவிலும் பழுது நீக்கிச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் மாவட்டங்களிலுள்ள பிற நினைவகங்களைப் பழுது நீக்கிட ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு ஆண்டு தோறும் செய்யப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையில் தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், எட்டயபுரம் பாரதி இல்லம், வேலூர் முத்து மண்டபம் ஆகிய நினைவகங்களில் மராமத்து மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற உள்ளன.

வாழ்வியல் தகவல் களஞ்சியம் வண்ணத்தமிழ் மிளிரும் 'தமிழரசு'

அரசின் சாதனைச் செய்திகளைப் பிச்சிப்பூ மணம் கமழும் அச்சுப் பூக்களாக ஏந்தி-அரசின் கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், ஆகியவற்றைத் தாங்கி எழுத்துத் தூதுவனாக மக்களை அடைந்து மணம் பரப்பி வருகிறது 'தமிழரசு'. அறிஞர்தம் இதயமடை ஆழத்திலிருந்து மொண்டுதரும் அரிய கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வரலாறுகளும் வண்ணத் தமிழில் இடம்பெறும் வாழ்வியல் தகவல் களஞ்சியமாய் வனப்போடு வெளிவருகிறது 'தமிழரசு'. சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய 'பிராட்மா' முறையிலிருந்து கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 இலட்சம் செலவில் 'தமிழரசு' அலுவலகத்திற்குப் புதிய கணினி வாங்கப்பட்டு உள்ளது. 'தமிழரசு' இதழில் அச்சுத்திறனை

மேம்படுத்தவும், துரிதமாக அச்சிடவும் இரு வண்ண ஆப்செட் இயந்திரம் ரூ.30 இலட்சம் செலவில் இவ்வாண்டு வாங்கப்பட உள்ளது.

புரட்சி முழக்கம் எங்கள் புரட்சித்தலைவியின் முழக்கம்

காலங்கள் பல கடந்தாலும், களங்கள் பல மாறினாலும், என்றென்றும் பாராட்டுகின்ற வகையில், பல்வேறு நிகழ்ச்சிகளில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய புரட்சிகரமான உரைகளைத் தொகுத்து "புரட்சித்தலைவியின் முழக்கம்" எனத் தமிழிலும் 'Jayalalitha Speaks' என ஆங்கிலத்திலும் மூன்று தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அரிய தொகுப்புகள், புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல்மிகு சிந்தனைகளையும், அரும்பெரும் செயல்களையும் காட்டுகின்ற கண்ணாடியாக விளங்கிக்கொண்டிருக்கின்றன.

பத்திரிகையாளர் நலனுக்கு பாடுபடும் நல்லரசு

செய்தித்துறையின் ஓர் அங்கமாகச் செயல்படுகின்ற பத்திரிகையாளர்களின் நலன் காக்கும் நல்லரசாக டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு செயல்பட்டுவருகிறது.

சென்னை மற்றும் மாவட்டங்களிலுள்ள 250-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், இலவச பஸ் பாஸ், 50 சதவிகித இரயில்வே கட்டணச் சலுகை, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பெறுவதில் முன்னுரிமை, தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை, ஆகியவை பெறும் வகையில் அரசு அங்கீகார அட்டை வழங்கியுள்ளது.

அதுமட்டுமின்றி, சென்னைப் பத்திரிகையாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொள்ள திருவான்மியூரை அடுத்துள்ள கொட்டிவாக்கத்தில 5.5 ஏக்கர் நிலமும் ரூ.20 இலட்சம் மானியமும் அரசு வழங்கியுள்ளது. பத்திரிகையாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக வீடொன்றுக்கு ரூ.40,000 வீதம் மானியமாக ரூ.50 இலட்சம் வரை வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வுபெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மாதம் ரூ.400 ஆகப் பெற்றுவந்த பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.500 ஆக உயர்த்தி வழங்குமாறு ஆணையிட்டார்கள். அதன்படி 1992-ஆம் ஆண்டு முதல் ரூ.500 வழங்கப்பட்டுவருகிறது.

எண்திசையும் போற்றிட நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

எண் திசைத் தமிழர்களும் தஞ்சைத் திசை நோக்கித் தமிழ் உலா வந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த ஐந்து நாட்களிலும் அற்புதங்கள் அரங்கேற்றமாயின. உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இலக்கியக் காட்சிகள் நிறைந்த ஊர்வலம், 1,200 அறிஞர்கள் அகிலமெங்கிலும் இருந்து திரண்டுவந்து தமிழாய்வு நடத்திய ஆய்வரங்கம், 'நெல் விளைகின்ற தஞ்சையில் இனி சொல் விளையும்' என்று பார்த்தோர் பாராட்டும் வகையில் நடைபெற்ற கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள், கலைமகள் குடிகொள்வது இங்குதானோ என்று கருதும் வண்ணம் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகள், குடியரசுத் துணைத் தலைவர் கலந்து கொண்ட தொடக்கவிழா, பாரதப் பிரதமர் பங்கேற்ற நிறைவு விழா இவையெல்லாம் வரலாற்றின் வைரமணிப் பக்கங்களில் இடம் பெற்றுவிட்ட அற்புதங்களாகும்.

"தொண்டு செய்வோம் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித் தெழுந்தே" என்று உணர்ச்சிப் பிழம்பாய்ப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கிய முழக்கம் செயலிலே சிலிர்த்தெழுந்த மாநாடுதான் உலகமே வியந்து பாராட்டும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் படைத்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு.

தமிழ் நிலம், தமிழ் மொழி, தமிழர் திறம், ஆகியவற்றின் அருஞ்சிறப்பினைச் செப்பும் விதமாக வரலாறு காணாத வகையில் 54 அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு... தமிழகத்தின் பழம்பெருமை பேசும் கலைகளான கரகாட்டம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், மயிலாட்டம், நையாண்டி மேளம், தாரை தப்பட்டை, கும்மி, கோலாட்டம், கொக்கலிக் கட்டை, ஓதுவார் பண்ணிசை, குதிரை வீரர்களின் அணிவகுப்பு என 27 கலை நிகழ்ச்சிகள்... கலை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிற்கும் இனிய இசையில் கருத்துமிக்க பாடல்கள்... என இன்சுவை யாவும் கலந்து சிந்தனைக்கு விருந்தளித்த கலைக்காட்சிப் பேரணி! தமிழகம், பிற மாநிலங்கள், மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கண்டு, கேட்டு, களிக்கும் வண்ணம் ஐந்து நாட்களிலும் சிறப்புமிகு இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பங்குபெற்ற நடனம், பாட்டு மற்றும் நாடக நிகழ்ச்சிகள்... குறிப்பாகத் தமிழக நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள், தஞ்சை நகரின் பல்வேறு பகுதிகளிலும் தெருமுனைக் கலை நிகழ்ச்சிகளாக சிறப்புடன் நடத்தப்பட்டன.

தமிழர் தம் வீரம், காதல், ஈகை, மொழிப் பற்று ஆகியவற்றை விளக்கும் விதமாகத் தமிழகத்தின் முன்னணி நடிகர், நடிகைகள் பங்குபெற்ற, இளம் இயக்குநர் உதயகுமார் இயக்கத்தில் உருவான 'இலக்கியச் சோலை' என்னும் வண்ணத் திரைப்படத்தினை இத்துறை தயாரித்து வெளியிட்டது.

உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளை செய்திகள், புகைப்படங்கள், தொலைக்காட்சி வாயிலாக உலக மக்களுக்குத் தெரிவிக்கும் பணியை இத்துறை திறம்படச் செய்தது. பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்களுக்குச் செய்திகளை அனுப்ப அனைத்து நிகழ்ச்சிகளையும் சீராகப் பதிவு செய்து உடனுக்குடன் தொலைக்காட்சி மூலம் நேரடியாகவும் ஒளிபரப்ப ஏற்பாடு செய்து மாநாட்டிற்கு வராத மக்களும் நிகழ்ச்சிகளைக் காண சிறப்பாக வகை செய்யப்பட்டது.

உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்கநாள் நிகழ்ச்சி முதல், நிறைவுநாள் நிகழ்ச்சி வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் திறமை வாய்ந்த பேச்சாளர்கள், புலவர்களைக் கொண்டு பாங்குறத் தொகுத்து வழங்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டது.

அரசின் பணிகளை மக்களுக்கு அறிவிப்போம்

அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை, சாதனைகளைக் கிராம மக்களும் அறிந்து பயனடையும் வகையில், பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்களின் பல்வேறு விளம்பர முறைகள், மரபு வழி பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள், முன்னேறிய தொழில்நுட்ப ஊடகங்கள் வாயிலாக அரசின் நலத்திட்டங்கள் விளக்கப்படுவதுடன் மக்கள் வசிக்கும் இடங்களிலேயே ஒரே நேரத்தில் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் உதவிகளும் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றன. இத்தகைய பல்துறைப் பணி விளக்க முகாம்கள் சிதம்பரனார், இராமநாதபுரம், திருவண்ணாமலை சம்புவராயர், திண்டுக்கல் அண்ணா, விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டன.

மாநில அரசின் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள், அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின் கீழ், சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படுகின்றன.

திரையரங்கு செல்வோரின் வசதிக்கு உறுதி

திரையரங்குகளுக்குப் படம் பார்க்கச் செல்லுகின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு உறுதி செய்யும்வகையில், சட்ட விதிகளில் காணப்படும் ஏற்பாடுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும் என்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

திரையரங்குகளில் நுழைவுச் சீட்டு விற்பனையை முறைப்படுத்த கடைசி வகுப்பு தவிர, பிற வகுப்புகள் அனைத்துக்கும் நுழைவுக் கட்டணத்தை அதிகரித்தோ, குறைத்தோ, தேவையான வகையில் நிர்ணயித்துக்கொள்ள அரசு அனுமதி அளித்து உள்ளது.

எந்நாட்டவரும் போற்றும் நம்நாட்டுக் கலைகள்!



நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரத நாட்டியம் விளங்குகிறது.

"அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" என்று, இறைவனையே பரதக் கலையின் கண்கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதி பலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 2-லிருந்து

மேலும் வீடியோ திருட்டைத் தடை செய்வதற்கும், வீடியோ கேசட் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப் படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப் படுத்துவதற்கும் உரிய சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. அதேபோல, கேபிள் டி.வி. மூலம் திரைப்படங்கள் திரையிடுவதை முறைப்படுத்தவும் உரிய சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன.

இப்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறையில் தமிழக அரசின் சாதனைகளை இன்னும் அடுக்கடுக்காகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

எளிய தொண்டர்கள் தினம் பாடும் திருப்புகழ், தேவாரம், திருவாசகம்; புலிகளை அடக்கிய புறநானூறு; எதிர்ப்போருக்குக் கலிங்கத்துப் பரணி; தித்திக்கும் தமிழை எத்துறையிலும் பரப்பிவரும் முத்தமிழ் அன்னை; மூன்று கடல் சூழ்ந்திருக்கும் தென்னகத்தில், மூன்று தமிழ் சிறந்திருக்கும் தமிழகத்தில், நான்காம் தமிழென அறிவியல் தமிழ் கண்டு, முத்தான தமிழ் வளர்க்கும் எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சாதனையின் சிகரமாக, சரித்திரத்தின் சின்னமாக, மக்கள் வேதனை தீர்க்கும் வெற்றி மகளாக, கடும் சோதனைகளையும் பொடிப் பொடியாக்கும் புனித அன்னையாக இன்னும் நூறாண்டு காலம் தமிழகத்தை ஆண்டு, சாதனைகளை மிஞ்சும் சாதனை படைப்பார் என்பதில் என்ன ஐயம்? ✻

கடலலை போல் பெருகும் கல்வித்துறையின் சாதனைகள்

மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் திரு க. பொன்னுசாமி



புலவர் பெருமக்கள் எல்லாம் புகழ்ந்து பாடும் பெருமையைக் கடந்த நான்காண்டு காலப் பொற்கால ஆட்சியில் புரிந்துள்ள சாதனைகள் மூலம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

"தொண்டு செய்வாய்
தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே!"

என்று பாடினார் புரட்சிக் கவிஞர்

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோ, தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தமிழ்நாட்டு அரசின் துறைதோறும் துறைதோறும் இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில், முன்னோடித் திட்டங்கள் பலவற்றை முனைப்புடன் செயல்படுத்திப் புகழ் கொண்டுள்ளார்கள்.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி இம்மண்ணில் உதயமான 1991 சூன் திங்கள் தொடங்கி இன்றுவரை நான்காண்டுக் காலத்தில் தமிழகக் கல்வித்துறை புரிந்துள்ள சாதனைகள் தமிழகத்தை இமயமாய் நிமிரச் செய்துள்ளன.

நிதி ஒதுக்கீடு

ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்வித்துறை வளர்ச்சிக்கும் ஒதுக்கப்படும் நிதியை 4 ஆண்டுக் காலத்தில் இருமடங்காக உயர்த்திய பெருமை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

கி.பி.2000-இல் அனைவர்க்கும் தொடக்கக்கல்வி, என்பது நடுவண் அரசின் குறிக்கோள்.

எனினும் உலகம் புகழும் 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம் கண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, தமிழகத்தில் 1998 -லேயே அனைவர்க்கும் தொடக்கக்

500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒரு தொடக்கப் பள்ளி.

14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி எனச் சட்டம் இயற்றிச் சாதனை.

தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் பெண்களே ஆசிரியர்களாக நியமனம்.

தமிழக அறிவொளி இயக்கம் அகில இந்திய அளவில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தி உள்ளது.

கல்வியை அளித்திட உறுதி பூண்டுள்ளது.

500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒரு தொடக்கப்பள்ளி ஒரு கி.மீ.இடைவெளியில் ஒரு தொடக்கப் பள்ளி - எனக் கொள்கை வகுத்துள்ளது. 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி எனச் சட்டமியற்றிச் சாதனை புரிந்து இந்தியாவுக்கே வழிகாட்டியுள்ளது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகளின் விளைவாகத் தொடக்க/நடுநிலைப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறிப்பிடத் தக்க அளவில் பெருகியுள்ளது.

மேலும், தொடக்கப்பள்ளி களில் இடையில் படிப்பை விடும் குழந்தைகள் சதவீதம் 23.14 சதவீதம் ஆக இருந்தது. 1994-95-இல் 16.54 சதவீதமாகக் குறைந்து விட்டது. நடுநிலைப் பள்ளிகளில் 58.75 சதவீதமா யிருந்தது, 34.74 சதவீதமாய் குறைந்து, சாதனை படைத்திருக் கிறது.

பள்ளி வயதுக் குழந்தை களின் 100 சதவீத சேர்க்கைக்கும் சேர்ந்த குழந்தைகளின் தொடர்ச் சியான கல்வி வளர்ச்சிக்கும் உதவி செய்யும் வகையில், இந்த ஆண்டில் கூடுதலாக 100 தொடக்கப் பள்ளிகள் திறக்கப் படுகின்றன. 25 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளி களாகவும், 40 நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாகவும், 30 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த் தப்படுகின்றன.

அறிவியல் கல்வியில் சாதனை

இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவியல் கல்வி வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாய், தென்னிந்திய அறிவியல் பொருட்காட்சியில் பங்குபெறும் நம் தமிழகப் பள்ளிகள் கடந்த மூன்றாண்டுகளாய்த் தொடர்ந்து வென்று சுழல் கேடயத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ள சாதனை இங்குக் குறிப்பிடத் தக்கது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய முயற்சிகள் காரணமாகத் தமிழகத்தில் மொத்தமுள்ள 1757 மேல்நிலைப் பள்ளிகளுள், 1313 பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 18.28 சத மாணவர்கள் தொழிற் கல்விப் பாடங்களைக் கற்றுவரு வதால் அகில இந்திய அளவில் தமிழகம் பாராட்டப்பட்டுள்ளது.

கட்டட வசதிகள்

கட்டட வசதி இல்லாத தொடக்கப் பள்ளிகளுக்குக் குறைந்தபட்சம் இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசினால் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

பெண் கல்வியை ஊக்கப்படுத்திட....

தமிழகப் பெண் குழந்தை களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தந்து வரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால்,

8-ஆம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்குத் திரு மண நிதி உதவி அளிக்கப் படுகிறது.

பள்ளிகளில் அதிக அளவில் ஆதி திராவிட மாணவியரைச் சேர்க்கும் தலைமையாசிரி யர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அனைத்துப் பெண்கள் பள்ளிகளுக்கும் கழிப்பிட வச திகள் படிப்படியாகச் செய்து கொடுக்கப்படுகின்றன.

கி.பி.2000-க்குள் 100 விழுக் காடு பெண்கள் கல்வியை எய்திட முதல்வரின் 15 அம்சத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் பெண்களே ஆசிரியர்களாக நியமனம் செய் யப்படுகின்றனர்.

மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சிகள் காரணமாக, உலக வங்கி உதவியுடன், ரூ.126 கோடி மதிப்பீட்டில், தருமபுரி, விழுப்புரம் இராமசாமிப் படை யாட்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட் டங்களில் தீவிரத் தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் மூலம் கிராமப் பகுதிகளில் வாழும் ஏழைக் குழந்தைகளும் தரமான கல்வியைப் பெற வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் நியமனம்

கல்வித்தரம் உயர, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுதல் அவசியம்.

தொடக்க நடுநிலைப்பள்ளி களில் காலியாயுள்ள பணி யிடங்களில் இடைநிலை ஆசிரியர் களை நியமனம் செய்திட, இதய தெய்வம் அவர்களின் அரசு, எழுத்துத் தேர்வு எழுதிய 56,000 பேரில் வெற்றி பெற்ற 13,148 பேருக்கு நேர்முகத் தேர்வு நடத்தியுள்ளது. இவர்களின் தகுதியும், திறமையும் வாய்ந்த 8000 பேர் மிக விரைவில் ஆசிரி யர்களாய் நியமனம் செய்யப் படுவர்.

இம் மாபெரும் பணியைச் செய்துவரும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் களையும் அவ்வப்போது தேர்வு செய்து வருகிறது.

கல்லூரிகளில் பல ஆண்டு களாய் காலியாயுள்ள ஆசிரியர் பணி இடங்களையும் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொண் டுள்ளது.

அறிவொளி இயக்கம்

தமிழகத்தில் வாழும் 15/ 35 வயதுடைய மக்களிடையே உள்ள கல்லாமையை நீக்கும் முயற்சி யில் தமிழக அறிவொளி இயக் கம் அகில அளவில் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலம் தமிழகம் என்னும் பெருமையை ஏற்படுத்தியுள்ளது.

புதிய பாட நூல்கள்

வளர்ந்து வரும் அறிவியல் புதுமைகளுக்கேற்பப் பள்ளிப் பாடத் திட்டங்களை மாற்றிய மைத்திட, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய அறிவுரைகள்படி வல்லுநர் குழுவின் மூலம் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட் டுள்ளன. அவற்றின் அடிப்படை யில் பாடநூல்கள் புதிதாக உரு வாக்கப்படுகின்றன. இந்த ஆண் டில் 1, 6, 11-ஆம் வகுப்புகளுக்குப் புதிய பாடநூல்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. படிப்படி யாக மற்ற வகுப்புகளுக்கும் புதிய பாடநூல்கள் தயாரித்து வழங்கப்படும்.

சீரிய இப்பணியைத் தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம் சிறப் பாகச் செய்துவருகிறது.

காகிதவிலை கட்டுப் பாடின்றி ஏறிவிட்ட நிலையிலும், ஏழைக் குழந்தைகளின் கல்வி நலன் ஒன்றையே பெரிதாய்க் கருதும் இதயதெய்வம் அவர் களின் அரசு, புத்தகங்கள்/குறிப் பேடுகள் ஆகியவற்றின் விலை களை ஏற்றாமல் கடந்த ஆண்

டின் விலையிலேயே வழங்கிட ஆணையிட்டுள்ளது போற்றத் தக்க சாதனையாகும்.

ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாசியுடன் உருவாக்கப் பட்டுள்ள ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப்பயிற்சி இயக்கம், ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்திடும் நோக்கில் ஒவ்வொரு வகுப்பிலும் குழந்தைகள் அடையவேண்டிய குறைந்தபட்ச இலக்குகளை வரையறுத்து, அவைகளை அவர்கள் எளிதில் பெறுவதற்கு வழிகாட்டும் வகையில் கற்பித்திட 3,24,000 ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப் பட்டுவருகின்றன.

புரட்சித்தலைவி அவர்கள் அறிவுரைகள்படி புதிய பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள வேளையில், ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் தமிழகக் கல்வித்துறைக்குச் சிறந்த பயனை அளிக்கும்.

நூலகங்கள்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையின்படி நூலகம் இல்லாத 5000 மக்கள் தொகை கொண்ட 625 கிராமங்களில் நூலகங்கள் அமைக்கப்படுகின்றன.

புதிய நூல்கள் பல உருவாதலை ஊக்குவிக்கும் நோக்கில் சிறந்த நூலாசிரியர் ஒவருக்குட—

பேரறிஞர் அண்ணா பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

உயர்கல்வி கல்லூரிக்கல்வி

மாநில உயர்கல்வி மன்றம் அமைத்து, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தந்துவரும் ஊக்கம் காரணமாக தமிழகம் உயர்கல்வி வழங்குவதில் உன்னத நிலை அடைந்துள்ளது.

வேலை வாய்ப்புகளுக்கு வழிகாட்டும் கணினி அறிவியல், மின்னணுவியல், மக்கள் தொடர்பு, வணிக மேலாண்மை போன்ற புதிய பாடங்களைக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தியுள்ளது.

பெண்கல்வி வளர்ச்சியைப் பெரிதும் விரும்பும் முதல்வர் அவர்கள், பெண்கள் கல்லூரி இல்லாப் பகுதிகளில், உள்ள ஆண்கள் கல்லூரிகளில் 30 விழுக்காடு இடங்களில் பெண்களைச் சேர்க்க ஆணை வழங்கியுள்ளார்கள்.

தேசிய கடனுதவித் திட்டத்தை நடுவண் அரசு நிறுத்தி விட்டதால், கல்லூரிக் கல்வி வளர்ச்சிக்குக் கவலை கொண்ட மாணவ சமுதாயத்தின் மனக் கவலை போக்கிட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாநில அரசின் சார்பில் அத்திட்டம் தொடர்ந்து நடைபெறும் என ஆணை வழங்கி, ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் அனுமதிக்கிறார்கள்.

விளையாட்டு வளர்ச்சி

இதயதெய்வம் மாண்புமிகு—

முதல்வர் அவர்கள் இந்நாளைய இளைஞர் சமுதாயத்தின் எழுச்சி கீதமாய் விளங்குகிறார்கள். தமிழக விளையாட்டுத்துறை வளர்ச்சியை நினைப்பவர்கள் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியின் மாட்சியைப் புகழாமல் இருக்க முடியாது.

ஏழரை மாதக் கால அளவில் ஈடும் இணையுமில்லா வண்ணம் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தை எடுப்பித்து, விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிவரும் அளப்பரிய சாதனைகளுக்காக உலக நாடுகளின் ஒலிம்பிக் குழுவினர் நேரில் வந்து விருது தந்து பாராட்டியுள்ளனர்.

இதயதெய்வம் அவர்கள் 1995 டிசம்பரில் சென்னையில் நிகழவிருக்கும் 7-வது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் விளையாட்டுப் போட்டிகளுக்காகப் பல்நோக்கு உள்ளரங்கம், டென்னிஸ் அரங்கம், ஹாக்கி அரங்கம், நீச்சல் குளம் ஆகியவைகளைப் பன்னாட்டுத் தரநிலைகளுக்கேற்ப அமைத்து வருகிறார்கள்.

விளையாட்டுக் கிராமம்

வெளிநாட்டு வீரர்கள் வந்து தங்குதற்கு வசதியாகக் கோயம்பேட்டில் ரூ.70 கோடி செலவில் விளையாட்டுக் கிராமம் ஒன்றையும் அமைத்துவருகிறார்கள்.

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப் பரிசுகள்

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் தருவதில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி—

அவர்களின் அரசுக்கு இணையே கிடையாது.

உலக, தேசிய, மாநில நிலைகளில் சாதனைகள் புரிவோர்க்குப் பணமாகவும், வீடுகளாகவும், மனைகளாகவும் பரிசுகள் வழங்குகிறார்கள்.

கின்னஸ் சாதனை படைத்த வீரச் சிறுவன் குற்றாலீசுவரன், டிரையதான் சாதனை வீராங்கனை அமுதா போன்றோர்க்கும், பிறர்க்கும் தேவைப்படும் நிதியுதவிகளைச் செய்து சாதனைகளைத் தொடர்ந்து படைத்திட ஊக்கம் தந்து வருகிறார்கள்.

தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சி

இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவியல் தொழில்நுட்பக் கல்வி மிகப் பெரிய முன்னேற்றத்தினை அடைந்து வருகிறது.

பர்கூரில் ஓர் அரசுப் பொறியியல் கல்லூரி உட்பட 11 புதிய பொறியியல் கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றால் பொறியியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை ஏறத்தாழ 36 சதவிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

8.5 மில்லியன் கனடா டாலர் தொகையுடன் கனடா சமுதாயக் கல்லூரிகள் குழு, கனடா இந்திய பயிலகக் கூட்டுறவுத்திட்டம் இதயதெய்வம் அவர்களின் அரசால் தமிழகத்தில் தொடங்கப் பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் இரண்டாம் பொறியியல் கல்வித் திட்டம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நெகிழ்வாகவும் பயனுடையதாகவும் ஈடுகொடுக்கும் வகையில் பல்தொழில் நுட்பக் கல்வி முறையில் கொள்கைகளைப் புதுப்பிக்கவும் சீராக்கம் செய்யவும் இத்திட்டம் உறுதுணையாயுள்ளது.

தமிழ்நாட்டின் இரண்டாம் பொறியியற் கல்வித்திட்டம் ரூ.76 கோடி செலவில் 21 அருசினர் தொழிற் நுட்பப் பயிலகங்களையும், 34 அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களையும் உள்ளடக்கி உள்ளது.

தமிழ் வளர்ச்சி

அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழி என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சாதனைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தது போன்ற சாதனை, புரட்சித் தலைவி அவர்களால் நடத்தப் பட்ட எட்டாம் உலகத் தமிழ் மாநாடாகும்.

உலகெங்கிலுமிருந்து 28 நாடுகளைச் சேர்ந்த 1101 அறிஞர் பெருமக்கள் பங்குகொண்ட எட்டாம் உலகத் தமிழ் மாநாடு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புகழை உலகுக்கு உணர்த்தியது.

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் துணைக் குடியரசுத் தலைவரும் பிரதமர் அவர்களும் பங்குகொண்டு தமிழும், தமிழகமும் இந்தியப்பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள வலிமை வாய்ந்த செல்வாக்கினைப் புகழ்ந்து பாராட்டியமை, தமிழகத்தின் மதிப்பை உயர்த்துவனவாகும்.

மாநாட்டில், இன்றும் தமிழ் என்றும் தமிழ் என்னும் புதிய முழக்கத்தைத் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நான்காம் தமிழாய் அறிவியல் தமிழ் வளர்க்க அறிஞர் பெருமக்களை அறைகூவி அழைத்துப் புதிய சிந்தனையை ஏற்படுத்தினார்கள். இது எதிர்காலத் தமிழினத்தால் நினைந்து நினைந்து மகிழத் தக்க சாதனையாய் மலரும்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இத்தகைய தன்னலமற்ற தியாகச் சிந்தனைகள் ஏழை எளியோர் நலம் காக்க எடுத்துவைக்கும் இலட்சியத் திட்டங்கள், அவைகளை நிறைவேற்றுவதில் கொண்டுள்ள அசைவிலா உறுதிப்பாடுகள் ஆகியவை மூலம், தமிழகக் கல்வித்துறை அலையலையாய்ச் சாதனைகளைப் படைத்துக்கொண்டேயிருக்கும். அந்த அலைகளின் ஓசைபோல் இதயதெய்வத்தின் புகழ் உலகம் எங்கும் இசைத்துக் கொண்டேயிருக்கும்.

வாழ்க புரட்சித்தலைவி! ✻

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்றவேண்டும் அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

—திருவள்ளுவர்



தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சாதனைகள்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

திரு மேலூர் அ.மா. பரமசிவன்

மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் தலைமையில் அமைந்த இந்த அரசு 1995-ஆம் ஆண்டு ஜூன் 24ந் தேதி நான்காண்டுகளை முடித்து, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

வெற்றிக் கோமகள் முழுமதித் திருமகள் ஏற்றிடும் பொறுப்பில் ஏற்றமே எனப் போற்றிடும் புகழ்மிகு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியில்-

நான்கு ஆண்டுக் காலத்தில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை ஆற்றிய அரும் பணிகளில் சிலவற்றைச் சாற்றிட முனைகிறேன்.

தொட்டதெல்லாம் துலங்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் தொழில் வளர்வதையும், தொழிலாளர் நலன் மேலோங்கி நிற்பதையும் இந்நானிலமே போற்றுகின்றது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் நான்கு ஆண்டுக் கால ஆட்சியில் 3,902 தொழிற்சாலைகள் புதிதாக வந்துள்ளன. அவற்றில் ஒரு இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று எண்பத்து மூன்று தொழிலாளர்கள் புதியதாக வேலை நியமனம் பெற்றுள்ளனர்.

தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும் இணைந்து செயல்படவேண்டும் என்ற தொழிலுறவுக் கொள்கையால் தொழிலாளர் துறைக்கு வரும் தொழில் தகராறுகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது.

1010 குழந்தைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு, பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 14 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கணினி மயமாக்கப் பட்டுள்ளன.

கட்டடத் தொழிலாளர் நல வாரியம்

கலைமிகு கட்டடங்களைக் கண்டபோதெல்லாம் அதனைக் கட்டிய தொழிலாளர்களின் துயரை நினைத்து, கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சி பாங்காய் வடித்த திட்டமே கட்டடத் தொழிலாளர்கள் நலத்திட்டம். கட்டடத் தொழிலாளர்கள் துயர்துடைக்க "கட்டடத் தொழிலாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டு சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாநகர்களில் உள்ள கட்டடத் தொழிலாளர்களை முதலில் பதிவு செய்ய நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டது.

குறைந்த அளவு ஊதியச் சட்டம்

"ஆக்கம் அதர்வினாய்ச்
செல்லும் அசைவு இலா
ஊக்கம் உடையான் உழை"

என்றார் வள்ளுவர்.



குறைந்தபட்ச ஊதியவிகிதம் நாள் ஒன்றுக்கு ரூ.20க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. 12 தொழில்களுக்கு முதன் முதலாகக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 30 தொழில்களுக்கு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பீடித் தொழிலாளர்கள்

பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் 1.5.1995 முதல் ரூ.24.70 லிருந்து ரூ.30.70 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதன்முதலாக அவர்கள் போனஸ் சட்டத்தின் கீழ் குறைந்த பட்ச போனஸ் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

"ஏழை எளிய மக்களின் சிரிப்பில் வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்" என்றார் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் 1000 வீடுகள் ரூ.2.20 கோடி திட்டத்தில் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. பீடித் தொழிலாளர்கள் அதிக அளவில் வசிக்கும் வட ஆர்க்காடு அம்பேத்கர், திருச்சி, பெரியார், சேலம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் வீடு கட்டித்தரத் தேவையான நிலம் கையகம் செய்யும் பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

பனியன் தொழிலாளர்கள்

திருப்பூரிலுள்ள பனியன் தொழிற்சாலைகளில் பணி புரியும் சுமார் 1,00,000 பனியன் தொழிலாளர்ளின் சம்பளம் உள்ளிட்ட இதரப் பிரச்சினைகள் 9.8.93 அன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் முயற்சியால் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

திரைப்படத் தொழிலாளர்கள் நலத்திட்டம்

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனுக்காக விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம் ஆகிய இரு திட்டங்களை 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு கொண்டு வந்துள்ளது. பணியில் இருக்கும்போது விபத்தில் இறந்தால் அவரின் குடும்பத்திற்கு ரூ.50,000-ம் 60 வயது நிறைவான பணியாளர்களுக்கு ஓய்வூதியமாக மாதம்ரூ.300-ம் வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

முதலமைச்சர் நிவாரண நிதி

மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்து தொழில் அமைதியைப் பேணிக்காக்கும் வகையில் "முதலமைச்சர் நிவாரண நிதி" யிலிருந்து 1991-ஆம் ஆண்டு முதல் 1994-ஆம் ஆண்டு முடிய 52,994 தொழிலாளர்களுக்கு ரூ.2,10,39,800 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் துயர் துடைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மறுவாழ்வு நிதி

வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப் பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை பெற இயலாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இந்த நிதியை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளை நவீனப் படுத்துவதனாலோ அல்லது தொழில்நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த மூடப்பட்ட நிலையினாலோ வேலையிழந்து பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்குப் புனர்.

கல்வியின் நோக்கம்

வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம். –டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

வாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் நல நிதி" என்னும் ஒரு தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பெண் தொழிலாளர்களுக்குப் பேறுகால விடுப்பினை அதிகரித்தல்

அகிலம் போற்றும் அன்னை தெரசாவால் பாராட்டப்பட்ட, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களின் பேறுகால விடுப்புக் காலத்தை 12 வாரங்களிலிருந்து 24 வாரங்களுக்கு அதிகரிக்கவும், முழுப் பணிக் காலத்தில் பேறுகால விடுப்பாக 48 வாரங்கள் வரை அளிக்கும் வகையில் சட்டத் திட்டம் கொண்டுவர ஆணையிட்டுள்ளார்கள்.

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

குழந்தைத் தொழிலாளர் முறையினை முதலில் ஆபத்தான தொழில்களில் நீக்கப் பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. ரூ.244.19 கோடி திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 1010 குழந்தைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு, பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வேலைவாய்ப்பகங்கள் கணினிமயமாக்குதல்

வேலைவாய்ப்பகங்கள் புகார் இல்லாமல் பணியாற்றிடக் கணினி மயமாக்கும் திட்டம் 1991-இல் கொண்டுவரப்பட்டு, இதுவரை 14 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

பயிற்சி வகுப்புகள்

படித்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகள் நல்லமுறையில் எழுதுவதற்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நான்கு ஆண்டுகளில் 31,777 ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இளைஞர்களுக்கு ரூ.97.81 இலட்சங்கள் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

கிராமப்புறப் பள்ளிகளைத் தத்தெடுக்கும் திட்டம்

கிராமப்புறப் பள்ளியைத் தத்து எடுத்துக்கொண்டு அம்மாணவர்களுக்குத் தீவிரமான முறையில் வழிகாட்டல் உதவிகளை மேற்கொள்ளும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் 25 மேல்நிலைப் பள்ளிகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய வாழ்வியல் பயிற்சித் திட்டம்

சிறு தொழில் நிறுவனங்களுக்குப் போதுமான பயிற்சியும், தகுதியும் உள்ள தொழிலாளர்கள் கிடைப்பதற்கு ஏதுவாக, இந்த ஆண்டிலேயே 15 குறுகிய காலத் தொழிற் பிரிவுகள் ஏற்படுத்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மகளிருக்கான வேலைவாய்ப்பு வசதியினை மேம்படுத்துதல்

மகளிருக்கான வேலை வாய்ப்பு வசதியினை மேம்படுத்தும் வகையில் புதிய தொழிற் பிரிவுகளான ஸ்கிரீன் பிரிண்டிங், எக்ஸ்போர்ட் கார்மெண்ட், டெய்லரிங் மற்றும் டெஸ்க் டாப் பப்ளிஷிங் ஆபரேட்டர் ஆகிய குறுகிய காலத் தொழிற் பயிற்சிப் பிரிவுகள் முறையே ஈரோடு, மற்றும் கிண்டி மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.14.9 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமங்களைத் தத்தெடுத்தல்

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களைச் சமூகத் தொண்டில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் மாவட்டத்திற்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அருகிலுள்ள கிராமம் ஒன்றினைத் தத்தெடுத்து தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள பயிற்றுநர் மற்றும் பயிற்சியாளர்களைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராம மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. ❋

நாட்டுயர்வுக்கு வழிகோலும் கூட்டுறவு

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு கா.ப. பட்டாபிராமன்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நான்காண்டுப் பொற்கால ஆட்சியின் கூட்டுறவின் மூலம், வரலாற்றில் நின்று நிலவும், தமிழகத்தின் வளத்தையும், புகழையும் சேர்க்கக் கூடிய மாபெரும் புகழ்ச்சிகரச் சாதனைகள் ஆற்றப்பட்டுள்ளன.



விவசாயிகள், ஏழை எளியவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற இலட்சக்கணக்கான மக்கள் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், மகளிர் ஆகியோர் கூட்டுறவின் பெரும் பயனைப் பெற்று மகிழ்கிறார்கள். வணிக வங்கிகளை நாடிப் பலமுறை சென்று பெறமுடியாத கடன் வசதிகளை, கேட்ட மாத்திரத்தில் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைக்கேற்ப வழங்கி வருகின்றன.

விவசாயிகள், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், மகளிர் ஆகியோர் கடன் பெற்றுத் தங்களது தொழில்களை வளர்த்துக்கொள்ள ஏற்புடைய வகையில் தமிழகத்திலே உள்ள 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 22 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அதன் 622 கிளைகள், 181 பிரதம நிலவள வங்கிகள் ஆகியவை மகத்தான பணிகளை ஆற்றிக் கொண்டுள்ளன. நகர்ப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் மாபெரும் பணிகளை ஆற்றி, நகர்ப்புற மக்களின் வாழ்வில் மேம்பாட்டினை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் நிலவள வங்கிகள் மூலமாக நகைக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

குறுகிய காலக் கடன்

விவசாயிப் பெருங்குடி மக்களுக்கு 1991-92-இல் குறுகிய காலக் கடனாக ரூ.278.52 கோடியும், 1992-93-இல் குறுகிய காலக் கடன் ரூ.340.86 கோடியும், 1993-94-இல் குறுகிய காலக் கடன் ரூ.439.54 கோடியும், 1994-95-இல் ரூ.561.74 கோடியும், ஆக மொத்தம் ரூ.1620.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைந்துள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டில் 1994-95-இல் குறுகிய காலக் கடன் ரூ.470 கோடி வழங்க இலக்கு, நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் இந்தத் தொகை பன்மடங்கு உயர இருக்கிறது.

மத்திய காலக் கடன்

புரட்சித்தலைவியின் பொன்னான ஆட்சியில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மத்திய காலக் கடனாக 1991-92-இல் ரூ.44.71 கோடியும், 1992-93-இல் ரூ.45.75 கோடியும், 1993-94-இல் ரூ.52.65 கோடியும், 1994-95-இல் ரூ.61.99 கோடியும் ஆகமொத்தம் ரூ.205.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ரூ.60.

கோடி அளவுக்கு மத்தியக் காலக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதும், இந்த இலக்கைவிட அதிகமான அளவுக்கு மத்தியக் காலக் கடன்கள் வழங்கப்பட இருக்கின்றன.

நீண்டகாலக் கடன்

பண்ணை சார்ந்த தொழில்கள், பண்ணை சாராத்தொழில்கள் இவற்றை வளர்ப்பதற்காக இவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள விவசாயிகளை, வாழ்வில் உயர்த்துவதற்காக நீண்டகாலக் கடன் வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

ஆகமொத்தம் ரூ.368.64 கோடி கடந்த நான்கு ஆண்டுகளில் நீண்டகாலக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் 1994-95-இல் ரூ.150. கோடி நீண்டகாலக் கடன் வழங்குவதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதும், சாதனை இதைவிட மிக அதிகமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் புனித ஆட்சியில் அமைய இருக்கிறது.

நகைக் கடன்

விவசாயிகள் தனியாரிடம் சென்று நகைக் கடன் பெறுவதற்குப் பல இடர்ப்பாடுகளும், இன்னல்களும் ஏற்படுவதை இந்த நாடு மிக நன்றாக அறியும். கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்கள் வழங்குவதில் எளிய முறைகளைக் கடைப்பிடித்து விவசாயிகளுக்கு நகைக் கடன்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு சவரன் நகைக்கு ரூ.2,400 என்கிற விகிதத்திலே கடன் வழங்கப் படுவதோடு, தனி நபர்க்கு அதிக பட்சமாக ரூ.40 ஆயிரம் வரை கடன் வழங்க சமூகநீதி காத்த வீராங்கனை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக் கேற்ப வழங்கப்பட்டு வருகிறது.

நகைக் கடனாக 1991-92-இல் ரூ.843.70 கோடியும், 1992-93-இல் ரூ.1080.28 கோடியும், 1993-94-இல் ரூ.1,363 கோடியும், 1994-95-இல் ரூ.1,805.50 கோடியும், ஆகமொத்தம் ரூ.5092.48 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் பல இலட்சக்கணக்கான · விவசாயப் பெருங்குடி மக்களும் நகர்ப்புற மக்களும் பயன்பெற்றுள்ளார்கள்.

வாழ்வில் நலிவுற்றோர் மேம்பாட்டிற்காக

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிகாட்டுதலோடு வழங்கப்படுகின்ற மொத்த குறுகிய காலக் கடன்களில் 25 சதவிகிதம் நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட வேண்டும் என்கின்ற திட்டத்தின் அடிப்படையில், தமிழக முதலமைச்சர் ஏழை, எளியோரின் இரட்சகர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வாழ்வில் நலிவுற்றோர்க்கு வாழ்வளித்து வருகிறார்கள்.

அந்த வகையில், வாழ்வில் நலிவுற்றோர் மாபெரும் வளர்ச்சியைப் பெற்றுத் திகழ்கிறார்கள். 1992-93-இல் வாழ்வில் கூட்டுறவுக்குக் குறுகில கால மற்றும் மத்தியக் காலக் கடனாக ரூ.251.91 கோடியும், 1993-94-இல் ரூ.320.50 கோடியும், 1994-95-இல் ரூ.423.48 கோடியும் வழங்கப்பட்டிருக்கிறது. 1994-95-ஆம் ஆண்டில் குறுகியக் காலக் கடன் பெற்றதில் 65.3 சதவிகித நலிந்த பிரிவினராக இருப்பதும், அதைப் போலவே மத்தியக் காலக் கடன் பெற்றவர்களில் 91 சதவிகிதமாக இருப்பதும் மாபெரும் சாதனைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆதிதிராவிடர் வாழ்வின் மேம்பாட்டிற்கு

ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த குடும்பத்தில் ஒருவரைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக்கும் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் புரட்சித் திட்டங்களில் ஒன்றாகும். இதற்காக ரூ.100 பங்குத் தொகைக்காக அரசு மானியம் வழங்குகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் 8,532 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்திருக்கிறார்கள்.

1991 முதல் 1994 வரை அரசு மானியமாக ரூ.80 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல், ரூ.250 வட்டியில்லாக் கடன் வழங்கி அவர்களது பங்குத் தொகையைப் பெருக்கி, அதன்மூலம் அவர்கள் மேலும் கடன் வசதி பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வழி வகுத்துள்ளார்கள். ஆதிதிராவிடர் பெருங்குடி மக்களுக்கு 1992-93-இல் குறுகிய காலக் கடன் ரூ.34.54 கோடியும், மத்தியக் காலக் கடன் ரூ.11.26 கோடியும், 1993-94-இல் குறுகிய காலக் கடன் ரூ.44.54 கோடியும்,

மத்தியக் காலக் கடன் ரூ.13. கோடியும், 94-95-இல் குறுகிய காலக் கடன் 69.78 கோடியும், மத்தியக் காலக் கடன் ரூ.20.61 கோடியும் வழங்கப்பட்டிருக்கிறது.

இதைப்போலவே நீண்ட காலக் கடன் 1994-95-இல் ரூ.54.5 கோடி கடன் வழங்கி சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. 1994-95-இல் மட்டும் 1,43,370 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் பெற்றிருக்கிறார்கள் என்பது பெரும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

நடப்பு நிதியாண்டில் 1994-95-இல் 16 ஆயிரம் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு நபர் ஒருவருக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.750 வழங்குவதற்காக ரூ.40 இலட்சம், கருணைமிகு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது. இதைப் போலவே நகரக் கூட்டுறவு வங்கிகளில் 4 ஆயிரம் ஆதிதிராவிட உறுப்பினர்கள் வட்டியில்லாக் கடன் பெறும் வகையில், ரூ.20 இலட்சம் நிதியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

உடனடிக்கடன் வழங்கும் திட்டம்

கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதை எளிதாக்கவும், விரிவாக்கவும் ஏற்கெனவே பெற்றிருந்த கடனைத் திரும்பச் செலுத்திய உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கி, கடன் வழங்கவும், பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டு உடனடியாகக் கடன் வழங்குகின்ற திட்டத்தை, வெற்றியின் வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1992-93-இல் 1,24,607 நபர்களுக்கு ரூ.57.75 கோடியும், 1993-94-இல் 2,95,426 பேர்களுக்கு ரூ.167.74 கோடியும், 1994 95-ஆம் ஆண்டில் 3,47,601 பேர்களுக்கு ரூ.266.10 கோடியும் வாரி வழங்கிய வள்ளலின் வாரிசு ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் சென்றாண்டைவிட 20 சதவிகிதம் கூடுதலாகச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மகத்தான மக்கள் சக்தியால் கூட்டுறவு வங்கிகள் தங்கள் உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் நிலுவைகளை முழுமையாக வசூல் செய்து மாபெரும் சாதனை படைத்திருக்கின்றன.

நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன் வழங்கியதிலும், திரும்பப் பெறுவதிலும் மாபெரும் சாதனைகளைப் படைத்துள்ளன.

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் கூட்டுறவு நிலவள வங்கி 99 சதவிகிதம் கடன் வசூல் செய்து பெரும் சாதனையைப் படைத்திருக்கிறது.

நிலவள வங்கிகள் மூலம் நகைக் கடன்

இந்தியாவிலேயே முதன் முதலாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்

தான் நிலவள வங்கிகள் மூலமாக நகைக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. 17.8.94 முதல் 31.3.95 வரை நிலவள வங்கிகள் நகைக் கடனாக ரூ.22.4 கோடி வழங்கி இருப்பது மிகப் பெரும் சாதனை என்றால் மிகையாகாது.

சொத்துரிமை ஆவண ஒப்படைப்பு அடமானம்

பிரதம நிலவள வங்கிகள் மூலமாகக் கடன் வழங்கும் முறையை எளிதாக்க சொத்துரிமை ஆவண ஒப்படைப்பு அடமானம் நடப்பாண்டுமுதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனால் கடன் வழங்கும்முறை எளிதாக்கப்படுவதோடு, ஏற்கெனவே இருந்த நடைமுறையில் வருமான வரிச் சான்றிதழ் பெறுதல், அடமானப் பத்திரம் பதிவு செய்தல் போன்றவை தவிர்க்கப்படும்.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் காமராசர் மாவட்டத்தில் ரூ.8.46 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ.15.08 கோடி மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு வங்கிகள்

நகர்ப்புற மக்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றவேண்டும் என்ற இலட்சியத்தோடு 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் பாங்காகப் பணியாற்றிக் கொண்டுள்ளன. இந்த நகரக் கூட்டுறவு வங்கிகளால் நடுத்தர மக்கள், கைவினைஞர்கள் பல வழிகளில் பயன் பெறுகிறார்கள். 1991-92-ஆம் ஆண்டில் ரூ.410.86 கோடி அளவில் பல்வேறு கடன்களையும், ரூ.284.15 கோடி நகைக் கடன்களையும், 1992-93-இல் ரூ.451.81 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.317.58 கோடி நகைக் கடனையும், 1993-94-இல் ரூ.480.97 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.367.17 கோடி நகைக் கடனையும், 1994-95-ஆம் ஆண்டில் ரூ.598.12 கோடியும் கடன் வழங்கியுள்ளது.

1989-90-இல் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.339.21 கோடியாக இருந்தது. 1994 95 இல் ரூ.581.12 கோடியாக உயர்ந்திருப்பது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசின் மாபெரும் சாதனை ஆகும். அதைப்போலவே நகரக் கூட்டுறவு வங்கிகள் திரட்டிய வைப்புத் தொகை 1989-90-இல் ரூ.373.80 கோடியாக இருந்தது. 1994-95-இல் ரூ.672.52 கோடியாக உயர்ந்திருக்கிறது.

1989-90-இல் நகரக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் 46 ஆக இருந்தது. 1995-96-இல் 76 ஆக உயர்ந்திருப்பது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

இரண்டாவது அட்டையில்...

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்கள் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 5.6.95 அன்று சென்னையில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்றார். விழா நிகழ்ச்சித் தொகுப்பு விவரங்கள் அடுத்த இதழில் இடம்பெறும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா சிறுதொழில் கடன் திட்டம்

வாழ்வில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்தவர்கள் குறிப்பாக மகளிர்களுக்குச் சிறுதொழில்கள் தொடங்க ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா சிறுதொழில் கடன் திட்டம் 1992-ஆம் ஆண்டு முதல் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நகர்ப் புறங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1992-93-இல் 1,41,447 பேருக்கு ரூ.68.23 கோடியும், 1993-94-இல் 1,89,482 பேருக்கு ரூ.83.72 கோடியும், கடன் தொகை வழங்கப்பட்டது. 1994-95-ஆம் ஆண்டில் 2,36,164 பேருக்கு ரூ.108.24 கோடி கடன் தொகையும் வழங்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் இத்திட்டத்தின் மூலம்

2,87,039 மகளிர் பயன் பெற்றுள்ளார்கள்.

மத்தியக் கூட்டுறவு வங்கியில் மகளிர் கிளை

தமிழ்நாட்டில் உள்ள 22 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 22 மகளிர் கிளைகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டுவருகின்றன. நடப்பாண்டில் மேலு 9 மகளிர் கிளைகள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்கள். தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னையில் மகளிர் கிளை ஒன்று தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறது.

மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு

தமிழ்நாட்டில் 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 68,252 மலைவாழ் மக்களை உறுப்பினராகக் கொண்டு மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டுள்ளன. மலைவாழுநரின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்துகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இச்சங்கங்களுக்கு நிதி உதவியினைத் தாராளமாக வழங்கி வருகின்றனர். இச்சங்கங்களுக்கு வட்டியில்லாக் கடனும் வழங்கப்பட்டு வருகின்றது.

1994-95-ஆம் ஆண்டில் ரூ.641.23 இலட்சம் கடன் வழங்கப்பட்டதோடு இதற்காக ரூ.76.96 இலட்சம் மானியமும் வழங்குவதற்காக நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஈடான கடன் தொகையும் வழங்கப்பட இருக்கிறது.

மலைப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு நடமாடும் நியாயவிலைக் கடைகள் மூலம் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகிறது. நுகர்பொருட்களை 26 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்காக 27 கூண்டு வண்டிகள் வாங்குவதற்காக ரூ.91.50 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்பற்ற அரசு வழங்கி இருக்கிறது.

பண்ணை சாராக் கடன்கள்

சிறு தொழில்களை வளர்க்க ஏதுவாகக் கிராமப்புறங்களில் வாழ்கின்ற கிராமப்புறக் கைவினைஞர்களுக்குப் பண்ணை சாராக் கடன்கள், நிலைத்த புகழ்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் மட்டும் பண்ணை சாராக் கடன்களாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ.20.16 கோடி, நகரக் கூட்டுறவு வங்கிகள் ரூ.31.71 கோடி, நிலவள வங்கிகள் ரூ.51.32 கோடி ஆக மொத்தம் ரூ.105.66 கோடியை 46,807 நபர்களுக்கு வழங்கியிருக்கின்றன. நடப்பு நிதியாண்டில் ரூ.100. கோடி அளவிற்குப் பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

சிறு தொழில்களுக்குக் கடன் வழங்குதல்

ஏழை, எளியோர் மீதும் ஈவும் இரக்கமும் கொண்ட டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சிறு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு அதிகபட்சத் தொகையாக ரூ.750 வழங்குவதை ரூ.1500 வழங்க ஆணைபிறப்பித்து, நடப்பாண்டில் தனி நபர் ஒருவர்க்கு அதிகபட்சம் ரூ.1,500 வரை கடன் வழங்கப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் 3,791 மகளிர் உட்பட 6,520 நபர்களுக்கு ரூ.43.7 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

பயிர் ஈட்டுறுதித் திட்டம்

1993-94-ஆம் ஆண்டில் ராபி பருவத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ், ரூ.7.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 52,700 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

பங்கு மூலதன உதவி

மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் சொந்த நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள அரசு பங்கு மூலதன உதவியை வழங்கி வருகிறது. இந்த நிதி உதவி 1989-90-ஆம் ஆண்டில் ரூ.98.87 இலட்சமாகவும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.175 இலட்சமாகவும், 1994-95-ஆம் ஆண்டில் ரூ.947.84 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டிருப்பது, ஒப்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசால்தான் என்பது உலகறிந்த உண்மையாகும்.

நீண்டகாலக் கடன்

விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடனை வழங்கி வருவது நிலவள வங்கிகள் ஆகும்.

இவ்வாறு நீண்டகாலக் கடன்களை வழங்குவதில் 1994-95-ஆம் ஆண்டில் இந்திய உபகண்டத்தில் உள்ள நிலவள வங்கிகளைவிட, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிலவள வங்கி மிகப் பெரிய சாதனையைப் படைத்து, கடன் வழங்குவதில், பரிசினைப் பெற்றுத் திகழ்கிறது என்பது, நிர்வாகத் திறன் மிகுந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனை என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு கூட்டுறவு நுகர்பொருள் இணையமும், மாவட்ட அளவில் 29 மொத்தக் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளும், 3,712 தொடக்கநிலைப் பண்டகசாலைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆறு மாவட்டங்களில் மகளிரைக் கொண்டு 13 தொடக்க நிலைப் பண்டகசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலம் நுகர்பொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1991-92-இல் ரூ.1267.35 கோடி, *1992-93-இல் ரூ.1236.10* கோடி, *1993-94-இல் ரூ.1408.10* கோடி, *1994-95 ரூ.1539.* கோடி மதிப்புள்ள நுகர்பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. *1995-96-இல் ரூ.1700.* கோடி அளவிற்கு விற்பனை செய்ய உள்ளன.

1994-ஆம் ஆண்டு தீபாவளியை ஒட்டி குறைந்த விலையில் சேலை, ரவிக்கை, வேட்டி, சட்டை, முழுக்கால் சட்டை, 27 வகையான அத்தியாவசியப் பொருட்கள், பட்டாசுகள், இனிப்பு வகைகள், குறைந்த விலையில் அனைவரும் தீபாவளி கொண்டாடும் வகையில் கூட்டுறவுச் சிறப்பங்காடி மூலம் விற்பனை செய்யப்பட்டது. இந்தப் பொருட்கள் ஏறத்தாழ *ரூ.6.39* கோடி அளவுக்கு விற்பனையாகியுள்ளன.

பொது விநியாகத் திட்டம்

இந்தியாவிலேயே பொது விநியாகத் திட்டப் பணிகள் கூட்டுறவால் நிர்வகிக்கப்படுவது தமிழகத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழகத்தில் *20,912* நியாய விலைக் கடைகள் *137* இலட்சம் அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை வழங்கிக்கொண்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் *ரூ.901.43* கோடி, *1993-94-இல் ரூ.902.23* கோடி, *1994-95-இல் ரூ.1,034* கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டது என்பது மிகப் பெரிய சாதனையாகும். அதோடு மக்களின் நலன் கருதி *1,719* பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன்றன. கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் *1994-95*-ஆம் ஆண்டில் *ரூ.2.5* கோடி மானியம் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பாகச் செயல்படும் நியாயவிலைக் கடைகள்

மாநில அளவில் செயல்படும் பொது விநியாகத் திட்டம் குறித்து திங்கள்தோறும் கூட்டுறவுச் செயலாளர் அவர்கள் ஆய்வினை மேற்கொள்கிறார். மாவட்ட அளவில், சிறப்பு பறக்கும் படை ஒன்று சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டுள்ளது.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

தமிழகத்தில் *113* கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அதனுடைய உறுப்பினர்களுக்கு விவசாய விளைபொருட்களை இலாபகரமாக விற்பனை செய்கின்ற பணியையும், நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் பணிகளையும் ஆற்றிக் கொண்டுள்ளது.

1991-92 ஆண்டில் *ரூ.325.39* கோடி, *1992-93-இல் ரூ.389.4* கோடி, *1993-94-இல் ரூ.428.32* கோடி, *1994-95-இல் ரூ.610.22* கோடி, வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. நடப்பு நிதியாண்டில் *ரூ.400* கோடி அளவிற்கு விளைபொருட்கள் விற்பனை செய்வதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கையும் விஞ்சி நுகர்பொருட்கள் விற்பனையில் நடப்பு நிதியாண்டில் மாபெரும் சாதனை படைக்கப்படும்.

விவசாய இடுபொருள் விநியோகம்

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களை வழங்குவதில் மாபெரும் சாதனையைத் தமிழகம் படைத்துக்கொண்டிருக்கிறது.

1991-92-இல் ரூ.168.04 கோடி, *1992-93 ரூ.194.64* கோடி,

1993-94-இல் ரூ.169.63 கோடி, *1994-95 ரூ.211* கோடி மதிப்புள்ள வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் இதைவிட அதிக அளவில் வேளாண் இடுபொருட்கள் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப வாரி வழங்கப் பட உள்ளன.

> கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருந்த காலம் மாறி இப்போது சமுதாய மாற்றத்திற்கு உதவும் மாபெரும் சக்தியாக விளங்கிவருகிறது. - மாண்புமிகு முதல்வர்

கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் விளம்பரம்

கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள், கூட்டுறவு இயக்கத்தினுடைய கொள்கைகளைப் பரப்புகின்ற பணியை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. 9 பயிற்சி நிலையங்களில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வானொலி மூலம் கூட்டுறவுக் கல்வி

வருங்காலச் சந்ததியினராகத் திகழும் மாணவ, மாணவியர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியைக் கற்பிக்கின்ற வகையில், *1993-94*-ஆம் ஆண்டில் திருச்சி வானொலி மூலமாகக் கூட்டுறவுக் கல்வி ஒலிபரப்பப்பட்டு, ஏறத்தாழ, *15,000* பேர் பயனடைந்தார்கள். இதைப்போல, *1995*-ஆம் ஆண்டில், சென்னை, கோவை, மதுரை, நெல்லை, நாகர்கோவில், உதகை, பாண்டிச்சேரி ஆகிய வானொலி நிலையங்கள் மூலமாகக் கூட்டுறவுக் கல்வி ஒலிபரப்பாகியது. பல்லாயிரக்கணக்கான, மாணவர்கள் இதில் கலந்துகொண்டு, கூட்டுறவின் தன்மை, மகிமை, சாதனைகளை வெகுவாகப் புரிந்து கொண்டார்கள்.

கூட்டுறவு விளையாட்டுப் போட்டி

கூட்டுறவுப் பணியாளர்களுக்காக, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட்டுறவு விளையாட்டுப் போட்டிகள் *1994-95*-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளில் அதிகப் புள்ளிகளை எடுத்த மதுரை மாவட்டத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் பெயரில் சுழற்கோப்பை வழங்கப்பட்டது.

கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு நிதியுதவி

கடந்த 4 ஆண்டுகளில் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து *ரூ.2.72* கோடியும், கூட்டுறவுக் கல்வி நிதியிலிருந்து *ரூ.1.46* கோடியும் மானியமாகச் செயல் பதிவாளர்கள் கூட்டுறவுச் சங்கக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பர்கூரிலும், பட்டுக்கோட்டையிலும் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்கள் கூட்டுறவால் நடத்தப்படுகின்றன.

பர்கூர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியுடன் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விரைவில் ஒரு கட்டடம் கட்டப் பட உள்ளது. இது, தஞ்சை மாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

எந்தத் துறைக்கும் இல்லாத ஒரு பெருமை கூட்டுறவுத் துறைக்கு உண்டென்பதை இந்நாடு மிகவும் நன்றாக அறியும். குறிப்பாக, மக்களாட்சி தர்மத்தைப் பேணுகின்ற மகத்தான அமைப்பு, கூட்டுறவு இயக்கம் என்பதோடு, மக்களின் இன்பமான வாழ்விற்கு, இணை பிரியாத ஒட்டு மொத்த உழைப்பினையும், உயர்வையும், வழங்குவது கூட்டுறவுதான் என்பதில், ஐயமில்லை. அதனால்தான் கூட்டுறவு இயக்கத்திற்கென்று இணைந்த கைச்சின்னமும், ஏழு வண்ணக் கொடியும் பளிச்சிட்டு விளங்குவதோடு அவை வெற்றிக் கொடியாகவும், வெற்றிச் சின்னமாகவும், பரிமளித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நான்காண்டில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், கூட்டுறவுத் துறையில் மலர்ந்து மணம் பரப்பும் சாதனை மலர்களை நினைந்து போற்றுவோம். *

தமிழகத்தின் ஒளிவிளக்கால் சுடர்விடும் உள்ளாட்சித் துறை

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. டி.எம். செல்வகணபதி

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த நமது உயர்தனிச் செந்தமிழுக்குத் தஞ்சைத்தரணியில் எட்டாவது உலகத்தமிழ் மாநாடு கண்ட தமிழகத்தின் நிரந்தர முதல்வர், பல்கோடித் தமிழ் நெஞ்சங்களின் இதய தெய்வம்- நமது அன்னை- டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் தமிழக அரசு, இந்த நான்காண்டுக்காலம் நிகழ்த்திய சாதனைகள் எண்ணிலடங்கா.

கடந்து சென்ற இந்த நான்காண்டுகள், நிமிடங்களாய்க் கழிந்து சென்றுவிட்டதாக ஒரு பிரமையை உணரமுடிகிறது. ஆனாலும் இதில் துறை வாரியாக இந்த நான்காண்டுகளில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த அரசு மக்களின் நலமே தன் நலம் என்ற முனைப்போடு செயல்பட்ட விதத்தினைத் தக்காரும், மிக்காரும் போற்றிய வண்ணம் உள்ளனர்.

தனிப்பட்ட துறைகள் பற்றிக் குறிப்பிட்டுக் கூற முனையும் இந்த வேளையில் எனக்குக் கட்டளையிட்டு மேற்பார்வையிட அன்னை அவர்கள் அளித்திட்ட துறைகள் இரண்டும், கீழ்த்தட்டு மக்களையும் வறுமையில் வாடும் ஏழை மக்களையும் சென்றடையும் திட்டங்களைச் செயல்படுத்தும் துறைகளான ஊரக வளர்ச்சித்துறையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையும் ஆகும். சென்னை நகரைச் சுற்றிவிட்டுச் செல்லும் ஒவ்வொரு வெளிநாட்டினரும் எழில் கொஞ்சும் சென்னை நகரின் இன்றைய அழகினை வர்ணிக்காமல் சென்றதே கிடையாது. நான்காண்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மீனவர் சமுதாய மக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டு அதைத் தீவிரமாகச் செயல்படுத்த அமைச்சர் பெருமக்களை ஊக்குவித்த விதத்திலாகட்டும்- மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தனித்திறமை குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிர்கிறது.

இதுவரை குடிநீர் வசதி பெறாத பகுதிகளுக்கு ரூ.5.5 கோடி செலவில் 260 கிலோமீட்டர் நீளமுள்ள புதிய குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த நான்காண்டுகளில் வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 23,200 ஆகும். புதிதாகக் கொடுக்கப்பட்டுள்ள கழிவு நீர் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 37,900.

குடிநீர் வசதிகள்
குடிநீர் விநியோகக் குழாய்கள்

பழுதடைந்த நிலையிலுள்ள குடிநீர் விநியோகக் குழாய்களை மாற்றிப் புதுப்பிக்கும் திட்டம் 1991-ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.10 கோடி செலவில் 150 கிலோ மீட்டர் நீளமுள்ள குடிநீர்க்குழாய்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பயன் பெற்றுள்ள தெருக்களின் எண்ணிக்கை 800.

இதுவரை குடிநீர் வசதி பெறாத பகுதிகளுக்கு ரூ.5.5 கோடி செலவில் 260 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் பயன் பெற்றுள்ள தெருக்களின் எண்ணிக்கை 650.

கடந்த நான்கு ஆண்டுகளில் வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 23,200 ஆகும்.



கழிவுநீர்க் குழாய்கள்

குளத்தூர், விருகம்பாக்கம், வேளச்சேரி, ஜி.கே.எம்.காலனி, வில்லிவாக்கம், வியாசர்பாடி, அயனாவரம், தண்டையார்ப்பேட்டை, பெரம்பூர், சாலிகிராமம், என்.எஸ்.கே. நகர். ஜகந்நாத நகர் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் புதிய கழிவுநீர்க் குழாய்கள் ரூ.50 கோடி செலவில் 2,734 தெருக்களில் 374 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டன.

கானகம் -தரமணி, கொடுங்கையூர் ஆகிய இடங்களில் ரூபாய் 6.7 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

கோட்டூர்புரம், வில்லிவாக்கம், எம்.ஜி.ஆர் நகர், மாதவரம், ஈக்காட்டுத்தாங்கல், என்.எஸ்.கே.நகர், பத்மநாப நகர், சத்தியமூர்த்தி பிளாக், கென்னடி ஸ்கொயர், சாலிகிராமம் மற்றும் காரணீஸ்வரர் பகோடா தெரு ஆகிய இடங்களில் ரூ4.1 கோடி செலவில் கழிவு நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வியாசர்பாடி, ஏகாங்கிபுரம், அண்ணாநகர் மேற்கு ஆகிய இடங்களில் ரூ1.2 கோடி செலவில் கழிவு நீரேற்று நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

டி.பி.கே. செட்டித் தெரு, விருகம்பாக்கம், வேளச்சேரி, கொளத்தூர் ஆகிய இடங்களில் 1.7 கோடி செலவில் புதிய கழிவுநீரேற்று நிலையங்கள் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

நான்கு ஆண்டுகளில் வீடுகளுக்குப் புதிதாகக் கொடுக்கப்பட்டுள்ள கழிவுநீர் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 37,900.

20 கிலோ மீட்டர் நீளமுள்ள இராட்சதக் கழிவுநீர்க். கால்வாய்களிலும், 95 கி.மீ. நீளமுள்ள பாதாளக் கழிவுநீர்க் குழாய்களிலிருந்தும் மணல் மற்றும் வண்டல் முதலியவைகளை ஆளே நுழைந்து பணி செய்யாமல் எந்திரங்களைக் கொண்டு தூர் நீக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு

நேசப்பாக்கம், கோயம்பேடு மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ19.10 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு தற்போது இந்தியாவிலேயே முன்னணியில் உள்ள வகையில் செயல்படுகின்றன.

கொடுங்கையூர் கழிவுநீர் நிலையத்தில் பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மேலும் தூய்மையாக்கப்பட்டு, மணலி தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்

எழில்மிகு சென்னை 2000

எழில்மிகு சென்னை 2000 திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.135 கோடி அளவில் உருவாக்கி, ரூ.435 கோடி அளவில் மக்களின் தேவையைப் பொறுத்தும், நிதிப் பெருக்கத்தின் காரணமாகவும் உயர்த்தினார்கள்.

இத்திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள் அமைத்தல், சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால்கள் அமைத்தல், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், குடிசைப் பகுதி மேம்பாடு முதலிய பல்வேறு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ272.58 கோடியாகும்.

கட்டடங்கள்

மாநகராட்சியின் பல கட்டடங்களின் வளர்ச்சிக்காக மற்றும் மக்களின் பணிக்காகப் பல புதிய கட்டடங்கள் மற்றும் பழைய கட்டடங்கள் நவீப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் பள்ளிக் கட்டடங்கள், வணிகக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டக் கட்டடங்கள் போன்றவைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ரூ38.05 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

பூங்காக்கள் - விளையாட்டு மைதானங்கள்

பூங்காக்களின் வளர்ச்சிக்காகவும், விளையாட்டு மைதானங்கள் மேம்பாட்டிற்கும் எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மரம் நடும் விழா மேற்கொள்ளப்பட்டு 70,000 மரங்கள் புதியதாகச் சாலைகளின் ஓரங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன. மெரினா மற்றும் எல்லியட்ஸ் கடற்கரையில் உயர் மின் விளக்குகள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்காக விளையாட்டு உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. மற்றும் நடைபாதைகள் சலவைக்கல் பொருத்தி அழகுபடுத்தப்பட்டுள்ளன.

சாலைகள் மேம்பாடு, தெரு விளக்கு மழைநீர் வடிகால், பாலம் , கட்டட மேம்பாடு, பூங்கா, விளையாட்டு மைதானம் போன்ற பலவகைகளில் சென்னை மாநகராட்சி தேவையான நடவடிக்கைகள் எடுத்துளளது. துப்புரவுப் பணியை மேம்படுத்தப் புதிய லாரிகள் வாங்கப்பட்டுள்ளன. மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக சிறிய லாரிகள் வாங்கப்பட்டுள்ளன. தூய்மைப் பகுதிகள் அறிவிக்கப்பட்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட பகுதிகளில் தொடர் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. எழில்மிகு சென்னை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் புகழ் மகுடத்தில் புதுமுத்தாய் ஒளிவீசும் என்பது திண்ணம்!

படுவதுடன் குடிநீரும் சேமிக்கப்படுகிறது. தண்டையார்ப்பேட்டை, இராயபுரம், தங்கசாலை, கோடம்பாக்கம், பெரம்பூர், எருக்கஞ்சேரி, சைதாப்பேட்டை, ஆகிய இடங்களில் தற்போதைய 14 கழிவுநீர் இணைப்பு நிலையங்களின் திறன் பற்றாக்குறையாக உள்ளது. இவைகளைப் புனரமைப்பதற்காக ரூ.35 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட சென்னைக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சென்னை நகரின் ஜன நெருக்கம் மிகுந்த இடங்களான காத்பாடா, இராம்நகர், தெற்குக் கேசவப் பெருமாள்புரம், கோவிந்தசாமி நகர், காரணீஸ்வரர் பகோடா ஆகிய இடங்களில் தெருவின் மட்டம் வீட்டின் வாசற்படி மட்டத்தினைவிட உயர்ந்துவிட்டதால், இந்த இடங்களுக்காகத் தனித் தனியே சிறிய அளவுள்ள கழிவு நீர் இறைக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டு மக்களின் கழிவுநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வரும் சுற்றுப்புறச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களின் ஓர் முக்கிய அங்கமாக இந்தியாவிலேயே முதல் முறையாகச் சென்னையில் கழிவுநீரினைச் சுத்திகரித்து 1991-ஆம் ஆண்டுமுதல் நாளொன்றுக்கு 12 மில்லியன் லிட்டர் என்ற அளவில் தொழிற்சாலைகளுக்கு உகந்த நீராகப் பயன்படுத்தப்பட்டது.

இதன் தொழில் திறனை ஜப்பானிய நிபுணர்கள் நேரில் கண்டறிந்து இத்துறையில் ரூ.572 கோடி கடன் உதவி செய்வதற்கான ஒப்பந்தம் 28.2.95 அன்று கையெழுத்தாகியுள்ளது.

சுற்றுப்புறச் சூழலின் மற்றொரு முக்கிய அங்கமாகக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஒட்டி நேசப்பாக்கம், கோயம்பேடு, ஆகிய பகுதிகளில் 50 ஏக்கர் பரப்பளவில் சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டு தேக்கு, மகாகனி, ரோஸ்உட், மூங்கில் ஆகிய மரங்கள் இரண்டு ஆண்டுகளாக வளர்க்கப்படுகின்றன.

விரைவில் இது 200 ஏக்கர் பரப்பில் விஸ்தரிக்கப்படும்.

நீர்த்தேக்கத் தொட்டிகள்

சென்னை நகரின் குடிநீர் விநியோகத்தினைச் சீரமைப்பதற்காக, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், வேளச்சேரி, ஈக்காடுதாங்கல், கோயம்பேடு, குளத்தூர், வியாசர்பாடி, பட்டேல் நகர் கண்ணப்பர் திடல் வள்ளுவர் கோட்டம், நந்தனம் ஆகிய இடங்களில் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளதுபோல் பிரம்மாண்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும், மேல்நிலைத் தொட்டிகளும் அமைக்கப்படும். வள்ளுவர் கோட்டத்தில் இதற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

> **தூய உள்ளமே கோயில். நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம், மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை. ஏழை இதயத்திலே களிப்பூட்டலே, பகவானுக்குத் தேர்த் திருவிழா.**
> **—பேரறிஞர் அண்ணா**

கிருஷ்ணா நதிநீர்த்திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆந்திர மாநில முதல்வர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பல ஆண்டுகள் தேக்கத்தில் இருந்த சென்னைக்குக் கிருஷ்ணா நதியிலிந்து நீர் கொண்டுவரும் திட்டத்தை விரைவுபடுத்தினார். அது தொடர்பான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. முதல் கட்டமாக இத்திட்டத்தினால் 5 டி.எம்.சி.குடிநீர் கூடுதலாகச் சென்னை நகர மக்களுக்கும், நகரைச் சுற்றியுள்ள 20 உள்ளாட்சி அமைப்பின் மக்களுக்கும் கிடைக்கும்.

1995-ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் கிருஷ்ணாநதி நீரினை உடனடியாகச் சென்னை நகருக்கு விநியோகம் செய்வதற்கு முக்கியமான குழாய்கள் அமைக்கும் பணிகளுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி செயல்படுத்துவதற்கு ரூபாய் 25 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1993-ஆம் ஆண்டு நிலவிய வரலாறு காணாத வறட்சியை வென்ற போர்க்கால நிவாரணப் பணிகள்:

புதிதாக நிறுவப்பட்ட இந்தியா மார்க் 2 பம்புகள் 2,620

தெருக்களில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் 4,391.

370 லாரிகள், 486 டிராக்டர்கள் மூலம் நாள்தோறும் குடிநீர் வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 15.03 கோடி.

நெய்வேலி, ஈரோடு போன்ற தொலைதூர இடங்களிலிருந்து இரயில் மற்றும் லாரிகள் மூலம் குடிநீர் கொண்டுவரப்பட்டு சுத்திகரித்து விநியோகிக்கப்பட்டது.

இதற்கான செலவு ரூ.18.54 கோடியாகும்.

1991 ஆம் ஆண்டில் சென்னை நகரில் பாதாள சாக்கடை பெற்ற தெருக்கள் 86% ஆகும்.

1994 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை பெற்ற தெருக்கள் 95%.

1995 -ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க உத்தேசித்துள்ள இலக்கு 100%.

சென்னை நகரின் வசதி மற்றும் கழிவுநீரகற்றும் வசதி ஆகிய பணிகளுக்காக, சென்னைக்

குடிநீர் வாரியத்தினால் 1978 முதல் 1991- ஆம் ஆண்டு வரை 13 ஆண்டுகளில் செய்யப்பட்ட முதலீடு ரூ.165 கோடி.

1991 முதல் 1995 வரை 4 ஆண்டுகளில் முதலீடு ரூ.203 கோடியாகும்.

1995 முதல் 2000 வரை அடுத்த 5 ஆண்டுகளில் திட்டமிடப்பட்டுள்ள முதலீடு ரூ.2219 கோடி.

1991-92-ஆம் நிதியாண்டில் 5,369 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.78.34 கோடி செலவில் 26.25 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 5369 ஊரகக் குடியிருப்புகளில் 3,284 குடியிருப்புகள் கையிறைப்பான் திட்டங்களின் கீழும், 1,408 குடியிருப்புகள் விசையிறைப்பான்கள் திட்டங்களின் கீழும், 446 குடியிருப்புகள் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் கீழும், மற்றும் 231 குடியிருப்புகள் இதர திட்டங்களின் கீழும் (குழாய் விஸ்தரிப்புத் திட்டம், திறந்த வெளிக் கிணறு, ஈர்ப்புச் சூழாய் (Gravity Main) முதலியன) அடங்கும்.

மேற்குறிப்பிட்ட 5,369 குடியிருப்புகளுள் தா[illegible]டோர் மற்றும் பழங்குடி[illegible] 2,445 முழுமை[illegible] வசதி செய்து [illegible]ருப்புகள் அடங்கும். ஊரகக் குடியிருப்புகளுக்காக 1991-92-இல் செலவிடப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள தொகையான ரூ.78.34 கோடியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்காக செலவிடப்பட்ட தொகையான ரூ.12.25 கோடியும் உள்ளடங்கும்.

டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு ஆண்டுத் திட்டத்தின் கீழ், நீராதாரமற்ற 92 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.70 கோடி செலவில் 1991-92-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.0016 கோடி செலவில் 1991-92-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1992-93-இல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1992-93-ஆம் நிதியாண்டில், 2,559 ஊரகக் குடியிருப்புகளுக்கு 23.96 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் முழுமையாகக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 2559 குடியிருப்புகளுள், தாழ்த்தப்பட்டோர், மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 1,358 முழுமையாகக் குடிநீர் வசதி செய்து தரப்பட்ட குடியிருப்புகள் அடங்கும்.

1992-93-ஆம் ஆண்டில் மாற்று நீராதாரத் திட்டத்தின் கீழ் 804 எண்ணிக்கை ஒதுக்கப்பட்டு, 636 மாற்று நீராதாரங்கள் முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்பட்டது.

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு நினைவு ஆண்டுத் திட்டத்தின் கீழ் நீராதாரமற்ற 244 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.2.30 கோடி செலவில் 1992-93-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது.

மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 34 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.10 கோடி செலவில் 1992-93-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1993-94-ஆம் நிதியாண்டில் 3751 ஊரகக் குடியிருப்புகளுக்கு 24.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் முழுமையான குடிநீர் வசதி செய்துதரப்பட்டது. 1993-94-ஆம் நிதி ஆண்டில் ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர்த் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.82.13 கோடி ஆகும். ஊரகக் குடியிருப்புகளுக்காக 1993-94-ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ82.13 கோடியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையான ரூ14.24 கோடி உள்ளடங்கும்.

மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தின் கீழ் 7-வது அம்சமான குடிநீர் வழங்குவதற்காக 1993-94-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 3500 குடியிருப்புகளாகும். தமிழக அரசின் பெருமுயற்சியின் காரணமாக, மேற்கூறிய 3751 ஊரகக் குடியிருப்புகளுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் 7 விழுக்காடு கூடுதலாகும். இதனைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசு, தமிழக அரசிற்கு விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 1993-94-ஆம் ஆண்டிற்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைக் காட்டிலும் ரூ2.02 கோடி கூடுதல் நிதியுதவி அளித்துள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 63 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.32 கோடி செலவில் 1993-94-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1994-95-இல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1994-95-ஆம் நிதியாண்டில், 3,808 ஊரகக் குடியிருப்புகளுக்கு 24.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் முழுமையான குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. 1994-1995-ஆம் நிதி ஆண்டில் ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர்த் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.72.60 கோடி ஆகும்.

மேலே குறிப்பிட்ட 3,808 குடியிருப்புகளுள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 1941 முழுமையான குடிநீர் வசதி செய்து தரப்பட்ட குடியிருப்புகளும் அடங்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நரிப்பையூரில் நாள் ஒன்றுக்கு 1 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக உவர் நீரைக் குடிநீராக்கும் இயந்திரம் ஒன்றை நிறுவ மத்திய அரசு ரூ.10.75 கோடிக்கான நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட உவர் நீரைக் குடிநீராக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1995-96-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

1995-96-ஆம் நிதியாண்டில், 2500 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ88.90 கோடி நிதி ஒதுக்கீட்டில், குடிநீர் திட்டங்களின் மூலம் வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 1000 குடியிருப்புகளுக்கு ரூ22.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி செய்து தரும் பணியும் உள்ளடங்கும்.

1991-92-ஆம் ஆண்டு, 74 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ.9.06 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1992-93-ஆம் ஆண்டு, 88 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ10.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1993-94-ஆம் ஆண்டு 81 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ12.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1994-95-ஆம் ஆண்டு 66 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ.16.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நகர்ப்புறக் குடிநீர் வழங்கல் பாதாள வடிகால் வசதி

1991-92-ஆம் ஆண்டில் 30 நகரங்களில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ34.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 நகராட்சிகளிலும், 7 பேரூராட்சிகளிலும் குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் 3,62,000 மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

1992-93-ஆம் ஆண்டில் 21 நகராட்சிகள் மற்றும் 49 பேரூராட்சிகள் ஆகிய 70 நகரங்களில் குடிநீர் வழங்க பணிகள் ஏற்கப்பட்டன. இதற்காக ரூ.25.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்

பட்டு 4 நகராட்சிகள் மற்றும் 4 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொணரப்பட்டது. இதனால் 4,28,000 மக்கள் பயனடைந்துள்ளனர்.

1993-94-ஆம் ஆண்டில் 66 நகரங்களில் குடிநீர் மற்றும் வடிகால் திட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ26.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3 நகராட்சிகள் மற்றும் 13 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப்பணிகள் முடிந்து பயனுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் 5,41,000 மக்கள் பயனடைந்துள்ளனர்.

1994-95-ஆம் ஆண்டில் 50 நகரங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ26.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இடைப்பட்ட 94-95-ஆம் ஆண்டில் 6 நகராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிவுற்று பயனுக்குக் கொண்டுவரப் பட்டது.

1994-95-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அரசு, ரூ.22.22 கோடி செலவில், நிர்வாக ஒப்புதல் வழங்கி உள்ளது.

1991-92 முதல் 1994-95 வரை

உலக வங்கித் திட்டத்தில், 3 பெரிய நகரங்களுக்கும், 6 நகராட்சிகளுக்கும், 4 நகரப் பஞ்சாயத்துகளுக்கும், 39 சிறிய/நடுத்தர நகரங்களுக்கும், 899 ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்ட வேலைகள் செயல்படுத்தப் பட்டுள்ளது. மேலும் குறைந்த செலவிலான கழிப்பிடம் (நிலை 2 கட்டும் திட்டம்) 91 நகரங்களும் (54 நகரங்களுக்கு த.கு.வ. வாரியம் மூலமாகவும், 37 நகரங்களுக்குப் பேரூராட்சி இயக்குநர் மூலமாகவும்) செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலங்களில் செலவிடப்பட்ட தொகை சுமார் ரூ269 கோடி ஆகும்.

உலக வங்கி உதவியுடன் கூடிய குடிநீர் மற்றும் துப்புரவுத் திட்டத்தினால் சுமார் 60 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

புதிய வீராணம் திட்டம்

சென்னைப் பெருநகருக்கு நாள் ஒன்றுக்கு 280 மில்லியன் லிட்டர் கூடுதல் குடிநீர் வழங்க, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. தென்னார்க்காடு- வள்ளலார் மாவட்டத்தில் சேத்தியாதோப்பில் அமைந்துள்ள வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் கொண்டுவர இத்திட்டம் வழிவகை செய்யும். இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி செய்யும்.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.16380.38 மில்லியன், பொதுப் பணித்துறை மூலம் வீராணம் ஏரி மேம்பாட்டுப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னையைச் சுற்றியுள்ள நகரப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னையைச் சுற்றியுள்ள 20 நகரப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீடுகளைத் தயாரித்துள்ளது. புதிய வீராணம் திட்டம் மற்றும் கிருஷ்ணா குடிநீர்த் திட்டப் பிரதான குழாயிலிருந்து நீரை எடுத்து இந்த 20 நகரங்களுக்குக் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1593 மில்லியன். இத்திட்டத்திற்கு உலக வங்கியிடம் நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் பேரூராட்சி சாலைகள் மேம்பாட்டுக்காக ரூ40.00 இலட்சம் வழங்கியுள் ளது. இதன் மூலம் பேரூராட்சியில் 1991-92-ஆம் ஆண்டு 50 கி.மீ.1992-93-ஆம் ஆண்டு 782 கி.மீ. 1993-94-ம் ஆண்டு 2988 கி.மீ.1994-95-ஆம் ஆண்டு 15.75 கி.மீ.சாலைகள் பராமரிக்கப் பட்டுள்ளன.

தூசிபடியாச் சாலைகள் அமைக்கப் பேரூராட்சிகளுக்கு 50% மான்யம்- பேரூராட்சியின் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற 50% மான்யமாக ரூ.50.00 இலட்சம் ஆண்டு ஒன்றுக்கு அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியின் இந்த நான்காண்டில் நமது துறைச் சாதனைகள் இப்படி இன்னும் பல மடங்காகும். மற்றவை அடுத்தடுத்த இதழ்களில் தொடரும் ❦

1994-95-ஆம் ஆண்டில் 3,808 ஊரகக் குடியிருப்புகளுக்கு, 24.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட நலத்துறையின் அரிய பணிகள்!

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன்

தமிழக வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும், புரட்சிகரமான திட்டங்களால், புரட்சிக்கு இலக்கணம் வகுத்து, உலக அரங்கில் புகழ் பெற்றுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சி நான்காண்டுகள் வெற்றி வாகை சூடி, ஐந்தாம் ஆண்டு நோக்கி வீர நடை வெற்றிநடை போடுகிறது. இதைக் கண்டு இந்தியத் துணைக் கண்டமே மகிழ்ச்சியடைகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் ஒரே புாதுகாவலராக விளங்கிக் கொண்டிருப்பவர், நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய திட்டங்களின் செயலாக்கத்தின் பயனாக, இன்று அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தில், சமூக அந்தஸ்த்தில், கல்வி வளர்ச்சியில், பொருளாதார மேம்பாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்குப் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தாலும் அம் மக்கள் வாழ்வில் சீரிய முன்னேற்றம் காண கல்விதான் அடிப்படைத் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்து அம்மக்களின் கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி அதன்மூலம் அவர்களின் பொருளாதார மேம்பாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

சமுதாயத்தில் அனைவரும் சம அந்தஸ்து பெறும் பொருட்டு இவ்வரசு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1,232 பள்ளிகளும் 972 மாணவ, மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் ரூ.2.36 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இவர்களில் 86,471 மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 14 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 8 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 8 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

மாணவ, மாணவியரின் பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் அனைத்து

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக 1.26 இலட்சம் வீடுகள் கட்டித் தரப் பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் 1,22,111 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

விடுதிகளிலும் நூலக வசதிகள் ரூ.12.33 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்குச் சோப்பு, எண்ணெய் முதலியவை வாங்கிக் கொள்ள, தற்போது மாதம் ரூ.5 வழங்கப்பட்டுவருகிறது. இந்தக் கல்வி ஆண்டிலிருந்து மாதம் ரூ.10 வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி அரசுக்கு ஆண்டொன்றுக்கு 43.37 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

அரசு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்குச் சிறப்புக் கையேடுகள் தயாரித்துக் கொடுத்தும், சிறப்புப் பயிற்சிகள் கொடுத்ததன் பலனாகவும் பொதுத் தேர்வுகளில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பள்ளி மாணவ, மாணவியர்கள் கடந்த ஆண்டுகளைவிட நல்ல தேர்ச்சி விகிதத்தைப் பெற்றுள்ளார்கள்.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, ரூ.5.43 கோடி செலவில் 35 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 1995-96-ஆம் நிதியாண்டில் ரூ.1.73 கோடி செலவில் 8 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வகைசெய்யப் பட்டுள்ளது.

கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களில் பயிலும், மாணவ, மாணவியருக்கு 1991-92-ஆம் ஆண்டு ரூ.14.00 கோடியும், 1992-93-ஆம் ஆண்டு ரூ.15.31 கோடியும் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் ரூ.18.07 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு ரூ.18.55 கோடி உதவித் தொகையாக வழங்கப் பட்டது. 1995-96-ஆம் ஆண்டு ரூ.21.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ரூ.8.50 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இம் மாணவர்களின் நலன் கருதி, சிறப்புமிகு 'சிறப்பு உதவித்தொகை'த் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000 வரை உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்

களுக்குப் பராமரிப்பு மற்றும் கல்லூரிக்குச் செலுத்தவேண்டிய அனைத்துக் கட்டணங்களும் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் பெண்களிடையே படிப்பை இடையில் நிறுத்திவிடும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் கணிசமாகும். இதன் காரணமாக இவர்களில் படித்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. எனவே இவ்வரசு தர்மபுரி, காமராசர், திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மற்றும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டங்களில், 3,4,5 வகுப்புகள் பயிலும் 30,000 பெண்களுக்கு ரூ.500 ஆண்டொன்றுக்கு வழங்கவும், 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வழங்கவும் ஆணையிட்டுள்ளது. இதனால் 60,000 பெண் குழந்தைகள் பயனடைவர். இத் திட்டம் செங்கை எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு அம்பேத்கர், சேலம், திருச்சி மற்றும் நாகை காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதற்காக ரூ.6 கோடி செலவிடப்படும்.

மறைந்த பெரியவர் மேயர் சிவராஜ் அவர்களின் சமுதாயப் பணியினைப் போற்றும் வகையில் தொடங்கவிருக்கும் சட்டப் பல்கலைக் கழகத்தில் பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க அவர் பெயரில் அறக்கட்டளை ஒன்று துவக்கப்பட

மனிதனுக்குள்ள இழிவு சமுதாயத்திற்குள்ள இழிவாகும். சமுதாயத்திற்குள்ள இழிவு நாட்டுக்குள்ள இழிவாகும்.

—தந்தை பெரியார்

உள்ளது. இதற்கென ரூ.10 இலட்சம் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதி

ஆதிதிராவிடர்கள் சமூக மேம்பாடு அடைய வேண்டுமென்றால், அவர்கள் வாழும் குடியிருப்புகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவேண்டும் என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லா ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் ஓர் ஆய்வு செய்து, அதன் தேவைகளை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் செய்துதர ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணையின் அடிப்படையில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் சேகரிக்கப் பட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அடிப்படை வசதிகளைச் செய்துதர ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சென்ற 4 ஆண்டுகளில் 1.26 இலட்சம் வீடுகள் கட்டித் தரப் பட்டுள்ளன.

1995- 96-ஆம் ஆண்டு 50,000 குடும்பங்களுக்கு ரூ.105 கோடி செலவில் வீடுகள் கட்டித்தரப்பட உள்ளன. ஆதிதிராவிடர்கள் தங்களுடைய வீடுகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் அதாவது கூரை, தரை ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ள ஒரு வீட்டிற்கு ரூ.5000/ வீதம் 30,000 வீடுகளுக்கு ரூ.15/ கோடி மானியமான வழங்கப்படும்.

சமுதாயக் கூடங்கள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் 1000 குடியிருப்புகளுக்கு வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டிகள் ரூ.3/ கோடி செலவில் வழங்கப்படும். ஆதிதிராவிடர்களுக்குச் சிறந்த சேவை செய்வோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரில் விருது வழங்க ரூ.1.00 இலட்சம் பரிசாக வழங்கப்படும்.

பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு கணிப்பொறி பயிற்சி, ஆகாய விமானம் பராமரிப்புப் பயிற்சி, இராணுவம் மற்றும் காவல்துறையில் சேர பயிற்சி, தொலைபேசி, டெலக்ஸ் இயக்கப்பயிற்சி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல்பணி போன்ற பணிகளில் சேர இவர்களுக்கென ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தில் 60 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இந்த நிலையத்தில் பயிற்சிபெற்ற 65 நபர்கள் இப்பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஆதிதிராவிடர் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில், தற்பொழுது தாட்கோ மூலம் அதிகபட்சமாக ரூ.15,000/ மானியமாகவும், ரூ.85,000/ ஊக்கப்பங்குத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. இவை முறையே ரூ.25,000/ மாகவும் ரூ.1,25,000/ ஆகவும் உயர்த்தி வழங்கப் படும்.

சுய வேலைவாய்ப்பு அதிகப்படுத்தப்படும் நோக்குடன், தாட்கோ நிறுவனத்தின் மூலம் லாரிகள் வாங்க ரூ.50.00 கோடி செலவிடப்படும். பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.1.25 இலட்சம் மானியமாகவும், ஊக்கப் பங்குத் தொகையாகவும் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மகளிர் பொருளாதார மேம்பாட்டிற்கென ஆண்டுதோறும் 10,000 பெண்கள் பயனடையும் வகையில் ரூ.10.00 கோடி செலவிடப் படும். இதில் ரூ.5.00 கோடி மானியமாகத் தரப் படும்.

ஒன்று முதல் ஐந்து கிராமங்களுக்கு ஒரு செவிலியர் என்ற அடிப்படையில், 5000 ஆதி திராவிடர் பெண்கள் செவிலித் தாய் பயிற்சி அளித்துப் பணியமர்த்தப்படுவர்.

மேலும் 30,000 ஆதிதிராவிடர் பெண்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படும்.

வீட்டுமனைப் பட்டாக்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில், ஆதி திராவிடர் நலத்துறை மூலமாகவும்,வருவாய்த்துறை மூலமாகவும் ரூ.22.00 கோடி செலவில 7,57,500 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொகுப்பு வீடுகள்

கடந்த நான்காண்டுக் காலங்களில் 1,22,111 ஆதிதிராவிட குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

முப்பெரும் பொருளாதாரத் திட்டங்கள்

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணையின் படி, ஆதிதிராவிட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக முப்பெரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டு தாட்கோ நிறுவனத்தின் வாயிலாகச் செயல்படத்தப்பட்டு வருகின்றன. அவை, பின்னலாடை, இறால் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்புத்திட்டம்.

பின்னலாடை

பின்னலாடைத் திட்டத்துக்கெனகோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் அருகே உள்ள முதலிப் பாளையம் மற்றும் பெரியார் மாவட்டம், பெருந் துறைக்கு அருகில் உள்ள இங்கூர் ஆகிய இடங் கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முதலிப்பாளையத்தில் எதிர்காலத்தில் 160 அலகுகள் வரை விரிவுபடுத்துவதற்காக முதலில் 100 அலகுகள் முடிவெடுக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டு சாலைகள் போடப் பட்டுள்ளன. மேலும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கும் வேலை முடிந்துவிட்டது. 100 அலகுகள் தொழிற் கூடங்கள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இங்கூர்

இங்கூரில் 200 அலகு கொண்ட மிகப்பெரிய தொழிற்பேட்டை அமைக்க சுமார் 105.35 ஏக்கர் நிலத்தை (TACID) நிறுவனத்திடமிருந்து வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. அங்கே 17.83 கோடி செலவில் 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைகள் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இறால் பண்ணை வளர்க்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள கரையோர மாவட்டங் களில் வாழும் ஆதிதிராவிட மக்களின் மேம்பாட் டிற்காக ஒவ்வொரு ஆதிதிராவிடகுடும்பத்திற்கும் 1.2. ஏக்கர் நிலம் வீதம் 1000 எக்டேர் நிலத்தில் இறால் மீன்பண்ணை அமைக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகக் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.8,46,475 மதிப்பில் 51.34 ஏக்கர் தனியார் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இது தவிர, இந்து அறநிலையத்துறை நிறுவனத்திடமிருந்து 47.20 ஏக்கர் கோயில் நிலம் குத்தகையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. ரூ.1.66 கோடி செலவில் 80 இறால் பண்ணைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

பட்டுப்புழு வளர்க்கும் திட்டம்

இத்திட்டம், சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2000 நபர்கள் பயன் பெற்றுள் ளார்கள். இதற்காக தாட்கோ மூலம் ரூ.111.39 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினர் நல மக்களின் முன்னேற்றத்திற்காக, மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு, ஆண்டுக்கு ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடுகள் செய்து, பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவின் சீரிய ஆட்சியில் இத்துறைக்கு 1995 -96-இல் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.204.53 கோடி.கிட்டத்தட்ட 1990- 91-ஆம் ஆண்டை விட ரூ.139.53 கோடி அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக,மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு புகழ்மிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருவதை எல்லோரும் போற்றிப் பாராட்டி வரவேற்கிறார்கள்.

ஆதி திராவிடர் மேம்பாடு கருதி அறிவிக்கப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் 10 அம்சத் திட்டம்

திட்டம்	1991-92-முதல் 1994-95 வரை அடையப் பெற்ற இலக்கு	1995-96-க்கான இலக்கு
3.5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பொருளாதார மேம்பாட்டு உதவி.	288679	40,000
10,000 ஏழை ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குப் பாசனக் கிணறுகள் அமைக்க உதவி.	11803	இலக்கு எட்டப்பட்டு விட்டது.
தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஆதிதிராவிடர்களுக்குத் தொழில் தொடங்க நிதி உதவி.	5270	500
5000 ஆதிதிராவிடகளுக்குத் தொழிற் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு அளித்தல்	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.	500
4 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்	7.20 இலட்சம்	இலக்கு எட்டப்பட்டு விட்டது.
3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தருதல்	1.16 இலட்சம்	43,400
அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் குடிநீர் வசதி	6536	1500
இணைப்புச் சாலை இல்லாத 1063 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி	1073	
அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் சாலை விளக்கு வசதி.	தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் சாலை விளக்கு வசதி ஏற்படுத்தித் தர ஆணை வழங்கப்பட்டுள்ளது.	
ஒரு வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் 1.5 இலட்சம் வீடுகளுக்கு மின்வசதி	1.64 இலட்சம்	30,000

இந்து அறநிலையத் துறையின் இணையற்ற சாதனைகள்!

மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர்

திரு வெ. நடேசன் பால்ராஜ்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் நான்-காண்டுச்சாதனைகள் அளவிடற்கரியவை.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றோர் பழமொழி உண்டு.

நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற ஆன்மீக நெறிகளுக்கும் தொன்மை வாய்ந்த கலாச்சாரத்திற்கும் நமது திருக்கோயில்களே சான்றாகும். இந்தத் திருக்கோயில்கள் அனைத்தும் சீரோடும் சிறப்போடும் பராமரிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு திருக்கோயில்களின் நிர்வாக மேம்பாட்டைக் கருதி, திருக்கோயில் நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி நிர்வாக வாரியத்தால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியால் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறைவான வருமானமுள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமித்தல் மற்றும் இதரப் பணிகளைச்

கடந்த நான்கு ஆண்டுகளில், 303 கிராமப்புறத் திருக்கோயில்களுக்குத் தலா ரூ. 25,000 வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ரூ.40 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ள 'உலாரதம்' தஞ்சை, மதுரை, மாவட்டங்களில் உலா வரும்.

40 திருக்கோயில்கள் சார்பில், சிந்தை குளிர்விக்கும் நந்தவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் மருத்துவப்படி வழங்கப்படும்.

செம்மையுற நடத்த 19 மாவட்டங்களிலும் மாவட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அதன்படி இதுவரை 19,478 திருக்கோயில்களில் 38,642 அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர்.

20 ஆண்டுகளுக்கு முன்பாகக் களவு போன புகழ்பெற்ற பத்தூர், அருள்மிகு நடராஜர் திருவுருவச்சிலை தமிழ்நாட்டிற்கு மீட்டுத் திரும்பிக்கொண்டு வரப்பட்டது. மேற்படி திருக்கோயிலை ரூ.7 இலட்சம் செலவில் புதுப்பித்து 3.9.1993-ல் குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது. மற்றும் நித்திய பூஜை நடத்த ரூ.3 இலட்சம் வைப்புநிதி ஏற்படுத்தி, அதன் வட்டியைக் கொண்டு நித்திய பூஜைகள்- பராமரிப்புச் செலவுகள் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருக்கோயில்களில் உள்ள உலோகத்திருமேனிகள் சரியானபடி பாதுகாக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, நாகை காயிதேமில்லத் மாவட்டம்-திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ரூ.9 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதி செய்யப்பட்டது. மேலும், ரூ.5 இலட்சம் செலவில் 'ஜெனரேட்டர்' ஒன்றும் அங்கே அமைக்க அனுமதிக்கப்பட்டது. ரூ.1.60 இலட்சம் வைப்புநிதி ஏற்படுத்தி, முறைப்படி பூஜையும் செய்யப்பட்டு வருகிறது.

வேத ஆகமங்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழகத்தில் முதன் முறையாக வேத ஆகமங்களைக் கற்றுச் சிறப்புறும் பொருட்டு, வேத ஆகமக்கல்லூரி நிறுவிட அறிவிக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி நகர், கம்பரசம்பேட்டையில் 9.48 எக்டேர் நிலம் அறநிலையத்துறைக்கு அளிக்கப்பட்டு உள்ளது. அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப்பயிற்சித்திட்டம் அறிவிக்கப்பட்டது. உபரி நிதியுள்ள திருக்கோயில்களிலிருந்து, நிதிமாற்றம் செய்து, ரூ.8 இலட்சம் நிதி ஏற்படுத்தி மாநிலத்தில் 10 இடங்களில் அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப்பயிற்சித் திட்டம் வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் 346 அர்ச்சகர்கள் பயன் பெற்றுள்ளனர். 15.12.1993-ஆம் தேதி முதல் 2-ஆம் கட்டமாக 380 அர்ச்சகர்கள் பயிற்சி பெற்றனர்.

ஒரு காலப் பூசை கூட நடத்திட வசதியற்ற நலிந்த பல திருக் கோயில்களில், ஒரு கால பூசைத் திட்டம் தொடர்ந்து நடைபெற, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஒருகாலப்பூசைத் தொடர் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி, நலிவுற்ற திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் வைப்பு நிதி ரூ.25,000-ஐ அரசே முதலீடு செய்யும். இந்த முதலீட்டிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு மாதந்தோறும் ஒரு கால பூஜை நடத்தப்பெறும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறப் பொதுமக்கள், வைப்புநிதியில் 10-இல் ஒரு பாகமான ரூ.2,500ஐ நன்கொடையாகச் செலுத்தினால், அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி வட்டியிலிருந்து ரூ.22,500 வழங்கும் என அறிவிக்கப்பட்டு, நன்கு விளம்பரம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 6,231 திருக்கோயில்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுகாறும் 5,055 திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன.

திருக்கோயில்களில் திருப்பணிகள் முறையாக நடைபெற வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் 303 கிராமப்புறத் திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

பொது நல நிதியிலிருந்து 149 திருக்கோயில்களுக்கு 65.74 இலட்சமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.163.98 இலட்சமும் என்ற வகையில் 57 திருக்கோயில்களுக்கு நிதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளத்தில், 1988-ஆம் ஆண்டிலிருந்து போதிய நீர் இன்மையால் தெப்பத் திருவிழா நடத்த இயலாத நிலை இருந்தது. அங்கே தெப்பத் திருவிழாவினை நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

ஆணையின்படி திட்டம் தீட்டி ரூ.35 இலட்சம் செலவில் திருக்குளத் திருப்பணி வேலைகள் செய்து, குளத்திற்கும் தண்ணீர் தேக்கி ஐந்து ஆண்டுகளுக்குப்பின் 1994-ஆம் ஆண்டில் முதன்முதல் தெப்பத் திருவிழா நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தெப்பத் திருவிழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

புகழ்பெற்ற இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள தீவினை அழகுபடுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளை ஏற்படுத்தித்தரவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் உள்ள பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி குன்றின்மீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மலைப்பகுதி, மலை அடிவாரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை அழகுபடுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், 303 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

சென்னை, நேஷனல் தியேட்டர் நிறுவனத்தின் சார்பாக நடிகர் திரு ஆர்.எஸ். மனோகர், சைவ மதத்தைச் சார்ந்த 63 நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் வாழ்க்கையை விளக்கிக்காட்டும் நாடகத்தினைத் தயாரிக்க நிதி வசதியுள்ள திருக்கோயில்களிலிருந்து ரூ.5 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

தஞ்சை மதுரை மாவட்டத் திருக்கோயில்களை இணைத்து "உலா ரதம்" எனப்படும் இரண்டு பேருந்துகள் சுமார் ரூ.40 இலட்சம் செலவில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி வாங்கப்பட்டு, சுற்றுலாத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த உலா ரதம் விரைவில் அம் மாவட்டங்களில் பக்தி உலா வரும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றபிறகு, 40 திருக்கோயில்கள் சார்பாக சிந்தை குளிர்விக்கும் நந்தவனம் அமைக்கப்பட்டது.

மதுரை, அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆயிரங்



தமிழகத்தின் பண்பாட்டு மையங்கள்!

தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத்தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

திருக்கோயில் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் இந்து சமய அறநிலைய குடும்ப நலத்திட்டத்தின் கீழ், அவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 உதவியாக வழங்கும் திட்டம் தற்போது அமலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாத வருமானம் ரூ.100-க்கு மேல்பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.2 சந்தாவாகப் பெறப்படுகிறது. மாத வருமானம் ரூ.100-க்குக் குறைவாகப் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து சந்தாத் தொகை பெறப்படுவதில்லை. ஆனால், அவர்களுக்கும் குடும்ப நலத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் திருட்டுக்களைத் தடுக்க காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். முக்கியத் திருக்கோயில்களில் திருடர்கள் எச்சரிக்கை மணியும் (Burglar Alarm) மற்றும் விழிப்புப் பதிவுக் கடிகாரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

கால் மண்டபம் ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி முடிக்கப்பட்டது.

ஆழ்வார்களால் பாடல் பெற்று, அன்று நம்மக்கள் வழிபட்ட திருத்தலங்கள் நம்முடைய காலத்தில் அழியும் நிலைக்கு வந்தன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாமிரபரணி தீரத்தில் உள்ள நவதிருப்பதிகளிலும் ரூ.2.4 கோடி செலவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் முதற்கட்டமாகத் தென் திருப்பேரையில் உள்ள அருள்மிகு மகரநெடுங்குழைக்காதர் திருக்கோயிலில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் கண்டது. பிற திருத்தலங்களிலும் திருப்பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. இங்ஙனம் ஒன்பது திருத்தலங்களும் ஒருங்கிணைந்திருப்பது நாட்டில் வேறெங்கும் இல்லாத சிறப்பாகும்.

திருக்கோயில்களில் அனைத்துப் பணி நிலைகளிலும் கூடுதல் இடங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதேபோன்று திருக்கோயில்களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் மருத்துவப்படி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வருங்காலச் சந்ததியினருக்கு இந்த மண்ணின் பண்பாடு, கலை மற்றும் கலாச்சாரம், இதிகாசம், புராணங்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் "ஆன்மீகக் கல்வித் திட்டம்" ஒன்று அறிவிக்கப்பட்டு, மேற்படி ஆன்மீகக் கலவித் திட்டம் 14.4.1995-இல் இம் மாநிலத்தில் 153 திருக்கோயில்களில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற, 2,415 சிறுவர் களும், 1,611 சிறுமியர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ❋



மீன்வளத் துறையின் மேலான சாதனைகள்

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்

திரு டி. ஜெயக்குமார்

தமிழக மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து, அவர்களது இல்லங்களில் ஒருவராக இருந்துவருபவர் நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆவார். அவர்களின் மாட்சிமை பொருந்திய மக்களாட்சி திக்கெட்டிலும் புகழ் மணம் பரப்பி அளப்பரிய சாதனைகளைக் கடந்த நான்காண்டுகளில் அரசின் அனைத்துத் துறைகளிலும் குவித்து இன்றைக்கு ஐந்தாம் ஆண்டின் தொடக்கமாக அடியெடுத்து வைக்கிறது.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திராவிடர் திருவிளக்காகவே திகழ்ந்துவருகிறார்..

அவரது இராஜ தந்திரத்தால் அரசியல் உலகம் புதிய மாற்றத்தைக் கண்டுள்ளது. இதனை அண்டை மாநிலங்களும் மத்திய அரசும் தெரிந்து கொண்டுள்ளன. அனைத்து உலக நாடுகளும் இதனை உணர்ந்து அவரது ஆற்றலையும் செயல் வேகத்தையும் புகழ்ந்து வருகின்றன.

மீன்வளத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் முனைப்பான திட்டங்கள் மூலம் அடைந்துள்ள சாதனைகளைக் கோடிட்டுக் காட்டிட நான் கடமைப்பட்டுள்ளேன். அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

1991-ஆம் ஆண்டில், தஞ்சாவூர், சிதம்பரனார் மற்றும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டங்களிலும் 1992 இல் செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்திலும் 1993-இல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் ஐந்து உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ.2 இலட்சம் செலவில் ஒரு வலை பழுதுபார்க்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு ரூ.1,274 இலட்சம் செலவில் 4,903 வீடுகள் இலவசமாகக் கட்டித்தர அரசு ஒப்புதல் தந்துள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத்தால் சிதம்பரனார் மாவட்டத்தில் தருவைக் குளத்தில் நீர் வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பேட்டை அமைக்க 7.20 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

பாக் ஜலசந்தி கடற்பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு உவர் நீர் இறால் தொழிற்பேட்டை ரூ.12.75 கோடி செலவில் அமைக்கத் திட்ட முதலீட்டுக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

64 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30,000 மூங்கில் கூடைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 10,000 மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மீனை அங்காடிக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்ய ஏதுவாக 2.5 டன் அளவுடைய சிறிய ஊர்தி ஒன்று சிகப்பதுலாமனை மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சீரிய தலைமையில் செயல்படுத்தப்பட்டுவரும் இன்னும் பல திட்டங்களின் விவரங்களின் வருமாறு:

மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கெனப் பங்கு மூலதன உதவியாக ரூ.30 இலட்சம் 90 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முகத்துவாரத்தின் அருகில் உள்ள 29 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் 6,711 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

சென்னை அருகிலுள்ள இராயபுரத்தில் ரூ.5 இலட்சத்தில் ஒரு சமுதாயக்கூடமும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் பெரியகுப்பம் மற்றும் தேவனாம்பட்டினத்தில் இரு சமுதாயக் கூடமும் ரூ.12 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ.2 இலட்சம் செலவில் ஒரு வலை பழுது பார்க்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் இரண்டாம் நிலை விரிவாக்கப் பணி ரூ.8.50 கோடி செலவில் அமைக்கப்படும்.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திலும், கோட்டைப்பட்டினம் பூம்புகார், வெள்ளப்பள்ளம், கோடிமுனை மற்றும் வள்ளவிளை கிராமங்களிலும் உள்ளமைப்பு வசதிகள் அமைக்க ரூ.71.01 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினத்தில் ஓர் 'டி'ஜெட்டி ரூ.54 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் முக்கியப் பணிகள் முடிக்கப்பட்டன. தற்போது சுமார் 150 படகுகள் இத் துறைமுகத்தைப் பயன்படுத்தி வருகின்றன.

உள்நாட்டு மீன் விற்பனைத் திட்டத்திற்கு அரசு ரூ.48.24 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மீனவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் மாத உதவித்தொகையும், கடல் பயணப்படியும் முறையே ரூ.100 லிருந்து ரூ.150 ஆகவும் ரூ.0.75 பைசாவிலிருந்து ரூ.1.25 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் அரசு மூலம் வழங்கப்பட்ட மீன்பிடி படகுகளுக்குரிய நிலுவைத்தொகை ஆக மொத்தம் ரூ.735.42 இலட்சம் ரூபாயை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம் வங்கிகள் மூலமாக மீன்பிடி படகுகள் வாங்க மீனவர்களுக்குக் கடனாக வழங்கப்பட்ட ரூ.492.88 இலட்சம் ரூபாயை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக் குட்பட்டு அல்லலுற்ற, ஆனால் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வராத மீனவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து 1991 சனவரி முதல் 1995 சனவரி முடிய ரூ.40,37,500 வழங்கப்பட்டுள்ளது.

எதையும்விட உயர்ந்தது...

கருத்து, எதையும் விட உயர்ந்தது. உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து எழும் கருத்துக்கள், உண்மையும் ஆழ்ந்த உணர்வும் கூடிப் பிறந்த கருத்துக்கள், உலகத்தின் போக்கையே மாற்றியமைக்கக் கூடியவை.

- டாக்டர் மு.வ.

மகளிர்குல திலகமாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகாட்டுதலோடு நிறைவேற்றப்பட்டுள்ள மேலும் பல மீன்வளத் துறைச் சாதனைகள் வருமாறு:

தமிழ்நாடு மற்றும் ஆந்திர மீனவர்களிடையே தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்திலும் ஆந்திரப்பிரதேசத்திலும் இரண்டடுக்குக் குழுக்கள் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தற்போது மீனவர்களிடையே தாக்குதல்கள் குறைந்துள்ள்தைக் காணலாம்.

ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு 15 நடுத்தர வகைப் படகுகள் வாங்க, மானியமாக ரூ.30 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

100 பிளைவுட்டினாலான கரையேறும் படகுகளுக்கு மானியமாக ரூ.22 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மீனவர்களுக்கு 100 கண்ணாடியிழைக் கட்டுமரங்கள் வாங்கிடப் படகின் மொத்த விலையில் 50 சதவிகிதம் மானியத் தொகையாக ரூ.25 இலட்சம் வழங்கிட அரசு உத்தேசித்துள்ளது.

ரூ.4.50 கோடி செலவில் 5 ரோந்துப் படகுகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்திட அரசு இசைந்துள்ளது.

பாரம்பரிய மீனவர்கள் தங்கள் நாட்டுப் படகுகளில் 3,893 உட்பொருத்தும்-வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானியமாக ரூ.389.38 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதியாண்டின் இறுதிக்குள் 5000 உட்பொருத்தும்-வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்படும். 1000 மீனவர்களுக்கு ரூ.60 இலட்சம் செலவில் மீன்பிடி சாதனங்கள் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும்.

தமிழ்நாடு பிற்பட்டோர் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மீன் விற்பனைக்குத் தேவையான மூலதனத்தை 18,898 மகளிர் உறுப்பினர்களுக்குத் தலா ரூ.1,000 வீதம் ரூபாய் 56.65 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள திருச்சினாங்குப்பத்தில் 492 தொகுப்பு வீடுகள் ரூ.2.37 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளர்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு ரூ.1,274·78 இலட்சம் செலவில் 4,903 வீடுகள் இலவசமாகக் கட்டித்தர அரசு ஒப்புதல் தந்துள்ளது. ஒரு வீடு கட்டித் தருவதற்கான செலவினத்தை வீடு ஒன்றுக்கு ரூ.17,000 லிருந்து ரூ.26,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா மாதிரி மீனவர் கிராம அமைப்புத் திட்டத்தின் கீழ் 1,050 வீடுகளும் 95 ஆழ்கிணறு குழாய்கள், 20 சமுதாயக் கூடங்களும் அமைக்க அரசு ஒப்புதல் தந்துள்ளது.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் ஒவ்வொரு மீனவரின் உயிருக்கும் பாதுகாப்பு அளிக்க ரூபாய் ஒரு இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராமேஸ்வரம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் தொடர்பு முனை (Nodal Points மையங்களை ரூ.2.26 இலட்சத்தில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் இரு கரையோர நிலையங்கள் மிக உயர்ந்த அலை வரிசை ரேடியோ தொலைபேசி ரூ.31.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இரு நிலையங்களுக்கும் வாக்கிடாக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று சென்னையிலும் ஒரு நிலையம் அமைத்திட மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 1991-ஆம் ஆண்டு முடிய ஒவ்வொரு மீனவரிடமும் மாதம் ரூ.10 வீதம் 9 மாதங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கு இணையாக மாநில அரசின் பங்குத்தொகை ரூ.90-ம் சேர்த்து மொத்தம் ரூ.180 ஐ மாதம் ரூ.60 வீதம் 3 மாதங்களுக்குத் திருப்பித் தரப்பட்டது. இதுவரை 76,610 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைந்துள்ளனர். இதுவரையில் மாநிலம் முழுவதும் அரசின் பங்காக ரூ.23.89 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.11.88 கோடி வழங்கப்படும். 1992 முதல் மாதம் மீனவர் ஒருவருக்கு ரூ.45 வீதம் மீனவரிட்மிருந்து 8 மாதங்கள் வசூலிக்கப்பட்டு இதற்கு ஈடாக மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஈடான தொகை வழங்கப்படுகிறது. மொத்தம் ரூ.1,080-ஐ மீன்பிடி இல்லாத 4 மாதங்களில் ரூ.270 வீதம் ஒரு மீனவருக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில் 1,35,284 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் கடலுக்குச் செல்லும் மீனவர் விபத்தினால் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால் முதலில் ரூ.21,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்பட்டது. அதன்பின் இத்தொகை ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டது. மேலும் இதனை ரூ.50,000 ஆக உயர்த்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 2,48,404 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இதுவரை 1,353 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.2.05 கோடி காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

20 மீட்டர் நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் டீசல் எரி எண்ணெய் மீதான மத்திய ஆயத் தீர்வையைத் திரும்பப் பெற்று ஈடு செய்து கொள்ள ரூ.52 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 1,683 படகுதாரர்கள் பயனடைந்துள்ளனர். 71,96,791 லிட்டர் டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டு தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள தாண்டவராய சோழகன்பேட்டை மற்றும் கிள்ளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

பள்ளி இறுதித் தேர்விலும் 10 ஆம் வகுப்பு ப்ளஸ் 2 தேர்விலும் 12 ஆம் வகுப்பு கூடுதல் மதிப்பெண்களைப் பெறுகின்ற மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவர் மாணவியருக்குத் தலா ரூ.500 வீதம் 1985-86-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய அரசு அத்திட்டத்தை மறு பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா மீனவ மாணவ மாணவிகளின் கல்வி சிறப்புப் பரிசுத் திட்டத்தின் கீழ், பள்ளி இறுதித் தேர்வில் 10 ஆம் வகுப்பு கூடுதல் மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறும் மாணவர் மாணவிகளுக்குத் தலா ரூ.3000 வீதமும், ப்ளஸ் 2, (12) ஆம் வகுப்புத் தேர்வில்

வெற்றி பெறும் மாணவர் மாணவிகளுக்குத் தலா ரூ.5,000 வீதமும் ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது.

எங்கள் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் இணையற்ற திட்டங்களின் பட்டியல் இன்னும் தொடர்கிறது.

16 கோடி செலவில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதுவரை செங்கை எம்.ஜி.ஆர்., நாகை காயிதேமில்லத், இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களைச் சார்ந்த 32 கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த மீன்பிடி உபகரணங்கள் இல்லாத 1,903 மீன்பிடி தொழிலாளர்களுக்கு 446 கட்டுமரம், 168 வள்ளம், 614 இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் வாங்க 25 சதவிகித மானியத்துடன் 403 இலட்சம் ரூபாய் இதுவரை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களுக்கு உட்பட்டு இதனால் அந்நாட்டில் பிணைவைக்கப்பட்ட இராமேஸ்வரம், நாகப்பட்டினம் மீனவர்களை இயந்திரப் பழுதின் காரணமாக அந்நாட்டுக் கடற்கரையில் ஒதுங்கிய மீன்பிடி விசைப் படகுகளையும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரின் மூலம் படகுகளையும் மீனவர்களையும் தொடர் நடவடிக்கை எடுத்து தாயகம் திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீன் உற்பத்தியில் தனியார் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முகத்தான் பட்டா நிலங்களில் புதிய மீன் பண்ணைகளைக் கட்டுவதற்காக ஒரு எக்டேருக்கு ரூ.20,000 மானியமாக அரசு வழங்குகிறது. மீன் வளர்ப்போருக்கு ரூ.10.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்ட மீனவர் கிராமங்களில் மீனவர்கள் கோரிக்கையின் அடிப்படையில் மீன்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பிற துறை அலுவலர்களை அணுகி, தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 160 கடலோர மீனவ கிராமங்களில் 6.60 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இராமநாதபுரம் காரங்காட்டில் இறால் வளர்ப்புக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகளை இயக்குவோர் நலன் கருதி, மீன்பிடி வளாகம் மற்றும் இறங்கு தளங்களில் 15 டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன.

மீனவ சமுதாயத்துக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர ஆறு மாவட்டங்களில் மாவட்டக் கருத்தரங்குகள் நடத்தி மீனவர்களுக்குப் பேருதவியாக வழிவகை செய்யப்பட்டது.

கடலோர ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடலோர பகுதி சார்ந்த தொழில்கள், போக்குவரத்து, விபத்துக்கள் தடுப்பு, சுற்றுலா மீனவர் கிராமங்களில் அடிப்படை வசதிகள் போன்றவை ரூ.100 கோடி செலவில் பத்தாண்டுகளில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்குப் பாதுகாப்பாகத் தொழில் செய்வதற்கு 1,69,944 மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியத் திருநாட்டிலேயே முதன் முதலாகக் கடல்நீர் வாழ் உயிரின முறைப்படுத்தும் சட்டம் 1995-ஐ இயற்றி, விவசாயிகள், விளை நிலங்கள், சுற்றுப் புறம், நிலத்தடிநீர், மீனவர் நலன் ஆகியவைகளைப் பாதுகாத்திட முன்னோடியாகத் திகழ்கிறது.

டேனிடா உதவியுடன் கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் கல்வியறிவு பெற ரூ.55.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இச்சாதனைகள் யாவும் இந்த நான்காண்டுக் காலங்களில் எய்தியவைகள் ஆகும் ❋

சுற்றுலாத்துறையின் சிறப்பான சேவைகள்– அன்னையின் ஆட்சியில் சிறுபான்மை மக்களின் நலம்

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு எஸ். நாகூர் மீரான்

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ்மிக்க அரசு, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று உலாத் தலங்கள் தேர்ந்தெடுத்து, அங்கு பொது மக்களிடையே சுற்றுலா பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயண ஆர்வத்தைப் பெருக்கவும், அந்தப் பகுதியில் குடிநீர், கழிவறை, உடைகள் மாற்றும் அறைகள், பேருந்து நிறுத்துவதற்கு வசதியை ஏற்படுத்துதல், தேனீர் விடுதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்யச் சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுவரை 43 மையங்கள் மாவட்ட உலாத் தலங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு வரை இதற்கு ரூ.67.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு 6 புதிய திட்டங்களுக்கு ஒரு கோடியே 37 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. விழுப்புரம், திருவண்ணாமலை, தரங்கம்பாடி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய ஊர்களில் சுற்றுலா விடுதி மற்றும் வரவேற்பு மையம் கட்டவும், மற்றும் விளம்பரம் செய்வதற்கும் இடம் ஒதுக்கியுள்ளது. மேலும் ஏற்கெனவே, ஒதுக்கப்பட்ட திட்டங்களான 1. குற்றாலம், 2. திருநெல்வேலி, 3. கிருஷ்ணகிரி, 4. நாமக்கல், 5. சமயபுரம், 6. பெரம்பலூர், 7. விருதுநகர் ஆகிய திட்டங்களுக்கு மகளிர் குலத் திலகமாம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.42.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

வெளிநாட்டு- உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் திட்டம்

உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1993-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1994-இல் 12.80 ஆம், 14.4 சதவிகிதமும் முறையாக அதிகரித்துள்ளது. இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நமது அன்னை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு 1994-95-ஆம் ஆண்டு சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மற்றும் தெரு விளக்குகள் பொருத்துவதற்கு

இதுவரை 43 மையங்கள் மாவட்ட உலாத் தலங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு வரை இதற்கு ரூ.67.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டு சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய் துள்ளது.

1. காஞ்சிபுரம் ரூ.15.00 இலட்சம்.

2. மாமல்லபுரம் ரூ.25.00 இலட்சம்.

3. தரங்கம்பாடி ரூ.4.00 இலட்சம்.

4. பூம்புகார் ரூ.6.00 இலட்சம்.

நமது நாட்டில் உள்ள இயற்கை அளித்த நன்கொடைகள் ஆன மலைவாழ் இடங்கள், நீண்ட கடற்கரை, நீர்வீழ்ச்சிகள், சரணாலயங்கள், ஆலயங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் விடுதிகள் கட்டி, விளம்பரப்படுத்துவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் ஐந்தாம் ஆண்டிலே அடி யெடுத்து வைக்கும் அருமை பெருமைமிக்க தமிழக அரசால் ரூ.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம், ஒகேனக் கலில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, செய்யப்படவுள்ள மேம்பாட்டுப் பணிக்காக பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ரூ.10.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இணையற்ற எங்கள் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள வீடூர் அணைப்பகுதி சுற்றுலா வளர்ச் சிக்காக அடிப்படை வசதி செய்ய, பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.7.00 இலட்சம் வழங்கியுள் ளார்கள்.

உள்ளூர் மக்களின் பொழுது போக்கு வசதிக்காக மேட்டூர், சாத்தனூர் மற்றும் வைகை அணைப்பகுதியைச் சீர் செய்து சிறந்த சுற்றுலாப் பகுதியாக மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் உத்தரவுப்படி ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பீட் டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, ரூ.52 இலட்சத்து 50 ஆயிரம் அனுமதிக்கப்பட்டது. இதில் முதல் பகுதியாக, வைகை அணைப்பகுதி மற்றும் மேட்டூர் அணைப்பகுதியில் மேம்பாட்டுப் பணி நடைபெற்றுள்ளது. மீத முள்ள பணிகளுக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து முடிக்கப்படும்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் சீரிய ஆட்சியில் 3 புதிய சுற்றுலா அலுவலகங்கள் ஏற் படுத்த ஆணையிட்டார்கள். அவை கொடைக்கானல், திரு நெல்வேலி, தர்மபுரி ஆகிய 3 இடங்கள் ஆகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையின்படி, தனிச் சுற்றுலா இயக்குநரகம் சைதாப் பேட்டை, பனகல் மாளிகையில் 1.4.95 முதல் இயங்கிவருகிறது.

தீவுத்திடலில் பொருட்காட்சி

தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் சுற்றுலாப் பொருட்காட்சி இந்த ஆண்டும் 101 நாட்கள் நடத்தப்பட்டது. இதன் மூலம் கழகத்திற்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் வசூலாகியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் விடுதிகளின் மேம்பாட்டுப் பணிக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத் துள்ளார்கள்.

விடுதிகளை நவீன மயமாக்குதல்

கோயம்புத்தூர், உதக மண்டலம், மாமல்லபுரம், கொடைக்கானல், மதுரை 2, தஞ்சாவூர், திருச்சி, சிதம்பரம் ஆகிய இடங்களில் உள்ள பெரிய விடுதிகளில் டிஷ் ஆண்டனா நிறுவப்பட்டுள்ளது. மீதமுள்ள பெரிய ஓட்டல்களிலும் டிஷ் ஆண்டனாவை நிறுவத் திட்ட மிடப்பட்டுள்ளது. பெரிய விடுதி களில் தொலைதூர நகல் பெருக்கி (பேக்ஸ்) சாதனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பெரிய உணவு விடுதி தங்கும் விடுதிகளில் சீர்வளி (ஏ.சி.) வசதி செய்யப்படாத அறைகள் சீர் வளி செய்யப்பட்ட அறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

உதகைக்கு நாள்தோறும் வருகை தரும் பயணிகளின் தேவையைக் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைக் கிணங்க அப்பகுதியை அழகு படுத்தி சிற்றுண்டிச சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

உதகை ஏரியில் ஆண்டு தோறும் படகுச் சவாரி செய்யப் பயணிகள் வந்த வண்ணமுள் ளனர். குறிப்பாகக் கோடைக் காலத்தில், சுற்றுலாப் பயணி களின் வருகை அதிகமாவதால், உதகை ஏரியில் படகு சவாரி செய்வதற்கு நெடுநேரம் காத் திருக்க வேண்டியுள்ளது. இவ் வாறு பயணிகளுக்கு ஏற்படும் கால விரயத்தைத் தடுக்கவும், ஒரே இடத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் கூட்டத் தைத் தவிர்க்கவும், அதே நேரத் தில் மற்ற புதிய சுற்றுலாப் பகுதி களை உருவாக்கும் நோக்கத் துடன், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்



தலைவி அவர்களின் ஆணைக் கிணங்கவும், பைகாரா ஏரியில் படகு விடும் திட்டம் தீட்டப் பட்டு, படகு விடப்பட்டுள்ளது. பெரிய ஓட்டல்களுக்காக 130 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு உள்ளன.

சுற்றுலாத் துறையின் சாதனை:

தமிழ்நாட்டிலுள்ள தனியார் துறை ஓட்டல்களில் 1991 வரை மொத்தம் 61,000 படுக்கை வசதிகள் இருந்தன. மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் புதிய சுற்றுலாக் கொள் கையின் பயனாகப் படுக்கை எண்ணிக்கை தற்போது 81,088 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் 1991-இல் மொத்தம் இருந்த படுக்கைகள் 2,213. சீர்வளி வசதி செய்யப்பட்ட அறைகள் எண்ணிக்கை 90. தற்போது மொத்தப் படுக்கைகள் 2,326. சீர்வளி வசதி செய்யப் பட்ட அறைகளின் எண்ணிக்கை 210. தமிழகத்திற்கு வரும் அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வரு கிறது.

தனியார் துறையிலும், அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலும், மேலே காண்கின்றவாறு ஏற் பட்டுள்ள சாதனை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் என்பதை இங்கே மிகப் பெருமை யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்

மாண்புமிகு தமிழக முதல்வர் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து, வக்பு நிறுவனத்திற்கு வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்து வருகிறார்கள். மசூதிகளைப் புதுப்பிக்கும் பணிக்காக ரூ.15,000 வீதம் மானிய உதவியை ரூ.25,000 ஆக உயர்த்தி வழங்கி ஆண்டுக் காண்டு ரூ.3.00 இலட்சம் என்று இருந்ததை ரூ.5.00 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறார்கள்.

தமிழ்நாடு வக்பு நிர்வாகத் தின் பளுவை நீக்கும் நோக்கத் தோடு தாய் உள்ளத்தின் தலைவி கடந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் வழங்கி, மேலும் ஆண்டுக் காண்டு வக்பு வாரிய நிர்வாகச் செலவிற்காக ரூ.30 இலட்சம் கொடுத்து வக்பு வாரிய ஊழியர் களின் வறுமையை விரட்டிய வள்ளலாக நம்பிக்கை நட்சத்திர மாகத் திகழ்கிறார்கள்.

தமிழகத்தில் உள்ள மௌல்விகள், பேஷ் இமாம்கள், அரபு மொழி ஆசிரியர்கள், மோதினார்கள் ஆகிய இஸ் லாமியப் பெருமக்களுக்கு ஓய் வூதியம் ரூ.250 என்பதை ரூ.400

உங்களுக்காக உழைத்துக் கொண்டே இருப்பேன்!

தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்று துளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன். அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக்கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல, புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ் செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.
(புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1 லிருந்து.)

ஆக உயர்த்தி வயோதிக நிலையில் வறுமையில் வாடிய பெரு மக்களின் நலன்காத்த தாய் உள்ளத்தின் தனிப் பெருந் தலைவியாக உயர்ந்து நிற்கிறார்கள்.

மேலும் 1994-95-ஆம் ஆண்டு வரை 1,600 உலமாப் பெருமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் இந்த 1995-96-ஆம் ஆண்டு 100 பேர்களுக்குக் கூடுதலாக வழங்க டாக்டர் புரட்சித் தலைவி உத்தரவு இட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு வக்பு வாரியத் தலைமை அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த நிலையை மாற்ற, சொந்தமாகத் தலைமை அலுவலகம் கட்ட மானியமாக ரூ.5 இலட்சம் வழங்கி உள்ளார்கள்.

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு உதவியாகச் செயல்படும் மாநில ஹஜ் கமிட்டியின் நிர்வாகச் செலவிற்காக இந்த ஆண்டு ரூ.2 இலட்சம் வழங்கியுள்ளார்கள்.

ஹஜ் பயணிகள் மக்கா, மதினாவில் தங்குவதற்காகக் கட்டடங்கள் தேர்வு செய்வதற்காக அனுப்பப்படும் குழுவில், தமிழகத்திலிருந்து ஒரு பிரதிநிதி செல்ல மேலான மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் பயணிகளுடன் இரண்டு வாலண்டியர்களை மக்கா செல்ல ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி அனுமதி தந்துள்ளார்கள் ✱

கதர் கிராமத் தொழில்துறையின் கவின்மிகு வளர்ச்சி

மாண்புமிகு கதர் கிராமத் தொழில்துறை அமைச்சர்

திரு பி. ஈசுவரமூர்த்தி



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் மிகப் பெரும் சாதனைகளை ஒவ்வொரு துறையும் படைத்துள்ளது. அவற்றிற்கு நிகராகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை புரிந்து அதன் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்திருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், சரித்திரம் படைக்கும் பல பயன்மிகு சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

கிராமப்புற மக்கள் அவர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களையும், இதர வசதிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, சுயமாகத் தொழில் செய்து அவர்களது திறமைகளுக்கேற்ப கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்து, பொருள் ஈட்டிட, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நிதியுதவி, தொழில் நுட்ப உதவி ஆகிய அனைத்து உதவிகளையும் முழு அளவில் செய்து வருகிறது. இதன்மூலம், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பாடு அடைந்திடவும், அவர்கள் வேலைதேடி நகர்ப்புறங்களுக்கு வருவதைத் தவிர்த்திடவும் வாரியம் பெரும் பங்காற்றிவருகிறது.

90,000 கைவினைஞர்களுக்குச் சுய தொழில் செய்திட நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 14,67,000 கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 5,37,000 பேர் மகளிரும், 3,09,000 பேர் ஆதிதிராவிட மக்களும் 16,360 பேர் மலைவாழ் மக்களும் ஆவர்.

கதர் கிராமத் தொழில்களைப் போற்றி வளர்த்து, அதன்மூலம் மக்கள் தற்சார்பு நிலையை அடையவும், வாழ்க்கையில் நல்ல வளத்தையும், மேம்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பல்வேறு வகைகளில் தொடர்ந்து உதவி செய்துவருகிறது.

பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 59 கிராமத் தொழில்களையும் அத்துடன் கதர்த் தொழிலையும் கீழ்க் காணும் மூன்று வகைகளில் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல் படுத்தி வருகிறது:

ஆண்டு	உற்பத்தி		மொத்தம்	விற்பனை		மொத்தம்	வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் இலட்சத்தில்
	கதர்	கிராமத் தொழில் பொருட்கள்		கதர்	கிராமத் தொழில் பொருட்கள்		
	(ரூபாய் இலட்சத்தில்)						
1991-92	2280	27041	29321	2895	29565	32460	10.93 பேர்
1992-93	2650	29871	32521	2834	31862	34696	11.83 பேர்
1993-94	3700	33000	37600	3850	37500	41350	12.88 பேர்
1994-95	3760	34502	38262	3900	38510	42410	14.31 பேர்
1.4.95 முதல் 24.6.95 வரை	860	8500	9360	940	9500	10440	0.35 பேர்
1995-96 இலக்கு	4300	35400	39700	5000	39110	44110	1.40 பேர் (கூடுதல் வேலை வாய்ப்பு)

செயல்படுத்தும் தொழில் விவரம் எண்ணிக்கை -

வாரியத்தின் சொந்தத் தொழில் பிரிவுகள் - 1,289

வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள் - 1,880

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று நிதியுதவி அளிக்கப் பட்ட கைவினைஞர்கள் - 90,000

எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி, விற்பனை மற்றும் வேலைவாய்ப்புகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன:

கூடுதல் வேலைவாய்ப்பு

1990-91-ஆம் ஆண்டு செயல் பட்டுவந்த அலகுகள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றையும் இன்றைய தேதியில் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டுவரும் வாரிய அலகுகள், கூட்டுறவுச் சங் கங்கள் ஆகியவற்றின் எண் ணிக்கை விவரங்களையும் கீழ்க் காணும் புள்ளி விவரங்களி லிருந்து அறியலாம்:

1990-91-ஆம் ஆண்டில் சுயமாகத் தொழில் செய்திட கிராமக் கைவினைஞர்களில் 67,170 பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இன்றைய தேதியில் மாண்புமிகு முதல மைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி யில் 90,000 கைவினைஞர் களுக்குச் சுயதொழில் செய்திட வாரியத்தின் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. வறிய நிலையில் உள்ள கிராமப்புறக் கைவினைஞர்கள் கைத்திற னைப் பயன்படுத்தி, கிராமங் களில் தொழில் வளர்ச்சி பெருக வழி செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு	கதர்		கிராமத் தொழில்		மொத்தம்
	வாரிய அலகுகள்	கூட்டுறவு சங்கங்கள்	வாரிய அலகுகள்	கூட்டுறவு சங்கங்கள்	
1990-91	996	10	238	1579	2823
1994-95	1040	20	241	1834	3135



குறைந்த நிதி ஆதாரத்தில் அதிக அளவு வேலைவாய்ப்பு அளிக்கும் இத் திட்டம் கிராமப் புற ஏழை மக்களுக்கு ஒரு மிகப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இவ்வாரியத் தின் மூலம் இதுவரை 14,67,000 கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட் டுள்ளது. இதில் 5,37,000 பேர் மகளிரும், 3,09,000 பேர் ஆதி திராவிட மக்களும், 16,360 பேர் மலைவாழ் மக்களும் ஆவர்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் மட்டும், 5,73,000 கிராமப்புற ஏழை எளிய மக் களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது ஒரு மிகப் பெரும் சாதனையாகும்.

வரும் 1995-96-ஆம் நிதி யாண்டில் மேலும், 1,40,000 கிராமப்புற மக்களுக்குக் கூடு தலாக வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டங்கள் வேகமாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில் நூற்பாளர்கள், நெசவாளர் ஆகியோரின் தினக் கூலி கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. கதர் நூற்பாளர்களின் தினக்கூலி ரூ.15 யிலிருந்து ரூ.17 ஆகவும், நெசவாளர்களின் தினக்கூலி ரூ.25-யிலிருந்து ரூ.30 ஆகவும், பட்டு நெசவாளர்களின் தினக் கூலி ரூ. 35-லிருந்து ரூ. 42 ஆகவும், உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி கூலி உயர்வு 1.1.95 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கதர்ப் பொருட்களின் விற் பனையை அதிகரிக்கத் தமிழக அரசு விழாக் காலங்களில் கதர் மற்றும் பட்டு ரகங்களின் விற்பனைக்கு 90 நாட்களுக்கும், கதர் பாலியஸ்டர் துணி வகை களுக்கு 60 நாட்களுக்கும் 10 சதவிகிதச் சிறப்புத் தள்ளுபடி அளிக்கிறது. அத்துடன் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு பருத்தி கதர் ரகங்களுக்கு 10 சதவிகிதம் தள்ளுபடியும் வழங்கு கிறது.

இது தவிர, விழாக் காலங் களில் ஒவ்வொரு ஆண்டும் கதர் மட்டும் பட்டு ரகங்களுக்கும் பாலியஸ்டர் ரகங்களுக்கும் சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது. இவ்விதம் முக்கியமான பண்டி கைக் காலங்களிலும், தலைவர் களின் பிறந்தநாள் விழாக்களின் போதும் கதர் ரகங்களுக்கு 35 சதவிகிதம், பாலியஸ்டர் ரகங் களுக்கு 30 சதவிகிதம், பட்டு மற்றும் உல்லன் ரகங்களுக்கு 20 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இதனால் கதர் ரகங்களின் விற்பனை

ஒவ்வொரு ஆண்டும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

மகளிருக்கு அதிக அளவில் வேலைவாயப்பு அளிக்க வேண்டும் என்கிற டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க மகளிருக்கெனப் பல புதிய திட்டங்கள் இந்த ஆட்சிக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 18 செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 7 ஊரக மின்னணுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அவை மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் மகளிர் கைவினைஞர்களுக்கு மிகவும் இலாபகரமான ஊதியம் கிடைக்கிறது.

தமிழக அரசின் 'எல்காட்' நிறுவனத்தின் பிணைப்புடன் சென்னை திருவொற்றியூரில் ஒரு கிராமிய மின்னணுத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, அது மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கம் 'எல்காட்' நிறுவனத்திடமிருந்து மின்னணு உபகரணங்கள் வாங்கித் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான ஸ்டெபிலைசர், குளிர்சாதனப் பெட்டி (பிரிட்ஜ்) ஸ்டெபிலைசர் ஆகிவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நான்காண்டுக் காலப் பொற்கால ஆட்சிக் காலத்தில் கதர் கிராமத் தொழில் துறையை நவீனப்படுத்தும் உயரிய நோக்குடன் தொடங்கப்பட்டுள்ள வெற்றிகரமான புதிய திட்டமாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கடந்த கால வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, புரட்சித் தலைவி அவர்களின் நான்கு ஆண்டுக் காலச் சாதனைகள் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த பேரறிஞர் அண்ணாவின் குடும்பத்துக்கு 75 இலட்சம் ரூபாய்:

மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தன்னுடைய காலத்தால் அழியாத, புகழ்பெற்ற எழுத்துக்கள் மூலம் சிறப்பு சேர்த்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய இலக்கியப் படைப்புகள் மற்றும் எழுத்து வடிவங்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்படும் என்ற அறிவிப்பினை, கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டிருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்படுவதை அடுத்து, அவரது குடும்பத்தினருக்கு இதற்குண்டான பரிவுத் தொகை (Exgratia) வழங்குவதை அரசுக்குப் பரிந்துரை செய்யும் பொருட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் தலைமையில் குழு ஒன்றினையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அமைத்தார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தலைமையில் இக்குழு கூடி, குழுவின் இதர உறுப்பினர்களான மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், அரசின் நிதித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், இக்குழுவானது தனது பரிந்துரையை அரசுக்கு அளித்திருந்தது.

இக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்டதால், அவருடைய குடும்பத்துக்கு ஈட்டுத் தொகையாக 75 இலட்சம் ரூபாய், பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அம்மையார் அவர்களிடம் வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

கிசான் விகாஸ் பத்திரம்
செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்



சிறப்பு அம்சங்கள்

- 5 $^1/_2$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு அணுகவும் :

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சபர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

DIRP/DIS/95

பொறுப்புடன் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் 568926, 568927





பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23